# தாய்வீடு

228

ISSN 2369-3657

THAIVEEDU | MARCH | 2026

தாய்வீடு | மார்ச் | 2026

## தாய்வீட்டார் சந்திப்பு 2026

மட்டக்களப்பு



ISSN 2369-3657



NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law




Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com




Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated




Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy




RE/MAX ACE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com




MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3




Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770




Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*




MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
416.939.8789
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

தாய்வீடு

**Publisher & Editor**
PJ. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பிரசாத் சொக்கலிங்கம்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**அட்டைப்பட வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்

**வடிவமைப்பு**
ஆரையன், ஊரோடிகள் குழுமம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

**படங்கள்**
istock.com,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

**அஞ்சல் முகவரி**
**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Canada**

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

ஆக்கங்கள் அனைத்துக்கும்
ஆக்கியோரே பொறுப்பு.
பெயர் தோற்றாத ஆக்கங்களுக்கு
ஆசிரியரே பொறுப்பு.

## பெண்மை வெல்கென்று கூத்திடுவோம்!

இத்தாலியின் மிலானோ, கோர்ட்டினா நகரங்களில் நடந்து முடிந்த குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் பதின்மூன்றாம் நாள், அமெரிக்கப் பெண்கள் ஹொக்கி அணி, கனடியப் பெண்கள் அணியை 2:1 என்ற விகிதத்தில் மேலதிக நேரத்தில் வெற்றிகொண்டு தங்கப்பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டது. பதினாறாம் நாள், கனடிய ஆண்கள் ஹொக்கி அணியுடனான போட்டியை அமெரிக்க ஆண்கள் அணி, 2:1 என்ற விகிதத்தில் மேலதிக நேரத்தில் வென்று தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது. இவை இரண்டுமே ஒன்றுக்கொன்று சமனான நிகழ்வுகள் என்பதும் ஒன்றுக்கொன்று சரிநிகரான அடைவுகள் என்பதும் விவாதத்துக்கு அப்பாற்பட்டவை. ஆனால், இந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் பின்னான எதிர்வினைகள் சமூகத்தில் புரையோடியுள்ள பெண்ணடிமைவாத மனநிலையைத் தெட்டத்தெளிவாகத் துலக்கியுள்ளன.

பெண்கள் அணியின் வெற்றி, அமெரிக்கா பெற்ற பல ஒலிம்பிக் தங்கப்பதக்கங்களுள் இன்னொரு தங்கப்பதக்கமாகக் கொண்டாடப்பட்டுக் கடந்துசெல்லப்படுகிறது. ஆண்கள் அணியின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவிக்க அமெரிக்க அதிபர் தொலைபேசியில் அழைக்கிறார். வெள்ளை மாளிகைக்குத் தனது விருந்தினர்களாக வருமாறு அழைப்பு விடுக்கிறார். ஆண்கள் அணிக்குத் தான் அழைப்பு விடுப்பதால் பெண்கள் அணிக்கும் அழைப்பு விடுக்கவேண்டிய கட்டாயம் இருப்பதாகவும், அப்படிப் பெண்கள் அணிக்கும் அழைப்பு விடுக்காவிட்டால் தன்னைப் பதவிவிலகக் கோருவார்கள் என்றும் பகடி விடுகிறார். அந்தப் பகடியை ஆண்கள் அணியினர் அனைவரும் இரசித்துச் சிரிக்கிறார்கள். அதிபரின் வெள்ளை மாளிகை அழைப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். அதிபரின் பகடியிலும் அதை இரசித்தவர்களின் மனநிலையிலும் வெளிப்பட்ட ஆணாதிக்கத்திமிர் சுட்டிக்காட்டப்பட்டபோது, ஒன்றுமேயில்லாத விடயத்தை ஊதிப்பெரிதுபடுத்துவதாகக் கூறித் தட்டிக்கழிக்கிறார்கள்.

இதுவொன்றும் புதுமையான நிகழ்வல்ல. வழமையானது என்பது, பல்வேறு தளங்களிலும் ஆண்களுக்கு நிகரான அடைவுகளை எட்ட, ஆண்களை விடவும் பன்மடங்கு மேலாக உழைக்கவேண்டும் என்பதைத் தனது வாழ்க்கையின் பட்டறிவாகக் கொண்டுள்ள ஒவ்வொரு பெண்ணுக்கும் தெரியும். பெண்களின் அடைவுகளைச் சிறுமைப்படுத்துவதும் தட்டிக்கழிப்பதும் உதாசீனப்படுத்துவதும், அவர்கள் வெல்லும்போது அவர்களை இழிவுபடுத்தும் வகையிலான காரணங்களைக் கற்பிப்பதும் வாழ்வின் பல்வேறு மட்டங்களிலும் நிகழ்ந்து வருவனவே. ஆணாதிக்க மனநிலை தம்மீது திணிக்கும் இந்த ஒடுக்குதல்களையும் ஓரங்கட்டல்களையும் இயல்பானவை எனக் கடந்தே, பெண்கள் அன்றாட வாழ்க்கையை முன்னெடுக்கிறார்கள். உயரங்களை எட்டுகிறார்கள்.

ஒவ்வோர் ஆண்டும் அனைத்துலகப் பெண்கள் நாள் அணுகும்போது, ஆப்கானிஸ்தானில் கல்வி உரிமை மறுக்கப்படும் பெண்கள் பற்றியும், இந்தியாவில் மணத்தெரிவு உரிமை மறுக்கப்படும் பெண்கள் பற்றியும், அமெரிக்காவில் இனப்பெருக்க உரிமை மறுக்கப்படும் பெண்கள் பற்றியும் என உலகின் வெவ்வேறு பாகங்களிலும் மூர்க்கமான உரிமை மீறல்களுக்கு முகங்கொடுத்துள்ள பெண்கள் பற்றியே எமது கவனம் திரும்புகிறது. அது தேவையானதே. தவறேதும் இல்லாததே. எனினும், எம்மிடையே, எம்முடனே வாழும் எமது தாய்மார், சகோதரியர், துணைகள் நாளாந்தம் தாம் பெண் என்ற ஒரே காரணத்துக்காகத் துன்பங்களையும் துன்புறுத்தல்களையும் அழுத்தங்களையும் எதிர்கொள்கிறார்கள் என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்வதும் தேவையானதே.

உண்மையான மாற்றம் அங்கே இருந்துதான் தொடங்கமுடியும். தொடங்கவேண்டும்.

அது இல்லாதவரை பெண்ணுரிமை என்பது, ஓர் ஆட்சிக்காலத்தில் மாறிவிடக்கூடிய, மாற்றப்பட்டுவிடக்கூடிய அரசியற்கொள்கையாக மட்டுமே இருக்கும். இதற்கான சிறந்த அண்மைக்கால உதாரணமாக அமெரிக்கப் பெண்களின் இனப்பெருக்க உரிமையைக் கூறமுடியும். பெரும் சட்டப்போராட்டத்தால் வென்றெடுத்து, ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக அனுபவித்து வந்த உரிமையை, புதிய ஆட்சியாளர்கள் அதிகாரமேற்ற ஆறே மாதங்களில் பெண்கள் இழந்து நிற்பதை நாம் பார்க்கிறோம்.

'வளர்ச்சியடைந்துவிட்டதாகக் கூறிக்கொள்ளும் மேற்கத்தைய நாடுகளில் அனைத்துலகப் பெண்கள் நாளைக் கொண்டாடவேண்டிய தேவை இன்னமும் இருக்கிறதா?' என்ற கேள்வியும் ஒவ்வோர் ஆண்டும் அனைத்துலகப் பெண்கள் நாள் அணுகும்போது எமது கவனத்தை ஈர்க்கும் விடயங்களுள் ஒன்று. இந்தக் கேள்விக்குப் பின்னால் அப்பாவித்தனத்தைவிடக் கூடுதலாக வன்மமே இருக்கிறது என்பதை உணர்த்துவதாக ஒலிம்பிக் ஹொக்கி தொடர்பான சம்பவம் அமைந்திருக்கிறது.

எம்மத்தியில், 'இயல்பானது' என ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த ஆணாதிக்க மனநிலை வேரோடு அகற்றப்படும்வரை, அது இருப்பதை எமக்கு நினைவூட்ட அனைத்துலகப் பெண்கள் நாள் தேவை.

அந்த ஒரு நாளில் மட்டுமன்றி, ஒவ்வொரு நாளும், 'பெண்மை வெல்கென்று கூத்திடுவோம்!'

# இம்மாதத் தாய்வீட்டில்...


பெண்மை வெல்கென்று கூத்திடுவோம்! 3

ஈரானின் சமூக-பொருளாதார மாற்றமும் அரசியல் நெருக்கடியும் 5
- சிவா முருகுப்பிள்ளை

2026 – தமிழகத் தேர்தல் களம் 14
- நெல்லை ஜெயசிங்

எப்ஸ்டீன் உருவாக்கியுள்ள அதிகார அரசியல் கலாசாரம் 18
- ரதன்

லெனினைச் சாட்டி அதிகாரத்துக்கு ஆசைப்படல் 24
- அஜித் ராஜபக்சா
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

மொழியின் அரசியல் 1 தனிச்சிங்களச் சட்டத்தின் 70 ஆண்டுகள் 28
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

மகாவம்சம் தொகுதி – 5 ஓர் அறிமுகம் 41
தமிழில்: என். சரவணன்

ஹேஷ்டேக் தேசியமும் மாயத் திருப்தியும் 45
- அருள்கார்க்கி

மென்டோசா பீலியோவின் சர்வாதிகாரம், அடையாளம் பற்றி எரியும் கேள்விகள் 48
- ரதன்

காலமும் அரசியலும் கலந்த கட்டுமானம் 51
- சொர்ணவேல்

சித்தர்கள் வளர்த்தெடுத்த இரசமருத்துவம் 58
- பால. சிவகடாட்சம்

பிள்ளைகளைப் பாடசாலைகளிடம் ஒப்படைக்கும் பெற்றோர்களே... 63
- அகமட் பிஸ்தாமி

கனடாவில் கல்விவளப் பங்கீட்டுச் சமத்துவமின்மையும் கல்வித்தர வீழ்ச்சியும் காணப்படுகின்றதா? 66
- த. சிவபாலு

பதின்மவயதினருக்கும் உங்களுக்கும் இடையே – 11 எமது பிள்ளைகளின் கண்களில்... 72
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

திசைதிருப்பப்பட்ட வாகனம் ஓட்டுதல் 77
- செந்தூரன் புனிதவேல்

வீட்டில் ஈரப்பதன் பேணல் (Humidity Maintenance) 79
- வேலா சுப்ரமணியம்

புவியின் மீட்சிக்கான உலகளாவிய அறைகூவல் (உலக வனவிலங்குகள் நாள்) 81
- சி. நற்குணலிங்கம்

அமரத்துவம் சாத்தியமா! 83
- சுப்ரமணியம் ஜெயசீலன்

ஓர் ஈழ நாட்குறிப்பு... 87
- ஓவியர் ஜீவா

புதிய சீருடைக் கலாசாரம் 90
- நடராசா சிறிரஞ்சன்

தாமதமாகும் ஆர்டெமிஸ் 2 92
- குரு அரவிந்தன்

வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக காமன் கூத்து 95
- அருணாசலம் லெட்சுமணன்

தமிழ் அரங்கியலில் திரைப்பயன்பாடு: மரபும் மாற்றுமரபும் 102
- ம. கருணாநிதி

ஹெலன் கெல்லர் 106
- குமார் புனிதவேல்

பேரறிஞர் எம்.ஏ. நுஃமானின் கல்வி, வாழ்வியல் வகிபாகமும் தமிழியல் ஊற்றின் பேண்தகுநிலையும் 110
- இக்பால் அலி

பன்முகக் கலை ஆளுமை கமலினி செல்வராசன் 119
- வே. விவேகானந்தன்

ஃபிடல் காஸ்ட்ரோ நூற்றாண்டு – 2 காஸ்ட்ரோவின் அரசியல் சிந்தனைகள் 122
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

மாறும் கதை வடிவங்கள்: ‘திருப்புமுனை’, ‘குப்பி’ ஆகிய கதைகளினூடாக ஓர் அலசல் 128
- தேவகாந்தன்

தடையற்ற தடம்: போக்குவரத்துத்துறையில் பெண்களின் எழுச்சி 132
- மேரி றெசொதா

ஆணும் ஆணும் குழந்தை பெறுவதை விஞ்ஞானம் சாத்தியமாக்குமா? 135
- சந்திரகௌரி சிவபாலன்

தாய்வீட்டார் சந்திப்பு – 2026 138

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் 152
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

சமகால ஈழச்சிறுகதையின் சில புதிய போக்குகள் 155
- ஜிஃப்ரி ஹாசன்

பாரதியின் தேசியக்கல்வி பற்றிய சிந்தனைகள் 159
- இராஜேந்திரம்பிள்ளை சிவலிங்கம்

பாடும் திறன் வேண்டிய பாரதி 162
- கிருங்கை சேதுபதி

எம்.வி. வெங்கட்ராமின் ‘பைத்தியக்காரப் பிள்ளை’ சிறுகதையில் வன்முறையும் மனவடுவும் 166
- மைதிலி தயாநிதி

கம்பனின் கருவூலம் திறந்து... 169
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

அண்ணையோடு ஓர் அளவளாவல் 174
- பஞ்சகல்யாணி

சிதைவுகளில் ஓர் எழுச்சி 176
- ஸ்ரீரஞ்சனி

‘நந்தசேன’ 180
- செங்கதிரோன்

ஆளுயர ஜன்னல் 184
- சகி
தமிழில்: அரவிந்த் வடசேரி

முலையறுகாதை! பெண் துயரப் பெருங்கதை 187
- மா. சித்திவினாயகம்

பொறு... பொறு...! 190
- உஷாதீபன்

மனம் வருந்திய பாவி 193
- லியோ ரோல்ஸ்ராய்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

# ஈரானின் சமூக-பொருளாதார மாற்றமும்
# அரசியல் நெருக்கடியும்

**- சிவா முருகுப்பிள்ளை**

ஈரானில் தனக்கு சாதகமான மன்னர் ஆட்சியை உருவாக்கு வாரா அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப். இதுவே தற்போதைய ஈரான் - அமெரிக்க பதற்ற நிலையின் இறுதிப் புள்ளியாக அமையக்கூடும் எனப் பல அரசியல் ஆய்வாளர்களால் பார்க்கப்படுகின்றது. இதன் அடிப்படையில், ஈரான் தற்போது ஒரு தீவிரமான கொதிநிலையைச் சந்தித்து வருகின்றது; அல்லது அத்தகையதொரு பதற்றமான சூழல் திட்டமிடப்பட்டு அந்நாட்டின் மீது திணிக்கப்பட்டிருக்கின்றது.

ஈரானின் கடைசி மன்னரான முகமது ரிசா ஷா பஹ்லவி, 1979-இல் வெடித்த ஈரானியப் புரட்சியின் விளைவாகப் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். இதனைத் தொடர்ந்து, பிப்ரவரி 11, 1979 அன்று மன்னராட்சி அதிகாரபூர்வமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, ஏப்ரல் 1, 1979 அன்று ஈரான் ஓர் இஸ்லாமியக் குடியரசாக அறிவிக்கப்பட்டது. நாட்டை விட்டு வெளியேறி எகிப்தில் தஞ்சம் புகுந்த மன்னர், ஜூலை 27, 1980 அன்று புற்றுநோயால் காலமானார். அவரது மறைவுக்குப் பிறகு, அவரது மகன் ரிசா பஹ்லவி வெளிநாட்டில் இருந்தபடி பஹ்லவி வம்சத்தின் வாரிசாகத் தன்னை அறிவித்துக்கொண்ட போதிலும், ஈரானில் இன்றுவரை மன்னராட்சி மீண்டும் அமையவில்லை; நாடு தொடர்ந்து இஸ்லாமியக் குடியரசாகவே நீடிக்கிறது.

1980-களின் பெரும்பகுதியை, ஈரான் தனது அண்டை நாடான ஈராக் உடனான நீண்டகாலப் போரிலேயே கழித்தது. இக்காலகட்டத்தில், உள்நாட்டில் மன்னராட்சி ஆதரவாளர்கள் ஒடுக்கப்பட்டு, மதகுருமார்களின் தலைமைத்துவத்திலான ஆட்சி வலுவாக நிலைநாட்டப்பட்டது. செப்டம்பர் 22, 1980 முதல் ஆகஸ்ட் 20, 1988 வரை சுமார் எட்டு ஆண்டுகள் நீடித்த இந்த



ஈரான் - ஈராக் யுத்தம், பிராந்திய அரசியலில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது.

இந்த மோதலுக்கான முதன்மைக் காரணங்களாக எல்லைத் தகராறுகள், இஸ்லாமிய மதப் பிரிவுகளுக்கு இடையேயான வேறுபாடுகள் மற்றும் 1979-இல் ஈரானில் ஏற்பட்ட இஸ்லா மியப் புரட்சியின் தாக்கம் அண்டை நாடான ஈராக் மீது பரவும் என்ற அச்சம் ஆகியவையே பரவலாகப் பார்க்கப்படுகின்றன. எனினும், இத்தகைய பதற்றமான சூழலை அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது என்பதே யதார்த்தமாகும். வளைகுடா பிராந்தியத்தில் தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் ரீதியாக வளர்ந்து வந்த ஈரான், ஈராக் ஆகிய இரு நாடுகளையும் பலவீனப்படுத்துவதும், அரபு தேசங்களில் தனது 'பிரித்தாளும் கொள்கையை' நிலைநிறுத் துவதுமே இதன் பின்னணியில் உள்ள முக்கிய அரசியல் வியூ கமாகக் கருதப்படுகிறது.

ஈரான் - ஈராக் போரின் போது, அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகள் ஈராக்கிற்குத் தங்களது பேராதரவை பெருமளவில் வழங்கின. . ஒருவேளை ஈராக்குடன் இத்தகைய நீண்டகாலப் போர் நிகழாமல் இருந்திருந்தால், இன்று அரபு தேசங்களில் மேற்கத்திய நாடுகள் செலுத்தி வரும் ஆதிக்கச் செயல்பாடுகள் இவ்வளவு தீவிரமடைந்திருக்காது; அதற்கான சாதகமான சூழலும் அவர்களுக்கு அமைந்திருக்க வாய்ப் பில்லை என்பதே பல அரசியல் ஆய்வாளர்களின் கருத் தாகும்.

இந்த அரசியல் மாற்றங்கள் நிகழாதிருந்திருப்பின், பாலஸ்தீன மக்களின் வாழ்வுரிமை உறுதிப்படுத்தப்பட்டு, அகதி வாழ்வு நீங்கி அவர்களின் இறையாண்மை மிக்க (Sov- ereignty) வாழ்வு மலர்ந்திருக்கும். அதேபோல், லெபனானில் இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மக்களிடையே நிலவும் நல் லிணக்கம் மேலும் பலப்பட்டு, ஒரு நிலையான மக்கள் நல ஆட்சி தொடரவும் வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கும். இவை அனைத்திற்கும் மேலாக, சிரியாவில் பஷார் அல்-அசாத் (Ba- shar al-Assad) தலைமையிலான ஆட்சி, இன்றுவரை பெரும் சவால்களின்றி ஒரு வலிமையான நிர்வாகமாகத் தொடர்வ தற்கான சூழலும் நிலவியிருக்கும்.

மேற்கத்திய நாடுகளின் திட்டமிடப்பட்ட நகர்வுகளால் உருவான 8 ஆண்டுகால ஈரான் - ஈராக் போர், இரு நாடுக ளுக்கும் நேரடி வெற்றி-தோல்வியைத் தராவிட்டாலும், அது உண்மையில் மேற்கத்திய நாடுகளுக்கே மாபெரும் வெற்றியாக அமைந்தது என்பதே கசப்பான பூகோள அரசியல் யதார்த்தமாகும். இப்போரின் விளைவாக ஏற்பட்ட பாரிய உயிர்ச்சேதங்கள், பொருளாதார அழிவுகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான வரலாற்றுப் பகைமை என்பன, அரபுலகம் ஒருமித்த பலமின்றித் துண்டு துண்டாகச் சிதறுவ தற்கே வழிவகுத்தன. ஒரு காலத்தில் நிலவிய பிராந்திய ஒற்று மையும் நட்பும் சிதைக்கப்பட்டதை இன்று ஈரான் மற்றும் ஈராக் ஆகிய நாடுகள் உணர்ந்திருக்கக்கூடும். எனினும், இந்தத் திட் டமிட்ட சதியின் இறுதி விளைவும் அதன் உண்மையான நோக்கமும் சதாம் ஹுசைனின் வீழ்ச்சி மற்றும் மரணத்தின் மூலமே சர்வதேச அரங்கில் அப்பட்டமாக நிரூபிக்கப்பட்டது.

அரபு தேசங்களில் சோவியத் யூனியனின் சோசலிசக் கருத் தாக்கங்கள் பரவுவதைத் தடுப்பதும், அவற்றை முற்றாக அழிப்பதுமே மேற்குலகின் முதன்மையான திட்டமாக இருந்தது. இதே அணுகுமுறைதான் ஆப்கானிஸ்தானிலும் கையாளப்பட்டது. இதற்காக மேற்குலகு கையாண்ட முக்கிய உத்தி யாதெனில், இஸ்லாமிய மதத்திற்குள் இருக்கும் பல்வேறு பிரிவுகளின் மேலாதிக்க உணர்வைத் தூண்டி, அதன்மூலம் தீவிரவாத அமைப்புகளை உருவாக்கியதாகும்.

**இதற்கு ஈரானின் வரலாற்றை சற்று பின்னோக்கிச் சென்று பார்ப்போமாயின்....**

மத உணர்வுகளைத் தூண்டுவதன் மூலம் உருவாக்கப்பட்ட இஸ்லாமியத் தீவிரவாதம் என்பது, உண்மையில் அமெரிக் காவின் புவிசார் அரசியல் நலன்களுக்காகத் தோற்றுவிக்கப் பட்ட ஒரு கருவியாகும். இது அநேகமான இஸ்லாமிய நாடுகளில் திட்டமிட்ட உள்நாட்டுக் குழப்பங்களை ஏற்ப டுத்தி, அந்த நாடுகள் பிளவுபடுவதையும், தமக்குள் ஒருமித்த கருத்துடன் ஒன்றிணைய முடியாமல் போவதையும் உறுதி செய்திருக்கின்றது. பிராந்திய ரீதியாக இஸ்லாமிய நாடுகள் பலமடைவதைத் தடுப்பதற்கும், அவற்றை நிரந்தரமான பாது காப்பற்ற சூழலில் வைத்திருப்பதற்கும் இந்த உத்தி ஒரு வலுவான ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மேற்கத்திய நாடுகளின் திட்டமிட்ட அரசியல் நகர்வுகளால் உருவான சித்தாந்த மோதல்களின் ஒரு கொடிய வடிவமே ஐஎஸ்ஐஎஸ் (ISIS) ஆகும். தொடக்கத்தில் சில குறிப்பிட்ட பிராந்திய அரசியல் நோக்கங்களுக்காக அமெரிக்காவால் மறைமுகமாக வளர்த்தெடுக்கப்பட்ட இவ்வமைப்பு, காலப் போக்கில் அவர்களுக்கே பெரும் அச்சுறுத்தலாகவும், அவர்க ளாலேயே உலகளவில் வெறுக்கப்படும் ஒரு தீவிரவாத அமைப்பாகவும் உருவெடுத்தது.

இதேபோன்றதொரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட வர்களே தலிபான்களும் (Taliban) ஆவர். சோவியத் எதிர்ப்புப் போரின் போது அமெரிக்காவின் ஆதரவைப் பெற்ற இவர்கள், இன்று ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் இருபதாண்டு கால ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளனர். தற்போது அங்கு மத அடிப்படைவாதக் கொள்கைகளுடன் கூடிய ஒரு சுயாட்சியைத் தலிபான்கள் நிலைநிறுத்தியுள்ள துடன், சர்வதேச அரசியலில் ஒரு புதிய சவாலாகவும் உருவெ டுத்துள்ளனர். தற்போது அங்கு மத அடிப்படைவாதக் கொள் கைகளுடன் கூடிய ஒரு சுயாட்சியைத் தலிபான்கள் நிலைநி றுத்தியுள்ளதுடன், சர்வதேச அரசியலில் ஒரு புதிய சவாலா கவும் உருவெடுத்துள்ளனர். போர்கள் உள்நாட்டுக் குழப்பங்கள் என்றான அழிவுகளின் பின்புதான் இந்த நாடுகள் விளிப்படைந்தன. தமது பிரதான எதிரி மேற்குலகம்தான் என்பதைப் புரிந்துகொண்டன. அமெரிக்க ஏகதிபத்தியம்தான் என்ற முடிவிற்கு வந்து இவ்வரசுகள் மத அடிப்படையிலான ஏகாதிபத்திய அரசுகளை நிறுவி உள்ளன. இதில், முதன்மையானது ஈரான்.

எண்ணை வளம் இந்த அனைத்து நாடுகளின் பெரும் சொத்தாக இருபதுதான் அந்த நாடுகளின் பலம் என்று உணரப்பட்டாலும் இந்த எண்ணை வள நாடுகளிடையே மேற்குலகம் தமது தொழில் நுட்பத்தினால் உருவாக்கிய எண்ணைக் கிணறுகளைச் சொந்தம் கொண்டாடுவது; அதற்கான பொம்மை அரசுகளை அமைத்தல் என்றான அமெரிக்க மற்றும் பிரிதானியாவின் கூட்டுச் சதிகளே இன்று வரை மேற்குலகம் இந்த நாடுகளில் படையெடுப்பைத் தொடர வைக்கின்றது.

1979-ஆம் ஆண்டு வரை ஈரானில் அமெரிக்காவிற்குச்

சார்பான மன்னராட்சி (Shah's regime) நிலவியவரை இரு நாடுகளுக்கும் இடையே சுமூகமான உறவே நீடித்தது. ஆனால், மக்கள் புரட்சியின் மூலம் மன்னராட்சி அகற்றப்பட்டு, ஈரான் ஓர் இஸ்லாமியக் குடியரசாக (Islamic Republic) மாறியதுமே மேற்கத்திய நாடுகளுடனான மோதல் போக்குத் தொடங்கியது. அன்றிலிருந்து இன்றுவரை ஈரானுக்கு எதிரான பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் மேற்கத்திய சக்திகளால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு, தற்போது அது ஒரு கொதிநிலையை எட்டியுள்ளது.

மத்திய கிழக்கின் மற்ற நாடுகளைக் காட்டிலும், ஈரானின் வளர்ச்சியைத் தடுப்பதிலும் அதன் செல்வாக்கைச் சிதைப்பதிலும் இஸ்ரேல் மிகுந்த தீவிரமான கொள்கைகளைக் கொண்டுள்ளது. ஈரானின் அணுசக்தித் திட்டம் மற்றும் அதன் பிராந்திய ஆதிக்கம் ஆகியவை தங்களுக்கு நேரடி அச்சுறுத்தல் எனக் கருதும் இஸ்ரேல், ஈரானை அரசியல் ரீதியா



கவும் இராணுவ ரீதியாகவும் பலவீனப்படுத்துவதையே தனது முதன்மை இலக்காகக் கொண்டுள்ளது.

இரண்டாம் உலகப் போரின் முடிவில், பாலஸ்தீன மண்ணில் தோற்றுவிக்கப்பட்ட இஸ்ரேல், அங்கு தனது இருப்பை நிலைநிறுத்திக்கொள்ளவும் பாலஸ்தீனத்தின் இறையாண்மையை முழுமையாகச் சிதைக்கவும் தொடர்ந்து முயன்று வருகின்றது. இத்தகைய இஸ்ரேலிய விரிவாக்கக் கொள்கைகளுக்குப் பெரும் தடையாக விளங்கும் ஈரானை, அடியோடு பலவீனப்படுத்துவதையே இஸ்ரேல் தனது முதன்மை மூலோபாய இலக்காகக் (Strategic Objective) கொண்டுள்ளது. ஈரானின் அரசியல் மற்றும் இராணுவ வலிமையைச் சிதைப்பதன் மூலமே பிராந்தியத்தில் தனது தடையற்ற ஆதிக்கத்தை உறுதி செய்ய முடியும் என இஸ்ரேல் கருதுகின்றது.

அமெரிக்காவின் பணவியல் கொள்கை மற்றும் டொலரின் உலகளாவிய ஆதிக்கம் ஆகியவற்றில் யூத சமூகத்தின் செல்வாக்கு மிக வலுவாகக் காணப்படுவதால், இஸ்ரேலின் நலன்களைப் பாதுகாக்க அமெரிக்கா எத்தகைய தீவிரமான எல்லைக்கும் செல்லத் துணிந்துள்ளது. இருப்பினும், அண்மைக்காலமாக இஸ்ரேல் ஈரான் மீது முன்னெடுத்த ஒருதலைப்பட்சமான தாக்குதல்களும், அதற்கு ஆதரவாக அமெரிக்கா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளும் பிராந்தியத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவிலான பதற்றத்தை உருவாக்கியுள்ளன. இதற்குப் பதிலடியாக, வளைகுடா பிராந்தியத்திலுள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் நடத்திய தாக்குதல்கள், அமெரிக்காவிற்கு ஒரு பலமான எச்சரிக்கையை விடுத்துள்ளன. ஈரானின் இந்தத் துணிச்சலான எதிர்வினையானது, அமெரிக்காவைத் தனது அடுத்தகட்ட நகர்வுகள் மற்றும் நேரடி இராணுவத் தலையீடுகள் குறித்துச் சற்று நிதானமாகச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளியுள்ளது.

வளைகுடா பிராந்தியத்தின் எத்திசையிலும் அமெரிக்கா தனது பலமான இராணுவப் படைத்தளங்களைக் கொண்டுள்ளது. இருப்பினும், இப்படைத்தளங்கள் அனைத்தும் ஈரானின் ஏவுகணை மற்றும் தாக்குதல் எல்லைக்குள்ளேயே அமைந்துள்ளன என்பது அமெரிக்காவிற்கு உள்ள மிகப் பெரிய பலவீனமாகும். ஈரான் இந்தத் தளங்களை மிக எளிதாக இலக்கு வைத்துத் தாக்கக்கூடிய வல்லமையைப் பெற்றுள்ளது. அத்தகையதொரு தாக்குதலில் அமெரிக்கப் படைகளுக்கு ஏற்படும் உயிர்ச்சேதங்கள், உலக அரங்கில் அமெரிக்காவின் இராணுவ மேலாதிக்கம் மற்றும் வலிமை குறித்த சந்தேகங்களை எழுப்பும் என அமெரிக்கா அஞ்சுகின்றது. இந்த அச்சமே, ஈரான் மீதான நேரடி இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து அமெரிக்காவைத் தடுத்து நிறுத்தும் ஒரு தற்காப்பு காரணியாக மாறியுள்ளது.

1990-களில் அமெரிக்கப் படையினர் சந்தித்த படுதோல்வியும், உயிரிழந்த அமெரிக்க வீரர்களின் உடல்களைச் சோமாலியப் போராளிகள் தரையில் கட்டியிழுத்த செயற்பாடுகளினால் அமெரிக்க மக்களிடம் ஏற்பட்ட அமெரிக்க அரசிற்கு எதிரான எதிர்பலைகள் சோமாலியாவில் உள்ள அமெரிக்க இராணுவத்தை அன்று பின்வாங்க வைத்தது. இதனை அன்றைய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்ரன் செய்தார். இதனைத் தொடர்ந்து, அமெரிக்கா தனது தரைப்படை வீரர்களை நேரடியாகப் போர்க்களத்தில் இறக்குவதைத் தவிர்த்து வருகின்றது. மாறாக, உள்ளூரில் தனக்குச் சாதகமான கிளர்ச்சிக் குழுக்களை உருவாக்கி, அவர்களுக் குப் பணம், ஆயுதங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி மறைமுகமாகச் செயற்படுகின்றது. இவற்றுடன் வான்வெளித் தாக்குதல்களை முதன்மைப்படுத்துவதன் மூலம், அமெரிக்கப் படையினருக்கு ஏற்படும் நேரடி உயிரிழப்பு களைத் தவிர்ப்பதோடு அல்லது கணிசமாகக் குறைத்து வருகின்றது. தமது நாட்டுப் படையினர் உயிரிழக்கும்போது மட்டும் தீவிரமாக எதிர்வினையாற்றும் அமெரிக்கப் பொது மக்களின் மனநிலையே இதற்கு முக்கிய காரணமாகும். வியட்நாம் மற்றும் சோமாலியா போன்ற போர்க்களங்களில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் மற்றும் அங்கு நிகழ்ந்த உயிர் இழப்புகளால் எழுந்த உள்நாட்டுப் போராட்டங்கள், அமெரிக்க அரசைத் தனது படைகளைப் பின்வாங்கச் செய்யும் நிலைக்குத் தள்ளின. இத்தகைய சூழல் மீண்டும் உருவாகாமல் தடுக்கவே, நேரடித் தரைப்படைத் தாக்குதல்களை அமெரிக்கா தவிர்த்து வருகின்றது.

ஈரானைப் பொறுத்தவரை, அமெரிக்கா தற்போது அதேபோன்றதொரு மறைமுகப் போர் முறையையே (Hybrid Warfare) கையாள முற்படுகின்றது. ஈரானின் உள்நாட்டில் குழப்பங்களை உருவாக்குவதுடன், வான்வழித் தாக்குதல்களை முதன்மைப்படுத்துவதும் இதன் ஒரு அங்கமாகும். குறிப்பாக, அமெரிக்காவினால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளே அந்நாட்டு மக்களின் வாழ்வாதார நெருக்கடிக்குக் காரணம் என்ற உண்மையை மறைத்து,



ஈரானிய அரசாங்கத்தின் நிர்வாகச் சீர்கேடே இதற்குக் காரணம் எனத் தனது ஊடகப் பிரச்சாரங்கள் வாயிலாக அமெரிக்கா ஒரு உளவியல் போரை முன்னெடுக்கின்றது.

மறுபுறம், தொழில்நுட்பம், அறிவியல் மற்றும் ஆயுதத் தயாரிப்பு போன்ற துறைகளில் வளைகுடா பிராந்தியத்தில் ஈரான் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. ஒருவேளை அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து தாக்குதலைத் தொடங்கினால், வளைகுடா பிராந்தியத்திலுள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஈரான் தனது ஏவுகணைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பதிலடி கொடுக்கக்கூடும். இத்தகைய மோதலில், அமெரிக்கப் படையினருக்கு முகாம்களுக்குள்ளேயே உயிரிழப்புகள் நேரிட்டால், அது அமெரிக்கப் பிரஜைகளிடையே கடும் அதிருப்தியையும் உள்நாட்டுப் போராட்டங்களையும் உருவாக்கும்.

இந்தத் தீவிரமான எதிர்வினையைத் தவிர்க்கவே அமெரிக்கா தனது நேரடித் தாக்குதலைத் தாமதப்படுத்தி அல்லது தவிர்த்து வருகின்றது. ஈரான் பல துறைகளில் வளர்ந்திருந்தாலும், வான்வெளித் தொழில்நுட்பத்தில் அமெரிக்கா, சீனா, ரஷ்யா அல்லது இந்தியா போன்ற நாடுகளின் நிலைக்கு இன்னும் ஈடுகொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால், அமெரிக்காவின் வான்வெளித் தாக்குதலை முன்கூட்டியே கண்டறிந்து வான்வெளியில் தடுத்தல் என்பதில் ஈரான் பலவீனத்தைக் கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதற்கு சீனாவும் ரஸ்யாவும் ஈரானுக்கு உதவினாலும் தனது சொந்த தொழில் நுட்பம் போல் இவை உதவாது என்ற நிலையில் ஈரான் தன்னை தற்காத்துக் கொள்ள வேறு முறைகளைக் கையாளும் முயற்சிகளில் இறங்கி வருகின்றது.

ஈரான் தனது தற்காப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, 'செறிவூட்டப்பட்ட யூரேனியத்தைப்' (Enriched Uranium) பயன் படுத்தி அணு ஆயுதங்களை ஏந்தவும் தயங்க மாட்டோம் என்ற எச்சரிக்கையை மேற்கத்திய நாடுகளுக்கு விடுத்து வரு கின்றது. அணு ஆற்றல் என்பது ஆக்கப்பூர்வமான தேவைக ளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர, அழிவுக்கான ஆயுதமாக மாற்றப்படுவது ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கே பெரும் அச்சுறுத்தலாகும். எனவே, உலகில் உள்ள அனைத்து நாடுகளும் இத்தகைய பேரழிவு ஆயுதங்களை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதை விடுத்து, 'வல்லரசு நாடுகள் அணு ஆயுதங்களை வைத்திருக்கலாம். ஆனால், வளரும் நாடோ அல்லது மற்ற நாடுகளோ வைத்திருக்கக் கூடாது' என்று ஈரானைக் கட்டுப்ப டுத்த முயலும் மேற்கத்திய நாடுகளின் வாதம் தர்க்கரீதி யற்றது மட்டுமல்ல, அது ஒரு பாரபட்சமான மற்றும் போலியான நிலைப்பாடாகும்

பாகிஸ்தான் மற்றும் இஸ்ரேல் போன்ற, சர்வதேச அழுத்தங்களுக்குப் பணியாத நாடுகளிடம் உள்ள அணு ஆயுதங்கள், ஈரானின் அணுசக்தித் திட்டத்தை விடவும் உலகிற்குப் பெரும் அச்சுறுத்தலானவை என்பதை மனித குலம் ஒரு கசப்பான உண்மையாக ஏற்றுக்கொண்டுள்ளது. அணு ஆயுதங்களற்ற ஒரு பாதுகாப்பான உலகை உருவாக்க அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து முன்வர வேண்டும் என்பதே உலக நாடுகளின் எதிர்பார்ப்பாகும். இருப்பினும், 'உலகக் காவலன்' (Global Policeman) போன்று செயற்படும் அமெரிக்கா, இத்தகைய முழுமையான அணு ஆயுதக் குறைப்பு உடன்படிக்கை களுக்கு ஒருபோதும் உடன்படப் போவதில்லை. மாறாக, தனது பூகோள அரசியல் நலன்களுக்காகத் தனது நட்பு நாடுகள் அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பதை அது மௌனமாக அனுமதிப்பதோடு, ஈரானைப் போன்ற பிற நாடுகள் அந்தத் தொழில்நுட்பத்தைப் பெறுவதை மட்டும் தீவிரமாக எதிர்க்கும் இரட்டை நிலைப்பாட்டைக் கொண் டுள்ளது.

எனவே, ஈரானுடனான தற்போதைய பதற்றமான சூழலைத் தனக்குச் சாதகமாகக் கையாள, முன்னைய ஷா மன்னர் (Shah of Iran) ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த, தற்போது அமெரிக்காவில் தஞ்சம் அடைந்துள்ள மன்னர் பரம்பரையின் ஆதரவாளர்களைக் கொண்டு ஒரு மாற்றாட்சியை உருவாக்க அமெரிக்கா முயலக்கூடும். அமெரிக்காவின் 'காகிதப்

பொருளாதார' (Paper Economy) மேலாதிக்கத்தினால் செயற்கையாகத் தூண்டப்பட்ட பணவீக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் ஈரானிய மக்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தியைத் தனது அரசியல் இலாபத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ள அமெரிக்கா தொடர்ந்து முயற்சிக்கின்றது. இருப்பினும், அமெரிக்க ஏகாதிபத்தியத் திற்கு எதிராக இஸ்லாமிய உலகம் முன்னெடுக்கும் எதிர்ப்புப் போராட்டப் பாத்திரத்தை ஈரான் கைவிடாதவரை, அது வீழ்ந்துவிடாத ஒரு சக்தியாகவே நிலைத்து நிற்கும். அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் தனது இறையாண்மையைக் காப்பதில் ஈரான் ஒரு தீரமிக்க நாடாகத் தொடர்ந்து எழுச்சி பெற்று விளங்கும்.

**ஈரான் நாடு பற்றிய சுருக்க வரலாறு:**

மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள ஈரானானது, அதிகாரப்பூர்வமாக ஈரான் இஸ்லாமியக் குடியரசு என்று அழைக்கப்படுகிறது. உலக வரலாற்றில் தொன்மை வாய்ந்த இப்பகுதி, வரலாற்று ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் பாரசீகம் (Persia) என்றும் பரவலாக அறியப்படுகிறது. இதன் வடமேற்கே துருக்கியும், மேற்கே ஈராக்கும், வடக்கே அசர்பைஜான், ஆர்மீனியா, காஸ்பியன் கடல் (Caspian Sea), துருக்மெனிஸ்தான் ஆகிய நாடுகளும், கிழக்கே ஆப்கானித்தானும், தென் கிழக்கே பாக்கிஸ்தானும், தெற்கே ஓமான் குடாவும் பாரசீக வளைகுடாவும் எல்லைகளாக அமைந்துள்ளன.

இந்நாட்டின் மொத்த மக்கள் தொகை கிட்டத்தட்ட 9 கோடி மக்கள் ஆகும். பெரும்பாலானோர் பாரசீக இனத்தவர்களாவர். இந்நாட்டின் மொத்தப் பரப்பளவு 16,48,195 சதுர கிலோமீட்டர் ஆகும். மொத்த பரப்பளவு, மக்கள் தொகை என்பவற்றின் அடிப்படையில் ஈரான் உலகளவில் 17-ஆவது இடத்தைப் பெறும் நாடாக விளங்குகின்றது. முழுவதும் ஆசியாவில் அமைந்துள்ள நாடுகளில் இது ஆறாவது பெரிய நாடாகும். உலகில் மிகுந்த மலைப் பாங்கான நாடுகளில் இதுவும் ஒன்றாகும்.

அதிகாரப்பூர்வமாக, ஓர் இஸ்லாமியக் குடியரசான இது முஸ்லிம்களைப் பெரும்பான்மையான மக்கள் தொகையாகக் கொண்டுள்ளது. இந்நாடு ஐந்து பகுதிகளாகவும் 31 மாகாணங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. தெகுரான் இந்நாட்டின் தேசியத் தலை நகரமும் பெரிய நகரமும் வணிக மையமுமாக அமைந்துள்ளது. நாகரிகங்களின் தொட்டிலாகத் திகழும் ஈரான் தேசத்தில், கற்காலத்தின் (Stone Age) பிற்பகுதியிலிருந்தே மனிதக் குடியிருப்புகள் நிலவி வருகின்றன. உலக வரலாற்றின் மிகப்பழமையான கலாச்சாரப் பின்னணியைக் கொண்ட இந்தப் பிராந்தியத்தில், கற்கால மனிதர்கள் தங்களது வாழ்விடங்களை அமைத்து, ஒரு செழுமையான நாகரிகத்திற்கு அடிகோலியுள்ளனர் என்பதைப் பல்வேறு தொல்பொருள் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

ஈரானின் நிலப்பரப்புகள் அனைத்தும் முதன்முதலாக ஒரு ஒருங்கிணைந்த அரசியல் அமைப்பாக கி.மு. ஏழாம் நூற்றாண்டில் சியாக்சரசு (Cyaxares) மன்னரின் கீழ், மீடியாப் பேரரசாக (Median Empire) உருவெடுத்தன. இதனைத் தொடர்ந்து, மகா சைரஸ் (Cyrus the Great) அகாமனிசியப் பேரரசை (Achaemenid Empire) தோற்றுவித்தார். இது பண்டைய உலக வரலாற்றிலேயே நிலப்பரப்பளவிலும், அதிகாரத்திலும் மிகப்பெரிய பேரரசுகளில் ஒன்றாகத் திகழ்ந்தது. ஈரானின் இந்த நீண்டகால வரலாற்றுப் பாரம்பரியமே, அந்நாட்டின் இன்றைய அரசியல் வீரியத்திற்கும், ஏகாதிபத்திய எதிர்ப்பிற்கும் மிக முக்கியமான உளவியல் காரணியாக விளங்குகின்றது.

எழுத்து முறை, விவசாயம், நகரமயமாக்கல், சமயம் மற்றும் மைய அரசாங்கம் ஆகியவற்றில் தொடக்க கால முன்னேற்றங்கள் சிலவற்றைப் பண்டைய ஈரான் கண்டுள்ளது. மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் ஈரானின் பங்கு மகத்தானது. குறிப்பாக, வரிவடிவ எழுத்து முறை (Writing systems), முறையான விவசாய நுட்பங்கள், திட்டமிடப்பட்ட நகரமயமாக்கல் (Urbanization), தத்துவார்த்தமான சமயக் கோட்பாடுகள் மற்றும் வலுவான மைய அரசாங்க நிர்வாகம் (Centralized government) ஆகிய துறைகளில் தொடக்க காலத்திலேயே ஈரான் வியக்கத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. உலக வரலாற்றில் ஒரு முன்னோடி தேசமாக, இத்தகைய நவீன வாழ்வியல் கூறுகளுக்குப் பண்டைய ஈரான் அடித்தளமிட்டது. பொ.ஆ.பி. ஏழாம் நூற்றாண்டில் இஸ்லாமியப் பேரரசின் விரிவாக்கத்தினால் இப்பகுதி வெல்லப்பட்டது, இது ஈரான் இஸ்லாமிய மயமாக்கப்படுவதற்கு முதன்மையான வழிவகுத்தது. இதனைத் தொடர்ந்த வந்த 'இஸ்லாமியப் பொற்காலத்தின்' போது, ஈரானிய நாகரிகத்தின் ஆக்கக்கூறுகள் உலகளாவிய அளவில் செழித்து வளர்ந்தன. குறிப்பாக இலக்கியம், தத்துவம், கணிதம், மருத்துவம், வானியல் மற்றும் கலை ஆகிய துறைகளில் ஈரானிய அறி



ஞர்கள் நிகழ்த்திய சாதனைகள், நவீன அறிவியலின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான அடித்தளமாக அமைந்தன.

அரேபிய ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த ஈரானிய முஸ்லிம் அரச மரபுகள், பாரசீக மொழிக்குப் புத்துயிர் அளித்தன. இவை 11-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரையிலான செல்யூக் மற்றும் மங்கோலியப் படையெடுப்புகள் வரை நாட்டை ஆட்சி செய்தன. ஈரானைப் பூர்வீகமாகக் கொண்ட சபாவியர், ஓர் ஒன்றிணைந்த ஈரானிய அரசை மீண்டும் நிறுவினர். இவர்கள் பன்னிருவர் சியா இஸ்லாமை (Twelver Shia Islam) நாட்டின் அதிகாரப்பூர்வ சமயமாக அறிவித்தனர்.18-ஆம் நூற்றாண்டில் அப்சரியப் பேரரசின் ஆட்சியின் போது ஈரான் உலகிலேயே ஒரு முன்னணி சக்தியாகத் திகழ்ந்தது. எனினும், 19-ஆம் நூற்றாண்டு வாக்கில் ரஸ்யப் பேரரசுடனான சண்டைகளின் வழியாக இது குறிப்பிடத்தக்க அளவிலான நிலப்பரப்புகளை இழந்தது.

தொடக்க 20-ஆம் நூற்றாண்டானது பாரசீக அரசியலமைப்புப் புரட்சியைக் கண்டது. பஹ்லவி அரசமரபு நிறுவப்பட்டது. எண்ணெய்த் தொழில் துறையைத் தேசியமயமாக்கும் முகமது மொசாத்தேக்கின் முயற்சியானது 1953-ஆம் ஆண்டு ஆங்கிலேய - அமெரிக்க ஆட்சிக் கவிழ்ப்புக்கு வழி வகுத்தது.

1979-ஆம் ஆண்டு வெடித்த ஈரானிய இஸ்லாமியப் புரட்சியின் விளைவாக, முடியரசு அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து, அயதுல்லா கொமெய்னி தலைமையில் ஈரான் ஓர் இஸ்லாமியக் குடியரசாகப் பிரகடனப் படுத்தப்பட்டதுடன், அவர் அந்நாட்டின் முதல் 'அதியுயர் தலைவராக' (Supreme Leader) பொறுப்பேற்றார். ஈரான் அதிகாரப்பூர்வமாக, மதகுருமார்களின் மேலாதிக்கம் கொண்ட ஓர் ஒருமுக இஸ்லாமியக் குடியரசாக (Theocratic Unitary Islamic Republic) திகழ்கிறது. அந்நாட்டின் அரசியல் சாசனத்தின்படி, 'உச்சநிலைத் தலைவர்' (Supreme Leader) அனைத்து அதிகாரங்களின் மையப்புள்ளியாக இருந்து அரசு முறைமையை வழிநடத்துகிறார். தெய்வீக இறையாண்மை மற்றும் மக்களாட்சிப் பண்புகள் ஆகிய இரு கூறுகளும் ஒன்றிணைந்த ஒரு தனித்துவமான அரசியல் நிர்வாகக் கட்டமைப்பை ஈரான் கொண்டுள்ளது

இறுதி அதிகாரமானது அதியுயர் தலைவரிடமே உள்ளது. தாங்களாக முடிவெடுக்கும் உரிமையைப் பிறருக்கு அளிக்காத அரசாங்க முறையாக இது உள்ளது. ஈரான் ஒரு முதன்மையான பிராந்திய சக்தியாகும். இதற்கு இது பெருமளவிலான நிலக் கீழ் எரிமங்களைக் கையிருப்பாகக் கொண்டுள்ளதே காரணம் ஆகும்.

இதில் உலகின் இரண்டாவது மிகப் பெரிய இயற்கை எரிவாயு வளம், உலகின் மூன்றாவது மிகப்பெரிய நிரூபிக்கப்பட்ட எண்ணெய்க் வளங்கள், புவிசார் அரசியல் ரீதியாக இதன் முக்கியமான அமைவிடம், இராணுவச் செயலாற்றல், பண்பாட்டு மேலாதிக்கம், பிராந்தியச் செல்வாக்கு மற்றும் உலகளாவிய சியா இஸ்லாமின் கவனக் குவியமாக இருதல் என்பன முக்கிய காரணங்களாக அமைகின்றன.

ஈரானியப் பொருளாதாரமானது கொள்வனவு ஆற்றல் சமநிலையின் அடிப்படையில் உலகின் 19-ஆவது மிகப்பெரிய பொருளாதாரமாகத் திகழ்கிறது. சர்வதேச அளவில் ஒரு முக்கிய சக்தியாக விளங்கும் ஈரான், ஐக்கிய நாடுகள் அவை, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, ஓப்பெக் (OPEC) மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு ஆகியவற்றில் உறுப்பினராக உள்ளது. மேலும், அணிசேரா இயக்கம், சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் பிரிக்ஸ் (BRICS) போன்ற சர்வதேசக் கூட்டணிகளிலும் ஈரான் ஒரு செயல்பாட்டில் உள்ள உறுப்பு நாடாகத் தனது பங்களிப்பை வழங்கி வருகிறது. ஈரான் 28 யுனெஸ்கோ உலகப் பாரம்பரியக் தளங்களுக்குத் (புராதனங்கள்) தாயகமாக உள்ளது. இது உலகிலேயே பத்தாவது அதிக எண்ணிக்கையாகும். கருத்துக்கு எட்டாத கலாச்சாரப் பாரம்பரியம் அல்லது மனித பொக்கிஷங்கள் என்பதன் அடிப்படையில் ஐந்தாவது தரநிலையை இது பெறுகிறது.

1872 முதல் 1905 வரையிலான காலகட்டத்தில், கஜர் (Qajar) அரச வம்சத்தினர் வெளிநாட்டவர்களுக்குப் பாரிய பொருளாதாரச் சலுகைகளையும் ஏகபோக உரிமைகளையும் வழங்கினர். நாட்டின் வளங்கள் இவ்வாறு அந்நியருக்குத் தாரை வார்க்கப்படுவதைக் கண்டு கொதித்தெழுந்த ஈரானிய மக்கள், நிலப்பிரபுத்துவ மற்றும் காலனித்துவப் போக்குகளுக்கு எதிராகத் தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்தனர்.

இப்போராட்டங்களின் விளைவாக 1905-இல் வரலாற்றுச் சிறப்புமிக்க 'பாரசீக அரசியலமைப்புப் புரட்சி' (Persian Constitutional Revolution) வெடித்தது. இதன் தொடர்ச்சியாக 1906-ஆம் ஆண்டு, ஈரானின் முதலாவது அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டு, தேசிய நாடாளுமன்றம் (Majlis) நிறுவப்பட்டது. குறிப்பிடத்தக்க வகையில், இந்த அரசியலமைப்புச் சட்டம் இஸ்லாமியர்களைத் தவிர சிறுபான்மையினராக வாழ்ந்த கிறித்தவர்கள், யூதர்கள் மற்றும் ஜோராஸ்டிரியர்கள் (Zoroastrians) ஆகியோரின் உரிமைகளை அங்கீகரித்ததுடன், அவர்களுக்குப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தையும் உறுதி செய்தது.

1909-ஆம் ஆண்டு அரசியலமைப்புவாதப் படைகள் தலைநகருக்குள் நுழைந்த 'தெஹ்ரானின் வெற்றி' (Triumph of Tehran) எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு அரங்கேறியது. இதனைத் தொடர்ந்து, மன்னர் முகமது அலி ஷா அரியணையை விட்டு விலகக் கட்டாயப்படுத்தப்பட்டார். ஈரானிய வரலாற்றில் 'சிறிய சர்வாதிகாரம்' (Lesser Despotism) என்று அழைக்கப்பட்ட இருண்ட காலத்தை இந்நிகழ்வு முடிவுக்குக் கொண்டு வந்தது. ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகிலேயே, நவீன அரசியலமைப்புச் சட்டத்தை முன்நிறுத்தி ஏற்பட்ட இவ்வகையிலான முதல் புரட்சி இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஈரானின் பழைய அரசியல் ஒழுங்குமுறை புதிய அமைப்புகளால் மாற்றியமைக்கப்பட்டாலும், அந்நாடு அந்நியத் தலையீடுகளிலிருந்து விடுபடவில்லை. 1907-ஆம் ஆண்டில் கையெழுத்தான ஆங்கிலேய-ரஷ்ய உடன்படிக்கை (Anglo-Russian Entente), ஈரானைத் தங்களுக்குள் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக்கொண்டது. இதன் விளைவாக, ரஷ்ய படைகள் வடக்கு ஈரான் மற்றும் தப்ரீஸ் (Tabriz) நகரை ஆக்கிரமித்து, பல ஆண்டுகளுக்குத் தங்களது இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. இருப்பினும், இந்த அடக்குமுறைகள் ஈரானிய மக்களின் விடுதலை உணர்வை அடக்கிவிடவில்லை. கஜர் முடியரசின் பலவீனம் மற்றும் அந்நியப் படையெடுப்பாளர்களின் ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராக,



மிர்சா குச்சிக் கான் (Mirza Kuchik Khan) தலைமையில் 'காட்டு இயக்கம்' (Jangal Movement / Gilan) எனும் ஆயுத மேந்திய கிளர்ச்சி வெடித்தது. காடுகளைத் தளமாகக் கொண்டு இயங்கிய இந்த இயக்கம், ஈரானின் இறையாண் மைக்காகப் போராடிய மிகமுக்கியமான மக்கள் கிளர்ச்சியாக வரலாற்றில் பதிவானது.

முதலாம் உலகப் போரின் போது ஈரான் நடுநிலை வகித்த போதிலும், அதன் புவிசார் முக்கியத்துவம் காரணமாக ஒட்டமோன் (Ottoman), ரஷ்ய மற்றும் பிரித்தானியப் பேரர சுகள் மேற்கு ஈரானை ஆக்கிரமித்தன. இப்பிராந்தியத்தில் இப்பேரரசுகளுக்கு இடையே நிகழ்ந்த பாரசீகப் படையெடுப் புகள் மற்றும் மோதல்கள் 1921-ஆம் ஆண்டு வரை நீடித்தன.

இப்போரினால் ஏற்பட்ட நேரடிப் பாதிப்புகள், ஒட்டோமானியர் களால் திட்டமிட்டு நடத்தப்பட்ட கிறித்தவர்களுக்கு எதிரான இனப்படுகொலைகள் மற்றும் 1917-1919 காலகட்டத்தில் செயற்கையாகத் தூண்டப்பட்ட கடும் பஞ்சம் ஆகியவற்றால் சுமார் 20 இலட்சத்திற்கும் அதிகமான ஈரானியர்கள் உயிரிழந் தனர். குறிப்பாக, ஈரானிய அசிரியர்கள் (Assyrians) மற்றும் ஈரானிய ஆர்மீனியக் கிறித்தவர்கள் ஒட்டமோன் துருப்புகளால் இலக்கு வைக்கப்பட்டுக் கொடூரமாகப் படுகொலை செய்யப் பட்டனர். மனிதாபிமான அடிப்படையில் அவர்களைப் பாதுகாக்க முயன்ற பல ஈரானிய முஸ்லிம்களும் இப்படுகொ லைகளில் கொல்லப்பட்டனர் என்பது வரலாற்றில் மறைக்க முடியாத துயரமாகும்.

அகா முகமது கானுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த கஜர் வம்சத் தினர் நிர்வாகத் திறமையற்றவர்களாகவே திகழ்ந்தனர். முதலாம் உலகப் போரின் போதும், அதன் பின்னரும் நிகழ்ந்த அந்நிய ஆக்கிரமிப்புகளைத் தடுப்பதில் அவர்கள் காட்டிய பலவீனம், நாட்டின் இறையாண்மையைப் பெரும் கேள்விக்குள்ளாக்கியது. இந்த அரசியல் வெற்றிடத்தைப் பயன்படுத்திக்கொண்ட பிரித்தானியர்கள், 1921-ஆம் ஆண்டு ஒரு சதிப்புரட்சியை (Coup d'état) முன்னெடுத்தனர். இது கஜர் வம்சத்தின் வீழ்ச்சிக்கும், ஈரானில் ஒரு புதிய அதிகார மாற்றத்திற்கும் வழிவகுத்தது.

1925-இல் இராணுவ அதிகாரியான ரேசா பஹலவி அதிகாரத்தைப் பெற்றார். பிரதம மந்திரி, முடியரசரானார். பஹலவி வம்சத்தை நிறுவினார். 1941-இல் இரண்டாம் உலகப் போரின் போது அனைத்து ஜேர்மானியர்களையும் வெளியேற்றுமாறு ஈரானிடம் பிரித்தானியர் முறையிட்டனர். பஹலவி மறுத்தார். எனவே, பிரித்தானிய மற்றும் சோவியத் படையினர் ஒரு வெற்றிகரமான திடீர்ப் படையெடுப்பைத் தொடங்கினர். சோவியத் ஒன்றியத்துக்குப் பொருள் வழங்கும் வழியை இது உறுதி செய்தது. ஜேர்மானிய செல்வாக்கைக் கட்டுப்படுத்தியது. பஹலவி உடனடியாகச் சரணடைந்தார். நாட்டை விட்டு வெளியேறினார். அவருக்குப் பிறகு அவரது மகன் முகம்மது ரிசா ஷா பஹலவிஆட்சிக்கு வந்தார்.

இரண்டாம் உலகப் போரின்போது, சோவியத் ஒன்றியத் திற்குத் தேவையான இராணுவ மற்றும் அத்தியாவசிய உதவிகளை அமெரிக்காவும் பிரித்தானியாவும் தடையின்றி வழங்குவதற்கான ஒரு முக்கியப் போக்குவரத்துப் பாதையாக (Persian Corridor) ஈரான் உருவெடுத்தது. இந்தக் காலகட் டத்தில், சுமார் 1.20 இலட்சம் போலந்து அகதிகளும், ஆயுத

மேந்தியப் படைகளும் ஈரான் வழியாகப் பாதுகாப்பாக வெளியேறினர். 1943-இல் நடைபெற்ற புகழ்பெற்ற தெஹரான் மாநாட்டில், ஈரானின் சுதந்திரம் மற்றும் எல்லைகளின் ஒருமைப்பாட்டை உறுதி செய்யும் 'தெஹரான் பிரகடனத்தை' நேச நாடுகள் வெளியிட்டன. இருப்பினும், போர் முடிந்த பிறகு சோவியத் ஒன்றியம் வடமேற்கு ஈரானில் தனக்குச் சார்பான பிரிவினைவாத அரசுகளை (அசர்பைஜான் மக்கள் அரசாங்கம் மற்றும் மகாபத் குடியரசு) நிறுவியது. இது 1946-ஆம் ஆண்டில் பெரும் 'ஈரான் நெருக்கடிக்கு' (Iran Crisis) வழிவகுத்ததுடன், பனிப்போரின் தொடக்க கால மோதல்களில் ஒன்றாகவும் அமைந்தது. இறுதியில், ஈரானிய எண்ணெய் வளங்களில் சலுகைகள் வழங்குவதாக அளிக்கப்பட்ட உறுதிமொழியைத் தொடர்ந்து, 1946-இல் சோவியத் படைகள் பின்வாங்கின. அதனைத் தொடர்ந்து, அங்கு நிலைபெற்றிருந்த சோவியத் சார்பு அரசுகள் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டு, ஈரானின் மத்திய அரசு மீண்டும் அப்பகுதிகளைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.

1951-இல் முகமது மொசாத்தேக் ஈரானின் பிரதம மந்திரியாக சனநாயக முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாட்டின் எண்ணெய்த் துறையைத் தேசியமயமாக்கியதற்குப் பிறகு மொசாத்தேக் மிகவும் பிரபலமானார். எண்ணெய்த் துறையானது முன்னர் அயல் நாட்டவரின் கட்டுப்பாட்டில் இருந்தது. இவர் முடியாட்சியைப் பலவீனமாக்கப் பணியாற்றினார். 1953-ஆம் ஆண்டின் ஈரானிய ஆட்சிக் கவிழ்ப்பில் இவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இந்த ஆட்சிக் கவிழ்ப்பு ஓர் ஆங்கிலேய-அமெரிக்க இரகசிய நடவடிக்கையாகும்.

மொசாத்தேக்கின் நிர்வாகமானது நீக்கப்படுவதற்கு முன்னர் சமூக பாதுகாப்பு, நிலச் சீர்திருத்தங்கள் மற்றும் அதிக வரிகள் போன்ற சமூக மற்றும் அரசியல் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது. இதில் நில வாடகை மீதான வரியின் அறிமுகமும் அடங்கும். இவர் சிறைப்படுத்தப்பட்டார். பிறகு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். அவர் இறக்கும் வரை இவ்வாறான நிலை தொடர்ந்தது. பொது மக்களின் கோபத்தால் ஏற்படும் அரசியல் பிரச்சனையைத் தடுப்பதற்காக அவர் அவரது வீட்டிலேயே புதைக்கப்பட்டார். 2013-ஆம் ஆண்டு இந்த ஆட்சிக் கவிழ்ப்பில் தனது பங்காக போராட்டக்காரர்களுக்குப் பணம் வழங்கியது மற்றும் அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்கியது உள்ளிட்டவற்றை ஐக்கிய அமெரிக்க அரசாங்கமானது ஒப்புக் கொண்டது

ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு பஹலவி ஈரானை மேற்குலக நாடுகளுக்கு ஆதரவாக இருக்கச் செய்தார். ஒரு சர்வாதிகார ஆட்சியாளராக தன்னுடைய அதிகாரத்தை நிலை நாட்ட ஐக்கிய அமெரிக்காவுடன் ஒரு நெருக்கமான உறவு முறையில் இவர் தொடர்ந்தார். பனிப்போரின் போது அமெரிக்க ஆதரவையும் இவர் அதிகமாகச் சார்ந்திருந்தார்.

மாட்சி மிக்க அயதோல்லா ரூகொல்லா கொமெய்னி 1963-ஆம் ஆண்டு முதன் முதலாக அரசியல் முக்கியத்துவம் பெற்றார். முகமது ரேசா பஹலவி மற்றும் அவரது வெள்ளைப் புரட்சிக்கு எதிரான எதிர்ப்புக்கு கொமெய்னி தலைமை தாங்கினார். முகமது ரேசா "ஈரானில் இஸ்லாமை அழிக்க முற்படுவதாக" அறிவித்ததற்குப் பிறகு கொமெய்னி கைது செய்யப்பட்டார். இதனால் பெரிய கலகங்கள் தொடர்ந்தன. காவலர்களால் 15,000 மக்கள் கொல்லப்பட்டனர். எட்டு மாத வீட்டுக் காவலுக்குப் பிறகு கொமெய்னி விடுதலை செய்யப்பட்டார். அவர் தன்னுடைய போராட்டத்தைத் தொடர்ந்தார். இஸ்ரேலுடனான ஈரானின் ஒத்துழைப்பு மற்றும் இஸ்ரேலுக்குச் சார்பான ஒப்பந்தங்கள் அல்லது ஐக்கிய அமெரிக்க அரசாங்க நபர்களுக்குத் தூதரக ரீதியான பாதுகாப்பை விரிவாக்கியது ஆகியவற்றை இவர் கண்டித்தார். நவம்பர் 1964-இல் கொமெய்னி மீண்டும் கைது செய்யப்பட்டார். நாடு கடத்தப்பட்டார். இவ்வாறாக 15 ஆண்டுகள் கடந்தன.

முகமது ரேசா பஹலவி, ஈரானில் அனைத்து அதிகாரங்களையும் கொண்ட ஒரு முழுமையான முடியாட்சியை (Absolute Monarchy) முன்னெடுத்தார். இவரது ஆட்சிக் காலத்தில், ஈரான் ஐக்கிய அமெரிக்காவுடன் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக நீடித்த, மிகவும் நெருக்கமான அதேசமயம் உள்நாட்டில் பெரும் சர்ச்சைக்குள்ளான ஒரு உறவைப் பேணியது.

தனது சீர்திருத்தங்கள் மூலம் ஈரானை நவீனமயமாக்கியதாகவும், நாட்டை ஒரு மதச்சார்பற்ற அரசாக மாற்றியமைத்ததாகவும் அவர் வாதிட்டார். இருப்பினும், அவரது அதிகாரத்திற்கு எதிராக எழும் விமர்சனங்களையும் போராட்டங்களையும் ஒடுக்குவதற்கு 'சவக்' (SAVAK) எனப்படும் கொடூரமான இரகசியக் காவல் துறையைப் பயன்படுத்தினார். இக்காவல் துறையினர் மேற்கொண்ட தன்னிச்சையான கைதுகள், முறையற்ற சிறைவாசங்கள் மற்றும் கொடூரமான சித்திரவதைகள் ஆகியவை பஹலவி ஆட்சிக்கெதிராக மக்கள் மத்தியில் கடும் அதிருப்தி உருவாக முக்கியக் காரணமாயின.

1973-ஆம் ஆண்டின் எண்ணெய் நெருக்கடி காரணமாக பொருளாதாரத்தில் அயல்நாட்டுப் பணங்கள் வெள்ளம் போல் கொண்டு வரப்பட்டன. இது பணவீக்கத்துக்குக் காரணமானது. 1974 வாக்கில் ஈரான் இரட்டை இலக்கப் பணவீக்கத்தைக் கண்டது. பெரிய நவீன மயமாக்கும் திட்டங்கள் இருந்த போதும் ஊழலானது பரவலாக இருந்தது. ஒரு பொருளியல் பின்னடைவானது வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரித்தது.

1970-களின் தொடக்கக் காலத்தில் ஏற்பட்ட விரைவான பொருளாதார வளர்ச்சியின் போது, கட்டிடக்கலை மற்றும் கட்டுமானப் பணிகளுக்காக ஏராளமான இளைஞர்கள் நகரங்களுக்கு இடம் பெயர்ந்தனர். இருப்பினும், அடுத்தடுத்த ஆண்டுகளில் அவர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் கணிசமாக அதிகரித்தது. 1970-களின் பிற்பகுதியில் பகலவியின் தேர்ந்தெடுக்கப்படாத அரசுக்கு எதிராக இளைஞர்கள் போராடினர்.

பஹலவி மற்றும் கொமெய்னிக்கு இடையிலான சித்தாந்த மற்றும் அரசியல் முரண்பாடுகள் உச்சத்தில் இருந்தபோது, அக்டோபர் 1977-இல் ஈரானில் போராட்டங்கள் வெடித்தன. இது வெறும் அரசியல் மாற்றத்திற்கான போராட்டமாக மட்டுமன்றி, சமயச் சார்பின்மை மற்றும் இஸ்லாமிய விழுமியங்களை உள்ளடக்கிய ஒரு மாபெரும் மக்கள் எழுச்சியாக உருவெடுத்தது. ஆகஸ்ட் 1978-இல் ரெக்ஸ் திரையரங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்ததும், செப்ரெம்பர் மாதத்தில் 'கருப்பு வெள்ளி' எனப்படும் கொடூரமான துப்பாக்கிச் சூடு நிகழ்ந்ததும் புரட்சி நெருப்பை நாடு முழுவதும் பரப்பின. தொடர்ச்சியான வேலைநிறுத்தங்

களால் நாட்டின் நிர்வாகம் முடங்கிய நிலையில், ஜனவரி 1979-இல் பஹலவி ஈரானை விட்டு வெளியேறி ஐக்கிய அமெரிக்காவுக்குத் தப்பினார். அதனைத் தொடர்ந்து, பிப்ரவரி 1979-இல் நாடு திரும்பிய அயதுல்லா கொமெய்னியைத் தலைநகர் தெஹரானில் பத்து இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு உற்சாகமாக வரவேற்றனர். இதன் மூலம் ஈரானில் ஒரு புதிய இஸ்லாமிய அரசாங்கம் நிறுவப்பட்டது

மார்ச் 1979 பொது வாக்கெடுப்பைத் தொடர்ந்து அரசாங்கமானது ஓர் அரசியலமைப்பை உருவாக்கத் தொடங்கியது. இந்தப் பொது வாக்கெடுப்பில் 98 சத விகித வாக்காளர்கள் ஓர் இஸ்லாமியக் குடியரசாக ஈரானை மாற்ற ஒப்புதல் அளித்தனர்.

அயதுல்லா கொமெய்னி ஈரானின் அதியுயர் தலைவராக டிசம்பர் 1979 அன்று பதவியேற்றுக் கொண்டார். தன்னுடைய சர்வதேசச் செல்வாக்கு காரணமாக 1979-ஆம் ஆண்டு டைம் பத்திரிகையானது அந்த ஆண்டின் முதன்மையான மனிதனாக இவரைக் குறிப்பிட்டது. பஹலவிக்கு விசுவாசமுடைய அதிகாரிகளை ஒழித்துக் கட்ட கொமெய்னி ஆணையிட்டதைத் தொடர்ந்து பல முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மரண தண்டனைக்கு உட்படுத் தப்பட்டனர். 1980-இல் பண்பாட்டுப் புரட்சி தொடங்கியதுடன் அனைத்து பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டன. ஆனால் 1983-ஆம் ஆண்டு மீண்டும் அவை திறக்கப்பட்டன.

நவம்பர் 1979-இல், அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்ற முகமது ரேசா ஷா பஹலவியை மீண்டும் ஈரானிடம் ஒப்படைக்க ஐக்கிய அமெரிக்கா மறுத்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், ஈரானிய மாணவர்கள் தெஹரானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தைக் கைப்பற்றி, 53 அமெரிக்கர்களைப் பிணைக்கைதிகளாகப் பிடித்தனர். இந்த நெருக்கடியைத் தீர்க்கவும் பிணைக்கைதிகளை விடுவிக்கவும் ஜிம்மி கார்ட்டர் நிர்வாகம் பல்வேறு பேச்சுவார்த்தைகளையும் முயற்சிகளையும் மேற்கொண்டது. இருப்பினும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு சீர்குலைந்து, ஏப்ரல் 1980-இல் அமெரிக்கா ஈரானுடனான தனது அதிகாரப்பூர்வ தூதரக உறவுகளைத் துண்டித்துக் கொண்டது. நீண்ட இழுபறிக்குப் பிறகு, கார்ட்டர் தனது அதிபர் பதவியின் கடைசி நாளில் கையெழுத்திட்ட 'அல்ஜியர்ஸ் ஒப்பந்தத்தின்' கீழ் பிணைக் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். 1980-இல் முறிந்த அந்தத் தூதரக உறவு இன்றுவரை அதிகாரப்பூர்வமாக மீட்டெடுக்கப்படாமல், இரு நாடுகளின் வெளியுறவுக் கொள்கையில் ஒரு தீராத முரணாகவே நீடிக்கிறது.

1979-இல் ஏற்பட்ட இந்தத் தூதரக நெருக்கடி, ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான உறவில் ஒரு ஆறாத வடுவை ஏற்படுத்தியது. நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக நீடிக்கும் இந்தத் தூதரக உறவு முறிவு, இன்றுவரை மத்திய கிழக்கின் அரசியல் நிலப்பரப்பைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக உள்ளது. அணுசக்தி ஒப்பந்தச் சிக்கல்கள், பொருளாதாரத் தடைகள் மற்றும் பிராந்திய ஆதிக்கம் குறித்த மோதல்கள் என அன்று தொடங்கிய அந்த 'திருப்புமுனை' இன்றும் இரு நாடுகளுக்கும் இடையே ஒரு தீர்க்கப்படாத சவாலாகவே தொடர்கிறது.



James@thaiveedu.com





# 2026 தமிழகத் தேர்தல் களம்

நெல்லை ஜெயசிங்

146 கோடிக்கு மேல் மக்கள் தொகையையும், 97 கோடிக்கு மேல் வாக்காளர்களையும் கொண்ட இந்திய தேசத்தில், ஆறு கோடிக்கு மேல் வாக்காளர்களைக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டில், மார்ச்-ஏப்ரல் அளவில் தேர்தல் நடைபெற இருக்கிறது. தமிழக சட்டமன்றத் திற்கான இத்தேர்தல், சனநாயகத்தின் உயிர்த்துடிப்பை வெளிப்படுத்தும் முக்கியமான தேர்தலாகும். சமூகநீதி, மொழி உரிமை, கலாசாரம், போன்ற பல்வேறு அம்சங் களைப் பிரதிபலிப்பதுடன், அரசியல் விழிப்புணர்வும், மக்களின் செயற்பாடும், நிறைந்து காணப்படுகின்ற களமாக இருக்கும் என்பதால், தேசிய அளவில் உற்று நோக்கப்படு கின்ற தேர்தலாக, தமிழகத் தேர்தல் களம் காணப்படுகிறது.

1967-க்குப் பின்னர் தமிழகத் தேர்தல் களத்தில், திராவிட இயக்கங்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வந்துள்ளது. அதன் காரணமாக சுயமரியாதை, சமூக சமத்துவம், கல்வி வளர்ச்சி, போன்ற கோட்பாடுகள் தேர்தல் களத்தில் மையமாக இருந்துள்ளன. இதனால் கடந்தகால தேர்தல்களில், மொழி, சமூக நலத்திட்டங்கள், கல்வி, வேலை வாய்ப்பு, சுகாதாரம், இட ஒதுக்கீடு போன்றவை முக்கிய விவாதப்பொருட்களாக இருந் துள்ளன. ஆனால் தற்போதைய தமிழக தேர்தலில் அதிக கவனத்தைச் செலுத்தி வரும், ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்ட மத்தியில் ஆளும் பாஜக எனும் தேசியக்கட்சி, பிளவுவாத அரசியலை முன்னிறுத்தி, தமிழகத்தில் ஆட்சி யைக் கைப்பற்றும் நோக்கத்தைக் கொண்டிருப்பதால், இந் துத்துவா மற்றும் மதவாதக் கருத்துகளை தமிழகத் தேர்தல் களத்தில் முன்னிறுத்த முயன்று வருகிறது. தமிழகத் தேர்தல் வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் மக்களைப் பிளவுபடுத்தும், குறுகிய நோக்கம் கொண்ட மதவாதம், தேர்தல் களத்தில் மையப்புள்ளியாக இடம்பெற்றுவிடுமோ என்ற அச்சம், மக்கள் மத்தியில் எழத் தொடங்கியிருக்கிறது. இது சுதந்திரமான சனநாயக தேர்தல் முறையைப் பலவீனப்படுத்திவிடும்.

'நம்மை யார் ஆளவேண்டும் என்பதை நாமே தேர்வு செய்யலாம்' என்ற உயர்ந்த சனநாயக் கோட்பாடு, தேர்தல் முறையின் அடிப்படை அம்சமாக இருப்பதன் காரணமாக, வாக்காளர்களின் வாக்குகளைப் பெறும் முனைப்பில், அரசியல் கட்சிகள், தமிழகத் தேர்தல் களத்தில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட 12 அரசியல் கட்சிகள் உட்பட, அங்கீகரிக்கப்படாத நூற்றுக்கணக்கான கட்சிகள், தமிழக சட்டமன்றத்திற்கான தேர்தலில் போட்டியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள 234 சட்ட மன்றத் தொகுதிகளில் உள்ள வாக்காளர்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில், 234 சட்டமன்றப் பிரதிநி திகள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களில் 118 பிரதிநிதி களின் ஆதரவைப் பெறும் கட்சி தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்கும் தகுதியைப் பெறும்.

### அரசியல் கட்சிகள்:

தமிழக சட்டமன்ற ஆட்சி வரலாற்றில், காமராஜர் அவர் களின் காங்கிரஸ் ஆட்சியின் முடிவிற்குப் பின்னர், திராவிடக் கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக), அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அதிமுக) ஆகிய இரண்டு கட்சிகள் மட்டுமே மாறி மாறி ஆட்சி புரிந்து வந்துள்ளன. இவ்விரு கட்சிகள் அனைத்துத் தேர்தல்களின் போது, ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, தேர்தலில் போட்டியிடுவதை வழக்கமாகக்

கொண்டிருந்தன. ஆயினும் தேர்தலின் பின்னர் அவை தனித்தே ஆட்சி புரிந்தன. கூட்டு மந்திரி சபை என்பது இதுவரை தமிழ் நாட்டில் ஏற்பட்டதில்லை. எனினும் தற் போதைய தேர்தல் களத்தில், ஆட்சியில் பங்கு வேண்டும் என்ற கோரிக்கை, இடதுசாரிக் கட்சிகளைத் தவிர பரவலாய் கூட்டணிக் கட்சிகளிடத்தே ஒலிக்கத் தொடங்கி இருப்பது தமிழகத் தேர்தல் களத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகின்றன. அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்ற கோரிக்கையை, அகில இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சிலர், திமுகவிடம் தொடர்ந்து வலியு றுத்தி வருவது வெளிப்படையாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் நூற்றுக்கணக்கான அரசியல் கட்சிகள் இருந் தபோதும் விரல்விட்டு எண்ணக் கூடிய வகையில் சில கட்சிகள் மட்டுமே தேர்தல் களத்தில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. தேசிய கட்சிகளான, அகில இந்திய தேசிய காங்கிரஸ், பாரதிய ஜனதா கட்சி, இந்திய பொதுவு டமைக் கட்சி, இந்திய பொதுவுடமைக் கட்சி மார்க்சிஸ்ட், ஆகியவற்றுடன் திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன் னேற்றக் கழகம், தேசிய முற்போக்குத் திராவிட கழகம், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், தமிழ் மாநில காங்கிரஸ், மக்கள் நீதி மய்யம், நாம் தமிழர் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி, புரட்சி பாரதம், மனித நேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி, புதிய தமிழகம் கட்சி, ஆம் ஆத்மி கட்சி, என்பவற்றுடன் மூன்று வருடங்களுக்கு முன் நடிகர் விஜய் தொடங்கிய தமிழக வெற்றிக் கழகம், ஆகிய மாநிலக் கட்சிகள் வரும் சட்டமன்றத் தேர்தலில் முக்கிய கட்சிகளாகப் பார்க்கப்படுகின்றன.

## நான்கு முனைப் போட்டி:

இதுவரை தமிழகத் தேர்தல் களமானது, அதிமுக, திமுக, கட்சிகளிடையே இருமுனைப் போட்டியாக இருந்த நிலையில், தற்போது நான்கு முனைப் போட்டிக்கான தேர்தலாக மாற்றம் பெற்று வருவதனை அவதானிக்க முடிகிறது.

### திமுக தலைமையிலான கூட்டணி:

இதில் திமுக, விடுதலைச் சிறுத்தைகள், மறுமலர்ச்சி திராவிடக் கழகம், இரண்டு பொதுவுடமைக் கட்சிகள், அகில இந்திய தேசிய காங்கிரஸ், வாழ்வுரிமைக் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசியக்கட்சி, மக்கள் நீதி மய்யம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனித நேய மக்கள் கட்சி என்பன இடம்பெற்றுள்ளன.

இக்கூட்டணியில் முக்கிய கட்சியாக இருந்து வரும் அகில இந்திய தேசிய காங்கிரஸ், அதிகாரத்தில் பங்கு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, திமுகவுடன் முரண் பட்டு, கூட்டணியில் இருந்து விலகும் நிலை ஏற்படின், அது திமுக கூட்டணிக்குச் சற்றுப் பின்னடைவை உரு வாக்கும் என்றும் கணிக்கப்படுகிறது. மறுபுறம் காங்கிரஸ் கட்சி கூட்டணியில் இருந்து விலகி, தவெக கூட்டணியில் இணையும் பட்சத்தில் அக்கட்சி பெரும் தோல்வியைச் சந் திக்கும் என்ற கருத்தும் நிலவுகிறது.

### அதிமுக தலைமையிலான தேசிய சனநாய கூட்டணி:

இதில் அதிமுக, பாரதிய ஜனதா கட்சி, தமிழ் மாநிலக் காங்கிரஸ், அன்புமணி தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சி, அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம், புரட்சி பாரதம் என்பன இடம்பெற்றுள்ளன. இக்கூட்டணி அதிமுக தலைமை என்றும், பாஜக தலைமை என்றும், இருவேறு முரண்பட்ட கருத்துகளுடன் பயணிப்பதைக் காணலாம்.

இக்கூட்டணியை அமைப்பதில் அதிமுகவை விட, பாஜக அதிக அக்கறையுடன் முன்னின்று செயற்பட்டு வருகிறது. ஆயினும் இக்கூட்டணி ஒத்த கருத்துடன் முழு வடிவம் பெறவில்லை என்ற விமர்சனமும் உண்டு. அதிமுகவுடன் நேரடிக் கூட்டணியில் சேர பாட்டாளி மக்கள் கட்சி தவிர்த்து, வேறு கட்சிகள் வரத் தயக்கம் காட்டுவதாகவும் கூறப்படுகிறது. இக்கூட்டணிக் கட்சிகளின் செயற் பாட்டைப் பார்க்கும் போது, இரு கூட்டணிகள் இணைந்து, ஒரு கூட்டணியை அமைத்து, திமுகவை எதிர்த்து நிற்ப தாகவே தோற்றம் தருகிறது.

### சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி:

இக்கட்சி வழக்கம் போல் இம்முறையும் தனித்தே களம் காண்பதாக அறிவித்துள்ளது. இதுவரை ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறாத இக்கட்சி, அனைத்துத் தேர்தல்க ளிலும் தனித்தே களம் கண்டு வருகின்றது. தேர்தல் நடைபெறும் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடத் தயாராகி வருகிறது. புதிய மாற்றத்தைக் கொண்டு வருவோம் என இடைவிடாது மக்கள் மேடைகளில் பிரச் சாரம் செய்து வரும் நாம் தமிழர் கட்சி, இந்திய அரசியலில் தனித்துவமான அடையாளத்தைத் தொடர்ந்து நிலைநி றுத்தி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### தமிழக வெற்றிக் கழகம் தலைமையிலான கூட்டணி:

தவெக எனும் அரசியல் கட்சி, பிரபல நடிகர் விஜய் என்ப வரால் தொடங்கப்பட்டதாகும். விஜய் அவர்கள் தனதாட் சியில் கூட்டணிக் கட்சிகளுக்கு அமைச்சரவையில் இடம ளிக்கப்படும் எனக் கூறியும், பெரிய கட்சிகள் அவரது கூட் டணியில் இடம்பெறவில்லை. ஆனால் விஜய் அவர்க ளுக்குக் கூடும் கூட்டத்தைக் கண்டு மிரண்டுபோன கூட்ட ணிக்குத் தலைமை தாங்கும் பிற கட்சிகள், விஜய் பின்னால் கட்சிகள் செல்வதைத் தடுக்கும் வகையில், அவற்றைத் தங்கள் கூட்டணியில் இணைத்துக்கொள்ளும் அரசியல் நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக பாமக, அமமுக, ஆகிய கட்சிகள், இவ்வாறான நிலை ஏற்பட்டதன் காரணமாகவே, பாஜகவின் தேசிய ஜன நாயகக் கூட்டணியில் இணைந்ததாகக் கூறப்படுகிறது.

இச்சூழ்நிலையில், இருபெரும் கூட்டணியில் இடம்பெறாத வேறு சிறிய கட்சிகள், கடைசி நேரத்தில் தவெகவில் இணையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. விஜய் அவர்கள் தனித்தோ அல்லது கூட்டணியாகவோ, தேர்தலில் விஜயகாந்த் போன்று, ஏனைய கட்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவார் என அரசியல் விமர்சகர்கள் உறுதிபட கூறி வருவதும் கவனிக்கத்தக்க விடயமாகும்.

மேலும் பதிவு பெற்று, அங்கீகாரம் பெறாத குறுகிய வட்டத்தில் இயங்கும் கட்சிகள், சாதிய அமைப்புகள், மற்றும் சுயேட்சையானவர்கள், தேர்தல் திகதி அறிவித்த பின்னர், தேர்தல் களத்திற்கு வருவர் எனவும் எதிர்பார்க்கலாம். எவ்வாறாயினும் எதிர்வரும் தேர்தல் என்பது நான்கு முனைப் போட்டியாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் போட்டியில் நான்கு அணிகள் களத்தில் இருந்த போதும், கடுமையான போட்டி என்பது ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திமுக அணிக்கும், எடப்பாடி அவர்களின் தலைமையிலான அதிமுக அணிக்கும் இடையே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய வரவான தமிழக வெற்றிக் கழகம், பிரபலமான நடிகரான விஜய் அவர்களை முன்னிலைப்படுத்தி, முதற்தடவையாக தேர்தலைச் சந்திப்பதால் அக்கட்சி வெற்றி பெறும் வாய்ப்பை விட, ஏனைய பெரிய கட்சிகள் எதிர்பார்த்து இருக்கும் தேர்தல் வாக்குகளைக் குறிப்பாக, திமுக, அதிமுக, வாக்குகளைப் பிரித்துச் சிதறடிப்பதில் வெற்றி பெறும் என அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

நடக்க இருக்கும் தேர்தல் எல்லாக் கட்சிகளுக்கும் கடுமையானதாக இருக்கும். நான்கு முனைப் போட்டியில் வாக்குகள் பிரிந்து, எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலை ஏற்படுவதற்கும் வாய்ப்பு உண்டு எனக் கூறப்படுகிறது. எனினும் ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் முறையும் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள பல்வேறு நலத்திட்டங்களைச் செயற்படுத்தி வரும் நிலையில், எடப்பாடி அவர்களும், மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் முனைப்பில், இலவசங்களை அறிவித்து வர, இரு கட்சிகளும் தீவிர தேர்தல் பணிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளன.

தமிழக தேர்தல் வரலாற்றில் எந்தவொரு கட்சியும் 50 வீத வாக்குகளைப் பெற்றதில்லை. கடந்த சட்டமன்றத் தேர்தலில் அதிமுக பெற்ற வாக்குகளை விட, திமுக தனியொரு கட்சியாக, 4.41 சதவீத வாக்குகளை மட்டுமே அதிகமாக பெற முடிந்தது. வெற்றி பெற்று ஆட்சி அமைத்த திமுக, 37.70 சதவீதத்தையும், அடுத்து வந்த அதிமுக, 33.29 சதவீத வாக்குகளையும் பெற்றிருந்தன. ஆனால் இம்முறை போட்டி கடுமையாக இருக்கும் பட்சத்தில், ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை கிடைப்பதில் இரு கட்சிகளுக்குமே சிக்கல் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எந்த ஒரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் தமிழ்நாட்டில் முதற்தடவையாக, கூட்டணி ஆட்சி அமையும் சூழ்நிலை தவிர்க்க முடியாததாகிவிடும்.

திமுக, மற்றும் அதிமுக கட்சிகளைத் தவிர மற்றைய அனைத்துக் கட்சிகளும் 10 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளையே கொண்டிருக்கின்றன. இதனால் தேசிய கட்சிகள் உட்பட பெரும்பாலான கட்சிகள், குறிப்பிட்ட இரு திராவிடக் கட்சிகளைச் சார்ந்தே தேர்தலில் போட்டி இடவேண்டிய நிலை காணப்படுகிறது.

## தமிழக வெற்றிக் கழகம் மற்றும் நாம் தமிழர் கட்சிகளின் நிலைப்பாடு:

2010-ஆம் ஆண்டு, தமிழ் தேசியத்தை முன்வைத்து சீமான் அவர்களால் தொடங்கப்பட்ட நாம் தமிழர் கட்சியும், பிரபல நடிகரான விஜய் அவர்களால் மூன்று வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட தமிழர் வெற்றிக் கழகமும், தற்போதைய தமிழக தேர்தல் களத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. கடந்த தேர்தலில் 8 வீதத்திற்கு மேல் வாக்குகளை வாங்கி, தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ள நாம் தமிழர் கட்சி, இம்முறை சில தொகுதிகளிலாவது வெற்றி பெற வேண்டும் என முயற்சித்து வருகிறது.

தமிழக வெற்றிக் கழகம், நடிகரான விஜய் அவர்களின் சினிமாக் கவர்ச்சியை முன்னிறுத்தி, கூட்டணி கட்சிகளுடன் பெரும் வெற்றியை பெற்று ஆட்சி அமைப்போம் எனக் கூறி வருகிறது. ஆனால் நடைமுறையில் அது சாத்தியமற்ற ஒன்று என அரசியல் விமர்சகர்கள் கூறி வருகின்றனர். திமுகவிற்கு ஆதரவாக உள்ள சிறுபான்மையினரின் வாக்குகளை, விஜய் பிரித்தெடுப்பார் என்று கூறப்படுகிறது. ஆனால் கள யதார்த்தம் அவ்வாறு இல்லை. இரு கட்சிகளுக்கும் இளைஞர்கள் மத்தியில் ஓரளவு செல்வாக்கு இருந்த போதும், அது பெரிய வெற்றிக்கு வழி வகுக்காது என்றே கூறப்படுகிறது.

திமுக மீண்டும் ஆட்சிக்கு வருவதை எல்லா வகையிலும் தடுக்க வேண்டும் என்ற பாஜகவின் மறைமுக ஏற்பாட்டிற்கு, விஜய் ஆளாகிவிட்டார் என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. பாஜகவை பொறுத்தவரையில் அதன் நோக்கம், தங்களின் கட்டுப்பாட்டில் உள்ள அதிகாரம் மிக்க நிர்வாக அமைப்புகளைக் கொண்டு, மற்ற கட்சிகளை நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கி, அதன் ஊடாக தங்களின் அரசியல் செல்வாக்கை தமிழ்நாட்டில் நிலை நிறுத்துவதாகும். தங்களின் கொள்கை எதிரி பாஜக என விஜய் பகிரங்கமாக அறிவித்த பின்னரும், அவர் தங்களின் கூட்டணிக்கு வரவேண்டும் என அக்கட்சியின் முன்னாள் தலைவர் தமிழிசை அவர்கள் இன்றுவரையும் அழைத்துக் கொண்டிருப்பது, பாஜகவின் பலவீனத்தையே காட்டுகிறது.

தனியொரு கட்சியாகத் தமிழ்நாட்டில் பாஜகவின் வாக்கு சதவீதம் 8-க்கும் குறைவாகும். கடந்த சட்டமன்றத் தேர்தலில் அதிமுக ஆதரவுடன், 4 இடங்களில் மட்டுமே அவர்களால் வெற்றி பெற முடிந்தது. பாஜகவின் தாய் அமைப்பாக உள்ள, ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளுக்கு எதிரான கருத்துடைய பெருவாரியான தமிழக வாக்காளர்கள், ஒருபோதும் பாஜகவை ஆதரிக்க மாட்டார்கள் என்றே கூறப்படுகிறது.

இக்கட்சிகளைத் தவிர, சிறிய அளவில் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய இன்னும் சில கட்சிகளும், தனிப்பட்ட அரசியல் தலைவர்களும், இக்கட்டுரை எழுதும் இந்நேரம் வரை, எந்தக் கூட்டணியிலும் இணையாத நிலை காணப்படுகிறது. குறிப்பாக, 2 சதவீ தத்திற்கும் குறைவான வாக்கு வங்கியை உடைய தேமுதிக, புதிய தமிழகம், என்பவற்றுடன் அதிமுக சார்பில் மூன்று முறை தமிழக முதலமைச்சராக இருந்த பன்னீர்செல்வம் அவர்களும் 'மதில் மேல் பூனையாக' அதிக பயனை எதிர்பார்த்துக் கூட்டணிக்காகக் காத்திருப் பதைக் காண முடிகிறது. இம்முறை தேர்தல் வெற்றியை சில நூறு வாக்குகளும் தீர்மானிக்கும் நிலை இருப்பதால், சிறு கட்சிகளின் வரவையும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலை, கூட்டணிக்குத் தலைமை தாங்கும் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளமை தற்போதைய தமிழக சட்டமன்றத் தேர்தலில் முக்கிய நிகழ்வாகவும் பார்க்கப்படுகிறது.

சமூக நீதி, சமத்துவம் போன்ற உயர்வான கொள்கை களை முன்னிறுத்தி உருவான அரசியல் சூழல், இன்று, அதிகாரப்போட்டி, குடும்ப நலன், குறுகிய கால இலாப நோக்கங்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்டுள்ளன. கொள்கை அடிப்படையிலான விரிவாக்கங்களாக இல் லாமல், இலவச அறிவிப்புத் திட்டங்களாகச் சுருங்கி விட்டன. சனநாயகத்தைப் பிரதிபலிக்கும் உயிர்ப்புள்ள முன்னோடி மாநிலமாக இருந்த, தமிழகத்தின் தற் போதைய தேர்தல் களம் ஆரோக்கியமானதாக இல்லை என்று கூறப்படுகிறது. சேவை நோக்கம் என்பதைத் தொலைத்துவிட்ட அரசியல் கட்சிகள், எப்படியாவது வெற்றி பெற வேண்டும், அதிகாரத்தைப் பெற வேண்டும், என்ற எண்ணத்துடன், கூட்டணி அமைத்தும், தனித்தும் போட்டியிடுகின்ற போக்குத் தமிழ்நாட்டில் காண முடிகிறது. இந்நிலையில், வருகின்ற தமிழக சட்டமன்றத் தேர்தல், சற்று வித்தியாசமான முடிவுகளை அளிக்கும் என எதிர்பார்க்கலாம்.



jeyasingh@thaiveedu.com



எப்ஸ்டீன் வர்க்கம்' என்பது உலகளாவிய செல்வாக்கு மிக்க, பெரும் செல்வந்தர்களைக் கொண்ட ஓர் உயரடுக்கு வலையமைப்பைக் குறிக்கிறது. இதில் அரசியல் தலைவர்கள், வணிகப் பிரமுகர்கள், கல்வியாளர்கள் மற்றும் அரச குடும்பத்தினர் உள்ளிட்டோர் அடங்குவர். பாலியல் குற்றச்சாட்டுகளுக்கும் நிதி மோசடிகளுக்கும் உள்ளாகித் தண்டனை பெற்ற ஜெப்ரி எப்ஸ்டீனுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்களே இவ்வர்க்கத்தினராக அடையாளப்படுத்தப்படுகின்றனர். இத்தகைய நடத்தைகளைத் தங்களுக்குரிய ஒரு சமூக வழமையாகவே மேலைநாட்டு மேட்டுக்குடியினரும் உயர் நிலையினரும் கருதுகின்றனர். இதனை வெள்ளை மேலாதிக்கத்தின் மூன்றாம் கலாசாரம் என்றும் கூறலாம். ஏனெனில், இத்தகு செயல்களில் பிற இனத்தவர்கள், குறிப்பாக மேலைநாடுகளில் வாழும் ஆபிரிக்க அமெரிக்கர்கள், ஆபிரிக்க, இந்திய அல்லது சீன வம்சாவளியினர் ஈடுபட்டிருந்தால், அவர்கள் மிகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளுக்கும் தண்டனைகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருப்பர்.

2026-ஆம் ஆண்டில் ஏராளமான, திருத்தப்பட்ட கோப்புகள் பொதுவெளிக்கு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க ஈர்ப்பைப் பெற்ற இந்த கருத்து, பாரம்பரிய சமூக நெறிமுறைகளுக்கும் சட்டரீதியான பொறுப்புக்கூறல்களுக்கும் மேலே செயற்படும் ஒரு 'நிழல் உயரடுக்கை' எடுத்துக்காட்டுகிறது.

பொருளாதார வலிமையைப் பயன்படுத்திச் சமூகக் கட்டமைப்புகளைத் தங்கள் சுயநலத்திற்காகச் சுரண்டும் செல்வந்தர்கள் மீது, பொதுமக்களிடையே நிலவும் வெறுப்பு, கோபம் மற்றும் விரக்தியைப் பற்றி விவாதிக்க ஒரு கருவியாகச் செயற்படுகிறது. சட்ட ரீதியான பொறுப்புக்கூறல்களிலிருந்தும் சமூகப் புறக்கணிப்பிலிருந்தும் தப்பிப்பதற்காகத் தங்களது பெரும் செல்வத்தைப் பயன்படுத்தும், அரசியல் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட ஓர் உயரடுக்கு வர்க்கத்தின் நிழல் முகத்தை இக்கோப்புகள் அப்பட்டமாக அம்பலப்படுத்துகின்றன. மேட்டுக்குடியினர், குறிப்பாக ஆணாதிக்க மனோபாவம் கொண்ட ஆண்கள், அதிகாரத்தை எவ்விதமாகக் கையாள்கிறார்கள் என்பதனை இக்கோப்புகள் அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றன. மேல்தட்டு வர்க்கத்தினர் மீதான தீவிரக் கண்காணிப்பு அவசியமானது என்பதையும், 'பொதுநலன்' என்ற போர்வையில் அவர்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்குப் பின்னால் மறைந்துள்ள நுணுக்கமான அரசியல் மற்றும் வணிக நலன்களைப் பொதுமக்கள் ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதையும் இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன.

> **உயர்மட்டச் செல்வாக்கு, திட்டமிடப்பட்ட மௌனம் மற்றும் சில முக்கிய நிறுவனங்களின் மறைமுக உடந்தையுடன் இவர்களது குற்றங்கள் நீண்டகாலமாகப் பாதுகாக்கப்பட்டன என்பதை அண்மைய கோப்புகள் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டுகின்றன.**

# எப்ஸ்டீன்
## உருவாக்கியுள்ள அதிகார அரசியல் கலாசாரம்

ரதன்



tg.theeban@gmail.com

தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் அதிகார சமநிலை என்பது ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டுள்ளது. அதிகார சமநிலை என்ற பெயரில் ஏற்றத்தாழ்வுகள், நீதியின்மை, மத்திய மற்றும் கீழ்தட்டு மக்கள் மீதான சகல அடக்கு முறைகள், வன்செயல்கள் மறைந்திருந்து இயங்குகின்றன. எப்ஸ்டீன் வர்க்கத்தின் முதன்மையான பண்பாக, அவர் களுக்குள்ளான பரஸ்பர தரகு அரசியல், வணிக நலன்கள் மற்றும் அதிகாரப் பகிர்வு விளங்குகின்றது. இந்த வர்க்கத் தினர் இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், நோர்வே மற்றும் அமெரிக்கா என எவ்வித எல்லைகளுமின்றி உலகளாவிய ரீதியில் பரவி இயங்குகின்றனர். உயர்மட்டச் செல்வாக்கு, திட்டமிடப்பட்ட மௌனம் மற்றும் சில முக்கிய நிறுவனங் களின் மறைமுக உடந்தையுடன் இவர்களது குற்றங்கள் நீண்ட காலமாகப் பாதுகாக்கப்பட்டன என்பதை அண்மைய கோப்புகள் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டுகின்றன.'

பெண்ணிய அரசியல் பொருளாதாரம், அதிகார வர்க்கத்திலுள்ள ஒரு கொடூரமான படிநிலை அமைப்பை அம்பலப் படுத்துவதோடு, அதன் விளைவாக ஏற்படும் துயரங்கள் வெறும் தனிப் பட்ட பாதிப்புகள் அல்ல, அவை மிகமுக்கியமான 'அரசியல் குறியீடுகள்' என்பதையும் பதிவு செய் கிறது. எப்ஸ்டீனால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும் பாலும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த, பாதுகாப்பற்ற பின்னணியைக் கொண்ட இளம் பெண்களாவர். இவர்களுக்குத் தற்காத்துக் கொள்ள எவ்வித நிறுவன அதிகாரமோ அல்லது ஊடக ஆதரவோ இருக்கவில்லை. ஊடகங்கள் தொடர்ந்து இவர்களது சுரண்டப்பட்ட துயரங் களை ஒரு விளிம்புநிலைச் செய்தியாகவே கையாண்டன. மாறாக, செல்வாக்கு மிக்க அதி கார வர்க்கத்தினரின் நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தையே 'உண்மையான செய்தி' என முன்னிலைப்படுத்தின. இத்தகைய ஊடகப் போக்கு தற்செயலானது அல்ல; இது அதிகார அமைப்பின் ஒரு திட்டமிட்ட செயற்பாடாகும். இது ஊடகத்துறையிலுள்ள பாலின அடிப்படையி லான அதிகாரக் கட்டமைப்பைப் பிரதிபலிக் கிறது. உலகளவில் முதன்மை ஊடகங்களின் தலைமை ஆசிரியர் பொறுப்புகளில் பெண்கள் 27 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பாலியல் வன்முறை என்பது ஆணாதிக்க முதலாளித்துவத்தின் ஒரு அங்கமாகும்; இதனை ஆண்களின் ஆதிக்கம் நிறைந்த ஊடகங்கள் ஒரு 'சமூக வழமையாகவே' சித்தரிக்கின்றன. ஊடக அதிகாரத்திலிருந்து ஒரு தரப்பினர் விலக்கப்படுவது, அவர்களை அரசியல் முக்கியத்துவத்திலி ருந்தும் அந்நியப்படுத்துகிறது' என வாதிடுகிறார். எப்ஸ்டீன் வழக்கு இதனைத் துல்லியமாக நிரூபிக்கிறது. பாதிக்கப் பட்ட இளம்பெண்கள் முறையாகச் சுரண்டப்பட்டதற்கான ஆவணங்கள் இருந்தபோதிலும், அவை ஊடகங்களால் மையப்படுத்தப்படவில்லை. மேலும், ஊடகங்களால் கட்ட மைக்கப்படும் கருத்தியல்கள், அச்செய்திகளை நுகரும் பார் வையாளர்களின் மனநிலையைத் தீர்மானிக்கின்றன என்ப தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். மற்றொரு விடயத்தையும் கவனத்திற் கொள்ளவேண்டும், ஊடகத்தால் உருவாக்கப்படும் கருத்தியல், பார்வையாளர்களையும் உருவாக்குகின்றது.

> **“ *எப்ஸ்டீனால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த, பாதுகாப்பற்ற பின்னணியைக் கொண்ட இளம் பெண்களாவர். இவர்களுக்குத் தற்காத்துக்கொள்ள எவ்வித நிறுவன அதிகாரமோ அல்லது ஊடக ஆதரவோ இருக்க வில்லை.* ”**

ஜெப்ரி எட்வேர்ட் எப்ஸ்டீன் (Jeffrey Edward Epstein) 1953 தை 20-இல் புறுக்கிளின் நியுயோக்கில் பிறந்தார். இவரது பெற்றோர்கள் யூதர்கள். இவர் நியுயோர்க் பல்கலைக் கழ கத்தில் கணித உளவியல் கற்றார். எனினும், இவர் பட்டப் படிப்பை முடிக்கவில்லை. சிறிது காலம் கணித ஆசிரியரா கவும் கடமையாற்றியுள்ளார். பின்னர் வங்கித் துறையில் கடமையாற்றினார். இவர் சிறந்த பியானோ இசைக் கலைஞர். இவர் கணிதத்திலும் புலி.

டோல்ற்றன் (Dalton School) பாடசாலையில் கற்பித்த எப்ஸ்டீன், மாணவர்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவராக இருந்தார். இதற்கான காரணம் இவரின் கணித திறமை. மாணவர்கள் மூலம் பெற்றோருக்கும் இவரைப் பற்றித் தெரிய வருகின்றது. டோல்ற்றன் பாடசாலை மத்திய-மேல் தட்டு வர்க்க மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை. Bear Stearns முதலீட்டு வங்கியில் அதிகாரி யாகக் கடமைபுரிந்த கிறீன்பேர்க்கின் மகனும் அங்கு கல்வி கற்றுவந்தார். கிறீன்பேர்க் எப்ஸ்டீனைச் சந்திக்கின் றார். அவரது திறமையறிந்து வியக் கின்றார். பியர் ஸ்ரேன்ஸ் நிறுவனத்தின் மற்றொரு அதிகாரியான Tennenbaum-ஐ எப்ஸ்டீனுக்கு அறிமுகப்படுத்துகின் றார். ரெனன்மம், எப்ஸ்டீனுக்கு பியர் ஸ்ரேன்ஸ் நிறுவனத்தில் வேலை வழங் குகின்றார். கணித ஆசிரியர், முதலீட்டு வங்கியாளராக மாறுகின்றார். ரெனன் மனின் மகளுக்கும் இவருக்கும் நட்பு ஏற்படுகின்றது. படிப்படியாக அல்ல, விரைவில் பியர் ஸ்ரேனில் ஒரு பங் காளராக (Partner) மாறுகின்றார். இதற் கிடையில் இவர் ஒரு பட்டதாரியல்ல என்பது பியர் ஸ்ரேன்ஸ் நிறுவனத் துக்கு தெரியவருகின்றது. எனினும், ரெனன்மம் அவருக்கு எதிராக நடவடிக் கைகள் எடுக்காமல் காப்பாற்றுகின் றார். அதன் பின்னரே இவரது வளர்ச்சி நிறுவனத்தில் அதி வேகமாகவிருந்தது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, எப்ஸ்டீன் மீது மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, அவர் இரண்டு மாத காலப் பணிநீக்கத்திற்கு உள்ளானார். இதனைத் தொடர்ந்து அவர் தனது பத வியை இராஜினாமா செய்த போதிலும், பியர் ஸ்ரேன்ஸ் நிறுவனத்துடனான அவரது உறவு முடிவுக்கு வரவில்லை. பிற்காலத்தில் அந்நிறுவனத்தில் எப்ஸ்டீன் பெரும் முதலீடுகளைச் செய்ததோடு, அங்கிருந்த உயரதி காரிகளுடன் நெருக்கமான தொடர்புகளையும் பேணி வந்தார். எப்ஸ்டீனின் பலவீனங்களைச் சாதகமாக்கிக்கொண்ட பல நிறுவனங்களின் அதிகாரிகள், தங்களுக்கு வேண்டிய சலு கைகளைப் பெறுவதற்காகத் தங்கள் நிறுவனங்களில் பணிபு ரிந்த பெண்களை அவரிடம் அனுப்பி வைத்துள்ளனர். எப்ஸ்டீன், பெண்கள் மற்றும் சிறுமிகளைத் தனது அதிகாரப் பிடிக்குள் வைத்திருந்ததுடன், அவர்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தித் தனது செல்வாக்கை நிதி மற்றும் முதலீட்டுத் துறைகளிலிருந்து அரசியல் தலைவர்கள் வரை விரிவுப டுத்திக் கொண்டார்.இவர் நிதி மோசடி மூலம் சம்பாதித்த

பணத்தில் பல சொத்துக்களை, ஆடம்பர மாளிகைகளை தனதாக்கிக் கொண்டார். இவரது மாளிகைகளில் ஒளிப்படக் கருவி, ஒலிப் பதிவு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இ-மெயில் மூலம் பலருடன் தொடர்புகளை மேற்கொண்டுள்ளார். இதனைப் பாவித்து அவர்களை மிரட்டவும் செய்துள்ளார்.

நிதி மோசடி நடுவராக இருந்து பெரும் செல்வம் குவித்தார் என்ற கருத்திலிருந்து சற்று மாறுபட்டுள்ளது. Les Wexner இவர் பெரும் செல்வந்தர். Victoria's Secret, Bath & Body Works போன்ற நிறுவனங்கள் இவருக்குச் சொந்தமானவை. 1991-இல் வெக்ஸ்னர் தனது நிறுவனங்களின் முழு நிர்வாகத்துக்கான சட்டரீதியான பொறுப்பை (full power of attorney) எப்ஸ்டீனுக்கு வழங்கியிருந்தார். எப்ஸ்டீன் இதன் மூலம் பல கோடிகளைச் சம்பாதித்திருக்கலாம் எனத் தெரிகின்றது. அது மட்டுமல்லாமல் 1999 - 2007-க்குமிடைப்பட்ட காலத்தில் சுமார் 200 மில்லியன் டொலர்களை வெக்ஸ்னர், எப்ஸ்டீனுக்கு வழங்கியுள்ளார். அமெரிக்க காங்கிரசின் விசாரணைகளின் போது வெக்ஸ்னர் தான் ஒரு முட்டாளாக இருந்து விட்டேன். அவர் என்னை ஏமாற்றிவிட்டார். நான் எந்த தவறும் செய்யவில்லை எனத் தெரிவித்தார். (I was naive, foolish and gullible to put any trust in Jeffrey Epstein,' he said. 'He was a conman. And while I was conned, I have done nothing wrong and have nothing to hide.') இந்தக் காங்கிரஸ் விசாரணையின் போது குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் எவரும் சமூகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மீது இதுவரை எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதேசமயம், எப்ஸ்டீனுக்கும் இவருக்குமான தொடர்புகள் பற்றிய முழு விபரங்களும் மறைக்கப்பட்டுள்ளன. எப்ஸ்டீனால் பாதிக்கப்பட்ட பெண் விக்ரோரியா டுபிறி, தான் வெக்ஸ்னருடன் சில தடவைகள் உறவு கொண்டதாகத் தெரிவித்துள்ளார். லெஸ் வெக்ஸ்னர் சுமார் ஒரு பில்லியன் டொலர்கள் வரை எப்ஸ்டீனுக்கு வழங்கியிருக்கலாம் என ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

விக்ரோரியா சீக்கிரெட் நிறுவன மொடல்களையும் எப்ஸ்டீன் செல்வந்தர்களைத் திருப்திப்படுத்த உபயோகித்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

அப்பலோ குளோபல் மனேஜ்மென்ட் என்ற முதலீட்டு நிறுவனத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான லியோன் பிளக்குடனான தொடர்பு லெஸ் வெக்ஸ்னரின் பின் எப்ஸ்டீனுக்கு கிடைக்கின்றது. இவர் 2012 - 2017-க்கும் இடையில் 150 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளார். எப்ஸ்டீனுக்குரிய தொடர்புகளால், லியோன் பிளக்கும் அவரது நிறுவனங்களும் பல கோடி வரியைக் கட்டாமல் தவிர்க்கக் கூடியதாக இருந்தது.

**இவர் முதலீட்டு வங்கியில் வேலை பார்த்த பொழுது இவர் பல நிறுவனங்களை உளவு பார்த்து தகவல்களைப் பெற்று விற்றுள்ளார். அந்த வகையிலேயே இவருக்கு உளவு நிறுவனங்களுடன் தொடர்புகள் இருந்துள்ளன. முன்னாள் இஸ்ரேலிய பிரதமர் எகுட் பகாக் (Ehud Barak) உடன் நெருக்கமான உறவுகள் இருந்துள்ளன.**



2006 முதல் 2011 வரையிலான காலப்பகுதியில், ஜே.பி. மோர்கன் வங்கியின் ஆய்வாளர்கள் எப்ஸ்டீனின் சந்தேகத் திற்கிடமான நடவடிக்கைகள் குறித்து நான்கு முறை எச்சரிக்கை விடுத்துள்ளனர். அவ்வாறான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், வங்கியின் உயர் அதிகாரிகள் அவற்றைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து அவருடன் வங்கி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவர் மூன்று விதமாகத் தனது தொடர்புகளை ஏற்படுத்தினார். எப்ஸ்டீன் தனது செல்வாக்குமிக்க வலைப்பின்னலை முதன்மையாக மூன்று தளங்களில் கட்டமைத்தார்: முதலாவதாக, நிதி மற்றும் மூலதன முதலீட்டாளர்கள், இரண்டாவது வணிக முதலைகள், மூன்றாவது அரசியல் தலைவர்கள். இவர்களுடனும் பயங்கரவாத அமைப்புகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளார். இடதுசாரி புத்திஜீவிகளும் இவரின் தொடர்பில் இருந்துள்ளனர்.



இவர் ஒரு இஸ்ரேலிய உளவாளி என்ற சந்தேகம் பல முக்கிய ஊடகவியலாளர்கள், அரசியல் விஞ்ஞானிகளால் முன்வைக்கப்படுகின்றது. இவர் முதலீட்டு வங்கியில் வேலை பார்த்த பொழுது இவர் பல நிறுவனங்களை உளவு பார்த்து தகவல்களைப் பெற்று விற்றுள்ளார். அந்த வகையிலேயே இவருக்கு உளவு நிறுவனங்களுடன் தொடர்புகள் இருந்துள்ளன. முன்னாள் இஸ்ரேலிய பிரதமர் எகுட் பகாக் (Ehud Barak) உடன் நெருக்கமான உறவுகள் இருந்துள்ளன. Wexner Foundation - இஸ்ரேலுக்கு நிதியுதவி வழங்கும் அமெரிக்க நிறுவனம். இந்த நிறுவனத்திடமிருந்து பகாக் 2 மில்லியன் டொலர்கள் ஆராய்ச்சிக்காகப் பெற்றுள்ளார். இந்த நிறுவனத்தின் அறங்காவலராக எப்ஸ்டீன் அப்போது பதவி வகித்துள்ளார்.

எப்ஸ்டீன் இஸ்ரேல் பாதுகாப்பு படைகளுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு நிதி வழங்கியுள்ளார். தகவல்களும் பரிமாறப்பட்டுள்ளன. இதுவரை ஆய்வு செய்த எப்ஸ்டீன் கோப்புக்களிலிருந்தே இத்தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

ஹார்வர்ட் பல்கலைக்கழகச் சட்டவியல் பேராசிரியரும் பிரபல வழக்கறிஞருமான அலன் டெர்சோவிட்ஸ் (Alan Dershowitz) உடனான நெருக்கத்தைப் பயன்படுத்தி, அப்புலமைசார் சூழலிலுள்ள செல்வந்தர்களான மாணவர்களின் பெற்றோர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளார். இப்பட்டியலில் டொனால்ட் ட்ரம்ப்பின் மருமகன், மகன் என்ற பெரும் பட்டியலே உள்ளது.

ஜேர்மனிய வங்கியான Deutsche Bank-க்கும் எப்ஸ்டீனுக்குமான உறவுகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. நிதி நிறுவன இணைப்புகள், பயங்கரவாத அமைப்புகள் மற்றும் மெக்சிகன் போதைப்பொருள் அமைப்புக்களுடன் தொடர்புடைய கணக்குகளுடன், எப்ஸ்டீனுடனான உறவு தொடர்பான எச்சரிக்கை அறிகுறிகளை Deutsche Bank புறக்கணித்ததாக 2022-ஆம் ஆண்டு வர்க்க நடவடிக்கை வழக்கு குற்றம் சாட்டியது.

புடின் ரஸ்யப் பெண்களை அமெரிக்காவிற்கு அனுப்பி எப்ஸ்டீன் மூலம் அமெரிக்க கனவான்களை மோசமான செக்ஸ் போஸ்களில் உலக அளவில் கொச்சைப்படுத்த செயற்பட்டாரா(?) எனும் சந்தேகத்தையும் ஆய்வாளர்கள் எழுப்புகின்றனர்.

## தீவிரவாத அமைப்புக்களுடனான தொடர்புகள்:

அமெரிக்க பாதுகாப்பு தகவல்கள் எப்ஸ்டீனுக்கும், ஹிஸ்புல்லா அமைப்புக்கும் தொடர்புகள் இருந்ததாகத் தெரிவிக்கின்றன. அதேசமயம் நேட்டோ கடாபியை அகற்றியதற்கு, எப்ஸ்டீனின் உள் தொடர்பு அழுத்தங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. லிபியாவின் சொத்துக்களையும், உளவு ஒப்பந்தங்களையும் கைப்பற்றவேண்டும் என 2011-காலங்களில் எப்ஸ்டீன் அழுத்தம் கொடுத்தாகத் தெரிவிக்கப்படுகின்றது. மத்திய கிழக்கு நாடுகளுடன் குறிப்பாக சவூதி அரேபியாவுடன் நெருக்கமான உறவுகள் இவருக்கு இருந்துள்ளதாக எப்ஸ்டீன் கோப்புக்கள் தெரிவிக்கின்றன. அதே சமயம் 9/11 தாக்குதல்களுடன் இவருக்கு இருந்த உறவுகள் பற்றியும் ஆய்வு செய்யப்படவேண்டும் என அமெரிக்க குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

## இடதுசாரி புத்திஜீவிகளுடனான தொடர்புகள்:

நோம் சோம்ஸ்கியுடன் எப்ஸ்டீனுக்கு நெருக்கமான உறவுகள் இருந்துள்ளன. சோம்ஸ்கியின் தனிப்பட்ட சிக்கல்களை எப்ஸ்டீன் தீர்வு செய்ய உதவியுள்ளார். இறுதி வரை சோம்ஸ்கி எப்ஸ்டீனின் நடவடிக்கைகளை கண்டிக்கவில்லை. குறிப்பாக சிறுமிகளுடான பாலியல் வன்முறைகளை சோம்ஸ்கி கண்டிக்கத் தவறிவிட்டார்.

## டொனால்ட் ட்ரம்ப்புடனான தொடர்பு:

புளோரிடாவில் டொனால்ட் ட்ரம்ப்பின் மாளிகைக்கு அருகில் தனது சொகுசு மாளிகைளை எப்ஸ்டீன் வாங்கினார். அதன் பின்னர் டொனால்ட் ட்ரம்ப்க்கும் இவருக்கும் நெருக்கமான உறவுகள் ஏற்பட்டன. தற்போதைய டொனால்ட் ட்ரம்பின் அரசு எப்ஸ்டீனுக்கும் ட்ரம்ப்க்குமான உறவுகளையும் அதனுடான கோப்புக்களையும் மறைப்பதாக ஜனநாயகக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. அமெரிக்க ஊடகங்கள் இருவருக்கும் மிகவும் நெருக்கமான உறவுகள் இருந்தாகக் கருதுகின்றது. சட்டத்துக்கு மாறான செயற்பாடுகளும் நடைபெற்றுள்ளன எனத் தெரிவிக்கின்றன.

## சொத்துகள்:

எப்ஸ்டீன் இறக்கும் பொழுது அவரது சொத்துக்களின் மதிப்பு 577 மில்லியன் டொலர்களாகும். Gulfstream G550, Boeing 727 விமானங்கள் இவரிடமிருந்துள்ளது. யு.எஸ் வேர்ஜின் தீவுகளில் 75 ஏக்கர் பரப்பளவில் லிற்றில் சென்

ஜேம்ஸ் என்ற மாளிகை இவருடையது. இவ்வாறு பல சொத்துகள் இவரிடமிருந்துள்ளன.

### மொத்த கோப்புகள்:

எப்ஸ்டீன் கோப்புகள் வெளிப்படைத் தன்மைச் சட்டத்தின் பிரகாரம் 3.5 மில்லியன் கோப்புகள் அமெரிக்க சட்டத் திணைக்களத்தால் வெளியிடப் பட்டுள்ளன. வெளியிடாத பல மில்லியன் கோப் புகள் உள்ளன. இக்கோப்புகளைப் பல ஊடக நிறுவனங்கள் ஆய்வு செய்து வருகின்றன. இன்னமும் முழுமையாக கோப்புகளில் உள்ள விடயங்கள் வெளியிடப் படவில்லை.

### அரசியல் தலைவர்கள்:

எப்ஸ்டீன் உலகின் பல நாடுகளின் அரசியல் தலைவர் களுடன் தொடர்புகளைப் பேணியுள் ளார். மன்டல்சன்-எப்ஸ் டீன் விவகாரத்தால், இங்கிலாந்தின் பிரதமர் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கூக்குரல்கள் எழுப்புமளவிற்கு எப்ஸ்டீன் தொடர்புகள் சிக்கல்களை ஏற்படுத் தியுள்ளன. இளவரசர் அன்றூ தனது இளவரசர் பட்டத்தை இழந் துள்ளார். இப்பொழுது பெரும் சட்டச் சிக்கல்களை எதிர் கொள்கின்றார். பில் கிளின்டன், நோர்வேயின் முன்னாள் பிரதமர் என பெரும் பட்டியலே உள்ளது.

மியாமி ஹெரால்டின் Miami Herald புலனாய்வுத் தொடரான ‘ Perversion of Justice (சான்று களுக்கு மாறுபட்ட நீதி) 2019-ஆம் ஆண்டில் வெளியாகும் வரை எப்ஸ்டீன் தனது பாலியல் கடத்தல் குற்றங்களைத் தொடர்ந்து கொண்டி ருந்தார்.

> **“ ஜெப்ரி எப்ஸ்டீன் மர்மமான முறையில் உயிரிழந்த போதிலும், அவரோடு தொடர்புடையதாகக் குற்றம் சாட்டப்பட்ட செல்வாக்கு மிக்க நபர்கள் இன்றும் எவ்விதப் பாதிப்புமின்றிச் சமூகத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு எதிராக இதுவரை எவ்விதக் கடுமையான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படாததற்குக் காரணம், அதிகாரம் இவர்களிடமே குவிந்து கிடப்பதேயாகும். ”**

1200 சிறுமிகள் மற்றும் பெண்கள் எப்ஸ்டீனால் பாதிக்கப் பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எப்ஸ்டீனின் வட்டத்தில் உள்ள செல்வாக்கு, செல்வந்த, அதிகாரம், அரசியல் பலம் கொண்ட ஆண்களுக்காக இப்பெண்கள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இக்குற்றங்கள் நியுயோர்க், புளோரிடா மற்றும் யு.எஸ் வேர்ஜின் தீவுகளில் உள்ள லிற்றில் சென் ஜேம்ஸ் மாளிகை போன்றவற்றில் இடம் பெற்றுள்ளது,

2005-ஆம் ஆண்டு புளோரிடா மாநிலத்தில், பாம் பீச் பொலிஸ் நிலையத்தில் ஒரு சிறுமியின் பெற்றோர் தங்களது 14 வயது மகளை எப்ஸ்டீன் பாலியல் வன்முறை செய்த தாகப் புகாரளித்தனர். விசாரணையை மேற்கொண்ட பொலி சார் மேலும் 36 சிறுமிகள் இவ்வாறு இவரால் பாதிப்புக் குள்ளாகியதாகக் கண்டுபிடித்தனர். 2008-இல் இவர் தன் மீதான குற்றங்களை ஒப்புக்கொண்டார். ஆனால் இரு சிறுமி களையே பாலியல் துன்புறுத்தல் செய்ததாகத் தெரிவித் திருந்தார். இவருக்கு 13 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும், இவர் 12 மணி நேரம் வெளியே சென்று வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்.

2019 யூலை 6 மீண்டும் கைது செய்யப்பட்டார். 2019 ஒகஸ்ட் 10 இவர் சிறையில் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் இவரது உடலை கூறாய்வு செய்த வைத்தியர் இதனை மறுத்துள்ளார். இவர் சிறையில் கொல்லப்பட்டாதாக ஊடகங்கள் தெரி விக்கின்றன. எப்ஸ்டீன் உதவியாளர் Ghislaine Maxwell க்கு 2021-இல் 20 வருட சிறைத் தண்டனை எப்ஸ்டீனுக்கு உதவி புரிந்தமைக்காக விதிக்கப்பட்டது.

எப்ஸ்டீன் சிறுமிகளைப் பாலியல் துன் புறுத்தல் செய்ததாக 2005-இல் குற்றஞ் சாட்டப்பட்டது. விசாரணையில் மேலும் 36 சிறுமிகள் பாதிக்கப்பட்டதாகவும் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால், ஏன் அவர் மீதான விசாரணைகள் மந்த நிலைக்குச் சென்றன. பாதிக்கப்பட்ட சிறுமிகளின் குடும்பங்களுக்கு பாது காப்பு வழங்கப்பட்டதா? இவர்கள் நீதி கேட்கத் தயங்கியதன் காரணம் என்ன? இவருக்கு வழங்கப்பட்ட 13 மாத சிறை முறையானதா? இது போன்ற பல கேள் விகள் உள்ளன. இவற்றை அமெரிக்க ஊடகங்களும் குரல் கொடுக்கத் தயங்கி விட்டன.

எப்ஸ்டீன் ஒரு ஆணாதிக்க அமெரிக்க சூழலில் செயற்பட்டுள்ளார். இவர் அதி கார வர்க்கத்துடன் இணைந்து இயங்கி யுள்ளார். காலனித்துவ ஆட்சி போன்று பெண்களை இந்த அதிகாரவர்க்க மற் றும் உயர்வர்க்க ஆண்கள் சித்திரவதை செய்துள்ளனர். இங்கு பாதிக்கப்பட்ட பெண்கள் அனைவரும் மத்திய மற்றும் கீழ்தட்டு வர்க்கப் பெண்கள். இவர்களது இயலாமையும், செல்வமின்மையும் எப்ஸ்டீன் குழுமத்துக்கு உதவி புரிந் துள்ளது.

தேர்தல் காலங்களில் செல்வந்தர்கள் பல மில்லியன் டொலர் களைத் தேர்தல் நிதியாக ஏன் வழங்குகின்றார்கள் என் பதற்கு எப்ஸ்டீன் கோப்புகள் பதிலளிக்கின்றன. அமெரிக்கா வில் வர்க்க மோதல் முதன்மையாக பொருளாதார அடிப் படையில் அல்லது வலதுசாரிகளால் விரும்பப்படும் கலா சார அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எப்ஸ்டீனால் உருவாக்கப்பட்டுள்ள புதிய அதிகார பாலியல் கலாசாரம் என்பது ஒன்று உயர் வர்க்கத்தினருக்கானது மற்றையது டொனால்ட் ட்ரம்ப்பின் கலாசார விரும்பிகளுக் குரியது. இவ்விரு பகுதியினரும் ஒரு உயர் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றனர். இந்தப் பண்பாட்டில் அடிமைத் தனம், அதிகாரம், ஒடுக்குமுறை என்பன உள்ளடக்கப்பட் டுள்ளன. இதில் கீழ் மற்றும் மத்தியதர வர்க்கத்தினர் எப் பொழுதும் பாதிக்கப்பட்வர்களாகவும், பார்வையாளர்களு மாகவேயிருப்பார்கள். அரசியல், வணிகம், ஊடகம், தொழி னுட்பம், அறிவியல் மற்றும் கல்வித்துறை ஆகியவற்றில் அதிகாரம் அல்லது செல்வாக்கைச் செலுத்தும் நபர்களாக உயரடுக்குகள் வரையறுக்கப்பட்டன.

ஜெப்ரி எப்ஸ்டீன் மர்மமான முறையில் உயிரிழந்த போதிலும், அவரோடு தொடர்புடையதாகக் குற்றம் சாட்டப்பட்ட செல்வாக்கு மிக்க நபர்கள் இன்றும் எவ்விதப் பாதிப்புமின்றிச் சமூகத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு எதிராக இதுவரை எவ்விதக் கடுமையான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படாததற்குக் காரணம், அதிகாரம் இவர்களிடமே குவிந்து கிடப்பதேயாகும். நீதித்துறையைக் கட்டுப்படுத்துபவர்களாகவும், சட்டங்களைத் தீர்மானிப்பவர்களாகவும் இவர்களே இருக்கின்றனர். சுருக்கமாகச் சொன்னால், எப்ஸ்டீன் என்பது ஒரு தனிமனிதனின் உருவம் மட்டுமல்ல; அது 'ஆணாதிக்க முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின்' ஒட்டுமொத்தப் பிரதிபலிப்பாகும்.

பேராசை மற்றும் மனிதாபிமானமற்ற தன்மையைக் கொண்ட செல்வந்தர்கள், தங்களது பணபலத்தாலும் அதிகாரத் திமிராலும் கட்டமைத்த ஒரு சிதைந்த உலகத்தின் குறியீடே எப்ஸ்டீன். இத்தனை காலமும் அதிகார நிழலில் மறைந்திருந்து நிகழ்த்தப்பட்ட வன்முறைகளும், பாலியல் சுரண்டல்களும் எப்ஸ்டீன் விவகாரத்தின் மூலம் இன்று உலக அரங்கில் அம்பலமாகியுள்ளன. முழுமையான உண்மைகள் வெளிவந்துவிடக் கூடாது என்பதற்காகவே எப்ஸ்டீன் எனும் சாட்சி அழிக்கப்பட்டார். தற்போது வெளியாகியுள்ள கோப்புகளைக் காட்டிலும், இன்னும் மூடி மறைக்கப்பட்டுள்ள ஆவணங்களே அதீத முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை வெளிச்சத்திற்கு வரும்போது, அதிகார வர்க்கத்தின் இன்னும் பல கோரமான முகங்கள் உலகிற்குத் தெரியவரும்.

பாதிப்படைந்தவர்களுக்கு குறிப்பாக சிறுமிகளுக்கும் பெண்களுக்கும் நீதி கிடைக்க பல வருடங்கள் எடுக்கும். இல்லை கிடைக்காமலும் போகும். ஏனென்றால், இது மேல் தட்டு அதிகார வர்க்கத்தின் உலகம். அங்கு நீதிக்கு இடமில்லை. இங்கு குற்றவாளிகள் அதிகார வர்க்கத்தினர்.

எப்ஸ்டீன் ஒரு புதிய அரசியல், வணிக கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளார். இதனையே மேற்கின் அதிகார வர்க்கமும் செல்வந்தர்களும் விரும்புகின்றார்கள். டொனால்ட் ட்ரம்ப், 'எப்ஸ்டீனை மறந்து அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டும்' என்றார். அங்கே கியூபா, ஈரான் காத்து நிற்கின்றன.

> ***"முழுமையான உண்மைகள் வெளிவந்துவிடக் கூடாது என்பதற்காகவே எப்ஸ்டீன் எனும் சாட்சி அழிக்கப்பட்டார். தற்போது வெளியாகியுள்ள கோப்புகளைக் காட்டிலும், இன்னும் மூடி மறைக்கப்பட்டுள்ள ஆவணங்களே அதீத முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை வெளிச்சத்திற்கு வரும்போது, அதிகார வர்க்கத்தின் இன்னும் பல கோரமான முகங்கள் உலகிற்குத் தெரியவரும்."***

ஏகபோக முதலாளிகள் தொழிலாளர்களிடமிருந்து திருடுவதன் மூலமும் உலகெங்கிலும் உள்ள ஒடுக்கப்பட்ட நாடுகளிடமிருந்து செல்வத்தைப் பிரித்தெடுப்பதன் மூலமும் தங்கள் இருத்தலைப் பெறுகின்றார்கள். இந்த இருத்தல் ஒட்டுண்ணித்தனமானது. அவர்களின் சுரண்டலுக்கு எந்த எல்லையும் இல்லை - அவர்கள் தங்கள் போர் தொழிலுக்கு எரிபொருளாக இனப்படுகொலைகளை உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் தங்கள் தனியார் சிறைச்சாலைகளுக்கு நிதியளிப்பதற்காகக் கறுப்பின மற்றும் மெக்சிகன் மக்களின் தலைமுறைகளைச் சிறையில் அடைக்கிறார்கள். அவர்கள் தங்கள் ரியல் எஸ்டேட் (நிலைச்சொத்து) முதலீடுகளை வளப்படுத்த ஏழைகளைத் தெருக்களில் இறக்க விடுகிறார்கள். இந்த ஆபத்தான சூழ்நிலை கொடிய காற்றுகள் என்பன பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாலியல் கடத்தலுக்கு அதிகளவில் பாதிக்கக்கூடியதாக ஆக்குகின்றன.

தற்போதைய அரசியல் சூழலில், எப்ஸ்டீன் ஆவணங்கள் பொதுவெளியில் கசியவிடப்படுவது என்பது நீதியை நிலைநாட்டும் ஒரு முயற்சியாகத் தெரியவில்லை. மாறாக, சந்தை சார் ஜனநாயகம், முதலாளித்துவ அரசு மற்றும் ஏகாதிபத்திய உலகளாவிய கட்டமைப்புகளின் அடிப்படைத் தோல்விகளிலிருந்து பொதுமக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் ஒரு தந்திரோபாயமாகவே இது அணுகப்பட வேண்டியுள்ளது. மக்களுக்கான சமத்துவம், சுதந்திரம் மற்றும் நீதி ஆகியவற்றை உறுதிப்படுத்துவதிலும், அவர்களின் அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் அரசின் நீதித்துறை அமைப்புகள் தொடர் தோல்வியைச் சந்தித்து வருகின்றன. பொதுமக்கள் இன்று எதிர்கொள்ளும் பொருளாதாரப் பற்றாக்குறைகளும் நெருக்கடிகளும் முதலாளித்துவ முறையினால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவையே. இவை மக்களின் பொருளாதார வாழ்வைச் சிதைப்பதோடு மட்டுமல்லாமல், மனிதர்களுக்கிடையேயான பரஸ்பர நம்பிக்கையையும், கண்ணியத்தையும் அழித்து, ஒட்டுமொத்தச் சமூக அறத்தையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குகின்றன.

எப்ஸ்டீன் வழக்கு, ஏகபோக முதலாளித்துவ ஆளும் வர்க்கம் (monopolic Capitalists) அமெரிக்காவை அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயக, குடியரசுக் கட்சிகளுடன் சேர்ந்து நீதி மற்றும் உழைக்கும் மக்களின் கோரிக்கைகளுடன் பொருந்தாது என்பதை உறுதியாக நிலைநாட்டுகின்றது. சுரண்டுபவர்கள் அதிகாரத்தில் இருக்கும் வரை ஒருபோதும் நீதிக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

யன்னலைத் திறந்தால் அங்கே பார்த்ததை மறந்து விடுங்கள் காற்று வரும். அதனை அனுபவியுங்கள்.



rathan@thaiveedu.com

# லெனினைச் சாட்டி அதிகாரத்துக்கு ஆசைப்படல்




**அஜித் ராஜபக்சா**

*தமிழில்: மணி வேலுப்பிள்ளை*


2026 ஜனவரி 21-ஆம் திகதி மகாவலி நிலையத்தில், 'லெனினை வாசிப்போம்' எனும் தொனிப்பொருளுடன் இடம்பெற்ற கூட்டத்தில் அமைச்சர் லால் காந்தா உரையாற்றினார். அது மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.-யின்) தொழிற்சங்கக் கிளை நடத்திய கூட்டம். கடந்த 15 ஆண்டுகளாக லெனினை வாசித்து வந்ததாக மார்தட்டிய லால் காந்தா, தனது கட்சி தொடர்ந்தும் லெனினை அடியொற்றி நடை பயில்வதாகத் தெரிவித்தார்.

'எதிர்ப்பதை விட ஆள்வது எளிது, அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதே அடுத்த இலக்கு; அந்த இலக்கை எய்துவதற்காக ஒரு கருத்தியல்வாரியான ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும், அதைக் கையோடு செய்ய முடியாது; கட்டம் கட்டமாகவே செய்யவேண்டும்' என்று வலியுறுத்திப் பேசினார் லால் காந்தா.

'கோட்பாட்டின் அடிப்படையிலேயே அரசாங்கம் இயங்கி வருகிறது; அந்த இயங்குமுறையை நெறிப்படுத்தும் தந்திரோபாய திட்டத்தைப் பகிரங்கமாக அறிவிக்க முடியாது; அது ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டது; கட்சிக்குள் மாத்திரமே அது பகிரப்பட்டுள்ளது' என்று அமைச்சர் தெரிவித்தார்.

'ஈற்றில் அரசும் அரசாங்கமும் இரண்டறக் கலந்த ஒன்றாகவே கொள்ளப்பட வேண்டும்; எனினும், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் காணப்பட்ட அதே திடசித்தம், அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் காணப்படுகிறதா என்பதில் ஐயுறவு நிலவுகிறது; அத்தகைய திடசித்தம் போதியளவு காணப்படாதும் போகலாம்' என்பதை அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

### ஜே.வி.பி.–யின் மார்க்சிய வரலாறு:

குட்டி முதலாளித்துவ வர்க்கத்தில் உதித்த ஜே.வி.பி., பல்வேறு அரசியற் காலகட்டங்களில் இடதுபுறமும் வலதுபுறமும் சாய்ந்து வந்துள்ளது. தொடக்கத்திலிருந்தே மார்க்சிய சிந்தனையாளர்களின் மேற்கோள்களைத் தெரிந்தெடுத்து, அவர்களது கருத்துகளைச் சந்தர்ப்பவாத முறையில், தமது சொந்த அரசியல் தேவைகளுக்கேற்ப, அது மாற்றியமைத்து வந்தது.

குட்டி முதலாளித்துவக் கருத்தியல் என்பது ஈடாட்டம் கொண்டது, தனிமனிதவாதம் மிகுந்தது, முதலாளித்துவ மேட்டிமைக் குழாத்துக்கும் தொழிலாள வர்க்கத்துக்கும் இடைப்பட்ட வர்க்க நிலைப்பாட்டினால் உருவாக்கப்பட்டது என்றெல்லாம்



tg.theeban@gmail.com

> "வெளிநாட்டு எதிரிகளைத் தோற்கடிக்கும் விடயத்தை விட உள்நாட்டு ஆளும் வர்க்கத்தையும் அரசையும் தோற்கடிக்கும் விடயத்துக்கு அதிக முதன்மை அளிக்கப்பட வேண்டும்"

மர்க்சிய சிந்தனையாளர்கள் பலர் தெரிவிக்கின்றார்கள். இக் குழுமம் இரு தரப்புகளுக்கு இடையே ஊசலாடுகின்றது, ஒரு ‘முரண்பட்ட வாழ்வுக் கண்ணோட்டம்’ கொண்டது என்று பொதுவுடைமைக் கொள்கை விளக்கத்தில் மார்க்ஸ் குறிப் பிட்டுள்ளார்.

இந்தியா அகலக்கால் வைப்பதாக ஜே.வி.பி. ஆரம்பத்தில் பீதி கிளப்பியது. கொஞ்சக்காலம் கழித்து ஒரு தீவிர நிலைப்பாட்டை எடுத்த ஜே.வி.பி., தமிழ் மக்களின் சுயநிர்ணய உரி மையை மட்டுமல்ல, பிரிவினை உரிமையையும் ஏற்றுக்கொண்டது. அடுத்த கட்டத்தில் அதற்கு மாறாக வலதுசாரித் தரப்புகளுடன் சேர்ந்து, வடக்கு-கிழக்கிற்கு மாகாண மன்ற அதிகாரங்கள் வழங்குவதை எதிர்த்தது.

இந்த மாகாணமன்ற எதிர்ப்பியக்கம் கொடிய வன் முறையாய் ஓங்கியது. இடதுசாரிகளும், தொழிற் சங்கத் தலைவர்களும், மாணவர் முன்னணித் தலைவர்களும், 13-வது திருத்தத்தை ஆதரித்த பொதுமக்களும் கொல்லப்பட்டார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் இச்செயல்களை நியாயப்படுத்த மார்க்சிய மேற்கோள்கள் முன்வைக்கப்பட்டன. மார்க்சியத்தை ‘உள்நாட்டு நிலைமைகளுக்கு’ ஏற்ப மாற்றியமைக்கும் சாட்டில் அது திரித்து ரைக்கப்பட்டது. இன்று லால் காந்தாவும் அவரது கூட்டாளிகளும் இழையும் வழுவாமல் அந்த அணுகுமுறையையே தொடர்ந்தும் கடைப்பித்து வருகிறார்கள்.

> ***“முதலாளித்துவ முறைமையில் தேர்தல்வழிவந்த கட்டமைப்புகள் மெய்யான அதிகாரம் செலுத்துவதில்லை; முதலாளிகள், வங்கியாளர்கள், ஏகபோக அமைப்புகளின் சொந்தக்காரர்களே அதில் மெய்யான அதிகாரம் செலுத்துகின்றார்கள்.”***

இலங்கை-இந்திய உடன்பாட்டை ஆதரித்த இடதுசாரிகள் மீது இலக்கு வைத்தபொழுது, ‘எட்டத்து எதிரியை’ ஒழிக்க முன்னர் ‘கிட்டிய எதிரியை’ ஒழிக்கவேண்டும் என்று லெனின் கூறியதாக மார்தட்டி, அவர் கூற்றினைத் திரித்துரைத்து, அக் கொலைகளை அவர்கள் நியாயப்படுத்தினார்கள்.

வெளிநாட்டு எதிரிகளைத் தோற்கடிக்கும் விடயத்தை விட உள்நாட்டு ஆளும் வர்க்கத்தையும் அரசையும் தோற்கடிக் கும் விடயத்துக்கு அதிக முதன்மை அளிக்கப்பட வேண்டும் என்று லெனின் வலியுறுத்தியது உண்மையே. வெளிநாட்டு எதிரிகளை எதிர்த்துப் போராடும் சாக்கில் தமது சொந்த முதலாளித்துவ வர்க்கத்தை ஆதரிக்கும் புரட்சிவாதிகளை எதிர்ப்பதற்காக முதலாம் உலகப் போரின் பொழுது லெனின் கூறிய விடயம் அது. தமது அரசியற் கொலைக ளுக்கு நியாயம் கற்பிப்பதற்காக இந்த வாதத்தை ஜே.வி.பி. திரித்துரைத்தது.

வலதுசாரி அரசாங்கங்களில் பங்குபற்றிய வேளைகளில் அல்லது தேசியவாதத் தரப்புகளுடன் உறவாடிய வேளை களில் கூட, ஜே.வி.பி. தொடர்ந்தும் தன்னை மார்க்சிய-லெனி னியக் கட்சியென முழங்கி, செங்கொடிகளையும், மார்க்ஸ்-எங்கெல்ஸ்-லெனின் படங்களையும் ஏந்திக் கொண்டது. பெலவத்தையில் உள்ள கட்சித் தலைமையகத்திலும் அதே படங்கள் வேறு தொங்குகின்றன.

தாம் அன்று கண்டித்த அனைத்துநாட்டு நாணய நிதியத்தின் அதே நிகழ்ச்சித்திட்டத்தை, இன்று அவர்கள் மும்முரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். அதேவேளை, அர சாங்க அதிகாரத்தை தாம் கைப்பற்றிவிட்டதாகவும், சமவுடை மைப் பாதையில் தாம் பீடுநடை போடுவதாகவும், இனி அரச அதிகரத்தைக் கைப்பற்றும் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாகவும் முழங்குகின்றார் லால் காந்தா!

## அடிமட்டத் தோழர்களை ஏய்த்தல்:

அடிமட்டத் தோழர்களை லால் காந்தா திரும்பவும் ஏமாற்றப் பார்க்கின்றார். குறு கிய, அரசியற் சித்தநெறிப் பயிற்சியளித்து (dogmatic training) உருவாக்கிய தமது தோழர்களை விளித்து, முதலாளித்துவத் தின் மூலம் சமவுடைமையை எய்த முடியும்; முதலாளித்துவ குடியாட்சியை முதலாளித் துவம் நிறைவேற்றத் தவறியிருக்கலாம்; முதலாளித்துவக் குடியாட்சி நிறைவேற்றத் தவறிய பணிகளை எமது கட்சி நிறைவேற்றி வருகிறது என்றெல்லாம் வலியுறுத்துகின் றார் லால் காந்தா.

லெனினை அடிக்கடி மேற்கோள்காட்டும் லால் காந்தா, முதலாளித்துவ முறைமை யில் மெய்யான குடியாட்சி நெறிசார்ந்த சீர் திருத்தங்கள் கைகூடப் போவதில்லை என்று ஆனானப்பட்ட லெனினே வாதாடி யதை தவிர்த்து விடுகின்றார்! முதலாளித் துவ முறைமையில் தேர்தல்வழிவந்த கட்ட மைப்புகள் மெய்யான அதிகாரம் செலுத்து வதில்லை; முதலாளிகள், வங்கியாளர்கள், ஏகபோக அமைப்புகளின் சொந்தக்காரர்களே அதில் மெய்யான அதிகாரம் செலுத்துகின்றார்கள் என்று லெனின் திரும்பத் திரும்ப வலியுறுத்தினார். முதலாளித்துவ முறை மையில் நாடாளுமன்றக் குடியாட்சி என்பது வெறுமனே ஓர் ஒப்பாசாரமாய் அல்லது முதலாளித்துவக் குடியாட்சியாய் அமைகின்றது என்று வாதாடினார் லெனின்.

## தேசிய மக்கள் சக்தியும் ‘அரச அதிகாரத்தைக் கைப்பற்றும்’ மாயையும்:

அரச அதிகாரத்தைக் கைப்பற்றி, அரச கட்டமைப்பை அக்குவேறு ஆணிவேறாகக் கழற்றிப்பூட்டி, பல தசாப்தங் களாக இலங்கையை ஆண்ட மேட்டிமைக் குழாத்தின் அழுங்குப்பிடியைத் தகர்க்க வாக்குறுதி அளித்து ஆட்சியில் அமர்ந்ததே தேசிய மக்கள் சக்தி.

இடதுசாரி அரசியற் கோட்பாட்டின்படி அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது வெறுமனே ஓர் அரசாங்கத்தை அமைப்பது அல்லது அமைச்சுகளைக் கையேற்பது என்று பொருள்படாது; மூலதனம் அரசின்மீது செலுத்தும் ஆதிக் கத்தை தகர்ப்பது என்றே பொருள்படும்; குறிப்பாக நிதி மூலதனம், ஏகபோக வணிகக் குழுமங்கள், தேர்தல் முடிவு களைப் பொருட்படுத்தாமல் பொருளாதாரக் கொள்கையை வரையறுக்கும் வெளிநாட்டுத் தரப்புகள் அரசின்மீது செலுத் தும் செல்வாக்கைத் தகர்ப்பது என்றே பொருள்படும்.

மேற்படி நியமத்தின்படி நோக்கினால், அரசாங்கம் அரச அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டதாகக் கொள்ளமுடியாது;




அதாவது, அனைத்துநாட்டு நாணய நிதியத்தின் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமையச் செயற்படும் ஓர் அரசாங்கம், அரச அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டதாகக் கொள்ளமுடியாது. அரசிறையை (revenue) மட்டுப்படுத்தும்படி, அரச நிறு வனங்களை மீளக்கட்டமைக்கும்படி, சமூகநல செலவை வெட்டிக் குறைக்கும்படி, குடியாட்சிநெறிக்கு உட்பட்ட தெரி வுகளைக் குறுக்கும்படி, அதாவது தேசிய இறைமைக்கு வரம் புகட்டும்படி அனைத்துநாட்டு நாணய நிதியம் நிபந்தனை விதித்துள்ளது.

அனைத்துநாட்டு நாணய நிதியத்தின் நம்பிக்கையை ஈட்டி, அதன் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற் காகவே அந்நிதியத்தின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப் பாளர் ஒருவர் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நிய மிக்கப்பட்டார் என்பது வெளிப்படையாகவே புலப்படுகிறது. அதேவேளை, தேசிய மக்கள் சக்தி மேற்படி கட்டுக் கோப்பினை ஆரத்தழுவியது மட்டுமல்லாமல், அதை தவிர்க்கவியலாத செல்நெறி என்றும், பொறுப்புவாய்ந்த செல்நெறி என்றும் வாதாடி வருகின்றது. அத்துடன் செல் வாக்குமிகுந்த உள்நாட்டு வணிகப் பேர்வழிகளுடன் கூட்டுச் சேர்ந்து, அதைப் பொருளாதார மீட்சிக்கு வேண்டிய நடைமுறையை அணுகுமுறையாக முன்வைத்துள்ளது. எந்த மேட்டிமைக் கட்டமைப்பைத் தகர்க்க அன்று ஜே.வி.பி. வாக்குறுதி அளித்ததோ, அந்த மேட்டிமைக் கட்ட மைப்பையே இன்று அது மீளவும் நிலைநிறுத்துகின்றது.

இலங்கையின் உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கம், தேசிய முற்போக்கு முதலாளித்துவ வர்க்கம் அல்ல. ஏகபோக இறக் குமதி, அரச பாதுகாப்பு, வரிச்சலுகை, வெளிநாட்டு மூலதனம் என்பவற்றில் பெரிதும் தங்கியிருக்கும் வர்க்கம் அது. அதனுடன் கூட்டுச்சேர்வது மேட்டிமைக் குழாத்தின் அதிகாரத்தை வலுப்படுத்துமேயொழிய, பலவீனப்ப டுத்தாது. எனவே, தேசிய மக்கள் சக்தி என்ன செய்கின்றது? இடதுசாரித்துவ முகமூடி அணிந்துகொண்டு, தீவிர சொற்சி லம்பம் புரிந்துகொண்டு, முதலாளித்துவ நெருக்கடியை அது சமாளித்து வருகின்றது!

ஊழல்-தடுப்பு நடவடிக்கைகள், நிருவாக வினைத்திறன், அரசிறை ஒழுக்கம் என்பன ஆளுகையை மேம்படுத்தக் கூடும்; ஆனால் பொருளாதார அதிகாரம் செலுத்துவோரை அல்லது முழுமுதற் கொள்கை வகுப்பவர்களை அவை மாற் றுவதில்லை. நிலையூன்றிய முதலாளித்துவ அதிகார உறவுகளை வலுப்படுத்தும் கொள்கைகளை நியாயப்படுத் துவதற்கு இடதுசாரித்துவ மொழியைப் பயன்படுத்துவது அரசியல் வஞ்சனை ஆகும்; நாடுகளுக்கு இடைப்பட்டதோ அல்லவோ எதுவாயினும், இது அரசியல் வஞ்சனையே.

தேசிய மக்கள் சக்தி ஒரு நேரிய கட்சி என்றால், தனது கொள்கைத் திட்டத்தின் மட்டுப்பாடுகளை அது ஒப்புக் கொள்ள வேண்டும். அனைத்துநாட்டு நாணய நிதியத்து மேற்பார்வையின் கீழும், மேட்டிமைக் குழாத்தின் ஆதரவு டனும் தீவிர நிலைமாற்றம் கைகூடப் போவதில்லை. மாறாக, தேசிய மக்கள் சக்தி மெய்யாகவே அரச அதிகாரத்தைக் கைப்பற்ற எண்ணினால், அனைத்துநாட்டு நாணய நிதியம் விதித்த சிக்கனம், வரி உயர்வுகள், பொதுநலப் பணிகளை வெட்டிக் குறைத்தல், உள்நாட்டு மூலதனத்தைப் பாது காத்தல் என்பவற்றுடன் தமது இலக்கு இசைவுபடும் விதத்தை அது விளக்க வேண்டும். இற்றைவரை தேசிய மக்கள் சக்தி அதை ஒப்புக்கொள்ளவுமில்லை, விளக்கம் அளிக்கவும் இல்லை.

முதலாளித்துவ நெருக்கடிகளின் மூலகாரணிகளை எதிர் கொள்வதை விடுத்து, அந்நெருக்கடிகளைச் சமாளிக்கும் இடதுசாரித்துவ அரசாங்கங்கள் ஈற்றில் தமது சமூகத் தளத்தையே கையாலாகாத நிலைக்குத் தள்ளுவதை வரலாறு காட்டுகின்றது. உறுதிப்பாட்டைச் சாட்டி சிக் கனத்தை நடைமுறைப்படுத்தும் பொழுதும் மக்களை அணி திரட்டுவதை விடுத்து அவர்களைக் கட்டுப்படுத்திப் பொறு மைகாக்கச் செய்யும்பொழுதும், சமூகத்தின் சீற்றம் உருமா றுமேயொழிய தணியப் போவதில்லை.

இலங்கையில் பொருளாதார நீதியைப் பின்தள்ளி, ஒழுங்கு - பண்பாட்டுப் பாதுகாப்பு - வலிமைவாய்ந்த ஆட்சிபீடம் என்ப வற்றை ஏற்படுத்துவதாக வாக்குறுதி அளித்து, தணிக்கப்

படாத சீற்றத்தை எளிதில் இனத்துவ-தேசிய சொற்பெருக்காகத் திசைதிருப்ப முடியும்; அதனால் அரசியற் தோல்விக்கு உள்ளாகும் ஆபத்து உண்டாகும்; மேற்படி நெருக்கடிக்கு எதிராக அல்லாமல், அதன் தருக்க விளைவாகவே வன்கோன்மை இன்னும் ஆழ்ந்து நிலையூன்றி வழமைப்பட்டுவிடும்.

> **“ முதலாளித்துவ நெருக்கடிகளின் மூலகாரணிகளை எதிர்கொள்வதை விடுத்து, அந்நெருக்கடிகளைச் சமாளிக்கும் இடதுசாரித்துவ அரசாங்கங்கள் ஈற்றில் தமது சமூகத் தளத்தையே கையாலாகாத நிலைக்குத் தள்ளுவதை வரலாறு காட்டுகின்றது. ”**

## லெனினது இன்றைய பொருத்தப்பாடு:

லால் காந்தா ஆண்டுக் கணக்காக லெனினை வாசித்தும் கூட, உரிய திறனாய்வில் ஈடுபடத் தவறிவிட்டார். சித்த நெறி படைத்த ஜே.வி.பி.-யிடம் திறனாயும் திறனோ நாட்டமோ கிடையாது. தற்கால மார்க்சிய அறிவார்ந்தோர் லெனினை முற்றுமுழுதாக நிராகரிக்கவில்லை. அவரது தீர்வுகள் வரலாற்றுக் காலகட்டத்துடன் மட்டுப்பட்டவை. அவற்றை இன்று கைக்கொண்டால் ஆபத்து விளையும்.

குடியாட்சிக் கட்டமைப்புகளை அகற்றிவிட்டு, கட்சியின் மேட்டிமைக் குழாங்களைப் பதவியில் அமர்த்துவது ஒரு மாற்றுவழி அல்ல, வெறுமனே ஒரு பதிலீடு என்பது அறிவார்ந்தோரின் வாதாட்டம். அதற்குப் பதிலாக, தீவிரமான முறையில் வெளிப்படையாக நடவடிக்கை எடுத்து, அதிகாரங்களைப் பன்முகப்படுத்தி, குடியாட்சி நெறிப்படி வணிக அமைப்புகளையும் நிறுவனங்களையும் நிருவகிக்கும் யோசனைகளை அவர்கள் முன்வைக்கிறார்கள். குடியாட்சி என்பது வெறுமனே ஒரு முதலாளித்துவ ஆடம்பரம் அல்ல; அது எந்த சமவுடைமைத் திட்டத்தினதும் கருப்பொருளாகும் என்பது அறிவார்ந்தோரின் வாதாட்டம்.

மாற்றுக்கருத்தை அடக்கி ஒடுக்கியவுடன் சமவுடமை என்பது அதன் சட்டப்பேறினையும், திருந்திக்கொள்வதற்கான விமர்சனங்களையும் இழந்து, ஊழலுக்கும் தேக்கநிலைக்கும் உள்ளாகிவிடுகின்றது.

குறிப்பாக செயற்கை நுண்ணறிவும், பாரிய தரவுகளும் ஓங்கிய இன்றைய காலகட்டத்தில் 20-ஆம் நூற்றாண்டின் திட்டமிடல் முறைமைகள் வழக்கொழிந்து போய்விட்டன என்பது சிலாவோஜ் சிசெக் (Slavoj Žižek) போன்ற மெய்யியலாளர்களின் வாதம். சமவுடமை அரசுகள் என்றுமே அடையாத முன்னேற்றத்தை முதலாளித்துவம் மேன்மேலும் அடைந்துள்ளது. அதாவது திட்டமிடும் துறையில் லெனினிய பொருளாதார முறைமைகள் நாட்பட்டவை ஆகிவிட்டன.

சமவுடமை நெறிப்படி நிலைமாற்றம் அடைவதற்கு அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதே தீர்க்கமான வழி என்று லெனின் நம்பினார். ஆனால் அத்தகைய அதிகார மையமாக இக்கால முதலாளித்துவ அரசு விளங்கவில்லை என்பது சிலாவோஜ் சிசெக், யானிஸ் வரவ்வகிஸ் (Yanis Varoufakis) போன்ற சிந்தனையாளர்களின் வாதம்.

சித்தநெறிவாதம் (dogmatism), தேசியம், வன்கோன்மை என்பவற்றை அறவே கண்டித்த பிரித்தானிய மெய்யியலாளர் பேட்ராண்ட் ரசல் (Bertrand Russell), வெறுமனே முதலாளித்துவத்தை ஒழித்தவுடன் குடியாட்சி மலர்ந்துவிடாது என்று எச்சரித்தார். சோவியத் ஒன்றியத்தை அவதானித்த பிறகு, போல்சிவிக்வாதம் ஓர் ஆளும் வர்க்கத்துக்குப் பதிலாக இன்னோர் ஆளும் வர்க்கத்தையும், தொழிலாளிகளின் மெய்யான அதிகாரத்துக்குப் பதிலாக, சலுகை அனுபவிக்கும் கட்சி அலுவலர்களின் அதிகாரத்தையும் தோற்றுவித்தது என்று தெரிவித்தார். ‘தற்காலிக’ சர்வதிகாரம் நிரந்தர சர்வதிகாரமாய் மாறும், அதிகாரத்தை ஒருமுகப்படுத்துவதில் தீவிரம் காட்டினால், வினைத்திறன் குன்றி, தேக்கநிலை உண்டாகும், பலவந்தம் கொண்டு கட்டியெழுப்பப்படும் சமூகம் மெய்யான சுதந்திரத்தை ஏற்படுத்தாது என்றெல்லாம் அவர் ஆருடம் கூறினார்.

ரசலின் தொலைநோக்கிற்குப் புலப்பட்டதே ரஷியாவில் பெரிதும் நிகழ்ந்தது. போல்சிவிக் அரசு பாரிய அடக்குமுறையில் ஈடுபட்டு, கட்சிக்குள் ஓங்கிய மாற்றுத் தலைவர்களை ஒழித்துக்கட்டியது. அதன் பின்னர் வேறு நாடுகளில் அதே கருத்தியலைக் கடைப்பிடித்த கட்சிகள் அத்தகைய அழிவினை ஏற்படுத்தின. இனிமேல் அத்தகைய நாட்பட்ட அணுகுமுறைகளை முன்வைத்தால், ஆபத்து விளையும். இலங்கை அத்தகைய வழியில் செல்வதை எவரும் விரும்பவில்லை.

லால் காந்தாவும் அவருடைய கூட்டாளிகளும் சமவுடமை பற்றிய கற்பனைகளை இட்டுக்கட்டாமல், தமது முதலாளித்துவ நாட்டத்தை ஒப்புக்கொண்டால், அனைவருக்கும் நன்மை பயக்கும். பொய்கள் ஒரு திட்டத்துக்கு ஓரளவுக்கே கைகொடுக்கும்.

முதலாளித்துவத்துக்கு ஒரு மெய்யான மாற்றுவழியைச் சிந்தித்து முன்வைக்கும் வல்லமை அற்றதாக இருப்பதே, இக்கால இடதுசாரித்துவத்துக்கு நேர்ந்துள்ள தலையாய நெருக்கடி என்கிறார் யானிஸ் வரவ்வகிஸ். முதலாளித்துவத்துக்குப் பிறகு வருவதென்ன? அது எப்படிச் செயற்படும்? அதற்கும் தற்போதைய முறைமைக்கும் இடையே காணப்படும் முக்கிய வேறுபாடு என்ன? தொலைநோக்கற்ற அரசியல் திறனாய்வினுள் அகப்பட்டுள்ள இடதுசாரித்துவம் இவ்வினாக்களை காலங்காலமாகத் தவிர்த்துவருகிறது என்பது அவரது வாதம்.

குடியாட்சியை வெறுமனே கண்டித்தால் மட்டும் போதாது. ஓர் ஒருங்கிசைவான, தரவுநிறைந்த, செயற்படுத்தக்கூடிய மாற்றுத்திட்டமே உடனடியாகத் தேவைப்படுகின்றது. அத்தகைய திட்டத்தை வகுப்பது கடினம்; எனினும் அரசியலில் அத்தகைய திட்டத்தை வகுப்பது தவிர்க்கமுடியாத ஒன்று.

(Ajith Rajapaksa, The Lenin That Power Prefers, Colombo Telegraph, 2026-01-31, translated by Mani Velupillai, 2026-02-05).



mani.velupillai@thaiveedu.com

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

tg.theeban@gmail.com

## மொழியின் அரசியல் : 1

# தனிச்சிங்களச் சட்டத்தின் 70 ஆண்டுகள்



### அறிமுகக் குறிப்புகள்:

1956-ஆம் ஆண்டு அதிகாரபூர்வ மொழிச் சட்டம் (சிங்களம் மட்டும்) இயற்றப்பட்டு எழுபது ஆண்டுகள் கடந்துவிட்டன. இதுபொதுவாகத் ‘தனிச் சிங்களச் சட்டம்’ என்று அழைக்கப்படுகிறது. இலங்கையின் நவீன வரலாற்றில் சில சட்டங்கள் நாட்டின் அரசியல் கற்பனை, சமூக உறவுகள், நிறுவனங்களின் இயங்கியல் ஆகியவற்றில் நீடித்த செல்வாக்கை செலுத்தியுள்ளன. ஒரு ஜனநாயக சீர்திருத்தமாக நிறைவேற்றப்பட்டு, காலனித்துவ நீக்கச் செயலாக நியாயப்படுத்தப்பட்டு, அதன் ஆதரவாளர்களால் கலாசார விடுதலையாகக் கொண்டாடப்பட்டாலும், இந்தச் சட்டமானது, விலக்கப்படுதல், சமூக-அரசியல் முறிவு, பன்மைத்துவ சகவாழ்வின் மெதுவான சிதைவு ஆகியவற்றையே குறிக்கிறது. அதன் விளைவுகள் மொழிக் கொள்கைக்கு அப்பாற்பட்டவை. குடியுரிமை, கல்வி, வேலைவாய்ப்பு, அரசியலமைப்பு வடிவமைப்பு, அரசியல் அணிதிரட்டல் ஆகிய அனைத்திலும் இது செல்வாக்குச் செலுத்தியது. இறுதியில் இது வன்முறையையும் போரையும் கூட வடிவமைத்தது என்றால் மிகையல்ல.

> “சிங்களம் மட்டும் சட்டம் வெறுமனே ஒரு கொள்கை விவாதம் அல்ல. இது ஒரு கட்டமைப்பு நினைவகம், இலங்கையர்கள் ஜனநாயகம், தேசியவாதம், சிறுபான்மை உரிமைகள் மற்றும் அரசின் அர்த்தத்தை விளக்கும் ஒரு முக்கிய புள்ளி. அதன் மரபு அரசியலமைப்பு நூல்கள் அல்லது அதிகாரபூர்வ மொழிக் கொள்கைகளில் மட்டுமல்ல, அதிகாரத்துவத்துடனான அன்றாட சந்திப்புகளிலும், கல்வி சமத்துவமின்மையின் வடிவங்களிலும், தொழிலாளர் சந்தைகளிலும், கலாசார உற்பத்தியிலும், சமூகங்களுக்கு இடையே நீடித்த அவநம்பிக்கையிலும் உள்ளது.”

இருப்பினும், சிங்களம் மட்டும் சட்டம் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் நினைவில் வைக்கப்படுகிறது. இது அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது, ஆனால் சமமற்ற முறையில் ஆராயப்படுகிறது. உணர்ச்சிவசப்பட்டு பாதுகாக்கப்படுகிறது, ஆனால் எச்சரிக்கையுடன் விசாரிக்கப்படுகிறது, பின்னோக்கிப் புலம்பப்படுகிறது, ஆனால் அரிதாகவே முழுமையாக எதிர்கொள்ளப்படுகிறது. பொது உரையாடல் பெருமைக்கும் வருத்தத்திற்கும் இடையில், நியாயப்படுத்துதலுக்கும் மறுப்புக்கும் இடையில், நீடித்த கணக்கீடு இல்லாமல் ஊசலாடுகிறது. இது தொடர்பான கல்விப்புல ஆய்வுகள், கணிசமானவை என்றாலும், நாடாளுமன்றம் சட்டமியற்றிய ஒரு தருணம், ஒரு முழு காலனித்துவ அரசை எவ்வாறு மறுகட்டமைத்தது என்பதற்கான விரிவான, நீண்ட பார்வையை வழங்க அவை தவறிவிட்டன. அதற்குப் பதிலாக, பெரும்பாலும் துண்டு துண்டாக, சமூகங்கள் அல்லது கொள்கைக் களங்களில் கவனம் செலுத்தியுள்ளன. அந்த இடைவெளியை நிவர்த்தி செய்யும் முயற்சியே இத்தொடர்.

இச்சட்டம் கொண்டுவரப்பட்ட 70-வது ஆண்டில் இத்தொடர் வெளிவருகிறது. இவ்வகையான ஆண்டு நிறைவு நினைவுகள், கடந்த காலத்தை புனிதப்படுத்துவதால் அல்ல, மாறாக அவை மீள்பார்வைக்கான அழைப்பாக இருப்பதால் முக்கியமானவை. உணர்ச்சிகள் குளிர்ச்சியடையவும், கட்டுக்கதைகள் கடினமடையவும், விளைவுகள் தலைமுறைகள் முழுவதும் தெரியவும் எழுபது ஆண்டுகள் போதுமான காலப்பகுதியாகும். பொறுப்பு பரவுவதற்கும் இது போதுமானது. உறுதியான தேர்வுகளுக்குப்

பதிலாகத் தவிர்க்க முடியாத தற்காலிகத் தீர்வுகளும் அதற்கான வரலாற்றுத் தேவையும் ஏன் எழுந்தது என்பதையும் நோக்கியாக வேண்டும். இந்த தற்காலிகப் பார்வையானது ஆபத்தையும் வாய்ப்பையும் உருவாக்குகிறது. ஆனால் இலங்கை விடயத்தில் இது வாய்ப்புக்குப் பதிலாக ஆபத்தையே விளைவித்தது. அநீதியை பாரம்பரியமாக இயல்பாக்க முடியும் என்பதை இது செய்து காட்டியது.

சிங்களம் மட்டும் சட்டம் வெறுமனே ஒரு கொள்கை விவாதம் அல்ல. இது ஒரு கட்டமைப்பு நினைவகம், இலங்கையர்கள் ஜனநாயகம், தேசியவாதம், சிறுபான்மை உரிமைகள் மற்றும் அரசின் அர்த்தத்தை விளக்கும் ஒரு முக்கிய புள்ளி. அதன் மரபு அரசியலமைப்பு நூல்கள் அல்லது அதிகாரபூர்வ மொழிக் கொள்கைகளில் மட்டுமல்ல, அதிகாரத்துவத்துடனான அன்றாட சந்திப்புகளிலும், கல்வி சமத்துவமின்மையின் வடிவங்களிலும், தொழிலாளர் சந்தைகளிலும், கலாசார உற்பத்தியிலும், சமூகங்களுக்கு இடையே நீடித்த அவநம்பிக்கையிலும் உள்ளது.

முக்கியமாக, இந்த அமைப்பு, இத்தொடரின் முக்கிய வாதத்தை பிரதிபலிக்கிறது: சிங்களம் மட்டும் என்ற பாரம்பரியம் நேரியல் அல்ல. அது காரணத்திலிருந்து விளைவு என்ற நேர்கோட்டில் முன்னேறாது. அதற்குப் பதிலாக, அது குவிந்து, உருமாறி, மீண்டும் வெளிப்படுகிறது. சில நேரங்களில் எதிர்பாராத இடங்களில் அது வெளித்தெரிகிறது. அந்த மரபைக் கண்டறிய கால / நிலஞ் சார் பகுப்பாய்வை விடத் தொடர்ச்சியான கவனம் தேவை.

> ***"சிங்களம் மட்டும் என்ற பாரம்பரியம் நேரியல் அல்ல. அது காரணத்திலிருந்து விளைவு என்ற நேர்கோட்டில் முன்னேறாது. அதற்குப் பதிலாக, அது குவிந்து, உருமாறி, மீண்டும் வெளிப்படுகிறது. சில நேரங்களில் எதிர்பாராத இடங்களில் அது வெளித்தெரிகிறது."***

தனிச்சிங்களச் சட்டம் குறித்த அதிக எழுத்துகளை மூன்று பரந்த சட்டங்களில் ஒன்றில் அடக்கவியலும். முதலாவது, தேசியவாதத்தின் கொண்டாட்டம். இது 1956-ஐ காலனித்துவ, உயரடுக்கு ஆதிக்கத்தின் மீது பெரும்பான்மையினரின் வெற்றியாகக் கருதுகிறது. இந்தக் கண்ணோட்டத்தில், சிங்களம் மட்டும் வரலாற்று அநீதியை சரிசெய்தது, மேலும் அதன் எதிர்மறையான விளைவுகள் மிகைப்படுத்தப்படுகின்றன என்று வாதிட்டது. அவை சிறுபான்மையினரின் பிடிவாதத்தின் மீது குற்றம் சாட்டுகின்றன.

இரண்டாவது, பேரழிவு தரும் சமூக முறிவு. இது 1956-ஐ அடுத்தடுத்த அனைத்து மோதல்களும் வழிகோலிய அடிப்படை நிகழ்வாகும். இந்தச் சட்டம் தமிழ் மொழியின் அந்நியப்படுத்தலின் ஆழத்தைப் படம்பிடித்தாலும், சிக்கலான செயல்முறைகளை ஒரே தருணத்தில் சரிசெய்வதன் மூலம் வரலாற்றைத் தட்டையாக்க முடியும் என்று கணக்குப்போட்ட அரசாங்கத்தின் மூடத்தனத்தை வெளிப்படுத்தியது.

மூன்றாவது, செயன்முறைத் தவறு. இது சிங்களம் மட்டும் மோசமாக வடிவமைக்கப்பட்டது அல்லது செயற்படுத்தப்பட்டது என்பதை ஒப்புக்கொள்கிறது, ஆனால் அதை ஆழமான அதிகார கட்டமைப்புகளில் பொதிந்துள்ள ஒரு தார்மீக அரசியல் தேர்வின் வெளிப்பாடாகக் கருதுவதற்குப் பதிலாக ஒரு கொள்கைப் பிழையாகக் கருதுகிறது. இத்தொடர் இம் மூன்றையும் தாண்டிச் செல்ல முயல்கிறது.

இது காலனித்துவ எதிர்ப்பு குறையின் நியாயத்தன்மையையோ ஆங்கில ஆதிக்கத்தின் அநீதியையோ மறுக்கவில்லை. இது இலங்கையின் மோதலை மொழிக் கொள்கையாக மட்டும் குறைக்கவில்லை. அதற்குப் பதிலாக, நீதிக்கான கோரிக்கை எவ்வாறு புதிய மற்றும் நீடித்த ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கும் ஒரு வடிவமாக மொழிபெயர்க்கப்பட்டது, மேலும் அந்த மொழிபெயர்ப்பு ஏன் அந்த நேரத்தில் பலருக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக மட்டுமல்லாமல், தார்மீக ரீதியாகவும் கட்டாயமாகத் தோன்றியது என்றும் கேட்கிறது.

அவ்வாறு செய்வதன் மூலம், இத்தொடர் சிங்களம் மட்டும் என்பதை வெறும் மொழிச் சட்டமாக மட்டுமல்லாமல், அரசு உருவாக்கும் திட்டமாகவும் மறுவடிவமைக்கிறது. தேசத்தை வரையறுக்க, குடியுரிமையை ஒழுங்குபடுத்த, நிறுவனங்களை மறுசீரமைக்க, ஜனநாயகத்தை ஒழுக்கப்படுத்த மொழி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை இது ஆராய்கிறது.

## மொழி அதிகாரமாக: 1956 ஏன் முக்கியமானது:

மே 1956-இல், இலங்கையில் அலுவல் மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது, அது ஒரு வரலாற்றுத் தவறுக்கான தொழினுட்பத் திருத்தமாகப் பரவலாக வடிவமைக்கப்பட்டது. காலனித்துவ ஆட்சியின் மொழியாகவும் உயரடுக்கு சலுகையின் மொழியாகவும் இருந்த ஆங்கிலம், பெரும்பான்மையினரின் மொழியான சிங்களத்தால் மாற்றப்பட்டது. ஆயினும்கூட, வெளிப்பட்டது வெறுமனே ஒரு மொழியியல் மாற்றம் அல்ல, மாறாக அதிகாரத்தின் மறுசீரமைப்பு. அடுத்தடுத்த தசாப்தங்கள் வெளிப்படுத்துவது போல், மொழி வெறுமனே அரசியல் அதிகாரத்தை வெளிப்படுத்தவில்லை. அது அதை உருவாக்கியது. சிங்களம் மட்டும் சட்டம் மொழியை ஒரு ஆளும் கொள்கையாக மாற்றியது. அது நிறுவனங்களை மறுவடிவமைத்தது, குடியுரிமையை மறுசீரமைத்தது, எல்லாவற்றிற்கும் மேலாக தார்மீக சட்டபூர்வமான தன்மையை மறுசீரமைத்தது.

1956 இன்னும் ஏன் முக்கியமானது என்பதைப் புரிந்துகொள்ள, இலங்கையை ஒரு பரந்த உலகளாவிய சூழலுக்குள் நிலை நிறுத்துவது அவசியம். மொழி அரசு அதிகாரத்தின் முதன்மை ஊடகமாக மாறினாலும், அது நெருக்கமான, நிறுவன ரீதியான வழிகளில் உள்ளடக்கத்தையும் விலக்கையும் கட்டமைக்கிறது. இலங்கையின் அனுபவம் அதன் தீவிரத்திலும் அது ஏற்படுத்திய நீண்டகால விளைவுகளிலும் தனித்துவமானது.

1956-க்குப் பிறகு இலங்கையில், அணுகலின் அமைதியான கட்டமைப்பாக மொழி செயற்பட்டது. சிங்களம் மட்டும் மொழியின் மிக ஆழமான விளைவுகள் ஒட்டுமொத்தமாகவும், அன்றாட வாழ்விலும் பிரதிபலித்தன. அரச சேவையைப்

பொறுத்தவரையில் நுழைவுத் தேர்வுகள், பதவி உயர்வுகள், உள் கடிதப் போக்குவரத்து ஆகியவை சிங்கள மொழியிலேயே பெரும்பாலும் நிகழ்ந்தன. அரச சேவையில் பணியாற்ற சிங்களப் புலமை தேவைப்பட்டது. சிங்கள மொழி பேசுவோர் ஒரு தீர்க்கமான நன்மையைப் பெற்றனர். அதே நேரத்தில் தமிழ் மொழி பேசுவோர் - அவர்களில் பலர் முன்பு ஆங்கிலம் மூலம் சிங்களவர்களுடன் சமமாகப் போட்டியிட்டனர் - தாங்கள் கட்டமைப்பு ரீதியாகப் பின்தங்கியதாகக் கண்டறிந்தனர்.

நீதித்துறை மற்றொரு உதாரணத்தை வழங்குகிறது. நீதிமன்ற நடவடிக்கைகள், தீர்ப்புகள், சட்ட ஆவணங்கள் சிங்களத்திற்கு மாற்றப்பட்டன, பெரும்பாலான வழக்குரைஞர்கள் தமிழ் மொழி பேசுபவர்களாக இருந்த பகுதிகளில் கூட இது நிகழ்ந்தது. மொழிபெயர்ப்பு விதிகள் கோட்பாட்டில் இருந்த போதிலும், அவை நடைமுறையில் சமமற்ற முறையில் செயற்படுத்தப்பட்டன. தாமதங்கள், தவறான புரிதல்கள், நடைமுறை ஏற்றத்தாழ்வுகள் அடிக்கடி நிகழ்ந்து இயல்பாக்கமடைந்தன.

கல்வி இந்த விளைவுகளைப் பெரிதாக்கியது. ஒருமொழிப் பாடசாலைக் கல்வி மொழியியல் பிரிவினையை ஆழப்படுத்தியது. சிங்கள மொழி மாணவர்கள் அரசு வேலை வாய்ப்புகளை அணுகும் வாய்ப்பைப் பெற்றனர்; தமிழ் மொழி மாணவர்கள் அதிகளவில் உச்சவரம்புகளை எதிர்கொண்டனர். காலப்போக்கில், இந்தக் கல்விப் பாதைகள் வேறுபட்ட தொழிலாளர் சந்தைகளாக மாற்றப்பட்டன. ஒன்று அரசு அதிகாரத்துடன் இணைந்தது, மற்றொன்று பெருமளவில் ஓரங்கட்டப்பட்டது அல்லது வேறு இடங்களில் வாய்ப்பு தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இவை தற்செயலான விளைவுகள் அல்ல. அரசியல் கோட்பாட்டாளர் மைக்கேல் மான், அரசு அதிகாரத்தை ‘உள்கட்டமைப்பு’ என்று பிரபலமாக விவரித்தார். அதாவது, அன்றாட நிர்வாகத்தின் மூலம் சமூகத்தில் ஊடுருவும் திறன். அந்த ஊடுருவலின் மிகவும் சக்திவாய்ந்த கருவிகளில் ஒன்று மொழி. இலங்கையில், சிங்களம் மட்டும், அரசின் உள்கட்டமைப்பு சக்தியை ஒரு மொழியியல் சமூகத்தை நோக்கி மறுசீரமைத்தது.

தனிச்சிங்களச் சட்டம் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறுவது என்னவென்றால், அது ஜனநாயக ரீதியாக இயற்றப்பட்டது. இங்குதான் இலங்கை பல காலனித்துவ அல்லது சர்வாதிகார மொழித் திணிப்புகளிலிருந்து கூர்மையாக வேறுபடுகிறது. இந்தச் சட்டம் மக்களின் விருப்பமாக நியாயப்படுத்தப்பட்டது, இது சர்வசன வாக்குரிமை மூலம் வெளிப்படுத்தப்பட்டது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா மீண்டும் மீண்டும் வாதிட்டது போல், ‘மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் மக்களின் மொழியைப் பேச வேண்டும்.’

இந்த சிந்தனையும் தர்க்கமும் மகத்தான தார்மீக சக்தியைக் கொண்டிருந்தது. இது எண்ணிக்கையிலான பெரும்பான்மையை நெறிமுறை முன்னுரிமையாக மாற்றியது. மொழி சீர்திருத்தம் இனி ஒரு கொள்கைத் தேர்வாக இருக்கவில்லை. அது ஜனநாயக நீதியின் வெளிப்பாடாக மாறியது. எனவே சிறுபான்மை எதிர்ப்பை ஒரு நியாயமான கவலையாக அல்ல, மாறாக மக்கள் இறையாண்மைக்கு எதிரான எதிர்ப்பாக வடிவமைக்க முடிந்தது. அரசியல் தத்துவஞானி ஹன்னா அரெண்ட் ‘மிகவும் தீவிரமான புரட்சியாளர் புரட்சிக்கு அடுத்த நாள் பழமைவாதியாக மாறுவார்’ என்று கணித்தபோது இந்த ஆபத்தைப் பற்றி எச்சரித்தார். இலங்கையில், 1956 புரட்சி விரைவாக மரபுவழியாக மாறியது. சிங்களம் ஜனநாயகத்திற்கு ஒத்ததாக மாறியது. கருத்து வேறுபாடு சந்தேகத்திற்குரியதாக மாறியது.

இந்த இயக்கவியல் இலங்கைக்கு மட்டும் உரியதல்ல. இந்தியாவில், இந்தி தேசிய மொழியாக இருப்பது குறித்த சுதந்திரத்திற்குப் பிந்தைய விவாதம் இதேபோன்ற பாதையையே பின்பற்றியது. இந்தி பெரும்பான்மையினரின் மொழியாகவும், காலனித்துவ எதிர்ப்பு நம்பகத்தன்மையுடனும் ஊக்குவிக்கப்பட்டது. இருப்பினும், இந்தி பேசாத பகுதிகளிலிருந்து, குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து எதிர்ப்பு கடுமையாக இருந்தது. இருப்பினும், இலங்கையைப் போலல்லாமல், இந்தியா இறுதியில் ஒருமொழித் திணிப்பிலிருந்து பின்வாங்கியது, ஆங்கிலத்தை ஒரு துணை அலுவல் மொழியாகத் தக்கவைத்துக் கொண்டது. இந்த விடயத்தில் இந்தியா தந்த பாடம் வெளிப்படையானது. மொழியியல் இணக்கம் இல்லாத ஜனநாயகம் தேசிய சிதைவை நோக்கி நகர்த்தி நாட்டையே ஆபத்தில் ஆழ்த்தும். ஆனால் துரதிஷ்டவசமாக, இலங்கை எதிர்ப்பாதையை எடுத்தது. சிங்களம் மட்டும் என்ற கொள்கை, ஜனநாயகத் தேர்வாக நியாயப்படுத்தப்பட்டு பின்பற்றப்பட்டது.

மொழிச் சட்டங்கள் நிர்வாகத்தை மட்டும் ஒழுங்குபடுத்துவதில்லை. அவை தேசத்தையே கற்பனை செய்கின்றன. சிங்களம் மட்டும் சட்டம் இலங்கையை மொழியியல் ரீதியாக சிங்கள அரசியலாக மறுவரையறை செய்தது. தமிழையும் பிற மொழிகளையும் இரண்டாம் நிலைக்கு தள்ளி அவை சகிப்புத்தன்மை கொண்டவையாக இருக்க கட்டாயப்படுத்தப்பட்டன. இந்தச் செயல் எவ்வளவு சக்திவாய்ந்ததாக இருக்க முடியும் என்பதை ஒப்பீட்டு அனுபவம் வலுப்படுத்துகிறது.

**“சிங்களம் மட்டும் சட்டம் இலங்கையை மொழியியல் ரீதியாக சிங்கள அரசியலாக மறுவரையறை செய்தது. தமிழையும் பிற மொழிகளையும் இரண்டாம் நிலைக்கு தள்ளி அவை சகிப்புத்தன்மை கொண்டவையாக இருக்க கட்டாயப் படுத்தப்பட்டன.”**

பிரான்சில், பிரெஞ்சுக் குடியரசின் ஒரே மொழியாக பிரெஞ்சு மொழி உயர்த்தப்பட்டது. அது தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு மையமாக இருந்தது. பிராந்திய மொழிகள் - பிரெட்டன், ஆக்ஸிடன், கோர்சிகன் - ஒற்றுமையின் பெயரில் தீவிரமாக அடக்கப்பட்டன. மொழியியல் ஒருமைப்பாடு எவ்வாறு ஒரு வலுவான மையப்படுத்தப்பட்ட அரசை உருவாக்க முடியும், ஆனால் நீடித்த கலாசார அந்நியப்படுத்தலையும் உருவாக்க முடியும் என்பதை பிரான்சின் கதை காட்டுகிறது. கனடாவில், இதற்கு நேர் மாறாக, மொழியியல் இரட்டைவாதம் இறுதியில் அரசியலமைப்புச் சட்டமாக்கப்பட்டது. ஆங்கிலம் - பிரெஞ்சு

“

***1956-க்குப் பிந்தைய அரசு தமிழ் பேசும் குடிமக்களுக்கு அந்நியமாகத் தோன்றியது. அது அவர்களுக்கு முறையான குடியுரிமையை மறுத்ததால் அல்ல, மாறாக அது அவர்களுக்கு அங்கீகாரத்தை மறுத்ததால் நிகழ்ந்தது.***

”



இடையேயான மோதல் - குறிப்பாக கியூபெக்கில் - மொழியியல் சமத்துவத்தை மறுப்பது பிரிவினைவாத உணர்வை உருவாக்குகிறது என்பதை வெளிப்படுத்தியது. கனேடிய இருமொழிவாதம் இலட்சியவாதத்தால் பிறந்ததல்ல, அரசியல் தேவை யினால் பிறந்தது.

இலங்கையின் சோகம், அது பேச்சுவார்த்தை மூலம் பெறப்பட்ட பன்மைத்துவத்தை விட குறியீட்டு ஒற்றுமையைத் தேர்ந்தெடுத்ததே. சிங்களம் மட்டும் மூலம் தேசத்தைக் கற்பனை செய்வதன் மூலம், நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்ற விதிமுறையை உருவாக்கியது. தமிழ் பேசும் குடிமக்கள் இனி நாட்டினது இணை உரிமையாளர்கள் இல்லை. அவர்கள் பெரும்பான்மை தேசத்திற்குள் மொழியியல் சிறுபான்மையினராக மாறினர். இங்கே கவனிக்க வேண்டியது, மொழி வெறும் தொடர்பாடலுக்கானது மட்டுமல்ல. அது உணர்ச்சிகரமானது. குடிமக்கள் நாட்டைப் பற்றியும் தங்களைப் பற்றியும் எப்படி உணருகிறார்கள் என்பதை இது வடிவமைக்கிறது. இலங்கையில், 1956-க்குப் பிந்தைய அரசு தமிழ் பேசும் குடிமக்களுக்கு அந்நியமாகத் தோன்றியது. அது அவர்களுக்கு முறையான குடியுரிமையை மறுத்ததால் அல்ல, மாறாக அது அவர்களுக்கு அங்கீகாரத்தை மறுத்ததால் நிகழ்ந்தது.

அரசியல் விஞ்ஞானி ஜேம்ஸ் சி. ஸ்காட், மக்களை ‘தெரியாதவர்களாக’ மாற்றும் அரசு நடைமுறைகள் எதிர்ப்பை உருவாக்குகின்றன என்று வாதிட்டார். இலங்கையில், இதற்கு நேர்மாறானது நிகழ்ந்தது. தமிழ் குடிமக்கள் மொழியியல் வெளியாட்களாக மிகத் தெளிவாகத் தெரிந்தனர். அவர்களின் உச்சரிப்புகள், ஆவணங்கள், கோரிக்கைகள் அவர்களை வேறுபட்டவர்களாகக் குறித்தன. இது பாதகத்தை மட்டுமல்ல, அவமானத்தையும் ஏற்படுத்தியது.

இலங்கையின் இதேபோன்ற இயக்கவியலை வேறு இடங்களிலும் காணலாம். பாகிஸ்தானில், உருது மொழியை ஒரே தேசிய மொழியாகத் திணிப்பது, வங்காள மொழி பேசுபவர்களை, அவர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மை இருந்தபோதிலும், ஓரங்கட்டியது. வங்காள மொழியை மொழியியல் ரீதியாக அங்கீகரிக்க மறுப்பது கலாசார அழிப்பாகவும் அரசியல் ஆதிக்கமாகவும் உணரப்பட்டது. இதன் விளைவாக இணக்கம் ஏற்படாமல் பிரிவினை நிகழ்ந்தது. 1971-இல் வங்காளதேசம் பிறந்தது. ஆனால் இலங்கையின் மோதல் அதே பாதையில் செல்லவில்லை, ஆனால் தர்க்கம் ஒத்ததாக இருந்தது. மொழி விலக்கு அரசியலமைப்பு தீர்வுகள் மீதான நம்பிக்கையை அரித்தது. அரசு உங்கள் பேச்சைக் கேட்க முடியாதபோது, அரசின் மீதான நம்பிக்கை யீனம் அதிகரிக்கிறது.

1956-இன் தனிச்சிங்களச் சட்டம் வெறுமனே நாட்டின் சட்டக் கோவையின் ஒரு பகுதியாகவோ, ஒரு அத்தியாயமாகவோ மட்டும் இருக்கவில்லை. அது ஒரு கட்டமைப்பாக உருவெடுத்தது. இதனாலேயே பிற நாடுகளில் இருந்து இலங்கையை வேறுபடுத்துவது தனிச்சிங்களச் சட்டம் இயற்றப்பட்டது மட்டுமல்ல, அதன் தர்க்கம் கட்டமைப்புரீதியாக மாறியதுமாகும். பின்னர் தமிழ் மொழி அரசியலமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்பட்டபோதும், செயற்படுத்தல் தாமதமானதோடு அது முழுமையானதாகவும் இருக்கவில்லை. அதிகாரத்துவ ரீதியாக செயலற்ற தன்மை, அரசியல் எதிர்ப்பு, தார்மீக தயக்கம் ஆகியவை சிங்களம் நடைமுறையில் ஆதிக்கம் செலுத்துவதை உறுதி செய்தன.

மொழி சீர்திருத்தம் அரசியல் திருத்தத்தின் பகுதியாகவோ குறியீடாகவோ இருந்த பிற நாடுகளில் நிகழ்ந்தவைதோடு இதை ஒப்பிட முடியும். தென்னாபிரிக்காவில், பதினொரு அதிகாரபூர்வ மொழிகளின் நிறவெறிக்குப் பிந்தைய அரசியலமைப்பு அங்கீகாரம் தானாகவே ஆங்கில ஆதிக்கத்தை அகற்றவில்லை. இருப்பினும், இலங்கையைப் போலல்லாமல், தென்னாபிரிக்கா பன்மொழிவாதத்தை ஒரு சலுகையாக அல்ல, ஒரு தார்மீக உறுதிப்பாடாக வடிவமைத்தது. வேறுபாடு சட்டத்தில் மட்டுமல்ல, அரசியல் விருப்பத்திலும் உள்ளது என்பதை இது காட்டியது. மொழி சமத்துவத்துடனான இலங்கையின் தொடர்ச்சியான போராட்டம், 1956 ஒரு மூடிய அத்தியாயம் அல்ல. நிறுவன அடித்தளங்களின் பிரதிபலிப்புகளை மறுவடிவமைத்த ஒரு தருணம் அது. மொழியானது உரிமையின் அடையாளமாக மாறியவுடன், இதிலிருந்து பின்வாங்குவது அரசியல் ரீதியாக அதிக விலை கொடுக்க வேண்டியதொன்றானது.

எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு, இலங்கை 1956-இலிருந்து ‘முன்னேற வேண்டுமா’ என்று கேட்கத் தூண்டுகிறது. ஏனெனில் அவ்வாறு நிகழவில்லை என்பதையே வரலாறு காட்டி

நிற்கிறது. முன்னேறுவதாயின் குறிப்பாக ஒரு விடயத்தை நினைவில் கொள்வது முக்கியமானது. மொழியியல் மாற்றீடு மூலம் மட்டுமே நீதியை அடைய முடியாது என்பதை ஒப்புக் கொள்வது அவசியம். தத்துவஞானி சார்லஸ் டெய்லர் குறிப் பிடுவது போல, அங்கீகாரம் நீதியாக இருப்பதற்கு பரஸ்ப ரமாக இருக்க வேண்டும். ஒரு அடையாளத்தை அங்கீக ரிக்கும் அதே வேளையில் மற்றொரு அடையாளத்தைக் குறைக்கும் ஒரு மொழிக் கொள்கை வரலாற்று அநீதியைத் தீர்க்காது. அது அதை மறுபகிர்வு செய்கிறது.

இலங்கையின் அனுபவம் அதன் எல்லைகளுக்கு அப்பால் பேசுகிறது. இது உலகளாவிய காலனித்துவத்துவத்திற்குப் பிந்தைய சங்கடத்தை விளக்குகிறது. விலக்குரிமையை ஜன நாயகப்படுத்தாமல் அரசை ஜனநாயகப்படுத்துவது எப்படி? சுருக்கமாகச் சொல்வதாயின் ஆதிக்கத்தை ஒழுக்கப்படுத் தாமல் அதிகாரத்தை எவ்வாறு ஜனநாயகப்படுத்துவது? இதனால்தான் 1956 இன்னும் முக்கியமானது. பெரும்பான் மையினருக்கான மொழியியல் நீதியின் அடிப்படையில் கட்ட மைக்கப்பட்ட ஒரு ஜனநாயக அரசு அனைவருக்கும் சமத்து வத்தையும் கண்ணியத்தையும் நிலைநிறுத்த முடியுமா?

## தனிச்சிங்களச் சட்டம்: சீர்திருத்தமா, சிதைவா, ஜனநாயகப் புரட்சியா?

சில காலனித்துவத்திற்குப் பிந்தைய சீர்திருத்தங்கள் - தனிச் சிங்களச் சட்டம் போன்றவை - அவற்றின் அர்த்தத்தில் நீடித்த கருத்து வேறுபாட்டை உருவாக்கியுள்ளன. இது காலனித் துவ நீக்க சீர்திருத்தத்தின் அவசியமான செயலா? ஒரு பல வீனமான பன்மைத்துவ சமூகத்தை உடைத்த பேரழிவுகர மான முறிவா? அல்லது பெரும்பான்மை ஆட்சியின் உண் மையான சக்தியையும் ஆபத்தையும் வெளிப்படுத்திய ஒரு ஜனநாயகப் புரட்சியா? இந்த மூன்று வேறுபட்ட முரண்படும் விளக்கங்கள் தற்செயலானது அல்ல. சட்டம் உண்மையி லேயே மூன்று பரிமாணங்களையும் உள்ளடக்கியது. மேலும் துல்லியமாக இந்த ஒருங்கிணைப்புதான் அதன் ஆரம்ப ஈர்ப் பையும் அதன் நீண்ட பிற்கால வாழ்க்கையையும் விளக்கு கிறது.

சிங்களம் மட்டும் ஏன் தொடர்ந்து முக்கியமானது என்பதைப் புரிந்துகொள்ள, இலங்கையில் இந்த மூன்று விளக்கங்களும் ஒரே நேரத்தில் எவ்வாறு செயற்பட்டன என்பதையும், ஜனநா யகம், நீதி, தேசியம் என்பன குறித்த கதையாடல்களை மையப்படுத்திய வாகனமாக மொழி மாறியபோது இதே போன்ற இயக்கவியல் வேறு இடங்களில் எவ்வாறு வெளிப் பட்டது என்பதையும் ஆராய வேண்டியது அவசியம்.

சீர்திருத்தவாதக் கண்ணோட்டத்தில், சிங்களம் மட்டும் என் பது பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்ட அநீதிக்கான ஒரு பிரதி பலிப்பாகும். நாட்டு மக்களின் சனத்தொகையில் பத்து சதவீ தத்திற்கும் குறைவான மக்கள் மட்டுமே செயல்பாட்டுத் தேர்ச்சியைக் கொண்ட ஆங்கில மொழியின் தொடர்ச்சியான ஆதிக்கம் சிங்கள பெரும்பான்மைச் சமூகத்திற்கு எரிச் சலையும் கோபத்தையும் ஏற்படுத்தின. சுதந்திரத்திற்குப் பிறகு முதல் தசாப்தத்தில், அரசு நிறுவனங்கள் தொடர்ந்து பெரும்பாலும் ஆங்கிலத்தில் செயற்பட்டன. நாடாளுமன்ற விவாதம், நீதித்துறை நடவடிக்கைகள், மூத்த நிர்வாகம், பல் கலைக்கழக கல்வி ஆகியவை சிங்களம் பேசும் கிராமப்புற பெரும்பான்மையினருக்கு அணுக முடியாததாகவே இருந்தன.

இது உருவாக்கிய குறை உணர்வு நன்கு ஆவணப்படுத்தப் பட்டுள்ளது. கிராமப்புற பாடசாலை ஆசிரியர்கள் தங்கள் மாணவர்கள் தேர்வுகளில் தேர்ச்சி பெறலாம், ஆனால் இன் னும் அரசாங்க வேலையில் இருந்து தடுக்கப்படுகிறார்கள் என்று குறை கூறினர். அரசு அதிகாரிகளை எதிர்கொள்ளும் விவசாயிகள் பெரும்பாலும் அடிப்படை நடைமுறைகளை மொழிபெயர்க்க இடைத்தரகர்களைக் கோர வேண்டிய நிலை இருந்தது. 1950-களின் முற்பகுதியில் ஒரு சிங்கள விவசாயத் தலைவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரிடம் கூறியது போல்,' நாங்கள் சுதந்திரத்திற்கு வாக்களித்தோம், ஆனால் அரசாங்கம் இன்னும் வெள்ளையர்களின் மொழி யைப் பேசுகிறது.' இது குறித்து எஸ்.ஜே. தம்பையா Sri Lanka: Ethnic Fratricide and the Dismantling of Democracy என்ற தனது நூலில் விரிவாகப் பேசுகிறார்.

இந்தக் கோணத்தில் இருந்து பார்த்தால், தனிச்சிங்கள சட்டம், தேசிய மொழிக்கு அதிகாரமளிப்பதை நோக்கமாகக் கொண்ட பிற காலனித்துவத்திற்குப் பிந்தைய மொழிச் சீர்



திருத்தங்களை ஒத்திருந்தது. இந்தோனேசியாவில், பஹாசா இந்தோனேசியாவின் உயர்வு நூற்றுக்கணக்கான மொழியியல் குழுக்களை ஒன்றிணைத்து டச்சு மொழிக்கு இருந்த சலுகையை அகற்றியது. தான்சானியாவில், ஜூலியஸ் நியேரேரின் சுவாஹிலி மொழி ஊக்குவிப்பு, மொழியை சமத்துவத்திற்கான ஒரு கருவியாக வெளிப்படையாக வடிவமைத்து, 'ஒரு நாட்டில் அதன் மக்கள் தங்கள் அரசாங்கத்துடன் பேச முடியாவிட்டால் சுதந்திரமாக இருக்க முடியாது' என்று வாதிட்டது.

பண்டாரநாயக்காவின் சொல்லாடல் இந்த உலகளாவிய காலனித்துவ எதிர்ப்பு சொற்களஞ்சியத்தை எதிரொலித்தது. தனிச் சிங்களச் சட்டம் 'மக்களுக்கு அரசாங்கத்தை மீட்டெடுக்கும்' என்று அவர் வலியுறுத்தினார், இந்தச் சட்டத்தை சர்வசன வாக்குரிமையின் நீட்டிப்பாகக் காட்டினார். இந்த அர்த்தத்தில், சிங்களம் மட்டும் என்பது வெறும் குறியீடாக இருக்கவில்லை. அது அரச இயந்திரத்துடனான அணுகலை யும் கண்ணியத்தின் உறுதியான மறுபகிர்வையும் உறுதியளித்தது. ஆனால் இந்தோனேசியாவோ தான்சானியாவோ போலல்லாமல் - அங்கு தேசிய மொழிமயமாக்கல் இன சலுகைகளைத் தவிர்ப்பதற்கான திட்டமிட்ட முயற்சிகளுடன் சேர்ந்து கொண்டது - இலங்கை மொழியியில் மேலாதிக்கம் மூலம் சீர்திருத்தத்தைத் தொடர்ந்தது. இந்த வேறுபாடு தீர்க்கமானது.

தமிழ் பேசும் குடிமக்களுக்கு, தனிச் சிங்களச் சட்டம் சீர்திருத்தமாகவே உணரப்படவில்லை. அது நம்பிக்கை மீறலாக உணரப்பட்டது. சுதந்திரம் என்பது அரசியலமைப்பு ரீதியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக புதிய அரசு அதன் அனைத்து மக்களுக்கும் சமமாகச் சொந்தமானதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இணைந்திருந்தது. ஒரு மொழியை தேசிய சட்டபூர்வமான ஒரே அடையாளமாக மாற்றுவதன் மூலம் அச்சட்டம் அந்த எதிர்பார்ப்பை உடைத்தது. இந்த முறிவு குறியீட்டு ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இருந்தது. குறியீடாக, இந்தச் சட்டம் தேசத்தை சிங்களவருடையது என்று மறுவரையறை செய்தது. பொருளாதார ரீதியாக, அது வேலைவாய்ப்புக்கான சாத்தியங்களை மாற்றியது. தமிழ் மொழிபேசும் அரசு ஊழியர்கள் பதவி இறக்கம் அல்லது தேக்கத்தை எதிர்கொண்டனர். தமிழ் மாணவர்கள் அரசு வேலைவாய்ப்பு பாதைகள் குறுகுவதைக் கண்டனர். சட்ட தீர்வு மெதுவாகவும், கணிக்க முடியாததாகவும் மாறியது. ஒரு தமிழ் அரசு ஊழியர் பின்னர் நினைவு கூர்ந்தார்: 'ஒரே இரவில், நாங்கள் அரசின் அதிகாரிகளாக இருந்து அதில் அந்நியர்களாக மாறினோம். சட்டம் எங்களை வெளியேற்றவில்லை - ஆனால் அது எங்களைக் கடந்து பேசியது.'

"

**தமிழ் பேசும் குடிமக்களுக்கு, தனிச் சிங்களச் சட்டம் சீர்திருத்தமாகவே உணரப்படவில்லை. அது நம்பிக்கை மீறலாக உணரப்பட்டது. சுதந்திரம் என்பது அரசியலமைப்பு ரீதியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக புதிய அரசு அதன் அனைத்து மக்களுக்கும் சமமாகச் சொந்தமானதாக இருக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இணைந்திருந்தது.**

"

மொழிச் சீர்திருத்தம் ஒருதலைப்பட்சமாக இருக்கும்போது இதுபோன்ற விரிசல்கள் எவ்வாறு அதிகரிக்கின்றன என்பதை ஒப்பீட்டுக் கதைகள் எடுத்துக்காட்டுகின்றன. பாகிஸ்தானில், 1948-இல் உருது மொழியை ஒரே தேசிய மொழியாக அறிவித்து நேரடியாக பிரிவினைக்கும் வங்காளதேசம் உருவாவதற்கும் பங்களித்ததை முன்னர் பார்த்தோம். இதேபோல், பெல்ஜியம் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிளெமிஷ் மொழியின் மொழியியல் சமத்துவத்தை அங்கீகரிக்க மறுத்தது. இது பல தசாப்தங்களாக உறுதியற்ற தன்மையை உருவாக்கியது, இறுதியில் இது சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்தக் கட்டாயப்படுத்தியது. இலங்கையில் தனிச்சிங்களச் சட்டமாக்கல் துரித வேகத்தில் நிகழ்ந்தது. நம்பிக்கை, சமஷ்டி ஆட்சி அல்லது அர்த்தமுள்ள இருமொழிவாதத்தின் வழிமுறைகள் போன்றன நிறுவனமயமாக்கப்படுவதற்கு முன்பே தனிச் சிங்களச் சட்டம் இயற்றப்பட்டது. சட்டம் தெளிவின்மையை தீர்க்கமாக முடித்துவைத்து சிங்களப் பெருந்தேசியவாதத்தை அகங்காரமாக முன்னகர்த்தியது. அதை பெரும்பான்மை ஆட்சியின் தார்மீக முழுமைவாதமாக நியாயப்படுத்தியது. ஆனால் இதற்கு நாடு கொடுத்த விலை மிகப்பெரிது.

சிங்களம் மட்டும் சட்டத்தை பல விலக்கு மொழிக் கொள்கைகளிலிருந்து மிகவும் கூர்மையாக வேறுபடுத்துவது அதன் ஜனநாயக தோற்றமாகும். இது ஒரு சர்வாதிகார ஆட்சியால் திணிக்கப்படவில்லை. இது ஒரு மகத்தான தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து இயற்றப்பட்டது. இது அதற்கு அசாதாரண தார்மீக அதிகாரத்தை வழங்கியது. பண்டாரநாயக்கவும் அவரது ஆதரவாளர்களும் இந்தக் கருத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினர். ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் விவாதத்தின்போது வாதிட்டது போல், 'ஜனநாயகம் ஏதாவது அர்த்தம் கொண்டால், அது பெரும்பான்மையினரின் மொழியில் ஆட்சி செய்வதைக் குறிக்கிறது.' இந்தக் கதையாடல், மொழிக் கொள்கையை நெறிமுறைகளுக்கு அப்பாலும் விவேகத்திற்கு அப்பாலும் உயர்த்தியது. இது ஜனநாயக நம்பகத்தன்மையின் சோதனைக்களமாக மாறியது.

அரசியல் கோட்பாட்டாளர்கள் இந்த ஆபத்தைப் பற்றி நீண்ட காலமாக எச்சரித்துள்ளனர். பெரும்பான்மையினரின் கொடுங்கோன்மை ஜனநாயகம் தோல்வியடையும் போது அல்ல, மாறாக அது முழுமையாக வெற்றிபெறும் போது எழுகிறது என்பதைப் பலர் தொடர்ந்து சொல்லி வந்துள்ளனர். இதற்கு இலங்கை ஒரு சிறந்த உதாரணமாக இருக்கின்றது. தனிச்சிங்களச் சட்டம் ஜனநாயக ஆணையாக வடிவமைக்கப்பட்டவுடன், சிறுபான்மை உரிமைகள் கொள்கைகளை விட தடைகளாக மறுவகைப்படுத்தப்பட்டன. அந்தஸ்தின் சமத்துவம் அல்லது இருமொழி மாற்றத்திற்கான அழைப்புகள் பெரும்பான்மை விருப்பத்திற்கு எதிரான சிறுபான்மைச் சதிகளாக சித்தரிக்கப்பட்டன. நீதியின் மொழி சமரசத்தின் மொழியை மாற்றியமைத்தது.

இந்தியாவில், சுதந்திரத்திற்குப் பிறகு இந்தி தேசிய மொழியாக ஊக்குவிக்கப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டில் நடந்த வெகுஜன போராட்டங்கள் பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆபத்தை வெளிப்படையாக ஒப்புக்கொண்டார், 1963-இல் நாடாளுமன்றத்தில்

‘ஒற்றுமையின் பெயரால் எந்த மொழியையும் விருப்பமில்லாத மக்கள் மீது திணிக்க முடியாது’ என்று கூறினார். ஜனநாயக ஆதிக்கம் கலாசார ஒடுக்குமுறையாக மாறுவதைத் தடுக்க ஆங்கிலம் தக்கவைக்கப்பட்டது. இலங்கை இதற்கு எதிரானதை தேர்வு செய்தது.

பின்னோக்கிப் பார்க்கும் விவாதங்களில் பெரும்பாலும் இரண்டு விடயங்கள் மறக்கப்படுகின்றன. முதலாவது, சிங்களம் மட்டும் தவிர்க்க முடியாததல்ல என்பது. இரண்டாவது இதற்கான மாற்று வழிகள் தீவிரமாக விவாதிக்கப்பட்டு முன்மொழியப்பட்டன. ஆனால் எதையும் கேட்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கவில்லை. குறிப்பாக, சிங்களத்திற்கும் தமிழுக்கும் இடையிலான சமத்துவம் தமிழ்த் தலைவர்களாலும் சில சிங்கள மிதவாதிகளாலும் ஆதரிக்கப்பட்டது. ஆங்கிலத்தை தற்காலிகமாக இணைப்பு மொழியாகத் தக்கவைத்துக்கொண்டு, படிப்படியாக இருமொழிவாதத்தை நிலைநிறுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. பிராந்திய மொழியியல் சுயாட்சி குறித்து 1940-களின் முற்பகுதியிலேயே முன்மொழியப்பட்டது.

இந்த விருப்பங்கள் அவை செயற்பட முடியாதவை என்பதால் அல்ல, மாறாக அவை தார்மீக அக்கறை இல்லாததால் நிராகரிக்கப்பட்டன. பெரும்பான்மை சீர்திருத்தம் உடனடியான, தெளிவான, குறியீட்டு வெற்றியை உறுதியளித்தது. பன்மைத்துவ சீர்திருத்தத்திற்கு பொறுமை, பேச்சுவார்த்தை, கட்டுப்பாடு என்பன தேவைப்பட்டது. இந்தச் சிக்கலை உலகின் பல நாடுகள் எதிர்கொண்டுள்ளன. இலங்கை சமரசத்திற்கு தயாராகவோ, நேரம் செலவழிக்கவோ தயாராக இருக்கவில்லை. இலங்கைக்கு எதிர்மாறான ஓர் உதாரணமாக கனடா திகழ்கிறது. கனடாவில், சமரசம் உயிர்வாழ்வாக மாறியது. வேறுபாடு பன்முகத்தன்மையில் இல்லை, ஆனால் அரசியல் கற்பனையில் இருந்தது. சிங்கள மொழி புனிதப்படுத்தப்பட்டவுடன் - தொடர்பு ஊடகமாக இல்லாமல் நாகரிக மரபுரிமையாக - சமரசம் ஒழுக்க ரீதியாக படிக்க முடியாததாக மாறியது. சீர்திருத்தம் ஒரு கோட்பாடாக கடினப்படுத்தப்பட்டது.

தனிச் சிங்களச் சட்டத்தின் மிகவும் நீடித்த விளைவுகளுள் ஒன்று, அது நிறுவிய முன்னுதாரணமாகும். ஜனநாயக சட்டபூர்வமான தன்மை கட்டமைப்பு ரீதியான விலக்குடன் இணைந்து செயற்பட முடியும் என்பதை இது காட்டியது. இந்த முன்னுதாரணமானது மொழிக் கொள்கைக்கு அப்பாற்பட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். குடியுரிமை எவ்வாறு புரிந்து கொள்ளப்பட்டது, அரசியலமைப்பு மாற்றம் எவ்வாறு அணுகப்பட்டது, கருத்து வேறுபாடு எவ்வாறு நடத்தப்பட்டது என்பதை இது வடிவமைத்தது. அதிகாரம் தார்மீகமயமாக்கப்பட்ட, சமத்துவமின்மை வர லாற்று திருத்தமாக நியாயப்படுத்தப்பட்ட ஒரு ஆட்சிப் பாணியை இது இயல்பாக்கியது.

> ***“ தனிச் சிங்களம் என்பது வெறுமனே ஒரு மோசமான சட்டமோ குறைபாடுள்ள சீர்திருத்தமோ அல்ல. இது காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசு உருவாக்கத்தின் ஓர் அடித்தளச் செயலாகும். பெரும்பான்மையினரின் குறைகள், பன்மைத்துவ நீதியை மீறக்கூடும் என்பதை இது குடிமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் கற்பித்தது. ”***

இந்த அர்த்தத்தில், தனிச் சிங்களம் என்பது வெறுமனே ஒரு மோசமான சட்டமோ குறைபாடுள்ள சீர்திருத்தமோ அல்ல. இது காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசு உருவாக்கத்தின் ஓர் அடித்தளச் செயலாகும். பெரும்பான்மையினரின் குறைகள், பன்மைத்துவ நீதியை மீறக்கூடும் என்பதை இது குடிமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் கற்பித்தது. தத்துவஞானி ஏசாயா பெர்லின் எச்சரித்தபடி, ‘ஓநாய்களுக்கான சுதந்திரம் பெரும்பாலும் ஆடுகளுக்கு மரணத்தைக் குறிக்கிறது.’ இலங்கையில், பெரும்பான்மையினருக்கான மொழியியல் சுதந்திரம் என்பது சிறுபான்மையினருக்கு பாதுகாப்பின்மையைக் குறிக்கிறது. இது நீதி பின்பற்றப்பட்டதால் நிகழவில்லை. ஆனால் அது பன்மைத்துவம் இல்லாமல் பின்பற்றப்பட்டதால் நிகழ்ந்தது. தனிச் சிங்களச் சட்டம் சீர்திருத்தமா, சிதைவா அல்லது ஜனநாயகப் புரட்சியா என்பது பற்றிய விவாதம் வெறும் கல்வி சார்ந்தது அல்ல. இலங்கை பொறுப்புணர்வை எவ்வாறு புரிந்துகொள்கிறது என்பதை இது வடிவமைக்கிறது. படிநிலையை நிறுவனமயமாக்காமல் கண்ணியத்தைப் பாதுகாக்கும் மாற்றுகளில் தனிச்சிங்களச் சட்டம் ஒரு தெரிவாக இருந்தது. இதனால் இது ஜனநாயக ரீதியாகக் கொண்டுவரப்பட்டு, தார்மீக ரீதியாக நியாயப் படுத்தப்பட்டது.

## தேசியமும் அரசின் மொழியியல் கற்பனையும்:

தேசியம் பற்றிய கேள்விக்கு ஒருபோதும் ஒரு முறை மட்டுமே பதிலளிக்கப்படுவதில்லை. அரசியலமைப்புகள், கொள்கைகள், சின்னங்கள், பாடசாலைப் பாடத்திட்டங்கள், நிர்வாகப் பழக்கவழக்கங்கள், அரசுடனான அன்றாட தொடர்புகள் மூலம் இது மீண்டும் மீண்டும் பதிலளிக்கப்படுகிறது. மொழி இந்தச் செயற்பாட்டில் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது, ஏனெனில் அது தேசத்தை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. ஒரு நாடு ஒரு மொழியைத் தேர்ந்தெடுக்கும் போது, அது அதன் மக்களைப் பார்க்கும் வழியையும் தன்னைப் பற்றிக் கூறும் வழியையும் தேர்வு செய்கிறது. இலங்கையில், 1956-ஆம் ஆண்டின் தனிச் சிங்களச் சட்டம், மொழியின் இந்த செயற்றிறன் சக்தி மிகவும் தீர்க்கமாக படிகமாக்கப்பட்ட தருணமாகும். இந்தச் சட்டம் சிங்களத்தை அதிகாரபூர்வ மொழியாக மட்டும் குறிப்பிடவில்லை. கற்பனை, தார்மீக அதிகாரம், நிறுவன பிரதிபலிப்பு ஆகியவற்றில் தேசத்தையே சிங்களமாக மறுவடிவமைத்தது. சட்ட சீர்திருத்தங்கள் அதன் விளிம்புகளை மென்மையாக்க முயற்சித்த நீண்ட காலத்திற்குப் பிறகு, இந்த மொழியியல் கற்பனை குறிப்பிடத்தக்க வகையில் மீள்தன்மை கொண்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளதோடு அரசியல் வாழ்க்கையையும் வடிவமைத்துள்ளது. இதைப் புரிந்துகொள்ள, மொழி எவ்வாறு ஒரு தேசத்தை உருவாக்கும் சக்தியாக செயற்படுகிறது, அது எவ்வாறு சொந்தமாக இருப்பதற்கான எல்லைகளை உருவாக்குகிறது என்பதை நோக்க வேண்டும்.

அரசியல் சமூகங்கள் எல்லைகள் வரையப்படுவதாலோ அரசாங்கங்கள் உருவாக்கப்படுவதாலோ மட்டும் இருப்பதில்லை. குடிமக்கள் தங்களை ஒரு பகிரப்பட்ட கூட்டுறவின் ஒரு பகுதியாகக்

கற்பனை செய்ய வருவதால் அவை உள்ளன. நாடுகள் 'கற்பனை செய்யப்பட்ட சமூகங்கள்' என்ற பெனடிக்ட் ஆண்டர்சனின் கருத்து இங்கே கவனிப்புக்குகந்தது. ஆண்டர்சனின் சூத்திரத்தில், மொழி என்பது இந்த கற்பனையை நீடித்து நிலைக்கச் செய்யும் ஊடகமாகும். 1956-க்கு முன்பு, இலங்கையின் தேசிய கற்பனை நிலையாக இல்லை. ஆங்கிலம் நாட்டில் ஆதிக்கம் செலுத்தியது, ஆனால் அது ஒரு தேசிய மொழியாக உணர்ச்சி அதிர்வுகளைக் கொண்டிருக்கவில்லை. இதற்கிடையில், சிங்களமும் தமிழும் நீண்ட வரலாறுகளுடன் இணையான கலாசார உலகங்களாக இருந்தன. ஆனால் அவை அரசு அதிகாரத்தில் சமமாகப் பொறிக்கப்படவில்லை. நாடு இன்னும் மொழியியல் ரீதியாக ஒற்றை சொற்களில் கற்பனை செய்யப்படவில்லை.

தனிச் சிங்களச் சட்டம் இந்த நிச்சயமற்ற தன்மையைத் தீர்த்தது. சிங்களம் ஆட்சி மொழியாக மட்டுமல்லாமல், நாடு தன்னைத்தானே விவரித்துக் கொள்ளும் மொழியாகவும் மாறியது. நாடாளுமன்ற விவாதம், அதிகாரபூர்வ ஆவணங்கள், தேசிய சடங்குகள், அரச அடையாளங்கள் ஆகியவை சிங்கள மொழியியல் விதிமுறைகளைப் பிரதிபலித்தன. நாடு இப்போது மொழியியல் ரீதியாக ஒரே குரலில் படிக்கக்கூடியதாக இருந்தது. இந்த மாற்றம் வேறு இடங்களில் காணப்படும் வடிவங்களைப் பிரதிபலிக்கிறது. துருக்கியில், முஸ்தபா கெமால் அதாதுர்க்கின் மொழிச் சீர்திருத்தங்கள் - குறிப்பாக இலத்தீன் எழுத்துகளை ஏற்றுக்கொள்வது, துருக்கிய மொழியை சுத்திகரிப்பது - ஒரு நவீன, ஒற்றையாட்சியுடைய துருக்கிய தேசத்தை கற்பனை செய்வதற்கு மையமாக இருந்தன. மொழி சீர்திருத்தம் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்குத் துணைபுரியவில்லை, அது அடித்தளமாக இருந்தது. குர்திஷ் போன்ற சிறுபான்மை மொழிகள் ஒற்றை தேசிய கற்பனையை சீர்குலைத்ததால் துல்லியமாக ஓரங்கட்டப்பட்டன. இலங்கையின் மொழியியல் திருப்பம் இதேபோன்ற தர்க்கத்தைப் பின்பற்றியது, இருப்பினும் துருக்கியை சர்வாதிகார எந்திரம் இல்லாமல் ஜனநாயக வழியில் அதைச் சாதித்தது. இருப்பினும், இதன் விளைவு ஒப்பிடத்தக்கது. ஒரு மொழியியல் அடையாளத்தைச் சுற்றி தேசிய கற்பனையின் சுருக்கம் இரு நாடுகளிலும் சாத்தியமானது.

சிங்கள மொழிக்கு அதன் அசாதாரண குறியீட்டு சக்தியை வழங்கியது வெறும் மக்கள்தொகை மட்டுமல்ல, நம்பகத்தன்மையுமே. சிங்களம் தீவின் உண்மையான நாகரிகத்தின் மொழியாக சித்தரிக்கப்பட்டது, புத்தமதம், அரசாட்சி, புனிதம் என்பன ஒன்றோடொன்று நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. இந்த விவரிப்பு சிங்களத்திற்கு அதன் தொடர்பு செயற்பாட்டிற்கு அப்பாலான தார்மீக ஆழத்தை அளித்தது. நிறுவனமயமாக்கப்பட்டவுடன், இந்த விவரிப்பு ஒரு தார்மீக படிநிலையை உருவாக்கியது. சிங்கள மொழி பேசுபவர்கள் நாட்டின் இயற்கையான வாரிசுகளாக கற்பனை செய்யப்பட்டனர். தமிழ் பேசுபவர்கள் வந்தேறிகளாக நிலைநிறுத்தப்பட்டனர். இந்த படிநிலை அரிதாகவே வெளிப்படையாகக் கூறப்பட்டது. ஆனால் அது சக்திவாய்ந்த முறையில் மறைமுகமாக இருந்தது. 1950-களின் பிற்பகுதியில் ஒரு சிங்கள தேசியவாத அறிவுஜீவி எழுதியது போல், 'ஒரு நாடு அதன் சொந்தக் குரலில் பேச வேண்டும். இலங்கையைப் பொறுத்தவரை, அந்தக் குரல் சிங்களமாக மட்டுமே இருக்க முடியும்.' இதன் உட்பொருள் தெளிவாக இருந்தது. மற்ற குரல்கள் மதிக்கப்பட்டாலும் கூட, அவை இரண்டாம் நிலையையே உடையன.

இந்த நிலைப்பாட்டுடன் ஒப்பிடக்கூடிய படிநிலைகளை இஸ்ரேலில் காணலாம், அங்கு யூத இறையாண்மையைக் குறிக்க ஹீப்ரு ஒரு தேசிய மொழியாக மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டது. அரபு பின்னர் முறையாக அங்கீகரிக்கப்பட்டாலும், ஹீப்ரு தேசிய நம்பகத்தன்மையின் மொழியாக தன் முதன்மை இடத்தைத் தக்கவைத்துக்கொண்டது. இஸ்ரேலின் பலஸ்தீன குடிமக்கள், சட்டபூர்வமாக சேர்க்கப்பட்டிருந்தாலும், பெரும்பாலும் அரசு அவர்களுடன் அவர்களுக்கு விளங்கும் மொழியில் பேசுவதில்லை. இலங்கையின் அனுபவம் இந்த இயக்கவியலுக்கு இணையானது. தமிழ் மொழிக்கு அங்கீகாரம் வந்தபோது, இணை அடித்தளமாக இல்லாமல் சலுகையாக வடிவமைக்கப்பட்டது. அரசின் மொழியியல் கற்பனை சிங்களத்தை மையமாகக் கொண்டிருந்தது.

இலங்கையின் மொழி அரசியலுக்கு அடிப்படையாக ஒரு முக்கியமான கருத்தியல் சறுக்கல் உள்ளது. தேசியம் (ஒரு கலாசார-வரலாற்று சமூகம்) அரசு அந்தஸ்துடன் (ஒரு அரசியல்-சட்ட ஒழுங்கு) இணைத்தல் இங்கு நிகழ்ந்தது. சிங்களம் சிங்கள தேசத்தின் மொழியாக மட்டுமல்லாமல், இலங்கை அரசின் மொழியாகவும், ஒட்டுமொத்த இலங்கை நாட்டின் மொழியாகவும் கருதப்பட்டது. இந்தக் கலவை மாற்று கற்பனைகளுக்கான வாய்ப்பை முன்கூட்டியே மூடியது. சமத்துவம் அல்லது சமஷ்டிக்காக வாதிட்ட தமிழ்த்



தலைவர்கள் வெறுமனே கொள்கையை எதிர்க்கவில்லை. அவர்கள் தேசம் என்ன என்பது பற்றிய ஆதிக்க கற்பனை யை சவால் செய்தனர். கலாசார ஒருமைப்பாட்டைக் கருதும் ஒரு கட்டமைப்பிற்குள் அவர்களின் கூற்றுகள் படிக்க முடியாததாகத் தோன்றின.

இந்த இயக்கவியல் பல காலனித்துவத்திற்குப் பிந்தைய சூழல்களில் மீண்டும் மீண்டும் நிகழ்ந்துள்ளது. இலங்கையில், தமிழ் மொழியின் சமத்துவத்தை நிராகரிப்பது பாகிஸ்தான் வங்காள மொழி சமத்துவத்தை நிராகரித்த அதே தர்க்கத்தைப் பின்பற்றியது. இரண்டு சந்தர்ப்பங்களிலும், ஒற்றுமைக்கு ஒற்றை மொழியியல் சின்னம் தேவை என்று அரச உயரடுக்கினர் வலியுறுத்தினர். இரண்டு சந்தர்ப்பங்களிலும், கருத்து வேறுபாடு விசுவாசமின்மையாக வடிவமைக்கப்பட்டது. ‘உருது, உருது மட்டுமே’ பாகிஸ்தானின் தேசிய மொழியாக இருக்க முடியும் என்ற முகமது அலி ஜின்னாவின் அறிவிப்பு இந்த சறுக்கலை எடுத்துக்காட்டுகிறது. வங்காள மொழி பேசுபவர்கள் அரசை நிராகரிக்கவில்லை. அதன் மூலம் திணிக்கப்பட்ட ஒரு தனித்துவமான கலாசார கற்பனையை அவர்கள் நிராகரித்தனர். இலங்கையின் தமிழ்த் தலைவர்கள் இதேபோன்ற வாதத்தை முன்வைத்தனர் - ஆனால் வங்காளம் போன்ற செல்வாக்கு இவர்களுக்கு இருக்கவில்லை.

தேசியம் சட்டத்தால் மட்டும் நிலைநிறுத்தப்படவில்லை. அது தாக்கத்தால் நிலைநிறுத்தப்படுகிறது. 1956-க்குப் பிறகு, சிங்கள மொழி பேசுபவர்கள் அதிகளவில் அரசை பழக்கமான மொழியியல் வடிவத்தில் சந்தித்தனர். பொது அலுவலகங்கள், அதிகாரப்பூர்வ விழாக்கள், தேசிய ஊடகங்கள் அவர்களின் அன்றாட பேச்சைப் பிரதிபலித்தன. இது ஒரு உரிமை உணர்வையும் ஆறுதலையும் உருவாக்கியது. அரசு தமக்கு அருகாமையில் இருப்பதாக அவர்கள் உணர்ந்தார்கள்.

தமிழ் பேசுபவர்களுக்கு, இதற்கு நேர்மாறானது நிகழ்ந்தது. சட்ட உரிமைகள் இருந்த இடங்களிலும் கூட, மொழியியல் தூரம் உணர்ச்சி ரீதியான அந்நியப்படுத்தலை உருவாக்கியது. அதிகாரத்துவத்துடனான தொடர்புகளுக்கு பெரும்பாலும் மொழி பெயர்ப்பு, பொறுமை அல்லது சுய-தணிக்கை தேவைப்பட்டது. காலப்போக்கில், இதை ஒரு தமிழ் கல்வியாளர் ‘நெருக்கம் இல்லாத குடியுரிமை’ என்று விவரித்தார். இந்த முறை வேறு இடங்களில் காணக்கூடியது. ஸ்பெயினில், பிராங்கோ காலத்தில் கட்டலான் ஒடுக்கப்பட்டது, கட்டலோனியாவில் ஸ்பானிஷ் அரசு மீதான உணர்ச்சி ரீதியான தொடர்பை இது பலவீனப்படுத்தியது. ஜனநாயகமயமாக்கலுக்குப் பிறகும், மொழி அரசியல் அடையாளத்தின் முக்கிய அச்சாகவே இருந்தது. இது சட்டபூர்வ விலக்கை விட உணர்ச்சி ரீதியான அந்நியப்படுத்தல் நீடித்தது என்பதை நிரூபித்தது. இலங்கையில், இந்த அந்நியப்படுத்தல் அரசியல் ரீதியாக வெளிப்பட பல தசாப்தங்கள் ஆனது, ஆனால் அதன் வேர்கள் அதிகாரத்துவத்துடனான அன்றாட மொழியியல் சந்திப்புகளில் உள்ளன.

“ தமிழ் பேசுபவர்களுக்கு, இதற்கு நேர்மாறானது நிகழ்ந்தது. சட்ட உரிமைகள் இருந்த இடங்களிலும் கூட, மொழியியல் தூரம் உணர்ச்சி ரீதியான அந்நியப்படுத்தலை உருவாக்கியது. அதிகாரத்துவத்துடனான தொடர்புகளுக்கு பெரும்பாலும் மொழி பெயர்ப்பு, பொறுமை அல்லது சுய-தணிக்கை தேவைப்பட்டது. ”

இலங்கை அனுபவத்தின் மிக முக்கியமான பாடங்களில் ஒன்று, மொழியியல் கற்பனை சட்டத்தை விட நீண்டது என்பதாகும். பிந்தைய தசாப்தங்களில் தமிழுக்கான அரசியலமைப்பு அங்கீகாரம் கிடைத்த போதும், அரசு தன்னை எப்படி கற்பனை செய்துகொண்டதோ அவ்வாறே தொடர்ந்தது. அரசியலமைப்பு அங்கீகாரம் எதையும் தானாகவே மாற்றவில்லை. நிர்வாக நடைமுறை, ஆட்சேர்ப்பு முறைகள், நிறுவன கலாசாரம் ஆகியவை சிங்களத்திற்கு தொடர்ந்து சலுகை அளித்தன. இது இலங்கைக்கு மட்டும் உரியதல்ல. தென்னாபிரிக்காவில், பதினொரு அதிகாரபூர்வ மொழிகளின் அங்கீகாரம் ஆங்கிலத்தை அதிகாரத்தின் ஆதிக்க மொழியாக இடம்பெயரச் செய்யவில்லை. இருப்பினும் தென்னாபிரிக்கா ஒரு முக்கியமான விஷயத்தில் வேறுபடுகிறது. பன்மொழி என்பதை தயக்கத்துடன் சமரசம் செய்வதற்குப் பதிலாக தார்மீக விருப்பமாக வடிவமைத்தது. மொழி சமத்துவமின்மையை ஒரு பிரச்சினையாக ஒப்புக் கொண்டது. இலங்கையின் சிரமம் 1956-இல் உருவாக்கப்பட்ட தார்மீக மூடலில் உள்ளது. சிங்கள மொழியியல் முதன்மையானது வளர்ந்து வரும் பன்மைத்துவத்தில் ஒரு கட்டமாக வடிவமைக்கப்படவில்லை, மாறாக வரலாற்று நிறைவேற்றமாக வடிவமைக்கப்பட்டது. அந்த வழியில் வடிவமைக்கப்பட்டவுடன், அதைத் திருத்துவது அரசியல் ரீதியாக இயலாததாக மாறியது.

இந்த வரலாற்றிலிருந்து பெறக்கூடிய மிக முக்கியமான பாடம், மொழியியல் தேசியம் என்பது விதி அல்ல. அது அரசியல் இலாபங்களாலும் தார்மீக கற்பனையாலும் வடிவமைக்கப்பட்ட ஒரு தெரிவாகும். சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் மொழியியல் பன்மைத்துவம் தேசியத்தை அரிப்பதற்குப் பதிலாக அதன் கட்டமைப்பாக இருக்க முடியும் என்பதை நிரூபிக்கின்றன. சுவிட்சர்லாந்தின் பன்மொழி வாதம் தற்செயலானது அல்ல. அது எந்தவொரு தனிக்குழுவின் ஆதிக்கத்தையும் தடுக்க, வேண்டுமென்றே நிறுவனமயமாக்கப்பட்டது. இங்கே கவனிக்க வேண்டியது யாதெனில், இலங்கைமாற்றுகள் கிடைக்காததால் அல்ல, மாறாக அவை பெரும்பான்மை உறுதியால் தார்மீக ரீதியாக மறைக்கப்பட்டதால், 1956-இல் வேறுபட்ட தேர்வைச் செய்தது. காலனித்துவத்திற்குப் பிந்தைய திறந்த தன்மை மிகவும் அவசியமான தருணத்தில் சிங்களம் மட்டும் சட்டம் கற்பனைக்கான இடத்தை மூடியது.

1956-இல் உருவாக்கப்பட்ட மொழியியல் கற்பனை இலங்கையின் அரசியல் பிரதிபலிப்பை தொடர்ந்து வடிவமைத்து வருகிறது. நடைமுறை தீர்வுகள் இருந்தாலும் கூட மொழிச் சீர்திருத்தம் ஏன் சர்ச்சைக்குரியதாகவே உள்ளது என்பதை இது விளக்குகிறது. குறியீட்டுக்கு அப்பால் செல்ல மொழியியல் சமத்துவத்தால் ஏன் இயலாமலுள்ளது என்பதை இது விளக்குகிறது. வெளிப்படையான தமிழ் மொழிக்கு விலக்கு இல்லாவிட்டாலும் கூட, தமிழர்கள் மொழியியல் ரீதியாக ஏன்



சமத்துவமற்றதாக உணர்கிறார்கள் என்பதை இது விளக்குகிறது. நாடுகள் வேறுபாட்டை நீக்குவதால் அல்ல, மாறாக அதனுடன் வாழ்வதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதால் வெற்றிகரமாக இயங்குகின்றன. இலங்கையின் சோகம் என்னவென்றால், அது ஒருமைப்பாட்டின் மூலம் ஒற்றுமையை கற்பனை செய்து, பின்னர் பல தசாப்தங்களாக விளைவுகளுடன் போராடிக் கொண்டிருக்கிறது. இந்த வரலாற்றைப் புரிந்துகொள்வது என்பது பழியை சுமத்துவது அல்ல. அது இழந்த சாத்தியக்கூறுகளை மீட்டெடுப்பது பற்றியது. தனிச் சிங்களச் சட்டம் வெறுமனே ஒரு சட்டம் அல்ல. நாடு எதுவாகக் கற்பனை செய்யப்பட்டது என்பதற்கான அறிவிப்பாக இது இருந்தது. எழுபது ஆண்டுகளுக்குப் பிறகும், கேள்வி அப்படியே உள்ளது. அந்தக் கற்பனையை குறுக்காமல் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்திற்கு அப்பால் விரிவுபடுத்த முடியுமா?

## அன்றாட அரசில் சொந்தமும் விலக்கும்:

தேசியம் என்பது சின்னங்கள், அரசியலமைப்புகளின் மட்டத்தில் கற்பனை செய்யப்பட்டால், சொந்தமாக உணர்தல் என்பது அன்றாட வாழ்க்கையின் மட்டத்தில் உருவாக்கப்படுகிறது அல்லது மறுக்கப்படுகிறது. குடிமக்கள் முதன்மையாக பிரமாண்டமான அரசியல் தருணங்கள் மூலம் அரசை எதிர்கொள்வதில்லை, மாறாக சாதாரண தொடர்புகள் மூலம் (ஒரு மேசையின் குறுக்கே ஒப்படைக்கப்பட்ட படிவம், ஒரு சுவரில் ஒட்டப்பட்ட அறிவிப்பு, ஒரு தபால் மூலம் வழங்கப்படும் கடிதம்) எதிர்கொள்கிறார்கள். இந்த சாதாரண சந்திப்புகளில்தான் அரசின் அதிகாரம் உறுதியாகத் தெரிகிறது. மொழி இந்த உறுதியான தன்மையை உணர்த்தும் ஊடகமாகும்.

தனிச் சிங்களச் சட்டம் இலங்கையில் இந்த அன்றாட சந்திப்புகளை மெதுவாக, ஒட்டுமொத்தமாக, ஆழமான வழிகளில் மறுகட்டமைத்தது. இது அன்றாட வாழ்வில் நாட்டுக்குரியோரின் ஆட்சி என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றை உருவாக்கியது. அதில் மொழியியல் சரளமானது கண்ணியம், அணுகல் மற்றும் நம்பிக்கையுடன் இணைந்தது. அதே நேரத்தில் மொழியியல் வேறுபாடு தயக்கம், சார்பு, பாதிப்பு ஆகியவற்றை உருவாக்கியது. இந்த ஆட்சி செயற்பட வெளிப்படையான விரோதம் தேவையில்லை. அது அமைதியாகச் செயற்பட்டது. அதிகாரத்துவத்தின் மூலம் வழக்கப்படுத்தப்பட்டது. பழக்கத்தின் மூலம் இயல்பாக்கப்பட்டது. ஜனநாயக சட்டபூர்வமான தன்மை மூலம் நியாயப்படுத்தப்பட்டது.

மானுடவியலாளர் அகில் குப்தா, அரசு ‘அதன் சாதாரண வெளிப்பாடுகளில்’ மிகவும் சக்திவாய்ந்த முறையில் அனுபவிக்கப்படுகிறது என்று வாதிட்டார். 1956-க்குப் பிறகு இலங்கையில், இந்த வெளிப்பாடுகள் சிங்களத்தில் அதிகளவில் பேசப்பட்டன. அரசாங்க அலுவலகங்கள், காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் மொழியியல் ரீதியாக சிங்கள இடங்களாக மாறின. தமிழ் பேசுபவர்கள் பெரும்பான்மையாக இருந்த பகுதிகளில் கூட இது நடந்தது.

1960-களில் நில அனுமதி கோரிய கிழக்கு மாகாணத்தில் ஒரு தமிழ் விவசாயியின் அனுபவத்தைப் பார்க்கலாம். விண்ணப்பப் படிவம் சிங்களத்தில் இருந்தது. எழுதுவினைஞர் சிங்களத்தில் பேசினார். அதிகாரபூர்வ அறிவிப்புகள் சிங்களத்தில் இருந்தன. மொழிபெயர்ப்பு கிடைப்பதென்பது, நிறுவன உத்தரவாதத்தை விட தனிப்பட்ட நல்லெண்ணத்தைச் சார்ந்ததாகவே இருந்தது. ஒவ்வொரு நிலையிலும் மத்தியஸ்தம் தேவைப்பட்டது. இருமொழி தெரிந்த அண்டை வீட்டார், அனுதாபமுள்ள அதிகாரி அல்லது ஊதியம் பெறும் இடைத்தரகர் என ஏதாவதொன்றை நம்பியிருக்க நேர்ந்தது. விவசாயியின் உரிமைகள் கோட்பாட்டில் அப்படியே இருந்தன. ஆனால் நடைமுறையில் பலவீனமாக இருந்தன. இத்தகைய அனுபவங்கள் விதிவிலக்கானவை அல்ல.

அதிகாரத்துவம் வழக்கத்தில் செழித்து வளர்கிறது. சிங்களம் நிர்வாகத்தின் இயல்பு மொழியாக மாறியவுடன், சமத்துவமின்மை தானாகவே மீண்டும் உருவாக்கப்பட்டது. ஆட்சேர்ப்புத் தேர்வுகள் சிங்கள புலமையை ஆதரித்தன. பயிற்சி கையேடுகள் சிங்களத்தில் எழுதப்பட்டன. அரச அலுவலகங்களில் உள் குறிப்புகள் சிங்களத்தில் வினியோகிக்கப்பட்டன. பதவி உயர்வு, நேர்காணல்கள் என்பவற்றுக்கு சிங்களம் சரளமாக தெரிந்திருக்க வேண்டும் என்று கருதப்பட்டது. முக்கியமாக, இந்த நடைமுறைகள் அரிதாகவே பாரபட்சமானதாக வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை நடைமுறை, திறமையானவை அல்லது இயற்கையானவை என்று விவரிக்கப்பட்டன. மொழிப் புலமை வரலாற்று ரீதியாக ஏற்றப்பட்ட அளவுகோலாகக் கருதப்படுவதற்குப் பதிலாக ஒரு நடுநிலைத் தேவையாகக் கருதப்பட்டது. இந்த இயல்பாக்கம் வேறு இடங்களில் காணப்படும் வடிவங்களைப் பிரதிபலிக்கிறது. பெல்ஜியத்தில், முறையான சமத்துவம் இருந்தபோதிலும் நிர்வாகத்தில் பிரெஞ்சு ஆதிக்கம், பிளெமிஷ் மொழி பேசுபவர்களை நீண்ட காலமாக ஓரங்கட்டியது. டச்சுக்காரர்கள் சமத்துவத்தைப் பெறுவதற்கு பல தசாப்தங்களாக தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்து இறுதியில் அதைச் சாத்தியமாக்க அரசியலமைப்பு சீர்திருத்தம் தேவைப்பட்டது. இங்கு கவனிப்புக்குரிய முக்கிய வேறுபாடு அங்கீகாரம் பெறுதலாகும். பெல்ஜியத்தில் மொழியியல் சமத்துவமின்மை இறுதியில் கட்டமைப்பு அநீதியாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

இலங்கையில், இதற்கு நேர்மாறாக, மொழியியல் சமத்துவமின்மை அரிதாகவே அவ்வாறு பெயரிடப்பட்டது. சீர்திருத்தத்தின் தவிர்க்க முடியாத விளைவாக இது நியாயப்படுத்தப்பட்டது. தமிழ் குடிமக்கள் தகவமைத்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும், தகவமைப்பு ஒரு போதும் நடுநிலையானது அல்ல. இது ஏற்கனவே ஒடுக்கப்பட்டோர் மீது சரிசெய்தலின் சுமையை மாற்றுகிறது. ஓய்வுபெற்ற தமிழ் அரசு ஊழியர் ஒருவர் இந்த மாற்றத்தை சுருக்கமாக விவரித்தார்: 'நாங்கள் ஒரே இரவில் எங்கள் வேலைகளை இழக்கவில்லை. எங்கள் எதிர்காலத்தை மெதுமெதுவாக இழந்தோம்.'


**“ தனிச்சிங்களச் சட்டத்திற்குப் பிறகு, பொலிஸ் திணைக்களம் சிங்களத்தில் அதிகளவில் இயங்குகிறது. தமிழ் பேசும் பகுதிகளில் கூட அதுவே நடக்கிறது. தமிழ் குடிமக்கள் குற்றங்களைப் புகாரளிப்பது அல்லது குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிப்பது பெரும்பாலும் அவர்கள் கட்டளையிடாத மொழியில் நிகழ்கிறது. ”**


தனிச்சிங்களச் சட்டத்திற்குப் பிறகு, பொலிஸ் திணைக்களம் சிங்களத்தில் அதிகளவில் இயங்குகிறது. தமிழ் பேசும் பகுதிகளில் கூட அதுவே நடக்கிறது. தமிழ் குடிமக்கள் குற்றங்களைப் புகாரளிப்பது அல்லது குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிப்பது பெரும்பாலும் அவர்கள் கட்டளையிடாத மொழியில் நிகழ்கிறது. அறிக்கைகள் சிங்களத்தில் பதிவு செய்யப்பட்டன. ஒப்புதல் வாக்குமூலங்கள் மொழிபெயர்க்கப்பட்டன அல்லது தவறாக மொழிபெயர்க்கப்பட்டன. சட்டரீதியான பாதிப்பு அதிகரித்தது. குறிப்பாக ஏழைகளுக்கு இது பாரிய நெருக்கடியானது.

இந்த இயக்கவியல் வேறு நாடுகளிலும் ஒற்றுமைகளைக் கொண்டுள்ளது. அமெரிக்காவில், மொழியியல் சிறுபான்மையினர் - குறிப்பாக ஸ்பானிஷ் மொழி பேசுபவர்கள் - முறையான சிவில் உரிமைகள் பாதுகாப்புகள் இருந்தபோதிலும், மொழித் தடைகள் காரணமாக காவல் துறையில் விகிதாசாரமற்ற பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். சட்டத்துறைசார் நிறுவனங்களுடன் சரளமாக தொடர்பு கொள்ள இயலாமை, தவறான புரிதல், குற்ற அதிகரிப்பு, தவறான தடுப்புக்காவல் ஆகியவற்றின் வாய்ப்பை அதிகரிக்கிறது என்று ஆய்வுகள் காட்டுகின்றன. இலங்கையில், மொழி வேறுபாடு இன சந்தேகத்துடன் குறுக்கிடுவதால் ஆபத்துகள் இன்னும் அதிகமாக இருந்தன. வகுப்புவாத பதற்றங்கள் வளர்ந்ததால், மொழியியல் வேறுபாடு குடிமக்களை அரசியல் ரீதியாக சந்தேகத்திற்குரியவர்களாகக் குறித்தது.

மொழி எவ்வாறு அதிகாரத்தை உருவாக்குகிறது என்பதைச் சட்ட அமைப்பு மிகத் தெளிவாக விளக்குகிறது. நீதிமன்றங்கள் வெறும் சர்ச்சைகளைத் தீர்ப்பதில்லை. அவை அரசின் அதிகாரத்தை அடையாளப்படுத்துகின்றன. குடிமக்கள் சட்ட நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ள முடியாதபோது, நீதியின் சட்டபூர்வமான தன்மை அரிக்கப்படுகிறது. 1956-க்குப் பிறகு, நீதிமன்றங்களில் சிங்களத்தைப் பயன்படுத்துவது அதிகரித்தமையானது தமிழ் வழக்குரைஞர்களிடையே பரவலான அந்நியப்படுத்தலை உருவாக்கியது. மொழிபெயர்ப்பு தாமதங்கள் பொதுவானவையாக இருந்தன. சட்ட நுணுக்கம் இழக்கப்பட்டது. மொழிபெயர்ப்பாளர்களைச் சார்ந்திருப்பது இரகசியத்தன்மையையும் நீதிமன்றம் என்ற நிறுவனத்தையும் சமரசம் செய்தது. 1970-களில் தனிப்பட்ட முறையில் இது குறித்து எழுதிய ஒரு தமிழ் நீதிபதி, இவ்வாறு குறிப்பிட்டார்: 'நீதி தாமதப்படுத்தப்படுவது அநீதி, ஆனால் மொழிபெயர்க்கப்படாத நீதி மோசமானது - அது ஒப்புக்கொள்ளாமல் மறுக்கப்படும் நீதி.'

இந்தியாவில், நீதிமன்றங்களில் இந்தியைப் பயன்படுத்துவது இந்தி பேசாத மாநிலங்களிலிருந்து தொடர்ச்சியான எதிர்ப்பை உருவாக்கியுள்ளது, ஏனெனில் மொழியியல் விலக்கு நீதித்துறையின் மீதான நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. தென்னாபிரிக்காவில், நிறவெறிக்குப் பிந்தைய சீர்திருத்தங்கள் மொழி அணுகலை சட்ட சமத்துவத்தின் ஒரு அங்கமாக வெளிப்படையாக அங்கீகரித்தன. அவை நிறவெறி சகாப்த அநீதி மொழியியல் ஆதிக்கத்தின் மூலம் நீடித்தது என்பதை ஒப்புக்கொள்கின்றன. நீதியியல் மொழியியல் சமத்துவத்தை முன்னுரிமைப்படுத்த இலங்கை தவறியது. சட்டம் இனி நடுநிலையானது அல்ல என்ற கருத்து வளர பங்களித்தது.

பாடசாலைகள் அன்றாட அரசின் மிகவும் சக்திவாய்ந்த கருவிகளில் ஒன்றாகும். அவை பாடங்களை மட்டுமல்ல, சமூக எதிர்பார்ப்புகளையும் கற்பிக்கின்றன. எனவே கல்வியில் மொழிக் கொள்கை எதிர்கால குடிமக்கள் அதிகாரத்துடனான தங்கள் உறவை எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள் என்பதை வடிவமைக்கிறது. 1956-க்குப் பிறகு இலங்கையில் ஒருமொழிக் கல்வியின் விரிவாக்கம் இணையான



மொழியியல் உலகங்களை வேரூன்றச் செய்தது. சிங்கள-நடுத்தரப் பாடசாலைகள் அரசு வேலைவாய்ப்புக்கான வழிகளுடன் அதிகளவில் இணைந்தன. தமிழ்-நடுத்தரப் பாடசாலைகள், குறிப்பாக உயரடுக்கு நகர்ப்புற மையங்களுக்கு வெளியே, தங்கள் மாணவர்கள் அரசாங்க வேலைகளைக் பெறுவதில் பின்தங்கியிருப்பதைக் கண்டன.

இந்தப் பிரிவு வேறு நாடுகளில் வெவ்வேறு வடிவங்களை பிரதிபலித்தது. மலேசியாவில், மலாய்-நடுத்தரக் கல்வி அரசு ஆதரவுடன் தொடர்புடையது, அதே நேரத்தில் ஆங்கில-நடுத்தரக் கல்வி அல்லது சீன-நடுத்தரக் கல்வி தனியார் துறை இயக்கத்துடன் தொடர்புடையது. இதன் விளைவாக சமத்துவம் அல்ல, மாறாக அடுக்கு குடியுரிமை கிடைத்தது. இலங்கையில், மொழிக் கொள்கை மாணவர்களுக்கு ஆரம்பத்தில் எந்த அடையாளங்களுக்கு அரசு வெகுமதி அளிக்கிறது என்பதைக் கற்றுக் கொடுத்தது. காலப்போக்கில், இந்தப் பாடம் அபிலாஷைகளையும் விரக்தியையும் அரசியல் நனவையும் வடிவமைத்தது. ஒரு முன்னாள் தமிழ் மாணவர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: 'நாங்கள் அரசு கேட்ட அனைத்தையும் செய்தோம் - கடினமாகப் படித்தோம், விதிகளைப் பின்பற்றினோம் - ஆனால் விதிகள் மொழியை மாற்றிக்கொண்டே இருந்தன.'

சொந்தம் என்பது உரிமைகள், அணுகல் பற்றியது மட்டுமல்ல. அது உணர்ச்சிபூர்வமான அங்கீகாரத்தைப் பற்றியது. குடிமக்கள் தங்கள் சொந்த மொழியில் அரசு உரையாற்றுவதை உணரும்போது, அவர்கள் உறுதிப்பாட்டை அனுபவிக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு செய்யாதபோது, முறையான சேர்க்கை இருக்கும்போது கூட அவர்கள் தூரத்தை அனுபவிக்கிறார்கள். சிங்களம் மட்டும் என்பதற்குப் பிறகு, சிங்களம் பேசும் குடிமக்கள் அரசுடனான இடைவெளி குறைந்திருப்பதை அதிகளவில் உணர்ந்தனர். தமிழ் பேசும் குடிமக்கள் பெரும்பாலும் பார்க்கப்படாததாகவோ, தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதாகவோ அல்லது கண்ணுக்குத் தெரியாததாகவோ இருப்பதாக உணர்ந்தனர். இந்த வேறுபாடு ஆழமாக முக்கியமானது. அரசியல் உளவியலாளர் ரோஜர்ஸ் புரூபேக்கர், அரசுகள் வற்புறுத்தலின் மூலம் மட்டுமல்ல,'உணர்ச்சி ஒருங்கிணைப்பு' மூலமும்தங்களை நிலைநிறுத்துகின்றன என்று குறிப்பிட்டார். உணர்ச்சிப் பிணைப்புகள் பலவீனமடையும்போது, விசுவாசம் நிபந்தனைக்குட்பட்டதாகிறது.

பெரிய அளவிலான அரசியல் வன்முறை அரிதாகவே திடீரென வெளிப்படுகிறது. அது திரட்டப்பட்ட அன்றாட விலக்கு அனுபவங்களிலிருந்து வளர்கிறது. இலங்கையில், மொழியியல் ஒதுக்கல் உடனடியாக போர்க்குணத்தை உருவாக்கவில்லை. அது ராஜினாமா, இடம்பெயர்வு, எதிர்ப்பு என வளர்ந்து இறுதியில் தீவிரமான நிலைப்பாடுகளை நோக்கி நகரச் செய்தது. மொழி உரிமைகளுக்கான அமைதியான கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டபோது அல்லது அடக்கப்பட்டபோது, நிர்வாக சீர்திருத்தம் நிறைவேறத் தவறியபோது, அரசுடன் அன்றாட சந்திப்புகள் இரண்டாம் தர அந்தஸ்தை வலுப்படுத்தியபோது, மாற்று அரசியல் கற்பனையாளர்கள் நம்பகத்தன்மையைப் பெற்றனர். வட அயர்லாந்தில் இதேபோலவே நடந்தது வீட்டு வசதி, வேலைவாய்ப்பு, பொலிஸ் கெடுபிடிகள் எனப் பலதரப்பட்ட தளங்களில் தொடர்ச்சியாக நிகழ்ந்த அன்றாட பாகுபாடு பல தசாப்தகால மோதலுக்கு வழியமைத்தது. இலங்கையிலும் மொழி இதேபோன்ற பங்களிப்பைச் செய்து மூன்று தசாப்தாகால உள்நாட்டுப் போருக்கு வழிசெய்தது.

## தொடரும் குறிப்புகள்:

இந்தத் தொடர் ஒரு கடினமான ஆனால் தவிர்க்க முடியாத முன்மொழிவால் வடிவமைக்கப்பட்டுள்ளது. நீதியை நோக்கமாகக் கொண்ட மொழிச் சீர்திருத்தங்கள் பன்மைத்துவ நெறிமுறை வரம்புகள், நிறுவன மனத்தாழ்மை, தார்மீக கற்பனை ஆகியன இல்லாமல் பின்பற்றப்படும்போது அநீதியை மீண்டும் உருவாக்க முடியும். தனிச் சிங்களச் சட்டம் வெறும் கொள்கைத் தவறு அல்லது ஒரு துயரமான அத்துமீறல் அல்ல. இது ஒரு நியாயமான குறையை அடிப்ப

டையாகக் கொண்ட ஒரு சீர்திருத்தமாகும், இருப்பினும் கலாசார ரீதியாக பன்மைத் துவ சமூகங்களில் நீதிக்கான ஜனநாயக, பெரும்பான்மை அணுகுமுறைகளின் ஆழ மான வரம்புகளை இது வெளிப்படுத்தியது.

இந்தப் பின்புலத்தில் இத்தொடர் ஒரு முரண்பாட்டை எதிர்கொள்கிறது. கண்ணி யத்தை மீட்டெடுக்கும் நோக்கில் உருவாக் கப்பட்ட ஒரு சீர்திருத்தம் எவ்வாறு தலை முறைகளாக சமமற்ற உறவை இயல் பாக்கும் ஒரு பொறிமுறையாக மாறியது? இந்தக் கேள்விக்கு பதிலளிக்க, கொள்கை பகுப்பாய்விற்கு அப்பால் நீதி, ஜனநாய கம், பழுதுபார்ப்பு பற்றிய ஆழமான விசார ணையை நோக்கி நகர வேண்டும்.

சிங்கள மொழியின் மையத்தில் நீதிக்கான ஒரு கட்டாயக் கோரிக்கை இருந்தது. ஆங் கில ஆதிக்கம் ஒரு நடுநிலையான மரபு அல்ல. அது ஒரு சிறிய உயரடுக்கின் கைகளில் அதிகாரத்தைக் குவித்து, பெரும்பான்மையினரை மொழியியல் ரீதியாக கண்ணுக்குத் தெரியாததாக மாற்றிய ஒரு காலனித்துவ படிநிலை. ஒரு சிங்கள பள்ளி ஆசிரியர் 1955-இல் ஒரு செய்தித்தாளுக்கு எழுதியது போல்: ‘நாங்கள் தேர்தல் நாளில் மட்டுமே குடி மக்கள். மீதமுள்ள நேரத்தில், அரசாங்கம் நாம் அறியாத ஒரு மொழியைப் பேசுகிறது.’

> **“ தனிச் சிங்களச் சட்டம் வெறும் கொள்கைத் தவறு அல்லது ஒரு துயரமான அத்துமீறல் அல்ல. இது ஒரு நியாயமான குறையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சீர்திருத்தமாகும், இருப்பினும் கலாசார ரீதியாக பன்மைத்துவ சமூகங்களில் நீதிக்கான ஜனநாயக, பெரும்பான்மை அணுகுமுறைகளின் ஆழமான வரம்புகளை இது வெளிப்படுத்தியது. ”**

இந்த அவமான உணர்வு உண்மையானது, பரவலானது, தார்மீக ரீதியாக அவசரமானது. இதேபோன்ற குறைகள் காலனித்துவத்துக்குப் பிந்தைய உலகம் முழுவதும் மொழி யுரிமை இயக்கங்களைத் தூண்டின. தான்சானியா, இந்தோனே சியா ஆகியன இதற்குச் சில எடுத்துக்காட்டுகள். ஆனால் இலங்கையின் சீர்திருத்தம் ஒரு முக்கியமான விஷயத்தில் வேறுபட்டது. மொழியைச் சேர்ப்பதற்குப் பதிலாக மாற்று வதன் மூலம் நீதி பின்பற்றப்பட்டது. சிங்களம் அரச மொழி களில் சேரவில்லை. அது அவற்றை இடம்பெயர்த்தது. ஆங் கிலம் அகற்றப்பட்டது, தமிழ் கீழ்ப்படுத்தப்பட்டது. இச் செயல் ஒரு குழுவிற்கு அவசிமான நீதியை வழங்கியது. மற் றொரு குழுவிற்கு கட்டமைப்பு ரீதியாக அநீதி இழைத்தது.

அரசியல் தத்துவஞானி நான்சி ஃப்ரேசர் மறுபகிர்வு நீதிக்கும் அங்கீகார நீதிக்கும் இடையில் வேறுபடுத்தி, நிறுவன சமத் துவம் இல்லாமல் ஒரு குழுவின் நிலையை உயர்த்தும் தீர்வுகள் புதிய அநீதிகளை உருவாக்கும் என்று எச்சரிக் கிறார். தனிச்சிங்களச் சட்டம் இந்தப் பிரச்சினையை எடுத் துக்காட்டுகிறது. எனவே இத்தொடர் சிங்களம் மட்டும் என் பதை நீதி மறுப்பாக அல்ல, மாறாக நெறிமுறை ரீதியாக முழுமையற்ற நீதியாக - பரிகாரத்தின் செலவுகளை யார் ஏற்க வேண்டும் என்று கேட்கத் தவறிய ஒன்றாக வடிவமைக்கிறது.

1956-ஆம் ஆண்டு கற்றுக்கொண்ட மிகவும் சங்கடமான பாடங்களில் ஒன்று, ஜனநாயக சட்டபூர்வமான தன்மையின் ஊடு அநீதியை மறைக்க முடியும் என்பது. சிங்களம் மட்டும் என்பது சட்டத்தால் திணிக்கப்படவில்லை. அது தேர்தல்கள், நாடாளுமன்ற செயல்முறை மூலம் இயற் றப்பட்டது. இந்த ஜனநாயக தோற்றம் அதற்கு பல தசாப்தங்களாக நிலைத்தி ருக்கும் ஒரு தார்மீகக் கேடயத்தை வழங் கியது.

எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு, இலங்கை பல மொழி சீர்திருத்தங்களைச் செயல் படுத்தியுள்ளது. தமிழுக்கான அரசியல மைப்பு அங்கீகாரம், அதிகாரபூர்வ இரு மொழிக் கொள்கைகள், பன்மைத்துவத் திற்கான குறியீட்டு உறுதிமொழிகள் எனப் பலவற்றைக் கண்டுள்ளோம். ஆனாலும் அவநம்பிக்கை நீடிக்கிறது. ஏன்? தனிச் சிங்களச் சட்டத்தின் அடித்தளத்திலேயே அதன் பின்னரான அனைத்து மொழிச் சீர் திருத்தங்களும் கொண்டுவரப்பட்டன. தனிச் சிங்களச் சட்டத்தின் ஆழமான வரம்பு, அரசையே மறுகற்பனை செய்யத் தவறியது. மொழி சீர்திருத்தம் கொள்கையை மாற்றியது, ஆனால் தேசியத்தின் அடிப்படை கற்பனையை மாற்ற வில்லை. அங்கீகாரம் என்பது சலுகையாக இருக்காமல், ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும் என்று அரசியல் தத் துவஞானி சார்லஸ் டெய்லர் வாதிடுகிறார். ஒரு மேலாதிக்க கலாசார மையத்தை நிறுவிய பின்னரே சிறுபான்மையினரை அங்கீகரிக்கும் ஒரு அரசு, உரிமைகளை நீட்டிக்கும்போது கூட அதிகாரப் படிநிலையை மீண்டும் உருவாக்குகிறது.

சிங்களம் மட்டும் என்ற பிரச்சினை செயற்படுத்தல் அல்லது நேரம் சார்ந்தது மட்டுமல்ல, கற்பனை சார்ந்தது. அரசு முதலில் சிங்களம், இரண்டாவது பன்மை என கற்பனை செய்தது. அடுத்தடுத்த அனைத்து சீர்திருத்தங்களும் அந்த வரிசைமுறையால் கட்டுப்படுத்தப்பட்டன. மொழியியல் பன் முகத்தன்மையை மிகவும் வெற்றிகரமாக வழிநடத்திய நாடு கள், அரசையே மறுகற்பனை செய்வதன் மூலம் அவ்வாறு செய்தன. சுவிட்சர்லாந்து பன்மொழித் தன்மையை இடவசதி யாகக் கருதவில்லை. அது அதை அடித்தளமாகக் கருதி யது. கனடா இறுதியில் தன்னை இருமொழியாக மறு கற்பனை செய்தது. இலங்கை ஒருபோதும் அத்தகைய மறு கற்பனையை மேற்கொள்ளவில்லை. அனைத்து வகையான மொழிச் சீர்திருத்தங்களும் 1956-இன் நிழலில் நிகழ்ந்தன. எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு, இலங்கையின் சவால் மொழிக் கொள்கையைச் செம்மைப்படுத்துவது மட்டுமல்ல, 1956-ஆம் ஆண்டின் தார்மீக மரபை நேர்மையாக எதிர் கொள்வது. அது சரிசெய்ய முயன்ற அநீதி உண்மையானது என்பதையும், அது உருவாக்கிய அநீதியும் அதற்குச் சமமாக உண்மையானது என்பதையும் அங்கீகரிப்பது.

meenilankco@thaiveedu.com



# மகாவம்சம் தொகுதி - 5 (1956 - 1978) ஓர் அறிமுகம்



## தமிழில்: என். சரவணன்

'மகாவம்சம்' எனும் போதே அது வம்சவிருத்தி பற்றிய கதை என்கிற உள்ளடக்கத்தைக் கொண்டிருப்பதை கண்டிருப்போம். இலங்கையில் இருந்த ஆட்சிகளையும் அதை ஆட்சி செய்தவர்களையும் பற்றிய அந்த காலவரிசைப் படியின் அடிப்படையிலேயே 'மகாவம்சம்' தொகுக்கப்பட்டு வந்திருக்கிறது.

மகாவம்சம் என்றதும் நம்மில் பலர் இன்றும் மகாநாம தேரர் எழுதிய மகாவம்சத்தை மட்டுமே அறிந்து வைத்திருக்கின்றோம். பொ.ஆ.மு. 543 ஆண்டிலிருந்து சுமார் பொ.ஆ.பி. 362-ஆம் ஆண்டு மகாசேனனின் ஆட்சி வரையிலான கிட்டத்தட்ட 900-ஆம் ஆண்டுகளுக்கிடையில் நிகழ்ந்த நிகழ்வின் தொகுப்பாக மகாவம்சம் அமைந்திருக்கிறது.

மகாவம்சம் அத்தோடு முடிவடையவில்லை. இன்னும் சொல்லப்போனால் மகாவம்சம் இன்றும் எழுதப்படுகிறது. அதன் அடிப்படையில் மகாவம்ச வரலாற்று நூலானது 2600 வருட காலப் பதிவுகளைக் கொண்டது. உலகில் ஒரு அரசே பொறுப்பேற்று இவ்வாறு நீண்ட கால வரலாற்றை உத்தியோக பூர்வமாக பதிவு செய்து வருகிற ஒரே நாடாக இலங்கையைக் குறிப்பிடலாம். வேறெந்த நாட்டிலும் அப்படியொரு நெடும் வரலாறு இல்லை என்று இறுதியாக வெளிவந்த 6-வது மகாவம்சத் தொகுதியை ஏற்கனவே நான் தமிழில் மொழிபெயர்த்திருந்தேன். குமரன் பதிப்பகம் அதை வெளியிட்டிருக்கிறது.

தமிழில் முதன் முதலில் முழுமையாக வெளிவந்த மகாவம்ச தொகுதி அந்த 6 தொகுதியாகும். இந்தக் காலப்பகுதியை நீங்கள் கவனிப்பது அவசியம். 1978 - 2010 வரையான காலப் பகுதியை உள்ளடக்கிய அந்தத் தொகுதி என்பது சரியாக ஈழப்போராட்டம் ஆயுதப்போராட்டமாக உருவெடுத்து அப்போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட காலமாகும்.

இதுவரை தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் குறித்து அரசாங்கங்களின் கருத்துகளை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் 'இலங்கை அரசின்' உத்தியோகபூர்வ விளக்கத்தை அறிந்துகொள்ள 2010-ஆம் ஆண்டு வரையிலான அந்த மகாவம்ச 6-வது தொகுதி தமிழ் சமூகத்துக்கு மிகவும் அவசியமான ஒன்றாக இருந்தது.

சிறுபான்மை இனங்களின் அபிலாசை பற்றிய அரச கொள்கை, நடைமுறை, அவற்றைக் கையாண்ட விதம் என்பவற்றை மகாவம்சம் வழியாக நாம் அறிந்து கொள்வதற்காகவே இத்தொகுதி தமிழில் மொழிபெயர்த்து முடிக்கப்பட்டது.

இத்தொகுதி வெளிவந்ததும் ஏனைய தொகுதிகளையும் ஏன் கொண்டு வரவில்லை என்கிற கேள்வியை என்னிடம் பலர் எழுப்பி இருக்கிறார்கள். அதை கோரிக்கையை எற்காமைக்கான காரணங்கள் இரண்டு. முதலாவது; கலாசார திணைக்களம் மகாவம்சத்தின் முதலாவது தொகுதியிலிருந்து மொழிபெயர்க்கத் தொடங்கிவிட்ட செய்தியை அறிய முடிகிறது. அடுத்தது எனது நேரம், உழைப்பு, சக்தி, பொருள் அனைத்தையும் புதிய தேடல்களிலும் புதிய ஆய்வுகளிலும் ஈடுபடுத்துவது முக்கியமாக இருந்தது.

குறிப்பாக மகாவம்சம் பற்றியே இன்னும் பல ஆய்வு நூல்களைக் கொண்டுவந்துவிடலாம். அவ்வாறு மூன்று நூல்கள் இப்போதே பதிப்புக்கு தயாராகிவிட்டன.

அதேவேளை கலாசார திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மொழிபெயர்ப்பானது அத்தனை தொகுதியையும் முடிக்க இன்னும் பல ஆண்டுகள் செல்லும் என்று கணிக்க முடிகிறது. இந்த நிலையில் 5 தொகுதியை ஆராய்ந்து கொண்டிருந்தபோது அத்தொகுதி அவ்வளவு பெரிய தொகுதியாக இல்லை என்பதை உணர முடிந்தது. இதுவரை வெளியான தொகுதிகளில் 3-வதும் (1815 முதல் 1936 வரை) 5-வதும் தான் சிறிய தொகுதிகள். எனவே செய்து முடித்துவிடலாம் என்று தோன்றிற்று.

அந்த தொகுப்பும் இப்போது பதிப்பில் இருக்கிறது.

ஐந்தாவது தொகுதியானது எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டார நாயக்கவின் ஆட்சிக்காலமான 1956-இலிருந்து 1978 ஜே ஆரின் இரண்டாவது குடியரசு ஆட்சி தொடங்கும் வரையான காலப்பகுதியை உள்ளடக்கியது. 125 - 129 வரையான 5 அத்தியாயங்களைக் கொண்டது. பேராசிரியர் பெல்லன ஸ்ரீ ஞான விமல மகாநாயக்க தேரரரின் தலைமையிலான பண்டிதர் குழுவால் தயாரிக்கப்பட்டது இத்தொகுதி. ஞானவிமல மகா நாயக்க தேரரர் இலங்கையின் முன்னணி மகாநாயக்கர்களில் ஒருவராக அறியப்பட்டவர். அதுமட்டுமன்றி புத்த சாசனம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின்

தலைவராக இயங்கியவர். 2014-ஆம் ஆண்டு தனது 94 வயதில் அவர் காலமானார்.

அரச கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட ‘மகாவம்ச உருவாக்கக் குழு’வால் இந்தப் பணிகள் முடிக்கப்பட்டு 2010-ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. அதுவும் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக பதிவி வகித்த காலத்தில் ‘மகிந்த சிந்தனை’ எண்ணக்கருவின் ஒரு திட்டமாக இது வெளியிடப்பட்டதாக அந்நூலின் உள்ளே குறிப்பிடப்பட்டிருப்பதையும் இங்கே குறிப்பட வேண்டும். பின்னர் 2018-ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பும் வெளியிடப் பட்டிருக்கிறது.

இந்த மகாவம்ச ஆக்கக் குழுவில் அங்கம் வகித்த 30 பேரைக் கொண்ட குழுவில் சிங்கள பௌத்தர்கள் அல்லாத வர்கள் எவரும் இருக்கவில்லை என்பதையும் கவனிக்குக.

கலாசார திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அத்தொகுதி பரவலாக கிடைக்காத நிலையில் வேறு சில பௌத்த அமைப்புகளும் மறுபிரசுரம் செய்துள்ளன. இந்த தமிழ் மொழி பெயர்ப்புக்காக அத்தொகுதிகளையும் எடுத்து ஒப்பிட்டு சரி பார்த்திருக்கிறேன்.

இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும் 1956-ஆம் ஆண்டு பண்டாரநாயக்க ஆட்சியின் போது முதன்முதலில் கலாசார திணைக்களம் உருவாக்கப்பட்டது. அதன் அங்கமாக அன்றி லிருந்து மகாவம்ச குழு நிரந்தமாக இயங்கி வருகிறது. 1956 என்பது சிங்கள மொழி, சிங்கள இனம், பௌத்த மதம் என்பன மீளெழுச்சி கொண்ட காலம் என்பதை அறிவீர்கள்.

அக்கலாசார திணைக்களத்தின் ஊடாகத்தான் அன்றைய 2500-ஆம் புத்த ஜயந்தி கொண்டாட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன. 1956 மே மாதம் 23-ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரசாங்கத்தின் தலைமையில் பௌத்தர்களின் பங்களிப்புடன் பிரதான புத்த ஜெயந்தி விழா நடைபெற்ற துடன் அங்கே தேசியக் கொடிக்கு நிகராக நிரந்தரமான பௌத்த கொடிக்கம்பமும் நிறுத்தப்பட்டது.

மேலும் இந்த ஆட்சியின் போது தான் மாதாந்தம் பௌர்ணமி தினங்கள் விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டன. பௌத்த பேரிலக்கியமான திரிபீடகத் தொகுதிகள் அனைத்தும் தொகுக்கப் பட்டு சிங்களத்துக்கு மொழிபெயர்த்து வெளியிடப்பட்டன. அகில இலங்கை பௌத்த மகாசபை ஒரு ‘பௌத்த தக வல் விசாரணை ஆணைக்குழுவை அமைத்து அறிக்கை வெளியிட்டது. அதன் பரிந்துரைக்கு அமைய பண்டார நாயக்கவும் பௌத்த ஆணைக்குழு வொன்றை நியமித்தார்.

மேலும் பாடசாலைகளின் இறுதிப் பரீட்சைக்குச் சமய பாடம் கட்டாய மாக்கப்பட்டது. வித்தியோதய, வித்தி யாலங்கார ஆகிய இரு பிரிவெ னாக்களைப் பல்கலைக்கழகங்கள் முறையே களனி, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டதுடன் 17 பிரதான புதிய பிரிவெனாக்களை பண்டாரநாயக்க நிறுவினார்.




அரச கரும மொழிகள் திணைக்களத்தால் பல நூல்கள் சிங் கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டன.

சிங்களம் மட்டும் சட்டம். 1958 இனக்கலவரம், ஸ்ரீ சட்டம், பண்டா செல்வா ஒப்பந்தம் என இன முறுகலை உச்சத்துக்கு கொண்டு சென்ற முக்கிய காலகட்டம் இது. இலங்கையின் இனப்பிரச்சினையை இன்னொரு பரிமாணத்துக்கு எழுச்சி யடைச் செய்த முக்கியமான காலகட்டம் இது. சிங்கள மொழி - சிங்கள இனம் - பௌத்தம் ஆகியனவற்றை ஒரே பெருந்தே சியத்திற்குள் ஒன்றிணைத்து ஏனையவற்றுக்கெதிரான கருத் தியலை உருவாக்கி பலப்படுத்திய காலகட்டம் இது. பின்னர் பண்டாரநாயக்கவின் படுகொலை, அதனைத் தொடர்ந்து தஹாநாயக்க, 1960-இல் ஆட்சியமைத்த டட்லி, பின்னர் வலுக்கட்டயமாக அரசியலுக்கு கொண்டிழுத்து வரப்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்க, 1965-இல் தமிழரசுக் கட்சி யோடு சேர்ந்து ஆட்சியமைத்த டட்லி. மீண்டும் 1970-இல் ஆட்சியமைத்த சிறிமாவோ தலைமையிலான ஐக்கிய முன் னணி ஆட்சி. இறுதியில் 1977-இல் ஆறில் ஐந்து பெரும்பான் மையுடன் ஆட்சியமைத்த ஜே.ஆர்.

இந்தக் காலப்பகுதி என்பது இனப்பிரச்சினையை ஆயுதப் போராட்டம் வரை வளர்வதற்கு ஏதுவான அனைத்து நியாயங் களையும் உருவாக்கிய காலகட்டம்.

ஆனால் இந்தக் காலப்பகுதியை பதிவு செய்த இந்த மகா வம்சக் குழு இக்காலகட்டத்தை எவ்வாறு பதிவு செய்தது. எதை பதிவு செய்தது, எதை தவிர்த்தது. எவ்வாறு வியாக் கியானப்படுத்தியது. ‘மகாவம்சம் தகவல்களைத் தான் தரு கிறது, கருத்தை அல்ல’ என்று இன்றும் வாதிட்டுக்கொண்டி ருக்கும் மகாவம்ச தரப்பு முழுமையாகவே அது ஒரு இன வாத கருத்தியலின் அடிப்படையில் தொகுத்தது எப்படி என்பதை இந்த மகாவம்சத் தொகுதியில் நீங்கள் உணர முடியும்.

ஆரம்பகாலத்தில் மகாவம்சம் பாளி மொழியில் எழுதப்பட் டிருந்தது. ஆனால் 1956-இல் மகாவம்சத்தை எழுதும் பொறுப்பை இலங்கை அரசே ஏற்றுக்கொண்டதிலிருந்து சிங் களத்தில் அதனை எழுதி அதை பாளி மொழியிலும் மொழி பெயர்த்து இரண்டையும் ஒன்றாக வெளியிடும் மரபைத் தொடங்கியது.

அதன்படி 2010-இல் வெளியான இந்த 5-வது தொகுதி மொத்தம் 274 பக்கங்களை மட்டுமே கொண்டது. அதில் பாளி மொழி செய்யுள்கள் 157 பக்கங்களிலும் சிங்கள மொழியில் 98 பக்கங்களிலும் தொகுக் கப்பட்டிருக்கிறது.

6-வது மகாவம்சத் தொகுதியில் மொத் தம் 1173 பக்கங்களில் சிங்களத்தில் மாத்திரம் 825 பக்கங்களைக் கொண் டிருக்கிறது என்பதையும் இங்கே குறிப் பிட்டாக வேண்டும்.

இந்த ஐந்தாவது தொகுதி ஐந்து ஆட்சியாளர்களின் ஆட்சிகளை ஐந்து அத்தியாயங்களாக (125 -129-வது அத்தியாயங்களாக) பதிவு செய்திருக்கிறது.

- எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க: 1956 - 1959
- விஜயானந்த தகநாயக்க: 1959 - 1960
- டட்லி சேனநாயக்க: 1960 (மார்ச் - ஜூலை)
- சிறிமாவோ பண்டாரநாயக்க: 1960 - 1965
- டட்லி சேனநாயக்க: 1965 - 1970
- சிறிமாவோ பண்டாரநாயக்க: 1970 - 1977
- ஜே.ஆர். ஜயவர்தன: 1977 - 1978

இதில் ஜே.ஆர். 1977-இல் ஆட்சியமைத்தபோதும், அரசியலமைப்பை மாற்றி அடுத்த ஆண்டே ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டுவந்ததால், ஜனாதிபதி ஆட்சி தொடங்குகிற 1978-ஆம் ஆண்டு காலப்பகுதி அடுத்த மகாவம்ச 6-வது தொகுதிக்குள் சென்று விடுகிறது. எனவே ஜே.ஆர். பிரதமராக பதவி வகித்த முதல் ஓராண்டு மட்டுமே இந்த 5-வது தொகுப்பில் உள்ளடக்கபட்டிருக்கிறது. அதுவே இறுதி அத்தியாயமாக அமைகிறது.

2018 ஆண்டு கலாசார திணைக்களத்தால் வெளியான இந்த மகாவம்சம் 5-வது தொகுதியின் பதிப்பின் பிரகாரம் நூலின் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ள இவ்வாறு நாம் பட்டியலிடலாம்.

| மகாவம்சம் தொகுதி 5–க்கான வழிகாட்டிப் பட்டியல் | | | |
|---|---|---|---|
| | பக்கத் தொடர்கள் | மொத்தப் பாளி செய்யுள்கள் | மொத்தப் பக்கங்கள் |
| அறிமுகம், அக்கக்குழு | i - ix | | 9 |
| **S.W.R.D. பண்டாரநாயக்க காலம் (அத் – 125)** | | | |
| பாளியில் | 01 – 46 | 585 | 46 |
| சிங்களத்தில் | 47 - 76 | | 29 |
| **சிறிமா பண்டாரநாயக்க (அத் – 126)** | | | |
| பாளியில் | 77 - 103 | 331 | 26 |
| சிங்களத்தில் | 104- 122 | | |
| **டட்லி சேனநாயக்க (அத் – 127)** | | | |
| பாளியில் | 123 - 157 | 407 | 23 |
| சிங்களத்தில் | 158 - 179 | | 21 |
| **சிறிமா பண்டாரநாயக்க (அத் – 128)** | | | |
| பாளியில் | 180 - 220 | 506 | 40 |
| சிங்களத்தில் | 221 - 243 | | 22 |
| **ஜே.ஆர். ஜெயவர்த்தன (அத் – 129)** | | | |
| பாளியில் | 244 - 256 | 150 | 22 |
| சிங்களத்தில் | 257 - 265 | | 8 |
| இரு பாகங்களிலும் மொத்தப் பக்கங்கள் | | | 274 |

இந்த மொழிபெயர்ப்பானது உள்ளதை உள்ளபடி மேற்கொள்ளப்படுகிறது. எந்த விதத்திலும் சொந்த அரசியல் கருத்துகளின் பாதிப்பை எற்படுத்தாதவகையில் மேற்கொண்டிருக்கிறேன்.

சிங்காத்தில் வெளியான இத்தொகுதியின் அறிமுகத்தையும் இங்கே தமிழில் அப்படியே தருகிறேன்.

‘மஹிந்த சிந்தனை’ ஊடாக கல்வியறிவு பெற்ற அறிவான சமுதாயத்தை உருவாக்குவோம்.

அதிமேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் வழங்கப்பட்ட ‘மஹிந்த சிந்தனை’ நிகழ்ச்சியின் நோக்கங்களில் ஒன்று புத்தகங்களை வாசிக்கும் கல்வியறிவு கொண்ட அறிவான சமூகத்தை உருவாக்கும் நோக்கில் உயர்தர நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை வெளியிடுவதை ஊக்குவிப்பதாகும். ஒவ்வொருவரிடமும் வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் சொற்பொழிவுகள், துல்லியமான புத்தகங்களைத் தயாரித்தல், அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல் ஆகிய வற்றில் ஈடுபட்டுள்ள எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்கள் மற்றும் தொழில்சார்களை மதிப்பீடு செய்தல், ஊக்குவித்தல் மற்றும் வசதிகளை வழங்குவது ஆகியன தேசிய மரபுரிமை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கடமையாகும்.

படித்த மற்றும் அறிவுள்ள சமூகத்திற்கு இந்த புத்தகம் ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கட்டும்!

தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மகாவம்ச ஏற்பாட்டுக் சபையின் அனுசரணையுடன்.

## அறிமுகம்:

கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட இந்த மகாவம்ச - 5-வது தொகுதி 1956 - 1978 காலப்பகுதியை உள்ளடக்கியது. மகாவம்சத்தை தொடர்ச்சியாக இயற்றி வெளியிடுவது கலாசார அமைச்சின் பொறுப்பாக மாறியுள்ளது. அதனடிப்படையில் அமைச்சரவையின் சபையினால் மகாவம்சம் தொகுப்பாளர் சபை நியமிக்கப்பட்டது. அதில் அங்கம் வகித்த அறிஞர்கள் இவர்கள்.

- கலாநிதி பெல்லன ஞானவிமல மகாநாயக்க தேரர் (தலைவர் மற்றும் ஆசிரியர்)
- பேராசிரியர் சந்திர விக்ரமகமகே (செயலாளர்)
- தொல்லியல் சக்ரவர்த்தி எல்லாவல மேதானந்த தேரர்
- அகுரடியே நந்த தேரர்
- பேராசிரியர் விமல் ஜி. பலகல்லே
- பேராசிரியர் மெண்டிஸ் ரோஹநதீர
- பேராசிரியர் வினி விதாரண
- பேராசிரியர் கே.என்.ஓ. தர்மதாச
- பேராசிரியர் ஆனந்த அபேசிறிவர்தன
- பேராசிரியர் வோல்டர் மாரசிங்க
- பேராசிரியர் மாலினி எந்தகம
- பேராசிரியர் அநுர மணதுங்க
- வெ.வி. அபயகுணவர்தன
- கலாநிதி சமன் சந்திர ரணசிங்க
- திரு. சுமித் ரணசிங்க

அந்தந்த விடயதானகளுக்காக பங்களித்த அறிஞர்கள் பின் வருமாறு:

- அகுரடியே நந்த தேரர்
- பேராசிரியர் மாலினி எந்தகம
- பேராசிரியர் சந்திர விக்கிரமகமே
- பேராசிரியர் ஜயதேவ திலகசிறி
- பேராசிரியர் சுனந்த மகேந்திர டி மால்
- கலாநிதி உபாலி விக்ரமசிங்க
- ஏ.எம். கருணாரத்ன
- வழக்கறிஞர் கே.ஏ. கருணாரத்ன
- திருமதி குமுதினி குலதுங்க
- ஆர்.ஏ. ஆரியவன்ச ரணவீர
- கலாநிதி பி. திசாநாயக்க
- கலாநிதி அநுர மனதுங்க
- கலாநிதி அமரசிறி பொன்னம்பெரும
- பேராசிரியர் பியதாச அத்துகோரல
- பேராசிரியர் ரோலண்ட் அபேபால
- பேராசிரியர் மங்கள இலங்கசிங்க
- பேராசிரியர் எஸ்.பி. ஹெட்டியாராச்சி
- எஸ்.பி. சார்ல்ஸ்
- கே.எல். வசந்த பெரேரா

இந்த தொகுப்பை ராஜரீக பண்டிதர் லன்பந்துரே ராகுல தேரரும் (அத்தியாயம் 125), ராஜரீக பண்டிதர் மாவனானே சோமிந்த தேரரும் (அத்தியாயங்கள் 126-129) பாலியில் தயாரித்தார்கள்.

வெளிப்புற அறிஞர்களின் மேற்பார்வையின் பேரில் மகா வம்ச ஆசிரியர் குழுவின் ஒப்புதலுடன் அனைத்து தலைப்பு களிலும் எழுதப்பட்ட கட்டுரைகள் மகாவம்சம் தொகுதி 5-இல் சேர்க்கப்பட்டன.

மகாவம்சத்தை தொகுக்கும் மரபின் படி இந்தத் தொகுதி யைத் தயாரிக்க வேண்டியது அரசாங்கத்தினதும் மகாவம்ச ஆசிரியர் குழுவினரதும் பொறுப்பாகும். அதன்படி, அரசியல், அரசு நிர்வாகம், வெளியுறவுக் கொள்கை, பௌத்த மதம், பொருளாதார நிலைமை, கல்வி, அறிவியல், தொழினுட்பம், சுகாதாரம் மற்றும் அந்தந்தக் காலத்தின் கலை - இலக்கியம் போன்ற விடயப் பரப்புகளுக்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு விடயப்பரப்பிலும் அது சார்ந்த நிபுணர்களால் தேவையான கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, அவற்றின் உள்ளடக்கங்கள் இந்தப் புத்தகத்தில் பொருத் தமான முறையில் சேர்க்கப்பட்டன. மகாவம்ச மரபின்படி, அடிக்குறிப்புகளும் துணைத் தலைப்புகளும் நிராகரிக்கப் பட வேண்டியிருந்தது. இருப்பினும், நிகழ்வுகளைப் பதிவு செய்ய வழக்கமான ஆண்டு முறையைப் பயன்படுத்த மகாவம்ச ஆக்கக்குழு முடிவு செய்தது.

மகாவம்சம் 5-இன் 129-ஆம் அத்தியாயம் முழுமையடைய வில்லை, ஏனெனில் இது மகாவம்சத்தின் முதலாவது தொகுதியில் அத்தியாயம் 37-ஐ போன்றே அடுத்த மகா வம்ச தொகுப்புடன் தொடர்புடையது.

மகாவம்ச ஏற்பாட்டுக் குழுவின் செயலாளர் பேராசிரியர் சந்திர விக்ரமகமகே அவர்களினால் இப்பணியில் ஈடுபட்ட அறிஞர்களின் பணி ஒருங்கிணைக்கப்பட்டது.

கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சர் திரு. மஹிந்த யாப்பா அபேவர்தன, கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு. பியசிறி விஜேநாயக்க, புதிய அமைச்சர் திருமதி பவித்ரா வன்னியாராச்சி, பிரதி அமைச்சர் திரு. குணரத்ன வீரகோன் ஆகியோரின் தலைமையிலும் ஆதர விலும், அவ்அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு. ஜி.எல்.டபிள்யூ. சமரசிங்க, தற்போதைய செயலாளர் திரு. விமல் ரூபசிங்க ஆகியோரின் ஆதரவுடனும், கலாசார அலு வல்கள் இயக்குநர் திரு. ஈ.எம். அபயரத்ன ஆகியோரின் ஏற் பாட்டிலும், மகாவம்ச ஆக்கக்குழுவின் வழிகாட்டுதலிலும், இந்த மகாவம்சத் தொகுதி தொகுக்கப்பட்டது. இதில் பங்கேற்ற அனைவருக்கும், அரசாங்கத்திற்கும் எனது நன்றி உரித்தாகும்.



– பெல்லன ஞானவிமல மகாநாயக்க தேரர் –



sarawanan.n@thaiveedu.com



அருள்கார்க்கி

# ஹேஷ்டேக் தேசியமும் மாயத் திருப்தியும்

இருபத்தியோராம் நூற்றாண்டின் தகவல் தொழினுட்பப் புரட்சியானது, மனித இனத்தின் சமூக மற்றும் அரசியல் பண்பாட்டில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிலான மாற்றங்களை நிகழ்த்தியுள்ளது. குறிப்பாக, சமூக வலைத்தளங்களின் எழுச்சியானது தனிமனிதர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் முறையை மாற்றியமைத்ததுடன், கூட்டுச் செயற்பாடுகளுக்கான புதியதொரு களத்தையும் திறந்துவிட்டுள்ளது. இந்த டிஜிட்டல் யுகத்தில், அரசியல் போராட்டங்கள் என்பது வீதிகளில் முழக்கமிடுவதிலிருந்து மாறி, கணினித் திரைகளுக்கும் அலைபேசித் திரைகளுக்கும் பின்னால் இருந்து 'Hashtag'-களை உருவாக்குவதாகச் சுருங்கியுள்ளது. சமூகவியலாளர்கள் இப்போக்கை 'Slacktivism' என்று அழைக்கின்றனர். இலங்கைத் தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரை, குறிப்பாக யுத்தத்திற்குப் பின்னரான தசாப்தங்களில், இந்த டிஜிட்டல் அரசியல் என்பது அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் முதன்மையான வடிகாலாக மாறியுள்ளது.

### மானுவல் காஸ்டெல்ஸ் மற்றும் 'பிணையச் சமூகம்' (Network Society):

நவீன சமூகவியல் அறிஞர் மானுவல் காஸ்டெல்ஸ் தனது 'The Network Society' மற்றும் 'Networks of Outrage and Hope' ஆகிய நூல்களில், இணையம் எவ்வாறு அதிகார மையங்களுக்கு எதிரான புதிய போராட்ட வடிவங்களை உருவாக்குகிறது என்பதை விளக்குகிறார். காஸ்டெல்ஸின் கருத்துப்படி, இன்றைய போராட்டங்கள் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் இயங்குவதை விட, ஒரு பிணையமாக (Network) இயங்குகின்றன. தமிழ் இளைஞர்கள் #JusticeForTamil அல்லது #GoHomeGota போன்ற ஹேஷ்டேக்குகளைப் பயன்படுத்தும் போது, அவர்கள் ஒரு தட்டையான (Horizontal) அதிகார அமைப்பை உருவாக்குகிறார்கள். இங்கு எவரும் தலைவர்கள் இல்லை, அதேநேரம் அனைவரும் தகவல்களைப் பரப்புபவர்களாக இருக்கிறார்கள்.

இருப்பினும், காஸ்டெல்ஸ் குறிப்பிடும் இந்த 'பிணையச் சமூகத்தில்' ஒரு பாரிய ஆபத்து உள்ளது. அதுதான் 'உணர்ச்சிமயமான தொடர்பு' (Emotional Communication). தமிழ் இளைஞர்கள் இணையத்தில் ஒரு செய்தியைப் பகிரும்போது, அது பெரும்பாலும் ஆழமான அரசியல் காரணங்களை விடவும், உடனடி உணர்ச்சித் தூண்டலாலேயே (Outrage) இயக்கப்படுகிறது. 2022 இலங்கைப் பொருளாதார நெருக்கடியின் போது, கொழும்பு இளைஞர்களோடு இணைந்து வடக்கு-கிழக்கு தமிழ் இளைஞர்களும் இணையத்தில் குரல் கொடுத்தமைக்கு இத்தகைய உணர்ச்சிப் பிணைப்பே காரணமாக அமைந்தது. ஆனால், அந்த உணர்ச்சி அடங்கியவுடன், பிணையத்தில் உள்ள தொடர்புகளும் அறுந்து போகின்றன. இதுவே 'Slacktivism'-த்தின் அடிப்படைப் பலவீனமாகும்.

### மிஷேல் ஃபூக்கோ: 'கண்காணிப்பும் தண்டனையும்' (Panopticon):

பிரெஞ்சுச் சிந்தனையாளர் மிஷேல் ஃபூக்கோவின் 'Panopticon' கோட்பாடு, இன்றைய டிஜிட்டல் கண்காணிப்புச் சூழலுக்கு மிகச்சரியாகப் பொருந்துகிறது. ஃபூக்கோவின் படி, அதிகாரம் என்பது ஒரு மையப்புள்ளியிலிருந்து மட்டும் செயற்படுவதில்லை, அது சமூகத்தின் அனைத்துத் திசைகளிலும் ஊடுருவியுள்ளது. இலங்கைத் தமிழ் இளைஞர்கள் சமூக ஊடகங்களில் அரசியல் கருத்துகளைப் பதிவிடும் போது, அவர்கள் அறியாமலேயே தங்களை ஒரு டிஜிட்டல் சிறைச்சாலைக்குள் (Digital Panopticon) உட்படுத்திக் கொள்கிறார்கள்.

இலங்கையின் பாதுகாப்புத் தரப்பினர் சமூக ஊடகக் கண்காணிப்பைப் பலப்படுத்தியுள்ள சூழலில், தமிழ் இளைஞர்களிடையே ஒரு 'சுய-கண்காணிப்பு' (Self-surveillance) உருவாகியுள்ளது. தங்களின் ஒரு 'Like' அல்லது 'Comment' தங்களின் எதிர்காலத்தையோ அல்லது அரச வேலை வாய்ப்பையோ பாதிக்குமா என்ற அச்சம் அவர்களுக்குள் ஊடுருவியுள்ளது. இதனால், அவர்கள் தீவிரமான அரசியல் மாற்றத்தைக் கோரும் களப் போராட்டங்களில் இருந்து மெல்ல மெல்ல விலகி, பாதிப்பில்லாத 'Hashtag'குகளை மட்டும் பகிரும் 'Slacktivists' ஆக மாறுகின்றனர். இது அதிகார வர்க்

கத்திற்கு ஒரு சாதகமான சூழலை உருவாக்குகிறது; ஏனெனில் இளைஞர்கள் இணையத்தில் மட்டும் கத்திவிட்டு அமைதியாகிவிடுவது, அதிகார மையங்களுக்குப் பெரிய அச்சுறுத்தலாக அமைவதில்லை.

### ‘Slacktivism’ மற்றும் நுகர்வுப் பண்பாடு:

சமகாலச் சமூகவியலாளர்கள் ‘Slacktivism’ என்பதை ஒருவகை ‘அரசியல் நுகர்வு’ (Political Consumerism) என்று கருதுகின்றனர். ஓர் இளைஞன் ஒரு குறிப்பிட்ட ஹேஷ்டேக்கைப் பயன்படுத்துவது, அவன் ஒரு குறிப்பிட்ட பிராண்ட் காலணியை அணிவதற்குச் சமமானது. அது அவனது ‘ஆன்லைன் அடையாளத்தை’ (Online Identity) மெருகூட்டுகிறது. ‘நான் சமூகப் பொறுப்புள்ளவன்’ என்ற பிம்பத்தை சமூகத்திற்குத் தந்துவிட்டு, அதற்கப்பால் எந்தவொரு நேரடிப் பங்களிப்பையும் வழங்காத நிலை இது.

இலங்கையில் தமிழ் இளைஞர்களிடையே இது ஒரு கலாசார மாற்றமாகவே நிகழ்ந்து வருகிறது. பல்கலைக்கழக மாணவர்கள் முதல் தொழில் வல்லுநர்கள் வரை அனைவரும் இணையத்தில் தீவிரமான அரசியல் கருத்துகளைப் பகிர்கிறார்கள். ஆனால், ஒரு கிராமத்தில் காணி அபகரிப்பு நடக்கும்போதோ அல்லது ஒரு நீதிக்கான போராட்டம் வீதியில் நடக்கும் போதோ, அங்கிருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது. இணையத்தில் கிடைக்கும் ‘தற்காலிகப் பாராட்டு’ (Instant Validation), அவர்களை நிஜமான, கடினமான களப் போராட்டங்களிலிருந்து அந்நியப்படுத்துகிறது.

### அல்காரித ஆதிக்கம் மற்றும் புரிதலில் ஏற்படும் தாக்கங்கள்:

நவீன சமூக ஊடகங்களின் இயங்குதளமானது ‘அல்காரிதம்’ (Algorithm) எனப்படும் நுட்பமான கணினி வழிமுறைகளால் தீர்மானிக்கப்படுகிறது. ஒரு பயனர் எதனைப் பார்க்க வேண்டும், எதனைப் பகிர வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் இந்த அல்காரிதம்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரை, இந்தத் தொழினுட்பம் அவர்களை அறியாமலேயே ஒரு ‘தகவல் குமிழிக்குள்’ (Filter Bubble) சிறைப்படுத்துகிறது. தகவல் குமிழி என்பது ஒரு பயனர் தனது விருப்பங்களுக்கு ஏற்ற தகவல்களை மட்டுமே மீண்டும் மீண்டும் பெறுவதைக் குறிக்கும். இது சமூக ஊடக நிறுவனங்களின் வணிக நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டிருந்தாலும், அது தமிழ் இளைஞர்களின் அரசியல் மற்றும் சமூகப் பார்வையில் பாரிய எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

முதலாவதாக, அல்காரிதம்கள் பயனர்களின் கடந்தகாலத் தேடல்கள் (Search History), ‘Like’ செய்த பதிவுகள் மற்றும் அவர்கள் அதிக நேரம் செலவழித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய தகவல்களை அவர்களுக்குத் திரையில் காட்டுகின்றன. உதாரணமாக, ஒரு தமிழ் இளைஞன் ஒரு குறிப்பிட்ட அரசியல் கருத்தியலையோ அல்லது ஒரு குறிப்பிட்ட அரசியல் தலைவரையோ ஆதரிக்கும் பதிவுகளைத் தொடர்ந்து பார்த்தால், அந்த அல்காரிதம் அவருக்கு அந்தத் தரப்பைச் சார்ந்த செய்திகளை மட்டுமே காட்டும். இதனால், மாற்றுக்கருத்துக்கள் அல்லது நடுநிலையான விமர்சனங்கள் அவரது திரைக்கு வராமலேயே தடுக்கப்படுகின்றன. இது அந்த இளைஞனுக்கு ‘உலகம் முழுவதும் எனது கருத்தையே ஆதரிக்கிறது’ என்ற ஒரு போலி பிம்பத்தை (Confirmation Bias) உருவாக்குகிறது.

இரண்டாவதாக, இந்தத் தகவல் குமிழிகள் தமிழ் இளைஞர்களிடையே ‘முனைவாக்கத்தை’ (Polarization) அதிகரிக்கின்றன. இலங்கையின் இனத்துவ அரசியல் சூழலில், தமிழ் இளைஞர்கள் தங்களின் தேசிய அடையாளங்கள் மற்றும் உரிமைகள் குறித்த பதிவுகளை அதிகம் நுகர்கின்றனர். அல்காரிதம்கள் இந்த உணர்ச்சிபூர்வமான பதிவுகளை அவர்களுக்கு மீண்டும் மீண்டும் வழங்குவதன் மூலம், மற்றைய சமூகங்களின் பார்வைகள் அல்லது நியாயமான விமர்சனங்களைக் கேட்கும் வாய்ப்பை அவர்களுக்கு மறுக்கின்றன.






இது சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வைக் குறைத்து, கடும்போக்குவாத சிந்தனைகள் வளர ஏதுவாகிறது. சமூகவியலாளர் எலிய் பாரிசர் (Eli Pariser) குறிப்பிடுவது போல, தகவல் குமிழிகள் நமக்குத் தெரிய வேண்டிய தகவல்களைத் தராமல், நாம் எதனைப் பார்க்க விரும்புகிறோமோ அதனை மட்டுமே தருகின்றன.

மூன்றாவதாக, இந்த அல்காரித ஆதிக்கம் ‘Slacktivism’ கலாசாரத்தை இன்னும் வலுப்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரச்சினை ‘Trending’ ஆக இருக்கும்போது, அல்காரிதம்கள் அது தொடர்பான பதிவுகளை இளைஞர்களின் திரையில் குவித்து விடுகின்றன. அனைவரும் அதைப் பற்றிப் பேசுவது போன்ற ஒரு தோற்றத்தை இது ஏற்படுத்துகிறது. ஆனால், அந்த விடயம் ட்ரெண்டிங்கில் இருந்து மறைந்தவுடன், அல்காரிதம் அடுத்த புதிய விடயத்தைக் காட்டத் தொடங்கிவிடும். இதனால் ஒரு தீவிரமான பிரச்சினை குறித்து ஆழமாகச் சிந்திப்பதற்கோ அல்லது அதற்காக நீண்டகாலக் களப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கோ இளைஞர்களுக்கு அவகாசம் கிடைப்பதில்லை. அவர்கள் ஒரு ஹேஷ்டேக் அலையில் இருந்து மற்றொன்றுக்குத் தாவும் ‘டிஜிட்டல் நாடோடிகளாக’ மாற்றப்படுகிறார்கள்.

மேலும், தமிழ் மொழியில் உள்ள அல்காரிதம் போதாமைகளும் ஒரு சவாலாகும். பேஸ்புக், எக்ஸ் (X) போன்ற நிறுவனங்களின் அல்காரிதம்கள் ஆங்கில மொழியில் உள்ள ‘வெறுப்புப் பேச்சுகளை’ (Hate Speech) அடையாளப்படுத்துவது போல, தமிழ் மொழியில் உள்ள நுட்பமான வெறுப்புப் பேச்சுகளையோ அல்லது தவறான தகவல்களையோ (Mis-information) துல்லியமாக அடையாளம் காண்பதில்லை. இது தமிழ் இளைஞர்களிடையே போலிச் செய்திகள் வேகமாகப் பரவுவதற்கும், அதன் மூலம் தவறான அரசியல் முடிவுகளை எடுப்பதற்கும் வழிவகுக்கிறது.

அல்காரிதம்கள் வழங்கும் வசதிகளுக்குப் பின்னால் மறைந்துள்ள இந்தத் தகவல் சிறையை இளைஞர்கள் உடைக்க வேண்டும். தாங்கள் நுகரும் தகவல்கள் ஒரு இயந்திரத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டவை என்பதை உணர்ந்து, மாற்று ஊடகங்களையும், நேரடித் தரவுகளையும் தேடிச் செல்வதே உண்மையான சமூக விழிப்புணர்வுக்கு வழிவகுக்கும்.

### டிஜிட்டல் இடைவெளியும் அரசியல் விலக்கமும்:

இக்கட்டுரையின் மற்றுமொரு முக்கிய பகுதி, இலங்கையில் நிலவும் ‘டிஜிட்டல் இடைவெளி’ (Digital Divide) ஆகும். ஹேஷ்டேக் அரசியல் என்பது ஸ்மார்ட்போன் மற்றும் அதிவேக இணைய வசதி கொண்ட நகர்ப்புற இளைஞர்களின் கைகளில் மட்டுமே உள்ளது. ஆனால், இலங்கையின் வடக்கு-கிழக்கு மற்றும் மலையகக் கிராமங்களில் உள்ள விளிம்புநிலை இளைஞர்களின் குரல் இந்தத் தொழினுட்ப அடுக்குகளுக்குள் சிக்குண்டு விடுகிறது. அவர்களின் உண்மையான வலிகள் ‘Trending’ ஆவதில்லை. இதனால், டிஜிட்டல் உலகம் ஒரு போலியான பொதுவெளியை (False Public Sphere) உருவாக்குகிறது.

### மாற்றத்திற்கான வழி:

‘Hashtag’ அரசியல் என்பது ஒரு தொடக்கமாக இருக்கலாமே தவிர, அதுவே இறுதி இலக்காக இருக்க முடியாது. மானுவல் காஸ்டெல்ஸ் கூறுவது போல, இணையம் மக்களைத் திரட்ட உதவலாம், ஆனால் மாற்றம் என்பது வீதிகளிலும், நிறுவனங்களுக்குள்ளும் (Institutions) போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே சாத்தியமாகும். இளைஞர்கள் தங்களின் டிஜிட்டல் ஆற்றலை, களப்பணிகளுடன் இணைக்க வேண்டும். ஃபூக்கோ குறிப்பிட்ட கண்காணிப்புச் சிறையை உடைக்க வேண்டுமானால், வெறும் குறியீட்டுப் போராட்டங்களைத் தாண்டி, அறிவுசார்ந்த மற்றும் நடைமுறை சார்ந்த அரசியல் ஈடுபாடு அவசியமாகும்.

‘Slacktivism’ எனும் மாயையிலிருந்து விடுபட்டு, இணையத்தை ஒரு கருவியாக மட்டும் பயன்படுத்தி, களத்தில் இறங்கிச் செயற்படும் போதே தமிழ் இளைஞர்களால் காத்திரமான சமூக மாற்றத்தை இலங்கையில் ஏற்படுத்த முடியும்.



Arulkarki@thaiveedu.com

ரதன்

# மென்டோசா பீலியோவின்
## சர்வாதிகாரம், அடையாளம் பற்றி எரியும் கேள்விகள்




ஒரு கார் ஒன்று வந்து கொண்டிருக்கின்றது. எதிர்த் திசையில் இரு கால்களின் அடிப்பாதங்கள் தெரிகின்றன. கால்களின் மேல் ஒரு தடித்த மட்டை போடப்பட்டுள்ளது. அது ஒரு இறந்தவரின் உடல். பெற்றோல் நிலையத்தின் அருகில் அந்த உடல் தடித்த மட்டைகளால் மூடப்பட்டுள்ளது. அவ்வப்போது நாய்கள் அந்த உடலை சுற்றி வருகின்றன. காரில் வந்த பயணி பெற்றோல் நிலைய ஊழியரை அந்த உடல் பற்றி வினவுகின்றார். பெற்றோல் நிலையத்தில் திருட முற்பட்டவரை நிலைய ஊழியர்கள் சுட்டதனால் இறந்துவிட்டதாகத் தெரிவிக்கின்றார். இது ஒரு சர்வசாதாரண நிகழ்வு போல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நிலையத்தின் தனிமை போன்றவை ஒரு வெற்றிடத்தை வெளிப்படுத்துகின்றது. இது 2025-இல் ஒஸ்காரின் இறுதிச் சுற்றுக்குத் தேர்வான த சீக்கிரட் ஏஜன்ட் என்ற படத்தின் காட்சி. பிரேசில் நாட்டுப் படமிது. ஏற்கனவே கான் திரைப் பட விழாவில் திரையிடப்பட்ட பாராட்டுகளைப் பெற்றுள்ளது. கிலெபர் மென்டோச பிலீயோ இப்படத்தை இயக்கியுள்ளார்.

1964-க்கும் 1985-க்கும் இடைப்பட்ட காலத்தில் பிரேசிலில் இராணுவ ஆட்சி நடைபெற்றது. இக்காலத்தில் 7 ஜனாதிபதிகள் ஆட்சி செய்தனர். இவர்கள் அனைவரும் இராணுவ உயர் மட்ட அதிகாரிகள். 1970-களில் நடைபெற்ற சம்பவங்களை மையப்படுத்தி வோல்ற்றர் செலீஸ் இயக்கிய ‘ஐ ஆம் ஸ்ரில் கியர்’ படம் 2024-ஆம் ஆண்டிற்கான ஒஸ்காரின் சிறந்த வெளிநாட்டுப் படத்துக்கான விருதைப் பெற்றது. பல திரைப்பட விழாக் களிலும் விருதுகளைப் பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து வெளியாகி யுள்ள ‘த ஸ்கீரட் ஏஜன்ட்’ என்ற இத்திரைப்படம், 1974 முதல் 1979 வரை பிரேசிலை ஆட்சி செய்த ஜனாதிபதி எர்னஸ்டோ கைசல் (Ernesto Geisel) காலத்துச் சம்பவங்களை விவரிக்கிறது. குறிப்பாக, 1977-ஆம் ஆண்டில் அரசியல் நெருக்கடி காரணமாக நாடாளுமன்றம் (Congress) மூடப்பட்ட வரலாற்றுப் பின்னணியில் இக்கதை நகர்கிறது. இராணுவ அதிகாரியாக இருந்து ஜனாதிபதியான எர்னஸ்டோ கைசலின் ஆட்சிக் காலம், பிரேசிலின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான மற்றும் சவாலான ஒரு காலகட்டமாக இத்திரைப்படத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தென் அமெரிக்க நாடுகளில் சர்வாதிகாரம் என்பது ஒரு சகோதரத்துவம் போன்று ஒன்றிணைந்து பயணிக்கும். இராணுவ ஆட்சி தென் அமெரிக்க மக்களுக்கு பழக்கமான விடயம். வோல்ற்றர் செலீஸ் ஐ ஆம் ஸ்ரில் கியர் என்ற படத்தில் பிரேசிலின் கொங்கிரஸ் உறுப்பினர் றுபென் பைவா கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைப் பதிவு செய்துள்ளார்.

இப்படம் பிரேசிலின் வட கிழக்கில் அமைந்துள்ள பெரனம் புக்கோ பிரதேசத்தைப் பிரதிபலிக்கின்றது. புத்திஜீவிகளும், செல்வந்தர்களும் வாழும் தென் கிழக்கு பகுதியினர் வட கிழக்கை ஒதுக்கியே வைத்து வருகின்றனர். ஒரு முற்போக் கான அரசியல் பாரம்பரியத்தையும் கொண்டுள்ள பெரனம் புக்கோ பிரதேசம், கார்னிவல் என அழைக்கப்படும் களியாட் டத் திருவிழாவிற்கு பெயர் பெற்றது. நிலமற்ற தொழிலாளர் கள் இயக்கத்தின் பிறப்பிடம் இப்பிரதேசம்.

த சீக்கிரட் ஏஜன்ட் ஒரு மஜிக்கல் யதார்த்தவாதப் படம். எனவே படம் பெரனம்புக்கோவுடன் களியாட்ட விழாக் கலா சாரத்துடன் இணைந்து பயணிக்கின்றது. ஒரு கற்பனையான 1977 பிரேசிலைத் தற்போதைய அமைதியற்ற நிலை என்று சித்தரிக்கிறது. த சீக்கிரட் ஏஜன்ட் இயக்குநர் சர்வாதிகாரத் தின் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துகிறார். ஒரு சர்வாதி காரம் என்பது அதன் மிகத் தெளிவான அரசியல் செயல் களின் மீது மட்டும் கட்டமைக்கப்படுவதில்லை. அரசு முக வரின் உறுதியான நடவடிக்கைகளின் மீதும் சர்வாதிகார ஆட்சியிலிருந்து வெளிப்படும் சர்வாதிகாரத்தை உள்வாங் கும் உறுதியான நடவடிக்கைகளின் மீதும் கட்டமைக்கப் படுகிறது.

அறமன்டோ சொலிமொய்ஸ், பெரனம்புக்கோ மாநிலத்தின் தலைநகரான றிசிபிக் வருகின்றார். அவரது மனைவி இறந்துவிட்டார். அவரது மகனை மனைவியின் பெற்றோர் வளர்த்து வருகின்றனர். அறமன்டோ சொலிமொய்ஸ் ஒரு பேராசிரியர். அவர் றிசிபிக்கிற்கு வரும் பொழுது நடைபெற்ற காட்சியே மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் றிசிபிக்கில் டொனா செபஸ்ரியானாவின் வீட்டில் ஒரு அறையில் தங்கு கின்றார். டொனா செபஸ்ரியான ஒரு முதிய முன்னாள் இடதுசாரி. அங்கு அறமன்டோ சொலிமொய்ஸ் தன்னை மார்சலோ என அறிமுகப்படுத்துகின்றார். அங்கு அவர் பலரைச் சந்திக்கின்றார். அங்கோலாவிலிருந்து தங்கியுள்ள தம்பதிகள் கிளோடியோ, ஹரால்டோ எனப் பலர். றிசிபிக் கில் உள்ள ஒரு அடையாள அட்டைகள் விநியோகிக்கப் படும் அலுவலகத்தில் மார்சலோ வேலைக்கு இணைகின் றார். அவரது முந்தைய தொடர்புகள் மூலம் மார்சலோவிற்கு இந்த வேலை கிடைக்கின்றது. இங்கு இவருக்கு ஆதரவும் கிடைக்கின்றது. அதே சமயம் பல நிகழ்வுகளால் எரிச்சலும் அடைகின்றார். மார்சலோ அங்கு தனது மறைந்த தாயின் கோப்புகளைத் தேடுகின்றார். கிடைக்கும் என்ற நம்பிக்கை யுடன் தொடர்கின்றார்.

இதற்கிடையில் நகரில் பிடிக்கப்பட்ட புலிச் சுறாக்குள் (Tiger Shark) இருந்து ஒரு மனிதனின் கால் மீட்கப்படுகின் றது. இது இராணுவ ஆட்சியின் அராஜகத்தின் வெளிப் பாடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

மார்செலோ பொறியியலில் பணிபுரியும் ஒரு கல்வியாளராக இருந்தார். தனியார் வணிக தொடர்புகளைக் கொண்ட ஒரு அமைச்சர் தனது பல்கலைக்கழகத் துறையை மூடிவிட்டு, அதன் அனைத்து ஆராய்ச்சிகளையும், அதன் இலாபகர மான தொழிற்றிறனுடன், அமைச்சருக்கு சொந்தமான ஒரு தனியார் நிறுவனத்திற்கு மாற்றத் தயாராக இருப்பதைக் கண்டறிந்தார். இதன் விளைவு அமைச்சர் இவரை கொல் வதற்கு இருவரை நியமிக்கின்றார். எனவே, இவர் தனது மகனுடன் நாட்டை விட்டு வெளியேறவேண்டும். மார்சலோ ஒரு அதிருப்தியாளரோ அல்லது இடது சாரியோ இல்லை. இந்தச் சம்பவத்தினால் அதிருப்தி அடைகின்றார். இருப் பினும், விஷயங்கள் அவ்வளவு எளிதானவை அல்ல. மார் சலோ றிசிபிக்கு ஏன் வருகின்றார் என்பது பார்வையாளர் களுக்குத் தெரியாது. படத்தில் பல விடயங்களை உரை யாடல்கள் மூலமே உணர்ந்து கொள்ள முடியும்.

சுறா - பைத்தியம் பிடித்த உள்ளூர் மக்கள், வயிற்றில் மனிதக் காலுடன் ஒரு சுறா பிடிபட்டது என்ற செய்தியால் பயம்கொள்கின்றனர். ஊடகங்கள் சுறாவிற்குள் இருந்து எடுக்கப்பட்ட கால்களைப் பற்றி வதந்திகளைப் பரப்புகின்றன. எனவே படம் அரசியல் வன்முறையை கருப்பு நகைச்சுவை மற்றும் வெகுஜன மாயத்தோற்றமாக மாற்றுகிறது.

கொலை எல்லா இடத்திலும் நடக்கிறது. சில மரணங்கள் ஆட்சியின் எதிர்ப்புக்கு எதிராக விதிக்கப்படும் தண்டனை களாகும். மற்றவை தெருக் குற்றங்களின் துணை விளை பொருள்களாகும். நிறைய ஓவர்லாப் உள்ளது. வாடகைக்கு





எடுக்கப்பட்ட கொலையாளிகள் சுதந்திரமான முகவர்கள். அவர்கள் ஒரு அந்நியரைக் கொன்று பிணத்தை அப்புறப் படுத்துவார்கள். வாடிக்கையாளர் அரசாக இருந்தாலும் சரி, ஒரு நிறுவனமாக இருந்தாலும் சரி, அல்லது வெறித்தனமான ஒரு நபராக இருந்தாலும் சரி, பின்னர் ஒரு நல்ல இரவு உணவை சாப்பிட்டு நித்திரைக்குச் செல்வார்கள். இது போன்ற விஷயங்கள் நடக்கக்கூடிய ஒரு உலகத்தை மக்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்கிறார்கள்? அதற்குள் செல்லக் கற்றுக்கொள்கிறார்கள். இந்த உலகத்தை இயக்குநர் காட்டி யுள்ளார்.

முதல் காட்சியில் பெற்றோல் நிலையத்திற்கு வரும் பொலி சார் அங்குள்ள உடலைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. மார்சலோவின் காரினுள் ஒரு மீறலைத் தேடுகின்றனர். அவரிடம் லஞ்சம் பெற முயற்சிக்கின்றனர். இறுதியில் அங்கு நடைபெறும் கேளிக்கை திருவிழாவிற்கு நிதி கேட்கின்றனர். அங்கு சட்டவிரோதம் தன்னை முன்வைக்கிறது. இயக்குநர் ஒரு நல்ல கதைசொல்லி. அதே சமயம் ஒரு விமர்சகராகவும் வெளிப்படுகின்றார். பல காட்சிகளில் அவர் நகரத்துக்கு வெளியே இருந்து ஒரு அந்நியராக பார்ப்பது போல் தெரி கின்றது.

சர்வாதிகாரம் ‘சட்டம் மற்றும் ஒழுங்கு’ என்ற பெயரில் வளர்ந்து இருப்பினும், அது அதிகாரத்தில் இருப்பவர் களுக்கு தனிப்பட்ட நன்மைகளை உருவாக்க சீரழிவைப் பரப் பியது.

ஒரு சர்வாதிகாரியால் திட்டமிடப்பட்ட உயர்மட்ட அரசியல் துன்புறுத்தலைச் சித்தரிக்கவில்லை. மாறாக சர்வாதிகாரம் அதிகார கட்டமைப்பிற்குள் உள்ள அனைவருக்கும் சர்வாதி காரமாகச் செயற்பட அதிகாரம் அளிக்கிறது என்பதைச் சித்தரிக்கிறது. சர்வாதிகாரம் என்பது ஊழலுக்கும் வன் முறைக்கும் இடையே இறுக்கமாகப் பிணைக்கப்பட்ட கூட் டணியாகும். தணிக்கை மற்றும் கட்டாயப்படுத்தப்பட்ட மௌனம் எந்தவொரு அதிகார நபரும் எதையும் செய்ய அனுமதிக்கிறது. தீவிர வன்முறையைப் பயன்படுத்துவது ஆட்சியின் கொள்கைகளை மேம்படுத்துவதற்கு மட்டுமல்லா மல், தனிப்பட்ட இலாபத்திற்காகவும் பயன்படுத்தப்படுகின் றது. சர்வாதிகாரத் திட்டங்கள் அரசுக்கும் அதன் குடிமக் களுக்கும் இடையிலான உறவை மட்டுமல்ல, ஒட்டுமொத்தச் சமூகத்தின் கட்டமைப்பையும் எவ்வாறு சிதைக்கின்றன என் பதைப் படம் காட்டுகிறது. இதனால்தான் 25 ஆண்டுகாலச் சர்வாதிகாரத்தின் எதிரொலிகள் இன்றும் மிகவும் வலுவாக எதிரொலிக்கின்றன

படத்தில் நடித்த அனைத்து நடிகர்களும் சிறப்பாக நடித் துள்ளனர். குறிப்பாக மார்சலோவாக நடித்த வக்னர் மொரா மிகச் சிறப்பாக நடித்துள்ளார். ஒரு சவால் மிக்க பாத்திரம், பல்வேறு யதார்த்தங்களை வெளிப்படுத்தவேண்டிய தேவை யுள்ள பாத்திரம். இயக்குநருடன் இணைந்து பயணிக்கின்றார்.

பிரேசிலின் உருவப்படமாக இப்படமுள்ளது. இது ஒரு வர லாறு நினைவுகூறப்பட வேண்டும். இயக்குநரின் பார்வையின் கீழ் பாசிசம் வன்முறையும் வீரமும் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுள்ள ஒரு மரண வழிபாட்டு முறையாகக் கருதப்படுகிறது. சர்வாதிகார ஒடுக்குமுறையின் கீழ் வாழ்க் கையின் அபத்தங்களை அம்பலப்படுத்துகிறார்.

இயக்குநரின் கோபத்தில் பல கேள்விகள் ஒளிர்கின்றன. நாம் யார்? நாம் எங்கிருந்து வருகின்றோம்? நாம் யாராக மாற அனுமதிப்போம்? எதை விட்டுச் செல்வோம்? அடை யாளம் என்பது வரலாறு, உண்மை மற்றும் திணிக்கப்பட்ட பொய் ஆகியவற்றால் வரையறுக்கப்படுகிறது. அதுவே உண்மையும் கூட.

படத்தில் வரும் ஒரு பாடலின் வரிகள் இவை:
‘நான் அவமானத்தின் கீழ் வாழ ஒரு நாய் அல்ல’

The Secret Agent
Directed by Kleber Mendonça Filho
Written by Kleber Mendonça Filho



rathan@thaiveedu.com

சொர்ணவேல்

**அறிமுகம்:**

**நீண்ட காட்சிப் பதிவு (The Long Take) ஒரு வரலாற்றுச் சாட்சியமாக**

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பியக் கலைப்படங்களின் வரலாறானது, அக்கண்டத்தில் நிகழ்ந்த கருத்தியல் மாற்றங்களுடனும் கொந்தளிப்புகளுடனும் பிரிக்க முடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பில், கேமரா என்பது காட்சிகளைப் பதிவு செய்யும் ஒரு செயலற்ற கருவியாக மட்டுமல்லாமல், வரலாறு, அதிகாரம் மற்றும் மனித நிலை ஆகியவற்றை விசாரிக்கும் ஒரு செயல்மிகு பங்கேற்பாளராகவும் செயல்பட்டுள்ளது. அரச அதிகாரத்தின் வழிமுறைகளையும் இடதுசாரிக் கற்பனாவாதங்களின் (utopias) தோல்விகளையும் விமர்சிக்க இவ்வூடகத்தைப் பயன்படுத்திய படைப்பாளிகளின் வரிசையில், மூன்று ஆளுமைகள் "நீண்ட காட்சிப் பதிவு" (long take) அழகியலின் ஜாம்பவான்களாகத் திகழ்கின்றனர்: ஹங்கேரியின் மிக்லோஷ் யான்சோ (Miklós Jancsó), கிரீஸ் நாட்டின் தியோ ஏஞ்சலோபுலஸ் (Theo Angelopoulos), மற்றும் ஹங்கேரியின் பேலா டார் (Béla Tarr). தலைமுறை ரீதியாகவும் தத்துவார்த்த ரீதியாகவும் இவர்கள் வேறுபட்டிருந்தாலும், இந்த இயக்குநர்கள் "கால அளவு சார்ந்த சினிமா" (cinema of duration) என்கிற அழகியலிலுள்ள ஈடுபாட்டால் ஒன்றிணைகிறார்கள். பார்வையாளர்களை வரலாற்றின் கனத்தை உணரச் செய்வதற்காக, கிளாசிக்கல் சினிமாவின் துண்டு துண்டான படத்தொகுப்பு முறையை (montage) நிராகரித்து, இட மற்றும் காலத் தொடர்ச்சியை இவர்கள் தேர்ந்தெடுத்தனர்.

> “மிக்லோஷ் யான்சோ, தியோ ஏஞ்சலோபுலஸ் மற்றும் பேலா டார்: மார்க்சியம், அரசு விமர்சனம் மற்றும் கால அளவின் அழகியல்”









# காலமும் அரசியலும் கலந்த கட்டுமானம்

இந்தக் கட்டுரை அவர்களின் படைப்புகளைப் பற்றிய விரிவான ஆய்வை வழங்குகிறது. 1960களில் யான்சோவின் அதிகாரத்தை விளக்கும் இயக்கச் சித்தரிப்புகள் (kinetic choreography), 1970கள் மற்றும் 90களில் தோல்வியுற்ற இட துசாரிகள் குறித்த ஏஞ்சலோபுலஸின் ஆழ்துயரம் தோய்ந்த தொல்லியல் பார்வை, மற்றும் கம்யூனிசத்திற்குப் பிந்தைய காலத்தில் பேலா டாரின் மீவியற்பியல் (metaphysical) சோர்வு மற்றும் அண்டவியல் சிதைவு (cosmic entropy) வரையிலான பரிணாமத்தை இது ஆராய்கிறது. இந்தத் திரைப்பட இயக்குனர்களை இணைக்கும் அறிவுசார் வம்சாவளி வெறும் பாணி சார்ந்தது மட்டுமல்ல; மாறாக, அது மார்க்சியச் சிந்தனையுடனான ஆழ்ந்த ஈடுபாட்டில் வேரூன்றியுள்ளது. இந்த ஈடுபாடு ஒருபோதும் கோட்பாட்டு ரீதியாக இறுக்கமானது அல்ல; மாறாக, சோவியத் முகாமின் "நடைமுறையில் இருந்த சோசலிசம்" மற்றும் அதற்குப் பின் வந்த நவதாராளவாத வெற்றிடம் ஆகியவற்றின் மீதான ஆழ்ந்த அவநம்பிக்கையால் இது வகைப்படுத்தப்படுகிறது. இவர்களின் அழகியல் தேர்வுகள், குறிப்பாக நீண்ட காட்சிப் பதிவின் பயன்பாடு, ஒடுக்குமுறையின் கண்ணுக்குத் தெரியாத கட்டமைப்புகள், வரலாற்று அதிர்ச்சியின் தொடர்ச்சி மற்றும் கருத்தியல் சிதைவின் அழுத்தங்களுக்கு மத்தியில் மனிதனின் படிப்படியான வீழ்ச்சி ஆகியவற்றை வெளிப்ப டுத்தும் அரசியல் செயல்பாடுகளாகும்.

இந்த இயக்குநர்களின் காலவரிசைப் பயணம் ஐரோப்பிய இடதுசாரிகளின் அரசியல் வளைவைப் பிரதிபலிக்கிறது. யான்சோவின் முக்கியப் படைப்புகள் ஹங்கேரியில் காடார் (Kádár) ஆட்சியின் இறுக்கமான நிலை மற்றும் 1960களை வரையறுத்த புரட்சிகர உத்தி சார்ந்த கேள்விகளுடன் ஒத்தி சைகின்றன. இக்காலக்கட்டத்தில் வெளிவந்த The Round-Up (1965) மற்றும் The Red and the White (1967) போன்ற அவரது படங்கள், சர்வாதிகாரக் கட்டமைப்பிற்குள் நிகழும் துரோகம் மற்றும் ஒற்றுமையின் வழிமுறைகளை ஆராய்ந்து, அதிகாரத்தின் பகுப்பாய்வு வரைபடங்களாகச் செயல்படு கின்றன. கிரேக்க இராணுவ ஆட்சியின் (1967–1974) பின்ன ணியில் ஏஞ்சலோபுலஸ் தோன்றுகிறார்; வலதுசாரி மேலா திக்கத்தால் அடக்கப்பட்ட தேசிய வரலாற்றை மறுகட்ட மைப்பு செய்யும் பணி அவருக்கு இருந்தது. அவரது "வர லாற்று முத்தொகுப்பு" (History Trilogy) மற்றும் பிந்தைய "எல்லை முத்தொகுப்பு" (Border Trilogy) ஆகியவை கூட்டு ஆழ்துயரத்தின் செயல்பாடுகளாக இயங்குகின்றன. கிரேக்க உள்நாட்டுப் போரில் தோற்கடிக்கப்பட்ட மற்றும் பனிப்போர் முடிவுக்குப் பிந்தைய அமைப்பில் ஓரங்கட்டப்பட்ட இடதுசா ரிகளின் "ஆழ்துயரத்தை" (melancholy) வெளிப்படுத்தவும், கால அடுக்குகளை இணைக்கவும் அவர் நீண்ட காட்சிப் பதிவைப் பயன்படுத்துகிறார்.

இறுதியாக, பேலா டார் இப்பயணத்தின் இறுதிப் புள்ளியைப் பிரதிபலிக்கிறார். ஹங்கேரியக் கம்யூனிசத்தின் அந்திமக் காலத்தில் சமூக யதார்த்தவாத நாடகங்களுடன் தனது வாழ்க்கையைத் தொடங்கிய டார், Sátántangó (1994) மற்றும் The Turin Horse (2011) ஆகியவற்றின் மூலம் மீவியற் பியல் சார்ந்த "மெதுவான சினிமாவிற்கு" (slow cinema) மாறியது, வரலாற்று இயங்கியலின் (historical dialectic) சரிவைக் குறிக்கிறது. டாரின் பிரபஞ்சத்தில், முன்னேற்றம் குறித்த மார்க்சிய வாக்குறுதியானது ஒரு சுழற்சி முறையிலான, சிதைவுறும் அழிவால் மாற்றப்பட்டுள்ளது; அங்கே அரசு குறித்த விமர்சனம் இருப்பு குறித்த விமர்சன மாகக் கரைகிறது.

இவர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள, இவர்களின் தனித்துவமான கால மற்றும் இடக் கையாளுதல்கள் எவ்வாறு இவர்களின் குறிப்பிட்ட அரசியல் விமர்சனங்களுக்குச் சேவையாற்றுகின்றன என்பதை ஒருவர் பகுப்பாய்வு செய்ய வேண்டும். யான்சோவின் கேமரா கிடை மட்டமானது மற்றும் இடைவிடாதது; இது திறந்த வெளியின் மீது ஒடுக்குமுறையின் வடிவியல் வரைபடத்தை வரைகிறது. ஏஞ்சலோபுலஸின் கேமரா வட்டவடிவமானது மற்றும் தொல் லியல் சார்ந்தது; இது வரலாற்றின் புதைந்த அடுக்குகளைத் தோண்டி எடுக்க 360 பாகைகள் சுழல்கிறது. டாரின் கேமரா ஊடுருவக்கூடியது மற்றும் கனமானது; இது பார்வையாளரை இறைவனால் கைவிடப்பட்ட உலகின் பொருள்சார் யதார்த் தத்திற்குள் பூட்டிவைக்கிறது. இவர்கள் மூவரும் இணைந்து "அரசியல் நவீனத்துவத்தின்" (political modernism) மும் மூர்த்திகளாகத் திகழ்கின்றனர். இவர்கள் காலத் தின் வர்த்த கமயமாக்கலை எதிர்த்து, அதன் வரலாற்று மற்றும் பொருள்சார் கனத்தை மீட்டெடுக்கின்றனர்.



# மிக்லோஷ் யான்சோ (Miklos Jancso): அதிகாரத்தின் நடன அமைப்பும் அரசு மீதான விமர்சனமும்





கிழக்கு ஐரோப்பாவில் அரசியல் சார்ந்த நீண்ட காட்சிப் பதிவு முறையின் முன்னோடியாக மிக்லோஷ் யான்சோ பரவலாகக் கருதப்படுகிறார். இரண்டாம் உலகப் போர் மற்றும் நசுக்கப்பட்ட 1956 புரட்சியின் வடுக்களைக் கொண்ட ஹங்கேரியிலிருந்து உருவான யான்சோ, அருவத்தன்மை (abstraction), வடிவியல் (geometry) மற்றும் தொடர்ச்சியான இயக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு தனித்துவமான திரைப்பட மொழியை உருவாக்கினார். மேற்கத்திய முதலாளித்துவ நாடகங்களுக்குரிய தனிப்பட்ட கதாநாயகர்களோ அல்லது உளவியல் ஆழமோ கொண்டதாக அவரது சினிமா இல்லை; அதே சமயம், சோவியத் கோட்பாட்டால் கட்டளையிடப்பட்ட சோசலிச யதார்த்தவாதத்தின் பிரச்சாரத் தன்மையையும் அது கொண்டிருக்கவில்லை. மாறாக, யான்சோ வரலாற்றை ஒரு "சிறைச்சாலையாகவும்", திரையை ஒரு சதுரங்கப் பலகையாகவும் கருதுகிறார்; இதில் ஹங்கேரியச் சமவெளியான 'புஸ்தா'வின் (puszta) இடைவிடாத கிடைமட்டப் பரப்பில், ஒரு கொடிய விளையாட்டின் பகடைகளைப் போல மனிதக் கூட்டங்கள் நகர்த்தப்படுகின்றன.

## வரலாற்று மற்றும் தத்துவார்த்த சூழல்

யான்சோவின் உலகப்பார்வை ஹங்கேரிய வரலாற்றின் குறிப்பிட்ட முரண்பாடுகளால் வடிவமைக்கப்பட்டது. ஹப்ஸ்பர்க் பேரரசின் இளைய கூட்டாளியாகவும், குறுகிய காலம் கம்யூனிஸ்ட் குடியரசாகவும், பாசிசத்தின் கீழ் செயல்பட்ட நாடாகவும், இறுதியாகச் சோவியத் செயற்கைக்கோள் நாடாகவும் இருந்த ஹங்கேரி, நிரந்தரமான புவிசார் அரசியல் பாதிப்பு நிலையில் இருந்தது. யான்சோவின் மார்க்சியம் அவரது நாட்டுக்காரரான ஜார்ஜ் லூகாஸால் (György Lukács) ஈர்க்கப்பட்டது, குறிப்பாகப் பிடிவாதமான மார்க்சியத்தின் மீதான லூகாஸின் வெறுப்பு மற்றும் கலையின் சமூக ஆற்றல் மீதான நம்பிக்கை ஆகியவை இதில் அடங்கும். இருப்பினும், இந்தக் கருத்துக்களை யான்சோ பயன்படுத்திய விதம் தீவிரமான ஐயுறவுவாதம் கொண்டது. அவர் பாட்டாளி வர்க்கத்தின் உறுதியான வெற்றியை விட, ஒடுக்குமுறையின் சுழற்சி இயல்பில் அதிக ஆர்வம் காட்டினார். அவரது படங்கள் அதிகாரத்தின் "மாதிரிகளாக" அல்லது "நீதிக்கதைகளாக" செயல்படுகின்றன; அவை வரலாற்றுக் கணத்தின் குறிப்பான்களை அகற்றிவிட்டு, ஆட்சிகள் மாறினாலும் தொடரும் ஆதிக்கத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளை வெளிப்படுத்துகின்றன.

1956ஆம் ஆண்டின் அதிர்ச்சி யான்சோவின் படைப்புகளின் அமைதியான மையமாக உள்ளது.



The Round-Up படத்தின் அழகியல் உத்தி, சிறைச்சாலை அமைப்பைத் தீவிரமாகச் சிதைப்பதில் அமைகிறது. பெரிய ஹங்கேரியச் சமவெளியான 'புஸ்தா'வின் நடுவில், சூரிய ஒளி நிரம்பிய ஒரு வெற்றுத் தடுப்பு முகாமே இதன் களம். இங்கு தனிமை முழுமையானது; ஏறுவதற்குச் சுவர்கள் இல்லை, ஆனால் மறைவதற்கு இடமில்லாத அடிவானத்தின் திகிலூட்டும் திறந்தவெளி மட்டுமே உள்ளது. "சிறைச்சாலைத் திரைப்பட" வகையின் கற்பனாவாதத்தை நீக்க யான்சோ இந்த வெளியைப் பயன்படுத்துகிறார். இதில் வீரமிக்க தப்பிக்கும் முயற்சிகளோ உன்னதமான தியாகிகளோ இல்லை. மாறாக, இப்படம் ஒரு "காஃப்கா பாணி வெளியை" (Kafkaesque space)ச் சித்தரிக்கிறது; இதில் கைதிக்கும் காவலருக்கும் இடையிலான வேறுபாடு நிலையற்றது, அது பெரும்பாலும் ஒரு ஆயுதம் அல்லது சீருடையை வைத்திருப்பதன் மூலம் மட்டுமே வரையறுக்கப்படுகிறது.

சோவியத் டாங்கிகளால் ஹங்கேரிய எழுச்சி கொடூரமாக நசுக்கப்பட்டது, அப்போதைய ஆட்சியை நேரடியாக விமர்சிப்பது சாத்தியமற்ற ஒரு அரசியல் சூழலை உருவாக்கியது. யான்சோ, உருவகங்கள் மூலம் தணிக்கையைத் தவிர்த்தார். அவர் தனது படங்களைப் பாதுகாப்பான வரலாற்றுக்காலங்களில் அமைத்தார்—1848 புரட்சி, 1860களின் ஒடுக்குமுறை, 1919 கவுன்சில்களின் குடியரசு—இதன் மூலம் சமகாலக் காவல்துறை அரசின் வழிமுறைகளை விமர்சித்தார். இந்த "வரலாற்று விலகல்" (historical distancing) உத்தி, உடனடித் தடையைத் தூண்டாமல், துரோகத்தின் உளவியல், விசுவாசத்தின் நிலையற்ற தன்மை மற்றும் தன்னிச்சையான அதிகாரத்தின் பயங்கரத்தை ஆராய அவரை அனுமதித்தது.

## The Round-Up (1965):
## காவல்துறை அரசின் உடற்கூறியல்

யான்சோவின் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்ற படமான The Round-Up (Szegénylegények), சர்வாதிகாரத்தின் வழிமுறைகள் குறித்த அவரது விசாரணைக்கான வார்ப்பை அமைத்தது. மேலோட்டமாகப் பார்க்கையில், ஹப்ஸ்பர்க்குகளுக்கு எதிரான ஹங்கேரியச் சுதந்திரப் போராட்டத்தின் தோல்விக்குப் பிந்தைய 1860களின் பிற்பகுதியில் அமைக்கப்பட்டிருந்தாலும், இப்படம் உள்நாட்டுப் பார்வையாளர்களால் 1956 எழுச்சிக்குப் பிந்தைய பழிவாங்கல்களுக்கான மறைமுக உருவகமாக உடனடியாக அங்கீகரிக்கப்பட்டது.

கதை தர்க்கமானது ஒற்றுமையை உளவியல் ரீதியாகச் சிதைப்பதில் தங்கியுள்ளது. அதிகாரிகள் வெறுமனே மரண



தண்டனை நிறைவேற்றுவதில்லை; அவர்கள் துரோகத்தை நிர்வாக ரீதியாகச் செயல்படுத்துகிறார்கள். ஒரு கிளர்ச்சியாளரையோ அல்லது ஒரு பாரபட்சனையோ அடையாளம் காட்டக்கூடிய கைதிகளுக்கு அவர்கள் பொய்யான மன்னிப்புகளை வழங்குகிறார்கள், இதன் மூலம் ஒடுக்கப்பட்டவர்களை ஒருவருக்கொருவர் எதிராகத் திருப்புகிறார்கள். ஒரு கொடுமையான காட்சியில், ஒரு கைதியிடம் அவர் சுதந்திரமானவர் என்று கூறப்பட்டு, பரந்த சமவெளியில் நடந்து செல்ல அனுமதிக்கப்படுகிறார். கேமரா பின்னோக்கி நகர்ந்து (tracking backward), நிலப்பரப்புக்கு எதிராக அவரது சிறிய தோற்றத்தையும், அவரது சுதந்திரத்தின் வெளிப்படையான யதார்த்தத்தையும் வலியுறுத்துகிறது. திடீரென்று, மறைந்திருக்கும் ஒரு துப்பாக்கி சுடும் வீரரால் தூரத்திலிருந்து சுடப்பட்டு அவர் சரிகிறார். இந்த விதிகளின் தன்னிச்சையான தன்மையில்தான் பயங்கரம் அடங்கியுள்ளது- இது கம்யூனிஸ்ட் அரசின் சட்டச் சூனியவா





தத்தின் மீதான நேரடி விமர்சனமாகும், அங்கு விசுவாசம் மற்றும் தேசத்துரோகத்திற்கு இடையிலான கோடு கட்சியின் விருப்பத்தைப் பொறுத்து ஒரே இரவில் மாறக்கூடும்.

யான்சோவின் கேமரா ஒரு தனிப்பட்ட கதாநாயகனை அடை யாளப்படுத்தவில்லை; மாறாக, அது முடிவில்லாமல் நகர் கிறது (tracking), பான் (panning) மற்றும் சறுக்குவது போல் (gliding) சென்று விசாரணை, வரிசைப்படுத் துதல் மற்றும் மரணதண்டனை ஆகியவற்றின் சடங்குகளை உற்றுநோக்குகிறது. விமர்சகர் களால் பின்னர் "நடன-எழுத்து" (choreo-callig-raphy) என்று அழைக்கப்பட்ட இந்த இடை விடாத கேமரா இயக்கம், அதிகாரத்தின் அமைப்பு ரீதியான தன்மையை வலியுறுத்துகிறது. தனி நபர் முக்கியமற்றவர்; ஆதிக்கத்தின் அமைப்பே உண்மையான கதாநாயகனாகச் செயல்படு கிறது. காட்சியை வெட்ட (cut) மறுப்பதன் மூலம், யான்சோ பார்வையாளர்களைக் கைதிகளின் பதற் றத்தின் கால அளவைச் சகிக்க வைக்கிறார், இது காவல்துறை அரசின் வாழ்வியல் அனுபவத்தைப் பிரதிபலிக்கிறது; "ஐயத்தின் மன நிலையை" (mood of apprehension) உருவாக்குகிறது.

**The Red and the White (1967):**
**போர் ஒரு அருவமான குழப்பமாக**

The Round-Up சிறைச்சாலையின் நிலையான ஒடுக்குமு றையைப் பகுப்பாய்வு செய்தது என்றால், The Red and the White (Csillagosok, katonák) புரட்சி மற்றும் உள்நாட்டுப் போரின் இயக்கக் குழப்பத்தை ஆராய்கிறது. அக்டோபர் புரட்சியின் 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்காக நியமிக்கப் பட்ட இப்படம், அதன் பிரச்சார ஆணையைத் தீவிரமாகத் தகர்த்ததால், அது சோவியத் யூனியனில் மீண்டும் தொகுக்கப்பட்டு இறுதியில் தடை செய்யப்பட்டது. போல்ஷிவிக் வெற்றியின் வீரக் கதையாக இல்லாமல், யான்சோ ரஷ்ய உள்நாட்டுப் போரை ஒரு குழப்பமான, கொலை கார ஓட்டமாக முன்வைக்கிறார், அங்கு சித்தாந் தங்கள் அகற்றப்பட்டு, வன்முறையின் வெறும் பிரயோகம் மட்டுமே எஞ்சியிருக்கிறது.

கதாபாத்திர அடையாளத்தை நிராகரிப்பதில் இப்படம் தீவிரமானது. இதில் ஹீரோக்கள் இல்லை, மையக் கதாநாயகர்கள் இல்லை, பெரும்பாலும் "சிவப்பு" (கம்யூனிஸ்டுகள்) மற்றும் "வெள்ளை" (ஜார் மன்னர் ஆதரவாளர்கள்) ஆகியோரை வேறுபடுத்திப் பார்க்க, அவர் களின் தற்போதைய ஆதிக்க நிலையைத் தவிரத் தெளி வான வழி இல்லை. வீரர்கள் அதே கட்டமைப்புகளை-ஒரு மடாலயம், ஒரு கள மருத்துவமனை, ஒரு நதிக்கரை-தொடர்ச் சியான கொடிய, வடிவியல் மாற்றங்களில் கைப்பற்றப்பட்டு



மீண்டும் கைப்பற்றுகிறார்கள். சிவப்பு வீரர்கள் மரணதண் டனைக்காக வரிசையாக நிறுத்தப்படலாம், ஆனால் கேமரா 180 பாகைகள் திரும்பி, மரணதண்டனை நிறைவேற்றுபவர் களைச் சுற்றி வளைக்கும் வெள்ளைக் குதிரைப்படையை வெளிப்படுத்தி, அதிகார இயக்கவியலை உடனடியாகத் தலைகீழாக மாற்றும். கேமரா நடவடிக்கைகளுக்கு இடையே ஊடுருவி, ஒரு அணிவகுப்பைப் பிடிக்கிறது அல்லது சக்க ரத்தில் சுழலும் குதிரை வீரர்களிடமிருந்து விலகிச் செல்கிறது, இது "நடனமாடப்பட்ட ஒழுங்கின்மை" (choreographed disorder) என்ற உணர்வை உருவாக்குகிறது.



இங்கு மார்க்சிய விமர்சனம் நுட்பமானது. சோசலிச லட்சியத்தின் செல்லுபடியாகும் தன்மையை யான்சோ மறுக்கவில்லை, ஆனால் போர் என்ற இயந்திரத்தில் உள்ளார்ந்த மனிதா பிமானமற்ற தன்மையை அவர் கடுமையாகக்

கேள்வி எழுப்புகிறார். போராளிகளை நிலப்ப ரப்பில் நகரும் உருவங்களாகக் குறைப்பதன் மூலம், பார்வையாளர்களுக்குத் தார்மீக மேன்மையின் வசதியை அவர் மறுக்கிறார். படுகொலைச் சமன்பாட்டில் "சிவப்பு" மற்றும் "வெள்ளை" ஆகியவை மாற்றக்கூடிய மாறிகள். உள்நாட்டுப் போரை ஒரு தார்மீகப் புனிதப்போ ராகச் சித்தரிக்கும் சோவியத் பெருமைப்படுத் தலில் இருந்து இது ஒரு தீவிர விலகல் ஆகும். உள்நாட்டுப் போரின் வெற்றிடத்தில், அதிகாரம் தன்னாட்சி மற்றும் தன்னைத்தானே நிலைநி றுத்திக் கொள்வதாக மாறுகிறது என்றும், அது சேவை செய்வதாகக் கூறும் சித்தாந்தங்களிலி ருந்து துண்டிக்கப்படுகிறது என்றும் படம் கூறுகிறது. நீண்ட காட்சிப் பதிவு இங்கு இடத்தின் ஒற்றுமையைப் பாதுகாக்கும் அதே வேளையில் பார்வையாளரின் நோக்குநிலையைச் சீர்குலைக்கச் செயல்ப டுகிறது, இது வரலாறு என்பது கண்ணுக்குத் தெரியாத சக்தி களால் விளையாடப்படும் ஒரு "சதுரங்க விளையாட்டு" என்ற கருத்தை வலுப்படுத்துகிறது.



30க்கும் குறைவான ஷாட்களில் விரியும் இப்படம், புரட்சியை ஒரு "சோசலிச உணர்ச்சி நாடகமாக" மாற்றுகிறது. வரலாற்று நூல்கள், முழக்கங்கள் மற்றும் நாட்டுப்புறப் பாடல்களை ஓதும், பாடும் மற்றும் ஆடும் விவசாயிகளிடையே கேமரா திரவமாக நகர்கிறது. இங்கே "நடன அமைப்பு" என்பது நேர டியானது; புரட்சி ஒரு திருவிழாவாக, ஒடுக்கப்பட்டவர்களின் வழிபாட்டு முறையாக வழங்கப்படுகிறது. சோச லிசத்தின் புனிதமான பார்வையை உருவாக்க இப்படம் கத்தோலிக்க வழிபாட்டு முறையை மார்க்சியக் கோட்பாட்டுடன் கலக்கிறது. வேலைநிறுத்தத்தை நசுக்க வீரர்கள் வரும்போது, விவசாயிகள் ஓடாமல் அவர்களை ஒரு நடனத்தில் சுற்றி வளைக்கிறார்கள். வேலைநிறுத்தம் செய்பவர்களின் படுகொலை ஒரு ஆழ்துயரமாகச் சித்தரிக்கப்படவில்லை, மாறாக யோசனையின் உயிர்த்தெழுதலை உறுதி செய்யும் ஒரு தியாகச் சடங்காகச் சித்த ரிக்கப்படுகிறது. இறந்த ஒரு சிப்பாய் ஒரு முத் தத்தால் உயிர்த்தெழுப்பப்படுகிறார்; ஒரு இளம் பெண் சிவப்பு ரிப்பனில் சுற்றப்பட்ட கைத்துப்பாக்கியால் ஒடுக்கும் இராணுவம் முழுவதையும் சுட்டுக் கொல்கிறாள்.



### Red Psalm (1971) மற்றும் Electra, My Love (1974): தொன்மம் மற்றும் கற்பனாவாதத்தை நோக்கித் திரும்புதல்

1970களின் முற்பகுதியில், யான்சோவின் பாணி The Round-Up படத்தின் அப்பட்டமான யதார்த் தத்திலிருந்து தூய குறியீட்டியல் மற்றும் சடங்கு முறைக்கு மாறியது. Red Psalm (Még kér a nép) இந்த பாணி ரீதியான பரிணாம வளர்ச் சியின் உச்சத்தையும், மார்க்சியப் புரட்சியு டனான யான்சோவின் மிகவும் நம்பிக்கையான ஈடுபாட்டையும் குறிக்கிறது. 1890களில் ஒரு விவசாய வேலைநிறுத்தத்தைச் சித்தரிக்கும் இப்படம், விடுதலைக்கான பகட்டான, சடங்குரீ தியான அரங்கேற்றத்திற்காக இயற்பண்புவா தத்தின் (naturalism) அனைத்து பாவனைக ளையும் கைவிடுகிறது.

தொன்மத்தை (myth) நோக்கிய இந்த மாற்றம் காடார் ஆட்சியின் அதிகாரத்துவத் தேக்கநிலை குறித்த யான்சோவின் விமர்சனத்தைக் குறிக்கிறது. அவர் கட்சியின் புதைபடிவமான, அரசால் அனுமதிக்கப்பட்ட மார்க்சி





தன்னைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொள்ளாத, அதிகாரத்தின் மெத்தனத்தில் (ஏஜிஸ்தஸால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது போல) தங்கியிருக்கும் ஒரு புரட்சி அதன் நோக்கத்தைக் காட்டிக்கொடுக்கிறது என்று படம் வாதிடுகிறது. படத்தின் இறுதியில் ஒரு சிவப்பு ஹெலிகாப்டரின் வருகை ஒரு "திடீர் திருப்பம்" (coup de théâtre), இது நவீன தொழில்நுட்பத்தின் ஒரு அதிர்ச்சியூட்டும் ஊடுருவல், மார்க்சியக் கற்பனாவாதம் ஒரு தொன்ம இலட்சியமாகவும் எதிர்கால சாத்தியமாகவும் உள்ளது என்பதைக் குறிக்கிறது. இருப்பினும், கேமராவின் இடைவிடாத வட்டமிடுதல் தெளிவின்மையின் ஒரு குறிப்பையும் அறிமுகப்படுத்துகிறது: புரட்சி என்பது சுதந்திரத்தை நோக்கிய ஒரு நேரியல் முன்னேற்றமா, அல்லது கடந்த காலத்தின் வடிவங்களிலிருந்து ஒருபோதும் விடுபட முடியாத வன்முறையின் சுழற்சியா ?

(தொடரும்...)

யத்தைத் தன்னிச்சையான மக்கள் இயக்கத்தின் "படைப்பு மார்க்சியத்துடன்" வேறுபடுத்துகிறார். Red Psalm, புரட்சியின் உண்மையான உணர்வு இந்த வகுப்புவாதப் பரவசத்தில் - "ஒடுக்கப்பட்டவர்களின் திருவிழாவில்" - உள்ளதே தவிர, அரசின் கடினமான கட்டமைப்புகளில் இல்லை என்பதைக் குறிக்கிறது.

இந்தக் கருப்பொருள் Electra, My Love (1974) இல் மேலும் ஆராயப்படுகிறது, இது கிரேக்கத் தொன்மத்தை நிரந்தரப் புரட்சியின் நீதிக்கதையாக மறுகற்பனை செய்கிறது.

Swarnavel@thaiveedu.com



> யான்சோவின் கேமரா கிடைமட்டமானது மற்றும் இடைவிடாதது;
> இது திறந்த வெளியின் மீது ஒடுக்குமுறையின் வடிவியல் வரைபடத்தை வரைகிறது.
> ஏஞ்சலோபுலஸின் கேமரா வட்டவடிவமானது மற்றும் தொல்லியல் சார்ந்தது;
> இது வரலாற்றின் புதைந்த அடுக்குகளைத் தோண்டி எடுக்க 360 பாகைகள் சுழல்கிறது.
> டாரின் கேமரா ஊடுருவக்கூடியது மற்றும் கனமானது;
> இது பார்வையாளரை இறைவனால் கைவிடப்பட்ட உலகின்
> பொருள்சார் யதார்த்தத்திற்குள் பூட்டிவைக்கிறது



# சித்தர்கள் வளர்த்தெடுத்த இரசமருத்துவம்

பால சிவகடாட்சம்

ஆயுள்வேத மருத்துவக் கலையானது இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்திற்கே மட்டுமே உரியது என்று எவரும் கருதியதில்லை. இந்தியாவின் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்கள், தத்தமது பகுதிகளின் காலநிலை, அங்கு எளிதில் கிடைக்கக்கூடிய மருந்து மூலப்பொருட்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, தங்களுக்கேற்ற சிகிச்சை முறைகளை உருவாக்கிக் கொண்டனர். இந்தியப் பொதுமரபாக விளங்கிய ஆயுள்வேதத்தை அடித்தளமாகக் கொண்டு, உள்ளூர் அறிஞர்களின் அறிவுப் பங்களிப்புகளையும் அனுபவத்தின் வழியாகக் கண்டறியப்பட்ட சிகிச்சை முறைகளையும் இணைத்தே, பல்வேறு பிராந்தியங்களில் ஆயுள்வேத மருத்துவம் படிப்படியாக வளர்த்தெடுக்கப்பட்டது.

இவ்வாறு ஆயுள்வேத மரபு தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வந்த அதே நேரத்தில், 'இரசமருத்துவம்' என அழைக்கப்படும் ஒரு தனித்த உடல்நலம் பேணும் மரபும், பண்டு தொட்டே இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்பேசும் மக்களிடையே நிலவி வந்துள்ளது என்பது மருத்துவ வரலாற்றை ஆய்வு செய்யும் அறிஞர்களின் பொதுக் கருத்தாகும்.

> "இந்தியப் பொதுமரபாக விளங்கிய ஆயுள்வேதத்தை அடித்தளமாகக் கொண்டு, உள்ளூர் அறிஞர்களின் அறிவுப் பங்களிப்புகளையும் அனுபவத்தின் வழியாகக் கண்டறியப்பட்ட சிகிச்சை முறைகளையும் இணைத்தே, பல்வேறு பிராந்தியங்களில் ஆயுள்வேத மருத்துவம் படிப்படியாக வளர்த்தெடுக்கப்பட்டது."

## எழுதப்படாத நூல்களின் மரபு:

ஆயுளை நீடிக்கச் செய்யும் வழிமுறைகளை மையமாகக் கொண்ட இரசமருத்துவம், எழுதப்பட்ட நூல்களை விட அனுபவத்தின் மூலம் பெறப்பட்ட அறிவையும் செவிவழியாகக் கற்றுக் கொள்ளப்பட்ட முறைகளையும் அதிகமாக நம்பி வளர்ந்தது. இதன் விளைவாக, ஆயுள்வேதத்தில் காணப்படுவது போன்று ஒழுங்கமைந்த பாடப்புத்தக மரபு இரசமருத்துவத்தில் தெளிவாக உருவாகவில்லை. குரு - சீடர் மரபின் வழியாகவே தலைமுறை தலைமுறையாகப் பரிமாறப்பட்டதால், இந்த மருத்துவ அறிவு நீண்ட காலம் வரை குறிப்பிட்ட சில யோகிகள் மற்றும் துறவிகள் குழுவினரால் பேணப்பட்டு வந்துள்ளது.

## இரசவாதமும் காயகல்பமும்:

இரசமருத்துவ மரபின் மையக் கருத்துகளாக இரண்டு முக்கிய அம்சங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றில் ஒன்று இரசவாதம் ஆகும் - செம்பு போன்ற தாதுக்களைப் பொன்னாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இதன்



அடிப்படையாக இருந்தன. மற்றொன்று காயகல்பம் எனப்படும் கருத்தாகும். இது உடலை முதுமையிலிருந்து காக்கவும், நோயற்ற நீண்ட ஆயுளை வழங்கவும் நோக்கமுடைய சாவா மருந்து பற்றிய சிந்தனையை மையமாகக் கொண்டது.

திருமூலர் இவ்விரு கருத்துகளையும் தமது திருமந்திரம் நூலில் குறியீட்டுப் பாங்கில் விளக்குகிறார்:

***செம்புபொன்னாகும் சிவாயநம என்னில்***
***செம்புபொன்னாகத் திரண்டது சிற்பரம்***
***செம்புபொன்னாகும் ஸ்ரீயுங் கிரீயுமெனச்***
***செம்புபொன்னாவது திருவம் பலமே***

*திருமந்திரம், தந்திரம் 4, பாடல் 903*

***உடம்பார் அழியில் உயிரார் அழிவர்***
***திடம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்***
***உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே***
***உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே***

*திருமந்திரம், தந்திரம் 3, பாடல் 724*

இங்கு 'உடம்பு' என்பது வெறும் உடலாக மட்டுமன்றி, ஆன்மிக சாதனைக்கான ஒரு முக்கிய கருவியாகவும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. உடலைப் பேணுவதன் மூலம் உயிரையும் ஆன்மிக முன்னேற்றத்தையும் வளர்த்துக்கொள்ளலாம் என்ற இந்தக் கருத்தே, சித்தர் மருத்துவத்தின் அடிப்படைத் தத்துவமாக விளங்குகிறது.

## யோகம், தவம், மருத்துவம்:

இரசமருத்துவம் ஒரு வழக்கமான தொழில்முறை வைத்திய முறையாக அல்லாமல், யோக சாதனையின் ஓர் அங்கமாகவே வளர்ச்சி பெற்றது. இதன் காரணமாக, இரச சித்தர்கள் பெரும்பாலும் தவம், தியானம் மற்றும் யோகப் பயிற்சிகளில் ஆழமாக ஈடுபட்டவர்களாக இருந்தனர். அவர்கள் நோயை மட்டும் குணப்படுத்துவதே தங்கள் குறிக்கோளாகக் கொள்ளவில்லை; நோய் வராத உறுதியான உடல்நிலையை உருவாக்குவதே அவர்களின் முதன்மை இலக்காக இருந்தது.

## ஐரோப்பியர் பார்வையில் இரசசித்தர்கள்:

இரச சித்தர்களின் இரசவாதம் மற்றும் காயகல்பம் தொடர்பான ஆய்வுகளில், பாதரசத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆயுளை நீடிக்க உதவும் மருந்துகளுக்குப் பயன்படுத்தப்பட்ட 'இரசம்' என்ற சொல், காலப்போக்கில் பாதரசத்திற்கே பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இது குறித்து மார்க்கோ போலோ (Marco Polo), பிரான்சுவா பேர்னியர் (François Bernier), கார்சியா டி ஓட்டா (Garcia de Orta) போன்ற ஐரோப்பியப் பயணிகளும் மருத்துவர்களும் தங்களின் பதிவுகளில் குறிப்பிடுகின்றனர். இந்திய 'யோகிகள்' பாதரசம் கலந்த மருந்துகளைப் பெரிதும் பயன்படுத்தியதாக அவர்கள் எழுதியுள்ள குறிப்புகள், இரசசித்த மரபின் தனித்துவத்தையும் அதன் உலகளாவிய கவன ஈர்ப்பையும் வெளிப்படுத்துகின்றன.

மார்க்கோ போலோ (1292 CE) பாண்டிய நாட்டில் தாம் சந்தித்த சித்தர்கள் குறித்து பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

'இந்தப் பிரதேசத்தில் வாழும் பிராமணர்கள், உலகின் பிற பகுதிகளில் வாழும் மக்களைவிட நீண்ட ஆயுளைப் பெறுகின்றனர். அவர்கள் பாதரசமும் கந்தகமும் கலந்து தயாரிக்கப்படும் ஒரு பானத்தை அருந்துகின்றனர். அந்தப் பானமே தங்களது ஆயுளை நீடிக்கச் செய்கிறது என்று அவர்கள் நம்புகின்றனர். இப்பானத்தை வாரத்திற்கு இருமுறை அல்லது சில சமயங்களில் மாதத்திற்கு இருமுறை தவறாமல் அருந்துகின்றனர்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வைத்தியரும் பயணியுமான பிரான்சுவா பேர்னியர், 1656 முதல் 1668 வரை சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் இந்தியாவில் தங்கியிருந்தவர். அவர் யோகிகள் குறித்து எழுதிய பதிவுகளில்,

'எப்போதும் அலைந்து திரிந்து, உலகியலான விஷயங்களில் அக்கறையின்றி வாழும் யோகிகளிடம் பல முக்கிய இரகசியங்கள் மறைந்துள்ளன என்று மக்கள் நம்புகின்றனர். இவர்கள் பொன் செய்யும் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் என்றும், பாதரசத்தை மிகுந்த திறமையுடன் சுத்திகரித்து மருந்துகள் தயாரிப்பதாகவும் கூறப்படுகிறது. அந்த மருந்துக் குளிகையை நாள்தோறும் ஒன்று அல்லது இரண்டு எடுத்துக் கொண்டால் நோய்கள் நீங்கி உடல் வலிமை பெருகும் என்று நம்பப்படுகிறது' என்று தெரிவித்துள்ளார்.

பேர்னியரின் எழுத்துகளை உறுதிப்படுத்தும் வகையில், பஞ்சாப் பகுதியில் வாழ்ந்த ஆனந்தநாதர் (Anand Nath) என்ற சித்தருக்கு 1661 அல்லது 1662-ஆம் ஆண்டுகளில் முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் எழுதிய கடிதம் ஒன்று கிடைத்துள்ளது. 89 ஆண்டுகள் வாழ்ந்த அவுரங்கசீப், தமது 43-வது வயதில் எழுதிய அந்தக் கடிதத்தில், அந்தச் சித்தரால் தமக்கு அனுப்பப்பட்ட பாதரச மருந்தின் தரம் குறித்தும், மேலும் சுத்திகரிக்கப்பட்ட பாதரசத்தை மீண்டும் அனுப்புமாறும் கேட்டுள்ளதைக் காணலாம்.

## இரசசித்தர்கள்: வரலாறும் மரபும்:

நெடுங்காலமாக எழுதப்படாத நூல்களாகவே இருந்து வந்த இரசசித்தர் மரபு, இந்திய அறிவியல் மற்றும் மருத்துவ சிந்தனையின் தனித்துவமான ஒரு முகமாக இன்றளவும் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது. இந்தியா முழுவதும் பல சித்தர்கள் குறித்து ஏராளமான விசித்திரமான கதைகளும் மரபு வழிப் பதிவுகளும் பரவலாகக் கூறப்பட்டு வருகின்றன.

## தமிழகத்தின் சித்தர் மரபு:

தமிழகத்தின் 'பதினெட்டுச் சித்தர்கள்' குறித்து அடிக்கடி பேசப்பட்டாலும், தமிழ்நாட்டுச் சித்தர்கள் பட்டியல் எப்போதும் ஒரே மாதிரியாக வழங்கப்படுவதில்லை. நந்திநாதர், திருமூலர், அகத்தியர், கம்பளிச் சட்டைமுனி, காகபுசுண்டர், போகர், சிவவாக்கியர், யூகி, காலாங்கிநாதர், புலிப்பாணி, கொங்கணர், கோரக்கர், கமலமுனி, கருவூரர், பூனைக்கண்ணர், உரோமரிஷி, வரருஷி, சுந்தரானந்தர் போன்ற பல பெயர்கள் வெவ்வேறு பட்டியல்களில் இடம்பெறுகின்றன. சில சமயங்களில் தன்வந்தரி, தேரையர், இடைக்காடர் போன்றவர்களும் பதினெட்டுச் சித்தர்களில் சேர்க்கப்படுகின்றனர்.

சித்தர்கள் அனைவரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்களே என்றும் கூற முடியாது. போகர், புலிப்பாணி, யூகி போன்றோர் சீன தேசத்தைச் சேர்ந்தவர்கள் என சில மரபுகள் தெரிவிக் கின்றன. தன்வந்தரி ஆயுள்வேத மருத்துவத்தின் பிதாமகரா கவும், அறுவைச் சிகிச்சையின் தந்தையாகவும் அறியப்படு கிறார். புத்தபகவானின் மருத்துவரும் சீடருமான ஜீவகன் என் பவரின் நினைவாகவே, பிற்காலத்தில் 'தேரையர்' அல்லது 'தேரர்' என்ற பெயர் நிலைபெற்றதாகக் கருதப்படுகின்றது. மச்சமுனி, கம்பளிச் சட்டைமுனி, காகபுசுண்டர், பத்திரகிரி, கோரக்கர், காலாங்கி போன்றோர் வட இந்தியாவிலும் புகழ் பெற்ற சித்தர்களாக அறியப்படுகின்றனர்.

தமிழகத்தின் சைவ சித்தாந்த மரபில் நந்தி, அகத்தியர் மற்றும் திருமூலர் ஆகியோர் சித்த மரபின் தொடக்க முன் னோடிகளாகக் கருதப்படுகின்றனர். இவர்களுள், திருமூல ரின் வரலாற்று இருப்பை இலக்கியம் மற்றும் தத்துவம் சார்ந்த பல சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. திருமூலர் இயற்றிய திருமந்திரம் என்பது யோகம், தத்துவம், மருத்துவம் ஆகிய மூன்றையும் ஒன்றிணைத்த அரிய படைப்பாகும். இதன் மூலம், தமிழகத்தில் ஒழுங்குபட்டதும் தொடர்ச்சியானதும் ஆன சித்தர் மரபு நிலைபெற்றிருந்ததை அறிய முடிகிறது. உடல்நலத்தைப் பேணுவது ஆன்மிக முன்னேற்றத்திற்கான அடிப்படை என்ற எண்ணமே, இந்த மரபின் முக்கிய தனிச்சி றப்பாக விளங்குகிறது.

## அறிவியல் பார்வையில் சித்தர் மரபு:

உடல்நலம், யோகம், இரசவாதம், ஆன்மிகம் ஆகியவை இணைந்து உருவான தமிழகத்தின் சித்த மரபு, பின்னாளில் தமிழர்களிடையே 'சித்த மருத்துவம்' என்ற பெயரில் ஒரு தனித்துவமான மருத்துவ முறையாக அடையாளம் பெற வழிவ குத்தது.

சித்த மருத்துவத்தில் உலோகங்கள், தாதுக்கள், உப்புகள் மற்றும் பாதரசம் போன்ற பொருட்கள் சிறப்பு முறைகளில் பதப்படுத்தப்பட்டு மருந்துக ளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு 'சுத்தி கரித்தல்', 'சுடுதல்' போன்ற முறையான செயல் முறைகள் மூலம், இயல்பில் நச்சுத்தன்மை கொண்ட பொருட்களும் சிகிச்சைக்கு ஏற்ற பாது காப்பான வடிவங்களாக மாற்றப்படுகின்றன.

தொடக்க காலங்களில் சித்தர்களின் மருத்துவப் பங்களிப்புகள் அலட்சியப்படுத்தப்பட்டாலும், காலப்போக்கில் ஆயுள்வேதியர்கள் சித்தர் மருந் துகளையும் மருத்துவ நடைமுறைகளையும் தங் களின் சிகிச்சை முறைகளில் ஓர் அளவுக்காவது இணைத்துக் கொண்டனர். 13-ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த சாரங்கதாரர் என்பவரே, சித் தர்களின் இரசமருந்துகள், நாடிப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை போன்ற நடைமுறை களை முதன்முதலாகத் தமது ஆயுள்வேத நூலில் சேர்த்துகொண்ட வடமொழி ஆசிரி யராக அறியப்படுகிறார்.

> ***"13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சாரங்கதாரர் என்பவரே, சித்தர்களின் இரசமருந்துகள், நாடிப் பரிசோதனை, சிறுநீர்ப் பரிசோதனை போன்ற நடை முறைகளை முதன்முதலாகத் தமது ஆயுள்வேத நூலில் சேர்த்து கொண்ட வடமொழி ஆசிரியராக அறியப்படுகிறார்."***

இதனால், இரசசித்தர் மரபும் ஆயுள்வேத மருத்துவமும் தனித்தனியாக வளர்ந்தவை அல்ல; மாறாக, ஒன்றுடன் ஒன்று ஊடாடி, பரஸ்பரத் தாக்கங்களை ஏற்படுத்திக்கொண்டு வளர்ந்த அறிவுமுறைகளாக இருந்தன என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இந்தப் பின்னணியில், சித்த மருத்து வத்தை ஆயுள்வேதத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட தனிச்சி றப்புடைய மருத்துவ முறையாக மட்டும் அடையாளப்படுத்த முயல்வது அறிவியல் நோக்கில் பொருந்தாததாகும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், சித்தர்கள் உருவாக்கிய பஸ்பங்கள், செந்தூரங்கள், குளிகைகள் போன்ற மருந்துகளின் தயாரிப்பு முறைகளையும், உலோ கங்கள் மற்றும் கனிமங்களைச் சுத்திகரித்து மருந்தாக்கும் நுட்பங்களையும் விளக்கும் சித்தர் நூல்களைப் பயின்ற சில தமிழ் மருத்துவர்கள், தங்களை 'சித்த மருத்துவர்' அல்லது 'சித்த ஆயுள்வேத மருத்துவர்' என அழைக்கத் தொடங்கினர். பொது ஆண்டு 1920-க்குப் பிறகே 'சித்த மருத்துவம்' என்ற சொல்லாட்சி அரசு ஆவணங்களில் பயன்படுத்தப் பெறத் தொடங்கியது. 'சித்த மருத்துவம்' என்பது தனித்துவமான, சுயாதீனமான ஒரு மருத்துவ முறையாக இருபதாம் நூற்றாண் டுக்கு முன்பே நிலைபெற்றிருந்ததை உறுதிப்படுத்தும் வர லாற்றுச் சான்றுகள் இல்லை என்பதே, இன்றைய ஆய்வுகள் முன்வைக்கும் முக்கியமான உண்மையாகும்.

## தமிழில் சித்த மருத்துவ நூல்களின் தோற்றம்:

இன்று நாம் 'சித்த மருத்துவ நூல்கள்' என்று குறிப்பிடும் தமிழ் மருத்துவ இலக்கியங்கள், ஒரே காலத்திலோ ஒரே சூழலிலோ உருவானவை அல்ல. அவற்றின் மொழிநடை, செய்யுள் அமைப்பு மற்றும் கருத்து வெளிப்பாடு ஆகியவற்றை கவனமாக ஆய்வு செய் தால், கால இடைவெளிகளும் மரபு மாற்றங்களும் தெளிவாகப் புலப்படு கின்றன.

இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, பதினாறாம் நூற்றாண்டில் யாழ்ப்பா ணத்தில் உருவான செகராசசேகரம், பரராசசேகரம்போன்ற நூல்களுக்கும், பதினேழாம் நூற்றாண்டுக்குப் பின்னர் தமிழகத்தில் சித்தர்கள் பெயரில் கிடைக்கப்பெற்ற நூல்களுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகளை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மொழிநடையிலும் யாப்பு, அதாவது செய்யுள் அமைப்பிலும், இந்நூல் களுக்கு இடையே ஒரு தெளிவான இடைவெளி இருப்பது இன்றைய ஆய் வுகளின் மூலம் வெளிப்படுகிறது.

இந்த வேறுபாட்டை எளிதாகப் புரிந்துகொள்ள, நாடிப் பரி சோதனை குறித்த பாடல்களை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

செகராசசேகரம் நூலில் வரும் பாடல் இதோ:




“

**இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், சித்தர்கள் உருவாக்கிய பஸ்பங்கள், செந்தூரங்கள், குளிகைகள் போன்ற மருந்துகளின் தயாரிப்பு முறைகளையும், உலோகங்கள் மற்றும் கனிமங்களைச் சுத்திகரித்து மருந்தாக்கும் நுட்பங்களையும் விளக்கும் சித்தர் நூல்களைப் பயின்ற சில தமிழ் மருத்துவர்கள், தங்களை ‘சித்த மருத்துவர்’ அல்லது ‘சித்த ஆயுள்வேத மருத்துவர்’ என அழைக்கத் தொடங்கினர்.**

”

**அன்னமே கோழி ஓணான் மயிலென நடக்கில் வாதம்**
**பின்னையோர் ஆமை அட்டை பெருகவே நடக்கிற் பித்தம்**
**சொன்ன மாமயில் போல் நல்லாய் தொங்கிய தவளை நாகம்**
**என்னவே நடக்கில் அய்யென் றியம்பினார் நாடிதானே**

இதற்குப் பிற்பட்ட காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் அகத்தியர் வைத்திய காவியம் நூலில் வரும் பாடல்:

**ஆமப்பா வாதம் தானும் அன்னநடை கோழி ஆமை**
**தாமப்பா பித்தம் தானும் தவளையைப் போலே பாயும்**
**போமப்பா ஐயந் தானும் சர்ப்பம்போல் ஓடும் ஓடும்**
**நாமப்பா கண்டு சொன்னோம் நரம்பொன்றில் நாடி மூன்றே**

இரண்டு பாடல்களும் நாடியின் தன்மையை உவமைகளின் மூலம் விளக்குகின்றன. ஆனால் சொல்லாட்சி, நடை, செய்யுள் வடிவம் ஆகியவற்றில் காணப்படும் வேறுபாடு, இவை ஒரே காலத்தைச் சேர்ந்தவை அல்ல என்பதை உணர்த்துகிறது.

இன்று நாம் பொதுவாக ‘சித்தர் வைத்திய நூல்கள்’ என்று அழைக்கும் தமிழ் மருத்துவ நூல்கள் பல, உண்மையில் எந்தக் காலத்தைச் சேர்ந்தவை என்ற கேள்வி நீண்ட காலமாக ஆய்வாளர்களிடையே விவாதமாக இருந்து வருகிறது. மொழிநடை, செய்யுள் அமைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்த பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, சித்தர்கள் பெயரில் இன்று கிடைக்கும் பெரும்பாலான மருத்துவ நூல்கள் 14-ஆம், 15-ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின்னரே உருவானவை எனக் கூறுகிறார். அதேசமயம் இத்தகைய நூல்களின் உள்ளடக்கத்தில் கிடைக்கப்பெறும் செய்திகளும் இவற்றைப் பிந்தைய காலங்களில் ஆக்கப் பெற்றனவாகவே காட்டுகின்றன.

## திருவள்ளுவர் பெயரில் வந்த மருத்துவ நூல்கள்:

திருவள்ளுவர் பெயரில் பத்துக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்கள் உள்ளதாக அறியப்பட்டுகின்றது. அவற்றில் ஞான வெட்டியான் என்ற நூல் அச்சிலும் வெளியாகியுள்ளது. அந்த நூலில் இடம்பெறும் ஒரு பாடலில்,

**‘சாயாமல் அதிவீர ராம பாண்டியன் சொல்லும்**
**தமயந்தி சரித்திர நைடதமும்’**

என்ற வரிகள் வருகின்றன.

இங்கு குறிப்பிடப்படும் நைடதம் என்னும் நூலை இயற்றிய அதிவீரராமபாண்டியன் 16-ஆம் நூற்றாண்டில் (1564-1604) திருநெல்வேலி பகுதியை ஆண்ட மன்னர். 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரசர் ஒருவரை மேற்கோள் காட்டும் இந்த நூலை, பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாக நம்பப்படும் திருவள்ளுவர் எழுதியிருக்க முடியாது. இதன் மூலம், திருவள்ளுவர் பெயரில் வழங்கப்படும் மருத்துவ நூல்கள் பிற்காலத்தில் எழுதப்பட்டவை என்பது தெளிவாகிறது.

## இராவணன் பெயரில் வழங்கப்படும் நூல்கள்:

இதேபோல, இலங்கை மன்னன் இராவணன் பெயரில் வழங்கப்படும் மருத்துவ நூல்களிலும் வரலாற்றுச் சிக்கல்கள் உள்ளன. அவற்றில் அர்க்கப் பிரகாசம் என்ற நூல் குறிப்பிடத்தக்கது. இதில் ‘அர்க்கம்’ எனப்படும் மருந்துத் தயாரிப்பு விளக்கப்படுகிறது. நூல் முழுவதும் இராவணனுக்கும் அவன் மனைவி மண்டோதரிக்கும் இடையிலான உரையாடல் வடிவில் அமைந்துள்ளது.

இந்த நூலில் குறிப்பிடப்படும் முக்கிய நோய் ஒன்று கவனத்தை ஈர்க்கிறது. ‘பறங்கியர்’ என்று அறியப்பட்ட போர்த்துக்கேயர்களால் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்ட பால்வினை நோயான சிபிலிஸ், தமிழில் ‘பறங்கி நோய்’ என்று அழைக்கப்பட்டது. அர்க்கப்பிரகாசத்தில் பறங்கி நோய்க்கு மருந்தாக பாதரசம் கலந்த ‘சங்க திராவகம்’ கூறப்படுகிறது. போர்த்துக்கேயர்கள் இந்தியாவுக்கு வந்த பிறகே இந்த நோய் பரவியதால், இத்தகைய குறிப்புகள் உள்ள நூல்கள்

> *“சித்தர் மருத்துவம் ஒரே காலகட்டத்தில் உருவான ஒன்று அல்ல; காலப்போக்கில் செழித்து வளர்ந்த, உயிர்ப்புள்ள ஒரு அறிவு மரபு என்பதையே சித்தர்கள் பெயரில் இன்று கிடைக்கப்பெறும் நூல்கள் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன.”*

16-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்க முடியாது என்பது வெளிப்படையாகிறது.

மேலும், பறங்கி நோய்க்கு மருந்தாகப் பரிந்துரைக்கப்படும் ‘பறங்கிப்பட்டை’ (சீனவேர்) போன்ற மருந்துப் பொருட்களைக் கூறும் எந்த சித்தர் நூலும் 16-ஆம் நூற்றாண்டுக்கு முன்பதாக இருக்க முடியாது. அந்த அடிப்படையில், அகத்தியர் வைத்திய காவியம் 1500, அகத்தியர் வைத்திய சிந்தாமணி 584, தேரையர் காப்பியம் போன்ற நூல்களும் பிற்காலத்தைச் சேர்ந்தவையாகவே கருதப்படுகின்றன.

அகத்தியர் வைத்திய காவியம் 1500 என்னும் நூலில் பறங்கி பட்டைச் சூரணம் பற்றிக் கூறும் பாடல் ஒன்றை இங்கு நோக்குவோம்.

*போமப்பா கரப்பனொடு கிரந்தி சூலை*
*புண்பொடிகள் கிரந்தி வெட்டை குட்டம் போக*
*நாமப்பா பட்டையிலே சூரணம் சொல்வோம்*
*நல்லவுரு வானதாய் புதுசாய் வாங்கி*
*ஆமப்பா பறங்கி என்ற பட்டை அஞ்சு பலம் தான்*
*அப்பனே தூக்கியபின் அமுக்கிரா சங்கு*
*வேமப்பா சிறு பிரப்பங்கிழங்கு கொன்றைப்பட்டை*
*வெற்றிபுரி சாரணைவேர் கொடிவேலி வேரே*

### தேரையர், போகர், புலிப்பாணி நூல்கள்:

தேரையர் பெயரில் கிடைக்கும் தேரையர் மகா கரிசல் என்னும் நூலில் தெலுங்குப் புலவர் வேமனார் பற்றிக் குறிப்புகள் உள்ளன. வேமனாரின் பாடல்களை ஆராய்ந்த சி.பி. பிரவுண், வேமனார் பொது ஆண்டு 1652-இல் பிறந்தவர் என்றும், அவரது படைப்புகள் 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியவை என்றும் கூறுகிறார். இதனால், தேரையர் மகா கரிசல் 18-ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்குப் பின்னர் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

இராமதேவர் என்னும் சித்தர் அராபியா சென்று இஸ்லாம் மதத்துக்கு மாறி யாகோபு என்னும் பெயருடன் மெக்கா நகருக்குச் சென்று இந்தியா திரும்பியதாக போகர் 7000 (பாடல் 5700) என்னும் சித்தர் நூல் கூறுகின்றது.

*போமேதான் பக்கிரி யாக்கோபுவென்றும்*
*பொங்கமுடன் சாத்திரத்தில் உரைத்தவர் போல்*
*நேமமுடன் வயததும் ஏதென்றக்கால்*
*நிலையான ஆண்டதுவும் இருநூற்றுச் சொச்சம்*
*நாமமுடன் நபிநாயகன் தன்னக் காண*
*நன்னயமாய் மக்கபுரி போனார் தாமே*

இரந்துண்ணும் துறவிகளைக் குறிக்கும் அரபுப் பெயரான ‘பக்கீர்’ என்னும் சொல்லில் இருந்து பிறந்த ‘பக்கிரி’ என்னும் சொல் இந்தியாவில் பதினேழாம் நூற்றாண்டிலேயே வழக்கில் வந்தது.

போகர் பற்றிய பல கதைகளும் பரவலாகச் சொல்லப்படுகின்றன. பழனி முருகன் கோயிலில் உள்ள நவபாஷாண சிலையை வடிவமைத்தவர் போகர் என்பதும் அவற்றில் ஒன்று. ஆனால் போகர் பெயரில் இன்று கிடைக்கும் நூல்கள் பெரும்பாலும் 18-ஆம் நூற்றாண்டில் அல்லது அதற்குப் பின்னர் உருவானவையாகவே தெரிகின்றன. போகர் 7000 நூலில் 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்ட பிரபுலிங்கலீலை பற்றிய குறிப்புகளும், புகையிரதம், நீராவிக் கப்பல், பரசூட் போன்ற நவீன கண்டுபிடிப்புகள் பற்றிய விளக்கங்களும் காணப்படுகின்றன. உலகின் முதல் புகையிரதம் 1825-ஆம் ஆண்டில்தான் ஓடியது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

போகர், புலிப்பாணி ஆகியோர் பெயரில் வழங்கப்படும் வைத்திய நூல்கள் குறித்து, தமிழ் மொழி அகராதியைத் தொகுத்த நா. கதிரவேற்பிள்ளை கூறுவது முக்கியமானது. போகரிடம் கற்ற மாணவர்கள் தங்கள் அனுபவங்களைச் செய்யுளாகப் பாடி போகர் நூலெனப் பெயரிட்டதாகவும், பிற்கால வைத்தியர்களும் தாம் அனுபவத்தால் அறிந்த முறைகளைப் பாடிக் காலந்தோறும் அந்த நூலில் நுழைத்தும் விட்டதாகவும், பிறகு அச்சிடப் புகுந்தோரும் கூட்டியும் திருத்தியும் மாற்றியும் அதனை அடியோடு பிறழ வைத்ததாகவும் கதிரவேற்பிள்ளை கூறுகிறார். போகரின் சீடர் என்று கூறப்படும் புலிப்பாணி பெயரில் உள்ள நூல்களும் அவரால் எழுதப்பட்டவை அல்ல என்பதையும் அவர் தெளிவுபடுத்துகிறார்.

இன்று சித்தர்கள் பெயரில் கிடைக்கும் பெரும்பாலான மருத்துவ நூல்கள், அந்தச் சித்தர்கள் வாழ்ந்ததாக நம்பப்படும் காலத்தைவிட பல நூற்றாண்டுகள் பிந்தியவை என்பது புரிகிறது. சித்தர்கள் கண்டறிந்த மருத்துவ அறிவு நீண்ட காலம் எழுத்து வடிவில் இல்லாமல், வாய்மொழி மரபாகவே தலைமுறை தலைமுறையாகப் பரவி வந்திருக்கலாம். அந்த அறிவுகளைப் பின்னர் சேகரித்தவர்கள், தாம் கேட்டறிந்தவற்றைச் சித்தர்கள் பெயரில் நூல்களாக எழுதி வைத்திருக்க வாய்ப்புள்ளது.

இந்நூல்கள் பிற்காலத் தொகுப்புகளாக இருந்தாலும், அவற்றின் மதிப்பைக் குறைத்துப் பார்க்க வேண்டியதில்லை. மாறாக, சித்தர் மருத்துவ மரபு பல நூற்றாண்டுகளாக எவ்வாறு வளர்ந்து, காலச் சூழல்களுக்கு ஏற்ப மாற்றமடைந்து வந்தது என்பதைப் புரியவைக்கும் முக்கியச் சான்றுகளாகவே இவை விளங்குகின்றன. சித்தர் மருத்துவம் ஒரே காலகட்டத்தில் உருவான ஒன்று அல்ல; காலப்போக்கில் செழித்து வளர்ந்த, உயிர்ப்புள்ள ஒரு அறிவு மரபு என்பதையே சித்தர்கள் பெயரில் இன்று கிடைக்கப்பெறும் நூல்கள் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன.



Sivakadadcham@thaiveedu.com

# பிள்ளைகளைப் பாடசாலைகளிடம் ஒப்படைக்கும் பெற்றோர்களே...

-அகமட் பிஸ்தாமி

thanavishnu@gmail.com

**பிள்ளைகளின் உடலும் மனமும் சிந்தனையும் உணர்வும் அவர்களுக்கே சொந்தமானவை. அவர்களுக்கு எம்மால் வழிகாட்டல் நெறிப்படுத்தல்களை மாத்திரம்தான் வழங்க முடியும். எமது எண்ணங்களை எதிர்பார்ப்ப களைப் பிரதிபலிக்ககூடிய இயந்திரமாக அவர்களை மாற்ற முடியாது.**



புத்தாண்டு மலர்ந்து பிள்ளைகளைப் பாடசாலைகளில் இணைத்து விட்டிருப்போம். பிள்ளைகள் இரண்டு மாதங்களைப் பாடசாலைகளில் கழித்திருப்பார்கள். கிட்டத்தட்ட ஆறு வயதைப் பிள்ளைகள் அடைந்து விட்டால் அவர்களைப் பாடசாலைகளில் ஒப்படைத்து விடுவதற்காகப் பெரும்பாலும் எல்லா பெற்றோர்களும் படாத பாடுபட்டு தவியாய்த் தவிப்பர். பிள்ளைகளுக்கு மிகச்சிறந்த தரமான கல்வியைப் பெற்றுக் கொடுத்து, அவர்களுடைய கல்வி வாழ்க்கையை ஆரம்பித்து, ஒளிமயமான எதிர்காலம் ஒன்றை உருவாக்குவதற்கான சிறந்த எண்ணமாக இது அமையலாம். அல்லது பிள்ளைகளை வீட்டுச் சூழலில் வைத்து வளர்ப்பது, பராமரிப்பது மிகப் பெரும் சுமை எனக் கருதி அவர்களே பாடசாலைகளிலும் ஆசிரியர்களிடமும் ஒப்படைத்துவிட்டு ஓரளவு மனதிருப்தியை எதிர்பார்த்து இதனைச் செய்யலாம். எனினும், பிள்ளைகளை ஆறு வயதில் பாடசாலைகளுக்கு ஒப்படைப்பது என்பது இன்னும் 18 வருடங்களில் மிகச்சிறந்த தரமான முழுமையான ஆளுமையாக (perfect personality) அவர்களைக் காண்பதற்கான முதலீடு ஆகும் என்பதனை மறந்துவிடக் கூடாது.

பெற்றோர்களால் பிள்ளைகளுக்கு அன்பை ஆதரவை கணிப்பை தாராளமாக வழங்கி விட முடியும். ஆனாலும் பெற்றோரின் உட்கிடக்கைகளை (inner desire), மன எண்ணங்களை, உள்ளுணர்வுகளை ஒருபொழுதும் நேரடியாகப் பிள்ளைகளுக்கு கையளித்து விட முடியாது. பிள்ளைகளுக்கென்று தனித்துவமான ஆசைகள், ஆர்வங்கள், எதிர்பார்ப்புகள், எண்ணங்கள் உள்ளன. அவற்றை அடையப் பாடுபடுவது, போராடுவது முயற்சி செய்வது அவர்களது அடிப்படை உரிமை. அவற்றில் யாரும் தலையிட முடியாது. குறிப்பாக



மேற்குலகில் குழந்தை உரிமைகள் கண்ணும் கருத்துமாக கரிசனையோடு பார்க்கப்படுகின்ற சூழலில் பெற்றோரின் பிரதியாக பிள்ளைகளை உருவாக்க எத்தகைய வாய்ப்புகளும் அங்கு இல்லவே இல்லை. சட்டரீதியாக, அது சிறுவர் உரிமை மீறல் (violation on child rights) போல மனித உரிமை மீறலாகவும் கொள்ளப்படும். பிள்ளைகளாலேயே பெற்றோருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குரிய எல்லா ஏற்பாடுகளும் அங்கு காணப்படுகின்றன.

பிள்ளைகளது உடல், அறிவு, ஆன்மா போன்றன அவர்களுக்கே சொந்தமானவை. அவற்றில் எத்தகைய அழுத்தங்களையும் அத்துமீறலையும் பெற்றோர்களாகிய நாம் செய்ய முடியாது. பெற்றோர்கள் வழியாக பாடசாலையில் நிர்வகிக்கக் கூடிய அதிபரோ, ஆசிரியர்களோ கூட எந்த அழுத்தங்களையும் மேற்கொள்ளவே முடியாது. பிள்ளைகளின் உடலும் மனமும் சிந்தனையும் உணர்வும் அவர்களுக்கே சொந்தமானவை. அவர்களுக்கு எம்மால் வழிகாட்டல் நெறிப்படுத்தல்களை மாத்திரம்தான் வழங்க முடியும். எமது எண்ணங்களை எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்ககூடிய இயந்திரமாக அவர்களை மாற்ற முடியாது.

பிள்ளைகளை எமது கடந்த கால கஷ்டங்களைத் துன்பங்களைச் சொல்லிச் சொல்லியே அலுப்புத் தட்ட வைக்காமல் அவர்களுக்கான ஒளிமயமான எதிர்காலத்தை வடிவமைக்க நிகழ்காலத்தை திட்டமிட்டு பயன்படுத்துவதற்கு வசதியான உகந்த சூழலை (comfort zone / suitable environment) ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது பெற்றோர்களாகிய எமது கடமை. அதுபோலவே பிள்ளைகள் கல்வி கற்கக்கூடிய பாடசாலைக் கட்டமைப்பு, சூழல், வகுப்பறை போன்றவற்றையும் ஏற்படுத்திக் கொடுப்பதும் பெற்றோரின் கடமை.

எமது எதிர்பாராத கனவுகளை விடுபட்ட ஆசை அபிலாசைகளை அவர்களுக்கூடாக நிறைவேற்றிக் கொள்ள முனைவது என்பது அப்பட்டமான அத்துமீறலாக பழிவாங்கலாக உரிமை மீறலாகவே அமைகின்றது. எமது உலகம், உணர்வுகள் வேறுபட்டவை போலவே அவர்களது உணர்வு, உரிமைகள், வாழும் காலம், பழக்கம், சூழல்கள், எதிர்பார்ப்புகள், கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் வேறுபட்டவை.

பிள்ளைகளிடம் எந்த அளவுக்கு நாம் உண்மைக்கு உண்மையாக (trustworthy) நேர்மைக்கு நேர்மையாக நீதிக்கு நீதியாக

> **பாடசாலைகளுக்கு பிள்ளைகளைக் கையளித்துவிட்டு பெற்றோர்களால் நிம்மதியாக இருக்க முடியாது. பிள்ளைகளின் ஒவ்வொரு நடத்தையின் மீதும் கூர்ந்த கவனமும் அவதானிப்பும் கரிசனையும் தேவை. பாடசாலைகளிடம் கையளித்து விடுவதால் ஆசிரியர்கள் அவர்களை உருவாக்கி விடுவார்கள் என்று நாங்கள் நினைத்துவிடக் கூடாது.**

அநியாயத்துக்கு எதிராக உடனுக்குடன் குரல் கொடுக்கக் கூடியவர்களாக வாழ்ந்து காட்டுகின்றோமோ அவற்றைப் பிரதிபலிக்கக் கூடியவர்களாக பார்த்து தம்மை தாமே பிள்ளைகளும் மாற்றிக் கொள்வார்கள். இதற்கு மறுதலையாக அவர்களுக்கு நாம் பாடம் எடுக்கவோ விரிவுரை நிகழ்த்தவோ உபதேசங்கள் செய்யவோ முற்பட்டால் நிச்சயமாக இந்தப் பிள்ளைகள் அவற்றைக் கண்டு கொள்ள மாட்டார்கள். கணக்கில் எடுக்க மாட்டார்கள். கடந்து செல்வார்கள். இன்றைய பிள்ளைகள் வித்தியாசமானவர்கள். எதிலும் சுயமாக ஈடுபடுபவர்கள் சுயமாக முடிவெடுக்கக்கூடிய சிந்தித்து தீர்மானம் எடுக்கக்கூடிய ஆற்றலும் திராணியும் வலிமையும் பெற்றவர்கள். அவர்களை நாம் மிகச் சிரமப்பட்டு வளர்த்து ஆளாக்க வேண்டிய தேவைகள் கிடையாது. முன்னெப்போதும் இல்லாத அளவில் பிள்ளைகள் தாமாக வளரக்கூடிய சூழலே இப்பொழுது அவர்களுக்கு கையில் இருக்கின்றன. இதற்கு திறன்பேசிகளும் சமூக ஊடகப் பாவனையும் தக்க சான்று.

பொய் சொல்வதைப் பாவமாக உபதேசிக்கக்கூடிய பெற்றோர்களே தமது தனிப்பட்ட குடும்ப சமூக பொருளாதார வாழ்க்கையிலே பொய் சொல்வதை வாடிக்கையாக வேடிக்கையாக அற்பமாக வழமையாக கொண்டிருந்தால் பொய் சொல்வதில் இருந்து விடுபட்டு, ஒழுக்க விழுமியம் பேணக் கூடிய ஒரு சமூகத்தின் சாமானிய உறுப்பினராக கூட அந்த பிள்ளை வருவதற்கு முனைய மாட்டான். ஏனென்றால், பெற்றோரிடமிருந்து நேரடியாகக் கடத்தப்பட்ட பெற்றுக்கொண்ட கண்ட பழகிய விடயமாக பொய் இருப்பதனை அந்த பிள்ளை நிச்சயம் உணர்வான். மிகச் சிரமப்பட்டே இவை போன்ற துர்க்குணங்களிலிருந்து கடந்து செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலை அவனுக்கு ஏற்படும்.

அதேபோல, வீட்டுச் சூழலிலே பெற்றோர்கள் அறிவுக்கு கொடுக்கின்ற அழுத்தத்தை அடுத்தவர்களது உணர்வுகளுக்கும் நடத்தைகளுக்கும் எண்ணங்களுக்கும் மனப்பாங்குகளுக்கும் கட்டாயம் கொடுக்க வேண்டும். இவற்றைப் புறக்க

ணித்துவிட்டு வெறுமனே வெளிப்படையாக மாத்திரம் நடிக்கக் கூடிய சூழலைத்தான் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கையளிப்பார்களேயானால் நிச்சயம் பிள்ளைகள் தத்தமது பரீட்சை மைய கல்வியில் மாத்திரம் கவனம் எடுத்து செயற்படுவார்கள். உண்மையான கல்வி மனித சமூகத்திலே தோற்றுவிக்க விரும்புகின்ற, உருவாக்க விரும்புகின்ற மானசீக ரீதியான ஒழுக்க ரீதியான பண்பாட்டு ரீதியான மாற்றங்கள் எதனையும் அந்த பிள்ளை கருத்தில் கொள்ளவே மாட்டாது என்பது உண்மை.

பாடசாலைகளுக்கு பிள்ளைகளைக் கையளித்துவிட்டு பெற்றோர்களால் நிம்மதியாக இருக்க முடியாது. பிள்ளைகளின் ஒவ்வொரு நடத்தையின் மீதும் கூர்ந்த கவனமும் அவதானிப்பும் கரிசனையும் தேவை. பிள்ளைகளிலே ஏற்படக்கூடிய உடலியல் ரீதியான உயிரியல் ரீதியான சமுகவியல் ரீதியான மாற்றங்கள், வயதுக்கு ஏற்ற மாற்றங்கள், நண்பர்களால் சூழலால் ஏற்படக்கூடிய மாற்றங்கள், சிந்தனை சார்ந்த மாற்றங்கள் போன்ற அனைத்தையுமே பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டும். பாடசாலைகளிடம் கையளித்து விடுவதால் ஆசிரியர்கள் அவர்களை உருவாக்கி விடுவார்கள் என்று மாத்திரம் நாங்கள் நினைத்துவிடக் கூடாது. பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை மூலப்பொருளாகக் கையளித்துவிட்டு அவர்கள் பிள்ளைகளை முடிவுப் பொருளாக மாற்றி அனுப்புவார்கள் என எண்ணுவது தவறு. பிள்ளைகள் உயிருள்ள ஜீவன்கள் எனவே, உடலுக்கு மாத்திரம் அல்ல உணர்வுக்கும் சிந்தனைக்கும் அவர்களுடைய வளர்ச்சிக்கும் ஏற்ப வழிகாட்டல் பாடசாலைகளில் வழங்கப்படுகின்றனவா என்ற விடயத்திலும் பெற்றோரின் கவனம் குவிய வேண்டும்.

அதே போல பிள்ளைகளிடம் தன்னம்பிக்கையை (self confidence) கட்டி எழுப்பக் கூடிய அளவுக்கு அவர்களுடைய உள்ளார்ந்த அக ஆளுமையிலும் பெற்றோர் பாடசாலைகளுக்கூடாகவும் பாடங்களுக்கூடாகவும் பாட ஆசிரியர்களுக்கூடாகவும் வழிகாட்டல்களை வழங்க வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் பிள்ளைகளைக் கண்ணியத்தோடு நடத்த வேண்டும். அவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். அவர்களுடைய கருத்துகளைச் செவி தாழ்த்தி கேட்க வேண்டும். கருத்துச் சொல்ல அவர்களுக்கு சுதந்திரம் அளிக்க வேண்டும். தெரிவுகளுக்கு அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். பிழை விடுகின்ற பொழுது அந்தப் பிழையைச் சுட்டிக்காட்டி அதனைச் சீர் செய்ய அல்லது சரியான முடிவு எடுப்பதற்கு அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். வீட்டுச்சூழலில் பிள்ளைகள் பெற்றோரிடம் இருந்து பெற்றுக் கொள்கின்ற மிகத் தரமான வாழ்நாள் நீடித்த நிலையான கல்வியாக வாழ்க்கைப் பாடமாக அமையும்.

பிள்ளைகளை எந்த சந்தர்ப்பத்திலும் அசௌகரியத்திற்கும் நெருக்கடிக்கும் தர்ம சங்கடமான நிலைக்கு ஆளாக்கிவிட இடம் தரக்கூடாது. அத்தகைய நிலைப்பாடுகளுக்கு அவர்கள் ஆட்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அதிலிருந்து அவர்களை விடுவிக்க அவர்களுடைய உள்ளத்தை அழுத்தத்திலிருந்து வெளியேற்ற எம்மாலான உடனடி உதவிகளைச் செய்து அவர்களுக்கு அந்த ஆத்ம சக்தியை ஆத்ம பலத்தைக் கொடுக்கக் கூடியவர்களாகப் பெற்றோர்கள் இருக்க வேண்டும்.

பிள்ளைகளுடைய நடத்தைகளிலே கோளாறுகளை முரண்பாடுகளை அவதானிக்கின்ற பொழுது அவற்றை அன்பாக ஆதரவாக கனிவாக கரிசனையாக எடுத்துக்காட்டி அவர்களை அவற்றிலிருந்து விடுவிக்கும் முறைமைகளைப் பெற்றோர்களாகிய நாம் தேடிக் கற்றுப் பயிற்சி பெற வேண்டும்.

வேலைப் பளுவும் சோலிகளும் நிறைந்த நெருக்கடியான இன்றைய நவீன யுக வாழ்க்கைக்கு மத்தியில் எமது அழுத்தங்களுக்கு எமது பிள்ளைகள் இரையாகி விடாமல் அவர்களுக்கான நேரத்தை ஒதுக்கி அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்துக்கான தூண்களாக முதுகெலும்புகளாக நாம் இருக்க வேண்டும்.

அதேபோல, பிள்ளைகளை ஆளுமையாக உருவாக்குவதில் அவர்களுடைய சுதந்திரத்தில் நாம் எந்த வகையிலும் தலையீடு செய்யக்கூடாது. இதனுடைய அர்த்தம் அவர்கள் விரும்பியபடி வாழ்வதற்கு இடம் தருவது என்பதல்ல. அவர்கள் குறைந்தபட்சம் அவர்களுடைய சில விடயங்களிலாவது நம்பிக்கையோடு உறுதியோடு முடிவுகளை எடுக்கக் கூடிய அளவுக்கு அவர்களுக்கும் சுதந்திரத்தை வழங்க வேண்டும். எல்லா விடயங்களிலும் அவர்களுடைய தனிப்பட்ட விவகாரங்களில் நாங்கள் தலையீடு செய்யக் கூடாது. அது அவர்களுடைய ஆளுமையைச் சிதைக்கக் கூடியதாக இருக்கும் அல்லது பெற்றோர் குறித்தோ சமூகம் குறித்தோ எதிர்மறை எண்ணங்கள் அவர்களில் உருவாக வழியமைக்கும். இது எதிர்காலத்தில் எம்மை அறியாமலேயே சமூக விரோதிகளாக அவர்கள் மாறுவதற்கும் ஏதுவாக இருக்கலாம்.

பிள்ளைகள் எப்பொழுதும் புதுமையை விரும்புவார்கள். எனவே எங்களுடைய பிள்ளைகளைச் சேர்த்து விடுகின்ற பாடசாலைகள், வகுப்பறைகள், பிள்ளைகளின் நண்பர்களது பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை சமூகம், பாடசாலைக்கு உதவி செய்யக் கூடியவர்கள் என எல்லோருடனும் எமது தொடர்பு கட்டாயம் இருக்க வேண்டும். அதேபோல, பிள்ளைகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் உத்வேகமும் தரக்கூடிய அளவு எமது பாடசாலையை, வகுப்பறையை நாம் அமைத்துக் கொடுக்க வேண்டும். அதேபோல பிள்ளைகள் வீட்டிலேயே கற்பதற்குகந்த, பொருத்தமான, ஆரோக்கியமான, ரசிக்கத்தக்க சூழலை அவர்களுக்கு நாங்கள் உருவாக்கிக் கொடுக்கின்ற பட்சத்தில்தான் அவர்களும் கற்றலைச் சுறுசுறுப்பாகவும் விறுவிறுப்பாகவும் பெற வேண்டும் என்ற உள்ளுணர்வைப் பெறுவார்கள்.

இந்த வழிகாட்டல்களை நாம் கட்டாயம் கருத்தில் கொள்ள வேண்டும். வெறுமனே, பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை நாம் ஒப்படைத்து விடுவதால் மாத்திரம் வருட முடிவிலோ அல்லது பிள்ளைகளின் கல்வி வாழ்க்கை நிறைவடைகின்ற பொழுதோ முழுமையான, பரிபூரணமான அறிவுத் திறன், ஆளுமை, சிந்தனை, மனவெழுச்சி மேம்பாடு போன்றவற்றில் பூர்த்தியான ஒரு உருவாக்கத்தை கண்டு கொள்ள முடியாமல் போகும்.



bisthamy.ahamed@thaiveedu.com




# கனடாவில்

## கல்விவளப் பங்கீட்டுச் சமத்துவமின்மையும் கல்வித்தர வீழ்ச்சியும் காணப்படுகின்றதா

த. சிவபாலு

கல்வி வளப் பங்கீட்டுச் சமத்துவ மின்மை (Inequety Distibution of Resource) என்பது தனிமனிதர்களுக்கிடையே மட்டுமன்றி மாகாணங்களுக்கு மாகாணங்களும் வேறுபட்டனவாகக் காணப்படுகின்றன. கனடா அரசாங்கம் அனைவருக்கும் ஒரே வகையான கல்வி வளங்களை வழங்குவதில்லை என்ற குறை நீண்டகாலமாக நிலவிவருகின்றது. கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியில் மாகாணத்திற்கு மாகாணம் மட்டுமன்றி மாகாணங்களுக்குள்ளேயும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. கனடாவில் ஏற்பட்டுள்ள கல்விக்கான நெருக்கடி நிலைமைகளால் 90% மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதனைக் கடந்த ஜனவரி 13, 2025-இல் கனடா ஆசிரிய கூட்டமைப்பு எடுத்துக் காட்டியுள்ளது. கனடாவின் கல்வித்தரம் பற்றிப் பல்வேறு கருத்தூன்றிய கவனிப்புகள், நாட்டின் கல்விக்கான இலக்குகள் என்பவை எதிர்காலத் தேவையை உணர்ந்து, மாற்றத்தை உள்வாங்கி, எதிர்காலத்திற்கான மாணவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும்.

ஒரு நாட்டின் மேம்பாடு அந்த நாட்டுக் கல்வி முறையிலேயே தங்கியுள்ளதென்பது வரலாறு கற்றுத்தந்த பாடம். கனடாவில் கல்வி வரலாறு ஐரோப்பியரின் வருகையோடு தொடர்புபடுகின்றது. அவர்கள் கல்வியின் ஊடாகத் தமது மதத்தையும் மொழியையும் பரப்புவதோடு தங்கள் நடைமுறைகளையும் அவர்களை ஏற்றுக் கொள்ளவைப்பதனை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுள்ளனர். எது எவ்வாறெனினும் ஐரோப்பிய கல்வி வரலாற்றை கனடாவில் புகுத்தியதன் மூலம் கனடா கல்வி முறையில் புதிய மாற்றங்கள் புகுத்தப்பட்டன. இதனால் உலக நாடுகளோடு ஒப்பிடக்கூடிய கல்வித்தரத்தைக் கனடா எட்டியுள்ளது என்பது மறுப்பதற்கில்லை. அண்மைக்காலப் போக்குக்கள் கனடாவில் கல்வித்தரத்தில் வீழ்ச்சியைக் காட்டுவதற்கு கல்விமீதான அரசின் அக்கறை குறைந்து வருகின்றது என்னும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளின் கல்வித்தரம் அதன் முன்னேற்றம் மட்டுமன்றி கல்விக்கொள்கைகள் பயிற்று முறைகள், பாடத்திட்டம் என்பவை பற்றிய கணிப்பீட்டையும், தரத்தையும் மேற்பார்வை செய்து, அளவிட்டு அறிக்கை சமர்ப்பிப்பதில் ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார (UNESCO) அமைப்பு முக்கிய பங்காற்றி வருவது உலகறிந்த விடயம். இந்த அமைப்பு கனடாவின் கல்வித்தரம் பற்றிக் காலத்திற்குக் காலம் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. அதே வேளை கனடாவின் கல்வி மாகாண அரசாங்கத்தின் கீழ் உள்ளமையால் கல்விமுறை அமைப்பு பாடவிதானம் என்பன மாகாணங்களுக்கு மாகாணம் வேறுபாடுடையதாகக் காணப்படுவதால் கல்வித் தரத்திலும் வேறுபாடுகளைக் காணமுடிகின்றது. சில மாகாணங்கள் விஞ்ஞானம் கணிதம் போன்ற பாடங்களில் முதன்மை வகிக்கின்றன. சில மாகாணங்கள் இவற்றில் பின்னடைவைக் காட்டுகின்றன. இவற்றைவிடக் கனடாவில் கல்வித் தரத்தைத்

“கனடாவில் கல்வி வரலாறு ஐரோப்பியரின் வருகையோடு தொடர்புபடுகின்றது. அவர்கள் கல்வியின் ஊடாகத் தமது மதத்தையும் மொழியையும் பரப்புவதோடு தங்கள் நடைமுறைகளையும் அவர்களை ஏற்றுக் கொள்ளவைப்பதனை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டுள்ளனர்.”

தீர்மானிப்பவையாக கல்வியமைச்சின் ஆதரவு, வேலை வாய்ப்புகள், வேலைகளின் உறுதியற்ற தன்மை, வேலைகளின் தரமின்மை, மாணவர்களின் கல்விமீதான அக்கறையின்மை, அதிக மாணர்களைக் கொண்ட வகுப்பறைகள், பாடசாலை மாணவர்களிடையேயான வன்முறை அதிகரிப்பு, மாணவர்களின் மீது திணிக்கப்படும் அதிகளவு வேலைப்பழு, சிக்கலான பாடவிதானம், வருமான ஏற்றத்தாழ்வு, கல்வி இலக்குக்களைத் துரிதப்படுத்துதல், நீண்டகால (கோடைகால) விடுமுறை, கற்றல் முறைகளில் மற்றும் பாடவிதானங்களில் ஏற்படும் மாற்றங்கள் என்பன கல்வியின் தரத்தைப் பாதிப்பதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

> **“மாணவர்கள் தாங்கள் நினைத்ததைப் பெறுமுடியாதுள்ளது என்பதும் அனைவருக்கும் சமத்துவமான கல்வி என்பதால் விரைவாகக் கற்கும் மாணவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதும் சவாலாக உள்ளது.”**

## கனடாவின் கல்வித்தரம் வீழ்ச்சிப்போக்கு:

கல்வி அடைவுத்தரத்திற்கான, சர்வதேச கூட்டாண்மை சர்வதேச தராதரப் பரீட்சை ஒவ்வோர் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது. அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் 2024-இல் 64 நாடுகளை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி கனடா 32-வது இடத்திற்கு நகர்ந்துள்ளதைக் காணமுடிகின்றது. கனடாவில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மாகாணத்திற்கு மாகாணம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அது மட்டுமன்றி கனடாவின் பழங்குடி மாணவர்களுக்கான வளப்பங்கீடு வளர்ச்சியடைந்த மாகாணங்களோடு ஒப்பிடும் போது மிகக் குறைவாகவே உள்ளது. ஆசிரியர் வளம், நிதியோடு தொடர்புடையதாகக் காணப்படுவதால் கணிதம், வாசிப்பு, விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச மாணவர் மதிப்பீடுகளில் முதனிலையை ஆசிய நாடுகளான ஜப்பான், சிங்கப்பூர், தென் கொரியா ஆகியவை உச்சத்தில் நிற்பதாக அப்பரீட்சை முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்தத் தேர்வுகளின் முடிவுகள் 2022 ஆண்டோடு ஒப்பிடும் போதுவீழ்ச்சியடைந்துள்ளமையை அவ்வாய்வு சுட்டிக்காட்டுகின்றது. 81 நாடுகளைச் சேர்ந்த 690,000 மாணவர்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இதில் கனடாவில் உள்ள 867 பாடசாலைகளைச் சேர்ந்த 23,000 மாணவர்கள் கணிதம், வாசிப்பு அல்லது விஞ்ஞானப் பாடங்களின் பரீட்சைக்கு உள்வாங்கப்பட்டிருந்தனர். உண்மையிலேயே இந்த வீழ்ச்சிவீதம் ஒன்ராறியோ, பிரிட்டிஸ்கொலம்பியா மற்றும் அல்பேட்டா மாகாணங்களில் வீழ்ச்சி வீதம் குறைவாகவும் மற்றய மாணங்களில் மிக அதிகமாகவும் காணப்படுவதாக ஆய்வு எடுத்துக்காட்டியுள்ளது. இது கல்வி அமைச்சை மட்டுமல்ல அனைத்துக் கல்வி அலுவலர்களையும் சிந்திக்க வைத்துள்ளது. இதன்படி சிங்கப்பூரைச் சேர்ந்த மாணவர்கள் 575 புள்ளிகளைக் கணிதத்திலும் 543 புள்ளிகளை வாசிப்பிலும், 561 புள்ளிகளை விஞ்ஞானத்திலும் பெற்றிருந்தார்கள். கனடாவில் கணிதத்தில் 497 புள்ளிகளையும், வாசிப்பில் 507 புள்ளிகளையும் விஞ்ஞானத்தில் 507 புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இது கனடாவின் கல்வி முறைக்கு ஓர் எச்சரிக்கையாக அமைந்தது என பிரேஸர் நிலையம் அறிவித்துள்ளது. கனடாவின் கல்விமுறைமையில் பல்கலைக்கழக புகுமுக புள்ளிகளுக்கான தேர்வுகள் இலகுபடுத்தப்பட்டுள்ளமையையும் அவை தராதரத்தைக் குறைத்துள்ளன என்பதையும் அது சுட்டிக்காட்டுகின்றது.

கல்வி பெறும் முறைமையில் அனைவருக்கும் இடமளிக்கவேண்டும் என்னும் கொள்கை முன்வைக்கப்படுகின்றது. இதனால் மதிப்பீட்டுத் தரத்தைக் குறைத்து சமநிலையைப் பேண விளைவதனால் கல்வித்தரத்தில் வீழ்ச்சி ஏற்படுகின்றது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. தகமை கூடிய மாணவர்கள் தாங்கள் தொடர்ந்து காட்டிவந்த ஈடுபாட்டைக் குறைத்துக்கொள்கின்றார்கள் என ஆசிரியர்கள் குறைகூறுகின்றனர். மாணவர்கள் தாங்கள் நினைத்ததைப் பெறுமுடியாதுள்ளது என்பதும் அனைவருக்கும் சமத்துவமான கல்வி என்பதால் விரைவாகக் கற்கும் மாணவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதும் சவாலாக உள்ளது. அதாவது புத்திக்கூர்மை உள்ள பிள்ளைகளின் கற்றல் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் மழுங்கடிக்கப்படுகின்றன. ‘வேகமாகக் கற்பவர்களை முன்னோக்கித்தள்ளு, மெல்லக் கற்பவர்களை இழுத்துச் செல்’ என்னும் கோட்பாடு இங்கு பின்பற்றப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர்களின் திமைக்கேற்ப அவர்கள் வழி நடத்தப்பட வேண்டும் என்பது கனடாவின் கல்வி முறைமையால் மழுங்கடிக்கப்படுகின்றது.

- **கல்வி அமைச்சின் ஆதரவின்மையும் தவறுகளும்:**

கல்வி அமைச்சின் செயற்பாடுகளும் பொறுப்புகளும் பற்றிப் பார்க்கும்போது கல்விக்கொள்கைகளை விருத்திசெய்தல், நடைமுறைப்படுத்துதல், பாடசாலைகளுக்கு நிதிகள் மற்றும் வளங்களை ஒதுக்குதல், பாடசாலைகளின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், கல்வித்தரத்தை மேம்படுத்துதலும் தலையிடுதலும் போன்றவற்றை மேற்கொள்ளும் கடப்பாடுடையது.

அதேபோன்று கல்வி அமைச்சின் பொறுப்புகள்களாக கல்வித் தரத்தை ஒழுங்கமைத்தல், பாடவிதான விருத்தி மற்றும் மறுபரிசீலனை, கல்விச் சமநிலையைப் பேணுவதை உறுதிப்படுத்துதல், ஆசிரிய பயிற்சிகளும் விருத்தியும் என்பன உள்ளன. இவை எவ்வளவிற்கு செயற்படுத்தப்படுகின்றன என்பதைப் பொடுறுத்தே கல்வித் தரத்தை உயர்த்த முடியும்.

- **உறுதியற்ற வேலை நிலைமைகள்:**

ஆசிரியத் தொழில் இன்று மிகவும் சவால்கள் நிறைந்தவையாகவும் நிச்சயமற்ற தன்மை உடையதாகவும் காணப்படுவதற்குக் கல்வி அமைச்சின் செயற்பாடுகளே காரணமாகும். தொடர்ந்து வேலையில் பயணிக்க முடியுமா என்ற ஐயம் ஆசிரியர்களிடம் எழுந்தவண்ணம் உள்ளது. என்னதான் தொழிற்சங்கங்கள் போர்க்கொடி தொடுத்தாலும் கல்வி அமைச்சு தமது கல்விச் செலவினத்தைக் குறைத்துக்கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு மேலதிக வேலைப் பழுவைச்



சுமத்துகின்றது என்பது உண்மைதான். மாணவர்களின் தொகையை 16-இல் இருந்து 23, பின்னர் 30 ஆக அதிகரித்த காலங்களில் ஆசிரியர்கள் பலர் பணியில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டனர். இதனைவிட மாணவர்களோடு ஊடாடு வதும் இன்றைய காலகட்டத்தில் மிகவும் சிக்கலாக அமைந் துவிடுகின்றது. எடுத்துக்காட்டாக ஒரு மாணவருக்கு ஆசிரி யர் ஏசிவிட்டார் அல்லது அடித்துவிட்டார் எனப் பெற்றோர் முறையிட்டால் அந்த ஆசிரியர் விசாரணை முடியும் வரை பாடசாலைப் பக்கமே தலைகாட்டக்கூடாது என்ற மிக கடினமான வரையறைக்கு உட்பட்டு ஆசிரியர்கள் கொதி நீரில் நிற்பது போன்று வகுப்பறைகளில் செயற்படவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

- **மிகவும் வறிதான வேலை நிலைமைகள்:**

ஆசிரியர்களின் வேலை நிலைமைகள் மிகவும் தன்னார்வ மற்ற, தன்னிச்சையாக இயங்கமுடியாத நிலைமைகளைக் கொண்டுள்ளது. வகுப்பறைகளில் போதிய வளங்கள் அற்ற நிலைமைகள், மாணவர்கள் தொகை அதிகம், இரண்டு ஆசி ரியர்கள் செய்யவேண்டிய பணியை ஒரு ஆசிரியர் செய்ய வேண்டிய நிலைமைகள், வகுப்பறையில் உதவியாளருக்குப் பணிகளை நல்கவேண்டிய நிலைமை, மாணவர்களோடு உத வியாளரையும் மேற்பார்வை செய்யவேண்டிய நிலைமைகள், அதிகமான மாணவர்களுக்குத் தனித்தனியாக உதவவேண் டிய நிலைமைகள், மாணவர்களின் முன்னேற்றம் தொடர் பாகப் பொறுப்புக்கூற வேண்டிய நிலைமைகள், விரைவாகக் கற்கக்கூடிய மாணவர்களுக்கும் மிகவும் மந்த கதியில் கற்கும் மாணவர்களுக்கும் அவர்களின் கற்றல் முறைகள் தேவைகள் என்பனவற்றை நிவர்த்தி செய்யவேண்டிய கடப்பாடு உண்டு. மாணவர்களின் கல்வித்தரத்தைப் பேணத் தக்க வகையில் அனைத்து மாணவர்களின் முன்னேற்றத்தை அளவீடு செய்து அவர்களின் அடைவுகளை மறுபரிசீலனை செய்யவேண்டிய பாரிய பொறுப்பும் ஆசிரியர்களுக்கு உண்டு. இவற்றைவிடத் தம்மை சுயமதிப்பீடு செய்வதோடு தங்களது கற்பித்தல் முறைமைகள், திறன்களை அதிகரிக்கவேண்டிய செயற்பாடுகளுக்குப் போதியளவு காலமும், நிதியும் ஒதுக் கப்படாமை போன்ற விடயங்கள் ஆசிரியத் தொழிலை வறிதாகவே ஆக்குகின்றது.

- **மாணவர்களின் அக்கறை இன்மை:**

இன்று ஆசிரியர்களும் பெற்றோர்களும் எதிர்கொள்ளும் மிகவும் கவலை தரும் விடயம் மாணவர்களின் அக்கறை இன்மை. இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. ஏன் மாணவர்களின் ஈடுபாடு குறைவடைந்து செல்கின்றது என்பது இன்று கல்வியாளர்களிடமும் பெற்றோரிடமும் எழும் கேள்வியாகும். இந்தப் போக்குக் கனடாவின் ஆதிக்குடிகள் மத்தியில் அதிகளவாகக் காணப்படுகின்றது என்பதை ஐ.நா. கல்வி விஞ்ஞான கலாசார அமையம் எடுத்துக்காட்டியுள் ளது: ‘எல்லாக் குழந்தைகளும் வாழ்க்கையில் ஒரு சமமான வாய்ப்பைப் பெற உரிமை கொண்டிருக்கின்றனர்,’ என்று மோர்லி கூறினார். ‘கனடாவிலும், அதிகமான கனடாவின் முதல்குடி (Indigenous) குழந்தைகள் பின்தங்குகின்றனர். ஜாதியியல் அடிப்படையில் பாகுபட்டுள்ள மக்கள் குழுக் களில் உள்ள குழந்தைகள், பராமரிப்பில் உள்ள குழந்தை கள் மற்றும் இளைஞர்கள், வறுமை மற்றும் பிற வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ளும் குழந்தைகள் அனைவரும் தங்கள் தனிப்பட்ட திறன்களுக்கு இணையான உரிமைகள் கொண்டு சேர்க்கப்படுவதற்கும் பராமரிக்கப்படுவதற்கும் உரிமை உள்ளவர்கள்.’

ஐ.நா. கல்வி விஞ்ஞான கலாசார அமையத்தின் அறிக்கை கல்வி சமத்துவத்திற்கு எதிரான அபாயங்களை அடையா ளம் காட்டுகிறது. வருமானத்தில் உள்ள பாகுபாடு கல்வி இடைவெளிகளை மூடியுள்ளதைக் கடினமாக்குகின்றது. இது கல்விச் சாதனை இடைவெளியின் இரண்டு பக்கங்களிலும் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் சவால்களை உரு வாக்குகிறது.

மாணவர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்குப் பெற்றோர், ஆசிரியர் பாடசாலைகளுடன் இணைந்து செயற்படவேண் டியது அவசியமாகின்றது. மாணவர்கள் வாழும் சூழல், அவர் களின் தொடர்புகள் என்பனவும் அவர்களின் கல்விமீதான ஈடுபாட்டை அதிகரிக்கவோ அன்றிக் குறைக்கவோ முடியும். மாணவர்களின் கற்றல்மீதான ஈடுபாட்டைப் பெற்றோர் அறிந்து கொள்ளத்தக்க வகையில் ஆசிரியர்-பெற்றோர் சந்திப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. பாடசாலைகளும் பெற்றோரும் இணைந்து மாணவர்களின் வரவை அதிகரிப்பதோடு அவர் களின் செயற்றிறனை மட்டுமன்றி ஈடுபாட்டையும் அதிகரிக்க

முடியும். பெற்றோரின் கண்காணிப்பு மட்டுமன்றி பாடசாலைகளில் மாணவர்களின் கற்றல் ஈடுபாடு பற்றிய தெளிவைப் பெற்றோருக்குத் தெரியத்தக்கதாக பெற்றோர் ஆசிரியர் ஊடாட்டம் அதிகரிக்கப்பட வேண்டும். கனடாவில் 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை பெற்றோருக்குச் சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளமையும் ஒரு சாபக்கேடாகவே உள்ளது. கற்றலுக்கான நிதியினைப் பெற்றோரே பொறுப்பேற்க வேண்டும் என்றாலும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமைகள் மாணவர்களின் கல்விமீதான அக்கறையின்மையை தடுக்கமுடியாததாக ஆக்கியுள்ளது என்பது கருத்திற்கொள்ளற்பாலது.

### சிக்கல் நிறைந்த அளவுக்கு அதிக மாணவர்களைக் கொண்ட வகுப்புகள்:

மாணவர்கள் அதிகமாக உள்ள வகுப்புகளில் தனிப்பட்ட கவனிப்புகள் குறைவடையும், ஒவ்வொரு மாணவருக்கும் தேவையானவற்றை திருப்தியாகச் செய்ய முடியாத நிலைமை, அவர்களின் தேவைகள் தொடர்பில் ஆசிரியர் அறிந்து செயற்படமுடியாது இருப்பதால் ஆசிரியர், மாணவர்களுக்கிடையிலான இடைவெளி அதிகரித்துச் செல்லும்.


**“ வகுப்பறைச் செயற்பாடுகளில் எல்லா மாணவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்பதால் குறைந்தளவான செயற்பாடுகளையே மேற்கொள்ள முடியும். மாணவர் செயற்பாடுகள் குறைவடைய அவர்களின் கவனம் வேறு திசைக்குத் திரும்பவும் வழிவகுக்கும். ”**


மாணவர்கள் அதிகமாக இருப்பதால் பிரத்தியேகக் கவனிப்புகள் குறைவடையும், மாணவர்களின் கற்கும் திறன்கள் குறைவடையும், மாணவர்கள் கட்டுப்பாடின்றி ஏனையோருடன் உரையாடுவார்கள், தங்கள் பக்கம் கவனத்தை ஈர்க்க ஏதாவது செய்து ஆசிரியரின் கவனத்தை மறுபக்கம் திரும்பச் செய்வார்கள். இது ஆசிரியர்களுக்கு அதிகளவு சிரமத்தைத் தருவதாக அமைகின்றது.

வகுப்பறைச் செயற்பாடுகளில் எல்லா மாணவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்பதால் குறைந்தளவான செயற்பாடுகளையே மேற்கொள்ளமுடியும். மாணவர் செயற்பாடுகள் குறைவடைய அவர்களின் கவனம் வேறு திசைக்குத் திரும்பவும் வழிவகுக்கும். அதிக உதவி தேவைப்படும் மாணவர்களுக்குப் போதிய தேவைகள் பூர்த்திசெய்ய முடியாத நிலைமை ஏற்படும்.

### அதிகரித்துவரும் வன்முறையும் ஆக்கிரமிப்பும்:

அதிகளவு மாணவர்கள் இருக்கும் இடங்களில் குறும்புத்தனம், சிறு சிறு சேட்டை விளையாட்டுகள் விபரீதமாக முடிந்து வன்முறைக்கு இட்டுச் செல்வதைக் காணமுடிகின்றது.

சில பாடசாலைகளில் வலுவளர் பிள்ளைகளை இணைத்துக் கொள்வதால் அவர்களின் வன்முறைகள் வகுப்பறைகளில் இடம்பெறுவதும் பெற்றோரை அழைத்து அவர்களை வீட்டிற்கு அனுப்புவதும் வழக்கமாக உள்ளது. இவற்றைவிட அதிகளவு மாணவர்கள் வகுப்பில் உள்ளமையால் அவர்கள் அனைவரையும் மேற்பார்வை செய்வது மிகவும் சிரமமாகவும் சிக்கலானதாகவும் உள்ளமையை ஆசிரியர்கள் எதிர்கொள்கின்றனர். இதனால் மாணவர்கள் மத்தியில் குழப்ப நிலைமைகளும் ஏற்பட்டு அது வன்முறையாக மாற்றம் அடைகின்றது.

### அதிகரித்த வேலைப்பழுவும் தயார்படுத்தலுக்கான நேரப் பற்றாக் குறையும்:

மாணவர்கள் அதிகரிக்க அதிகரிக்க ஆசிரியர்கள் அளவுக்கு அதிகமான வேலைப்பழுவைச் சுமக்கவேண்டியவர்களாக உள்ளனர். இதனால் மாணவர்களை மேற்பார்வை செய்வது, அவர்களின் அடைவினை அவதானித்து அதற்கேற்ப செயற்பாடுகளை முன்னெடுப்பது, வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் அதிக வனங்கொண்டு செயற்படுவது என்பவை கடினமானதாகவே அமைகின்றது.

### மாணவர்களுக்குச் சுமையான பாடவிதானம்:

பல நாடுகளிலும் இன்று பாடவிதானங்களை அளவுக்கு அதிகமாக உட்புகுத்தியுள்ளதோடு சமத்துவமற்றவையாகக் காணப்படுகின்றன. பாடவிதான விருத்தி என்பது புதிய உள்ளடக்கங்கள் காலத்திற்குக் காலம் போதியளவு அவகாசம், கற்பிக்கப்படும் நேரம் என்பனவற்றைக் கருத்திற்கொள்ளாது சேர்க்கப்படுகின்றது. இவ்விதம் கொடுக்கப்படும் பாடத்திட்டங்களை முடிக்கவேண்டும் என ஆசிரியர்கள்மீது அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. இதனால் மாணவர்களின் அடிப்படைத் தேவைகள் நிவர்த்திசெய்யப்படாது அழுத்தம் கொடுக்கப்படும் புதிய பாடத்திட்ட உள்ளடக்கங்களைக் கற்பிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். பாடவிருத்தி தொடர்பான உள்ளடக்கங்களை மீள் பரிசீலனை செய்யப்படுவது குறைவாகவே உள்ளது. திட்டம் பொருத்தமாகச் செயற்படுத்தப்படுகின்றதா என்பது மாணவர்களிடம் பரீட்சார்த்தமாகப் பரீட்சிக்கப்படுவதில்லை. பாடத்திட்ட விருத்திக்கான திட்டமிடல் கீழ்த்தட்டில் உள்ள ஆசிரியர்களால் திட்டமிடப்படுவதில்லை, மாறாக கற்பித்தல் செயலில் இல்லாத மேற்பார்வையாளர்கள் மட்டத்தில் தீட்டப்படுவதும் கல்விச் செயல் ஒழுங்கு தோல்வியடைவதற்குக் காரணமாகின்றது.

### கூடிய இலக்கையோ, அன்றி இலட்சியத்தைத் துரிதப்படுத்துதல்:

பாடத்திட்டம் எதிர்பார்க்கப்படும் கற்றல் வேகம், நடைமுறையில் உள்ள கற்றல் வேகத்துடன் சமநிலையில் பொருந்தும் போது அது வெற்றியளிக்கலாம். ஆனால் பொதுவாக இவ்வித பொருந்துகை மிகக்குறைவாக இருப்பதனால் மாணவர்கள் அடிப்படை மற்றும் மிக முக்கியமான அறிவு மற்றும் திறன்களில் தேர்ச்சிபெறக் கூடிய செயற்பாடுகளை ஆசிரியர்களால் செய்ய முடியாதுள்ளது. கல்வித்

திணைக்களத்தின் குறிக்கோளை அடைவதற்காக மிகவே கமாக நகர்த்தப்படும் போது இவ்வித நிலைமைகள் தவிர்க் கமுடியாததாகின்றது. இதனால் மாணவர்களின் எதிர்பார்ப் புகளை விட கல்வித்தர நிலைமைகள் கீழே வீழ்ச்சியடை வதை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

## வருமான ஏற்றத் தாழ்வு:

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது மறுக்க முடியாததொன்று. மாணவர்களின் கல்விக்கான அணுகுமு றைகள், அதன் விளைவுகள் என்பன அவர்களின் குடும்ப வருமானத்தில் பெரிதும் தங்கியுள்ளது என்பது வெளிப்படை. குழந்தைகள் கல்வி கற்கும் பருவங்கள் வேறுபட்டன. குழந் தைப் பருவம், முதனிலைப் பருவம், இடைநிலைப் பருவம், உயர்கல்விப் பருவம் என்பன கல்வியில் மாணவர்கள் பெற் றுக்கொள்ளும் வாய்ப்புகள் வளங்களைப் பொறுத்தே அமை கின்றன.

கனடா சமூகத்தில் உள்ளவர்களின் வருமான ஏற்றத்தாழ் வுகள் அதிகளவாகக் காணப்படுகின்றன. வேதனம் பெறு வோரை எடுத்துக்கொண்டால் அவர்களில் பல தட்டுகளில் வைத்துப் பார்க்கலாம். பொதுவாக மருத்துவர்கள், பொறி யியலாளர்கள், சட்டவாளர்கள், கணக்கியலாளர்கள் என உயர்ந்த வேதனத்தைப் பெறுபவர்கள் தங்கள் குழந்தைக ளுக்குத் தரமான குழந்தைப் பராமரிப்பு, அனைத்துலகப் பாடசாலைகளில் அனுமதி, தனித்துவமான கல்வி வாய்ப் புகள், கல்விக்கான உயர்தர கற்றல் உபகரணங்கள், விலை யுயர்ந்த உடை, பொழுதுபோக்கு, என்பனவற்றோடு குழந் தைகளோடு செலவிடும் நேரமும் அதிகமாகவே உள்ளது.

ஆனால் சாதாரண கூலித் தொழிலாளர்களால் இவ்வித வாய்ப்புகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு நல்கமுடியா துள்ளது. அத்தோடு அதிக நேரம் வேலை செய்யவேண்டிய நியதியும் காணப்படுவதால் பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிட முடியாதுள்ளது. பொழுதுபோக்காக செலவுகூடிய கோடைகால முகாம்கள், அல்லது வேறு நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்புகளும் மிகக் குறைவாகவே உள்ளது. பிள்ளைகளை வெளியிடங்களுக்குக் கூட்டிச்செல்லும் நிலை மைகளிலும் கல்வியோடு தொடர்பான அருங்காட்சியகங்க ளுக்குக் கூட்டிச்செல்வதோடு அங்குள்ளவை பற்றி பிள்ளை களோடு கலந்துரையாடி அவர்களின் அறிவாற்றலை வளர்க் கும் தன்மையும் கற்ற மற்றும் உயர்ந்த வேதனம் பெறும் பெற் றோருக்கு வாய்ப்பாக அமைகின்றது. ஆனால் கூலித் தொழில் செய்யும் உயர்கல்வி அற்றவர்களுக்கு அவை பற்றிய விளக்கங்களையோ அன்றி தொழினுட்ப வளர்ச்சி பற்றியோ செயற்கை நுண்ணறிவு பற்றியோ பிள்ளைக ளுக்குச் சொல்லித்தர முடியாதவர்கள் மட்டுமல்ல அவர்க ளிடமே தங்கள் கைத்தொலைபேசிகளை இயக்கவோ அன்றி கணினியில் சிலவற்றைச் செய்யவோ தெரியாதவர்களாகத் தங்கள் பிள்ளைகளிடம் உதவி கேட்கவேண்டிய நிலையில் உள்ளனர். இது பிள்ளைக்குத் தனது தந்தைக்கு தெரியா தவையை நான் அறிந்து வைத்திருக்கின்றேன் என்ற பெருமை மட்டுமன்றி 'உங்களுக்கு ஏதும் தெரியாது' என்று கூறுவ தையும் மௌனமாக ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

## கோடைகால கல்வி இழப்பு:

கல்வித் தரத்தின் வீழ்ச்சிக்கு ஆய்வாளர்கள் பல கருத்து களை முன்வைக்கின்றனர். கனடாவில் பின்பற்றப்படும் கல்வி ஆண்டு மிக நீண்ட இடைவெளியுள்ள விடுமுறை யைக் கொண்டுள்ளமையை ஒரு காரணமாக முன்வைக்கின் றனர். கோடை காலத்தில் இரண்டு மாதங்களுக்கு மேலாகப் பிள்ளைகள் கற்காமல் இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றார் கள் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் ஒன்ராறியோ கல் விக்கான ஆய்வுகள் நிறுவனத்தின் (OISE) கல்வியியல் மற்றும் உளவியல் இணைப்பேராசிரியர் ரொட் கண்ணிங் காம் என்னும் ஆய்வாளர். ஆண்டு முழுவதும் பிள்ளைகள் கல்வி கற்பது சிறந்தது எனக் குறிப்பிடுகின்றார். இருப்பினும் விடுமுறைகாலத்தில் வீட்டில் கற்றுக்கொள்ளப் போதுமான வசதிகள் வாய்ப்புகள் மற்றும் திறனை வளர்க்கும் நல்ல சூழ்நிலை காணப்பட்டால் வீட்டிலும் கற்றுக்கொள்ளலாம் எனக்குறிப்பிடும் அவர் பாடசாலைகளின் நீண்ட விடுமுறைக் கான இடைவேளையைத் தக்கவைத்துக்கொள்ளலாம் எனக் குறிப்பிடுவதில் இருந்து பிள்ளை கல்வியை இடைநிறுத் தாது தொடரவேண்டும் என்பது முன்வைக்கப்படுகின்றது. இது ஆசிய நாடுகளில் காணப்படும் இரண்டு அல்லது ஒரு வார விடுமுறைகளோடு ஒப்பிடும் போது கனடாவில் இரண்டு மாதங்களுக்கு மேலாக விடுமுறை வளங்கப்படுவது மாண வர்களின் கல்வித் தர வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக அமை கின்றது.

கனடாவில் கோடைகாலத்தில் கற்பதிற்குரிய வசதிகளைக் கல்வித் திணைக்களங்கள் வளங்குகின்றன எனினும் பெரும் பாலான மாணவர்கள் அவற்றைப் பயன்படுத்துவதில்லை என்ற குறையும் முன்வைக்கப்படுகின்றது.



## பாடத்திட்டங்களில் / கற்றல் முறைகளில் மாற்றம்:

கல்விச் செலவீனத்திற்கு நிதியைப் பங்களிப்பது மாகாண அரசுகளின் பொறுப்பாகும். பாடத்திட்டங்களைத் தீட்டுவதும் மாற்றுவதும் மாகாண அரசுகளின் பொறுப்பாக உள்ளது. எனவே மாகாண அமைச்சர்களுக்குக் கீழ் உள்ள கல்வித் திணைக்களமே பாடத்திட்டத்தைத் தயாரித்தல், மாற்றுதல், நடைமுறைப்படுத்தல் என்னும் செயற்பாடுகளை மேற்கொள்வதாகவும் மேற்பார்வை செய்வதாகவும் உள்ளது. இது மாகாண அரசின் விருப்பு வெறுப்பைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது. கல்வி அமைச்சுகளின் கீழ் பாடவிதானத் திற்கான பிரிவு, இதற்கான தீர்மானங்களை மேற்கொண்டு நடைமுறைப்படுத்துகின்றது. எனினும் எந்தவித மாற்றம் இடம்பெற்றாலும் மாகாண அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு கல்வியல் முன்னேற்றம் காண்பதற்கு கீழ்வரும் விதந்துரைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிடப்படுகின்றது:

- வகுப்பறைகளில் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்
- கல்விக்கான துணை அலுவலர்களை நியமித்தல்
- சிக்கல் நிறைந்த விதிகளைத் தளர்த்துதல்
- ஆசிரியர்களின் பாடத்திட்டமிடல் தாயாரித்தலுக்கான பொருத்தமான நேரத்தை ஒதுக்குதல்

பாடத்திட்டத்தில் கட்டாயக்கல்வி உள்ளடக்கப்பட்டுள்ளது. 1 முதல் 12 வகுப்பு வரை மாணவர்கள் கல்வி கற்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த எதிர்பார்ப்பை அடிப்படையாகக் கொண்டே கல்வித் திட்டமிடல் மேற்கொள்ளப்படுகின்து.

கல்வியை நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்களின் ஆதரவு கற்றல் எதிர்பார்ப்புக்களோடு இணைந்து செல்ல வேண்டியுள்ளது. ஆசிரியர் கற்றலுக்கான உதாரணங்கள், முன்னெடுப்புகள், மற்றும் கற்றல் சாதனப் பயன்பாடுகள், வளங்களை ஒழுங்கமைத்தல் என்பனவற்றோடு தொடர்புடையதாக அமைகின்றது.

பாடவிதானத்தின் உள்ளடக்கம் அரசின் கொள்ளை வகுப்புகளோடு தொடர்புபட்டதாக உள்ளது. பாடத்திட்டம் அனைத்துப் பாடப்பரப்புக்களையும் உள்ளடக்கியதாக அமைவதோடு ஒழுக்கக் கல்வியையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பாடத்திட்டத்தைத் தீர்மானித்தல், திட்டத்தை வடிவமைத்தல், மதிப்பீடு மற்றும் அளவீட்டுத் தகவல்களைத் தருதல் போன்றவை பாடத்திட்டத்தின்பாற்படுகின்றன. மாணவர்கள் மத்தியில் ஒழுக்கக்கேடு, மது மற்றும் போதைப் பொருட்பாவனை அதிகரித்து வருவது பாடசாலைகளுக்கு மட்டுமல்ல அரசாங்கத்திற்கும் பெற்றோருக்கும் பெரும் தலையிடியாக மாறிவருகின்றது. எப்படி இவற்றை தவிர்க்கலாம் என்பது விடை காணப்பட முடியாத சங்கிலித் தொடராக நீண்டு செல்கின்றது. இளந்தலைமுறையினர் தங்கள் வாழ்க்கையைச் சீரழித்துப் பாதியில் வழிமாறி தடுமாறும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். அவர்களை மீட்டெடுப்பது யார்? எப்படி? என்ற கேள்வி கல்வியாளர்களுக்கு மட்டுமன்றி சட்டத்தை நிலைநாட்டவேண்டிய பாதுகாவலர்களுக்கும் புரியாத புதிராகவே உள்ளது. ஒரு புறம் மது உற்பத்தியையும் விற்பனையையும் அரசு ஊக்குவிக்கின்றது மறுபுறம் கட்டுப்படுத்த வேண்டும் என அதற்காகவும் பெருந்தொகையான நிதியைச் செலவீடு செய்கின்றது.

## முடிவுரை:

கனடாவின் கல்வித்தரம் மாகாணங்களுக்கு மாகாணம் வேறுபட்டுக் காணப்படுவதற்குக் பொறுப்பக்கூறவேண்டிய நிலைமை அந்தந்த மாகாண அரசுகளையே சாரும். கல்விக்கான நிதி ஒதுக்குவதில் கனடாவின் மத்திய அரசின் பங்களிப்புக் காணப்பட்டாலும் அதனை நிர்வகிக்கும் பொறுப்பு மாகாண அரசுகளிடமே உள்ளது. இதனால் கனடாவின் தேசிய கல்விக் கட்டமைப்பு ஒரே சீராக இயங்கமுடியாத நிலையில் உள்ளது. அல்பேட்டாவில் உள்ள பாடசாலைகளின் கல்வித்தரத்தில் கணித விஞ்ஞானத்துறைகள் முதனிலை வகிப்பதை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் முதலாம் ஆண்டுக்கான பாடத்திட்டத்திற்கு ஈடான கல்வியை உயர்தரத்தில் கற்பிக்கப்படுவதாக ஆய்வறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

பொதுவாகக் கனடாவில் கல்வித்தரம் பற்றிப் பேசும்போது அது உலகத்தரம் வாய்ந்ததென்பது மறுக்கவியலாதது. கல்வியாளர்கள் நிறைந்த நாடாகக் கனடா காணப்படுகின்றது. கனடாவில் 55%-தத்தினர் பட்டதாரிகள் என்பது உலக நாடுகளில் உயர்தரமாகும். பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரை ரொறன்ரோ, மைக்கில், பிரிட்டிஸ் கொலம்பிய பல்கலைக்கழகங்கள் உலகில் உள்ள பல்கலைக்கழகங்களில் மிக உயர்தரம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. பல்வேறு துறைகளிலும் கற்கை நெறிகளைக் கற்கும் வாய்ப்புக் கனடாவின் பல்கலைக்கழகங்களில் காணப்படுகின்றன. கனடாவில் உள்ள பல்கலைக்கழகங்களைப் பொதுப் (அரசாங்க) பல்கலைக்கழகங்கள், தனியார் பல்கலைக்கழகங்கள், பொதுக் கலைக் கல்லூரிகள் என மூன்று பிரிவுகளுள் அடக்கமுடியும். ஆதிக்குடிகளின் கல்விச் சமத்துவமின்மை இன்றும் பிரச்சினையாகவே உள்ளது. கிராமியப் பொருளாதார வருமான வேறுபாடுகள் கல்வியிலும் தாக்கத்தைச் செலுத்துவது கண்கூடு. பாலர் வகுப்புத் தொடக்கம் 12-ஆம் வகுப்பு வரை கல்வி இலவசமானதாகக் காணப்படுகின்றது. பல்கலைக்கழக மாணர்வர்கள் தங்கள் பாடத் தேர்வுக்கான கல்வி நிதியைச் செலுத்தக் கடப்பாடுடையவர்கள் எனினும் மாணவர்களுக்கான கடன் வசதிகளும் திறமையின் அடிப்படையிலான கொடுப்பனவுகளும் காணப்படுவது பட்டதாரிகளின் கற்றலை இலகுபடுத்துவதாகக் காணப்படுகின்றது என்பது வெளிப்படை.



sivapalu@thaiveedu.com

# 11 பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே எமது பிள்ளைகளின் கண்களில்...

- எஸ்.கே.விக்னேஸ்வரன்

**தர்க்கத்தின் வரம்புகள்:**

பெற்றோர்களாகிய நாம் வாழ்க்கையைப் பற்றி யோசிக்கிறோம்; உண்மைகளிலும் தர்க்கங்களிலும் நம்பிக்கை வைத்து அதைப்பற்றிச் சிந்திக்கிறோம்; பொருத்தமான கருத்தியல்களை உருவாக்குகிறோம்; பின் அவற்றின் அடிப்படையில் விவாதிக்கிறோம், அதன் மூலமாகப் பகுத்தறிந்து அது பற்றிய ஒரு முடிவுக்கு வருகிறோம். வீட்டுக்கு வெளியே இவை வாழ்க்கையைச் சமாளிப்பதற்குப் பயன்தரக்கூடிய வழிமுறைகள்தான். ஆனால், நமது சொந்தக் குழந்தைகளுடனான செயற்பாடுகளில் இந்த வழிமுறைகள் எமக்குத் தோல்வியைத்தான் தருகின்றன. குடும்ப உறவுகளில் தர்க்கங்களுக்கென்று வரம்புகள் இருக்கின்றன: அவை எங்கள் மனதுக்கு இதமாக இருப்பதில்லை. அவை சூடாக இருப்பதுடன் அதிருப்தியின் காரணமான நீண்ட எரிச்சல்களைக் கொண்டுவருகின்றன. பதின்மவயதினர் எங்கள் பகுத்தறிவைத் தோற்கடிக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையின் உயர்வு பற்றிய - பணம், அந்தஸ்து, வாழ்விற்கான பிற ஆதார வாய்ப்புகள் என்பவை பற்றிய - எங்களது கருத்துகளை நிராகரிக்கிறார்கள். அவர்கள் அதிகளவில் கற்பனாபூர்வமான வாய்ப்புகளை நாடுகிறார்கள். சகாக்களது போக்குகளை ஏற்றுக் கொள்வது, நண்பர்களின் மீது நம்பிக்கை வைப்பது, எதிர்ப் பாலினர் மீது ஈடுபாடு கொள்வது என்பவற்றை விரும்புகிறார்கள்.

நம் சொந்தக் குழந்தைகளுடனான போராட்டத்தில் வெற்றி பெற எங்களுக்கு எந்த வழியும் தெரிவதில்லை. அவர்களுக்கோ எல்லாவற்றுக்குமான நேரமும் சக்தியும் தாராளமாக இருக்கின்றன. நாம் அணிதிரண்டு ஒரு போரில் வெற்றி பெற்றாலும், அவர்களால் நாம் கற்பனை செய்ய முடியாத பழிவாங்கல் உணர்வுடன் எங்களுக்குப் பதிலடி கொடுக்க முடியும். அவர்கள் எதிராளிகளாகவோ குற்றச் செயலில் ஈடுபடுபவர்களாகவோ நடந்துகொள்ளக் கூடும். அல்லது வெறுமனே செயலற்றவர்களாகவோ நரம்பியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களாகவோ மாறலாம். அவர்களிடம் எல்லா ஆயுதங்களும் உள்ளன: போதுமான அளவு கோபப்பட்டால், ஒரு பதின்மவயதுப் பையன் ஒரு வாகனத்தைத் திருடலாம், ஒரு பதின்மவயதுப் பெண் கர்ப்பமாகலாம். அவை நம்மை மரணத்தை நோக்கித் தள்ளலாம் அல்லது எங்களைப் பகிரங்கமான அவமானத்திற்கு உள்ளாக்கலாம்.

இந்தச் சூழ்நிலையை 'எலியாகசான்' தனது 'தி அரேஞ்ச் மென்ட்'(The Arrangement) என்ற நாவலில் இவ்வாறு விளக்குகிறார்:

'மற்றப்படி எல்லா விதமான சிறப்பான வாய்ப்புகளையும் கொண்டிருந்த ஃபின்னேகனுக்கு இருந்த ஒரேயொரு பிரச்சினை, அவரது மகன்தான். அவன் குடிபோதையில் விழுந்து, தனது தந்தையின் நற்பெயரைக் கெடுக்கக் கூடிய அனைத்தையும் செய்வதில் உறுதியாக இருந்தான். ஒரு கட்டத்தில் ஃபின்னேகன் அவனைக் கைவிட்டு, அதுதான் கடைசி என்று கூறி ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்து, அவனை வீட்டிலிருந்து விலக்கி வைத்தார். மகன் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி தனது தந்தையை அம்பலப்படுத்தும் வகையிலான ஒரு பிரசுரத்தைத் தனிப்பட்ட முறையில் அச்சிட்டதுடன், அதை வாசிப்பதற்காகஅனைவருக்கும் இலவசமாகவும் வழங்கினான்.

> “குடும்ப உறவுகளில் தர்க்கங்களுக்கென்று வரம்புகள் இருக்கின்றன: அவை எங்கள் மனதுக்கு இதமாக இருப்பதில்லை. அவை சூடாக இருப்பதுடன் அதிருப்தியின் காரணமான நீண்ட எரிச்சல்களைக் கொண்டுவருகின்றன.”



tg.theeban@gmail.com

ஃபின்னேகனைப் போலவே, அனைத்து பெற்றோர்களும் பாதிக்கப்படக்கூடியவர்கள்தான். அவர்களால் தமது பதின்ம வயதினரைத் தாக்குவதன் மூலம் வெற்றிபெற முடியாது. பெற்றோர்கள் வெற்றி பெறுவதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அதுதான், தங்கள் குழந்தைகளை வெல்வது அல்லது வென்றெடுப்பது. இந்த வழி சாத்தியமற்ற ஒன்றாகத் தோன்றலாம், ஆனால் அது எம்கைகளுக்கு அப்பாற்பட்ட ஒன்று அல்ல. நாம் எங்கு தொடங்குவது என்பது பற்றி எபிரேய முனிவர்கள் இவ்வாறு கூறினர்: 'ஞானத்தின் ஆரம்பம் மௌனம்; இரண்டாவது நிலை செவிகொடுத்துக் கேட்டல்.' பின்வரும் கூற்றுகள் பதின்மவயதினரால் செய்யப்பட்டன. அவற்றைக் கேட்போம்:

**'ஒரு முரட்டுப் புத்திசாலி':**

பதினெட்டு வயதான ஹாரியட் கூறுகிறார்:

'என் அப்பா தன்னை ஒரு அறிவுஜீவி என்று பெருமையாக நினைத்துக் கொண்டிருக்கிறார். அவர் இடைவிடாத பகுத்தறிவுடன் சிந்திக்கவும், கோட்பாடுகளை வகுக்கவும் செய்கிறார். அவர் ஒவ்வொரு பிரச்சினையினதும் அனைத்துப் பக்கங்களையும் பார்ப்பதுடன், பாரபட்சமற்றவராக இருக்கவும் முயல்கிறார். ஆனால், நான் அடிக்கடி அவர் மீது கோபப்படுகிறேன், எல்லாம் குழப்பமாக இருக்கும். என் அப்பா ஒரு கெட்டவர் அல்ல; அவர் நியாயமானவர்; கஞ்சத்தனமும் இல்லாதவர். ஆனால் அவருக்கு ஒரு முரட்டுத்தனமான புத்தி இருக்கிறது. அவரது மனம் ஒரு கடினமான சுத்தியல் போன்றது. அவரது தர்க்கம் கூர்மையான ஆணிகளைப் போன்றது. நான் ஒரு கருத்தைச் சொன்னாலோ கேள்வி கேட்டாலோ, அவர் என்னைச் சித்திரவதை செய்கிறார். நான் அவரிடம் என்ன சொன்னேன் என்பதை நான் எங்கே கண்டுபிடித்தேன், அது அப்படித்தான் என்று எனக்கு எப்படித் தெரியும் என்பதை அறிய விரும்புகிறார். என் சிந்தனைத் தொடரின் ஒவ்வொரு திருப்பத்தையும் அவர் பின்தொடர்கிறார். பிறகு, நான் தவறான பாதையில் இருக்கிறேன் என்று நிரூபிக்கிறார். அவர் ஒரு சாதாரண புத்திசாலியாக, ஒரு சாதாரணமான மனிதனாக இருக்க வேண்டும் என்று தான் நான் விரும்புகிறேன்!. ஏதாவது ஒரு தேவை காரணமாக அவர் எதையாவது செய்வதை மட்டுமே நான் விரும்புகிறேன். அவர் ஒரு பூவைப் பறிப்பதற்காகவோ, நடப்பதற்காகவோ, அல்லது சூரிய அஸ்தமனத்தைப் பார்ப்பதற்காகவோ வீதியோரத்தில் வாகனத்தை நிறுத்துவதை என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடிவதில்லை.

**'என் தந்தையைப் போல இருப்பதற்கு நான் மறுக்கிறேன்':**

தனது பதினேழு வயது நண்பனுக்கு எழுதிய கடிதத்தில் ஹரோல்ட் இவ்வாறு எழுதினான்:

'நான் பெரியவர்களைப் பார்க்கும் போது, அவர்களிடம் பேராசையையும் இலட்சியத்தையும் தான் காண்கிறேன். அவர்கள் தம் வாழ்க்கையில் விரும்புவது ஒரு வங்கியில் ஒரு பெரிய சேமிப்புக் கணக்கு, கிராமத்தில் ஒரு வீடு, இரண்டு கார்கள், அவற்றுடன் ஒரு படகு மட்டுமே. என் பெற்றோருக்கு இதெல்லாம் இருக்கிறது மட்டுமல்ல, இன்னும் நிறைய இருக்கிறது. எங்களுக்கு இரண்டு கார்கள், இரண்டு வீடுகள், ஒரு நாட்டுப்புற கிளப் ஒன்றில் உறுப்பினர் பதவி எல்லாம் இருக்கிறது. என் அப்பா பணக்காரர். கிட்டத்தட்ட எல்லாமே அவருக்குச் சொந்தமானவை. எங்கள் வீடு இலத்திரனியல் சாதனங்களால் நிறைந்துள்ளது. ஆனால் என் அப்பா மகிழ்ச்சியாக இருக்கிறாரா என்றால் இல்லவே இல்லை. அவர் பரிதாபகரமானவர். அவர் அதிக வேலைப்பளுவால் சோர்வடைந்து போய் இருக்கிறார். அவர் நேரப் பற்றாக்குறையாலும் வரிகளாலும் அழுத்தப்படுகிறார். தலைவலியாலும் சந்தேகங்களாலும் துன்புறுத்தப்படுகிறார். வெற்றியின் ஏணியில் ஏறிவிட்டார், ஆனால் அது இன்னும் அதிக ஏற்றத்தைத் தவிர வேறு எதையும் அவருக்கு வழி வகுக்கவில்லை. இப்போது அவர் பீதியடைந்துள்ளார். அவருக்கு மனச்சோர்வு ஏற்பட்டுள்ளது. அவர் தோற்றத்தில் வயதானவராகத் தெரிகிறார். தனது பிரபலத்தின் உச்சத்தில் இருக்கும்போதே, வீணாக இளைத்துப்போன ஒரு வயதான மனிதராக அவர் ஆகிவிட்டார். நான் என் தந்தையைப்போல இருப்பதை வெறுக்கிறேன். நான் செல்வங்களைக் குவிக்கவோ சொத்துகளை வாங்கிக் குவிக்கவோ விரும்பவில்லை. அத்தகைய வெற்றிகளையிட்டு நான் வெறுப்படைகிறேன். நான் இப்படியான ஒரு 'எலி ஓட்டப்பந்தய'த்தைத் (Rat Race) தவிர்ப்பதில் உறுதியாக இருக்கிறேன்.'

**'என் பெற்றோருக்காக நான் வருந்துகிறேன்':**

பதினெட்டு வயது ஸ்டுவர்ட் இவ்வாறு கூறுகிறான்:

'என் பெற்றோருக்காக நான் வருந்துகிறேன். அவர்கள் பணத்தைக் கனவு கண்டு தங்கள் வாழ்க்கையை வீணடித்துவிட்டார்கள். என் தந்தை வாழ்க்கையை வாழவில்லை. அவர் அதைக் கணக்கிடுகிறார். அவர் கூட்டிக்கழித்துத் தீவிரமாக முதலீடு செய்கிறார். ஒரு வழக்கமான 'IBM' கணினியின் தரவுகளிலும் எண்களிலுமாக வாழ்பவர் அவர். என் அம்மாவும் அவருடன் அவரது பொருளீட்டுவதற்கான தேடல்களைப் பகிர்ந்து கொள்கிறாள்தான். ஆனால் அவள் ஏமாற்றமடைந்து களைத்துப் போய் இருக்கிறாள். 'தாங்கள் எவ்வளவு அற்பமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டு இருக்கிறோம் என்பது அவளுக்கு நன்றாகவே தெரியும்.'



**'நான் ஒரு இழிந்த நிலைக்கு மாறிக்கொண்டிருக்கிறேன்':**

பதினேழு வயது மிட்செல் கூறுகிறான்:

'நான் வாழ்க்கையை தீவிரமாக எடுத்துக்கொள்கிறேன். நான் நெறிமுறைப்படி வாழ விரும்புகிறேன். ஆனால் மாறாக நான் ஒரு இழிந்த நிலைக்கு மாறிக்கொண்டிருக்கிறேன்.

எங்கள் கொள்கைகளுக்கு ஏற்ப வாழ வேண்டும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை என்பதை நான் உணர்கிறேன். நீங்கள் அதற்கு முயற்சித்தால் நீங்கள் ஒரு அப்பாவியாக இருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். பாசாங்குத்தனம் நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது என்பதை நான் கண்டுபிடித்துள்ளேன். அதுதான் வீட்டிலும், பள்ளியிலும், சமூகத்திலும் எதிர்பார்க்கப்படுகிறது. என் தந்தை தனிப்பட்ட உறவுகளில் மிகவும் நல்ல நெறிமுறை கொண்டவர் தான். ஆனால் அவர் வணிகத்தில் கிட்டத்தட்ட ஒரு மோசடி செய்பவராகவே இருக்கிறார். அம்மா அரசியலில் ஒரு தாராளவாதி. ஆனால் எங்கள் சுற்றுப்புறத்தில் எந்த நீக்ரோவும் வரக்கூடாது என்று அவர் பிரார்த்தனை செய்கிறார். எங்கள் பாடசாலை சமத்துவத்தைப் போதிக்கிறது. ஆனால் ஆசிரியர்கள் அனைவரும் வெள்ளையர்கள்; அத்துடன், வகுப்புகள் அடையாள அடிப்படையில்தான் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.'

**‘அவர் வாழ்க்கையை ஒரு சூத்திரத்தில் பொருத்த முயற்சிக்கிறார்':**

பதினாறு வயது ஹோவர்ட் கூறுகிறான்:

‘என் தந்தைக்கு அறிவியலைப் பற்றி நன்றாகத் தெரியும், ஆனால் மனிதர்களைப் பற்றி அவருக்குத் தெரிந்தது மிகக் குறைவு. அவர் ஒரு இரசாயனவியலாளர். அத்துடன் வாழ்க்கையை ஒரு சூத்திரத்திரத்துக்குள் பொருத்த முயல்கிறார். அவருக்கு ஒழுங்கும் கட்டுப்பாடும் மிகவும் அவசியமானவை. அதனால் அவர் எப்போதும் விரக்தியடைகிறார். வாழ்க்கை என்பது அவருக்கு மிகவும் ஒழுங்கற்ற ஒன்று. அவரே தன்னை ஒருபோதும் சுதந்திரமாக உணரவில்லை. அவர் தனது உணர்வுகளைக்கட்டுப்படுத்துகிறார்; தனது ஊழியர்களைக் கட்டுப்படுத்துகிறார்; அவர் என் அம்மாவைக்கூடக் கட்டுப்படுத்துகிறார். அதைவிட அவர் என்னையும்கூடக் கட்டுப்படுத்த முயல்கிறார். அவருக்கு மக்கள் மீதான சகிப்புத் தன்மை என்பதே கிடையாது. அவர் தானே ஒரு முழு மனிதனல்ல. அவர் ஒரு கட்டுப்பாட்டுப் பரிசோதனைப் பொருளைப் போன்றவர். அவர் என்னை நேசிப்பதாகக் கூறுகிறார். எனக்கு அது தெரியவில்லை. எனக்கு சிறந்ததையே தான் விரும்புகிறேன் என்று கூறுகிறார். எப்படித்தான் அவருக்கு அது முடியும்? அவருக்குத்தான் என்னைப் பற்றி எதுவும் தெரியாதே.

**‘என் தந்தையின் கனவு':**

பதினேழு வயது நிக்கோலஸ் கூறுகிறான்:

‘என் தந்தையின் மனதில் ஒரு சிறந்த மகனின் பிம்பம் இருக்கிறது. அவர் அவனை என்னுடன் ஒப்பிடும் போது, மிகவும் ஏமாற்றமடைகிறார். நான் என் தந்தையின் கனவை நிறைவேற்றவில்லை. சிறுவயதிலிருந்தே, அவரது ஏமாற்றத்தை நான் உணர்ந்திருக்கிறேன். ஆனால் அவர் அதை மறைக்க முயல்கிறார். ஆயினும் அது அவரது தொனியில், அவரது வார்த்தைகளில், அல்லது அவரது மௌனத்தில் என்று நூறு சின்னச் சின்ன வழிகளில் அது வெளிப்படுகிறது. அவர் தனது கனவின் ஒரு ‘கார்பன் பிரதி' (carbon copy) யாக என்னை மாற்றக் கடுமையாக முயன்றார். அதில் அவர் தோல்வியடைந்தபோது, என்னைக் கைவிட்டுவிட்டார். ஆனால் அவர் ஒரு ஆழமான வடுவை, தோல்வியின் நிரந்தர உணர்வை விட்டுச்சென்றிருக்கிறார்.'

**‘வாழ்க்கையில் அவளுடைய ஒரே ஆர்வம் நான் தான்':**

பதினைந்து வயது மன்ரோ கூறுகிறான்:

‘என் அம்மா என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறாள். அது அவளைக் கொன்றாலும் கூட, வாழ்க்கையில் அவளுக்கு இருக்கும் ஒரே ஒரு ஆர்வத்துக்குரியவன் நான் தான். என் உடல்நலம், என் வீட்டுப்பாடம் என்னுடைய சமூக வாழ்வு எல்லாம் அவளுடைய முக்கிய கவலைகள். அம்மா கடினமாக உழைக்கிறாள்; எனக்காக தேவையற்ற எல்லா வகையான வேலைகளையும் செய்வதைக் கூட அவள் ஒருபோதும் நிறுத்துவதில்லை. நான் ஒருபோதும் அணியாத காலுறைகளைக்கூட அவள் பின்னுவாள். நான் நோய்வாய்ப்பட்டால், அவள் பதறிப்போய் விடுகிறாள். எங்கள் வீடு அன்ரிபயோட்டிக்களாலும் சிக்கன் சூப்களாலும் (antibiotics and Chicken soups) நிறைந்த மருந்துக் கடையாக மாறுகிறது. நோயிலும், ஆரோக்கியத்திலும் அவள் என்னை ஒரு பருந்து போலக் கவனித்துக் கொள்கிறாள்!.'

**‘என் அம்மா வளர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்':**

பதினாறு வயது ஹென்றிட்டா கூறுகிறாள்:

‘என் அம்மா முதிர்ச்சியற்றவள். அவளுக்கு அதிக கவனிப்பு தேவைப்படுகிறது. வீட்டை எப்படி நிர்வகிப்பது, எங்களை எப்படிக் கவனித்துக் கொள்வது என்று அவளுக்குத் தெரியாது. அவளுக்குக் கார் ஓட்டுவதுகூடத் தெரியாது. அம்மா மிகவும் ஒழுங்கற்றவள், சுயமாக எதையும் செய்ய முடியாதவள். தொலைபேசி இலக்கப் புத்தகத்தில் உள்ள மஞ்சள் பக்கங்களை (yellow pages) எப்படிப் பயன்படுத்துவது அல்லது வார இறுதியிலான ஒரு பயணத்திற்கு ஒரு ‘சூட்கேஸை' (suitcase) எப்படி அடுக்கி ஒழுங்குபடுத்துவது என்று அவளுக்குத் தெரியாது. அவளது வாழ்க்கையை ஒழுங்கமைக்கவும் இன்னும் விவேகமானதாகவும் மாற்றுவதற்கு நான் அவளுக்கு உதவ முயன்றேன். ஆனால் அவள் என் மீது அதிகமாகச் சார்ந்திருக்கிறாள். உன் உதவி இல்லாமல் நான் என்ன செய்வேன் என்று எனக்குத் தெரியவில்லை என்று அவள் என்னிடம் கூறுகிறாள். என் அம்மா வளர்ந்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.'



**‘அவள் வெளிப்படையானவற்றைப் பற்றிப் பேசுகிறாள்’:**

பதினாறு வயது ஹெலன் கூறுகிறாள்:

‘என் அம்மா தான் ஒரு திறந்த மனம் கொண்டவள் என்று கூறுகிறாள். ஆனால் அது மிகவும் திறந்திருக்கிறது மட்டு மல்ல அது காலியாகவும் உள்ளது. அவளுக்குச் சொந்த மாக ஒரு சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. அவள் காலையில் ‘ஸ்போக்கையும்’ இரவில் ‘பிராய்டையும்’ பற்றிப் பேசுகிறாள். (காலையில் தர்க்க ரீதியாகவும் மாலையில் உளவியல் சார்ந்த ஊகங்களோடும் பேசுகிற, ஒரு குழம்பிய நிலையில் பேசுகிறாள் என்று கொள்ளலாம்: மொழிபெயர்ப் பாளர்) அவள் வெளிப்படையான விடையங்களைப் பற்றி மர்மமான இரகசியக் குரலில் பேசுகிறாள். ஆபத்துகள், அவற்றால் வரப்போகும் விளைவுகள் என்பவை பற்றி அவள் விரிவாக உரத்துப் பேசி என்னை எச்சரிக்கிறாள். அவள் வெளிப்படையான விடயங்களை எச்சரிக்கும் தோரணையில் பேசுகின்றபோது, அது என்னால் சிரிக்காமல் இருக்க முடி யாத அளவுக்கு நகைச்சுவையாக இருக்கிறது. இது அவளு டைய மதிப்பைக் குறைத்துவிடுகிறதே ஒழிய அவளுடைய வைராக்கியத்தை அல்ல. என் எதிர்காலம் அழிவில்தான் போய் முடியப் போகிறது என்று கூறி அவள் இவ்வாறு என்னிடம் சொன்னாள்: உன்னால் உன் பாடசாலைக்கு அவ மானம், எங்கள் குடும்பத்திற்கு உன்னால் ஒரு பெருமையும் இல்லை, நீ சாக்கடையில்தான் போய் விழுவாய். ஆஸ்கார் வைல்ட் (Oscar Wilde) ஒருமுறை சொன்னதை நான் அவளிடம் சொன்னேன்: ‘நான் சாக்கடையில் இருக்கலாம், ஆனால் நான் நட்சத்திரங்களைப் பார்க்கிறேன்.’

**‘அந்த அசலான திருமதி. பரிசுத்தம்’** (Mrs. Clean):

பதினேழு வயது ரால்ஃப் கூறுகிறான்:

‘என் அம்மாதான் அசலான திருமதி. பரிசுத்தம். அவளுக்கு நேர்த்தியாக இருக்கவேணும் என்று ஒரு பைத்தியம் - ஒரு வழக்கமான சுகாதாரப் பிரச்சினை.

நீங்கள் ஒரு சிகரெட்டை பற்றவைத்து ஒரு தடவை உறிஞ் சினால், அவள் உங்கள் சாம்பல் தட்டைக் காலி செய்யத் தொடங்குவாள். எங்கள் வீடு ஒரு வீடு அல்ல, அது ஒரு பூச்சிப் பொறி போன்றது. ஒருவித பிரச்சினையும் இல்லாமல் நீங்கள் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது. ஒவ்வொரு கழிவுத் துணிக்கையும் அவளைக் காயப்படுத்துகிறது, அவள் தொடர்ந்து கத்துகிறாள். நான் அவளிடம் சொல் கிறேன்: பாருங்கள் அம்மா, வாழ்க்கை வாழ்வதற்காகத் தானே ஒழிய, சுத்தம் செய்வதற்காக மட்டுமல்ல என்று. கம்ப ளத்திலிருந்து கொட்டுப்பட்டிருந்த சில துண்டுகளை எடுக் கக் குனிந்தபடி எனக்கு இப்படிப் பதிலளிக்கிறாள் அவள்: ‘நீங்கள் ஒரு பன்றித்தொட்டியில் வாழ விரும்புகிறீர்களா ?.

நான் அவளுக்காக வருந்துகிறேன். அவளுடைய வாழ்க்கை மிகவும் கறையற்றது மட்டுமல்ல, மலட்டுத்தன்மை வாய்ந் ததும் தான்!.

**‘மனிதருக்கு மனிதர் துணை’:**

பத்தொன்பது வயது ஹோல்டன் கூறுகிறான்:

‘நான் என் தந்தையுடன் நீண்டதும் தீவிரமானதுமான ஒரு உரையாடலை நடத்தினேன். ஒரு மனிதரோடான இன்னொரு மனிதரின் பேச்சு. அவரது தலைமுறை, அதன் பணத்தின் மீதான ஆசை என்பவை குறித்தும் அதன் மக்களைச் சுரண் டும் செயல், அதன் நேர்மையற்ற வணிகம், அதன் அரசியல் ரீதியான ஊழல், மற்றும் அதன் இரத்தக்களரிப் போர்கள் என்பவற்றால் நான் எவ்வளவு ஏமாற்றமடைந்துள்ளேன் என்று அவரிடம் சொன்னேன். என் தந்தை பதிலளித்தார்: ‘நீங்கள் உலகைப் பார்க்கும்போது அது பற்றாக்குறைகளுடன் இருப் பதைக் காண்கிறீர்கள். அது அப்படி இருப்பதைவிடச் சிறந்த ஒரு உலகமாக மாற்றப்பட வேண்டுமென்று நீங்கள் விரும்பு கிறீர்கள். உங்களுக்கு எப்போதும் அதற்கான எனது ஆசீர் வாதம் உண்டு. உங்கள் துணிச்சலான புதிய உலகம் சில மாற்றங்களைத் தாங்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் அதன் மோசமான மொழி, உரத்த இசை, ஆபாச இலக்கியம் என்பவை எனக்குப் பிடிக்கவில்லை. என் வாழ்க்கையில் நிலவும் முரண்பாடுகளை நான் அறிவேன். ஆயினும் என்



னிடம் அவற்றுக்கான பதில்கள் இல்லை. ஆனால் உங்கள் முழுமையான உண்மைகளை விட எனது நிச்சயமற்ற தன்மைகளையே நான் விரும்புகிறேன். உங்கள் பதில்களில் நீங்கள் மிகவும் உறுதியாக இருக்கிறீர்கள். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உங்களிடம் உடனடித் தீர்வுகள் இருக்கின்றன: யுத்தமில்லாத உலகு (flower-Power), கருத்தடை மாத்திரைகளும் போதை வஸ்துக்களும் பாவித்தல் ('Pill and Pot'), இசையமைக்கவும், இயக்கவும், பின் அதை விட்டு வெளியேறவும் (Turn in, Turn out and drop off) கிளர்ச்சி செய்யவும் புதுமை செய்யவும் உள்ள உங்கள் உரிமையை நான் மறுக்கவில்லை. இது இளைஞர்களின் பணியாக இருக்கலாம். ஆனால் திட்டமிடப்பட்ட குழப்பங்களுக்கு எதிராகப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதே எனது பணி. அதை நான் அதை எனது வயதான ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும். அவர் அதைச் செவிமடுத்துக் கேட்பார், நன்றாகப் பேசுவார். அதைவிடவும் அவர் உங்களைச் சிந்திக்க வைக்கிறார்.'

### ஒரு சிகிச்சையாளருக்கு ஒரு கடிதம்:

இந்தக் கடிதம் தனக்கான சிகிச்சையின் முடிவின் பின் ஒரு பதின்மவயதுப் பெண் பிள்ளையால் எழுதப்பட்டது. இது 'கடினமான' பதின்மவயதுப் பிள்ளைகளின் பெற்றோருக்குக்கூட, நம்பிக்கையளிக்கும் செய்தியைக் கொண்டுவருவதாக இருக்கிறது...

'என்னுடன் அன்பாக நடந்துகொண்டதற்கு நன்றி. அப்படிச் சொல்வது ஒரு நம்பமுடியாத விஷயம்தான். ஆனால் நான் அதை உண்மையாகவே ஏற்றுக்கொள்கிறேன் என்பதுதான் அதன் அர்த்தம். உங்கள் அன்பு எனக்கு ஒரு தனிநபராக மட்டுமல்ல, அனைத்து மனிதர்களின் கண்ணியத்திற்கும் மிகுந்த மரியாதை அளிப்பதோடு பிணைக்கப்பட்டுள்ள ஒன்று என்பது எனக்குத் தெரியும். எனவே, என்னால் அதை ஒரு அழகான, அச்சுறுத்தப்படாத மகிழ்ச்சியாக, எளிதான யதார்த்தமாக ஏற்றுக்கொள்ள முடியும். கடந்த காலத்தில், காதல் என்பது உடைமை, போட்டி, சாதனை ஆகியவற்றுடன் சேர்ந்து மிகவும் குழப்பமடைந்திருந்தது. அனைவரையும் மகிழ்விக்க முயற்சிப்பதன் மூலமோ என் பெற்றோரின் தாராள மனப்பான்மையை மனோவியல் ரீதியாக சுரண்டுவதன் மூலமோ நான் அதைத் தேடிக்கொண்டிருந்தேன். அவர்களின் கோபம், வலி என்பவை குறித்து எனக்குக் குற்ற உணர்வு இருந்தது. அவர்கள் நிச்சயமாக என்னை நெருங்க முயன்றனர் என்றாலும் நான் அவர்களால் அணுக முடியாதவளாக இருந்தேன்.

'இந்தச் சிகிச்சை எனக்கு நுண்ணறிவை மட்டுமல்ல - எனக்கு வளர உதவும் அத்தியாவசிய திறன்களையும் கொடுத்துள்ளது. குழப்பமான சூழலைக் கடந்து செல்லவும், குழப்பமான வயது வந்தவர்களது நரக உலகத்திலிருந்து ஒரு கணம் விடுபடவும் கற்றுக்கொண்டேன். கடந்த வாரம் எனது பதினெட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினேன். எனக்கு இன்னும் பல தீர்க்கப்படாத பிரச்சினைகள் உள்ளன. ஆனால், உங்களைப் போலவே, மக்கள் மத்தியில் இது ஒன்றும் தாமதமாகி விடவில்லை என்று நான் உணர்கிறேன். எனது கடந்தகால நடத்தைக்கு வாய்மொழி மூலம் மன்னிப்பு கேட்க நான் விரும்பவில்லை. மன்னிப்பு என்பது நேர்மையானதாக இருக்கும் என்று நான் நம்பவில்லை. ஆனால் மாற்றம் நிச்சயமாக மிகுந்த பலனளிக்கும்.'



vickneaswaran.sk@thaiveedu.com

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com


# திசைதிருப்பப்பட்ட வாகனம் ஓட்டுதல்




– செந்தூரன் புனிதவேல்

கனடாவில் மாகாணத்திற்கு மாகாணம் வாகனம் செலுத்தும் வரையறைகள் வேறுபடும். 2026-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முதலாம், திகதி வாகனம் ஓட்டுதலில் அதுவும் குறிப்பாக திசை திருப்பப்பட்டபடி வாகனம் ஓட்டுவதில் பல கெடுபிடியான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. மாகாண அரசாங்கத்தின் உந்துதலினால் பாதை ஓரத்துக் கமராக்கள் விலத்தப்பட்ட நிலையில் மாகாண அரசாங்கத்திற்கு விபத்துகள் ஏற்படாது காப்பதற்கான கடமைப்பாடு உள்ளது. இந்நிலையில் கவனம் திருப்பிய நிலையில் வாகனங்களை ஓட்டி விபத்துகள் ஏற்படுவதைத் தவிர்க்க எடுத்த முடிவின் விளைவுதான் இந்தச் சட்டம்.

திசை திருப்பப்பட்ட வாகன ஓட்டுதல் என்றால் என்ன என்று முதலில் கவனிப்போம். வாகனத்தைச் செலுத்தும்வேளை கைத்தொலைபேசி, பொழுதுபோக்குச் சாதனங்களைக் கையில் வைத்திருப்பதனைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக, பின்வரும் செயல்பாடுகளைத் தவிர்ப்பது அவசியமாகும்.

- டெக்ஸ்டிங் அல்லது டைப்பிங்
- தொலைபேசியில் அழைத்தல்
- வீடியோ படம் பார்த்தல்
- சமூக ஊடகங்கள் ஊடாகத் தொடர்பு கொள்ளுதல்
- கணினிகளைத் தொடுவது அல்லது செல்ல வேண்டிய இடத்தைக் குறிப்பது போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இந்தச் சட்டம் சிவப்பு விளக்கில் நிறுத்தி நிற்கும் வேளையிலும் செல்லுபடியாகும். தேவையானால் வீதி ஓரத்தில் நிறுத்திவிட்டு இவற்றைச் செய்யலாம்.

வாகனம் ஓட்டும்போது கைகளைப் பயன்படுத்தாமல், குரல் வழி உத்தரவுகள் (Voice Command) மூலம் சாதனங்களை இயக்குவதற்குத் தடையில்லை. ஓட்டுநர் அந்தச் சாதனத்தைத் தொடாதிருந்தால் தடை இல்லை. எனினும் நகரகாவலர் உங்கள் கவனம் திசை திருப்பப்படுகிறது என்று

thanavishnu@gmail.com

எண்ணினால் உங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம். இத்தகைய விதிமீறல்களுக்கான தண்டப் பணமும், சட்ட நடவடிக்கைகளும் தற்போது மிகவும் கடுமையாக்கப்பட்டுள்ளன.

ஜனவரி 1-ஆம் திகதி 2026-இல் இருந்து கவனம் திருப்பப் பட்ட வாகனச் செலுத்தலுக்கான தண்டப்பணம் பெரிதளவு கூட்டப்பட்டுள்ளது. தயவு செய்து இவற்றைக் கவனித்தாவது கவனமாக வாகனங்களைச் செலுத்துங்கள்.

முழுமையாக வாகன ஓட்டுநர் பத்திரம் பெற்றவர் முதல் குற்றத்திற்கு:

- தண்டப்பணம் $ 500 முதல் $ 1000 வரை.
- 3 Demerit எனும் குறைபாட்டுப் புள்ளிகள் பெறுவர்.
- மூன்று தினங்களுக்கு வாகனம் செலுத்துதல் தடுக்கப்படும்.

இரண்டாவது குற்றத்திற்கு:

- தண்டப் பணம் $ 2,000 வரை
- 6 குறைபாட்டுப் புள்ளிகள் பெறுவார்.
- ஏழு தினங்களுக்கு வாகனம் செலுத்துதல் தடுக்கப்படும்.

மூன்றவதும் அதற்கு மேற்பட்ட குற்றத்திற்கு:

- தண்டப் பணம் $ 3,000 வரை.
- 6 குறைபாட்டு புள்ளிகள்.
- முப்பது தினங்களுக்கு வாகனம் செலுத்துதல் தடுக்கப்படும்.

இத்தகைய கடுமையான சட்டங்களின் நோக்கம், ஓட்டுநர்களை முழு கவனத்துடன் வாகனத்தைச் செலுத்தச் செய்து, விபத்துகளைத் தவிர்ப்பதே ஆகும்.

தகமைப் பத்திரம் பெற்றுக்கொண்டிருக்கும் வாகனச் சாரதிகள் மேலும் கடுமையாக கணிக்கப்படுவார்கள்.

ஒன்ராரியோவில் G1,G2 மற்றும் M1,M2 பெற்று ஜனவரி 1-ஆம் திகதி 2026-ற்குப் பின் மேற்படி சாரதிகளுக்கான கட்டுப்பாடு பின்வருமாறு அமையும்.

- முதல் கவனக் குறைவாக செலுத்துதல் பிடிபட்டால் உடனே அனுமதி தடுக்கப்படும்.
- தொடர்ந்து பிடிபட்டால் அவரது ஓட்டுநர் உரிமைப் பத்திரம் பறிமுதல் செய்யப்படும்.
- அப்படி தடுக்கப்பட்டவர்கள் மீண்டும் ஆரம்பத்திலிருந்து கற்கத் தொடங்கவேண்டிவரும்.

அனுபவத்தில் ஆரம்பகால ஓட்டுநர்கள் கவனக்குறைவாக வாகனம் செலுத்தினால் அவர்கள் கூடிய விரைவிலேயே விபத்துக்குள்ளாவதை அவதானித்துள்ளார்கள்.

வணிக (Commercial) வாகன ஓட்டுநர்கள் சாதாரண வாகன ஓட்டுநர்களிலும் கூடிய தரநிலையில் கணிக்கப்படுவார்கள். உதாரணமாக லாரிகள், பேருந்துகள், மற்றும் வணிக வாகனம் செலுத்துபவர்களுக்கு,

- கூடிய தண்டப் பணம்
- நீண்ட காலத்திற்கு ஓட்டுநர் பத்திரம் தடுக்கப்படும்.

உதாரணத்திற்கு, முதல் தவறுக்கு ஏழு நாட்களுக்குத் தடை செய்யப்படும் என்பதுடன் இரண்டாம்முறை அறுபது தினங்களுக்குத் தடை செய்யப்படலாம். இப்படி வணிக வாகனங்களுக்கு கூடிய தண்டம் விதிப்பதன் காரணம் அவை பெரிய வாகனம் என்பதுடன், விபத்து நடக்கும் வேளைகளில் இழப்பும் பெரியளவில் இருப்பதவே. உபகரணங்களை சில நிபந்தனைக்கு உட்பட்டே செயற்படுத்தலாம். உதாரணமாக கைத்தொலைபேசி வழிகாட்டியாகப் பாவிக்கப்பட்டாலும், வாகனம் செலுத்தும் வேளை அதைத் தொடுவது தவிர்க்கப்பட்டுள்ளது என்பதனை மறக்க வேண்டாம்.

நகரக் காவலர்கள் தெளிவாகக் குறித்து உள்ளார்கள்.

- ஒரு சில வினாடிகளே என்றாலும், சாதனங்களைத் தொடுவதோ அல்லது அதில் தட்டச்சு செய்வதோ சட்டப்படி குற்றமாகும்; இதற்குத் தண்டனை உண்டு.
- சாதனங்களை கைகளால் தொடாதவரை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.
- உங்கள் குரலால் சாதனங்களை இயக்குவது ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால், அந்தச் செயல்பாட்டின் போது எக்காரணம் கொண்டும் சாதனத்தைக் கைகளால் தொடக்கூடாது.

2026 ஜனவரி தொடக்க காலத்தில், வாகனத்தைச் செலுத்தும் போது மின்னணு கருவிகளில் கவனம் சிதறிய காரணத்திற்காகப் பலருக்குக் குற்றப்பத்திரிகை (Summons) வழங்கப்பட்டுள்ளதாகப் காவல்துறை அறிவித்துள்ளது.

கவனக்குறைவாக வாகனம் ஓட்டுவதைத் தடுப்பதற்கு ஏன் இவ்வளவு முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்றால், இத்தகைய தவறுகளால் ஏற்படும் விபத்துகளில் விலைமதிப்பற்ற மனித உயிரிழப்புகள் ஏற்படுவதை நாம் அன்றாடம் காணக்கூடியதாயுள்ளதாலேயே. எனவே, ஓட்டுநர்களான நாம் வழிமுறைகளைப் பின்பற்றுவது அவசியமாகும். வாகனத்தைச் செலுத்தத் தொடங்கும் முன்னரே, செல்ல வேண்டிய இடத்திற்கான திசைகாட்டியை (GPS Navigation) அமைத்துவிட வேண்டும். பயணத்தின் போது பயன்படுத்தத் தேவையில்லாத மின்னணு சாதனங்களைக் கைகளுக்கு எட்டாத தூரத்தில் அல்லது பார்வையில் படாதவாறு வைத்துவிடுவது நல்லது. பயணத்தின் போது ஏதேனும் அவசரத் தேவை இருப்பின், வாகனத்தைப் பாதுகாப்பாகச் சாலையோரம் நிறுத்திய பின், அத்தேவைகளை முடித்துவிட்டு மீண்டும் பயணத்தைத் தொடரலாம். விதிகளுக்கு மதிப்பளித்து, கவனத்துடன் செயல்படுவதன் மூலம் விபத்துகளே இல்லாத பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்வோம். வருங்காலத்தில் நீங்கள் விபத்துகளின்றி வாகனத்தைச் செலுத்துவதற்கு வாழ்த்தி முடித்துக் கொள்கிறேன்.



senthuran.p@thaiveedu.com



# வீட்டில் ஈரப்பதன் பேணல்
# (Humidity Maintenance)

வேலா சுப்ரமணியம்

குளிர் காலத்தில் வீட்டில் இருக்கவேண்டிய ஈரப்பதனின் அளவு குறைவாகக் காணப்படுவதும், அதே வேளை கோடை காலத்தில் ஈரப்பதனின் அளவு அதிகரித்துக் காணப்படுவதும் இயல்பானது. எனவே காலத்திற்கேற்றவாறு ஒரு வீட்டிற்குத் தேவையான உத்தம அளவிலான ஈரப்பதனைப் பேணுவதிலேயே ஒரு சிறந்த வீட்டுப் பராமரிப்பின் வெற்றி தங்கியுள்ளது.

குளிர் காலத்தில் வீட்டில் இருக்கவேண்டிய ஈரப்பதனின் அளவு 30%-க்குக் குறையும் பட்சத்தில் வீட்டில் பாரியளவிலான பாதிப்புகள் எற்பட வாய்ப்புள்ளது. தளத்திற்குப் போடப்பட்டுள்ள hardwood-ல் சுருக்கங்கள் ஏற்பட்டு இடைவெளிகள் அதிகரிப்பது மட்டுமல்லாது அவற்றில் வெடிப்புகளும் ஏற்படும். அது மட்டுமன்றி வீட்டிலுள்ள தளபாடங்கள், குசினி அலுமாரிகள், base board, dry wall, இதரப் பொருத்துகள் என்பவற்றிலும் வெடிப்புகள் ஏற்படும். சுவாசம், தோல் சம்பந்தமான வியாதிகள் எற்படவும் வாய்ப்புள்ளது. எனவே ஈரப்பதனை உயர்த்த நடவடிக்கை எடுப்பது மிக முக்கியமாகும்.

இங்கே தரப்படும் படங்கள் குளிர்காலப் பகுதியில் ஈரப்பதன் குறைந்ததன் காரணமாக வீடுகளில் ஏற்பட்ட பாதகமான விளைவுகளை நன்கு விளக்குகின்றன.

## Humidifier பராமரிப்பு:

காலநிலைக்கேற்றவாறு Humidifier-ன் தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதனைப் பயன்படுத்துவது கூடிய பலன் தரும். கோடை காலத்தில் இதனை முற்றாக நிறுத்திவிடவேண்டும். வருடம் ஒரு முறையாவது Filter-ஐ துப்பரவு செய்ய வேண்டும். தண்ணீரிலுள்ள கல்சியப் படிவுகள் அதிகரித்துத் துவாரங்கள் அடைத்து விடுவதால் வெளியேற வேண்டிய தண்ணீர்




வழி தெரியாது, அது பொருத்தப்பட்டிருக்கும் இடமெல்லாம் கசிந்து, பின்னர் அந்தப் பகுதி முழுவதும் கறள் ஏறி இருப்பதைப் பழைய வீடுகளில் கண்கூடாகப் பார்க்கலாம். அதிக



மான வீடுகளில் இவை இயங்காத நிலையிலேயே உள்ளன. பலரும் இதில் ஒரு Evaporator pad இருப்பதைக் கண்டு கொள்வதில்லை. வருடா வருடம் கிரமமாக இதனைச் சுத்திகரிப்பதும் மேலதிக தண்ணீர் இலகுவாக வெளியேறுகிறதா என்று பார்த்துக்கொள்வதும் மிக முக்கியமாகும். Evaporator pad-ஐக் கழற்றிச் சுத்தம் செய்வது மிகவும் இலகுவானது. அதுபற்றி நினைத்துப் பயந்துகொள்ளவேண்டிய அவசியம் கிடையாது.

வீட்டின் தன்மை, எமது பழக்க வழக்கங்கள், உள்ளக வெளிப்புறக் காரணங்கள், பல வீட்டிலிருக்கக் கூடிய ஈரப்பதனின் அளவைத் தீர்மானிக்கின்றது. பல மணித்தியாலங்கள் சமைக்கும் எங்கள் சமையல், நீராவி மூலம் வீட்டிற்குள் அதிகளவு ஈரப்பதனை உருவாக்குகின்றது. பலமணி நேரம் வெந்நீரில் குளிப்பதிலுள்ள சுகம் மறுபுறத்தில் வீட்டிற்குள் அதிகளவு ஈரப்பதனையும் உருவாக்குகின்றது. கூட்டுக் குடும்பங்களாகப் பலர் வீட்டில் வசிக்கும் சந்தர்ப்பத்தில் இயற்கையாகவே ஈரப்பதன் அதிகரிக்கப்பட வாய்ப்பிருக்கிறது.

## அதிகரித்த ஈரப்பதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்:

வெளியிலுள்ள உஸ்ண நிலைக்கு ஏற்றவாறு Humidistat-இன் அளவைச் சரிபார்த்துக்கொள்ளல் வேண்டும்.

யன்னல் கண்ணாடிகளை அவதானித்து நீர்ப்படிவு இருந்தால் அதனைத் துணியால் துடைத்தெடுத்து விட்டு Humidistat-ஐக் குறைத்து விடல் அல்லது நிறுத்தி விடல் வேண்டும்.

தற்போதயப் புதிய வீடுகளில் Attic Fan அல்லது Ventilator எனப் பெயர் குறிப்பிடப்பட்ட Switch ஒன்று thermostat controller-க்கு மேலாகப் பொருத்தப்பட்டிருக்கும். பொதுவாக இது ஒரு குளியலறைக்குரிய Fan-க் கட்டுப்படுத்தும் இரட்டை வழி Switch-ஆக இருக்கும். இதனை நீண்ட நேரம் போட்டு விடுவதும் மேலதிக ஈரப்பதனை வெளியேற்ற உதவும். முக்கியமாகக் குறிப்பிட்ட குளியலறைக்குரிய கதவுகளைத் திறந்து விட்டு அத்துடன் Furnace-க்குரிய Fan-ஐ auto-விலிருந்து ON-க்கு மாற்றி விடல் எதிர்பார்க்கும் பலனைப் பன்மடங்காக்க வழி வகுக்கும்.

குளியலறையிலிருக்கும் Fan, குளித்து முடிந்த பின் குறைந்தது 15 நிமிடங்களாவது இயக்கப்பட வேண்டும். ஈரப்பதன் முற்றாக அகற்றப்படும் வரை தானே இயங்கித், தாமாகவே நிறுத்திக்கொள்ளும் Fan-களும் switch-களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

சமையலறையிலிருக்கும் Over hood Fan முறையாகப் பாவிக்கப்பட வேண்டும். சமையல் தொடங்குவதற்கு 10 நிமிடங்கள் முன்னதாகவும், சமையல் முடிந்தபின் குறைந்தது 15 நிமிடங்களாவது இந்த Fan இயக்கப்பட வேண்டும். ஈரப்பதனைக் கண்டதும் தானே இயங்கித், தாமாகவே நிறுத்திக்கொள்ளும் Over hood Fan-களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

- கழுவப்பட்ட உடுப்புகளைக் கொடியிலோ அல்லது வேறு முறைகளிலோ வீட்டிற்குள் உலர்த்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- துணி உலர்த்தும் இயந்திரத்திலுள்ள vent duct முறையாக இணைக்கப்பட்டிருப்பதும், அடைப்புகள் இல்லாது இருப்பதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
- அதிகளவிலான மரங்களோ அல்லது பூச்செடிகளோ வீட்டிற்குள் வளர்க்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வீடு சுத்தமாக வைத்திருக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. ஆனால், விரதம் என்ற பெயரில் அடிக்கடி MOP செய்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.
- கதவுகளுக்குரிய weather stripes கசிவைத் தடுக்கும் நிலையில் உள்ளனவா என்பதும், யன்னல்கள் முறையாக Caulking செய்யப்பட்டு கசிவைத் தடுக்கும் நிலையில் உள்ளனவா என்பதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வீட்டிற்குரிய insulation சரியாக இல்லாத பட்சத்தில் அதிக



ளவு ஈரப்பதன் பாரதூரமான பாதக விளைவுகளை ஏற்படுத்தும். குறிப்பாக Attic insulation குறைவாக இருந்தால் Ceiling மூலைகளில் அதிகளவு ஈரப்பதன் காரணமாக ஏற்படும் நீர்ப்படிமம் mold-ஆக மாறுவதைக் காணலாம்.

சிலர் யன்னல்களைச் சிறிதளவு காற்றோட்டம் வருமளவுக்குத் திறந்துவிட்டுச் சமப்படுத்துவார்கள். அதிகளவு திறந்து விட்டால் குளிர்கூடி வெப்பமாக்கும் செலவும் அதிகமாகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வீட்டில் ஏதாவது கொண்டாட்டம் நடைபெறும் சந்தர்ப்பத்தில் humidifier-ஐ நிறுத்திவிட வேண்டியது அவசியம். மேலதிக சமையல், பலரது பிரசன்னம் அதிகளவு ஈரப்பதனை உருவாக்கும்.

ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு Hygrometer வைத்திருக்க வேண்டியது மிக அவசியமானது. அத்துடன் ஈரப்பதன் அளவு 40% - 60% வரை இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஈரப்பதன் அளவு 50%-ஆக இருப்பது உத்தமம்.

அதிகமாகவுள்ள ஈரப்பதனை அகற்ற Di-humidifier பாவிக்கப்பட வேண்டும்.



velasubramaniam@thaiveedu.com

# புவியின் மீட்சிக்கான உலகளாவிய அறைகூவல்

## (உலக வனவிலங்குகள் நாள்)

- சி. நற்குணலிங்கம்

உலக வனவிலங்குகள் நாள் (World Wildlife Day) என்பது வெறும் கொண்டாட்டத்திற்கான தினம் மட்டுமல்ல; அது ஒரு பெரிய மாற்றத்திற்கான வேண்டுகோள். அது இயற்கைக்கும் மனிதகுலத்திற்கும் இடையிலான பிணைப்பை மீளாய்வு செய்வதற்கான ஒரு முக்கியத் தருணமாகும். புவியின் நிலப்பரப்பில் வாழும் அரிய வகை விலங்குகள் மற்றும் தாவரங்களின் பன்முகத்தன்மையை அங்கீகரிப்பதோடு, அவை எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த விழிப்புணர்வை உலகளாவிய ரீதியில் இந்த நாள் முன்னெடுக்கிறது.

சுற்றுச்சூழல் அமைப்பின் சமநிலையைப் பேணுவதில் வனவிலங்குகளும் தாவரங்களும் ஈடுஇணையற்ற பங்கினை ஆற்றுகின்றன. இவை வெறும் இயற்கை வளங்கள் மட்டுமல்ல; மாறாக, நிலையான வளர்ச்சி, பொருளாதார மேன்மை மற்றும் மனித சமூகத்தின் வாழ்வியல் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படைத் தூண்களாகவும் திகழ்கின்றன. பூமிப்பந்தின் உயிரியல் சமநிலையை உறுதிப்படுத்துவதும், மனிதத் தலையீடுகளால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைப்பதும் தற்காலத்தின் மிக முக்கியமான தேவைகளாகும். எனவே, இயற்கை வளங்களின் பாதுகாப்பை ஒரு கடமையாகக் கருதி, பசுமையான எதிர்காலத்தை நோக்கி ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது நமது பொறுப்பாகும்.

ஆனால் இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் - IUCN (International Union for Conservation of Nature) 'சிவப்புப் பட்டியலின்' தரவுகளின்படி, தற்போது 8,400-க்கும் மேற்பட்ட வன விலங்கினங்களும் தாவரங்களும் அழிந்துபோகும் நிலையில் உள்ளன. அதுமட்டுமன்றி, சுமார் 30,000 உயிரினங்கள் மிக ஆபத்தான அல்லது பாதிப்புக்குள்ளாகக்கூடிய நிலையில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இப்புள்ளிவிவரங்கள் ஒரு மில்லியனுக்கும் அதிகமான வனவுயிரிகளின் எதிர்காலத்திற்கு மட்டுமன்றி, ஒட்டுமொத்த மனிதகுலத்தின் பாதுகாப்பிற்கும் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாகும்.

ஏனெனில், மனிதர்களாகிய நாம் நமது அடிப்படைத் தேவைகளுக்கும் வாழ்வாதாரத்திற்கும் வனவிலங்குகள் மற்றும் இயற்கை வளங்களையே பெரிதும் சார்ந்துள்ளோம். உயிரினங்களின் இந்த வீழ்ச்சியானது இயற்கைச் சங்கிலியில் பெரும் விரிசலை ஏற்படுத்தி, இறுதியில் மனித வாழ்விற்கே அச்சுறுத்தலாக முடியும். எனவே, புவியின் உயிரியல் சமநிலையை மீட்டெடுப்பதும், அதனைப் பாதுகாப்பதும் இன்றைய காலத்தின் தவிர்க்க முடியாத அவசியமாகும்.

டிசம்பர் 20, 2013 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் அதன் 68-ஆவது அமர்வில், மார்ச் 03-ஆம் திகதி உலக வனவிலங்கு நாள் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதற்கான தீர்மானம், அழிந்து வரும் உயிரினங்களான காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்களின் சர்வதேச வர்த்தகத்திற்கான மாநாட்டின் (CITES) 16-ஆவது கூட்டம் மார்ச் 2013-இல் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்டது. முதன்முறையாக உலக வனவிலங்கு நாள் 2014-ஆம் ஆண்டில்தான் கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் மார்ச் 03-ஆம் தேதியன்று உலக வனவிலங்கு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

1973-ஆம் ஆண்டு அதே தேதியில் CITES (Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora) ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை ஒட்டி, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை 2013-ஆம் ஆண்டு மார்ச் 3-ஆம் தேதியை உலக வனவிலங்கு நாளாக அறிவித்தது. வனவிலங்குகளின் சர்வதேச வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதில் CITES முக்கிய பங்கு வகிக்கிறது. 38,000-இற்கும் மேற்பட்ட தாவரங்கள் மற்றும் விலங்குகளை வர்த்தகத்தில் சீரான முறையில் பயன்படுத்துவதைக்



கட்டுப்படுத்துவதுடன், அத்தகைய நடவடிக்கைகள் அவ்வுயிரினங்களின் உயிர்வாழ்வை அச்சுறுத்துவதில்லை என்பதையும் இது உறுதி செய்கிறது. இக்கட்டுப்பாடுகளி னால், வனவிலங்குகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட மிக முக்கிய மான உலகளாவிய வருடாந்திர நிகழ்வாக இது மாறியுள்ளது. இவ்வொப்பந்தத்தில் 184 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

உலக வனவிலங்கு நிதியத்தின் தலைமையகம் சுவிற்சலாந்தில் (World Wildlife Fund Headquaters: Gland, Switzerland), 29 ஏப்ரல் 1961 நிறுவப்பட்டது. உலக வனவிலங்கு நிதியத்தின் தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) கார்ட்டர் ராபர்ட்ஸ் (Carter Roberts). வனவிலங்கு பாதுகாப்பு, திடமான நிதி ஆதாரங்கள் இல்லாமல் முடியாது. விலங்குகளை வேட்டையால் பாதுகாப்பது, வாழ்விடங்களை மீட்டெடுப்பது அனைத்தும் நிதி ஆதாரத்தில்தான் செயற்படுகின்றன. எனவே உலக வனவிலங்குகள் விடயத்தில் உலக வனவிலங்கு நிதியத்தின் தொழிற்பாடு மிகவும் முக்கிய விடயமாகும்.

வனவிலங்குகளின் வியக்கத்தக்க பன்முகத்தன்மையையும் அழகையும் கொண்டாடுவதற்கு உலக வனவிலங்கு நாள் ஒரு சிறந்த வாய்ப்பாகும். இருப்பினும், காலநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் வனவுயிரிகள் இன்று கடுமையான அச்சுறுத்தல்களைச் சந்தித்து வருகின்றன. பல அரிய உயிரினங்கள் அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ள சூழலில், இந்நாளின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுக்கும் வறுமை ஒழிப்பு, நிலவளப் பாதுகாப்பு மற்றும் நிலையான வாழ்வாதாரங்களை உறுதிப்படுத்துதல் போன்ற இலக்குகளுடன் பல்லுயிர்ப் பாதுகாப்பும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. அழியும் நிலையில் உள்ள வனவிலங்குகள் மற்றும் தாவரங்களை இனங்கண்டு, அவற்றைப் பாதுகாப்பதற்கான முறையான செயற்றிட்டங்களை (Action Plans) வகுப்பதே இந்நாளின் முதன்மை நோக்கமாகும். இத்தகைய முயற்சிகள் இயற்கையோடு இணைந்த ஒரு நிலையான எதிர்காலத்தை உருவாக்க ஐக்கிய நாடுகள் சபை கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்துகின்றன

உலக வனவிலங்கு நாள், ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட கருப்பொருளின் அடிப்படையில் விழிப்புணர்வுப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது. 2024-ஆம் ஆண்டில், 'மக்களையும் கோளையும் இணைத்தல்: வனவிலங்கு பாதுகாப்பில் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளை ஆராய்தல்' (Connecting People and Planet: Exploring Digital Innovation in Wildlife Conservation) எனும் கருப்பொருளின் கீழ், நவீன தொழினுட்பங்கள் எவ்வாறு வனவுயிர்ப் பாதுகாப்பிற்குத் துணைபுரிகின்றன என்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

2025-ஆம் ஆண்டில், 'வனவிலங்கு பாதுகாப்பு நிதி: மக்களிடமும் புவிக்கோளத்திலும் முதலீடு செய்தல்' (Wildlife Conservation Finance: Investing in People and Planet) எனும் கருப்பொருள் முன்னெடுக்கப்பட்டது. போதுமானதாக இல்லாத தற்போதைய நிதி ஆதாரங்களை எவ்வாறு ஆக்கபூர்வமாகவும் நிலையானதாகவும் மாற்றுவது என்பதையும், புவியின் மீள்தன்மை கொண்ட எதிர்காலத்திற்காக நிதி ஓட்டங்களை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பதையும் இக்கருப்பொருள் வலியுறுத்துகிறது.

2025-ஆம் ஆண்டு உலக வனவிலங்கு நாளில், மிக அதிக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள விலங்குகள் மற்றும் பறவைகளைப் பாதுகாப்பது குறித்த ஆலோசனைகள் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டன. இத்தகைய முன்னெடுப்புகள் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாப்பதுடன், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் மனிதகுலத்தின் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பெரிதும் உதவும் எனக் கருதப்படுகிறது. இம்மாபெரும் இலக்குகளை அடையப் பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

2026-ஆம் ஆண்டின் உலக வனவிலங்கு நாள், 'மருத்துவ மற்றும் நறுமணத் தாவரங்கள்: ஆரோக்கியம், பாரம்பரியம் மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல்' (Medicinal and Aromatic Plants: Conserving Health, Heritage and Livelihoods) எனும் கருப்பொருளின் கீழ் முன்னெடுக்கப்படுகிறது. உலகெங்கிலும் பில்லியன் கணக்கான மக்கள் தங்களின் அடிப்படை ஆரோக்கியத்திற்கும் பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கும் இத்தாவரங்களையே பெரிதும் சார்ந்துள்ளனர். இருப்பினும், அதீதச் சுரண்டல் மற்றும் வாழிட இழப்பு காரணமாக இத்தகைய அரிய தாவர இனங்கள் இன்று பெரும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளன.

இத்தாவரங்களின் மரபுசார் அறிவைப் பாதுகாப்பதோடு, அவற்றின் வணிக ரீதியான பயன்பாட்டைச் சர்வதேச வர்த்தக விதிகளுக்கு உட்பட்டு முறைப்படுத்துவதை இக்கருப்பொருள் வலியுறுத்துகிறது. சூழலியல் சமநிலையைப் பேணுவதிலும், கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதிலும் மருத்துவத் தாவரங்களுக்கு உள்ள முக்கியத்துவத்தை உலகளாவிய ரீதியில் பறைசாற்றுவதே இந்நாளின் முதன்மை இலக்காகும்.

வனவிலங்குப் பாதுகாப்பு என்பது வெறும் அரசாங்கங்களின் அல்லது சர்வதேச அமைப்புகளின் கடமை மட்டுமல்ல; அது ஒவ்வொரு தனிமனிதனின் அறப்பணியுமாகும். ஒவ்வொரு ஆண்டும் புதிய கருப்பொருள் அறிவிக்கப்பட்டாலும், பொதுமக்களின் தீவிரமான ஒத்துழைப்பின்றி இம்மாற்றம் சாத்தியமற்றது.

சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பிளாஸ்டிக் போன்ற மாசுக் காரணிகளைக் குறைப்பதும், இயற்கையுடனான நமது பிணைப்பை மீளுருவாக்கம் செய்வதும் காலத்தின் கட்டாயமாகும். நம்முடன் வாழும் அரிய உயிரினங்களைப் பாதுகாப்பதில் சிறு மாற்றத்தையேனும் நாம் ஏற்படுத்த வேண்டும். கல்வி நிகழ்ச்சிகள், விழிப்புணர்வுத் தொடர்கள் மூலம் பெறப்படும் அறிவைச் செயல்பாடாக மாற்றி, உயிரியல் சமநிலையைப் பேண உறுதி ஏற்போம். பூமிப்பந்தின் வளமான எதிர்காலம் நம் ஒவ்வொருவரின் கைகளிலுமே உள்ளது.



natkunalingam@thaiveedu.com

# அமரத்துவம் சாத்தியமா!

சுப்ரமணியம் ஜெயசீலன்

பேரண்டத்தின் விளக்க முடியாத கேள்விகள் பலவற்றிற்கு விடை கண்ட மனித இனமானது, சில சந்தர்ப்பங்களில் இயற்கை விதிகளுக்கு கட்டுப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தில் காணப்படுகின்றது என்றால் அது பிழையாகாது. இயற்கை அனர்த்தங்கள், வானிலை மாற்றங்கள், வயோதிபம் என்பன போன்றே மரணமும் வெல்ல முடியாத ஒன்றாகவே காணப்படுகின்றது. பிறக்கும் அனைவரும் ஒரு நாளில் மரணிக்க வேண்டியது என்பது எழுதப்பட்ட நிச்சயமான விதியாகும். எனினும், மனித குலத்தின் ஆற்றுகைகளினால் இந்த மரணத்தைக் காலம் தாழ்த்துவதற்கோ நித்திய அமரத்துவத்தை அடைவதற்கோ வழி உண்டா என ஆய்வு செய்யும் அளவிற்கு எமது விஞ்ஞான உலகம் விசாலமாகியுள்ளது என்றால் சற்றே ஆச்சரியமாகத்தான் இருக்கும். எனினும், உண்மையில் வயது முதிர்ச்சியிலிருந்து மீண்டு இளமைப் பருவத்திற்கு திரும்பக்கூடிய அல்லது ஆயுளை நீட்டிக்கக் கூடிய ஆய்வுகள் தீவிர முனைப்புடன் முன்னெடுக்கப்படுவதனை ஆய்வாளர்கள் ஆதாரங்களுடன் நிரூபிக்கின்றனர். அவ்வாறான ஓர் ஆய்வு பற்றிய ஊடாடுகையாக இந்தப் பத்தி அமைகின்றது.

உலக முதனிலை செல்வந்தர் எனப் போற்றப்படும் எலோன் மஸ்க் அண்மையில் வயது மூப்பை மாற்றியமைக்க முடியும் அல்லது வயோதிபத்திலிருந்து மீண்டு இளமைப் பருவத்திற்கு திரும்புதல் தொடர்பில் பொது வெளியில் கருத்து வெளியிட்டிருந்தார். வயது மூப்பை மாற்றி அமைக்க முடியுமா ? என ஓர் ஊடகர் எழுப்பிய கேள்விக்கு இந்த வயது மூப்பினை மாற்றியமைக்க முடியும் எனத் தாம் கருதுவதாகவும், ஆய்வாளர்கள் ஏன் நாம் வயது மூப்படைகிறோம் என்பதைக் கண்டறிந்தால் இந்த கேள்விக்கு விடை காண்பது இலகுவானது எனக் கருத்து வெளியிட்டிருந்தார். இந்த கருத்தை ஆமோதிக்கும் வகையில் ஆயுள் நீட்டிப்பு குறித்த உலகின் புகழ்பூத்த விஞ்ஞானி, பேராசிரியர் டேவிட் சென்கிளயார் (David Sinclair) ஆயுள் நீட்டிப்பு அல்லது வயது மூப்பினை மாற்றியமைப்பது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

இதனை எளிமையாக விளக்க முடியும் எனவும் வயது மூப்பினைத் திருப்ப முடியும் எனவும் அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டிருந்தார். மேலும், வயது மூப்பினைத் திருப்பக் கூடிய அல்லது வயது மூப்படைந்த ஒருவரை அவரது இளமை காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்லக் கூடிய மருத்துவ பரிசோதனைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என தெரிவித்திருந்தார்.

இந்த பதிவிற்கு எலோன் மஸ்க் பதில் வழங்கியிருந்தார். அவர் இது ஈ.ஆர். 100 (ER100) முறையா என கேள்வி எழுப்பியிருந்தார். அதற்குப் பேராசிரியர் சென்கிளயார் ஆம் எனப் பதிலளித்திருந்தார்.

லைப் பயோசயன்சஸ் (Life Biosciences) என்பது விஞ்ஞானி சென்கிளயார் இணைந்து உருவாக்கிய ஓர் நிறுவனம் ஆகும். இந்த நிறுவனம் உயிரியல் துறையில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். மனித தன்னார்வலர்களைக் கொண்டு இளமையை மீட்கக் கூடிய ஆய்வுகளுக்கு அமெரிக்க



உணவு மற்றும் மருத்துவ அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிறுவனம் ரீ ப்ரோக்ராமிங் அல்லது மறுநிரலாக்கம் என்ற ஓர் புதிய எண்ணக்கருவுடன் கண் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் முறைகளை அறிமுகம் செய்யத் திட்டமிட்டுள்ளது.

இந்த ஆய்வு திட்டத்திற்கு, சிலிக்கான்வெளி நிறுவனங் களான ஆல்டோஸ் லேப் (Altos Labs), நியு லிமிட் (New Limit) மற்றும் ரெட்ரோ பயோசயன்ஸ் (Retro Biosciences) போன்ற நிறுவனங்கள் பல நூறு மில்லியன் டொலர்களை முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளன.

இந்த ரீ ப்ரோக்ராமிங் என்ற ஆய்வு முயற்சி அல்லது தொழினுட்பமானது உடலின் ஆரோக்கியமான உயிரணு க்களை உருவாக்கும் முயற்சியைக் குறிக்கின்றது. உடலில் ஏதேனும் ஒரு உறுப்பு பாதிக்கப்பட்டிருந்தால் அந்த உறுப்பினை மீளவும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காக இந்த ரீ ப்ரோக்ராமிங் ஆய்வுத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இது நோய்களைக் குணப்படுத்துவதற்காகவும், இளமை நிலைக்குச் திரும்பவும் உருவாக்கப்பட்ட திட்டம் என்றால் மிகைப்படாது. குறிப்பாக எமது மரபணுக்களை இந்த ஆய்வு மாற்றி அமைக்கின்றது. இந்த முயற்சியானது எமது உடலில் உயிரணுக்களில் எவற்றை இயக்க வேண்டும் எவற்றை நிறுத்த வேண்டும் எனத் தீர்மானிக்கும் திறன்கள் குறித்து ஆராய்கின்றது.

இந்த தொழினுட்பமானது உயிரணுக்களை மாற்றி அமைப் பதாகும், குறிப்பாக ஆரோக்கியமற்று காணப்படும் உயிரணுக்களை ஆரோக்கியமானவையாக மாற்றும் ஒரு தொழினுட்பமாகும். இதனை, மேல் மரபியல் (Epigenetics) என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது மரப ணுவின் அடிப்படை அமைப்பில் மாற்றம் செய்யாது அதன் செயற்பாட்டை மாற்றுவதைக் குறிக்கின்றது. ஏதேனும், ஒரு குறித்த செயற்பாட்டைத் தூண்டுதல் அல்லது அதனை முடக்கும் ஒரு தொழினுட்பமாகும்.

ரீ ப்ரோக்ராமிங் என்பது உயிரியல் உலகின் செயற்கை நுண்ணறிவாகக் கருதப்படுகின்றது. இதற்குப் பல்வேறு தரப்பினரும் முதலீடு செய்வதாக ஷிப்ட் பயோசயன்ஸ் (Shift Bioscience) நிறுவனத்தின் முதலீட்டாளர் கார்ல் ப்ஃப்ளெகர் (Karl Pfleger) தெரிவிக்கின்றார்.

நிறுவனம் இந்த ஆய்வுகளை மேம்படுத்துவதற்கு அதாவது நோயுற்ற உயிரணுக்களைச் சீரமைப்பதற்கான சிகிச்சை களுக்காக முன்னெடுக்கும் ஆய்வு முயற்சிகளுக்கு கூடுதல் முதலீடுகள் தேவைப்படுவதாக சென்கிளயார் குறிப்பிடு கின்றார்.

ரீ ப்ரோக்ராமிங் சில வேலைகளில் ஆபத்தானவை எனவும், சில சமயங்களில் இவ்வாய்வு கூட விலங்குகளுக்கு புற்று நோயை ஏற்படுத்தக்கூடிய அபாயம் காணப்படுகின்றது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும், சென்கிளயாரின் லைப் பயோசயன்ஸ் நிறுவனம் ஆரம்பகட்ட பாதுகாப்பு பரிசோதனைகளைக் கடந்துள்ளது. விலங்குகளுக்கு இந்த பரிசோதனை நடத்தப்பட முடியும் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இருப்பினும், இந்த ஆய்வுகள் இன்னும் சிக்கல் மிகுந்தவையாகவே காணப்படு கின்றன.



> “மனித உயிர்கள் உருவாகி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் வரலாற்றில் முதல் தடவையாக உடல் உறுப்புகளைப் பாதிப்புக்களில் இருந்து மீட்டு பழைய நிலைக்குக் கொண்டு வரக்கூடிய ஒரு சிகிச்சை முறை அறிமுகம் செய்யப்படுகிறது....”

ஆரம்ப கட்டமாகக் கண் நரம்பில் உயர் அழுத்தம் ஏற்படுவதனால் பார்வை நரம்புகள் சேதமடையும் குளுகோமா நோயாளிகளிடம், பரிசோதனைகள் முன் னெடுக்கப்படவுள்ளது. இந்த நோய்ப் பாதிப்பை குணப்படுத்தும் நோக்கில் நோயாளிகளின் ஒரு கண்ணுக்கு மூன்று ரீ ப்ரோக்ராமிங் உயிரணுக்கள் கொண்ட வைரஸ்கள் ஊசி மூலம் ஏற்றப்படவுள்ளன.

இந்தச் சிகிச்சை முறை பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்துவதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ரீ ப்ரோக் ராமிங்கின் போது உயிரணுக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய வகையில் மருந்துகள் வழங்கப்படவுள்ளன.

இந்த வைரஸ்களைக் கட்டுப்படுத்தக் கூடிய நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் வழங்கப்படவுள்ளன. ஆரம்பத்தில் இவர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் வழங்கப்பட உள்ளன. இந்த நோயாளி களுக்கு குறித்த மருந்தினை இந்த ஆண்டில் வழங்க முடியும் என நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இந்த மருந்து அல்லது சிகிச்சை முறைமை வயது மூப்பினை மாற்றி அமைக்கக்கூடிய புதிய யுகத்திற்கான ஆரம்ப புள்ளி யாக இருக்கலாம் என நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.




இது மருத்துவ உலகில் மிகப்பெரிய ஒரு விடயம் என லைவ் பயோசயன்ஸ் நிறுவனத்தில் பிரதம செயற்பாட்டு அதிகாரி மைக்கேல் ரீஞ்சில் (Michael Ringel) தெரிவிக்கின்றார்.

மனித உயிர்கள் உருவாகி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் வரலாற்றில் முதல் தடவையாக உடல் உறுப்புகளைப் பாதிப்புக்களில் இருந்து மீட்டு பழைய நிலைக்குக் கொண்டு வரக்கூடிய ஒரு சிகிச்சை முறை அறிமுகம் செய்யப்படுகிறது எனத் தெரிவிக்கின்றனர். குறிப்பாக, பாதிக்கப்பட்ட உடல் உறுப்பின் உயிரணு க்களில் திருத்தங்களைச் செய்து பழைய நிலைக்கு கொண்டு வரக்கூடிய ஓர் சிகிச்சை முறை குறித்த ஆய்வுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த தொழினுட்பமானது இரண்டு தசாப்த காலங்களுக்கு முன்னதாக நோபல் பரிசு வென்றெடுக்கப்பட்ட ஒரு தொழி னுட்பம் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு உயிரணுவில் சில சக்தி வாய்ந்த மரபணுக்களை அறிமுகம் செய்வது அது மீண்டும் ஒரு கரு உயிரணுவாக மாறும். இவ்வாறு மாற்றம் வருவதால் அது ஆரம்ப காலக் கருவில் காணப்படும் பல்வேறு சிறப்பு உயிரணு வகைகளாக உருவாகும். இதனை யாமனாக்கா (Yamanaka) காரணிகள் என ஆய்வாளர்கள் அழைக்கின்றனர்.

இது உண்மையில் ஃபேக்டரி ரீசெட் (factory reset) அல்லது பழைய அல்லது ஆரம்ப நிலைக்கு கொண்டு செல்லக்கூடிய ஒரு நிலையை விவரிக் கின்றது. நாங்கள் எங்களது அலை பேசிகளில் அல்லது டிஜிட்டல் சாதன ங்களில் இந்த ஃபேக்ட்ரி ரீசெட் அல்லது ஆரம்ப புள்ளிக்குச் செல்லும் ஒரு தொழினுட்ப வசதி காணப் படுவதனை அவதானித்திருப் போம். அதேபோல், உயிரணுக்களை ஆரம்ப நிலைக்கு கொண்டு செல்லக்கூடிய ஒரு தொழினுட்பமாக இந்த தொழி னுட்பம் கருதப்படு கின்றது. எனினும், இவை ஆபத்தானவை என்பதையும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டி யுள்ளது. ஏனென்றால், இவ்வாறு உயிர் வாழும் விலங்கு ஒன்றில் மாற்றங்கள் நடைபெறும் போது கட்டிகள் வேகமாக உருவாகக் கூடிய சாத்தியங்கள் உண்டு என ஆய்வாளர்கள் எச்சரிக் கின்றனர்.

இந்த ஆபத்துகளைத் தவிர்க்கும் நோக்கில் விஞ்ஞானிகள் புதிய ஒரு முயற்சியை முன்னெடுத்தனர். விஞ் ஞானிகள் 'பகுதி' அல்லது 'ஸ்திரமற்ற' ரீ ப்ரோகிராம் என்று அழைக்கப்படும் ஒரு புதிய யோசனையை முன் மொழிந் தனர். உடலில் உயிரணுக்களின் பங்கு என்ன என்பது குறித்து முழுமையான மறதி நிலைக்குச் செல்லாது, சக்தி வாய்ந்த மரபணுக்களுக்கு வெளிப் பாட்டைக் கட்டுப்படுத்துவது - அல்லது அவற்றின் ஒரு துணைக்குழுவை மட்டும் பயன்படுத்தி உயிரணுக்களை இளமையாகச் செயற் படுத்துவதே இந்த மாற்று யோசனைத் திட்டமாகும்.

2020-ஆம் ஆண்டில், இத்தகைய பகுதி ரீ ப்ரோ கிராமிங்களில் எலிகளின் பார்வை நரம்புகள் சேதமடைந்த பின்னர் பார்வையை மீட்டெடுக்க முடியும் என்று சென்கிளயார் கூறினார். நரம்புகள் மீண்டும் வளர்ந்ததற்கான சான்றுகள்கூட இருப்பதாகக் கூறினார்.

அவரது அறிக்கை உலகின் பிரபல விஞ்ஞான ஆய்வு சஞ்சிகைகளில் ஒன்றான நேச்சர் (Nature) இதழின் அட்டைப் படத்தில் 'காலத்தைத் திருப்புதல்' என்ற தலைப்புடன் பிரசுரமானது.

ரீ ப்ரோகிராமிங் என்ற தொழினுட்பத்தின் ஊடாக உண்மையில் வயது திரும்பப்படுகின்றது என்பதை அனைத்து விஞ்ஞானிகளும் ஒப்புக்கொள்வதில்லை. ஆனால், சென்கிளயார் இந்த ரீ ப்ரோகிராமிங் தொடர்பில் உறுதிப்பாட்டுடன் கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். நமது மரபணுக்களில் சரியான மேல்மரபியல் epigenetic தகவல்களைப் படிப்படியாக இழப்பதுதான் முதுமைக்கு இறுதிக் காரணம் என்ற கோட்பாட்டை சென்கிளயார் வலியுறுத்துகின்றார்.

எலோன் மஸ்க் இந்தத் துறையில் கவனம் செலுத்துவதாகத் தென்படுவதாகவும், மேலும் தமது கோட்பாட்டுடன் ஒத்திசைந்ததாகத் தெரிவதாகவும் சென்கிளயார் ஒரு மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட ஆயுள் அல்லது அமரத்துவம் தொடர்பில் சென்கிளயரின் ஆய்வுகள் நூல்கள் பல காணப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாகவே இந்த ரீ ப்ரோகிராமிங் காணப்படுகின்றது. ஆயுள் நீட்டிப்பு உள்ளிட்ட பல விஞ்ஞான உலகின் விந்தைகள் தொடர்பில் சென்கிளயார், அதிகம் விற்பனையாகும் பல புத்தகங்களை எழுதியவர். மற்றும் ஆயுள் நீட்டிப்பு குறித்த அறிவார்ந்த ஊடாடுகைகளில் சென்கிளயார் ஒரு முக்கியமான நபராகக் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.




முன்னதாக, நீண்ட ஆயுளுக்கு உதவக் கூடிய சர்டுயின்கள் எனப் படும் புரத மூலக்கூறுகளின் நன்மைகள் குறித்தும் சென்கிளயார் தகவல்களை வெளியிட்டிருந்தார். சிவப்பு வைனில் காணப்படும் ஒரு மூலக்கூறான ரெஸ்வெராட்ரோல் வயது மூப்பினைத் தவிர்க்கும் ஒரு பொருள் என அவர் பரிந்துரை செய்திருந்தார். ஆனால், சில விமர்சகர்கள் அவர் விஞ்ஞான அறிவியல் முன்னேற்றத்தை பெரிதும் மிகைப்படுத்துவதாகக் குற்றம் சுமத்துகின்றார்கள்.

லைப் பயோசயன்ஸ் நிறுவனம் 2017-இல் உருவாக்கப்பட்டது, முதலில் துணை நிறுவனங்களைத் தொடங்குவதற்கான ஒரு உத்தியைக் கொண்டிருந்தது, ஒவ்வொன்றும் வயது மூப்பு பிரச்சினையின் ஒரு அம்சத்தை அடிப்படையாகக் கொண்டு தொடர்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால், இவை மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றத்தை அடைந்த பின்னர், 2021-இல் அது ஒரு புதிய தலைமை நிர்வாக அதிகாரி ஜெர்ரி மெக்லாக்லினை நியமித்தது, அவர் சென்கிளயாரின் எலிகளின் பார்வை குறித்த ஆய்வு முடிவுகள் மற்றும் மனித சோதனையை நோக்கிய உந்துதலில் தனது முயற்சிகளைத் தீவிரப் படுத்தினார்.

மூளை உட்பட பிற உறுப்புகளை ரீ ப்ரோகிராம் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நிறுவனம் கலந்துரையாடியுள்ளது. சென்கிளயாரைப் போலவே ரிங்கலும், ஒரு நாள் ஒட்டு மொத்த உடலையும் புதுப்பிப்பது கூட சாத்தியமாகும் என்ற கருத்தை முன்வைக்கிறார். ஆனால், இப்போதைக்கு, இந்த ஆய்வை இளமையை மீட்டெடுக்கும் சாத்தியம் வெகு தொலைவில் உள்ள ஒரு எண்ணக்கருவின் சான்றாகக் கருதுவதே மிகவும் நடைமுறைச் சாத்தியப்பாடுடைய நிலைப் பாடாகும்.

பார்வையை இழந்த சிலருக்கு பார்வை வழங்குவது நம்பிக்கைக் குரிய விடயமாக நோக்கப்பட வேண்டும் என முதலீட்டாளர் ப்ஃப்ளெகர் கூறுகிறார்

மருத்துவரினால் எழுதப்படும் ஒரு மருந்துச் சீட்டு மாத்திரையின் மூலம் இளமையைத் திரும்பப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற அளவிற்கு தற்போதைக்கு இது இலகுவானதல்ல என மேலும் தெரிவிக்கின்றார்.

லைஃப் நிறுவனத்தின் சிகிச்சையும் ஒரு நுண்ணுயிர்க்கொல்லி மாறுதல் பொறிமுறையை நம்பியுள்ளது, இது பெரும்பாலும் ஆய்வக விலங்குகளில் பயன்படுத்தப்பட்டாலும், இதற்கு முன்பு மனிதர்களில் முயற்சிக்கப் படவில்லை. ஈ. கோலை மற்றும் ஹெர்பெஸ் வைரஸிலிருந்து எடுக்கப் பட்ட மரபணு கூறுகளிலிருந்து உருவாக்கப்படுவதால், அது மனிதர்களில் நோயெதிர்ப்பு எதிர்வினையை ஏற்படுத்தக் கூடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பரவலான பயன்பாட்டிற்கு உங்களுக்கு வேறு ஒரு அமைப்பு தேவைப் படலாம் என்று நான் எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தேன்,' எனச் சென்கிளயாரின் நுட்பத்தை செயற்படுத்த உதவிய விஞ்ஞானி நோவா டேவிட்சோன் கூறுகிறார்.

ரீ ப்ரோகிராமிங் அல்லது மறு நிரலாக்கத்தை ஆய்வு செய்யும் பிற நிறுவனங்கள், தேவையற்ற பக்க விளைவுகள் இல்லாமல் நேரத்தை மாற்றியமைக்க, எந்த மரபணுக் களைப் பயன்படுத்த வேண்டும் என்பதை ஆராய்வதில் தங்கள் கவனம் இருப்பதாகக் கூறுகின்றன.

இயற்கை விதிகளின் நிரந்தரமான பகுதிகளாகக் கருதப்பட்டு வரும் வயது மூப்பு, மரணம் போன்ற அசாத்திய ஏதுக்களை மாற்றியமைக்கும் முனைப்புக்களில் விஞ்ஞான உலகம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. இந்த அசுர வேக முயற்சி மனித இனத்தை நித்திய அமரத்துவம் நோக்கி நகர்த்துமா? இந்த வினாவிற்கு காலமே பதில் சொல்ல வேண்டும் என்றால் அது பிழையாகாது.



jeyaseelan.s@thaiveedu.com

# ஓர் ஈழ நாட்குறிப்பு -1



- ஓவியர் ஜீவா

tg.theeban@gmail.com

இன்று உலகம் சுருங்கிவிட்டது என்று சொல்வார்கள். எல்லோருக்குமே அப்படி என்றால் நிச்சயமாக இல்லை. இப்படி ஒரு நிலையில் இலங்கை செல்வதும் எனக்கு ஓர் ஆடம்பரம்தான். ஆனாலும் தாய்வீடு இதழின் வருடாந்திர கூடுகைக்கு இந்த வருடம் என்னையும் ஒரு அழைப்பாளராக தேர்ந்தெடுத்ததில் பெருமகிழ்ச்சியடைந்தேன். இந்த பெருமையை பீற்ற ஒரு கட்டுரையா என்று நீங்கள் நினைப்பது எனக்கு கேட்கிறது. இந்தக் கட்டுரை தமிழ்நாட்டில் வாழ்பவர்களுக்கு நானறிந்த தகவல்களைச் சொல்வதற்கும், ஈழத் தமிழர்கள், ஒரு இந்தியத் தமிழனின் பார்வையை அறிவதற்கும்தான். தாய்வீடு கூடுகையில் நான் கலந்து கொள்வது இது முதல் முறையல்ல. 2013-இல் அழைக்கப்பட்டு தாய்வீடு குழுவினருடன் கனடாவில் மகிழ்ச்சியாக 3 வாரங்களைக் கழித்தேன். பத்துக்கும் மேற்பட்ட இலவச ஓவியப் பட்டறைகளை பள்ளி மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு, தமிழாசிரியர்களுக்கு மற்றும் முதியோர்களுக்கும் நடத்தினோம். ஏராளமான தமிழர்களிடம் இருந்து அவர்கள் வாழ்க்கை அனுபவங்களை கேட்டறியும் வாய்ப்பும் கிடைத்தது.

இந்த வருடம் இலங்கையில் கூடுகை மட்டக்களப்பில் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. பெப்பிரவரி 9 அன்று நானும் நாகர் கோவிலில் இருந்து வந்த தாய்வீட்டின் தொழினுட்ப வல்லுநர் சாம் டேனியலும் யாழ்ப்பாணத்திற்கு சென்னையில் இருந்து விமானம் ஏறினோம். 80 பயணிகளைக் கொண்ட இன்டிகோ விமானம் மதியம் சுமார் 12 மணியளவில் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கியது. விமான நிலையம் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. மிகவும் சிறிய நிலையம். ஒரே ஒரு நபர் பயன்படுத்தக்கூடிய கழிவறைகள் மட்டுமே இருந்தன. எங்கள் பெட்டிகளையெல்லாம் ஒரு அறையில் குவித்து வைத்திருந்தனர். சுழலும் டிராலி எல்லாம் இல்லை. உரிய சீட்டுக்களைக் காட்டி பெட்டிகளைப் பெற்றுக்கொண்டோம். விமான நிலையத்திற்கு நண்பர் பொன்னையா விவேகானந்தனும், அவர் தங்கையின் மருமகனும் ஆகிய சுப்பிரமணியம் சிரஞ்சீவனும், விவேகானந்தனின் தமக்கை பேரன் அரவாணனும் வந்திருந்தனர். சீயான் என்றழைக்கப்பட்ட சிரன்சீவன், இந்த பயணம் முழுவதும் எங்களுடனேயே இருந்து காரையும் வேனையும் திறமையாக ஓட்டி எங்களைக் கவனமாகப் பார்த்துக்கொண்டார்.

கார் பலாலியிலிருந்து யாழ் நகரை நோக்கி சென்றது. கடைகளையும், கடை போர்டுகளையும், மக்களையும் வியப்போடு பார்த்துக்கொண்டே பயணித்தேன். நெற்றி நிறைய விபூதிப்பட்டையுடன் திருவள்ளுவர் சிலையை ஒரு நாற்சந்தியில் பார்த்தேன். தூய தமிழ் சொற்களே கடைப் பலகைகளை அலங்கரித்தன. இங்கு பேக்கரி என்றும் அடுமனை என்றும் அழைக்கப்படும் கடைகள் அங்கு வெதுப்பகங்களாக காட்சியளித்தன. மதிய உணவுக்கான இடம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டிருந்ததால் அங்கு சென்றடைந்தோம். பருத்தித்துறை சாலையும் நாவலர் வீதியும் சந்திக்கும் இடத்தில் யாழ்மனை என்ற அந்த உணவகத்தின் உள் அலங்காரங்கள் மிக எளிமையாகக் காட்சியளித்தன. பனை மட்டைகளினால் உட்சுவர்கள், அம்மி, ஆட்டுக்கல் போன்ற பொருட்களை ஆங்காங்கே காட்சிப்படுத்தியிருந்தனர். பஃபே முறைப்படி உண்ணும் வசதி. மண்பானைகளில் உணவுகளை வரிசைப்படுத்தியிருந்தனர். தட்டும் மண்தட்டுதான். இரண்டு வகை அரிசியினால் சமைக்கப்பட்ட இரண்டு நிறங்களில் சோறு, கூட்டுப் பொரியல்கள் என்று சைவ வகையில் நாலைந்து பானைகளும் இன்னும் சில பானைகளில் சிக்கன், மட்டன், மீன், இறால் வகைகளும் உண்டு. அவற்றுக்கு தனிக்கட்டணம். ஆவலுடன் மீன்கறியை எடுத்துக் கொண்டேன். பெரிய துண்டத்துடன், கிட்டத்தட்ட நாஞ்சில் நாட்டு கருத்தக்கறியை நினைவூட்டும் ருசி. மோர், தயிர் போன்றவை இல்லை. இப்படி இலங்கையில் என் முதல் உணவை யாழ்மனை தந்தது. கண்ணில் பட்ட நாவலர் வீதி என்ற பெயர் ஒரு சரித்திரத்தை நினைவூட்டியது.

உணவு அருந்திய பின் சென்ற இடம், ஈழ வரலாற்றில் முக்கியமான இடத்தை பெற்ற யாழ் நூலகம். தீ வைக்கப்பட்டு நூல்கள் எரிந்து போனதாகவும், கட்டடம் அதிகமாக சேதமாகவில்லை என்றும் சொன்னார்கள். நான் சென்ற அன்று வார விடுமுறை. மீண்டும் ஒரு நாள் அங்கு சென்றபோது, செருப்புகள் உள்ளே அனுமதியில்லை என்பது அறிந்து வியந்தேன். முன்னால் இருக்கும் பழைய கட்டடத்தை போலவே, பின்னாலும் ஒரு புதிய கட்டடத்தை கட்டியிருக்கின்றனர். ஒரு சுற்றுலா தளம் போல மக்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர்.

அடுத்து சென்றது ‘ஒல்லாந்தர் கோட்டை’ ஒல்லாந்தர் என்பது டச்சு மக்களை குறிப்பது. அவர்களது ஆட்சி இலங்கையில் 1658 முதல் 1796 வரை, சுமார் 138 ஆண்டுகள் நடைபெற்றிருக்கிறது. நட்சத்திர வடிவிலான இந்த கோட்டையை போல பல கட்டமைப்புகளை டச்சு ஆட்சியாளர்கள் கட்டியிருக்கிறார்கள். ரோமன்-டச்சுச் சட்டம், டச்சுச் சீர்திருத்தத்

திருச்சபை, பல கட்டடக்கலை, கல்வி மற்றும் வர்த்தக மேம்பாடுகள் (குறிப்பாக இலவங்கப்பட்டை) இவர்களின் காலத்திலேயே உரு வாயின. 1796-இல் ஆங்கிலேயரிடம் ஆட்சியை இழந்திருக்கின்றனர்.

நல்லூர் என்றதும் அங்கிருக்கும் கந்தசாமி கோவில்தான் நினை வுக்கு வரும். கோவிலுக்கு சற்று முன்பாக ஈழ விடுதலைக்காக உண் ணாவிரதம் இருந்து திலீபன் மரித்த இடம் உள்ளது. 15.09.1987 முதல் 26.09.1987 வரை உண்ணாவிரதம் இருந்திருக்கிறார். அங்கு இப்போது ஒரு நினைவுச்சின்னம் சிறிய அளவில் உள்ளது. அதை கடந்தவுடன் நல்லூர் கந்தசாமி கோவில் பிரம்மாண்டமாகக் காட்சிய ளிக்கிறது. பல வீடியோக்களில் அந்தக் கோவில் திருவிழாவைப் பார்த்த நினைவுகள் வந்தன. அப்போது நடை சாத்தப்பட்டிருந்ததால் உள்ளே செல்ல முடியவில்லை அந்த வட்டாரமே அந்த கோவிலின் சுவடுகளுடனேயே காட்சியளித்தது. கோவில் கட்டுமானத்தில் கோபு ரங்கள் மட்டுமே தமிழ்நாட்டுக் கோவில்கள் போல இருந்தன. மற்றபடி வளைவுகளான ஆர்ச்சுகள் கோவில் கட்டடத்தில் பெரு மளவு ஆக்கிரமித்திருந்தன. பின்னர் ஒரு முறை கோவிலுக்குள் சென்றபோது பிரகாரம் முழுதுமே வளைவான ஆர்ச்சுக்களால் அமைக்கப்பட்டிருந்தன. இலங்கையில் கோவில்களுக்குள் செல்லும் போது சட்டை அணியாமல்தான் செல்லவேண்டும் என்று கட்டுப் பாடுகள் உள்ளன. கிட்டத்தட்ட கேரள, குமரி மாவட்ட விதிகள்தான் இவை. நல்லூர் கோவிலில் அர்ச்சனை கட்டணம் வெறும் ஒரு ரூபாய்தான் என்பதும் ஒரு செய்தி!





அருகிலேயே சங்கிலியன் தோரண வாயிலுடன் கூடிய கட்டடமே யாழின் மிகப்பழைய கட்டடம் என்று சொல்ல அறிந்தேன். கந்தசாமி கோவிலுக்கு சற்று எதிரில் உள்ள பகுதியில் இரண்டு புகழ் பெற்ற ஐஸ் கிரீம் கடைகள் இருக்கின்றன. முதல் நாள் லிங்கன் ஐஸ் கிரீம் கடையில் ப்ரூட் சாலட் ஐஸ் கிரீம் சாப்பிட்டேன். அற்புதமான சுவை. மேஜையில் அமர்ந்து ஆர்டர் தந்துவிட்டு பின்னர் பணம் தரும் முறை இந்தக் கடைகளில் இல்லை. முதலிலேயே பணம் தந்தால் மட்டுமே கிடைக்கும். காரணம் கேட்டபோது, கோவில் திருவிழாக்களின்போது பெரும் கூட்டம் இந்த கடைகளுக்கும் படையெடுப்பதால் கூட்ட நெரிசலில் பணம் கொடுக்காமல் செல்லும் அனுபவங்களைப் பெற்ற தால் இந்த நடைமுறை என்று சொன்னார்கள். பின்னர் ஒரு முறை அங்கிருக்கும் றியோ ஐஸ் கிரீம் கடைக்கு சென்றபோது கிடைத்த அனுபவமே வேறு. ஐஸ் கிரீமுக்கு மட்டும் இவ்வளவு பெரிய கடையை நான் பார்த்தது கிடையாது. இரண்டு தளங்களில் விரிந்து பரந்திருக்கும் இந்த கடையில் ஆர்டர் கொடுக்க காத்திருந்த கூட்டம் கண்டு பிரமித்து போய்விட்டேன்.



அரியாலை சேத்துப்பாத்தி இந்து மயானம் அருகே வண்டி நிறுத்தப் பட்டது. இதன் அருகில்தான் செம்மணி புதைகுழிகள் என்று அழைக் கப்படும் இலங்கை வரலாற்றின் கொடிய சோகம் படர்ந்த இடம் என்று சொன்னார்கள். ராணுவத்தினரால் கொல்லப்பட்ட ஏராளமான தமிழர் களின் உடல்கள் இங்கே தோண்டியெடுக்கப்பட்டன, குழந்தைகளின் சடலங்கள் உட்பட. நீதிமன்ற உத்தரவிற்கிணங்க இது பாதுகாக்கப் பட்ட இடம். யாரும் உள்ளே பிரவேசிக்க முடியாது. ‘இது ஒரு குற்ற பிரதேசம். உள் நுழைவதற்கு தடை செய்யப்பட்டிருக்கிறது - இது யாழ்ப்பாணம் நீதிபதியின் உத்தரவுப்படி’ என்று ஒரு போர்ட் வாசலிலேயே இருக்கிறது. அங்கு சென்றவுடனேயே உள்ளிருந்து காவற்றுறையினர் வெளியே வந்து நம்மை தடை செய்கின்றனர்.



விவேகானந்தனின் ஊரான கிளிநொச்சியை நோக்கி எங்கள் பயணம் தொடங்கியது. வழியெங்கும் நெல்வயல்கள், உப்பளங்கள், உப்பும் மணலும் பாய்ந்து தரிசான நிலங்கள், பனங்காடுகள், கடலோரங் கள், உப்பங்கழிகள் என்று கண்ணுக்கு விருந்தான விஷயங்கள்.







அறுவடைக்காலம் என்பதால் எல்லா சாலைகளிலும் பாதிப் பகுதியை அடைத்து நெல்லை காயப்போட்டிருந்தார்கள். இது இங்கு மட்டுமல்ல. பயணம் முழுவதும் சாலைகளில் கண்ட காட்சி இது. யாழ்ப்பாண தீபகற்பத்தை மெயின்லேண்டுடன் இணைக்கும் இரண்டு பாலங்களில் ஒன்றான சங்குப்பிட்டி பாலத்தை கடந்து சென்றது ஒரு அற்புதமான அனுபவம். பாலத்தின் ஓரங்களில் அப்போதே பிடித்த மீனுடன் சிறு வியா பாரிகள் மீன் விற்றுக்கொண்டிருந்தனர்.

செல்லும் வழியில் பூநகரியில் ஆலடி சந்திக்கோட்டையின் சிதி லங்களைப் பார்வையிட்டோம். மண்ணால் அடைக்கப்பட் டிருந்த சுரங்கப்பாதையும் இருந்தது! வழியில் தேநீர் அருந்த லாமென்று இறங்கினோம். அது ஒரு ராணுவ கான்டீன். நெஸ்டீ, நெஸ்க்கோப்பி, பெரிய சைஸ் உளுந்துவடை, கொத்து ரொட்டி இத்யாதி என்று விலைப்பட்டியல் அறை கூவியது. இந்தியாவைப்போல அதிக அளவில் டீக்கடைகள் கண்ணில் படவில்லை. பாய்லர் டீ, அடுப்பில் காய்ச்சிய தேநீர் எல்லாம் அபூர்வம். பெரும்பாலும் பட்டன் அழுத்தினால் கொட் டும் பிராண்டட் டீ, கோப்பிதான். ராணுவ கான்டீன் என்பதால் சுத்தமாக இருந்தது. ரெஸ்ட்ரூமை கூட பூட்டி வைத்து, சாவி கேட்டால் மட்டுமே தருகிறார்கள். இப்போது ராணுவத்திற்கு வேலை குறைவு என்பதால் இப்படி கேன்டீன்கள் நடத்து கிறார்கள் என்று நண்பர் வேடிக்கையாக சொன்னார். இத்த கைய கேன்டீன்களை நான் சென்ற இடமெல்லாம் பார்த்தேன்.

நாங்கள் தங்கவேண்டிய இடம் விவேகானந்தனின் வீடு. கிளி நொச்சியில் பெரிய பரந்தன் பகுதி. வாய்க்காலை தாண்டும் ஐந்தாம் நம்பர் பாலம் வழியே வீட்டு வாசலுக்கு செல்ல லாம். அங்கு அவரது தமக்கை வசிக்கிறார். நெல் வயல்களாக இருந்த பகுதியில் அந்தக்காலத்திலேயே அவரது தந்தை ஒரு தோட்ட வீடு கட்டியிருக்கிறார். இப்போது விவசாய நிலத்தில் வீடு கட்ட அனுமதி தருவதில்லை என்று சொன்னார்கள். ஒரு பகுதியில் தமக்கை, அடுத்த பகுதியில் தங்கை குடும்பத்தினர். அதற்கு அருகில் அவர்களது தாயார் வசிக்கிறார். அவர் வசிப்பது இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பியோருக்காக இந்திய அரசு கட்டித் தந்திருக்கும் ஒரு சிறிய வீடு. தாயார் தமிழ்நாட்டில் அகதிகள் முகாமில் நீண்டகாலம் வசித்தவர். மிகத் தைரியமான பெண்மணி.

எங்களுக்கு விவேகானந்தனின் அறை ஒதுக்கப்பட்டது. சுற் றிலும் மரங்கள். வேலிக்கு அந்தப்பக்கம் நெல் வயல்கள். ஈழ விடுதலைப் போரின்போது பக்கத்து ஆனையிறவு ராணுவத ளத்தில் இருந்து கண்மூடித்தனமாக ஏவப்பட்ட ஷெல்கள் தாக்கி வீடே அழிந்து போய், இப்போது மீண்டும் கட்டப்பட்டது என்று சொன்னார்கள். வாசலில் இருந்த தென்னை மரத்தில் ஷெல் துளைத்த ஓட்டை இன்னும் இருக்கிறது. மரமும் காய்க் கிறது!

(தொடரும்...)



jeeva@thaiveedu.com

# புதிய சீருடைக் கலாசாரம்

**நடராசா சிறிரஞ்சன்**




**நா**ன் 1978-ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆறாம் வகுப்பில் சேர்ந்தபோது, மாணவர்கள் நீலக் காற்சட்டையும் வெள்ளை மேற்சட்டையும் அணிந்து வருதல் வேண்டும் என்ற சுற்றறிக்கை அதிபர் P.S. குமார சாமி அவர்களின் கையெழுத்திடப்பட்டு வந்திருந்தது. அது மாணவர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. தொடர்ந்து வந்த நாட்களில் சிலர் சீருடை அணிந்து வந்தார்கள். சீருடை அணியாது வந்த மாணவர்களுக்கு சீருடை அணியு மாறு காலத்துக்கு காலம் அறிவுறுத்தப்பட்ட போதிலும் அது கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தவணை விடுமுறை விடும் நாளில், அடுத்த தவணை முதல் எல்லா மாணவர்களும் சீருடை அணிந்து வருதல் கட்டாயமானது என்ற சுற்றறிக்கை ஒவ்வொரு வகுப்பு களுக்கும் அதிபர் அலுவலகத்தால் அனுப்பப்பட்டு, அது மாணவர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. இது ஒவ் வொரு தவணை விடுமுறை விடும் நாளிலும் தொடர்வதாக இருந்தது. சீருடை அணியும் மாணவர்களின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வந்தபோதும் எல்லோ ரும் சீருடையில் பாடசாலைக்கு வரும் நிலை தோன்ற வில்லை.

யாழ்பாணம் இந்துக்கல்லூரியில் மாணவர் அனுமதி பெறு வதற்கு எவ்வளவு போட்டி இருக்கிறது என்பது நாம் எல் லோரும் அறிந்ததொன்றுதான். அன்றும் அது அவ்வாறு தான் இருந்தது. அனுமதி தொடர்பில் என்ன நிபந்தனைகள் விதித்தாலும் அதைப் பின்பற்றுவதற்கு மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் தயாராக இருப்பர். சீருடை அணிந்துதான் மாணவர்கள் பாடசாலைக்கு வரவேண்டும் என்று அதிபர் கட்டளை பிறப்பித்திருந்தால் தாயின் தாலிக் கொடியை அடைவு வைத்தென்றாலும் பெற்றோர்கள் மகனுக் குச் சீருடை வாங்கிக் கொடுத்திருப்பர். அதை அதிபர் நன்கு அறிந்திருந்த போதும் அவ்வாறு செய்யவில்லை. ஏழை மாணவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற ஒரே காரணத் திற்காகவே P.S. குமாரசாமி அவர்கள் அவ்வாறு செய்ய வில்லை.

பாடசாலைகளில் சீருடை அணிவதற்குக் காரணம் மாணவர் களிடையே எற்றத்தாழ்வு தெரியக்கூடாது என்பதற்காகவே. அந்தவகையில் பாடசாலை மாணவர்கள் சீருடை அணிவது சிறப்பானதுதான். ஆனால், இன்று எங்கு பார்த்தாலும் சீருடைக் கலாசாரம் தலை விரித்தாடுகிறது. பழைய மாண வர் ஒன்றுகூடல்கள், நிறுவன ஒன்றுகூடல்கள், விளையாட் டுக் கழகங்கள், திருமணம், சாமத்தியச் சடங்கு, கோயில் திருவிழாக்கள் என்று பற்பலவற்றில் சீருடை அணிவது வழக்கமாகி வருகிறது. அண்மையில் நண்பர்கள் சுற்றுலா ஒன்றில் குழுவாக ஒளிப்படம் எடுப்பதற்கு குறிப்பிட்ட நிறத் தில் அமைந்த குறிப்பிட்ட உடைகளைக் கொண்டு வரு மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த உடைகள் எங்கு கிடைக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



இதனை, தமது பொருட்களை விற்பதற்கு இன்றைய வணிகர்கள் பயன்படுத்துமொரு உத்தி என்பதைத் தவிர்த்து வேறு எவ்வாறு அழைப்பது?

கலியாணவீடு, சாமத்தியவீடு போன்ற சுபகாரியங்களில் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் ஒரே வகையான உடைகளை அணியும் வழக்கம் தோன்றியுள்ளது. கோயில் திருவிழாக்களில் ஒவ்வொரு நாளும் சுவாமிக்கு ஒவ்வொரு நிறத்தில் அலங்காரம் செய்கிறார்கள். அதே நிறத்தில் குருக்கள் வேட்டி சால்வை அணிகிறார். பக்தர்களும் அவ்வாறே, பெண்கள் அந்த நிறத்தில் சேலையும் ஆண்கள் அந்த நிறத்தில் சால்வையும் அணிந்து வருமாறு எதிர்பார்க்கப்படுகிறது.

குருக்களுக்கு தர்மகர்த்தா அல்லது திருவிழா உபயகாரர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிறத்தில் வேட்டி சால்வை வாங்கிக் கொடுக்கக்கூடும். பக்தர்கள் தங்கள் சொந்தப் பணத்தில்தானே அவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டும். பத்து நாள் திருவிழா என்றால் பத்துச் சேலைகள், சால்வைகள். திருவிழா முடிந்ததும் இவற்றை என்ன செய்வது?

ஒருசாரார், மற்றவர்களிடம் உள்ள பணத்தை எவ்வாறான புதுப்புது வழிகளில் தம்வசப்படுத்தலாம் என்று புதிது புதிதாகச் சிந்தித்துச் செயற்படுகிறார்கள். நாம் சிந்தித்துச் செயற்படுவதை விட்டு அவர்களின் மாயவலைகளில் அகப்பட்டு விடுகிறோம். மூடர்களைப்போன்று கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை வீணாக்கி, பிறர் கோடான கோடிகளைச் சேர்க்க வழிவகுக்கிறோம்.

அந்தக் காலத்தில் சிறுவர்களுக்கு உடை வாங்கும் போது வளர வளரப் போட வேண்டும் என்று உரிய அளவிலும் பார்க்கச் சற்றுப் பெரியதாக வாங்குவர். தேவைப்படின் அதைப் பக்கங்களில் பிடித்துத் தைத்துப் பயன்படுத்துவர். பல பிள்ளைகள் இருக்கும் வீடுகளில் அண்ணன், அக்கா பயன்படுத்திய உடைகளைத் தம்பி தங்கையர் வளர்ந்ததும் பயன்படுத்தும் வழக்கமும் காணப்பட்டது. ஏழைக் குடும்பங்களில்தான் இவ்வாறென்றில்லை, வசதி படைத்தவர்களும் அக்காலத்தில் அவ்வாறுதான் வாழ்ந்தனர். அவ்வாறு அவர்கள் சிக்கனமாக வாழ்ந்து சேர்த்த சொத்துக்களும் தான், நாம் இன்று நல்ல நிலையில் இருப்பதற்கு காரணமாகின என்பதை நாம் மறந்துவிடுகிறோம்.

படைப்பின் அடிப்படையே பன்முகத்தன்மைதான். இயற்கையின் ஒவ்வொரு அம்சங்களிலும் பன்முகத்தன்மையைக் காண்கிறோம். அதனால்தானே உலகத்தின் ஒவ்வொரு அம்சங்களும் அழகாகவும் ஒன்றையொன்று பார்த்து இரசித்து வியக்கத்தக்கனவாகவும் உள்ளன. ஒரு காட்டில் ஒரே வகையான மரங்கள் இருப்பதை விட, பலதரப்பட்ட செடிகளும் கொடிகளும் இருப்பதே அந்த இடத்திற்கு உயிரோட்டத்தைத் தருகிறது. இதனை மனித வாழ்க்கைக்கும் பொருத்திப் பார்ப்பது சுவாரஸ்யமானது. ஆடைகள் என்பவை வெறும் உடல் கவசம் மட்டுமல்ல; அவை ஒருவருடைய ஆளுமை, கலாசாரம் மற்றும் ரசனையின் வெளிப்பாடு. மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த ஆடைகளை அணியும்போது, அவர்களின் சுயமரியாதையும் தனித்துவமும் வளர்கிறது என்ற வாதம் வலுவாக உள்ளது. அமெரிக்கா, ஐரோப்பா (குறிப்பாக பிரான்ஸ், பின்லாந்து, ஜேர்மனி) போன்ற பல வளர்ந்த மேற்குலக நாடுகளில் அரசுப் பாடசாலைகளில் மாணவர்கள் சீருடையணியும் வழக்கம் இல்லை என்பதும் ஞாபகத்தில் கொள்ளத்தக்கது. சில சமயங்களில் சீருடைகளை விட சாதாரண ஆடைகள் விலை குறைவாக இருப்பதாலும் மாணவர்களின் ஜனநாயக உரிமை மதிக்கப்படுவதாலும் தினசரி என்ன ஆடை அணிய வேண்டும் என்று தீர்மானிப்பது ஒருவகையான படைப்புத்திறன் சார்ந்த செயலாக அமைவதாலும் மேற்குலக நாடுகளில் மாணவர்கள் சீருடையணியும் வழக்கம் மிகக் குறைவான அளவிலேயே பின்பற்றப்படுகிறது. பாடசாலைகளில் சீருடை இல்லாமல் இருப்பது மாணவர்களின் தனிப்பட்ட சுதந்திரத்தையும் சுய அடையாளத்தையும் அங்கீகரிப்பதாகும். இது வளர்ந்த நாடுகளின் நவீன கல்விச் சிந்தனை. அதே சமயம், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இலங்கை போன்ற நாடுகளில், சீருடை என்பது ஏழை-பணக்காரர் என்ற வேறுபாட்டைத் தற்காலிகமாக மறைத்து, மாணவர்கள் அனைவரும் 'சமம்' என்ற உணர்வை வழங்கவும் உதவுகிறது. பன்முகத்தன்மை என்பது உடையில் மட்டும் இருக்க வேண்டியது அல்ல; அது மாணவர்களின் சிந்தனையிலும், செயற்பாட்டிலும் இருக்க வேண்டும். ஆடை சுதந்திரம் என்பது ஒரு ஆரோக்கியமான கல்விச் சூழலுக்கு வழிவகுக்குமே தவிர, அதுவே கல்வியின் தரம் ஆகாது.



Nadarasa.sriranjan@thaiveedu.com

# தாமதமாகும் ஆர்டெமிஸ் – II பயணம்

- குரு அரவிந்தன்

ஆர்டெமிஸ் என்பது சந்திரனின் உருவகமான கிரேக்கப் பெண் தெய்வத்தின் பெயராகும். சந்தி ரனோடு தொடர்பு உடையதால், அந்தப் பெயரை ஆர்டெமிஸ் என்ற இந்தத் திட்டத்திற்குத் தெரிவு செய் தார்கள். இந்த விண்வெளிப் பயணக் குழுவில் கனேடிய விண்வெளி வீரர் ஜெர்மி ஹேன்சன் இடம்பெற்றுள்ளார். மார்ச் மாதம் இந்தத் திட்டம் செயலாக்கப்படும் போது, இவர் சந்திரனுக்குப் பறந்த முதல் அமெரிக்கர் அல்லா தவராக இருப்பார். மேலும் நீண்டதூர ஆழமான விண்வெளிப் பகுதிக்கு விண்வெளி வீரரை அனுப்பும் நாடுகளில் அமெரிக்காவுக்கு அடுத்ததாகக் கனடா நாட்டை இடம்பெறச் செய்வார். இந்தப் பயணம் சந்தி ரனைச் சுற்றிவருவது மட்டுமே, சந்திரனில் தரை இறங் குவது அல்ல என்பதையும் இங்கே குறிப்பிட விரும்பு கின்றேன்.

ஆர்டெமிஸ் - 2 புளோரிடாவின் கேப் கனாவெரலில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து பெப்பி ரவரி மாதம் 8-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதி காலை தரையிலிருந்து புறப்படவிருந்தது. ஆனால் பெப்பிரவரி 2-ஆம் தேதி நாசா, வெட் டிரஸ் ரிகர்சல் எனப்படும் ஒரு முக்கியமான எரிபொருள் நிரப்பும் சோதனையை நடத்திய பிறகு, 322 அடி உயரமுள்ள பிரமாண்டமான ஸ்பேஸ் லாஞ்ச் சிஸ்டம் ராக்கெட் உடனடியாகப் புறப்படுவதற்குத் தயாராக இல்லை என்று நாசா நிறுவனம் முடிவு செய்தது. திருத்தங்கள் மேற்கொண்டபின் எல்லாம் சரியாக அமைந்தால், ஆர் டெமிஸ் - 2 விண்கலம் மார்ச் மாதம் 6-ஆம் திகதி அல்லது 11-ஆம் திகதி ஏவப்படலாம் என்று அறிவிக் கப்பட்டிருக்கின்றது. இருப்பினும், நாசா நிறுவனம் இன்னும் அதிகாரபூர்வ ஏவுதளத் திகதியை அறிவிக்க வில்லை.

2017-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட நாசாவின் ஆர் டெமிஸ் திட்டம், மனிதர்களைச் சந்திரனுக்கு மீண்டும் திருப்பி அனுப்புவதையும், செவ்வாய் கிரகத்திற்கு மனி தர்களை அனுப்புவதற்கான தயாரிப்பாக சந்திர தளத் தை நிறுவுவதையும் இலட்சிய இலக்காகக் கொண் டுள்ளது. முதல் பயணமான ஆர்டெமிஸ்-1, 2022-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கப்பட்டது.

நிலவில் கடைசி மனிதன் கால் பதித்து 53 ஆண்டுகள் ஆகிறது என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள். நாங்கள் சிறுவர்களாக இருந்த போது நடந்த அந்த நிகழ்வுகள் நேற்று நடந்தது போல் நினைவில் நிற்கிறது. பெற் றோர்கள் இதைப்பற்றிக் கதைத்தபோது, எங்களுக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. காரணம் 'நிலா நிலா ஓடிவா' என்று சொல்லி உணவூட்டிய நிலாவைத்தான்




thanavishnu@gmail.com



எங்களுக்குத் தெரிந்திருந்தது. நிலவில் மனிதன் கால் பதித்தான் என்பதைச் சீனா கூட அப்போது நம்பவில்லை. காரணம் அமெரிக்காவைத் தவிர வேறு எந்த நாடும் இதுவரை மனிதனை நிலவில் தரையிறக்கவில்லை.

நாசா நிறுவனத்தின் திட்டப்படி 1972-ஆம் ஆண்டு அப்பல்லோ திட்டம் முடிவடைந்திருந்தது. விண்வெளிச் சாதனைகளில் மிகவும் முக்கிய திருப்பமாக சந்திரனில் மனிதர் தரை இறங்கிய செயற்பாடு அமைந்தது. கற்பனையில் கவிதைகளில் வடிக்கப்பட்டது போன்று சந்திரனில் கால் பதித்தமை விண்வெளி ஆய்வுகளுக்குப் பலமூட்டிய நிகழ்வா கவும் இருந்தது. உங்களுக்கு இப்போது 52 வயதென்றால் உங்கள் காலத்தில் யாருமே சந்திரனில் கால் பதிக்கவில்லை. அது போன்ற ஒரு நிகழ்வைப் பார்க்கும் அதிஸ்டம் உங்க ளுக்கு வெகுவிரைவில் கிடைக்கலாம். காரணம் அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

விண்வெளிப் பயணத்தை முதலில் தொடக்கி வைத்தது அன்று சேவியத்யூனியன் என்று அழைக்கப்பட்ட ரஸ்யாதான். 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 'யூரி காகரின்' என்ற ரஸ் யர்தான் முதன் முதலாக விண்வெளிக்குச் சென்றார். அமெரிக் காவைச் சேர்ந்த நீல் ஆம்ஸ்ரோங் என்பவர்தான் 1969-ஆம் ஆண்டு யூலை மாதம் 20-ஆம் திகதி முதலில் சந்திரனில் கால் பதித்தவர். அப்பல்லோ 11 என்பது அமெரிக்காவின் அப்பல்லோ திட்டத்தில் சந்திரனுக்கு மனிதர்களைக் கொண்டு சென்ற விமானமாகும். இந்த விண்கலம்தான் சந்தி ரனில் மனிதர்களை தரையிறக்கிய முதல் விண்கலமாகும். கமாண்டர் நீல் ஆம்ஸ்ட்ராங், பைலட் பஸ் ஆல்ட்ரின், மற்றும் மைக்கேல் காலின்ஸ் ஆகியோர் இதில் பயணம் செய்தனர். ஜுலை 20-ஆம் திகதி லூனார் மாட்யூல் ஈகிளைச் சந்திரனில் தரையிறக்கினார்கள். தரை இறங்கிய பின் ஆம்ஸ்ட்ராங் அதில் காத்திருந்து சுமார் ஆறு மணி நேரம் கழித்து, ஜுலை 21-ஆம் திகதி சந்திரனின் மேற்பரப்பில் காலடி எடுத்து வைத்தார். அதனால் சந்திரனில் காலடி எடுத்து வைத்த முதல் விண்வெளி வீரரானார்.

சுமார் 19 நிமிடங்களுக்குப் பிறகு பஸ் ஆல்ட்ரின் தரையில் கால்பதித்து அவருடன் இணைந்து கொண்டார். மைக்கேல் காலின்ஸ் விண்கலத்தை இயக்கியதால் அவர் தரை இறங்க வில்லை. இது மூவரின் கூட்டு முயற்சியாக இருந்தாலும், முதலில் தரையில் கால்பதித்த ஆம்ஸ்ட்ராங்கின் பெயர்தான் நிலைத்து நிற்கிறது. அவர்கள் திரும்பி வரும் போது, சுமார் 47.5 இறாத்தல் நிறையுள்ள சந்திரப் பொருட்களைச் சேக ரித்துக் கொண்டு வந்தனர். மொத்தத்தில், அவர்கள் சந்தி ரனின் மேற்பரப்பில் 21 மணி நேரம் இருந்தனர். கொலம்பியா கட்டளை மாட்யூல் விண்கலத்தை மைக்கேல் காலின்ஸ் என்பவரே இயக்கினார்.

இதன் பின் இதுவரை 24 அமெரிக்கர்கள் சந்திரனுக்குப் பய ணித்தாலும், இதில் 12 பேர்தான் சந்திரன் தரையில் கால் பதித்தனர். அப்பல்லோ 17 மிசனில் சென்ற கமாண்டர் யூஜின் செர்னன்தான் டிசம்பர் 14, 1972 சந்திரனில் கடைசியாகக் கால் வைத்த மனிதராவார். அவர் திரும்பி வரும் போது, கடைசியாக சந்திரத் தொகுதியின் ஏணியில் ஏறுவதற்கு முன்பு தனது ஒரே குழந்தையின் முதலெழுத்துகளை சந்தி ரனின் தூசியில் வரைந்திருந்தார். ஆர்டெமிஸ் பயணத்தைப் பார்க்க அவருக்குக் கொடுத்து வைக்கவில்லை. காரணம், அவர் ஜனவரி 16, 2017 அன்று தனது 82-வது வயதில் ரெக்சாஸில் காலமானார்.

விண்வெளிப் பயணம் என்பது ஆபத்தானது, எப்போ என்ன நடக்கும் என்று சொல்ல முடியாதது. பல உயிரிழப்புகளைச் சந்தித்துத்தான் சில சாதனைகளை நிலைநாட்ட முடிகின்றது. இன்று மனிதர் அனுபவிக்கும் ஒவ்வொரு வசதிகளுக்குப் பின்னாலும் பலருடைய தியாகங்கள் இருந்திருக்கின்றன. அவற்றை ஆவணப்படுத்தப்படாவிட்டால், இது போன்ற தியா கங்கள் நினைவுகூரப்படாமலே போய்விடலாம். விண்வெளி சார்ந்து பல விபத்துகள் நடந்தாலும், சிலவற்றை இங்கே குறிப்பிடுகின்றேன்.

ஜனவரி 27, 1967-ஆம் ஆண்டு அப்பல்லோ - 1 விண்கலச் சோதனையின் போது தீ விபத்து ஏற்பட்டதில், அமெரிக்கர்



களான விர்ஜில் கஸ் கிரிஸோம், எட் வைட், ரோஜர் பி. சாஃபி ஆகியோர் மரணித்தனர். ஆனாலும் திட்டமிட்டபடி அப்பல்லோ 13 ஏப்ரல் மாதம் 11-ஆம் திகதி 1970-ஆம் ஆண்டு சந்திரனுக்குப் பயணமானது. ஆனால் ஏவப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு ஆக்ஸிஜன் தொட்டி ஒன்று வெடித்ததால், சந்திரனில் தரையிறங்கும் திட்டம் கைவிடப் பட்டது.

ஆனால், உடனடியாகப் பூமிக்குத் திரும்ப முடியவில்லை, திட் டமிட்டபடி பூமிக்குத் திரும்ப, விண்கலம் சந்திரனைச் சுற்றி வர வேண்டியிருந்தது. ஜிம் லோவெல், பிரெட் ஹைஸ் மற்றும் ஜாக் ஸ்விகெர்ட் ஆகிய மூவரும் ஆற்றலைச் சேமிக்கக் கட்டளைத் தொகுதியில் இருந்து தற்காலிக உயிர்காக்கும் படகான சந்திரத் தொகுதிக்கு நகர்ந்தனர். அதிக அளவு கார்பன் டை ஆக்சைடு, குறைந்த வெப்பம் மற்றும் போதுமான உணவு மற்றும் நீர் விநியோகம் இல்லாமல் அவர்கள் சந்திரச் சுற்றுப்பாதையில் கிட்டத்தட்ட நான்கு நாட்கள் கழித்தனர். மிகக் கடினமான ஒரு பயணத்திற்குப் பிறகு, குழுவினர் உயிர் தப்பிப் பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பினர்.

28 ஜனவரி 1986-ஆம் ஆண்டு ஏவுதள பூஸ்டர் செயலிழப்பால் ஏவுதலின் போது வாகனச் சிதைவு காரணமாக விண்வெளி ஓடம் சலஞ்சர் பேரழிவைச் சந்தித்தது. அதில் அமெரிக்கர் களான கிரிகோரி ஜார்விஸ், கிறிஸ்டா மெக்அலிஃப், ரொனால்ட் மெக்நாயர், எலிசன் ஒனிசுகா, ஜூடித் ரெஸ்னிக், மைக்கேல் ஜே. ஸ்மித், டிக் ஸ்கோபி ஆகியோர் இதில் உயிர் இழந்தனர். 1 பெப்ரவரி 2003-ஆம் ஆண்டு விண்வெளி ஓடம் கொலம்பியா திரும்பிப் பூமியை நோக்கி வரும்போது, பேரழிவைச் சந்தித்தது. அதில் அமெரிக்கர்களான ரிக் டி. கணவர், வில்லியம் சி. மெக்கூல், மைக்கேல் பி. ஆண்டர்சன், டேவிட் எம். பிரவுன், கல்பனா சாவ்லா, லாரல் கிளார்க் இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த இலன் ரமோன் ஆகியோர் உயிரி ழந்தனர்.

அமெரிக்காவைத் தவிர வேறு எந்த ஒரு நாடும் இதுவரை சந் திரனில் மனிதரைத் தரை இறக்கவில்லை. விண்வெளி யுகத்தில் முன்னிலை வகித்த ரஷ்யா பொருளாதார நிலை காரணமாக சந்திரனை நோக்கிய பயணத்தில் தொடர்ந்து அக்கறை காட்டவில்லை. இதுவரை காலமும் சில தவிர்க்க முடியாத காரணங்களால், இது போன்ற சில குறைபா டுகள் இருந்ததால், சந்திரனுக்குச் செல்லும் பயணம் தடைப்பட்டிருந்தது. இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்து, மீண்டும் சந்திரனுக்குச் செல்வ தற்கான புதிய வழிகளை நாசா நிறுவனம் நடைமு றைப்படுத்த இப்போது முன்வந்திருக்கின்றது.

2022-ஆம் ஆண்டில், நீண்ட காலத்தின் பின் அதாவது 53 வருடங்களின் பின் விண்வெளி நிறுவனம் ஆர்டெமிஸ் - 1 விண்கலத்தைச் சந்திரனை நோக்கி ஏவியது, இது தொடர்ந்து நிகழப்போகும் பயணங்க ளுக்கு அடித்தளம் அமைத்த ஒரு ஆளில்லாத விண்க லமாகும். இது நவம்பர் 16, 2022 அன்று, பூமியின் வளி மண்டலத்தின் வழியாக சந்திரனின் சுற்றுப்பாதைக்குச் சென்றது. இது பூமியின் குறைந்த ஈர்ப்புச் சக்திக்கு (LEO) அப்பால் ஈஸ்ட் மாதிரிகளை எடுத்துச் சென்ற ஒரு பணியாகும். கதிர்வீச்சு அளவுகள் மற்றும் உயிரி னங்களின் விளைவைப் படிப்பதற்காகவே இது அனுப்பப்பட்டது. இந்தப் பயணத்தின் மூலம் எதிர்கால ஆர்டெமிஸ் பயணங்களில் விண்வெளி வீரர்கள் பறக் கும்போது பாதுகாப்பாக வைத்திருப்பது குறித்த முக்கிய நுண்ணறிவுகளை வழங்கும்.

2022-ஆம் ஆண்டில் ஆர்டெமிஸ் - 1 விண்வெளி வீரர்கள் இல்லாமல் சந்திரனைச் சுற்றி வெற்றிகரமாகப் பறந்தாலும், ஆர்டெமிஸ் - 2 பயணம் என்பது மனிதர்களுடன் விண்க லத்தில் பயணித்து 50 ஆண்டுகளுக்கும் மேலாகக் குறைந்த பூமி சுற்றுப்பாதையைத் தாண்டிச் செல்லும் முதல் பயண மாகும். இந்தப் பயணத்தின் போது, விண்வெளி வீரர்கள் சந்தி ரனுக்கு அப்பால் ஆயிரக்கணக்கான மைல்கள் பயணித்து, ஆழமான விண்வெளிக் கதிர்வீச்சை அனுபவிப்பார்கள், மேலும் உண்மையான விமான நிலைமைகளில் உயிர் ஆதரவு, வழிசெலுத்தல் மற்றும் தகவல் தொடர்பு அமைப்பு களைச் சோதிப்பார்கள்.

இப்போது, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, ஆர்டெமிஸ் - 2 என்ற விண்கலம் சந்திரனுக்குச் சென்று திரும்புவதற்கான முதல் குழுவினருடன் கூடிய பயணமாக ஏவப்பட உள்ளது. 1972-ஆம் ஆண்டு நாசாவின் அப்பல்லோ திட்டம் முடிவடைந் ததிலிருந்து, மனிதர்களைச் சந்திரனை நோக்கி அழைத்துச் செல்லும் முதல் பயணமாக ஆர்டெமிஸ் - 2 இருக்கும். ஆர்டெமிஸ் - 2 சந்திரனுக்குப் போவதாக சில ஊடகங்கள் தலைப்புகள் போட்டாலும், சந்திரனில் யாரும் தரை இறங்கப் போவதில்லை. இது சந்திரனைச் சுற்றி வருவது மட்டுமல்ல, அதைக் கடந்து அதிக தூரத்திற்கும் சென்று வரப்போகிறது. இது இனி வருங்காலங்களில் சந்திரனில் தரை இறங்குவ தற்குப் பரீட்சாத்தமான பயணமாக அமைய இருக்கின்றது. மார்ச் மாதம் ஆர்டெமிஸ் பயணம் திட்டமிட்டபடி நடந்தால், அதைப்பற்றித் தெரிந்து கொள்வோம்.



kuruaravindan@thaiveedu.com




## வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக

# காமன் கூத்து

- அருணாசலம் லெட்சுமணன் -

15

காமன் பொட்டல் தற்போது சோபை இழந்ததாக காட்சிதரும். பந்தல்கள் சிதைவடைந்திருக்கும். பந்தல்களுக்கு போடப்பட்டிருந்த வாதுகள், ஓலைகள் வெயிலில் காய்ந்து, பனியில் நனைந்து விரைவாக சிதைவுகளின் அடையாளத்தை காட்டி நிற்கும். இயற்கை பொருட்களால் வடிவமைக்கப்பட்டிருந்த காமன் பொட்டல் முதல் நாள் மங்களத்தின் அடையாளமாகவே காட்சி தரும். இரண்டொரு நாள் செல்கையில் அவ்வளாகத்தின் வெளிப்படுத்துகை வேறு விதமான சிந்தனையை, கவனிப்பை ஏற்படுத்துவதாக அமையப்பெறும். இதுவரையில் இடம்பெற்ற கூத்து நடைமுறையில், இறுதியம்சத்தை எடுத்துரைக்கும் வகையில் ஒரு துன்பியல் அம்சத்தை வெளிப்படுத்தும் வகையிலேயே காட்சியளிப்பதை அவதானிக்கலாம். எதையோ இழந்த அம்சத்தை வெளிப்படுத்தும் அடையாளம் அவதானத்திற்குரியதாக காட்சி தருகின்றமையை காணலாம். காமன் கூத்தின் இறுதியங்கம் போர்களமாக அமையப்பெற்றமையால் அதன் சுவடுகள் அதன் வெளிப்பாடாய் அமைந்திருப்பதையும் காணலாம்.

இயற்கை வனப்புமிக்க சோடனைகள், பந்தல்கள், தோரணங்கள் உள்ளிட்ட அலங்காரங்கள் பகல் வேளைகளில் கண்களுக்கு குளிர்ச்சியைத் தருவதாக அமைகின்றன. இரவு வேளைகளில் ஏற்றப்பட்டுள்ள விளக்குகள், பந்தங்களின் துணையால் கண்களை கவர்ந்து இழுப்பதாக அமையப்பெற்றிருக்கும். மின்சாரம் எனும் சமாச்சாரம் தோட்டங்களுக்குள் நுழையாத காலகட்டங்களில் ஒளி முதல்களாக விளக்குகளும் பந்தங்களுமே நிலைக்கப்பெற்றிருந்தன. மலையக அரங்க முயற்சிகளுக்கு இப்பந்தங்களும் விளக்குகளும் பெரிதும் துணை நின்றுள்ளதை அறியலாம். மலையக மக்களின் வாழ்வியலோடு பந்தங்களும், விளக்குகளும் நிறையவே செல்வாக்குப் பெற்று வந்துள்ளன. இதன் வழியில் 'பந்தம் பிடித்தல்' 'விளக்கு பிடித்தல்' போன்ற சொல்லாடல்கள் வேறு அர்த்தங்களில் பிரயோகிக்கப்படுவதையும் அவதானிக்கலாம். ஆரம்பக் காலகட்டங்களில் இயற்கையின் வளங்களைக் கொண்டே சோடனைகள் அமையப்பெற்றிருந்தன. தோட்டக்காடுகளில் காணப்படும் கொடிகள், மரங்கள் மற்றும் இயற்கை தாவர அம்சங்களில் கிடைக்கப்பெறும் வளங்களைக் கொண்டே அலங்காரங்கள் அமையப்பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். 'கேஸ் லைட்' எனப்படும் பெட்ரோல் மெக்ஸ், டோச் லைட் ஆகியவற்றின் வரவும் இத்துறையின் விருத்தியின் பங்காளிகள் ஆகின. தோரணங்கள் இயற்கையின் ஊடுருவலுடன் அமையப்பெற்றிருந்த நிலையில் பொலித்தீன் பிரயோகத்தின் தொடர்ச்சி நிலை, குறித்த காலத்தின் பின்னர் ஆதிக்கம் செலுத்தி வருகின்றமை கவனத்திற்குரியதாகும். அவ்வாறே தோட்டத் தொழிற்சாலைகள் ஊடாக கோயில்களுக்கு வழங்கப்பட்ட மின்சார இணைப்பை பெற்று மின்குமிழ்களை பிரயோகிக்கும் லாவகம் தொடங்கப்பெறுகின்றன. அதன் பின்னர் மின்குமிழ்கள் ஊடாகவும் அலங்காரங்கள் முனைப்பை பெறுகின்றன. இவ்வாறான அலங்காரத்தோடு அமையப்பெற்றிருந்த காமன்கூத்து களம் சோபை இழந்ததை அடையாளப்படுத்தி நிற்கின்றமை கவனத்திற்குரியதாகும்.

மேற்குறித்த சோபை நிலை புத்துணர்ச்சியை பெறும் நாளாக மூன்றாவது நாள் அமையப்பெற்றிருக்கும். பந்தல்கள் அப்புறப்படுத்தப்பட்டிருக்கும். சோடனைகள், அலங்காரங்கள், தோரணங்கள் களையப்பட்டிருக்கும். கழிவுகள் முறையாக முகாமை செய்யப்பட்டிருக்கும். பொலித்தீன் பாவனை உள் நுழையாத வரை சுற்றாடல் பாதுகாப்பு நிலை நூறு வீதம் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும். பின்னரும் அலங்காரத்திற்கு பயன்படுத்தப்பட்ட பொலித்தீன்கள் அடுத்துவரும் வருட தேவைகளுக்காக பத்திரப்படுத்தப்படும் நடைமுறையும் கவனத்திற்குரியதாகும். அலங்கார நடைமுறைகளில் இயற்கை பொருட்களை உச்சமாகவும், உசிதமாகவும் பயன்படுத்தும் மலையக மக்களின் நுட்பம் மிகுந்த அவதானத்திற்குரியதாகும். தற்போது தோட்டம் புதுப்பொலிவை பெற்றிருக்கும். காமன் திண்ணை சானத்தால் மெழுகி ஒற்றை விளக்கு ஏற்றப்பட்டிருக்கும். விளக்குக்கு அருகில் முடிச்சிடப்பட்ட பொட்டலம் வைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். இப்பொட்டலத்தில் மதன் எரிந்ததன் அடையாளமான சாம்பல் வைக்கப்பட்டிருக்கும். மதன் எரிக்கப்பட்ட நிலையில் ரதியின் கோரிக்கையை மனதில் இருத்தி சிவனின் பணிப்பிற்கமைய




அச்சாம்பலை ஒன்றிணைக்கும் பணியில் இணையும் பாத்திர மாகவே குண்டோதன் கொள்ளப்படுகிறான்.

காமன் கூத்திற்காக பந்தலிட்டு அலங்காரம செய்யும் நடைமுறையை போலவே வீடுகளில் திருமணம், பெண் பிள்ளைகள் பூப்பெய்தல் நிகழ்வின் கொண்டாட்டம் போன்ற மங்கல நிகழ்வுகளுக்கும் பந்தலிட்டு அலங்கரிக்கும் நடைமு றைகள் காணப்படுகின்றன. அது போலவே அம்மன் ஆல யங்களில் திருவிழா ஏற்பாடுகளிலும் பந்தலிட்டு அலங்க ரிக்கும் நடைமுறைகள் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய தாகும். காமன் கூத்து நிறைவுற்று மூன்றாம் நாளிலையே பந்தலை அப்புறப்படுத்தும் நடைமுறை முழுமை பெறும். அவ்வாறே வீடுகளில் நிகழும் மங்கள நிகழ்வுகளுக்காக போடப்பட்ட பந்தலை அப்புறப்படுத்தும் நடைமுறை 'பந்தல் பிரித்தல்' என அழைக்கப்படுகிறது. பந்தல் இடுவதற்கு நல்ல நேரம் பார்த்து உற்றார், உறவினர்கள், அயலவர்கள், ஊர் மக்கள் ஒன்றுகூடி பந்தலுக்கான முதற் தூண் நடப்படும் செயன்முறை 'முகூர்த்தக்கால் ஊண்டுதல்' என அழைக்கப் படுகிறது. தூண் ஒன்று தெரிவு செய்யப்பட்டு, அத்தூணில் திருநீறு, சந்தனம், குங்குமம் பூசப்படுவதுடன் தூணின் முனியில் மாங்கொப்பு, பொல்பொலா, மஞ்சல் தூர் என்பன இணைத்து பட்டுத்துணியால் இணைத்து கட்டப்படும். இயற்கை நேசிப்பின் அடையாளமாகவே இப்பொருட்கள் அமைகின்றன. சில வேளைகளில் முதற் தூணில் பட்டை சீவப்பட்டிருக்கும். குறித்த தூணை ஊன்றுவதற்கு குழி தயார் செய்யப்பட்டுள்ள நிலையில் அக்குழியில் சில்லறை காசுகள் இடப்பட்டு, பால் ஊற்றப்பட்டும். தீபராதணையோடு ஒற்றைப்பட ஏழு, ஒன்பது, பதினொரு பேர் என்ற வகையில் ஒன்றிணைந்து குழியில் அத்தூணை ஊன்றுவார்கள். அதன் பின்னர் பங்கேற்றவர்களுக்கு இனிப்பு வழங்கப்படும். சிறிது காலங்களுக்கு முன்னர் காப்பரிசி வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. நீரில் ஊறவைத்த அரிசியில் சீனி, தேங் காய்ப்பூ ஆகியன கலந்து தயார் செய்தலை காப்பு அரிசி என்போம். முகூர்த்தக்கால் தூண்டுதலின் பின்னர் பந்தல் போடுதல் செயற்பாடு குறித்த அவதானம் மிகுந்த குறிப் பிடத்தக்கதாகும். அச்செயற்பாட்டின் பின்னர் பந்தல் போடு தல் செயற்பாடுகள் மும்முரமாக இடம்பெறும். இப்பணியில் சமூகத்தவர்களின் ஒன்றிணைந்த செயற்பாடுகள் குறித்த அவதானம் கவனத்திற்குரியதாகின்றது. இப்பணியை நிறைவு செய்யும் பொறுப்பில் தொண்டர் குழு மற்றும் வாலிப சங்கங் களுக்கு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நடைமுறை யும் குறிப்பிடத்தக்கதாகும். இதன் அவதானத்தில் திருமண மற்றும் பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்களில் 'தங்கள் நல்வரவை விரும்பும் தோட்டக் கமிட்டி தலைவர்கள் முதல், தொண்டர்கள் மற்றும் வாலிபர்கள் மாதர் சங்கம் வரை' என குறிப்பிடப்பட வேண்டியது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. அவ் வகையில் சமூகத்தின் ஒன்றுப்பட்ட தன்மை கவனத்தை பெறுகின்றன. அவ்வாறே காமன் ஊன்றுதல் செயற்பாடும் இடம்பெற்ற நிலையில் மதன், ரதி திருமணம் நடத்தும் தினத் திற்கு முன்னைய நாளில் பந்தலிடும் நடைமுறையும் சில தோட்டங்களில் காணப்படுகிறன. இவ்வாறு மதன், ரதி திரும ணத்தை முன்னிறுத்தி பந்தல் அமைக்கும் வேளையில் பின் பற்றப்படும் நடைமுறையே இச்சமூகத்தவர்களாலும் பின்பற் றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

'பந்தல் போடுதல்' அல்லது 'பந்தல் அமைத்தல்' செயற் பாட்டைப் போலவே 'பந்தல் பிரித்தல்' செயற்பாடும் முக்கி யத்துவம் பெறுகிறது. காமன் கூத்திற்காக போடப்பட்ட பந்தலை பிரிப்பதற்காக பிரயோகிக்கப்படும் நடைமுறை யையே வீட்டுத் தேவைகளுக்காக போடப்பட்ட பந்தல்களை

பிரிக்கும் போதும் கைக்கொள்ளப்படுகிறது. அவ்வாறே தோட்டங்களில் 'பந்தல் அமைத்தல்' செயற்பாட்டிற்காக தொண்டர்கள், வாலிபர்களுக்கு அழைப்பு விடுக்கும் நடைமுறையும் அவதானத்திற்குரியதாகும். திருமணம், ருதுசாந்தி தேவைகளுக்காக அழைப்பு விடுக்கும் செயற்பாடு 'பாக்கு வைத்தல்' என அழைக்கப்படுகிறது. பாக்கு வைத்தல் செயற்பாட்டை தொடங்குவதற்கு முன்னதாக 'பாக்கு படைத்தல்' செயற்பாடு இடம்பெறுவது கட்டாய நிகழ்வாகவே அமைகிறது. தோட்டங்களில் 'பாக்கு படைத்தல்' செயற்பாட்டின் போது குறித்த வீட்டுடன் தொடர்புபட்ட முக்கியஸ்த்தர்கள் கலந்துக்கொள்வார்கள். அவ்வாறே தோட்டப் பிரிவில் உள்ள கோயில் கமிட்டி தலைவர், தோட்டக் கமிட்டி தலைவர், தொண்டர் கெப்டன், வாலிப சங்க தலைவர், மாதர் சங்க தலைவி ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்படும். பாக்கு படைத்தல் நிகழ்வில் தாய்மாமனாருக்கு பாக்கு வைக்கப்படுவதைப் போலவே மேற்குறித்த தோட்ட கட்டமைப்பின் முக்கியஸ்த்தர்களுக்கு பாக்கு வைத்தல் செயற்பாடு இடம்பெறும்.

பாக்கினை பெற்றுக்கொண்ட தொண்டர் கெப்டன், வாலிபர் சங்கத் தலைவர் தங்கள் அமைப்பின் அங்கத்தவர்களுக்கு கூறி விடுவார்கள். அதன் பின்னர் குறித்த தேவை இடம் பெறும் வீட்டிலுள்ள நிகழ்வோடு தொடர்புபட்ட வேலைகளை இணைந்து உதவுவார்கள். விறகு வெட்டுதல், தோட்டத்திலுள்ள வீடுகள் தோறும் பாக்கு வைத்து அழைப்பை விடுத்தல், பந்தல் அமைத்தல், பந்தல் பிரித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். அவ்வாறே நிகழ்வுக்கு வருகை தருபவர்களை உபசரித்தல், பந்தி வைத்தல் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்கள். தற்போது தொழிற்சங்க பிளவுகள் போன்ற இன்னோரன்ன காரணங்களால் இந்நிலைமை குறைவடைந்துள்ள போதிலும் ஒன்றுபட்டு உதவுகின்ற தன்மை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். நிகழ்வு வீட்டிற்கு உறவுக்காரர்களுக்கு அழைப்பை விடுக்கும் போது பொதுவாக தபாலில் இடுவதன் ஊடாகவே அழைப்பு விடுக்கப்படும். குறித்த தேவையொன்றிற்காக குறிப்பிட்ட குடும்பத்தவர்களுக்கு சிரமத்தை கொடுக்காமல் உதவுகின்ற போக்கிலேயே உறவுகளும் ஊரவர்களும் செயற்பட்டதை அறிய முடிகிறது. சமகாலத்தில் வீட்டிற்கு வந்து அழைப்பு விடுக்காவிட்டால் அதனை அழைப்பாகவே கருதாத நிலை காணப்பட்டது. அண்மைக் காலங்களில் வட்சப் தொடர்பு ஊடாக அழைப்பிதழ்களை பரிமாறும் பொறிமுறையும் கவனத்தை பெறுகின்றன.

தோட்டமொன்றில் வீடு அல்லது பொது நிகழ்வுகளில் இடம் பெறும் நிகழ்வுகளுக்கும் உதவும், உறுதுணை புரியும் மனித வளங்கள் குறித்த அவதானத்தில் பூசாரி, சோதிடர்கள், சிகையலங்கரிப்பாளர், சலவையாளர், 'வாசல்கூட்டி' எனப்படும் வாசல் சுத்தம் செய்யும் நபர்களின் வகிபங்குகளும் கவனத்தை பெறுகின்றன. இதுதவிர பெருந்தோட்டப் பொறிமுறையில் நிர்வாகம் சார், சுகாதாரம் சார், பராமரிப்பு சார் ஆளனியினர் பற்றிய அவதானம் வேறு வகையில் நோக்கத்தக்கதாக அமைகிறது. பூசாரி எனப்படுவோர் சமயம் சார் நம்பிக்கையின் வெளிப்பாடுகளாக திகழ்கிறார்கள். அவ்வாறே சோதிடர் பிறப்பு, இறப்பு, வாழ்க்கை தொடர்பான கணிப்புகளை வலியுறுத்துபவர்களாக திகழ்கிறார்கள். சிகையலங்கரிப்பாளர், சலவையாளர், என்போர் சமய வழிபாட்டுடனும் வாழ்வியல் செயற்பாடுகளின் பங்கேற்பாளர்களாகவும் செயற்படுகிறார்கள். 'வாசல்கூட்டி' என அழைக்கப்படும் துப்பரவு தொழிலாளி முழுத் தோட்ட அமைவின் கழிவுகளை முகாமை செய்யும் பொறுப்புடன் உதவும் நபராக சிறப்பு பெறுகிறார். லயன் முறையில் வாழ்விடங்கள் காணப்பட்ட போதிலும் கழிவகற்றும் கால்வாய்கள் முறையாக அமைக்கப்பட்டிருந்தமையும் பராமரிக்கப்பட்டமையும் கவனத்திற்குரியது. இவ்கழிவகற்றும் முறையை கவனிக்காமல் விட்டதன் விளைவினாலேயே தோட்ட லயக் குடியிருப்புகள் சரிவுக்குள்ளாகி வருகின்றன. மாறாக தற்போது தோட்டங்களில் அமைக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டங்கள் முறையான பாதை ஏற்பாடுகளையும் கழிவகற்றும் முறையையும் கொண்டே அமைக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு பார்க்க வேண்டியது அவசியமாகும். அவ்வகையில் பார்க்கின்ற போது அவ்வாறு அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் விரைவில் சரிவுக்குள்ளாகும் என்பது கவனத்திற்குரியதாகும். இவ்விடயங்களை கருத்திற் கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து யோசிக்க வேண்டியது அவசியமாகும். இனி வருகின்ற வீடமைப்புத் திட்டங்களாவது முறையான பாதை, சீரான கழிவகற்றும் முறைகளை கருத்திற்கொண்டு அமைக்கப் பெறுதல் அவசியமாகும்.

காமன் கூத்து ஏற்பாட்டாளர்களினாலும் மதன் ரதி திருமணத்திற்கு பாக்கு வைக்கும் நடைமுறை பின்பற்றப்படுகிறது. அதன் தொடர்ச்சி நிலையில் மலையக மக்களின் வாழ்வியலோடு பாக்கு வைக்கும் நடைமுறை மிகுந்த செல்வாக்கு நிலை பெறுகிறது. கோயில் திருவிழா போன்ற நிகழ்வுகளுக்கு வாத்திய கலைஞர்களுக்கு அழைப்பு விடுத்தல், ஒலி பெருக்கி பொருத்துனர்களுக்கு அழைப்பு விடுத்தல், வாகன சேவையினை வழங்குனர்களுக்கு அழைப்பு விடுத்தல், தோட்டத்துறை மற்றும் தோட்ட நிர்வாகத்து உத்தியோகத்தர்களுக்கு அழைப்பு விடுத்தல், அரசியல் பிரமுகர்கள் மற்றும் அதிதிகளுக்கு அழைப்பு விடுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு பாக்கு வைத்தல் செயன்முறையே பிரயோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே வீடுகளில் இடம் பெறும் நிகழ்வுகளுக்கான ஒலியமைப்பு, சமையற்காரர், வாத்திய கலைஞர்களுக்கு அழைப்பு விடுக்கும் செயற்பாடுகளுக்கும் பாக்கு வைத்தல் செயற்பாடு இன்றிமையாததாகும். குறித்த நபரின் அல்லது அமைப்பின் பாக்கை எடுத்துவிட்டால் ஏற்கனவே பேசிய தொகையை விட அதிகமான தொகையில் புதிய தொகையில் அழைப்பு வந்தாலும் அதனை ஏற்பதில்லை. பாக்கு பெற்றுக்கொள்ளுதல் என்பது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கு ஒப்பானதாகவே அணுகப்பட்டமை கனத்திற்குரியதாகும். மூன்று வெற்றிலையின் மேல் பாக்குத்துண்டுகள், சிறிய பூக்கள் இணைத்து, அதனை வழங்கி, நிகழ்வு தொடர்பான விடயத்தை கூறி அழைப்பை விடுப்பதையே 'பாக்குவைத்தல்' என சுருங்கக் கூறலாம். தாய்மாமனாருக்கு வைக்கும் போது பணத்தையும் இணைத்து வைப்பது வழமை. அதனை பணம்பாக்கு என அழைப்பதுண்டு.

முகூர்த்தக்கால் நடப்பட்டு, பந்தல் இடப்பட்ட நாளில் இருந்து ஒற்றைப்பட ஐந்து அல்லது ஏழு நாட்களில் பந்தலை பிரிக்கும் செயற்பாடுகள் இடம்பெறும். காமன்கூத்தில்

கையாளப்படுகின்ற நடைமுறையின் தொடக்கத்துடனேயே இச்செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றமையை அவதானிக்கலாம். மாறாக அம்மன் கோயில்களில் திருவிழா உற்சவங்கள் இடம்பெற்று கரகம் குடிவிடும் நாளில் இருந்து எட்டு நாட்கள் கோயில் கதவுகள் அடைக்கப்படுவது கட்டாய செயற்பாடாக கொள்ளப்பட்டது. கோயில் கதவு அடைக்கப் பட்டு எட்டாம் நாள் கிரியைகள் நிறைவடைந்ததுமே ஆலயம் திறக்கப்படும். அதன் பின்னரே ஆலய வளாகம் தூய்மை யாக்கும் செயற்பாடுகள் இடம்பெறும். அண்மைக்காலங் களாக ஆகம முறையான வழிபாடுகள் ஆலயங்களில் உட் புகுத்தப்பட்டு இவ்அனுகுமுறைகளை தவிர்த்து வருகின் றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்குறித்த அணுகுமுறைகளுக்கு அமைய காமன் பொட் டல் உள்ளிட்ட தோட்ட வளாகம் முழுதும் தூய்மையாக்கப் பட்டிருக்கும். தோட்டத்தை பார்ப்பதற்கு புத்துணர்சச்சியை மக்களும் திரண்டிருப்பார்கள். காமன் பொட்டலுக்கு அரு கில் உள்ள நீர் நிலையில் தீர்த்தம் எடுக்கும் செயற்பாட் டிற்கு ஊர்வலமாக செல்வதற்கு தயாராக இருப்பார்கள். இந் நிலையில் மதன் வேடம் தரித்தவரின் உருவத்தை அடை யாளப்படுத்தும் வகையில் காமன் திடலில் உருவம் ஒன்று நித்திரை கொள்வதுபோல் இருத்தப்பட்டிருக்கும். அருகில் உரல் வைக்கப்பட்டிருக்கும். பின்னர் தீர்த்தம் எடுத்து வந்த வுடன் அவ்இடத்தில் மதன் வேடம் தரித்தவர் இருத்தப் படுவார்.

தீர்த்தம் எடுத்துவரும் ஊர்வலம் தொடங்கப்பெறும். தப்பிசை முழுங்க ஆரவாரத்துடன் ஆற்றங்கரை நோக்கி ஊர்வலம் நகர்த்தப்படும். ஆற்றங்கரையில் குடம் ஒன்றில் நீர் எடுத்த நிலையில் மீளவும் காமன் பொட்டல் நோக்கி ஊர்வலம் வருகை தருவார்கள். இவ்வாறே ஒவ்வொரு தோட்டங்களின் அம்மன் திருவிழாக்களின் போதும் கரகம் பாலிப்பதற்கு



ஏற்படுத்துவதாக அமையப்பெற்றிருக்கும். மாலை வேளை யில் மீளவும் காமன் பொட்டல் சம்பிரதாய செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு ஏற்றவாறான களச்சூழல் வாய்க்கப் பெற்றிருக்கும். ரதி, சிவன், விநாயகர், முருகன், நாரதர், இந்திரன், ஈஸ்வரி போன்ற பாத்திரங்களின் பிரசன்னத்தை கொண்டதாக அமைந்திருக்கும். தப்பிசைக் கலைஞர்கள் தப்புகளுடன் சபையின் கவனத்தை ஈர்த்திருப்பார்கள். சிறு வர்களினதும், வேடதாரிகளினதும் ஆர்வத்தை பொருத்த வாறு பாத்திரங்களின் எண்ணிக்கை அமைந்திருக்கும். குறித்த தோட்டப் பிரிவில் பொறுப்பாக இருக்கும் காமன் மாஸ்ட்டர், உதவி காமன் வாத்தியார்கள் உள்ளிட்டவர்கள் திரண்டிருப்பார்கள். இக் களத்தில் அயல் தோட்டங்களில் இருந்து அழைக்கப்பட்டிருந்த காமன் வாத்தியார்களும் இன்றும் அதிதிகளாக அழைக்கப்பட்டிருப்பார்கள். ஊர் செல்லும் வேளையில் வரிசையாக செல்வதும், கரகம் பாலித்த நிலையில் மீளவும் வரிசையாக ஊர் மக்கள் தப்பி சையோடு வருகைத் தருகின்ற நிலையும் குறிப்பிடத்தக்க தாகும். அவ்வாறே மரண சம்பவம் நிகழ்ந்ததன் பின்னர் இறுதி சடங்கின் போது நீர்மாலை எடுத்துவரும் சந்தர்ப் பத்தின் போதும் இவ்வாறு நீர் நிலையில் இருந்து குடங் களில் நீர் எடுத்துவரும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. நீரோடு தொடர்புபடுகின்ற கிரியைகளுக்காக ஒவ்வொரு தோட்டங்களிலும் நீர்நிலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவ் வாறே மரணத்தின் பின்னர் நிகழும் கருமக்காரிய நிகழ்வு களை மேற்கொள்ளவும் குறித்தவொரு நீர்நிலை ஒதுக்கப்பட் டிருக்கும். ஊரின் தொடக்கத்தில் ஓடை அல்லது ஆறு தொடக்கம் எடுக்கும் இடம் கரகம் பாலிப்பதற்கும், ஊர் நிறைவடையும் எல்லையில் கரகம் குடிவிடும் செயற்பாடும்

இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. தனித்தனியே நீர் நிலைகளை ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் வெவ்வேறாக நீர்நிலைகளை பயன்படுத்தும் வகையில் தாராளமாக நீர் நிலைகள் காணப்படுகின்றமையும் சிறப்பம்சமாகும். இவ் வாறு அமைந்த நீர்நிலைகளை அன்றாடத் தேவைகளுக் காக முறையாக முகாமை செய்யும் முறைமையும் அவ தானத்திற்குரியதாகும். தப்பிசை முழங்க ஆட்டம் பாட்டங் களுடன் காமன் பொட்டலுக்குள் நீர் எடுத்துவரும் நிகழ்வு நிறைவடையும். பல்வேறு வாத பிரதிவாதங்கள் நிலவிய காமன்பொட்டல் தங்போது புரிந்துணர்வு களமாக அமைதி பெறும். வாத பிரதிவாதங்கள் எனும்போது எரிந்தக்கட்சி, எரி யாதக்கட்சி விவாதங்கள் குறித்த பார்வை அவதானத்தை பெறுகின்றது. அவ்விடயம் தொடர்பான விரிவான பார்வை களை அடுத்துவரும் அங்கத்தில் பார்க்கலாம்.

மதனுக்கு உயிரெழுப்பும் நிகழ்வோடு உரல் தொடர்பு படு கிறது. உரல், உலக்கை, சுளகு,கத்தி போன்ற அன்றாடம் பாவனைக்குரிய பொருட்கள் மக்களின் கிரியைகளோடு நிறையவே தொடர்புபடுகின்றன. ஒருவர் மரணமடைந்து விட் டால் வெற்றுடலை காட்சிக்காக வைத்திருக்கும் அருகில் உரலை மறுபுரம் திருப்பி வைத்து அதன் மேலேயே விளக்கு உள்ளிட்ட நிறைநாளியை வைப்பதுண்டு. அவ்வாறே இறுதி கிரியையை நிறைவடைந்து திரும்புகையில் வீட்டின் வாசல்ப டிக்கு குறுக்காக உரல் இடப்பட்டிருக்கும். அருகில் வைக்கப் பட்டிருக்கும் பாத்திரத்தில் இருந்து தண்ணீரை எடுத்து கால்களை கழுவி, உரலை தாண்டிய நிலையிலையே வீட் டினுள் பிரவேசம் செய்வதும் கட்டாய கிரியையாகக் கொள் ளப்படுகிறது. காமன் கூத்தின் வலியுறுத்தலுடனேயே இவ் வாறான பிரயோகம் இம்மக்களாலும் கைக்கொள்ளப்படுகின் றமையை அறியலாம்.

ரதியின் பல்வேறு வாதங்களை செவிமடுத்த நிலையில் அவ் வாதங்களுக்கு விடையளிக்கும் களமாக இக்களம் முக்கியத் துவம் பெறுகிறது. ரதியின் நிலையை மீளவும் எடுத்து ரைக்கும் பாடல்கள் களத்தில் இசைக்கப்படும். அவ்வாறு இசைக்கப்படும் பாடல்கள் ரதி சார்பான குரலாகவும், ரதி யின் குரலாகவும் அமைகின்றமையை அவதானிக்கலாம். காமன் கூத்தில் வருகின்ற பாடல்களில் 'பந்தல்' பற்றி சித்த ரிக்கும் பல பாடல்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக இப்பாட லிலும் பந்தல் தொடர்பான சித்தரிப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

***அந்த கைலாசம் முத்தியிலே ரதி கதரியே போகையலே***
***அய்யோ பந்தலது அந்த ஆனி பெஞ்சலது***
***ஆனி பென்னி பந்தலதில் மானிக்க பாய்விரித்து***
***அகில மானிக்க பாய் விரித்து அரசானி கால் நிருத்தி***
***அந்த அக்கினியே சாச்சி அவிழ்திட்ட மாங்கல்யம்***
***அளித்திட்ட மாங்கலியம் செல்லிருந்து வாழ.***

***என் தகப்பனே…***
***தையல் நதி மன்னவனை மெய்யாக எரித்தீர்களா***
***தாந்தர காமத்திலே வாழும் பிரையதிலே***
***தராதர வாழ்விழந்து கனவனை நானிழந்து***
***தரதனில் நானிருக்க உனக்கு சம்மதமோ***
***தந்தை தாயா பரனே மடிப்பிச்சை அருள்புரிவாய்***
***தயங்காமல் வாருமையா மதன் உருவை தாருமையா***

என மன்றாடுகிறாள். காமன் பொட்டலில் உரலின் மேல் சிவன் அமர்ந்திருப்பதையும் அவதானிக்கலாம். அருகில் தற் சமயம் பார்வதியின் பிரசன்னம் இடம்பெற்றிருக்கும். தாயான பார்வதியை பார்த்த நிலையில் ரதியானவள்,

***'தாயென்று நானிருந்தேன் யென்தாயே ஈஸ்பரியே***
***தயாநிதியடி***
***மாதாவென்றெண்ணினேனே மாபாவிசண்டாளிம***
***திகேடி யாநீ***
***யென் பெற்றவளென்றிருந்தேன் பிழைவந்து நேர்ந்ததடி***
***உலகத்து பெண்களுக்னு உன்னைப்போலே***
***தாயுமில்லை***
***பழிகாரி உன் முகத்தை பார்க்கெனக்கு நீதியுண்டோ***
***யென் புருசனைக்கொன்றவள் நீ என்னையும் எரித்***
***துவிடு***
***இருவரையும் கொன்று விட்டு இருங்களடி நீ சுகமாய்'***

என ஏசுகிறாள். ரதியின் வார்த்தைகளை கேட்ட நிலையில் ரதியின் அருகே வந்து ரதியானவளை ஆரத்தழுவி உனக் கொன்றும் குறை வராது குழந்தை நாயகியே! நீ ஆங்கா ரத்தில் அழுதால் உன் கணவர் வருவாரோ! கோபத்தினால் என் பெண் மயிலே கோவென்று அழுகாதே! புலம்புவதால் உன் புருசன் வரப்போவதுமில்லை. ஆதி சிவனிடத்தில் நீ அபயமிட்டு அழுவதால் மாத்திரமே தீர்வு உண்டாகும். ஆதி சிவனிடத்தில் அடக்கமாக போய் நின்றால், உன் குறையை அறிந்து அதற்கு ஏற்ற தீர்வை பெற்றுத்தருவார். உன் நிலையை நானும் எடுத்துரைப்பேன். கலங்காதே என் பெண்மணியே! என ஆறுதல்படுத்துவதையும் காணலாம்.

களத்திற்கு தேவர்கள் அனைவரும் வருகைத்தருவதாகவே கதையின் சித்தரிப்பு அமையப்பெறுகிறது. இக்களத்தில் தேவர் சபையினரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்திரனின் பிரசன்னம் அமையப்பெறும். தேவர்சபையின் சார்பில் ரதிக்கு ஆதரவான குரல் சிவனின் கவனத்தை ஈர்ப் பதாக அமையப்பெறும். மான் உரியை போர்த்திய மகா தேவனே உன்னை வணங்குகிறோம். காளையின் உதவி யோடு வான் வீதியில் உலாவரும் கடவுளரே உன்னிடத்தில் நாம் தஞ்சமைய்யா. மாட்டின் மேல் ஏறிவரும் மகாதேவரே, உன்னை மனதார வணங்குகிறோம். எமனையே உதைத்த ஈஸ்பரனே உன்னில் தஞ்சம் புகுந்தோம். உம்மைவிட வலிமை பெறறவர்கள் உலகத்தில் யார் இருக்கிறார்கள். உன் மீது இவ்வளவு மரியாதையையும் அன்பையும் வைத் துள்ளோம். ஆகையினால் எமது கருத்தினையும் சற்று அவ தானிக்க வேண்டுகிறோம், என காமனின் சிறப்பையும் முக்கி யத்துவத்தையும் எடுத்துரைக்கும் முனைப்பையும் அறியலாம்.

காமனின் செயல் இடைநிறுத்தப்பட்டால் காண்பதற்கே உலகம் இல்லாமல் போகும். மன்மதனின் அனுக்கிரகம் இல்லாமல் போனால் மனிதகுலம் விருத்தியடைய போவ தில்லை. உலகில் உயிர்களின் உற்பத்தி பொறிமுறையை பெருக்கி வைக்கும் பேறு பெற்றவனின் இழப்பை இவ் உலகு தாங்கிக்கொள்ளாது. சின்னஞ்சிறு பெண் ரதியினால் நீங்கள் தூசிக்கப்படுவதை தேவர்குலம் விரும்பவில்லை. 'எந்தன் புருசனை எரித்த ஈஸ்பரனே! கொஞ்சி வாழ வேண்டிய

வயதில் என்னை கட்டியவரை எரித்த பாவியரே! பிள்ளைகள் ஏதும் பெற்றேனா, எனக்கு வயதா சென்று விட்டது. இளம் வயதில் விதவைக் கோலத்தோடு என்னை மாற்றினாயே! பிள்ளைபேறு பெற வேண்டிய நேரத்தில் கணவனை பறி கொடுத்தேன். பாலூட்ட வேண்டியவள் என் புருசனை பறி கொடுத்து நிற்கிறேன்.' என ஊர்முழுதும் உங்கள் நாமத்தை சபித்துக்கொண்டிருக்கும் ரதியானவளின் பாதிப்பு நிலையை மாற்றி அவளுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என மன்றாடுகின்றோம். இவ்வாறு தேவர்சபையின் வேண்டுதலும் கவனத்தைப் பெறுகிறது.

உலக உண்மையை தன்னிலையில் அறிந்த நிலையிலும் பார்வதி, தேவர்கள், ரதியானவள் ஆகியோரின் கோரிக்கைகளை செவிமடுத்த நிலையில் சிவனின் தீர்க்கமான முடிவுக்கான களமாக இக்களம் அமைகிறது. கதையோட்டத்தின் படி தனது தரப்பு வாதத்தை நியாயப்படுத்தும் வகையிலேயே காரணங்கள் முன்மொழியப்படுகின்றன. இவ்வாதத்தை எடுத்துரைக்கும் வகையில் காமன் வாத்தியாரால் பின் வருமாறு பாடல் இசைக்கப்படும்.

***'ஆயன் குலத்தில் அழிந்தவர்கள் வந்ததுண்டோ***
***திருமால் குலத்தில் செத்தவர்கள் வந்ததுண்டோ***
***இப்போயெழுப்புகிறேன் யென் மகளே நீ கேளு***
***செத்தவர்கள் வந்தாலோ சிரிப்பார்கள் பாருலகமதில்***
***மாண்டவர்கள் வந்தாலே வையகமும் தாங்காதே***
***சாம்பலாய் போனவனும் தான் பிழைத்தானென் பார்கள்***
***யென்மேலே குற்றமில்லை யென்பெருமால் செய்த குற்றம்'***

என சிவனின் குரல் அனைவரையும் தெளிவுறுத்துவதுண்டு.

என் தகப்பனே எது எவ்வாறாக இருப்பினும் என் துணைவனை எழுப்பித்தரல் வேண்டும். சீராளனை கொன்று திருப்பி உயிரளித்த கதையெல்லாம் மறந்து விட்டீரோ? பிள்ளையை கறியாக சமைத்த போது அதை உண்டு மகிழ்ந்து பின்னர் உயிர்ப்பித்தீரே? என்றவாரெல்லாம் எடுத்துரைக்கிறாள். இப்படித்தான் நடக்க வேண்டும் என்பதை திட்டமிட்டிருந்த சிவன் குண்டோதரனால் இணைக்கப்பட்ட சாம்பலில் தண்ணீர் தெளித்து தன் கையிலுள்ள பொற்பிரம்பினால் மூன்று முறை தட்டிய நிலையில் மதன் ரதியானவளுக்கு மட்டுமே காட்சித் தரும் வகையில் அரூபியாக உயிர் பெறுகிறான். இச் சம்பவத்தை அடையாளப்படுத்தும் வகையிலேயே காமன் பொட்டலில் மதனுக்கு உயிரெழுப்பும் காட்சி அடையாளப்படுத்தப் படுகிறது. கதையின் உண்மை நிலை இவ்வாறு இருந்த போதிலும் உரையாடல் அலகுகளை தவிர்த்த நிலையில் கிரியைகளுடன் மாத்திரம் மட்டுப்படுத்திக்கொண்டு நிகழ்வு இடம்பெறுகின்றது. உலகியல் வாழ்க்கையில் காமம் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் அதனை மனித குலம் பண்பாடு சார்ந்து அணுக வேண்டும் என்ற உண்மையையும் போதிக்கும் வகையில் மன்மதன் கதை சிறப்பு பெறுகிறது. அதனாலேயே மன்மதன் கதை, உலகின் கவனத்தை ஈர்த்து வருகிறது. அதன் முக்கியத்துவத்தை மென்மேலும் உலகம் அறியும் பொருட்டே ஒவ்வொரு வருடமும் காமனை உண்டுபண்ணி பண்டிகையாக கொண்டாடும் மரபு தொன்று தொட்டு பின்பற்றப்படுகின்றது.

காமன் கூத்து பொட்டலில் மதன் வேடம் தரித்தவர் ஒப்பனையும் படுக்க வைக்கப்பட்டிருப்பார். சிவன் வேடம் தரித்தவர் உரலின் மேல் அமர்ந்த நிலையில் அவர்களை சூழ ஏனைய வேடதாரிகளும் நின்று கொண்டிருப்பார்கள். காமன் மாஸ்ட்டர், தப்பிசைக் கலைஞர்கள், ஊர்மக்கள் சூழவுள்ள களத்தில் ஆற்றில் இருந்து எடுத்து வந்த நீரை மதன் வேடமிட்டவர் மீது சிவன் வேடமிட்டவர் தெளிப்பார். அதன் பின்னர்



தனது கரத்திலுள்ள பிரம்பாள் சிவன் வேடமிட்டவர் தட்டு கின்ற நிலையில் மதன் வேடமிட்டவர், தனது உடலை அசைந்து எழும்புவார். இக்காட்சியை பார்த்த நிலையில் ஊர் மக்கள் ஆரவாரத்துடன் தனது மகிழ்ச்சியை வெளிப் படுத்துவார்கள். தப்பிசை ஓங்கி ஒலிக்க தொடங்கும். காமன் வாத்தியார் பாடலிசைக்க தொடங்குவார். ரதி, மதன் வேடமிட்ட வர்கள் பாடல், தப்பிசைக்கு ஏற்றவாறு ஆடத் தொடங்கு வார்கள்.

***செந்தாமரை முகமே அடி***
***கந்தப் பரிமளமே***
***சேவின் விழியாளே***
***நீலமேகன் மருமகளே...***

என பாடலிசைக்க அதற்கேற்றவாறு தப்பிசை முழங்க மதன் ரதி ஆகியோரின் ஆட்டமும் பார்வையாளர்களை மகிழ்ச் சியில் ஆழ்த்தும். இது இவ் வருடத்தில் இக் களம் காணும் மதன் ரதியின் இறுதி ஆட்டமாக அமையப்பெறும். காமன் ஊண்டுதல் செயற்பாடு விநாயகரின் பாடலுடன் தொடங்கப் பெற்றதை அறிவோம். அவ்வாறே விநாயகருக்கு நன்றி தெரி விக்கும் பாடலுடன் நிறைவெய்கின்றமையும் குறிப்பிடத்தக்க தாகும்.

இந்நிலையில் காமன்கூத்து களம், வேறு சில கற்பிதங்களை போதிக்கும் களமாக மாறுகின்றமையை அவதானிக்கலாம். ஊர்மக்கள் காமன் திடலை தரிசித்து காமன் மாஸ்ட்டர்க ளிடம் ஆசீர்வாதம் பெற்று திருநீறு பூசிக்கொளவதை அவதா னிக்கலாம். அவ்வகையில் மூத்தவர்களை பக்தியோடும் மரி யாதையுடனும் அணுகுகின்ற கற்பிதத்தையும் போதிக்கும் களமாகவும் அமைகிறது. மூத்த கலைஞர்களை மதிக்க வேண்டிய கற்பிததத்தை வலியுறுத்தும் களம் என்ற வகையில் குருபக்தி குறித்த அவதானம் போதிக்கப்படுகிறது. அவ் வாறே பிற தோட்டங்களில் இருந்து வருகைத்தந்து உதவி புரிந்த காமன் மாஸ்ட்டர்கள், இத் தோட்டத்து காமன் மாஸ்ட்டர், உதவி வாத்தியார்களுக்கு தட்சணை வழங்கும் செயற்பாடுகளும் இடம்பெறும். இது நன்றியுணர்வையும் துறைசார்ந்த பக்தியுணர்வையும் வலியுறுத்துவதாக அமை யப்பெறும். தொடர்ந்து காமன் மாஸ்ட்டர்களுக்கு ஆடைகள் அணிவித்து, குறிப்பாக வேட்டி அணிவித்து கௌரவிக்கும் செயற்பாடுகளும் இடம்பெறும். இது ஏனைய தோட்ட பிரிவுக ளுக்கிடையிலான நேச உறவுகளை வலிமைப்படுத்தும் கைங்கரியமாகவும் அமைகின்றமை அவதானத்திற்குரிய தாகும்.

தொடர்ந்து தோட்டத்திலுள்ள முக்கியஸ்த்தர்களுக்கு காலாஞ்சி வழங்கள் செயன்முறையோடு கைசோறு வழங் கும் செயற்பாடு இடம்பெறும். ஏற்கனவே தயார் செய்யப்பட்டி ருந்த உணவு பொட்டலம் காமன் திண்ணைக்கு அருகில் வைக்கப்படும். காமன் மாஸ்ட்டரினால் பொட்டலம் அவிழ்க் கப்பட்டு அவரின் கரங்களினாலேயே நிகழ்வில் கலந்துக் கொண்ட அத்தனை பேருக்கும் கைசோறு வழங்கப்படும். வரிசைக்கிரமத்தில் மிகுந்த ஆர்வத்துடன் கைப்பிடிச் சோறை வாங்கி உண்டு மகிழ்வார்கள். இவ்வாறனதொரு விருந்துபசாரம் எவ்வகையான சந்தோசத்திற்குரியது என் பதை அதில் பங்கெடுத்து உணர்ந்தவர்களுக்குத்தான் தெரியும். வீடுகளில் பொதுவாக தீபாவளி, ஆடி பதினெட்டு, சித்திரை வருடப்பிறப்பு, விரதங்கள், கருமாதி, திவசம் ஆகிய நிகழ்வுகளுக்கு படையலிட்டு சாம்பிராணி இடப்பட் டதன் பின்னர் வீட்டிலுள்ள மூத்தவரிக் கரங்களால் கைசோறு பெற்று மகிழ்வதுண்டு. அவ்வாறே தோட்டங்களிலுள்ள சிறுதெய்வ ஆலயங்களில் படையல் வழிபாட்டின் பின்னரும் இவ்வாறான வாய்ப்பு ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. தோட்டங்களில் அம்மன் திருவிழா நிறைவு பெறும் தருணம் கரகம் குடிவிடுதல் செயற்பாடு முக்கிய கவனத்தை பெறு கிறது. கரகம் குடிவிட்டதும் மாசிக்கருவாடு கலந்த சோறை கட்டுசோறாக எடுத்து சென்று பகிர்ந்தளிப்பார்கள். அவற்றை பெற்று சாப்பிட்டு முழுத் தோட்டமே மகிழ்ந்திருக் கும். இச்செயற்பாடுகள் குறித்த சமூகத்தில் வாழும் மக்க ளிடம் ஒன்றுமையை வலியுறுத்தி சமூகமய புரிதலை வலுப் படுத்துவதாகவே அமைகின்றன.

வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் வகையில் தயார் செய்யப் பட்ட பொட்டலங்கள் அவரவர்களுக்கு வழங்கப்படும். அப் பொட்டலம் மாமிசம் கலந்த உணவு பொதியாக காணப் படும். இவ் விருந்திற்காக ஆடு வெட்டி உணவு தயார் செய் யப்படுவதுமுண்டு. இல்லாவிட்டால் கோழிகள் வெட்டி தயார் செய்யப்படுவதுமுண்டு. அண்மைக் காலங்களில் புரொய் லர்ஸ் கோழிகளையே பயன்படுத்துகிறார்கள். காமன் ஊண் டியது தொடக்கம் முழுத்தோட்டமும் சைவ உணவுகளை மாத்திரம் உட்கொண்ட நிலையில் இன்றிலிருந்துதான் மீள வும் மச்ச உணவை உட்கொள்ள தொடங்குவார்கள்.

காமன் கூத்து ஏற்பாட்டுக்குழுவினர், அழைக்கப்பட்ட அயல் தோட்டத்து காமன் வாத்தியார்கள், தோட்டக் கமிட்டி தலை வர்கள், கோயில் கமிட்டி உறுப்பினர்கள் ஆகியோர் உணவு பொட்டலங்களை வாங்குவது கிடையாது. ஏனெனில் அவர்க ளுக்கு தனியே உணவு வழங்க ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டி ருக்கும். இதுவொரு முக்கிய விருந்துபசாரமாக அமையப் பெறும். கூத்தோடு ஒன்றிணைந்து செயற்பட்ட மூத்தவர் களை சந்தோசப்படுத்துகின்ற நிகழ்வு என்பதும் குறிப்பிடத் தக்கது. இவ்விருந்துபசாரத்ததில் மதுபானங்களும் பயன் படுத்தப்படும். இளைஞர்களும் பெரியவர்களுக்கு தெரியாமல் கொஞ்சம் மதுபாணங்களை பாவித்துக்கொள்வதும் உண்டு. நிகழ்வின் நிறைவுகளை பேசி மகிழ்கின்ற களமாகவும் விருந் துபசார களம் அமைவதுண்டு. இவ்விருந்துபசாரம் தோட் டத்து பொது மண்டபத்திலோ, அல்லது காமன் மாஸ்ட்டரின் வீட்டிலோ இடம்பெறுவதுண்டு. மிக அமைதியான சூழ்நி லையில் ஆரோக்கியமான கலந்துரையாடலுடன் நிறைவு பெறும். இக்களம் தோட்டங்களுக்கிடையேயும் கலைஞர் களுக்கிடையேயும் நேச உறவை வலுப்படுத்துவதாகவே அமையப்பெறுகின்றமை கவனத்திற்குரியதாகும்.

(தொடரும்...)



letsumanan.a@thaiveedu.com

# தமிழ் அரங்கியலில் திரைப்பயன்பாடு: மரபும் மாற்றுமரபும்

ம. கருணாநிதி

## முன்னுரை:

தமிழ் அரங்கக் கூறுகளில் திரைப்பயன்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. திரை எனும் அரங்கக்கூறு மரபு சார்ந்த கூறாகும். தமிழ் அரங்கியல் மரபில் திரைப்பயன்பாடு குறித்த செய்தி சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. இதில் திரை எனும் சொல்லிற்கு எழினி எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார் இளங்கோவடிகள். இவை மூன்று வகைப்படும் என இளங்கோ வடிகள் அரங்கேற்றுக்காதை எனும் பகுதியில் குறிப்பிட் டுள்ளார்.

***'ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்***
***கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு'***
*சிலப்பதிகாரம், அரங்கேற்றுக்காதை, பாடல் எண். 109*

எனும் அடிகளின் வழி, திரை என்பதை, ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி என மூன்றாகப் பகுத் துள்ளதை அறியமுடிகிறது. மேலே குறிப்பிட்டுள்ள சிலம்பின் வரிகளுக்கு அரும்பத உரையாசிரியர் மூன்று வகையான திரைகளின் பயன்பாட்டினை விளக்கும் வகையில் உரை கூறி யுள்ளார். 'இடத்தூணிலையிடத்தே உருவுதிரையாக ஒருமுக வெழினியும், இரண்டு வலத்தூணிடத்தும் உருவுதிரையாகப் பொருமுகவெழினியும், மேற்கட்டுத்திரையாகக் கரந்துவரலெ ழினியும் செயற்பாட்டுடனே வகுத்தென்க.' எனச் சிலப்பதிகார அரும்பதவுரை குறிப்பிடுகிறது.

## மரபுசார் அரங்கில் திரை:

மரபுசார் அரங்கில் இடம்பெறும் திரை எனும் பழமரபுக்கூறு, நவீன நாடகங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தெருக்கூத் தில் திரையைப் பயன்படுத்தும் தன்மையைப் பார்க்கும் போது அவை, தொங்குதிரை, இடுதிரை எனும் திரையினைப் பார்க்க முடிகிறது. இத்திரையினை மேடையின் வலது - இடப் புறத்தில் இரு கம்பிகளை ஊன்றி அதில் திரைச்சீலையைக் கட்டி வைப்பர். இதனைத் தேவைப்படும் நேரத்தில் பயன்ப டுத்துவர். கூத்து தொடங்கும் முன்பு சபை வணக்கப் பாடல் பாடும்போது தொங்குதிரையால் மூடியவாறே பாடல் பாடுவர். பின்னர் திரையை விலக்கி, ஒருபுறத்தில் முடிந்து தொங்கவிட் டுவிடுவர். கூத்தின் தொடக்கக் காட்சியில் மட்டுமே இந்தத் தொங்குதிரையைப் பயன்படுத்துவர். மற்றைய காட்சியின் போது அதாவது பாத்திர அறிமுகக் காட்சியின்போது இரு நபர் திரையின் முனையினைப் பிடித்தவாறு இருந்து கொண் டிருப்பர். இவ்விரு நபர்களும் திரையைப் பிடித்தவாறு இருக்க, ஒவ்வொரு அறிமுகப் பாத்திரக்காட்சியின்போது பாத்திரம் ஏற்கும் நடிகர் இத்திரைக்குப்பின் இருந்தவாறு பாத்திர அறிமுக சபைவணக்கப் பாடலைப் பாடுவர். பாடி முடித்த பின்னர் பார்வையாளர்கள் முன் தோன்றிக் கூத்தாடுவர்.

தமிழ்நாட்டுக் கூத்துகளில் கட்டியங்காரன் பாத்திர வருகைக் குத் திரைபிடித்தல் கிடையாது. பிற பாத்திர வருகைக்குத் திரை பிடிக்கப்படும் மரபினைத் தெருக்கூத்துக்களில் பார்க்க முடியும். கூத்து மரபில் பாத்திர அறிமுகத்திற்கான நோக்கி லேயே திரையைப் பயன்படுத்துவதை அறிய முடிகிறது. மேலும் கூத்துக் கலைஞர்கள் கூத்தரங்கில் நுழைவதற்கு முன் தங்களை ஆயத்தப்படுத்தும் வகையிலும் திரை பிடிக் கப்படுகிறது.

## மாற்று அரங்கில் திரை:

நவீன நாடகங்களிலும் திரைப்பிடித்தல் என்பது மரபாகக் கொண்டுள்ளதையும் அறிய முடியும். திரைப்பிடித்தல் எனும் பழ மரபுக் கூறு, நவீன நாடகங்களில் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன. திரை, மரபின் கூறாக இருந்தாலும் மரபில் கொடுக்கக்கூடிய அர்த்தத்தைத் தாண்டியும் நவீன அரங்கில் பல அர்த்தத்தளத்தில் இயங்குகின்றது. பாத்திர அறிமுகத்திற்காகவும், காட்சியை அறிமுகப்படுத்துவதற்கா கவும், திரையின் வழி பல படிமங்களை உண்டாக்குவதற்கா கவும், திரையின் வழி காட்சியை ஒலிப்பிம்பமாகவும், படிமமா கவும் காட்டுவதற்கும் நவீன நாடகங்களில் திரை பல பரிமா ணங்களில் செயற்படுகின்றது. கூத்துக்கான 'திரைப்பிடித்தல்' நிகழ்வு நவீன நாடகங்களில் மரபாகக் கையாளப்பட்டாலும் நடிகர்களே திரையாக உருவாகும் தன்மையும் உண்டு.

மு. இராமசுவாமியின் 'சாபம் விமோசனம்' நாடகத்தில் நடிகர் களே திரையாகவும் தூண்களாகவும் மாறுகின்ற தன்மை யினைப் பார்க்கலாம். சே. இராமானுஜத்தின் 'செம்பவளக் காளி' நாடகத்தில் நடிகர்கள் திரை போன்று நின்றுகொண்டி ருக்கும் தன்மையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நாட கத்தில் நடிகர்களே திரை போன்று நின்றுகொண்டு காட்சிப் படுத்தினாலும், திரையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நாட கத்தில் நடிகர் குழாமில் உள்ள இரு பாத்திரங்களே திரையை இயக்கக் கூடியவர்களாகவும் பாத்திரம் ஏற்று நடிக் கக்கூடியவர்களாகவும் நிகழ்த்துகிறார்கள். இது கூத்திலி ருந்து மாறுபட்டதாகக் கொள்ளமுடிகிறது. மு. இராமசுவா மியின் 'கட்டுண்ட பிராமதியஸ்' நாடகம் சமதளத்தில் நிகழ்த் தப்பட்டாலும் சமதள அரங்கின் மேல் பகுதியில் திரை அமைக்கப்பட்டுள்ளது. இத்திரை நாலாபக்கமும் இழுத்துக் கட்டப்பட்டு, அத்திரைக்குப் பின்னிருந்து பாத்திரத்தின் காட் சிப் படிமத்தை உருவாக்கியுள்ளார்கள். இதைத் தோற் பாவைக் கூத்தின் நீட்சியாகக் கொள்ளலாம். இந்நாடகத்தில் திரைக்குப் பின்னிருந்தவாறு இரு குழுக்கள் மோதிக்

# தமிழ் அரங்கியலில் திரைப் பயன்பாடுகள்: நாடகங்களின் நிழற்படங்கள்



தெருக்கூத்தில் திரைப்பயன்பாடு





செம்பவளக்காளி – பாத்திரப் பிரவேசம்

கொண்டு அதிகாரமற்ற - பலவீனமானவர்களைப் பலியாக்கும் தன்மையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மு. இராமசுவாமியின் 'கலகக்காரர் தோழர் பெரியார்' நாடகம் படச் சட்டக மேடையில் நிகழ்த்தப்பட்டாலும் மேடையின் மேல்பகுதியில் திரை கட்டப்பட்டு அத்திரையில் காட்சிகள் திரையிடப்பட்டன. இக்காட்சிகள் நாடகத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் நாடக அறிமுகம், புகைப்படங்கள், நிஜநாடக இயக்க முயற்சிகள், பெரியார் பேசிய சொற்பொழிவுகள் முதலியவைகள் திரையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இத்திரையின் பயன்பாடு கூடுதல் பரிமாணங்களில் செயற்படுகின்றதை அறியலாம். இவ்வாறு திரையில் ஒலி, ஒளிக்காட்சியை நாடகத்தோடு திரையிடுவது தெருக்கூத்து நிகழ்த்து மரபிலிருந்து புதுமையை நோக்கியதாக அமைந்திருக்கிறது.

திரையைப் பல்வேறு குறியீட்டுத் தளத்தில் பயன்படுத்துவது என்பது சே. இராமானுஜத்தின் கைசிக நாடகத்தில் பார்க்க முடிகிறது. இந்நாடகத்தில் திரை பாத்திரப் பிரவேசத்திற்குப் பயன்படுத்தப்பட்டதிலிருந்து நாடகம் முழுக்கத் திரையின் பயன்பாடு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. திரை மறைவில் இருந்து பாத்திர அறிமுகமாகும் கூத்தினைப்போல் கைசிக நாடகத்திலும் திரை மறைவிலிருந்து பாத்திரம் அறிமுகமாகிறது. தெருக்கூத்தில் திரைப் பிடிப்பதற்கென பின்னரங்கிலிருந்து இருவர் வருவர். இவர்கள் கூத்தின் பாத்திரமாக இல்லாமல் திரையைப் பிடிப்பவர்களாக மட்டுமே கூத்தில் பயன்படுவர். இதுபோன்றே கைசிக நாடகத்தில் திரைமறைவில் பாத்திர அறிமுகத்திற்கு, இருவர் திரை பிடிக்கும் வழக்கத்தை இந்நாடகத்தில் காணமுடிகிறது. இந்நாடகத்தில் திரையைப் பிடிப்பவர்களே திரையை பல்வேறு படிநிலைகளில் இயக்குகிறார்கள். இவை பல்வேறு நிலைகளில் அர்த்தப்படுகிறது. இந்நாடகத்தில் திரையைப் பல்வேறு காட்சிப் படிமமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம். திரை மறைவில் பாத்திர பிரவேசம், திரையை இயக்கிய பாத்திர பிரவேசம், திரை அறையாதல், திரை தூணாதல், திரை சேலையாதல், திரை இரணியனின் உடல் ஆதல், திரை இரணியனின் குடல் ஆதல், திரை மாலையாதல் எனும் தன்மைகளில் திரையின் பயன்பாடு பல்வேறு தளத்தில் அர்த்தப்பட்டுள்ளது. சே. இராமானுஜத்தின் கைசிக நாடக மீட்டுருவாக்கத்தில் திரை முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மாற்று மரபினை முன்வைக்கின்ற தன்மையில் கைசிக நாடகத்தை சே. இராமானுஜம் மீட்டெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இளைய பத்மநாதனின் ஏகலைவன் நாடக நிகழ்த்துதலில் மூன்று வகைத் திரை பயன்படுத்தப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் குறிப்பிடும் மூன்று வகைத் திரைகளான ஒருமுக



செம்பவளக்காளி
நடிகர் குழாம் திரையாதல்



திரௌபதி துகில் உறிதல்
கூத்தில் திரைப்பயன்பாடு



சிவப்புக் கண்ணாடி



குகை மரவாசிகள்





மாயக்கோமாளிகளின் ஜாலக்கண்ணாடி

எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி எனும் மூன்று திரைகளின் தொடர்ச்சியாகவே இந்நாடகத்தில் திரை பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நாடகத்தில் பாத்திரப் பிரவேசத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள திரை, உரைஞர்களான கட்டியங்காரனின் கழுத்தில் துண்டாகப் பரிணாமம் கொண்டுள்ளது. ஏகலைவன் முதலிய பாத்திரங்கள் நிகழ்த்துதலில் பங்குபெறுவதற்கும் அடுத்த காட்சி ஆரம்பிப்பதற்கும், மறைவதற்குமான பெரிய திரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நடிகர்கள் பின்னால் இருந்தவாறு உரையாடுவதற்காக இருபுறமும் திரை அமைக்கப்பட்டிருந்தது. இதன் வழி, இறந்தகால நிகழ்வினை நிகழ்த்துதலுக்குள் கொண்டுவரவும், திரை பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. ஏகலைவன் நாடகத்தில் மூன்று வகைத் திரைகளின் பயன்பாடு சிலப்பதிகாரத்தின் நாடகக் கூறுகளின் தொடர்ச்சியாக இருந்தாலும், இதை பாரம்பரியக் கூத்து மரபின் தொடர்ச்சியாகவும் கொள்ளலாம். ச. முருகபூபதியின் யாக்கைக்களரி நாடகத்தில் திரைப்பயன்பாடு சிலப்பதிகாரம் உரைக்கும் முத்திரை பயன்படுத்தபட்டிருப்பினும் அதன் அர்த்தத்தளம் தள விரிவுகொண்டதாக அமையப்பெற்றுள்ளது. நாடக நிகழ்த்துநர்கள் நடுப்பகுதியிலிருந்தும், இருமருங்கிலிருந்தும் வருவதற்கான வாசலாகவும் அமையப்பெற்றுள்ளது. மேலும் இந்நாடகத்தில் தொங்குதிரைகளும் அமைந்துள்ளன. நடிகர்கள் நீண்ட திரைச்சீலையைத் தம்தோளில் போட்டுக்கொண்டு நாடகம் நிகழ்த்தும் தன்மையை ‘யாக்கைக்களரி’ நாடகம் கொண்டுள்ளது. இவரது ‘நீர் நாடோடிகள்’ நாடகத்தில் நீண்ட திரையைப் பயன்படுத்தி கடலலை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நாடகத்தில் நடிகவுடலே திரையாகப் பரிணாமம் கொள்கின்றது. துணிச்சாக்குகள் மழைக்கால கோணிப்பையாகவும், அதுவே திரையாகவும் உருமாற்றம் பெறுகின்றன. மேலும் ச. முருகபூபதியின் நாடகங்களில் பெருந்திரைக்குள் நடிகர்கள் நுழைந்து கொண்டு தலையை மட்டும் வெளியில் காட்டியவாறு உடலின் அசைவுகளைக் கோலப்படுத்துவதாகத் திரை பயன்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

‘போகாதே நந்தா போகாதே’ நாடகத்தில் இரண்டு வகையான திரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒன்று வெண்திரை, மற்றொன்று கறுப்புத்திரை ஆகும். மேல்தட்டு மக்களின் பாத்திரப் பிரவேசத்திற்கு வெண்ணிறத்திரையும் அடித்தட்டு மக்களின் பாத்திரப் பிரவேசத்திற்கு கறுப்புத் நிறத்திரையும் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. அத்திரைகளை நடிகர் குழுவில் உள்ள பாத்திரங்களே இயக்கக்கூடியதாக அமைந்துள்ளன. மேலும் ‘போகாதே நந்தா போகாதே’ நாடகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டு திரைகளிலும் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது. மேல்தட்டு மக்கள் பாத்திரம்





கைசிக நாடகம் – திரை இரணியனின் குடலாதல்



கீசகவதம் நாடகம்



கைசிக நாடகம்
திரை இரணியனின் குடலாதல்



கலகக்காரர் தோழர் பெரியார் -
கதவு திரையாதல்



நீர் நாடோடிகள்
சாக்குத்துணி திரையாதல்

பிடித்துள்ள திரையில் நிறுவன சமயக் கோவிலின் கட்டடங்கள் ஓவியமாக வரையப்பட்டிருந்தது. இதன் வழி நிறுவன சமயக்கோவில் என்பதையும் இத்திரையைப் பிடித்தவர்கள் நிறுவன சமய வழிபாட்டினை மேற்கொள்பவர்கள் என்பதையும் இத்திரையின் ஓவியம் அடையாளப்படுத்துகிறது. கறுப்பு நிறத் திரையில் கூரை வீடு, கட்டை வண்டி முதலிய பொருட்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டிருப்பது நாட்டுப்புறச் சமய வாழ்வியலைக் காட்டுவதாய் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

## முடிவுரை:

கைசிக நாடகத்தில் திரை பல்வேறு குறியீடுகளாகப் பயன்பட்டுள்ளதை அறியமுடிகிறது. இரண்டு நபர்கள் தொடக்கத்தில் திரையை இயக்கியும் பின்னர் இத்திரையை நடிகர் காட்சிப் படிமமாக உருவாக்குவதும் புதுமையானதாகும். கைசிக நாடகம் ஒரு திரையை மாற்று உருவாக்கப் பின்னணியில் பயன்படுத்தியுள்ளது. இளைய பத்மநாதனின் 'ஏகலைவன்' நாடகத்தில் பாத்திர பிரவேசத்திற்குப் பயன்பட்ட திரை கட்டியங்காரன் கழுத்தில் துண்டாக மாற்றம் கொள்கிறது. ஒத்திகை நாடகக் குழுவால் உருவாக்கப்பட்ட 'போகாதே நந்தா போகாதே' நாடகத்தில் இரண்டு திரைகளைப் பயன்படுத்தியுள்ளதைப் பார்க்கமுடிகிறது.

நவீன நாடகங்களில் திரைப்பயன்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. மரபில் திரை, தொங்குதிரை, இடுதிரை எனும் திரை பயன்படுத்தப்பட்டுள்ளது. பாத்திர அறிமுகத்தின்போது இரண்டு நபர்கள் திரையின் நுனியைப் பிடித்தவாறு இருக்க திரைக்குப் பின்னிருந்த நடிகர் வெளிப்படுவர். மரபுசார் கூத்து மரபில் திரைப் பயன்பாடு, பாத்திர அறிமுகத்திற்கான நோக்கிலேயே பயன்படுகிறது. திரை மறைவில் நடிகர் தன்னை ஆயத்தப்படுத்துவதற்காகவும் திரையைப் பயன்படுத்துவதுண்டு. நவீன நாடகங்களில் திரையைப் பயன்படுத்தினாலும் நடிகர்களே திரையாக நிற்கும் தன்மையைப் பார்க்க முடியும். அந்த வகையில் செம்பவளக்காளி, கட்டுண்ட பிராமிதியஸ், சாபம் விமோசனம், குகை மரவாசிகள், மாயக்கோமாளிகளின் ஜாலக்கண்ணாடி, நீர் நாடோடிகள் முதலிய நாடகங்களில் நடிகர்களே திரையாகக் காட்சியளிக்கிறார்கள். மேற்குறிப்பிட்டுள்ள நாடகங்களில் நடிகர்களே திரையாக உருமாறுதல் பெறுவது என்பது தமிழ் அரங்கியலில் திரைப் பயன்பாட்டின் மாற்று மரபு சார்ந்ததாகும்.



Karunanidhi.M@thaiveedu.com



கலகக்காரர் தோழர் பெரியார்






# ஹெலன் கெல்லர்

**- குமார் புனிதவேல்**

இன்று இங்கு வள்ளுவருடைய 618-வது குறளுக்கு உதாரணமாக அமைந்த, ஒரு சரித்திரம் படைத்த பெண் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள முனைந்துள்ளேன். அந்தக் குறள்,

***'பொறிஇன்மை யார்க்கும் பழி அன்று அறிவு அறிந்து***
***ஆள்வினை இன்மை பழி'***

அதவாது, ஒன்று அல்ல இரண்டு பொறிகளை இழந்த ஹெலன் கெல்லர் (Helen Keller) எனும் பெண்ணுடைய வரலாற்றை உங்களுடன் பகிர்வதன் நோக்கம் நீங்களும் முயன்றால் எதனையும் சாதிக்கலாம் என்பதனை உணர்த்துவதற்கே.

அமெரிக்காவின் அலபாமா மாநிலத்தில், 1880-ஆம் ஆண்டு ஜுன் 27-ஆம் நாள் ஒரு சாதாரணக் குடும்பத்தில் ஹெலன் அடம்ஸ் கெல்லர் பிறந்தார். பிறக்கும் போது ஆரோக்கியமான குழந்தையாகவே அவர் இருந்தார். ஆனால், அவரது 19-வது மாதத்தில் தாக்கிய ஒரு கொடிய நோயின் விளை வாக, கண் பார்வையையும் செவிப்புலனையும் அவர் முற்றாக இழந்தார். தனது பெற்றோரின் முகத் தைக் காண முடியாமலும், அவர்களின் அன்பு மொழிகளைக் கேட்க முடியாமலும் அந்தப் பச்சிளம் குழந்தை சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானது. வள்ளுவர் உலகத்தில் பெரும் செல்வம் செவிச் செல்வம் என்கிறார் தனது 411-வது குறளில்.

***'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்***
***செல்வத்துள் எல்லாம் தலை'***

அத்தகைய மேன்மையான செவிச் செல்வத்தையும், கண் பார்வையையும் இழந்த ஹெலனின் உலகம், ஒளியற்ற இருட்டிலும் மரண நிசப்தத்திலும் மூழ்கியது. சற்றே சிந்தித்துப் பாருங்கள்! பூரண இருளையும், எவ்விதச் சத்தமும் அற்ற பேரமைதியையும் நம்மால் கற்பனை கூடச் செய்ய முடியாது. ஆனால், அத்தகையதொரு சவாலான சூழலையே ஹெலன் கெல்லர் தனது வாழ்நாள் முழுவதும் எதிர்கொண்டார்.

வளரும் பருவத்தில், தனது அடிப்படைத் தேவைகளைக் கூட மற்றவர்களுக்குத் தெரிவிக்க இயலாத சூழல் ஹெலனுக்கு மிகுந்த விரக்தியை அளித்தது. ஒருபுறம் குழந்தையின் நிலையை உணர்ந்து உதவ முடியாமல் பெற்றோர் வேதனைப்பட, மறுபுறம் தொடர்பாடல் முடக்கப்பட்டதால் அந்தச் சிறுமி சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானார். தன்னால் எதனையும் பார்க்கவோ கேட்கவோ முடியாத அந்த இருண்ட உலகில், தனது உணர்வுகளை வெளிப்படுத்தத் தெரியாமல் கையில் அகப்பட்டப் பொருட்களை வீசி எறிந்தும், சத்தமிட்டும் தனது எதிர்ப்பைப் பதிவு செய்தார். குழப்பமும், கோபமும், வேதனையும் ஒருசேரத் தாக்கியதில் ஹெலனின் ஆரம்பகால வாழ்க்கை ஒரு போராட்டக் களமாகவே மாறியது. ஒரு குழந்தையாகத் தனது எண்ணங்களைப் பகிர முடியாமல் போனதே அந்த ஆக்ரோஷமான மாற்றங்களுக்குக் காரணமாக அமைந்தது.

அவரது ஆழ்மனதில் இலட்சியத்தை நோக்கிய பெரும் வைராக்கியம் உறைந்து கிடந்தது; எனினும், அதனைப் புறவுலகிற்கு வெளிப்படுத்த இயலாத சூழல் அவருக்குப் பெருவேதனையை அளித்தது. சாதாரண மனிதர்களாகிய நமக்கு, எமது தேவைகளை மற்றவர்களிடம் கூறி, உரிய அறிவுரைகளைப் பெற்று வளரக்கூடிய வாய்ப்பு இயல்பாகவே அமைகின்றது. ஆனால், ஹெலனைப் பொறுத்தவரை பார்வைப் புலன் அற்ற நிலையில் தன் முன்னால் நிற்பவர் யார் என்பதை அறிய முடிவதில்லை. அதேவேளை, செவிப்புலன் சவாலினால் மற்றவர்கள் பேசுவதைப் புரிந்து கொள்ளவோ, தனது தேவைகளைத் தெளிவுபடுத்திக் கோரவோ முடியாத நிலை காணப்பட்டது. இத்தகைய இரட்டைச் சவால்களுக்கு மத்தியிலும், பிறரைச் சார்ந்து நிற்காமல் தனது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைத் தானே கண்டடைய வேண்டிய கட்டாயத்திற்கு அவர் தள்ளப்பட்டார். அந்தத் தனித்துவமான போராட்டமே அவரை ஒரு தன்னம்பிக்கை மிக்க ஆளுமையாக மாற்றியது.

ஹெலனின் வாழ்க்கை எனும் படகு திசைதெரியாமல் தத்தளித்த வேளையில், அதனை வெற்றிப் பாதையை நோக்கி நகர்த்தும் வலிமையான துடுப்பாக ஆன் சுளிவன் அவரது வாழ்வில் நுழைந்தார். அப்போது ஹெலனுக்கு வயது ஏழு. ஆசிரியை ஆனும் ஒரு காலத்தில் பார்வைக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டவர் என்பதால், ஹெலனின் மௌனமான வேதனையை அவரால் ஆழமாகப் புரிந்துகொள்ள முடிந்தது. தனது மாணவியின் துயரத்தை உணர்வுப்பூர்வமாக உள்வாங்கிய ஆன், ஹெலன் இந்த உலகைத் தொட்டுணர்ந்து புரிந்து கொள்வதற்குத் தேவையான மாற்றுத் தொடர்பாடல் முறைகளை (Alternative Communication Methods) அறிமுகப்படுத்தினார். இது ஆரம்பத்தில் இருவருக்குமே மிகுந்த சவாலாகவும் கடினமாகவும் இருந்தது. இருப்பினும், சற்றும் மனம் தளராத ஆன், எல்லையற்ற பொறுமையுடனும் விடாமுயற்சியுடனும் ஹெலனுக்குப் பயிற்சியளிக்கத் தொடங்கினார். அந்த அர்ப்பணிப்பே ஒரு புதிய சரித்திரத்திற்கு அடிக்கல் லாக அமைந்தது.

சந்தித்த முதல் நாளே ஆன், ஹெலனுக்கு சொற்களைக் கையில் எழுதிக்காட்டுவதன் மூலம் தொடர்பாடல்களை ஏற்படுத்த முயற்சித்தார். அத்தகைய முதல் முயற்சி சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டியது. ஆன், ஹெலனின் கையை ஓடும் நீரில் பிடித்துவிட்டு உள்ளங்கையில் Water என்று விரலால் எழுதினார். ஓர் அதிசயம் நடந்தது. ஹெலன் Water எனும் சொல் தன் கையில்பட்ட நீரைக் குறிக்கும் என்பதைப் புரிந்து கொண்டார். அது அவரை புது உலகத்துக்கு எடுத்துச் சென்றது. புதுப்புதுச் சொற்களையும் கருத்துகளையும் ஹெலன் கற்றுக்கொண்டார். இது அவர் வாழ்வில் மிக முக்கிய திருப்பு முனையதக அமைந்தது. அன்று முதல் அனைத்தையும் கற்றுக்கொள்ள முனைந்தார் ஹெலன். இருண்ட சிறையில் இருந்து உலகுடன் இணைவதற்கு முற்பட்டார்.

அவர் பயணம் எளிதானல்ல. அவர் வாழ்ந்த காலத்தில் பார்வை மற்றும் செவிப்புலன் சவாலுடையோர் உலகத்துடன் தொடர்பு கொள்வது என்பது கடினமான காரியமாகும். ஆனால் ஆன் சுளிவன் மேற்கொண்ட இத்தகைய கடுமையான முயற்சி ஹெலன் இந்த உலகத்தில் இணைந்து கொள்வதற்கும் உலகத்தைக் கற்றுக் கொள்வதற்கும் புதிய சக்தியை வழங்கியது. ஹெலன் மனதில் எப்படியாவது உலகுடன் இணைந்து வாழவேண்டும் என்ற ஆதங்கமும் ஆர்வமும் இருந்தது. ஒவ்வொரு நாளும் ஹெலனுடைய உள்ளங்கையில் ஆன் சொற்களை எழுதி அதற்குரிய பொருளைக் கையில் கொடுத்து அறிந்துகொள்ளச் செய்தார். உதாரணத்திற்கு மலர் எனும் சொல்லை விரலால் ஹெலன் உள்ளங்கையில் எழுதிவிட்டு மலரை தொட்டு உணர்ந்து கொள்வதற்குச் செய்வார்.

புற உலகைத் தனது கண்களால் காண இயலாத நிலையிலும், அறிவெனும் ஒளியைப் பெற ஹெலன் கெல்லர் சற்றும் தயங்கவில்லை. அதற்காக அவர் கைகொண்ட மிகச்சிறந்த ஆயுதம் 'பிரெய்லி' (Braille) முறையாகும். விரல் நுனிகளால் தடவி உணரும் வகையில் அமைக்கப்பட்ட இம்முறையைப் பயின்றதன் மூலம், புத்தகங்கள் பேசும் கருத்துக் கருவூலங்களை அவர் வாசிக்கத் தொடங்கினார்.பார்வைச் சவாலுடையோருக்கான இந்தத் தனித்துவமான எழுத்து முறையைக் கற்றுக் கொண்டது, அவரது அகக்கண்களைத் திறக்கச் செய்தது. வெறும் வார்த்தைகளை மட்டும் அவர் கற்கவில்லை; அந்தத் தடவல்களின் வழியே உலக வரலாற்றையும், இலக்கியத்தையும், அறிவியலையும் தன் வசப்படுத்



**ஹெலன் கெல்லர் ஒரு சிறந்த எழுத்தாளராக மட்டுமல்லாது, ஆற்றல்மிக்க ஒரு பேச்சாளராகவும் பரிணமித்தார். தனது சவால்களைக் கடந்து, உலகின் பல நாடுகளுக்கும் பயணம் செய்து ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் ஊக்க உரைகளை ஆற்றினார். திருவள்ளுவர் தனது 619-வது குறளில் கூறியுள்ளபடி விதி அல்லது ஊழ் என்பது ஒருவருக்குப் புலன்களை வழங்கத் தவறினாலும், ஒருவரது தளராத முயற்சியும் உழைப்பும் அந்த விதி யையே புறமுதுகு காட்டி ஓடச் செய்யும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை அவர் உலகிற்கு வழங்கினார்.**

தினார். ஒரு சாதனையாளராக உருவெடுக்க, உடல் உறுப்புகளை விட அதற்கான முறையான வழிகாட்டுதலும் , விடாமுயற்சியுமே அவசியம் என்பதை இத்தருணம் நிரூபித்தது.

ஆன், ஹெலனுக்கு வாசிப்பது மட்டுமல்ல, கதைப்பதற்கும் கற்பித்தார். ஒருவரது சொந்தக் குரல் அவருக்கே கேட்காத நிலையில், கதைப்பது என்பது கற்பனைக்கும் எட்டாத சவாலாகும். ஆனால், ஆன் ஒரு விசித்திரமான, அதேசமயம் அறிவியல் ரீதியான முறையைக் கையாண்டார். ஆன் கதைக்கும்போது தனது தொண்டையில் விரலை வைத்து தனது தொண்டை மற்றும் உதடுகளில் ஏற்படும் அதிர்வுகளையும் அசைவுகளையும் ஹெலனின் விரல்கள் தொட்டுணரச் செய்தார். அந்த மெல்லிய அசைவுகளைக் கொண்டே சொற்களின் ஓசையை ஹெலன் கிரகித்துக் கொண்டார். காலப்போக்கில் ஹெலன் கதைப்பதற்குப் பயின்று தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். தொடக்கத்தில் அவரது பேச்சு மற்றவர்களுக்குப் புரியாத ஒரு ஒலியாகவே இருந்தது. இருப்பினும், சற்றும் மனம் தளராத பயிற்சியின் விளைவாக, காலப்போக்கில் அவரது சொற்கள் தெளிவடைந்தன; காலப்போக்கில் அவரின் பேச்சு மற்றவர்களுக்குப் புரிந்தது. ஹெலன் கெல்லர் தனது பத்தாவது வயதை எட்டியபோது, கூர்மையான அறிவும் ஆழமான சிந்தனையும் கொண்ட ஒரு முன்மாதிரி மாணவியாகத் திகழ்ந்தார். அவரது உடல்சார்ந்த சவால்கள், அவரது மனதிடத்திற்கு முன்னால் வலிமையிழந்து போயின. மற்ற மாணவர்களைப் போலவே முறையான பள்ளிக்குச் சென்று பயில வேண்டும் என்ற உயரிய இலக்கை அவர் கொண்டிருந்தார்.

அதன்படி, 1894-ஆம் ஆண்டு தனது 14-வது வயதில், நியூயார்க் நகரிலுள்ள Wright-Humason எனும் செவித்திறன் சவாலுடையோருக்கான சிறப்புப் பள்ளியில் இணைந்தார். அங்கு பாடங்களைக் கற்பதில் ஆரம்பத்தில் சில சிரமங்கள் இருந்தபோதிலும், தனது விடாமுயற்சியால் பல சிறப்புச் சித்திகளைப் (Distinctions) பெற்றார். அதனைத் தொடர்ந்து, அமெரிக்காவின் புகழ்பெற்ற மகளிர் கல்லூரியான Radcliffe College கல்லூரியில் உயர்கல்வியைத் தொடர்ந் தார். பார்வை மற்றும் செவிப்புலன் சவால்களைக் கொண்ட மாணவர்களில், உலகிலேயே முதன்முதலாக இளங்கலைப் பட்டம் (Bachelor of Arts) பெற்றவர் என்ற வரலாற்றுச் சாதனையை அவர் படைத்தார். இந்தப் பெருமை ஹெல னுக்கு மட்டுமல்ல, மனித குலத்தின் மன உறுதிக்கும், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்கும் கிடைத்த ஒரு பெரும் வெற்றியாகும். இந்நிகழ்வு வள்ளுவரின் 620-வது குறளை நினைவூட்டுகிறது.

*'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்*
*தாழாது உஞற்று பவர்'*

அதாவது மனம் தளராமல் இடைவிடாது முயற்சி செய்பவர் விதியையும் புறமுதுகு காட்டச் செய்வர் என்பர்.

ஹெலனின் கல்வித் தேடல் இத்துடன் நிற்கவில்லை. அவர் சொற்பொழிவுகள் செய்யத்தொடங்கினார். தன்னுடைய போராட்ட அனுபவங்களை மற்றவர்களுடன் பகிரத்தொடங்கினார். அத்துடன் அவர்களுக்கு உற்சாகம் ஊட்டத் தவறவில்லை. காலப்போக்கில் தனது எழுத்துகளாலும் பேச்சுகளாலும் உலகத்தை தன்பக்கம் திரும்பச் செய்தார். தன்னைப் போன்ற பலரையும் அவர் உற்சாகப்படுத்தினார்.

ஹெலன் கெல்லர் தனது சாதனைகளின் மூலம் ஈட்டிய புகழையும், சவால்களை வென்ற தனது தனிப்பட்ட அனுபவங்களையும்விஷேட தேவையுடையோருக்கான உரிமைகளை வென்றெடுக்கும் உன்னதப் பணிக்காக அர்ப்பணித்தார். அவர் வெறும் ஒரு பட்டதாரியாக மட்டும் நின்றுவிடாமல், உலகெங்கிலும் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான ஒரு வலிமையான குரலாக மாறினார். அவர்களது கல்வி உரிமைக்காக முன்னின்றும் உழைத்தார். சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட மக்களின் வாழ்வாதாரம், கல்வி மற்றும் சம வாய்ப்பு



ஆகியவற்றுக்காக அவர் முன்னெடுத்தச் செயல்பாடுகள் ஒரு புதிய சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தின. தனது வாழ்நாள் முழுவதும் பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு, மாற்றுத்திறனாளிகள் மீதான சமூகத்தின் பார்வையை மாற்றியமைப்பதிலும், அவர்களுக்கான சட்டபூர்வமான உரிமைகளைப் பெற்றுத் தருவதிலும் ஒரு செயற்பாட்டாளராக (Social Activist) மிக முக்கிய பங்காற்றினார்.

வாழ்க்கை ஒரு போராட்டமாக இருக்கும் வேளையில் ஹெலன் வாழ்க்கையில் ஒரு விடிவெள்ளியாக அவரது ஆசிரியை ஆன் சுளிவன் இருந்தார். எப்போதும் ஆன் உடனிருந்தார். இருவருடைய குடும்பங்களும் நெருக்கமாக இருந்தன. ஹெலனின் ஒவ்வொரு வெற்றியின் பின்னாலும் ஆன் உடனிருந்தார்.

கல்வியில் வியக்கத்தக்க வெற்றிகளை ஈட்டிய ஹெலன் கெல்லர், உலகெங்கிலும் உள்ள மக்களுக்கு நம்பிக்கையூட்டும் ஒரு விடிவெள்ளியாகத் திகழ முனைந்தார். தான் கடந்து வந்த கரடுமுரடான பாதைகள், அனுபவித்த வேதனைகள், எதிர்கொண்ட சவால்கள் மற்றும் எட்டிய வெற்றிகள் அனைத்தையும் ஒரு வரலாற்று ஆவணமாகப் பதிவு செய்யத் தொடங்கினார்.அவரது முதல் நூலான 'எனது வாழ்க்கை

வரலாறு' (The Story of My Life) என்பது 1903-ஆம் ஆண்டு வெளியானது. இந்தப் புத்தகம் வெறும் சொற்களின் தொகுப் பல்ல; அது இருளில் தத்தளிக்கும் பலருக்கு ஒளியூட்டும் ஓர் ஊக்க மருந்தாக அமைந்தது. தன் வாழ்வியலைப் பகிரங் கமாக வெளிப்படுத்தியதன் மூலம், உடல் சவால்களைக் காட்டிலும் மன உறுதியே ஒருவரை வெற்றியாளராக மாற்றும் என்பதை அவர் உலகிற்கு நிரூபித்தார். இன்றுவரை இப்புத் தகம் உலகம் முழுவதும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டு, பலருக்குத் தன்னம்பிக்கை அளிக்கும் வழிகாட்டியாக இருந்து வருகின்றது. அவரது வாழ்க்கை வரலாற்று நூல், வெறும் கல்வி அனுபவங்களை மட்டும் பகிரவில்லை; மாறாக, ஆசிரியை ஆன் சுளிவன் அவருடன் ஒரு தோழியாகவும், காப் பாளராகவும் இணைந்து பயணித்த உன்னதப் பிணைப்பைப் போற்றியது.

ஹெலன் தனது நூலில் தான் சந்தித்த தடைகளையும், மனப் போராட்டங்களையும் மறைக்காமல் வெளிப்படையாகப் பதிவு செய்திருந்தார். இந்தப் பகிரங்கமான பதிவுகள், வாழ்க்கைப் போராட்டத்தில் சோர்ந்து போயிருப்பவர்களுக்கு ஒரு பெரும் உந்து சக்தியாக அமைந்தன. தன்னிடம் இல்லாத பார்வை மற்றும் செவிப்புலனைப் பற்றி அவர் ஒருபோதும் முடங்கிப் போகவில்லை. மாறாக, தன்னிடம் எஞ்சியிருந்த தொட்டு ணரும் ஆற்றல் (Sense of Touch), நுகரும் திறன் (Sense of Smell) மற்றும் சுவை அறியும் புலன் (Sense of Taste) ஆகிய வற்றைக் கொண்டு, இந்த உலகத்தை எங்ஙனம் ஆழமாகப் புரிந்து கொண்டார் என்பதை மிக அழகாக விவரித்திருந்தார். தனது பலவீனங்களைக் கண்டு அஞ்சாமல், தன்னிடமிருந்த மற்றத் திறன்களைக் கொண்டு அவர் நிகழ்த்திய வளர்ச்சி யானது, பல்லாயிரக்கணக்கானோருக்கு 'இயலாமை என்பது உடலால் அல்ல, மனதால் ஏற்படுவது' என்ற மாபெரும் நம் பிக்கையை ஊட்டியது.

ஹெலன் கெல்லர் ஒரு சிறந்த எழுத்தாளராக மட்டுமல்லாது, ஆற்றல்மிக்க ஒரு பேச்சாளராகவும் பரிணமித்தார். தனது சவால்களைக் கடந்து, உலகின் பல நாடுகளுக்கும் பயணம் செய்து ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் ஊக்க உரை களை ஆற்றினார். திருவள்ளுவர் தனது 619-வது குறளில் கூறி யுள்ளபடி விதி அல்லது ஊழ் என்பது ஒருவருக்குப் புலன் களை வழங்கத் தவறினாலும், ஒருவரது தளராத முயற்சியும் உழைப்பும் அந்த விதியையே புறமுதுகு காட்டி ஓடச் செய்யும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை அவர் உலகிற்கு வழங்கினார். உடல்சார்ந்த சவால்களைக் கொண்டிருப்ப வர்கள் முடங்கிப் போகாமல், தங்களின் விடாமுயற்சியால் எத்தகைய ஊழையும் வெல்ல முடியும் என்பதற்கு ஹெலன் கெல்லரின் வாழ்க்கை ஒரு நேரடிச் சான்றாக அமைந்தது. அவரது சொற்பொழிவுகள், நலிந்த நிலையில் இருந்த பல ருக்குப் புதிய வாழ்வாதாரத்தையும், தற்காப்புணர்வையும் பெற்றுத் தந்தன.

உலகளாவிய புகழ் வந்து குவிந்தபோதும் ஹெலன் அமைதி யாகத் தனது வாழ்க்கையைத் தொடர்ந்தார். தன்னை ஒரு வியக்கத்தக்க சாதனையாளராக அவர் ஒருபோதும் கருத வில்லை; மாறாக, 'தளராத முயற்சியும் சரியான வழிகாட்டு தலும் இருந்தால், எவரும் தாம் எண்ணிய இலக்கை அடைய முடியும்' என்ற எதார்த்தமான உண்மையையே அவர் உல கிற்குப் பறைசாற்றினார். அவர் விஷேட தேவையுடையவர்க ளுக்காகக் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்ததோடு மட்டு மல்லாமல், நலிந்த நிலையில் இருந்த பலருக்கும் நேரடியாக உதவிகளைச் செய்து வந்தார். உலகின் பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட அவர், அந்தந்த நாட்டு அரசாங்கங்க ளுடனும் தொண்டு நிறுவனங்களுடனும் இணைந்து செயலாற் றினார். மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமத்துவமான சூழலை உருவாக்குவது ஒரு கருணைச் செயல் அல்ல, அது அரசாங்கத்தின் கடமை என்பதையும், சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு என்பதையும் தனது சொற்பொ ழிவுகள் வாயிலாக அவர் வலியுறுத்தினார்.

மகிழ்ச்சி என்பது நாம் விரும்பிய அனைத்தையும் பெறுவதில் இல்லை; மாறாக, நம்மிடம் இருப்பவற்றைக் கொண்டு வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றி, அந்த நிறைவை அனுப விப்பதிலேயே உள்ளது என்பதை ஹெலன் கெல்லர் தனது வாழ்வின் மூலம் உலகுக்கு உணர்த்தினார்.

கல்விச் சாதனைகளுக்குப் பிறகு, ஹெலன் கெல்லர் 'American Foundation for the Blind' எனும் அமைப்பில் இணைந்து, பார்வைத்திறன் சவால்களைக் கொண்ட மக்களின் உரிமைக ளுக்காகவும் அவர்களின் கண்ணியமான வாழ்விற்காகவும் அரும்பணியாற்றினார். உடல்சார்ந்த தடைகளை ஒரு பொருட் டாகக் கருதாமல், சமூக நீதிக்கான களத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். குறிப்பாக, மாற்றுத்தி றனாளிகள் வெறும் உதவி பெறுபவர்கள் மட்டுமல்ல, அவர் கள் சமூகத்தின் சரிநிகர் உரிமையாளர்கள் என்பதைத் தனது செயல்பாடுகள் மூலம் நிலைநாட்டினார்.அரசியலில் தீவிர மாகப் பங்கெடுத்து, பெண்களின் வாக்குரிமை மற்றும் எளி யோரின் வாழ்வாதார உரிமைகளுக்காகவும் குரல் கொடுத் தார். முதுமையிலும் உடல்நலச் சவால்களுக்கு மத்தியிலும், தனது எழுத்துப்பணி மற்றும் போராட்டங்களின் வாயிலாக உள்ளடக்கிய ஒரு சமூகத்தை (Inclusive Society) உருவாக் குவதையே தனது வாழ்நாள் இலக்காகக் கொண்டிருந்தார். 1936-ஆம் ஆண்டு, அவரது வாழ்வின் வழிகாட்டியாகவும் ஆருயிர் தோழியாகவும் விளங்கிய ஆன் சுளிவன் மறைந்தார். ஆனின் இழப்பு ஹெலனைப் பெரிதும் நிலைகுலையச் செய்த போதிலும், தனது ஆசிரியை கற்பித்த மன உறுதியுடன் அவர் மீண்டும் எழுந்து தனது பணிகளைத் தொடர்ந்தார். முதுமை யிலும், உடல்நலக் குறைபாடுகளிலும் அவரது போராட்டக் குணம் மங்கவில்லை. 1961-இல் அவருக்கு Heart Stroke வந்தது. அது அவரது ஆரோக்கியத்தைப் பாதித்த நிலையி லும் அவர் தனது எழுத்துப் பணியையும் சமூகப் பங்களிப் பையும் கைவிடவில்லை. இறுதியில், 1968-ஆம் ஆண்டு தனது 87-வது வயதில் இந்த உலக வாழ்விலிருந்து விடை பெற்றார். அவர் மறைந்தாலும் அவரது போராட்டங்கள் ஆவ ணப்படுத்தப்பட்டு, இன்றுவரை உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு ஒளியேற்றி வருகின்றன. 'பார்வை இருந்தும் இலக்குத் தெரியாமல் வாழ்வதில் அர்த்த மில்லை' என்று அவர் கூறிய அறிவுரை, இன்றும் நம் அனைவ ருக்கும் பொருந்தக்கூடிய ஒன்றாகும்.



kumar.punithavel@thaiveedu.com



# பேரறிஞர் எம்.ஏ. நுஃமானின்

## கல்வி, வாழ்வியல் வகிபாகமும் தமிழியல் ஊற்றின் பேண்தகுநிலையும்

**இக்பால் அலி**

ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் தோன்றிய தமிழறிஞர்களில், தமிழியல் அடிப்படையில் சமூகச் சிந்தனையை விரிவுபடுத்தியவர்களில் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் குறிப்பிடத்தக்கவர். கவிதை, சிறுகதை, திறனாய்வு, மொழியியல், மொழிபெயர்ப்பு மற்றும் கல்விப்பணி என அவரது செயற்பாடுகள் பரந்த பரிமாணம் கொண்டவை. மார்க்சியச் சிந்தனை, நவீன இலக்கியக் கோட்பாடுகள் மற்றும் சமூகப் பகுப்பாய்வு ஆகிய தளங்களில் தொடர்ச்சியான உரையாடல்களை உருவாக்கியவர் அவர். பன்மொழிப் புலமையும், மொழியியல் விற்பன்னமும் அவரை மற்றவர்களிட மிருந்து தனித்துவப்படுத்துகின்றன. குறிப்பாக, 'க்ரியா' தற்காலத் தமிழ் அகராதி போன்ற முயற்சிகளில் இலங்கைத் தமிழ்ச் சொற்களை ஆவணப்படுத்துவதில் அவர் ஆற்றிய பங்களிப்பு மிக முக்கிய மைல் கல்லாகும். இன்றைய இலக்கியச் சூழலில், படைப் பொன்றை வெளியிட்ட உடனேயே சாஹித்திய மண்டலப் பரிசு அல்லது Nobel Prize போன்ற உயரிய விருதுகளு க்கான அங்கீகாரத்தை எதிர்பார்க்கும் எழுத்தாளர்கள் உலகளாவிய அளவில் காணப்படுகின்றனர். ஆனால் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் 'விருதுகள் தம்மை உயர்த்துவதில்லை காலம்தான் படைப்பை மதிப்பிடும்' என்ற உறுதியான நிலைப்பாட்டை எடுத்துரைத்தவர். 'அரசு மற்றும் தனியார் அமைப்புகள் தேசிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் அவர்களுக்கு விருதுகளையும் பாராட்டுகளையும் வழங்கி கௌரவிக்க முயன்றபோதும், அவர் தனது

கொள்கைகளில் ஓர் 'இரும்பு மனிதராகவே' உறுதியுடன் இருந்து வந்துள்ளார். நுஃமான் தனது இலக்கியப் பயணத்தில் எந்தளவு தூய்மையையும் நேர்மையையும் கடைப்பிடித்தாரோ, அதே உறுதிப் பாட்டைத் தனது தனிப்பட்ட வாழ்க்கை முறையிலும் பேணி வந்தார் என்பதற்கு இதுவே சான்றாகும். விருதுகளையும் பதவிகளையும் தேடிச் செல்பவர்களுக்கு மத்தியில், அவை தம்மைத் தேடி வந்தபோதும் அவற்றைத் தவிர்த்த பெருந்தகை பேராசிரியர் நுஃமான். எனினும், சில தவிர்க்க முடியாத சூழல்களால் ஓரிரு விருதுகளை அவர் ஏற்க வேண்டியிருந்தது. குறிப்பாக, இலங்கையின் அரசு சாகித்திய விருது மற்றும் 2011-இல் இந்தியாவில் அவருக்குத் தெரிவிக்கப்படாமலேயே அறிவிக்கப்பட்ட விளக்கு விருது ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவை கௌரவத்திற்காக அவர் தேடிச் சென்றவை அல்ல, மாறாகச் சூழலின் நிர்ப்பந்தத்தால் அமைதியாக ஏற்றுக்கொண்டவை. விருதுகளின் பின்னால் செல்லாமல் இருப்பதே எழுத்தின் மரியாதையை நிலைநாட்டும் என்ற கருத்தை முன்வைத்தவர்களில் கலாநிதி சி. சிவசேகரம் அவர்களும் ஒருவர். இவ்விருவரும் கொள்கைத் தெளிவுடன் செயற்பட்டவர்களாகத் திகழ்கின்றனர். தமிழ் மொழியியல் மற்றும் நவீன இலக்கியச் சிந்தனைகளில் முக்கியமான திருப்புமுனைகளை உருவாக்கியவர்களாக இவர்களைச் சுட்டிக்காட்டலாம். இருப்பினும், எழுத்தாளரின் நிலையான உயர்வை நிர்ணயிப்பதில் விருதுகள் தீர்மானகரமான பங்கு வகிப்பதில்லை என்பதே இந்நிலையிலிருந்து பெறப்படும் மையக் கருத்தாகும்.

பலஸ்தீன மக்களின் அவலக்குரல்களையும் போராட்ட உணர்வையும் தமிழ் இலக்கியச் சூழலில் முதன்முதலில் ஓங்கி ஒலிக்கச் செய்த பெருமை பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் அவர்களையே சாரும். 1960-களின் பிற்பகுதியில் இருந்தே பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் மீதிருந்த ஆழ்ந்த ஈடுபாடு காரணமாக அக்கவிதைகளை அவர் மொழி பெயர்க்கத் தொடங்கினார். அவர்களது வாழ்வியல் துயரங்கள், அடக்குமுறைக்கு எதிரான வீரம் மற்றும் போராட்டத்தின் நியாயப்பாடுகளைத் தமிழ்ப் பொது வெளிக்குக் கொண்டு வந்ததில் அவரது மொழிபெயர்ப்புகள் பெரும் பங்காற்றின. குறிப்பாக, அவரது புகழ்பெற்ற மொழிபெயர்ப்புத் தொகுப்பான 'பாலஸ்தீனக் கவிதைகள்' ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய அரசியல் விழிப்புணர்வையும், சர்வதேசப் போராட்டங்களுடனான ஒருமைப்பாட்டையும் உருவாக்கியது. மஹ்மூத் தர்வீஷ் போன்ற உலகப்புகழ் பெற்ற கவிஞர்களைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப் படுத்திய அடையாளமாகவும் அவர் போற்றப்படுகிறார். அவர் சிறந்த ஆங்கிலப் புலமைமிக்கவரான எம்.ஏ. நுஃமான் இந்தோனேசியாக் கவிஞர் சைறில் அன்வர் மற்றும் மலாய் மொழியில் எழுதும் மலேசியக் கவிஞர் லத்தீஃப் மொஹிதீன் ஆகியோர்களுடைய கவிதைகளைத் தமிழில் மொழி பெயத்துள்ளார். தென்கிழக்காசிய இலக்கியப் போக்குகளைத் தமிழ் வாசகர்களுக்கு அணுக்கமாக்கிய பெருமை அவரையே சாரும்.

'ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபில் மஹாகவி (து. உருத்திரமூர்த்தி) என்ற மகா கலைஞனை வெறும் ஒரு வட்டத்துக்குள் முடங்கிவிடாமல், ஒட்டுமொத்தத் தமிழ்ப் பேசும் நல்லுலகிற்கும் அடையாளம் காட்டிய பெருமை பேராசிரியர் எம்.ஏ. நுஃமானைச் சாரும். மஹாகவியின் படைப்புகளைத் தொகுத்து, நுட்பமான திறனாய்வுகளுடன் அவர் வெளியுலகுக்குக் கொண்டு வந்தமையாலேயே, அவை இன்று பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் பாடப்பரப்பில் தவிர்க்க முடியாத இடத்தைப் பிடித்துள்ளன. ஒரு கவிஞனைப் பாடநூல் ஆய்வுகளுக்கு அப்பால், சமூக உணர்வுமிக்க மக்கள் கவிஞனாக நிலைநிறுத்திய நுஃமானின் இப்பணிக்குத் தமிழ் உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.'

1970-களின் பிற்பகுதியில் தமிழர் மத்தியில் உருவான விடுதலைப் போராட்ட உணர்வும், அரச அடக்குமுறைகளும் ஈழத்து இலக்கியத்தில் 'எதிர்ப்புக் கவிதைகள்' எனும் புதிய அலையைத் தோற்றுவித்தன. 1977-ஆம் ஆண்டு இன வன்முறையைத் தொடர்ந்து நுஃமான் எழுதிய 'துப்பாக்கி அரக்கரும் மனிதரின் விதியும்', 'நேற்றைய மாலையும் இன்றையக் காலையும்' ஆகிய கவிதைகள், தமிழ் எதிர்ப்பிலக்கியத்தின் போக்கை முற்றிலும் மாற்றியமைத்தன. வெறும் உணர்ச்சிவசப்பட்ட முழக்கங்களாக இல்லாமல், அதிகாரத்தின் வன்முறையையும் மனித அவலத்தையும் ஆழமான படிமங்கள் ஊடாகப் பதிவு செய்ததில் இக்கவிதைகள் முன்னோடியாகத் திகழ்கின்றன. விமர்சனக் கலையில் உச்சமாக மதிக்கப்படும் ஒரு தனித்துவமிக்கவர். துணிந்து சரி பிழையெனப் பேசிட வல்லவர். கூர்மையான கத்தியைப் போன்றது அவரது எழுத்துகள் துன்பப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை தரும் கவிதைகளையே எழுதுபவர். அவரது கவிதைகள் மத இனவெறிகளுக்குத் தீனி போடாது. மதச்சார்ப்பின்மை இழையோடும் மனிதநேயம் ஊடுபாயும் சமூக சமவுடமைப் போக்காளராகவும் விடுதலை வேட்கை மிகுந்தவராகவும் திகழ்கிறார்.

தமிழ் மொழி, அதன் வளர்ச்சி, சமூக சமத்துவம் மற்றும் மானுட நேயம் ஆகியவற்றில் பேராசிரியர் நுஃமான் மிகுந்த பற்றுறுதி கொண்டவர். பழைமையின் செழுமையையும் புதுமையின் தேவையையும் ஒருசேரப் பகுப்பாய்வு செய்து, எத்தகைய தத்துவச் சிக்கல்களுக்குள்ளும் சிறைபடாமல் தனக்கென ஒரு தனித்துவமான ஆய்வுப் பாதையை அவர் அமைத்துக்கொண்டார். குறிப்பாக, அவர் வெளியிட்ட 'கவிஞன்' என்ற கவிதை இதழ் ஈழத்து இலக்கிய உலகில் ஒரு பெரும் திருப்பமுனையாக அமைந்தது. அதில் அவர் எழுதிய கட்டுரைகள், நவீன கவிதை குறித்த புதிய புரிதல்களையும் விவாதங்களையும் உருவாக்கி, ஒரு புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தன.

1990-இல் புலிகள் வடக்கிலிருந்து முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றிய காலகட்டத்தில் அவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றியாவர். அச்சமயம் தவணை விடுமுறைக்காக அவர் ஊர் வந்திருந்தார். அச்சமயம் அவர் யாழ்ப்பாணத்திற்கு மீளவும் திரும்பிப் போக முடியாது இருக்கும் என்று அவர் கனவிலும் நினைத்திருக்கவில்லை. எனினும், இந்த முஸ்லிம்களுடைய வெளியேற்றத்தால் பேராசிரியர் எம்.ஏ. நுஃமானை யாழ் பல்கலைக்கழக சமூகம் இழந்ததை பெரும் பேரிழப்பாகக் கருதினார்கள். இது தொடர்பில் லேக் ஹவுஸ் வெளியீடான அமுது சஞ்சிகையின் பிரதம ஆசிரியர்

மனோரஞ்சன் கண்டியில் இடம்பெற்ற இலக்கியச் சந்திப்பு ஒன்றில் குறிப்பிடும் போது '1990-இல் புலிகளால் வடக்கில் இருந்து ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகம் வெளியேற்றப்பட்ட சமயம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பீடம் அவசரமாகக் கூடியது. அக்கூட்டத்தில் குறிப்பாக அப் பல்கலைக்கழகத்தில் மிக உயர்வாக மதிக்கப்படுகின்ற பேராசிரியர் எம்.ஏ. நுஃமானை மாத்திரம் வைத்துக் கொள்வோமா' என்ற கருத்து நிலவியதாகக் குறிப்பிட்டார். ஆகவே மனோரஞ்சனின் கூற்றுப்படி பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் அவர்கள் அங்கு இருந்து ஏற்கனவே வந்து விட்டாலும்கூட அவருடைய அறிவுத் தேவை எந்தளவு என்பதனை பல்கலைக்கழக சமூகம் உணர்ந்து நின்றது என்பதை இதில் இருந்து விளங்கிக் கொள்ளமுடிகிறது.

பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் அவர்கள், இன முரண்பாடுகள் உச்சம் பெற்றிருந்த போர்ச் சூழலிலும் சமூக நல்லிணக்கத் திற்காக உறுதியுடன் நின்றவர். குறிப்பாக, தனது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களை வன்முறைக்கு பலிகொடுத்த மிகத் துயரமான தனிப்பட்ட இழப்புகளைச் சந்தித்தபோதிலும், அவர் ஒருபோதும் தமிழ் மக்கள் மீதோ அல்லது தமிழ் மாணவர்கள் மீதோ கசப்புணர்வு கொள்ளவில்லை. சமூகங்களுக்கு இடையிலான விரிசல் களைக் களைந்து, அறிவுத்தளத்தில் ஒரு பாலமாகச் செயற்படுவதையே அவர் தனது வாழ்நாள் நோக்கமாகக் கொண்டிருந்தார். இனத்துவ எல்லைகளைக் கடந்து, தமிழ் மாணவர்களுடனும் கல்விச் சமூகத்துடனும் அவர் பேணிய பரஸ்பர மரியாதையும் நேர்மையும் ஈடு இணையற்றவை. இத்தகைய உயர்ந்த மானுடப் பண்பும், நடுநிலையான ஆளுமையுமே அவரை அனைத்துச் சமூகங்களினதும் இதயங்களில் ஒரு மதிக்கத்தக்க அறிஞராக இன்றும் நிலைநிறுத்தியுள்ளது

பேராசிரியர் நுஃமான் அவர் களின் கற்பித்தல் முறை மிகவும் தனித்துவமா னது; அது அவரது இயல்பிலேயே ஊறிய ஒரு பண்பு என்று தான் கூற வேண்டும்.



குறிப்பாக, கல்முனை மண்ணுக்கே உரிய சொல்லாடல் இனிமையுடன் அவர் பாடம் நடத்தும் பாங்கு அலாதியானது. இலங்கையில் மொழியியலை அவரைப் போல் நுட்பமாகக் கற்பிக்க வல்லவர் யாரும் இல்லை என்றே கூறவேண்டும். அவர் கற்பிக்க வரும்போது பாடக்குறிப்புகளோடே சமூகம ளிப்பார். புறநானூறு போன்ற சங்க இலக்கியப் பாடல் களையும், நாட்டார் இலக்கியங்களையும் ஏடுகளைப் பார்க்காமலே மனனமாக ஒப்புவிக்கும் அவரது நினை வாற்றல் வியக்கத்தக்கது. அவர் நாவினால் ஒரு பாடத்தைக் கற்பிக்கும்போது அது வெறும் கல்வியாக மட்டும் அமை யாமல், ஒரு சுவையான இலக்கிய அனுபவமாகவே மாறிவிடும். அவரது இந்த அபாரமான கற்பித்தல் திறனைக், கண்டி திரித்துவக் கல்லூரியின் ஓய்வுநிலை ஆசிரியர் இரா. சிவலிங்கம் போன்ற மூத்த தலைமுறையினர் இன்றும் மிகுந்த வியப்புடன் பாராட்டி வருகிறார்கள். காலம் கடந்தும் மாணவர்கள் மற்றும் சக ஆசிரியர்களின் மனதில் அவர் ஒரு 'ஆசிரியப் பேராசானாக' நிலைத்து நிற்கின்றார்.

பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் இதுவரை நவீன தமிழியல் ஆய்வுக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் வலுசேர்க்கும் வகையில் முப்பத்தைந்து பெறுமதிமிக்க நூல்களை வழங்கி யுள்ளார். தமிழ் இலக்கியத்தின் பன்முகப் பார்வையை உலகளாவிய இயங்குநிலையோடு விளக்கும் இவரது நூல்கள், காலத்தால் அழியாத அறிவுச் சொத்துக் களாகும். தற்போது அவரிடம் அச்சுக்குத் தயாராக இன்னும் 15 நூல்களுக்கான கட்டுரைகள் கையிருப்பில் உள்ளன. 21-ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியப் போக்கை ஆவணப் படுத்த இவை வெளிவருவது மிக அவசியமாகும். எனவே, இப்பாரிய பணியைத் தென்கிழக்குப் பல்கலைக் கழக மொழியியல்துறை அல்லது பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முன்னெடுத்து, அவற்றை நூலுருவில் வெளியி டுவது எதிர்கால மாணவர் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்குச் செய்யும் பெருந் தொண்டாக அமையும்.

**குடும்பப் பின்னணி:**

நுஃமான் அவர்களுடைய தந்தையான மக்பூல் ஆலிம் அவர்கள் கல்முனைப் பிரதேசத்தில் சமூக, சமய, கல்வி மற்றும் அரசியல், பொருளாதார முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட புகழ்பெற்ற இஸ்லாமிய அறிஞரும் ஆசிரியரும் ஆவார். அவர் இயற்றிய 'முஸ்லீங்களுக்கோர் விஞ்ஞாபனம்' என்னும் நூல் கல்முனை மண்ணின் வரலாறையும் முன்னோர்களின் சமூகப் பணிகளையும் ஆவணப்படுத்தும் பொக்கிஷமாக திகழ்கிறது. இந்நூல் அவரது சமூகப் பங்களிப்பின் பரிமாணத்தைக்

> "பேராசிரியர் நுஃமான் அவர்களின் கற்பித்தல் முறை மிகவும் தனித்துவமானது;
> அது அவரது இயல்பிலேயே ஊறிய ஒரு பண்பு என்று தான் கூற வேண்டும்.
> கல்முனை மண்ணுக்கே உரிய சொல்லாடல் இனிமையுடன் அவர் பாடம் நடத்தும் பாங்கு அலாதியானது."

காட்டுவதோடு, பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் அவர்களின் ஆளுமை உருவாக்கத்திற்கும் அத்திவாரமாக அமைந்த தாகக் கூறலாம். 13.11.1907 பிறந்த சுலைஹா உம்மாவை 22.09.1922-இல் மக்பூல் ஆலீம் திருமணம் செய்து கொண்டார். சுலைஹா உம்மாவின் தகப்பானர் பெயர் அகமது லெவ்வை சின்ன மீராலெவ்வை. அவரது உயரம் காரணமாக ஊரில் அவரை வணராசாப் போடியார் என அழைப்பர். சுலைஹா உம்மாவின் தாயார் அலியார்ப் போடி கதிசா உம்மா. இவர்கள் ஊரில் வசதியுள்ள விவசாயக் குடும்பத்தினர். பேராசிரியர் எம்.ஏ. நுஃமானின் தாய் தந்தையருக்கு ஏழு பிள்ளைகள். நபீஸத்துல் நாச்சியா (1924 - 1978), றும்மான் (1937 - 2014), நூர்ஜஹான் (1940) என மூத்தவர் மூவரும் பெண்கள். அதன் பிறகு பிறந்த முஹம்மது சுபியான் (1941 - 1989), முஹம்மது நஃமான் (1944), முஹம்மது சல்மான் (1947), முஹம்மது ஹாறூன் (1950) என அனைவரும் ஆண்கள். மக்பூல் ஆலிம் தம்பதிக்கு மொத்தம் 23 பேரப்பிள்ளைகளும் 29 பூட்டப் பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர்களுள் பலர் இன்று அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து மலேசியா ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர். இவர் தந்தை எம்.எஸ். காரியப்பர் அவர்களுடன் இணைந்து அக்காலகட்டத்தில் கல்முனைப் பிரதேசத்தில் நுஃமானின் தந்தையான மக்பூல் ஆலிம் ஆற்றிய சமூக, கல்விப் பணிகள் அப்பிரதேச மண்ணோடு அழியா வரமாகப் பின்னிப்பிணைந்து இருக்கின்றன. இதுவே அவர்களின் குடும்பத்தினரைச் சிறப் புடன் வாழவைத்தது எனலாம்.

கல்முனை மண்ணின் பேராளுமை எம்.ஏ. நுஃமானின் படைப்புலகம் மானுட நேயத்தையும், உலகளாவிய போர் அவலங்களுக்கு எதிரான குரலையும் அடித்தளமாகக் கொண்டது. இந்தப் பண்பு அவருக்குத் தனது தந்தை மக்பூல் ஆலீம் வழியாகக் கிட்டியது. 'ஒருவருடைய இனப்பற்று மற்றைய இனங்களுக்கு எதிராக அமைய வேண்டியதில்லை' என்ற தந்தையின் இஸ்லாமிய விழுமியமே நுஃமானின் வாழ்வியலாகவும் மாறியது. போர்ச் சூழலில் தனது உடன்பிறந்த சகோதரனை வன்முறைக்குப் பலிகொடுத்த பெரும் துயரத்தைச் சந்தித்தபோதும், தந்தையின் வழிகாட்டலும் கல்வியறிவும் அவரை நிதானமாகச் சிந்திக்கத் தூண்டின. தன் சொந்த ஊருக்கு அருகில் பிறந்த சுவாமி விபுலானந்தரைப் போலவே, நுஃமானும் குறுகிய எல்லைகளைக் கடந்து, அனைத்து இன மக்களினது சகவாழ்வுக்காகவும், தமிழியலின் எழுச்சிக்காகவும் சிந்தனை மாற்றத்திற்காகவும் உழைத்த ஒரு பரந்த நோக்குடைய பேரறிஞராவார்.

## கல்வி:

எம்.ஏ. நுஃமான் ஆரம்பக் கல்வியினை ஊர்ப் பாடசாலையில் கற்றார். அதன் பின்பு பத்து வயதில் கல்முனை நகரிலுள்ள உவெஸ்லி உயர்தர பாடசாலையில் கற்றார். கல்முனையில் மாமாவின் கடையில் இருந்துகொண்டுதான் பாடசாலைக்குச் சென்று வந்தார். அவர் க.பொ.த சாதாரண தரம் சித்தி யடைந்தபின் அப்பாடசாலையில் க.பொ.த உயர் தரம் ஒரு வருடம் கல்வி கற்றார். அவருக்கு தொடர்ந்து படிக்க விருப்பம் இருந்தது. அவருக்கு வீட்டுச் சூழல் சாதமாக இருக்கவில்லை. க.பொ.த சாதாரணம் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கு அக்காலகட்டத்தில் ஆசிரியர் நியமனம் வழங்கினார்கள். அவருடைய தந்தையின் விருப்பத்துக்கு ஏற்ப 18 வயது தொடங்கியதும் 1961 நவம்பரில் ஆசிரியர் நியமனம் பெற்று திருகோணமலை சென்றார். அங்கு சின்னக் கிண்ணியாவில் ஒரு வருடம் ஆசிரியராகக் கடமையாற்றினார். அப்போது அங்கு கவிஞர் அண்ணல்தான் தலைமை ஆசிரியர். அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. கிண்ணியா வாழ்க்கை குறுகிய காலம்தான். எனினும் அவர் அனுபவம் சற்று விசாலமடைந்த காலம் எனலாம்.

1963, 1964-ஆம் ஆண்டுகளில் மீண்டும் ஊருக்கு வந்து அட்டாளைச்சேனை ஆசிரியக் கலாசாலையில் பயிற்சி மாணவராக இருந்தார். அந்த இரண்டு ஆண்டுகளும் கற்பித்தல் துறையில் அவர் அறிவும் அனுபவமும் விருத்தியடைந்தது. ஆசிரியர் பயிற்சி முடிந்ததும் பொலன்னறுவை விஜித மகா வித்தியாலயத்தில் அவருக்கு நியமனம் கிடைத்தது. அது சிங்களப் பாடசாலை. அதில் ஒரு சிறிய முஸ்லிம் பிரிவு இருந்தது. அது அவரது வாழ்வில் முக்கியமான காலம் எனலாம். அச்சூழல் சிங்கள மக்களுடன் பழகவும் சிங்கள மொழி அறிவை வளர்த்துக் கொள்ளவும் அவருக்கு வாய்ப் பாக அமைந்தது. அவர் அங்கு மூன்று வருடம் பணியா ற்றினார். 1968-இல் மீண்டும் ஊருக்கு மாற்றம் பெற்று வந்தார். ஊர்ப் பாட சாலையில் மூன்று வருடம் பணியாற்றி னார். கல்முனை எழுத்தாளர் சங்க த்துடன் மீண்டும் இணைந்து செயற்பட்டார்.



> எம்.ஏ. நுஃமானின் படைப்புலகம் மானுட நேயத்தையும், உலகளாவிய போர் அவலங்களுக்கு எதிரான குரலையும் அடித்தளமாகக் கொண்டது. இந்தப் பண்பு அவருக்குத் தனது தந்தை மக்பூல் ஆலீம் வழியாகக் கிட்டியது. 'ஒருவருடைய இனப்பற்று மற்றைய இனங்களுக்கு எதிராக அமைய வேண்டியதில்லை' என்ற தந்தையின் இஸ்லாமிய விழுமியமே நுஃமானின் வாழ்வியலாகவும் மாறியது.

இந்தக் காலத்தில்தான் நண்பர் சண்முகம் சிவலிங்கத்துடன் இணைந்து 'கவிஞன்' இதழை வெளிக்கொணர்ந்தார். அப்போது மஹாகவி மட்டக்களப்புக் கச்சேரியில் சேவை யாற்றிக் கொண்டிருந்தார். அவரை அடிக்கடி சந்திக் கவும் அவரது 'கோடை' நாடகத்தை வெளியிடவும் வாய்ப்புக் கிடைத்தது.

1970-இல் சுயமாகப் படித்து க.பொ.த உயர்தரப் பரீட்சை எழுதி பல்கலைக்கழகம் தெரிவானார். இது அவருடைய வாழ்க்கையில் இன்னுமொரு திருப்பம். 1971-இல் கொழும்புக்கு மாற்றம் பெற்றுச் சென்று ஆசிரியர் பணியாற்றிக் கொண்டே பல்கலைக்கழகத்திலும் பட்டப் படிப்பை மேற் கொண்டார். காலையில் பல்கலைக்கழக மாணவன், பிற்பகலில் பாடசாலையில் ஆசிரியராக இருந்து ஐந்து ஆண்டுகள் கொழும்பில் கற்பித்தார்.

பல்கலைக்கழகத்தில் மொழியியலைச் சிறப்புத் துறையாகப் பயின்றவர். அப்போது பல்கலைக் கழகத்தில் அது ஒரு புதிய துறை. பிரதானமாகப் பேராசிரியர் சு. சுசீந்திரராஜாவிடம்தான் அவர் மொழியியலைக் கற்றார். அப்போது அவர் மட்டும்தான் தமிழ் மொழி மூலம் அங்கு மொழியியலைக் கற்பித்தார். அவரது இறுதி ஆண்டில் பேராதனைப் பல்கலைக் கழகத்துக்கு வருகை தரு விரிவுரையாளர்களாக வந்த பேராசிரியர் தனஞ்சயராசசிங்கம், பேராசிரியர் சண்முகதாஸ் ஆகியோர்களிடமும் மொழியியல் கல்வியினைக் கற்றவர்.

அவரது இலக்கியச் செயற்பாடுகளிலும் முக்கிய காலம் இது எனலாம். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடனும் இளங்கீரனுடன் ஜனவேகம் பத்திரிகையிலும் சாகித்திய மண்டலத் தமிழ் இலக்கிய குழுவிலும், இணைந்து செயற் பட்டவர். 1970 முதல் 1990 வரை அவர் யாழ்ப்பாணத்தில் வசித்த காலமாகும். 1976 ஜூன் மாதம் அவர் யாழ் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராக இணைந்தார். 1990 ஜூன் வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார். பல்கலைக்கழக விடுமுறை காரணமாக ஜூன் 6-ஆம் திகதி கல்முனைக்கு வந்தார். ஜூன் 11 புலிகள் அரச படைகளுடன் யுத்தத்தில் களமிறங்கினார்கள். அப் போது கிழக்கில் முஸ்லிம் கிராமங்களில் அசாதாரண சூழ்நிலை நிலவியது. ஒக்ரோபரில் வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டார்கள். ஆதலால் அவருடைய யாழ் பல்கலைக்கழகத் தொடர்பு முடிவுபெறலாயிற்று. ஒரு வருடம் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து இடம்பெயர்ந்த விரிவுரையாளராகப் பேராதனையில் கடமையாற்றினார்.

அவருடைய வாழ்வில் யாழ்ப்பாணக் காலம் மிக முக்கியமானது. கொந்தளிப்பான சூழல்களில் அவர் அங்கு வாழ்ந்தவர். அவருடைய எதிர்ப்புக் கவிதைகளில் கணிசமானவை அப்போதுதான் எழுதப்பட்டவை. அக்காலப் பகுதியில் திறனாய்வு, ஆராய்ச்சி, மொழிபெயர்ப்பு என்று அவர் பல்துறைகளில் ஈடுபட்டார். அவரது பட்ட மேற்கல்வியையும் (எம்.ஏ., பி.எச்.டி) அக்காலத்தில்தான் நிறைவு செய்தார். விடுதலைப் போராட்டத்தின் அரசியலை அருகில் இருந்து அவதானிக்கும் வாய்ப்பும் அக்காலத்தில் தான் அவருக்கு கிடைத்தது. பல்கலைக் கழகத்தின் உள்ளும் வெளியிலும் கலை இலக்கிய நண்பர்களுடனான அவரது நட்பு வட்டம் விலாசமடைந்தது. பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, ஏ.ஜே. கனகரத்னா போன்றோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் அப்போது கிடைத்தது.

1990-இல் இருந்து 2009 வரையிலும் அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கடமை யாற்றினார். ஓய்வு பெற்ற பின்னரும் இன்று வரையிலும் அங்கு கடமையாற்றி வருகின்றார். பேராதனையின் பல்லினச் சூழலில் அவருக்கு வாழக் கிடைத்தது ஒரு புதுமையான அனுபவம். பேராதனைக்கு வந்த பிறகுதான் அவருடைய வாழ்க்கைப் புலம் விரிவடைந்தது. இக்காலப்ப குதியில்தான் ஆங்கிலத்திலும் எழுதத் தொடங் கினார். சிங்களப் புலமையாளர்களுடன் தொடர்பு கொள்ளவும் உரையாடவும் அது அவசியமாகவும் இருந்தது. பேராதனைப் பல்கலைக்கழக காலத்தில்தான் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடனும் ஆய்வாளர்களுடனும் அவருக்கு தொடர்பு ஏற்பட்டது. இந்தத் தொடர்புகளால் அவருடைய அறிவும் அனுபவமும் விசாலமடைந்தது.

அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தான் மொழியியலில் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வை மேற்கொண்டார். அப்போது இந்தியாவில் மொழியியல் கல்விக்கான இரண்டு உயராய்வு மையங்கள் இருந்தன. ஒன்று பூனாவில் மற்றையது அண்ணாமலையில். தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் முயற்சியால் அது அண்ணாமலையில் நிறுவப்பட்டது. அவர் அங்கு சென்ற போது தமிழில் சிறந்த மொழியிலாளர்களான பேராசிரியர்கள். கு. அகத்தியலிங்கம், ந. குமாரசாமிராஜா, செ.வை. சண்முகம், கி. கருணகாரன் முதலியோர் அங்கு கடமையாற்றினார்கள். இன்று மொழியியல் துறையில் பிரபல்யம் பெற்றிருக்கும் வாசு. ரங்கநாதன், எல். ராமமூர்த்தி ரவி சங்கர் என ஆய்வு மாணவர்கள் பலர் அங்கு இருந்தனர். இவர்களின் தொடர்பினால் மொழியியலில் பரந்துபட்ட அறிவைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் அவருக்கு கிடைத்தது. பிற்காலத்தில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அதன் துணைவேந்தர் கருணாகரன் அழைப்பின்












பேரில் அங்கு சென்று சிலகாலம் மொழியியல் துறையில் வருகைப் பேராசிரியராகக் கடமை யாற்றினார். அக்காலப்பகுதியில்தான் அடிப்படைத் தமிழ் இலக்கண நூலை எழுதி முடித்தார். இக்காலத்தில் பேராசிரியர்கள் கி. அரங்கன், இராம சுந்தரம் ஆகியோருடன் நெருங்கிய நட்பினைப் பேணிவந்தார்.

2007 - 2008 காலப்பகுதியில் மலாயாப் பல்கலைக்கழக வருகை தரு விரிவுரை யாளராகப் பணியாற்ற அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. தனிநாயகம் அடிகளார், வரலாற்று அறிஞர் அரசரத்தினம் ஆகிய இலங்கை அறிஞர்கள் பணியாற்றிய துறை அது. அவர் நண்பர்களான பேராசிரியர் குமரன், கிருஸ்ணன் மணியன் ஆகியோர் அவருக்கு அங்கு உறுதுணையாக இருந்தார்கள். அந்த ஓராண்டு அனுபவம் அவருக்கு முக்கியமானது. மலேசியா எழுத்தாளர்களுடன் நெருங்கிப் பழகவும் மலேசியா தமிழ் இலக்கியம் பற்றி அறிந்து கொள்ளவும் அவருக்கு கிடைத்த வாய்ப்பு முக்கியமானது. டாக்டர் சண்முக சிவா, சை. பீர்முகம்மது மற்றும் நவீன் உட்பட வல்லின குழுவினரது நட்பினையும் பேணிவந்தார்.

இவர் சிங்கப்பூர் சிம் பல்கலைக்கழகத்திலும் (சிங்கப்பூர் சமூக விஞ்ஞானப் பல்கலைக் கழகம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது) குறுகிய காலம் வருகைப் பேராசிரியராகக் கடமைபுரிந்துள்ளார். அங்கு தமிழ் மாணவர் களுக்கு மொழியியல் பாடத்தையும் கற்பித்திருக் கிறார். பல்கலைக்கழகத்தின் வேண்டுதலுக்கு இணங்க தொலைக் கல்விமுறையில் மொடியுல் களையும் எழுதிக் கொடுத்துள்ளார். சிங்கப் பூரின் பல்கலைக்கழகக் கல்வி முறையை அறிந்துகொள்வதற்கும், சிங்கப்பூர் தமிழ் எழுத் தாளர்கள் மற்றும் முனைவர் திண்ணப்பன் போன்ற தமிழறிஞர்களுடன் நெருங்கிப் பழகுவ தற்கும் இப்பயணம் அவருக்கு நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது.

சமூக விஞ்ஞான சங்கம் மற்றும் ICES ஆகிய நிறுவனங்களுடைய செயற்பாடுகளில் நுஃமான் அவர்களுடைய பங்களிப்பும் முக்கியத்துவம் பெறுகின்றது. அரசியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் குமாரி ஜயவர்தன, ஜயதேவ உயங்கொட, லெஸ்லி குணவர்த்தன ஆகி யோருடன் நெருங்கிச் செயற்பட்டவர். சமூக விஞ்ஞான சங்கத்தின் வெளியீடுகளை மொழி பெயர்த்தார். அவ்வகையில் அவர் மொழி பெயர்த்த லெஸ்லியின் இனமுரண்பாடும் வர லாற்றியலும் (Historiography in a time Ethnic Conflict) குறிப்பிடத்தக்கது. குமாரி ஜயவர்தனவின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் வெளிக்கொணர்ந்த தமிழ் சஞ்சிகையான பிரவாத த்தின் இதழாசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

இன ஆய்வுகளுக்கான சர்வதேச மையம் (ICES) இன நல்லுறவை குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்ட அரச சார்பற்ற நிறுவனம். நீலன் திருச்செல்வம், ராதிகா குமாரசாமி ஆகியோர் கள் அதை இயக்கினார்கள். அது அவர்கள் இருக்கும் வரை சிறப்பாகச் செயற்பட்டது. இன நல்லுறவை மேம்படுத்துவதில் அவருக்கு கருத்து ஒற்றுமை இருந்ததால் அவரும் அவர்களுடன் சேர்ந்து செயற்பட்டார். றெஜி சிறிவர்தனவும் அந்நிறுவனத்தில் முக்கியமான பணியில் இருந்தார். முதலில் றெஜியின் 'சோவியத் யூனியனின் உடைவு' நூலை நுஃமானும் சேரனும் பதிப்பித்தார்கள். ICES ஏற்பாடு செய்த கருத்தரங்குகள் சிலவற்றில் நுஃமான் அவர்களும் பங்கேற்றிருக்கிறார். இலங்கையில் இன உறவுத் தொடர்பான விரிவுரைத் தொடர் ஒன்றை ICES ஏற்பாடு செய்தது. அத்தொடரில் 'Understanding Sri Lankan Muslim Identity' என்ற தலைப்பில் அவர் உரையாற்றினார். அது ஒரு கை நூலாகவும் வெளிக்கொணரப்பட்டது.

2005-ஆம் ஆண்டளவில் Sri Lankan Studies என்ற பெரிய ஆய்வுத் திட்டத்தைத் தொடங்கினார்கள். அது தொடர்பான ஆய்வு நூல்கள் வெளிவந்தன. அதிலும் Sri Lankan Muslim: Ethnic Identity Within Diversity' என்ற ஆய்வு நூலும் 2007-இல் வெளிவந்தது. 2000 ஆண்டளவில் பிற்பகுதியில் மூன்று ஆண்டுகள் இதன் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் நுஃமான் செயற்பட்டுள்ளார்.

## கலை இலக்கிய ஆர்வம்:

எம்.ஏ. நுஃமான் எனும் ஆளுமை விருட்சம் உரு வாவதற்கான அடிப்படைக் காரணிகளாக அவரது பெற்றோரே திகழ்ந்துள்ளனர். நுஃமானின் சிறுவயது ஓவியத் திறமையையும், 1962-இல் தினகரனில் வெளியான அவரது முதல் சிறுகதையையும் ஊரார் முன்னிலையில் காட்டிப் பெருமிதம் கொண்ட தந்தையின் செயல், அவருக்குத் தொடர்ச்சியான ஊக்கத் தையும் அங்கீகாரத்தையும் வழங்கியது. அதேவேளை, ஒரு சிறந்த கதை சொல்லியாகத் திகழ்ந்த அவரது தாய், ஜானகிராமனின் நடைக்கு இணையான உரையாடல் பாணியிலும், இயல்பான நாட்டார் பாடல் மரபிலும் கதைகளைக் கூறி நுஃமானின் இலக்கிய ஆர்வத்திற்கு வித்திட்டார். இவ்வாறு தந்தையின் புறவயமான பாராட்டும், தாயின் அகவயமான கலைத் திறனும் இணைந்து நுஃமானின் கலை மற்றும் பண்பாட்டு ஆளுமையைச் செதுக்கியுள்ளன.

1950-களின் பிற்பகுதியில் அவர் எட்டு ஒன்பதாம் வகுப்பு படிக்கின்ற காலப்பகுதியில்

கவிதை எழுதத் தொடங்கினார். அப்போது தினகரன் பத்திரிகையில் ஒவ்வொரு புதன்கிழமையும் 'புதன் மலர்' என்று இளைஞர்களுக்கான ஒரு பகுதி வெளிவரும். அதில் வெளி வரும் ஆக்கங்கள் போல தானும் எழுதினார். அவர் முதலாவது எழுதிய கவிதை வெண்பா. அது 1962-இல் அவரது பதினெட்டாவது வயதில் வீரகேசரி பத்திரிகையில் வெளிவந்தது. அக்காலத்தில் மஹாகவி ஈற்றடி கொடுத்து வெண்பாப் போட்டி நடத்திக் கொண்டிருந்தார். 'நெஞ்சமே நஞ்சுக்கு நேர்' என்ற ஈற்றடிக்கு எழுதிய வெண்பா அது. அன்று முதல் 1962 - 1963 ஆண்டுகளில் அவரது கவிதைகள் ஈழத்துப் பத்திரிகைகள் சஞ்சிகைளில் அடிக்கடி வெளிவரத் தொடங்கின. அவர் பல கவியரங்குகளில் பங்குபற்றினார். அவருடைய கவிதைகளுக்கு நீலவாணன், மஹாகவி ஆகியோருடைய அங்கீகாரமும் கிடைத்தது.

1963 ஒகஸ்டில் எஸ் பொன்னுத்துரை மட்டக்களப்பில் பெரியளவில் ஒரு தமிழ் விழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். அதில் இளம் கவிஞர்களுக்கான கவியரங்கு மஹாகவி தலைமையில் இடம்பெற்றது. அதில் நுஃமானும் கலந்து கொண்டார். 'வாக்கினிலே ஒளியுண்டாகும்' தலைப்பில் நுஃமான் கவிதை வாசித்தார். அவரது கவிதை பலரதும் பாராட்டையும் பெற்றது. எழுத்தாளர் நாடக ஆசிரியர் ஏ.ரி. பொன்னுத்துரை, மு. தளையாசிங்கம் ஆகியோர்கள் அவரது கவிதையுலகை முழுமையாக தரிசித்து அவருக்கு ஓர் அடையாளத்தைக் கொடுத்தார்கள். அது அவருக்கு தொடக்க காலத்தில் கிடைத்த வெற்றி எனலாம்.

பாடசாலைக் காலத்தில் அவருக்கு மூன்று ஆசிரியர்களான குணரத்தினம், செபரெத்தினம், ஞானரெத்தினம் ஆகியோர் ஆதர்சமாக இருந்தார்கள். நுஃமான் அவர்கள் இவர்கள் மூவரையும் இரத்தினங்களாக மதித்து வந்தார். குணரெத்தினம். ஞானரெத்திரனம் ஆகிய இருவரும் அவருக்கு தமிழ் படிப்பித்தவர்கள். 'கம்பராமாயாணம், கும்பகர்ணன் வதைப்படலம்' முழுப்பாடல்களும் தேசிக விநாயகம் பிள்ளையின் 'மலரும் மாலையும்' தொகுப்பி லுள்ள பல பாடல்களும் மனப்பாடமாக இருந்ததற்கு இவர்களுடைய கற்பித்தலே காரணம் எனலாம். எட்டு ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் போது அவர் எழுதிய சில கவிதைகளை ஆசிரியர் ஞானரெத்தினம் அவர்கள் அவருக்குத் திருத்திக் கொடுத்துள்ளார். அவர் பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் காலத்தில் அதிகம் மனங்கவர்ந்த ஒருவராக பேராசிரியர் சுசீந்திரராஜா மதிக்கப்படுகின்றார். அவர் அடக்கமான, ஆர்ப்பாட்ட மில்லாத மொழியியல் அறிஞர் அவர். தீவிரமான ஆய்வாளர். ஆராய்ச்சியின் நுட்பங்களையும், ஆய்வு மொழியின் செம்மைகளையும் அவரிடமிருந்துதான் கற்றார்.

அவர் சமூக இயக்க நடவடிக்கைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கண்டி ஃபோறம் என்ற அமைப்பின் ஊடாக கண்டியில் நிலவிய சமகால பிரச்சினைகளின்போது பல்கலைக்கழக சமூகமும், கண்டி நகரிலுள்ள சிவில் சமூக அமைப்புகளும் ஒன்றிணைந்து இயங்கினார்கள். இதன் போது வில்பத்து தொடர்பில் அவரது நண்பர் பேராசிரியர் ஹஸ்புல்லா எழுதிய நூலை வெளிக்கொணர்தல், புதிய அரசியல் யாப்புத் திருத்தம், முஸ்லிம் விவாக, விவாகரத்து திருத்தச் சட்டம், இனப்பிரச்சினை தொடர்பான கண்டி ஃபோறம் வெளியிட்ட அறிக்கைகளில் நுஃமான் அவர்களு டைய பங்களிப்பு அளப்பரியது. அது தற்போதும் அரச மட்டங்களில் பேசுபொருளாகக் காணப்படுகின்றன.

## கல்வி மற்றும் பாடத்திட்ட மேம்பாட்டுப் பணிகளில் எம்.ஏ. நுஃமானின் பங்களிப்பு:

எம்.ஏ. நுஃமான் அவர்கள் இலங்கையின் உயர்கல்வித் துறையில், குறிப்பாகத் தமிழ் மொழிப் பாடத்திட்ட மேம் பாட்டில் மிக முக்கியமான ஆலோசகராகப் பணியாற்றி யுள்ளார். 1995 - 1996 காலப்பகுதியில் தேசிய கல்வி நிறுவனம் மற்றும் உயர்கல்வி அமைச்சின் பாடத்திட்ட மேம் பாட்டுத் திட்டங்களில் தனது பங்களிப்பை வழங்கிய அவர், 1997 முதல் 2001 வரை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்க ழகத்தின் மொழிகள் துறைக்கான கல்வி ஆலோசகராகவும் கடமையாற்றினார். மேலும், 2007-ஆம் ஆண்டில் அதே பல் கலைக்கழகத்தின் தமிழ் மொழிப் பாடத்திட்டத்தைத் திருத் தியமைப்பதற்கான 'IRQUE' திட்டத்தின் கீழ் ஆலோசகராகச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறாகத் தேசிய மட் டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் தமிழ் மொழிப் பயிற் றுவிப்பு முறையியலை நவீனப்படுத்துவதில் அவரது ஆலோ சனைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

## தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களில் எம்.ஏ. நுஃமானின் கல்விசார் பங்களிப்புகள்:

கல்வித் துறையில் உன்னத நிலையை எட்டிய எம்.ஏ. நுஃமான், தனது ஆளுமையின் மூலம் பல்வேறு அரச மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் முக்கியப் பொறுப்புகளை வகித்துச் சேவையாற்றியுள்ளார். குறிப்பாக, 1995 முதல் 2007 வரை தேசிய கல்வி நிறுவனம், உயர்கல்வி அமைச்சு மற்றும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகிய வற்றின் பாடத்திட்ட மேம்பாட்டுத் திட்டங்களில் (IRQUE உட்பட) ஆலோசகராகப் பணியாற்றினார். 2010-இல் மும்மொழி இலங்கைத் திட்டத்திற்கான ஜனாதிபதி ஆலோசனைக் குழு உறுப்பினர், இலங்கை அலுவலக மொழிகள் ஆணைய உறுப்பினர் (2010-2011) மற்றும் தேசிய மொழி ஆணையத்தின் தமிழ் தொழினு ட்பக் கலைச்சொல் திருத்தல் குழு உறுப்பினர் (1999-2002) என மொழிக் கொள்கை சார்ந்து குறிப்பிடத்தக்கப் பங்களிப்புகளை வழங் கியுள்ளார். மேலும், கொழும்பு மற்றும் கண்டியில் உள்ள சர்வதேச இனத்துவ ஆய்வு மையங்களின் (ICES) இயக்கு நர்கள் சபை மற்றும் ஆலோசனைக் குழுக்களிலும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமகால இந்திய ஆய்வு மையத்திலும் (2012) உறுப்பினராக இருந்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட இதழின் ஆசிரியர் குழுவிலும், 'நேத்ரா' மதிப்பாய்வுக் குழுவிலும் பணியாற்றிய இவரது கல்விசார் பணிகள், ஒரு தனிமனி தனின் உழைப்பிற்கும் மேலாக ஒரு நிறுவனத்தின் வீச்சுக்கு இணையானவை எனலாம்.

## சமூக, அரசியல் மற்றும் ஊடகத் தளங்களில் எம்.ஏ. நுஃமானின் வகிபாகம்:

எம்.ஏ. நுஃமான் அவர்கள் கல்விப்புலத்திற்கு அப்பால், நாட்டின் அரசியல் மற்றும் கலாசாரக் கட்டமைப்புச் சார்ந்த

உயர்மட்டக் குழுக்களிலும் ஆளுமை மிக்கப் பங்களிப்புகளை வழங்கியுள்ளார். குறிப்பாக, 2000-ஆம் ஆண்டில் அரசியலமைப்பு விவகார அமைச்சின் சீர்திருத்தத்திற்கான ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், 1998 முதல் இன ஒருங்கிணைப்பு அமைச்சின் உத்தி மற்றும் ஆராய்ச்சிக் குழு உறுப்பினராகவும் பணியாற்றித் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணிகளில் தடம் பதித்தார். கலை மற்றும் ஊடகத் துறையைப் பொறுத்தவரை, 1994-1997 காலப்பகுதியில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் இயக்குநர்கள் சபையிலும், பல்வேறு காலகட்டங்களில் இலங்கை கலைமன்றத்தின் தமிழ் இலக்கியக் குழுவிலும் உறுப்பினராக இருந்து கலைத்துறையை நெறிப்படுத்தினார். சர்வதேச அளவில், இந்தியாவின் பாண்டிச்சேரி மொழியியல் மற்றும் கலாசார நிறுவனத்தின் (PILC) திராவிட ஆய்வுகள் இதழின் ஆசிரியர் குழுவில் (1999) பணியாற்றியமை அவரது புலமைத்துவ வீச்சை உறுதிப்படுத்துகிறது. இத்தகைய பன்முகப்பட்ட சேவைகளின் ஊடாக, இலங்கையின் கல்வி மறுமலர்ச்சிக்கும் நவீன சிந்தனை மாற்றங்களுக்கும் வித்திட்ட ஒரு முன்னோடியாக அவரை அடையாளப்படுத்த முடியும்.

## சர்வதேச மற்றும் தேசிய மட்டத்திலான மாநாடுகள் மற்றும் கருத்தரங்கப் பங்களிப்புகள்:

- **சர்வதேச மாநாடுகள் மற்றும் உலகளாவிய பங்களிப்பு:**

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா மற்றும் லண்டன் எனப் பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார்.

மலாயா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ் கலாசாரத்தின் 10-வது சர்வதேச மாநாடு (2007) மற்றும் வல்லினம் பதிப்பகம் நடத்திய இளம் எழுத்தாளர்களுக்கான மொழியியல் பட்டறை (2012) முதலானவை மலேசியாவில் இவருக்குப் பெயரையும் புகழையும் ஈட்டித்தந்தன.

இவர் இந்தியாவில் நடைபெற்ற பல முக்கியமான மாநாடுகளில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். குறிப்பாக சாஹித்திய அகாடமியின் காமன்வெல்த் சர்வதேச கருத்தரங்கில் (2010) பங்கேற்றுள்ளார். மேலும் தமிழ்ப் பல்கலைக்கழகம் (தஞ்சாவூர்) ஏற்பாடு செய்த மொழியியல் மாநாடுகளில் (1986, 1988) கலந்து கொண்டதுடன், மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் நடத்திய இலக்கிய விமர்சனக் கருத்தரங்குகளில் (1987, 1998) பங்கேற்றுள்ளார். அதோடு, சென்னையில் நடைபெற்ற ‘தமிழ் இனி 2000’ மாநாட்டிலும் கலந்து கொண்டு தன் அறிவுப் பங்களிப்பைச் செய்துள்ளார்.

மேற்கத்தேய நாடுகளில் நடைபெற்ற ஆய்வு மாநாடுகளிலும் கலந்து கொண்டு மொழியை வளர்த்த பேரறிஞராகவும் எம்.ஏ. நுஃமான் காணப்படுகின்றார். கனடாவின் டொரொண்மோ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ் ஆய்வுகள் மாநாடு (2009) மற்றும் லண்டனில் நடைபெற்ற 19வது ஐரோப்பிய தமிழ் இலக்கிய மாநாடு (1994) போன்றன இதற்குச் சான்று பகர்கின்றன.

- **சார்க் (SAARC) மற்றும் பிராந்திய மட்டத்திலான பங்களிப்பு:**

தெற்காசிய நாடுகளுக்கிடையிலான கலாசாரப் பரிமாற்றங்களில் முக்கிய பங்காற்றியுள்ளார். புது தில்லி மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களில் நடைபெற்ற சார்க் எழுத்தாளர்கள் மற்றும் விமர்சகர்கள் மாநாடுகளில் (2000, 2005) கலந்துகொண்டு ஈழத்து இலக்கியத்தின் தனித்துவத்தைப் பறைசாற்றினார்.

- **மொழியியல் மற்றும் மொழிபெயர்ப்பு ஆய்வுகள்:**

மொழியியல் நுட்பங்கள் மற்றும் மொழிபெயர்ப்பு நடைமுறைகள் குறித்த ஆய்வுகளில் இவர் முன்னோடியாகத் திகழ்கிறார். பேராதனைப் பல்கலைக்கழகம் (2002, 2006) மற்றும் கொழும்பு காமன்வெல்த் சங்கம் (1995) நடத்திய சர்வதேச மொழிபெயர்ப்பு மாநாடுகளில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. மேலும், தமிழில் கலைச்சொல்லாக்கம் மற்றும் அகராதியியல் குறித்த பயிற்சிப் பட்டறைகளிலும் (தஞ்சாவூர் 1986, கர்நாடகா 1985) பங்கேற்றுத் தமிழ் மொழியின் நவீனமயமாக்கலுக்கு வித்திட்டார்.

- **உள்நாட்டுப் பல்கலைக்கழக மற்றும் ஆய்வு நிறுவனப் பணிகள்:**

இலங்கையின் பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகங்கள் நடத்திய வருடாந்த ஆராய்ச்சி மாநாடுகளில் முதன்மை ஆய்வாளராகப் பங்கேற்றுள்ளார். இன ஒருங்கிணைப்பு, பன்மைத்துவ சமூகத்தில் சகவாழ்வு (ICES, 2008) மற்றும் தமிழ் ஒரு அதிகார பூர்வ மொழி (திருகோணமலை, 1998) போன்ற சமூக முக்கியத்துவம் வாய்ந்த கருத்தரங்குகளில் இவரது ஆலோசனைகள் முக்கியத்துவம் பெற்றன.

நாட்டுப்புறவியல், தொல்காப்பிய ஆய்வு, நவீன இலக்கிய விமர்சனம் மற்றும் மொழியியல் எனப் பன்முகத் தளங்களில் இவர் ஆற்றிய இந்தப் பயணங்கள், நுஃமான் அவர்களை ஒரு சர்வதேசத் தரம் வாய்ந்த அறிவுஜீவியாக நிலைநிறுத்தியுள்ளன. இத்தகைய விரிவான அனுபவப் பின்னணியே அவரை ஒரு நவீன சிந்தனை மாற்றத்திற்கான வழிகாட்டியாக மாற்றியுள்ளது.

## மொழிபெயர்ப்பு பணியும் சமூக நல்லிணக்கத்திற்கான முனைப்பும்:

இலங்கையில் மூன்று தசாப்த காலங்களாக நீடித்த போர்ச் சூழலில், தமிழ் மொழியியலைச் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளோடு இணைத்துப் பார்க்கும் ஒரு பரஸ்பரப் புரிதலை ஏற்படுத்தியதில் நுஃமான் அவர்களின் தலைமைத்துவம் மிக முக்கியமானது. அவரது மொழிபெயர்ப்புப் பணிகள் உலகளாவிய கலை, கலாசார மற்றும் அரசியல் விழுமியங்களைத் தமிழ் வாசகப் பரப்புக்குக் கொண்டு வந்தன. குறிப்பாக, 1981-இல் பலஸ்தீனக் கவிதைகள், 2008-ஆம் ஆண்டு முஹமட் தர்விஸ் கவிதைகள் முதலான மொழிபெயர்ப்பு நூல்களை வெளிக்கொணர்ந்த நுஃமான்




2012-இல் மலேசியக் கவிஞர்களான லத்தீஃப் மொஹிதீனின் ‘காற்றில் மிதக்கும் சொற்கள்’, சைறில் அன்வரின் ‘இரவின் குரல்’ ஆகிய மொழிபெயர்ப்பு கவிதை நூல்களையும் வெளியிட்டார். இவை மட்டுமன்றி, ஃபரீதா ஷாஹித்தின் ‘கட்டுப்பாடு அல்லது சுயாதீனம்’ (2004), ‘இன முரண்பாடும் வரலாற்றியலும்’ (2000), மற்றும் ‘முஸ்லிம் பெண்களும் அரசியல் தலைமைத்துவமும்’ (1999) போன்ற ஆய்வு ரீதியான மொழிபெயர்ப்புகள் மூலம் அரசியல், சமூகம் மற்றும் பெண்ணியம் சார்ந்த நவீனச் சிந்தனைகளை வெளிக்கொணர்ந்தார். இத்தகைய பன்முக மொழி ஆற்றல் மிக்கப் பணிகள், வெறும் மொழிமாற்றமாக அமையாமல் பல்லின சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வையும் கூட்டுறவையும் ஏற்படுத்தும் ஒரு பண்பாட்டுப் பாலமாகத் திகழ்கின்றன.

## எம்.ஏ. நுஃமானின் கல்வி அனுபவமும் கல்விமுறை குறித்த விமர்சனப் பார்வையும்:

பதினைந்து ஆண்டுகள் பாடசாலை ஆசிரியராகவும், முப்பத்து மூன்று ஆண்டுகள் பல்கலைக்கழகப் பேராசிரியராகவும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைச் செதுக்கிய நீண்ட அனுபவம் கொண்ட எம்.ஏ. நுஃமான், கல்விப்புலத் தோல்விகளுக்காக மாணவர்களைக் குறை கூறாமல் நாட்டின் கல்வி முறையையே விமர்சனத்திற்குள்ளாக்குகிறார். தனது ‘முற்றுப்பெறாத விவாதங்கள்’ (2023) எனும் நூலில், இலங்கையின் கல்விமுறை மாணவர் மையமானதோ அல்லது அறிவுசார்ந்ததோ அல்ல, மாறாக அது வெறும் ‘பரீட்சை மையக் கல்விமுறை’ மட்டுமே என்பதை அவர் ஆணித்தரமாகப் பதிவு செய்துள்ளார். இத்தகைய முறையினால் சுயசிந்தனையும் விமர்சனப் பார்வையும் கொண்ட ஆளுமைமிக்க மாணவர்களை உருவாக்க முடியாது என அவர் அன்று முன்வைத்த கருத்துக்கள், இன்று பிரதமர் ஹரிணி அமரசூரிய அவர்களால் முன்னெடுக்கப்படும் நவீன கல்விச் சீர்திருத்தங்களுக்கான அவசியத்தையும் அதன் தர்க்கரீதியான தேவையையும் உறுதிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

## முடிவுரை:

பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் அவர்கள், தமிழ் இலக்கிய உலகில் வெறும் ஆய்வாளராக மட்டுமன்றி, ஒடுக்குமுறைக்கு எதிரான 'எதிர்ப்பு இலக்கியத்தின்' வீரியமிக்கக் குரலாகவும், 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி' வழி செம்மையான மொழி வடிவத்திற்கும் நவீனச் சொல்லாக்கங்களுக்கும் வித்திட்ட பேரறிஞராகவும் திகழ்கின்றார். எத்தகைய இடர்கள் வரினும் தனது கொள்கையிலும் கல்விச் சேவையிலும் நேர்மையையும் பணிவையும் ஒருங்கே கடைபிடித்த இவர், வெறும் மதிப்பெண்களுக்காக அன்றி அறிவின் தேடலுக்காகக் கல்வியைப் பயில வேண்டும் என்பதற்கும், உண்மையை உரத்துச் சொல்லத் தயங்கக் கூடாது என்பதற்கும் இன்றைய இளம் கல்வியாளர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்குகிறார். கவிதைகள், ஆய்வுகள், மொழிபெயர்ப்புகள் மற்றும் உலகளாவிய கல்விப் பணிகள் எனப் பரந்து விரிந்த இவரது பங்களிப்பு, தமிழ் இலக்கிய வரலாற்றில் அதிஉச்ச நிலையில் வைத்துப் போற்றத்தக்கது. மனித அவலங்களுக்குத் தீர்வுகாணும் சிந்தனை வெளிச்சங்களைத் தனது பேனா முனையால் விதைத்து, அதன் அறுவடையை மண்ணில் நிலைநிறுத்திய ஒரு பேராளுமையாக எம்.ஏ. நுஃமான் அவர்கள் என்றும் நிலைத்திருப்பார்.



Iqbal.ali@thaiveedu.com

# பன்முகக் கலை ஆளுமை
## கமலினி செல்வராசன்



> செல்வராசன்-கமலினி குடும்பத்தினர் கொழும்பில் வாழ்ந்த வீடு, ஒரு காலத்தில் எழுத்தாளர்கள், இசைக் கலைஞர்கள், தமிழ் இலக்கிய வாதிகள், திரைப்படத் துறையினர், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் ஒன்று கூடும் கலகலப்பான கலைக்கூடமாக காட்சியளித்தது. செல்வராசனின் மறைவுக்குப் பின்னர், கமலினி அந்த இல்லத்தைத் தேசிய நினைவில்லமாக்குவதற்கு முயற்சி செய்த போதிலும், அம்முயற்சி கைகூடாமல் போய்விட்டது.

**– வே. விவேகானந்தன்**

*thanavishnu@gmail.com*

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில், வட மராட்சிப் பிரதேசத்தில், தென்புலோலியூர் என்னும் பதியில், தமிழ் வித்துவப் பரம்பரையில் வாழ்ந்துவந்த, இலக்கியவாதியும் எழுத்தாளருமான பண்டிதர் மு. கணபதிப்பிள்ளை தனபாக்கியம் இணையருக்கு மூத்த மகளாக, கமலினி 1954-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையார், இலங்கை அரசகரும மொழித் திணைக் களத்தில் பணியாற்றிக்கொண்டு, கொழும்பில் வாழ்ந்து வந்தமையால், கமலினி தனது ஆரம்பக் கல்வியை கொள்ளுப் பிட்டி சென். அந்தனிஸ் பாடசாலையில் கற்றார். பம்பலப் பிட்டி சென். கிளயர்ஸ் மகளிர் பாடசாலையில் உயர்தரக் கல்வியைக் கற்ற அவர், களனிப் பல்கலைக்கழகத்திலே, தொடர்பூடகவியலில் 'நாட்டுக் கூத்துக் கலைகள்' பற்றிய ஆய்வினை மேற்கொண்டு, பட்டப்படிப்பினை நிறைவு செய்தார். பாடசாலை மாணவியாகப் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே பேச்சுப் போட்டி, மற்றும் இசை, நாடக நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றி சக மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

கமலினி அவர்கள் வாழ்ந்த அகச்சூழல், மிக இளமையிலேயே அவர் இயல், இசை, நாடகம் என முத்தமிழிலும் ஆர்வம் கொள்ளும் வகையில் அமைந்தது. அவரது தந்தையார் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்றவராகவும், இலக்கணச் சுவையோடு இலக்கியம் படைக்கும் ஆற்றல் மிக்கவராகவும் விளங்கினார். இலங்கை வானொலியிலும், இலக்கிய மேடைகளிலும், இலக்கிய நூலுருவாக்கத்திலும் ஆர்வத்துடன் செயற்பட்டார். அத்துடன் தமிழ் இலக்கண ஆய்வுகளை மேற்கொள்வதும், அவற்றைப் பத்திரிகைகளில் வெளியிடுவதும், நூல்களைத் தொகுப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டார். தாயார் தனபாக்கியம் இசையில் ஆர்வம் கொண்டு, வயலின் வாசிப்பத்தில் புகழ்மிக்கவராக விளங்கினார். தந்தையின் தமிழ் ஆர்வமும், தாயின் இசை ஞானமும் சேர்ந்த கமலினியின் அகவாழ்க்கை கலைத் துறை சார்ந்த வாழ்க்கையாக மலர்ந்தது. இலங்கை வானொலியில் இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்களிப்புச் செய்துகொண்டிருந்த பண்டிதர் மு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு பல்கலை வேந்தன் சில்லையூர் செல்வராசன் நெருங்கிய நண்பரானார். 1970-ஆம் ஆண்டளவில், அவர் எழுதிய 'ஈழத்து தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சி' என்னும் நூலுக்கு பண்டிதர் முன்னுரை எழுதி சிறப்பித்தார். களனிப் பல்கலைகழகத்திலே நாட்டுக் கூத்துக் கலைகள் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட தனது மகள் கமலினிக்கும் அறிமுகம் செய்து வைத்தார். ஆய்வு முயற்சியில் பேருதவி புரிந்த செல்வராசன்மேல் கமலினி பெருமதிப்புக் கொண்டிருந்தார். காலப் போக்கில் அது படிப்படியாய் பாசமாய், நேசமாய், காதலாய் மாறியது. இறுதியில் ஏற்கனவே திருமணம் செய்து நான்கு



**‘பட்டப்படிப்பை நிறைவு செய்த கமலினி அவர்கள், ஆசிரியையாகத் தனது பணியை ஆரம்பித்த போதிலும் அப் பணியில் நீண்ட காலம் நிலைக்கவில்லை. அவரது ஊட கக்கலை ஆர்வம் தேசிய ரூப வாகினி தொலைக்காட்சி, இலங்கை வானொலி என்பவற்றை நோக்கி வழிப்படுத்தியது. அதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில், நாடறிந்த அறிவிப்பா ளராகவும், இலக்கியவாதியாகவும், நடிகையாகவும் கலையு லகில் வலம் வந்தார்.’**

பிள்ளகளின் தந்தையான செல்வராசனை பெற்றோர் உறவி னர்களின் எதிர்ப்பின் மத்தியில் திருமணம் செய்து கொண் டார்.

பட்டப்படிப்பை நிறைவு செய்த கமலினி அவர்கள், ஆசிரியை யாகத் தனது பணியை ஆரம்பித்த போதிலும் அப்பணியில் நீண்ட காலம் நிலைக்கவில்லை. அவரது ஊடகக்கலை ஆர்வம் தேசிய ரூபவாகினி தொலைக்காட்சி, இலங்கை வானொலி என்பவற்றை நோக்கி வழிப்படுத்தியது. அதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில், நாடறிந்த அறிவிப்பாளரா கவும், இலக்கியவாதியாகவும், நடிகையாகவும் கலையுலகில் வலம் வந்தார்.

வானொலியில், அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதி, ஜோர்ஜ் சந்திரசேகரன் தயாரித்த ‘தலைமுறை இடைவெளி’, ‘வெள் ளோட்டம்’ ஆகிய நாடகங்களில் அவர் கதாநாயகியாக நடித்தார். சில்லையூர் செல்வராசன் எழுதிய ‘தணியாத தாகம்’ என்ற வானொலித் தொடர் நாடகத்தில், குடும்பத்தின் இளைய மகளாக நடித்துப் புகழ் பெற்றார். அத்தொடர் நாடகத்தில் செல்வராசன் இயற்றி, செல்வராசனுடன் கமலினியும் இணைந்து பாடிய ‘அத்தானே அத்தானே, எந்தன் ஆசை அத்தானே, கேள்வி ஒன்று கேட்கலாமா உன்னைத்தானே?’ என்ற பாடல், பட்டிதொட்டி எங்கும் பரவி, இலங்கையில் மட்டு மன்றி தமிழகத்து மக்கள் மனதையும் கவர்ந்தது. கணவனும் மனைவியுமாக இணைந்து காதலர்களாக நடித்த, ‘கோமா ளிகள்’ என்ற நகைச்சுவைத் தொடர் நாடகம், சினிமாவாக எடுக்கப்பட்டபோது, அதில் கமலினி பிரதான பாத்திரமேற்று நடித்தார்.

அத்திரைப்படம் இலங்கை இரசிகர்களிடையே பெரும் வர வேற்பைப் பெற்றிருந்தது. சந்திரன் ரத்தினம் அவர்கள் இயக்கி, செல்வராசனின் மகன்மாரும் கமலினியும் இணைந்து நடித்த ‘ஆதர கதாவ’ என்னும் சிங்களத் திரைப்படத்தில் தமிழ்ப் பெண்ணாகக் கமலினி பாத்திரமேற்று நடித்தார். இன முரண்பாடு உச்சத்தில் இருந்த காலப்பகுதியில் தமிழ் சிங்கள உறவை சித்தரிக்கும் படமாக இது விளங்கியது.

ரூபவாகினியில் ஒளிபரப்பான அருணா செல்லத்துரையின் நெறியாள்கையில், கே.எஸ். பாலசந்திரன் எழுதிய ‘திருப் பங்கள்’, எஸ். ராம்தாஸ் அவர்களின் ‘எதிர்பாராதது’, வரணி யூரான் என்னும் புனை பெயரைக் கொண்ட எஸ்.எஸ். கணேச பிள்ளை அவர்கள் எழுதிய ‘சமூக சேவகி’, போன்ற பல தொலைக்காட்சி நாடகங்களில் கமலினி நடித்துத் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றிருந்தார்.

இலங்கை வானொலியில் பணியாற்றிய காலப்பகுதியில், மக்கள் வங்கியின் பிரசார நிகழ்ச்சிகள், மங்கையர் உலகம், உரைச் சித்திரம் போன்ற பல நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார். ரூபவாகினி தொலைக்காட்சியில் பணியாற்றியபோது, காலையில் சிங்கள மொழியில் நடத்தப் பெற்ற ‘ஆயுபோவன்’ என்ற நிகழ்ச்சியைத் தமிழில் ‘காலை வணக்கம்’ என்னும் பெயரில் நடத்தினார். ஐ.ரி.என் தொலைக்காட்சியில் தேசிய லொத்தர் சபையின், அதிஸ்டலாபச் சீட்டினது வாராந்த முடிவுகளை அறிவிக்கும் நிகழ்ச்சியிலும், அவ்வப்போது செய்தி வாசிப்பதிலும் ஈடுபட்டார். பெரும்பாலான மேடை நிகழ்ச்சிகளில் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் தொகுப் பாளராகவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

இலங்கையில் மட்டுமன்றி ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும், எமது மரபுக் கலைகளில் ஒன்றான நாட்டுக் கூத்தைப் பரப்பும் பணியிலும் ஈடுபட்டார். குறிப்பாக, 2010-ஆம் ஆண்டு நோர்வே நாட்டின் தமிழ் ஒபரே கலை மன் றத்தின் வேண்டுகோளுக்கிணங்க, அங்கு சென்று ஏறக் குறைய ஓர் ஆண்டு காலம் இளையோருக்கு நாட்டுக் கூத்தைப் பயிற்றுவித்து, அரங்கேற்றி ஊக்குவித்தார். அதற் காக அம்மன்றம் கௌரவ விருது வழங்கி சிறப்பித்தது. கமலி னியின் ஏறக்குறைய நாற்பது வருட கலைப் பணியைப் பாராட்டி, இலங்கை அரசும் பல்வேறு கலை இலக்கிய அமைப்புகளும், விருதுகளையும் பாராட்டுகளையும் வழங்கி மதிப்பளித்துள்ளன.

1995-ஆம் ஆண்டு நாட்டுக் கூத்துக் கலைக்கு அவர் ஆற்றிய பணிக்காக, இலங்கை கலாசார அமைச்சு விருது வழங்கிப் பாராட்டியது. 2008-ஆம் ஆண்டு கொழும்பு றோயல் கல்லூரி கமலினியின் நாடகத்துறைப் பணியைப் பாராட்டி மதிப்ப ளித்தது. இலங்கை இளைஞர் நற்பணி மன்றம் அவரது 35 வருட கால கலைச் சேவையைப் பாராட்டி, கொழும்பு விவேகா னந்தா சபை மண்டபத்தில் விருது வழங்கிப் பெருமை கொண்டது.

1995-ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14-ஆம் திகதி, கணவர் செல்வராசன் மறைந்த பின்னர், பல்வேறு சவால்களையும் சமாளித்து, கொழும்பில் தொடர்ந்து வாழ்ந்து வந்தார். அப்போது கணவரின் ஆக்கங்கள், படைப்புகள் என்ப வற்றைத் தேடிச் சேகரித்து, ‘தேர்ந்தெடுத்த கவிதைகள் வரிசையில் சில்லையூர் செல்வராசன் கவிதைகள்’ தொகுதி-1

என்ற தொகுப்பு நூலை 1997-ஆம் ஆண்டு வெளியிட்டார். அந்த நூலில் சில்லையூரின் கவியரங்கப் பாடல்கள், தேச பக்திப் பாடல்கள், புலவன் மனங்கவர்ந்த பொன்னாடுகள், அகம்-புறம், அங்கதம், கவிஞனின் தத்துவம், பெண்மை, இசைப்பாடல்கள், பரிவும்-பிரிவும், நெடும்பா, மொழிபெயர்ப்பு பாடல்கள், என அத்தியாயங்களாக வகுத்து, அழகுற வெளி யிட்டார். அத்துடன் செல்வராசனின் உள்நாட்டு, வெளிநாட்டு இலக்கிய சந்திப்புகள் தொடர்பான புகைப்படங்கள், மற்றும் அவரது பெற்றோர், பிள்ளைகள் மனைவி ஆகியோரின் படங்க ளையும் இணைத்துள்ளார்.

செல்வராசன் - கமலினி குடும்பத்தினர் கொழும்பில் வாழ்ந்த வீடு, ஒரு காலத்தில் எழுத்தாளர்கள், இசைக் கலைஞர்கள், தமிழ் இலக்கியவாதிகள், திரைப்படத் துறையினர், ஊடகவிய லாளர்கள் எனப் பலரும் ஒன்று கூடும் கலகலப்பான கலைக்கூ டமாக காட்சியளித்தது. செல்வராசனின் மறைவுக்குப் பின்னர், கமலினி அந்த இல்லத்தைத் தேசிய நினைவில்லமாக்குவ தற்கு முயற்சி செய்த போதிலும், அம்முயற்சி கைகூ டாமல் போய்விட்டது. அடுத்ததாக பொரளை கனத்தை மயானத்தில் செல்வராசனுக்கு ஒரு நினைவுச் சின்னத்தை அமைப்பதற்கு எடுத்த முயற்சி நிறைவேறியது. அப்போது கொழும்பு மேயராக இருந்த கே. கணேசலிங்கம், மற்றும் கனத்தை மயான பரிபாலகர் சானக பெரேரா ஆகியோரின் ஒத்துழைப் புடன், புல்லுமலை நல்லரத்தினம் செதுக்கிய நினைவுச் சிற் பம் நிறுவப்பட்டு, அவர்களின் பிரசன்னத்துடன் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இம்முயற்சி கமலினிக்கு மட்டுமன்றி கலை இலக்கிய ஆர்வலர்களுக்கு ஆன்ம திருப்தியைக் கொடுத்தது.

தமிழுக்காகவும் கலைக்காகவும் தன் கணவனுக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, கலை, இலக்கியம், வானொலி, தொலைகாட்சி, திரைப்படம் என அனைத்து துறை களிலும், புகழுடன் வலம் வந்த கமலினி, ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் அறிவிப்பாளராகப் பணியாற்றிய ரூபவாகினி தொலைகாட்சி நிறுவனத்தினால் 2009-ஆம் ஆண்டு திடீர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். அதனால் மன அழுத்தத் துக்கு உள்ளான அவர், பின்னாளில் மறதி நோயால் பாதிக் கப்பட்டு துயரமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தார். இச் செய்தியை 'ரவிரச' என்ற சிங்களப் பத்திரிகை, அவரது ஒரே மகன் அதிசயனுடன் செய்த நேர்காணல் மூலம் வெளிக்கொ ணர்ந்தது. மறதி நோயுடன் மகனின் அரவணைப்பில் சிலகாலம் வாழ்ந்த கமலினி, 2015-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07-ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது தன்னல மற்ற கலைப் பணியை கலையுலகம் என்றும் நினைவு கூரும்.



vivekananthan.v@thaiveedu.com


# ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்

நடத்தும்

## இணையவழிக் கலந்துரையாடல்



நாள் : 27 மார்ச் வெள்ளிக்கிழமை 2026

நேரம் : இரவு 8:00 - 10:00 மணி (கனடா ரொறன்ரோ)

நாள் : 28 மார்ச் சனிக்கிழமை 2026

நேரம் : காலை 12:00 - 2:00 மணி (இலண்டன்)
காலை 5:30 - 7:30 மணி (இலங்கை, இந்தியா)
காலை 11:00 - 1:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி)

"கனடாவில் தமிழ் மரபுக் கவிதைகள்"
- உள்ளடக்கங்களும் உணர்த்துமுறைகளும்"

உரை நிகழ்த்துபவர்: பாவலர் மாவிலி மைந்தன் சி.சண்முகராஜா

**Zoom ID: 84777257162 Passcode: 554268**



# ஃபிடல் காஸ்ட்ரோ

## நூற்றாண்டு

## காஸ்ட்ரோவின் அரசியல் சிந்தனைகள்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**தொடக்கக் குறிப்புகள்:**

இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் உலகைத் திருப்பிக் கவனம் பெற்றோர் மிகச் சிலரே. அதில் ஃபிடல் காஸ்ட்ரோவின் இடம் முதன்மையானது. கிட்டத்தட்ட ஐந்து தசாப்தங்க ளாக, காஸ்ட்ரோ கியூபாவின் தலைவிதியை வடிவமைத்து, கரீபியன் தீவுகளுக்கும் இலத்தீன் அமெரிக்காவுக்கும் அப்பால் உள்ள அரசியல் நீரோட்டங்களில் அவர் செல்வாக்குச் செலுத்தினார். அவரது உருவம் புரட்சி, எதிர்ப்பு, சித்தாந்த உறுதி ஆகியவற்றின் பிரதிவிம்பமாக இருந்தது. மாற்றத்தை, தியாகத்தை, ஏகாதிபத்திய எதிர்ப்பை வலியுறு த்தும் நீண்ட உரைகளுடன் அவரது குரல் நன்கறியப்பட்டது. பலரால் நேசிக்கப்பட்ட, சிலரால் வெறுக்கப்பட்ட காஸ்ட்ரோ, நவீன சகாப்தத்தின் மிகவும் முக்கியமான அரசியல் சிந்தனையாளர்களில், அரங்காடிகளில் ஒருவராக இருந்தார் என்பதை மறுக்க முடியாது.

அவரது அரசியல், முக்கியத்துவமுடையதாக இருந்தபோதிலும், காஸ்ட்ரோவின் அறிவுசார் பங்களிப்புகள் பெரும்பாலும் கியூபப் புரட்சியின் வியத்தகு நிகழ்வுகளாலும் கெடுபிடிப்போரின் புவிசார் அரசியல் பதட்டங்களாலும் மறைக்கப்பட்டுவிட்டன. பல விவாதங்கள் அவரை வெறுமனே ஓர் அடையாளச் சின்னமாகக் குறைக்கின்றன. அவரது ஆதரவாளர்களுக்கு அவர் ஏகாதிபத்திய எதிர்ப்பின் சின்னம், எதிர்ப்பாளர்களுக்கு அவர் சர்வாதிகார அடக்குமுறையின் சின்னம். இங்கே அடிப்படையான சில கேள்வியை நாம் கேட்டாக வேண்டும். அவர், தனது உலகக் கண்ணோட்டத்தை உயிர்ப்பித்த அடிப்படைக் கருத்துகளுடன் போராடாமல், அவை பற்றிய புரிதல் இன்றி எவ்வாறு ஒரு புரட்சியை நடத்தவோ, பின்னர் நாட்டைத் தலைமையேற்று வழிநடத்தவோ முடியும்? ஒரு மனிதர் ஒரு வெகுஜன இயக்கத்தை எவ்வாறு ஊக்குவிக்க முடியும்? ஒரு நாட்டின் அடையாளத்தை எவ்வாறு மறுவடிவமைக்க முடியும்? பல தசாப்தங்களாக பூமியின் மிகவும் சக்திவாய்ந்த நாட்டை எவ்வாறு எதிர்க்க முடியும்?

இந்தக் கேள்விகளைப் புரிந்து கொள்ள, தாடி வைத்த கெரில்லாப் போராளி என்ற உருவத்திற்கு அப்பால் காஸ்ரோவை நாம் பார்க்க வேண்டும். அவரது செயல்களுக்குப் பின்னால் உள்ள சித்தாந்த கட்டமைப்பை ஆராய வேண்டும்.

ஃபிடல் காஸ்ட்ரோவின் அரசியல் சிந்தனை வரலாற்றுச் சூழ்நிலைகள், தத்துவார்த்தத் தாக்கங்கள், தனிப்பட்ட நம்பிக்கைகள், நடைமுறைத் தழுவல்கள் ஆகியவற்றின் சிக்கலான கூட்டாக வெளிப்பட்டன. அவர் பிடிவாதமாக மார்க்சியராகவோ அல்லது வெறும் தேசியவாதியாகவோ

இருக்கவில்லை. ஒரு நடைமுறை மூலோபாய வாதியாகவோ அல்லது வெறுமனே ஓர் இலட் சியவாத கனவு காண்பவராகவோ நடந்து கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக, அவர் ஒரு கலப்பின சித்தாந்தக் கட்டமைப்பை உரு வாக்கினார். இது ஃபிடெலிஸ்மோ என்று குறிப் பிடப்படுகிறது. இது மார்க்சிய லெனினிசம், கியூப தேசபக்தி, ஏகாதிபத்திய எதிர்ப்பு, சமூக மாற்றத்தின் ஆழமான தார்மீகக் கண்ணோட்டம் ஆகியவற்றை இணைத்தது. இந்த சித்தாந்தத் தொகுப்பு நிலையானது அல்ல. புரட்சியைப் போலவே, காஸ்ட்ரோவின் சிந்தனையும் காலப் போக்கில் முதிர்ச்சியடைந்தது. புதிய உலக ளாவிய யதார்த்தங்களை எதிர்கொள்வது, உள் சமூக அழுத்தங்களுக்குப் பதிலளிப்பது, அவரது வெற்றி தோல்விகளிலிருந்து படிப்பினைகளை இணைப்பது ஆகிய அம்சங்களைக் கொண்டி ருந்தது.

காஸ்ட்ரோவின் அரசியல் சிந்தனையை ஆரா யும்போது, கியூபாவின் வரலாற்றுச் சூழலால் அது எவ்வளவு ஆழமாக வடிவமைக்கப்பட்டது என்பதை அடையாளம் காண்பது மிகவும் முக்கியம். பல நூற்றாண்டுகள் நிலைத்த காலனித்துவம், பல தசாப்த கால அமெரிக்கப் பொருளாதார ஆதிக்கம், புரட்சிக்கு முந்தைய சமூகத்தை வரையறுத்த வேரூன்றிய சமத்துவ மின்மை ஆகியன அடிப்படையானவையாகும். 1959-க்கு முன்பு (புரட்சிக்கு முன்பு) இருந்த கியூபா, காஸ்ட்ரோவின் பார்வையில், அதன் சுதந்திரத்தையும் கண்ணியத்தையும் ஆற்ற லையும் இழந்த ஒரு தேசம். பாடிஸ்டா சர்வாதி காரத்தின் கீழ் வேரூன்றியிருந்த ஊழல், அமெ ரிக்கப் பொருளாதார சார்பு, சமூக ஏற்றத் தாழ்வு ஆகியவற்றைப் படிப்படியாக சீர்திருத் தங்கள் மூலம் நிவர்த்தி செய்யவியலாது என்ற அவரது நம்பிக்கையை கியூபாவின் நிலைமை கள் வலுப்படுத்தின. ஒரு பரந்த புரட்சிகர மாற்றம் மட்டுமே கியூப சமூகத்தில் பொதிந் துள்ள அநீதிகளை வேரோடு பிடுங்க முடியும். இந்தப் புரட்சியின் யோசனை - அதன் தேவை, அதன் முறைகள், அதன் தார்மீக தன்மை - அவரது அரசியல் சிந்தனையின் மையமாக மாறியது.

இலத்தீன் அமெரிக்க அடையாளத்தை வடிவ மைத்த பரந்த அறிவுசார், அரசியல் நீரோட்டங் களின் விளைவாகவும் காஸ்ட்ரோ இருந்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கவிஞரும் புரட் சியாளருமான ஜோஸ் மார்டி மீதான அவரது மரியாதை, ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய இறையாண்மை ஆகியவற்றை மையங்கொண்ட தனித்துவமான கியூப மரபில் அவரது சித்தாந் தத்தை அடித்தளமாகக் கொண்டது. கண்ணியம், சுதந்திரம், சமூக நீதி என்பவற்றுக்கான மார்டியின் அழைப்புகள் காஸ்ட்ரோவுக்கு அவர் தனது வாழ்நாள் முழுவதும் பயன்ப டுத்திய ஒரு தார்மீக சொற்களஞ்சியத்தை வழங்கின. இதேபோல், மார்க்சியக் கோட்பாடு முதலாளித்துவ சுரண்டலுக்கான கட்டமைப்பு விளக்கத்தையும் அடக்குமுறை அமைப்பு களைத் தூக்கியெறிவதற்கான ஒரு வரைபடத் தையும் வழங்கியது. இருப்பினும், காஸ்ட்ரோ இந்தக் கருத்துகளை வெறுமனே மரபுரிமை யாகப் பெறுவதில் ஒருபோதும் திருப்தி அடை யவில்லை. அவர் அவற்றைத் தழுவி மறுபரி சீலனை செய்தார். கியூபாவின் தனித்துவமான யதார்த்தங்களுக்குப் பதிலளிக்கக் கூடிய சோச லிசத்தின் மாதிரியை உருவாக்க முயன்றார்.

காஸ்ட்ரோவின் அரசியல் சிந்தனையின் மற் றொரு அத்தியாவசிய பரிமாணம், புரட்சி என்பது ஓர் உயிருள்ள, பரிணாம வளர்ச்சிய டைந்து வரும் செயல்முறை என்ற அவரது கருத்தாகும். புரட்சியை ஒரு தனித்துவமான வரலாற்று நிகழ்வாகக் கருதிய சில மார்க்சியக் கோட்பாட்டாளர்களைப் போலல்லாமல், உண் மையான புரட்சிக்குத் தொடர்ச்சியான விழிப்பு ணர்வு, சித்தாந்தத் தெளிவு, தார்மீக ஒழுக்கம் என்பன தேவை என்று காஸ்ட்ரோ வலியுறுத் தினார். இது அதிகாரத்தைக் கைப்பற்றுவது மட்டுமல்ல, சமூகம், நிறுவனங்கள் மற்றும் கூட்டு நனவின் தொடர்ச்சியான மாற்றம் ஆகும். புரட்சி என்ற கருத்தை கோடிட்டுக் காட்டும் அவரது பிரபலமான 2000-ஆம் ஆண்டு உரையில், காஸ்ட்ரோ நேர்மை, தியாகம், ஒற்றுமை போன்ற மதிப்புகளை வலி யுறுத்தினார் - அரசியல் மாற்றம் நெறிமுறை மாற்றத்திலிருந்து பிரிக்க முடியாதது என்று அவர் எவ்வளவு ஆழமாக நம்பினார் என்பதை அவ்வுரையில் வெளிப்படுத்தினார்.

காஸ்ட்ரோவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு வெறும் அரசியல் உத்தி அல்ல. அது அவரது உலகக் கண்ணோட்டத்தின் ஒரு மூலக்கல்லாகும். அமெரிக்க மேலாதிக்கத்துடனான அவரது வாழ்நாள் மோதல் புவிசார் அரசியல் யதார்த் தங்களால் மட்டுமல்ல, தேசிய இறையாண் மையைப் பாதுகாப்பதற்கான கொள்கை ரீதியான அர்ப்பணிப்பாலும் இயக்கப்பட்டது. இந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடு அவரது சர்வதேசியத்திற்கு நீடிக்கப்பட்டது: ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்கக் கண்டங் களில் விடுதலை இயக்கங்களை ஆதரித்தல், மூன்றாம் உலக ஒற்றுமைக்காக வாதிடுதல், அணிசேரா இயக்கத்தில் பங்கேற்பது ஆகியன இதில் சில. புரட்சிகரப் போராட்டம் உலகளாவி யதும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதும் என்ற அவரது நம்பிக்கையை இந்த நடவடிக் கைகள் பிரதிபலித்தன.



**“ காஸ்ட்ரோவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு வெறும் அரசியல் உத்தி அல்ல. அது அவரது உலகக் கண்ணோட்டத்தின் ஒரு மூலக்கல்லாகும் ”**

இந்தக் கட்டுரை பிடல் காஸ்ட்ரோவின் அரசியல் சிந்த னையை நான்கு முக்கிய பரிமாணங்கள் வழியாக ஆராய்கிறது:

- காஸ்ட்ரோவின் சித்தாந்தத்தின் அறிவுசார் அடித்தளங்கள் - மார்டி, மார்க்சியம், தேசிய வாதம், பிராந்திய வரலாறு ஆகியவற்றை மையப்படுத்திய அவரது உலகக் கண் ணோட்டம்.
- செயல்முறையும் கொள்கையாக புரட்சியும் - புரட்சியை ஒரு தொடர்ச்சியான, தார்மீக, அரசியல் திட்டமாகக் கருதிய காஸ்ட்ரோவின் தனித்துவமான கருத்தாக்கம்.
- ஏகாதிபத்திய எதிர்ப்பும் சர்வதேசியமும் - உல களாவிய அதிகார இயக்கவியல், அவற்றில் கியூபாவின் இடம், அவரது எதிர்ப்பு உத்திகள் பற்றிய அவரது கட்டமைப்பு.
- சமூக மாற்றமும் தார்மீக ஒழுக்கமும் - கல்வி, சுகாதாரம், சமத்துவம், சமூக நெறிமுறைகள் உள்ளிட்ட சோசலிச சமூகம் பற்றிய அவரது பார்வை.

இந்தக் கருப்பொருள்களை ஆராய்வதன் மூலம், காஸ்ட்ரோவின் செயல்களை உயிர்ப்பித்த கருத்து களையும், கியூபாவிற்கும் பரந்த உலகிற்கும் அவர் விட்டுச் சென்ற மரபையும் நாம் நன்கு புரிந்து கொள்ள முடியும். பொதுமைப்படுத்தப்பட்ட சித்தி ரங்கள், அரசியல் துருவமுனைப்புகளுக்கு அப் பால், ஃபிடல் காஸ்ட்ரோ ஓர் ஆழமான சிந்தனை யுள்ள புரட்சியாளராக வெளிப்படுகிறார். அவரது அரசியல் சிந்தனை தொடர்ந்து விவாதத்தையும் பிரதிபலிப்பையும் தூண்டுகிறது.

## காஸ்ட்ரோவின் சித்தாந்தத்தின் அறிவுசார் அடித்தளங்கள்:

ஃபிடல் காஸ்ட்ரோவின் அரசியல் சிந்தனையைப் புரிந்து கொள்ள, ஜோஷே மார்ட்டியுடன் தொடங்க வேண்டும். காஸ்ட்ரோவைப் பொறுத்தவரை, மார்ட்டி வெறுமனே ஒரு தேசிய வீரர் மட்டுமல்ல, அவர் புரட் சியின் 'அறிவுசார் ஆசிரியர்'. கியூபாவின் பத்தொன் பதாம் நூற்றாண்டின் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்தை இருபதாம் நூற்றாண்டின் சமூக நீதி மற்றும் தேசிய கண்ணியத்திற்கான திட்டத்துடன் இணைக்கும் ஒரு தார்மீக திசைகாட்டி. 1953-ஆம் ஆண்டு காஸ்ட்ரோவின் நீதிமன்ற உரையில் - வரலாறு என்னை விடுதலை செய்யும் - பாடிஸ் டாவின் சர்வாதிகாரத்திற்கு எதிரான கிளர்ச்சியை நியாயப்படுத்த மார்ட்டியின் கருத்துகளை எடுத் துக்காட்டினார். குடியரசின் முறியடிக்கப்பட்ட அரசி யலமைப்பு ஒழுங்கையும் கியூபாவின் இறையாண் மையையும் பாதுகாப்பதற்காகக் கிளர்ச்சியை வடி வமைத்தார். மார்ட்டியின் சிந்தனைகளில் மையப்ப டுத்திய இந்த நங்கூரமிடல் நெறிமுறை அவருக்குக் கண்ணியம், சுதந்திரம், தியாகம் போன்ற சொற்க ளஞ்சியங்களை வழங்கியது.

மார்ட்டியின் ஏகாதிபத்திய எதிர்ப்பு காஸ்ட்ரோவின் சர்வதேசக் கண்ணியத்தையும் வடிவமைத்தது. ஏழைகளைப் பாதுகாத்தல், சமத்துவம், சுதந்திரம் ஆகிய புரட்சியின் தார்மீக உலகளாவிய தன் மைக்கான கூற்றுகள் ஓர் இலத்தீன் அமெரிக்க, மூன்றாம் உலகப் பணியாக காஸ்ட்ரோவால் முன் னெடுக்கப்பட்டன. கியூபாவின் சுய புரிதலில், ஏகா திபத்திய எதிர்ப்பு என்பது வெறும் வெளியுறவுக் கொள்கைக்கோடாக இருக்கவில்லை. அது ஒரு காலனித்துவ தேசத்தின் கண்ணியத்தை மீட்டெ டுக்கத் தேவையான இறையாண்மையின் நெறி முறை முன்மாதிரியாகும். இதனால்தான் காஸ்ட் ரோவின் பிற்கால உலகளாவிய சொல்லாட்சியும் நடைமுறையும் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத் தையும், உள்நாட்டில் சோசலிச மாற்றத்துடன் அணிசேராமையையும் வலியுறுத்தின.

கியூபப் புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் காஸ்ட்ரோ யார் என்ற கேள்வி எல்லோரிடத்திலும் இருந்தது. அவரது அரசியல் சித்தாந்தம் குறித்துத் தெளி வின்மை நிலவியது. 1961-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ஆம் திகதியன்று, 'நான் ஒரு மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்' என்று அவர் பகிரங்கமாக உறுதிப்ப டுத்தினார். இங்கு கவனிக்க வேண்டியது, காஸ்ட் ரோவின் மார்க்சியம் ஒருபோதும் வெறும் இறக் குமதி அல்ல. அது இறையாண்மை, நீதி ஆகிய வற்றில் அடித்தளமான கியூபக் கதையோடு இணைந்ததாக இருந்தது.

1961, மே தின உரையில் 'கியூபா ஒரு சோசலிச நாடு' என்று அறிவித்தது முதல், காஸ்ட்ரோ புரட் சியின் பாதையை எவ்வாறு கோட்பாட்டு ரீதியாக வடிவமைத்தார் என்பதை நோக்கும் போது அவர் இரண்டு சவால்களை எதிர்நோக்கினார். 'சோவியத் கையேடுகள்' கரீபியன் யதார்த்தங்களுக்குப் பொருந்த வில்லை என்பதை வலியுறுத்தி கியூபப் புரட்சி 'தனக்காகச் சிந்திக்க' வேண்டியிருந்தது கியூப நிலைமைகளுக்கு சோசலிசத்தை வடிவமைக்க வேண்டியிருந்தது. 1961-ஆம் ஆண்டு பிரகடனம் வெறும் ஒரு சித்தாந்த ஒப்புதல் வாக்குமூலம் மட்டு மல்ல, அது கியூபாவை உலக அமைப்பில் மறுநி லைப்படுத்தியது. ஏகாதிபத்திய எதிர்ப்பை ஒரு வல்லரசுக்கு எதிரான மூன்றாம் உலக சர்வதேசி யத்தின் ஒரு திட்டமாக மாற்றியது.

1953-இல் தனது திட்டத்தின் முதல் வெளிப்பாட்டி லிருந்து, ஃபிடல் காஸ்ட்ரோ புரட்சியை ஓர் ஆட்சிக் கவிழ்ப்பு அல்லது தேர்தல் மாற்றம் என்ற குறுகிய நிலைப்பாடுகளுக்கு வெளியே, அதைவிட அதிக மானதாக வடிவமைத்தார். இது சட்டபூர்வமான தன்மை, பொருளாதாரம், குடிமை வாழ்க்கை ஆகிய





வற்றின் விரிவான மாற்றமாகும். புரட்சிகள் உண் மையானதாக இருக்க வேண்டும், கையேடுகளிலி ருந்து இறக்குமதி செய்யப்படக்கூடாது என்று காஸ்ட்ரோவின் சூத்திரம் வலியுறுத்துகிறது.

புரட்சியை ஒரு நெறிமுறை செயல்முறையாகக் காட்டுவது ஒழுக்கத்தை ஒரு குடிமை நற்பண்பாக மாற்றியது. கியூபாவின் சுகாதாரம், கல்வி ஆகிய வற்றின் மேம்பாடுகளைப் பற்றிக் கருத்துரைக்கும் ஆய்வாளர்கள் புரட்சியை நெறிமுறைச் செயல்மு றையாகக் கண்டதன் சிறப்பான விளைவுகளாகவே இதனைக் காண்கிறார்கள். நடைமுறையில், புரட் சியின் செயல்முறை தர்க்கம், குவிமையக் கிளர்ச்சி யிலிருந்து நீடித்த ஒழுங்கை உருவாக்குவது வரை பயணித்தது. ஒரு சிறிய கெரில்லா குவிமையக் கிளர்ச்சிகளைத் தூண்டும் கோட்பாடு புரட்சியின் தோற்றத்தைப் பாதித்த அதே வேளையில், காஸ்ட் ரோவின் ஆட்சியியலானது, புரட்சியின் பின்னர் அவசியமான கோட்பாடு, நிறுவனக் கட்டுமானம், அரசியற்கல்வி, சர்வதேச நிலைப்படுத்தல் ஆகிய வற்றின் நீண்ட பணியை வலியுறுத்தியது. கியூபாவின் சூழலில் வெற்றி பெற்ற புரட்சியும் அதைத் தொடர்ந்த ஆட்சியும் பெரும்பாலும் வேறு இடங் களில் தோல்வியடைந்தது. ஏனெனில் ஒரு புரட் சியைத் தக்கவைக்கப் போரால் மட்டுமே வழங்க முடியாத சமூக மற்றும் நிறுவன அங்கீகாரமும் மக்களை அரசியல்மயப்படுத்தலும் தேவைப்படு கிறது.

இந்த வெளிச்சத்தில் பார்த்தால், கியூபப் புரட்சி செயல்முறையாக மூன்று இயக்கங்களைக் கொண் டுள்ளது:

- கிளர்ச்சி (மாற்றத்திற்கான சாத்தியத்தை உரு வாக்குதல்).
- ஒருங்கிணைப்பு (மாற்றத்தைப் பாதுகாக்க கட் டமைப்புகளை உருவாக்குதல்).
- பெருக்கம் (மாற்றத்தைக் கடத்த கலாசாரத் தையும் கற்பித்தலையும் உருவாக்குதல்).

புரட்சி என்பது ஒரு செயல்முறை என்றால், குடிமக் களுக்கு அன்றாட கஷ்டங்களை வரலாற்று நோக் கத்துடன் தெளிவுபடுத்துவது அவசியம். காஸ்ட்ரோ அதை மிகத் திறமையாகச் செய்தார். ‘ஒற்றுமையும் சுதந்திரமும்’ பற்றிய அவரது தொடர்ச்சியான வலி யுறுத்தல்கள் ஒன்றைக் கோடு காட்டின. சிக்கனம், அணிதிரட்டல், பொறுமை ஆகியவை இலக்கற்ற துன்பம் அல்ல, மாறாக ஒரு தார்மீக இலக்கை நோக்கிய விட்டுக் கொடுப்புகள் என்பதை நினை வூட்டுகின்றன. அப்படியானால், புரட்சி பற்றிய காஸ்ட் ரோவின் கருத்தை ஒரு செயல்முறையாகவும் கொள்கை யாகவும் எவ்வாறு மதிப்பிடுவது ? கியூப அனுபவம், ‘செயல்முறையாக புரட்சி’ என்பது பற்றிய மூன்று பரிமாற்றக்கூடிய செய்திகளை வழங்குகிறது:

- நெறிமுறைகளை மையப்படுத்தாத முடிவுகள் தோல்வியடையும், அதேவேளை நெறிமுறை களைப் பின்பற்றாத நிறுவனங்கள் சரிவடைந்து சீரழியும். இது கியூபப் புரட்சியின் நீண்ட ஆயுளையும் அதன் தொடர்ச்சியான சட்டபூர் வமான கூற்றுகளையும் விளக்குகிறது.
- நெருக்கடி என்பது கற்பதற்கான திறவுகோல். தோல்விகளைப் பாடங்களாகவும் மறுசீரமைப் புகளாகவும் மாற்றுவதன் மூலம் அதிர்ச்சி களில் இருந்து தப்பிப்பது எப்படி என்பதைப் புரட்சி தனக்கும் அதன் குடிமக்களுக்கும் கற்றுக் கொடுக்கும். கியூபப் புரட்சியினதும் அதன் நிலைப்பினதும் முக்கிய பாடமிது.
- சுயத்தோடு இருப்பது என்பது விருப்பத்திற்கு ரியது அல்ல. இறக்குமதி செய்யப்பட்ட மாதிரி கள் உள்ளூர் வரலாற்றைப் புறக்கணித்தால் தடுமாறும்; எந்தவொரு தீவிரமான செயல் முறைப் பார்வையும் ஒரு மாதிரியைச் சார்ந் ததாக இருக்கக்கூடாது. அதனது சூழலையும் சூழ்நிலையையும் சார்ந்ததாக இருக்க வேண்டும்.

## ஏகாதிபத்திய எதிர்ப்பும் சர்வதேசியமும்:

ஃபிடல் காஸ்ட்ரோவின் உலகக் கண்ணோட்டத் தில், ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது ஓர் இராஜ தந்திர நிலைப்பாடாக இல்லாமல், ஒரு தார்மீகக் கோட்பாடாக இருந்தது. அது வளர்ச்சியின்மை யையும் சார்புநிலையையும் விளக்கியது. அது தீர்வு களையும் பரிந்துரைத்தது. நடைமுறையாக சர்வதே சியம் என்பது காலனித்துவ, நவகாலனித்துவ அல்லது நிறவெறி ஆட்சியை எதிர்க்கும் மக்க ளுடன் ஒற்றுமை கொள்வதைக் குறித்தது. ஏகாதி பத்தியம் உலகளாவியதாகவும் தகவமைப்புத் தன்மை கொண்டதாகவும் இருந்தால், கியூபப் புரட் சியாளர்கள் உலகளாவியதாகவும் தகவமைப்புத் தன்மை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும், இராணுவ உதவி, அரசியல் ஒருங்கிணைப்பு, மனி தாபிமான ஒத்துழைப்பை ஒரே தொகுப்பில் இணை க்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று காஸ்ட்ரோ வலியுறுத்தினார். இந்தத் தொகுப்பு காஸ்ட்ரோவின் கிளர்ச்சிக்கான ஆரம்பகால நியாயப்படுத்தல்களிலி ருந்து (அமெரிக்க ஆதரவு பெற்ற சர்வாதிகாரத்திற்கு எதிரான தேசிய கண்ணியத்தைப் பாதுகாப்பதற்காக) தேசபக்தி, சோசலிசம், சர்வதேசியத்தை ஒரு ‘புரட் சியின் கருத்தாக்கமாக’ பிணைத்த அவரது முதிர்ந்த சொற்களஞ்சியத்தைத் தரிசிக்கலாம்.

அமெரிக்காவுடனான நேரடி மோதலின் மூலம் காஸ்ட்ரோவின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கடினம டைந்தது. ஏப்ரல் 1961-இல் கியூபாவில் இருந்து வெளியேறி அமெரிக்காவில் வாழ்ந்துவந்தவர்களைப் பயன்படுத்தி சி.ஐ.ஏ பன்றி விரிகுடா முற்றுகை ஒன்றை நடத்தி காஸ்ட்ரோவை அகற்ற முயன்றது. அம்முயற்சி தோல்வியடைந்தது. கியூபாவிற்கு



எதிரான அமெரிக்க நாசவேலைகள் - உள்நாட்டு அநீதி மட்டுமல்ல - இறையாண்மையை அச்சுறுத்தியது. இது உண்மையில் காஸ்ட்ரோவையும் கியூப மக்களையும் தைரியப்படுத்தியது. காஸ்ட்ரோ ஏகாதிபத்தியத்தை நிலையான எதிரியாகப் புரிந்துகொண்டதால், நெருக்கடிகளைக் கருத்தியல் ரீதியாகவும் எதிர்கொண்டார்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை செயற்படுத்துவது என்பது வலைப்பின்னல்களைப் பின்னுவதாகும். ஜனவரி 1966-இல், ஹவானா முக்கண்ட மாநாட்டை நடத்தியது. ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்காவிலிருந்து இயக்கங்களை ஒன்றிணைத்து, ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்க மக்களுடனான ஒற்றுமை அமைப்பைத் (OSPAAAL - Organization of Solidarity with the People of Asia, Africa and Latin America) தொடங்கியது. விடுதலை இயக்கங்களுக்கு உதவுவதற்காக இந்த அமைப்பை உருவாக்கியதை காஸ்ட்ரோவின் நிறைவு உரை தெளிவுபடுத்தியது. இது தெற்கு-தெற்கு ஒருங்கிணைப்பின் மையமாக கியூபாவிற்கான ஆரம்பகால வார்ப்புருவாகும். இந்த அமைப்பு Tricontinental என்ற காலாண்டு இதழை வெளியிட்டது. இவ்விதழே 1969-இல் 'மூன்றாவது சினிமா' என்ற கருத்துருவாக்கத்தை முன்மொழிந்து, அதனைத் தத்துவார்த்த ரீதியாக வளர்த்தெடுத்தது.

இந்த முக்கண்ட தருணம் ஒரு பரந்த அணிசேரா நிகழ்ச்சி நிரலில் ஊட்டப்பட்டது. 1979 கியூபத் தலைநகர் ஹவானாவில் இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டில், கியூபா தலைமை தாங்கியபோது, காஸ்ட்ரோ ஒரு கடுமையான ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை முன்வைத்தார், சில உறுப்பினர்கள் (குறிப்பாக யூகோஸ்லாவியா, இந்தியா, இலங்கை) சோவியத் முகாமுக்கு மிக அருகில் இருப்பதாகக் கருதினர். கியூபாவின் ஒற்றுமை சொல்லாட்சி என்பது, பேசும் கலையை விட செயல்களால் (தொழினுட்ப வல்லுநர்கள், மருத்துவர்கள், வெளிநாட்டில் பயிற்றுனர்கள்) அளவிடப்படுகிறது என்று இம்மாநாட்டில் காஸ்ட்ரோ வலியுறுத்தியது முக்கியமானது. இது ஏகாதிபத்திய எதிர்ப்பை காஸ்ட்ரோ எவ்வாறு சிந்தித்தார் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

மாநாடுகள் அரசியலை ஒருங்கிணைத்தால், ஆபிரிக்கா நடைமுறைக்கான சோதனைக்களமாக மாறியது. போர்த்துக்கல் பேரரசுக்கு எதிரான காலனியாதிக்கப் போர்களில் அங்கோலா முக்கியமானது. 1975-இல் அங்கோலா சுதந்திரமடைந்தது. கம்யூனிசச் சித்தாந்தத்தைப் பின்பற்றுகின்ற அங்கோல விடுதலைக்கான மக்கள் இயக்கம் (MPLA) ஆட்சியைப் பிடித்தது. சில காலத்திலேயே உள்நாட்டுப் போர் மூண்டது. ஆபிரிக்க விடுதலைக்கான தேசிய முன்னணியும் (FNLA) அதிலிருந்து பிரிந்த அங்கோலாவின் முழுமையான விடுதலைக்கான தேசிய ஒன்றியமும் (UNITA) இணைந்து MPLA-க்கு எதிராகப் போரிட்டன. MPLA-க்கு எதிராகப் போரிடும் அமைப்புகளுக்கு அமெரிக்காவும் தென்னாபிரிக்காவும் உதவின. MPLA தலைமையிலான அங்கோல அரசாங்கம் கியூபாவிடம் உதவி கோரியது.

தென்னாபிரிக்கா உள்ளிட்ட அந்நிய நாட்டுப் படைகளின் முன்னேற்றங்களை மழுங்கடிக்க அங்கோலாவால் கோரப்பட்ட வான்வழி, கடல்வழிப் போக்குவரத்து ஊடாக இராணுவத்தை அனுப்பும் 'ஓபரேஷன் கார்லோட்டா'வை கியூபா தொடங்கியது. கியூபத் தலையீடு முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது. இது 15 ஆண்டுகள் நீடித்து MPLA-யின் வெற்றியில் முடிந்தது. இது வெளிநாட்டுப் படைகள் அங்கோலாவை விட்டு வெளியேறுவதை உறுதிப்படுத்தியதோடு நமீபியாவின் விடுதலையை உறுதி செய்தது. மேலதிகமாக தென்னாபிரிக்காவின் நிறவெறி ஆட்சியைப் பலவீனப்படுத்தியது. கியூபத் தலையீடு சாத்தியமாக்கிய தென்னாபிரிக்காவின் தோல்வி, நிறவெறி ஆட்சிக்கெதிரான மூலோபாய விளைவுகளை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

கியூபா அங்கோலாவை புவிசார் அரசியலாக மட்டுமல்லாமல் நினைவகமாகவும் அடையாளமாகவும் வடிவமைத்தன. ஆபிரிக்காவிற்கு ஒற்றுமையைத் திருப்பி அனுப்பும் ஓர் இலத்தீன் ஆபிரிக்க நாடாக கியூபா முன்னிலைக்கு வந்தது. 1843 கியூபக் கிளர்ச்சியை வழிநடத்திய அடிமைப்படுத்தப்பட்ட ஆபிரிக்கப் பெண்ணின் நினைவாக 1975-ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையை 'கார்லோட்டா' என்று பெயரிடுவதன் அடையாள முக்கியத்துவத்தை கியூப எழுத்துகள் வலியுறுத்தின. அங்கோலாவைக் கருப்பு அட்லாண்டிக் முழுவதும் ஒரு நெறிமுறை உதாரணமாக அவை சித்தரித்தன.

சர்வதேசியம் கவசமாக மட்டுமல்ல, அது வெள்ளை அங்கிகளையும் அணிந்திருந்தது. அல்ஜீரியாவிற்கு அவசரகாலப் பணியுடன் (1963) தொடங்கி, கியூபா மருத்துவ சர்வதேசியத்தின் ஒரு விரிவான திட்டத்தை உருவாக்கியது. உலகளவில் கிராமப்புற, பின்தங்கிய பகுதிகளுக்கு மருத்துவர்களை அனுப்புதல், ஹவானாவில் வெளிநாட்டு மருத்துவர்களுக்குப் பயிற்சி அளித்தல், பேரழிவுகள், தொற்று நோய்களுக்கு விரைவான பதிலளிப்பு குழுக்களை உருவாக்குதல் என்பன இன்றளவும் தொடரும் செயல்கள். கியூப மருத்துவ உதவி பல மூன்றாமுலக நாடுகளுக்கு அடிப்படையானதாக இருக்கின்றது.

இந்த ஒத்துழைப்பை அளவிடுவது இயல்பாகவே அரசியல் சார்ந்தது, ஆனால் முக்கியமான, அனுதாபமான ஆதாரங்கள் கூட அதன் அகலத்தில் ஒன்றிணைகின்றன. வெளிநாடுகளில் பணியமர்த்தப்பட்ட பல்லாயிரக்கணக்கான கியூப சுகாதார நிபுணர்களையும் ஆறு தசாப்தங்களாக நூறாயிரக்கணக்கானவர்களையும் கண்ணோட்டங்கள் மேற்கோள் காட்டுகின்றன. வெள்ளம், சூறாவளி, பூகம்பங்கள், எபோலா, கோவிட்-19 போன்ற நெருக்கடிகளின் போது இரு பதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கியூபா மருத்துவக் குழுக்களை அனுப்பியுள்ளது. இந்த மருத்துவ உதவிக் குழுக்கள் ஒரு தனித்துவமான தத்துவத்தையும் வலியுறுத்துகின்றன. அவை முதன்மைப் பராமரிப்பு, தடுப்பு, பணியாளர்கள் கடினமான இடங்களில் நீண்ட காலம் தங்குதல் ஆகியவற்றை மையப்படுத்தியுள்ளன. இதன் சிறப்பு யாதெனில் உலகின் வறுமையான நாடுகளில் உள்ள மிகவும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள மக்களுக்கும்



மருத்துவ உதவிகளைக் கியூப மருத்துவர்கள் வழங்கிய மையாகும்.

காஸ்ட்ரோவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஒருபோதும் ஆபி ரிக்காவை மட்டும் எதிர்கொண்டதில்லை. போர்த்துகீசிய ஆபிரிக்காவிற்கும், சர்வதிகாரத்தை அல்லது வெளிநாட்டு செல்வாக்கை எதிர்கொள்ளும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள புரட்சிகர இயக்கங்களுக்கும் கியூபாவின் ஆதரவை வழங்கியுள்ளன. தென்னாபிரிக்காவில் ஆபி ரிக்கத் தேசிய காங்கிரசுக்கு கியூப உதவி தீர்க்கமானதாக இருந்தது என்றும், அமெரிக்காவின் இரகசியத் திட்டங்க ளுக்கு இந்த உதவிகள் அடிக்கடி இடையூறு விளைவிப் பதாக இருந்ததாகவும் உறுதியான தகவல்கள் வெளியாகி யுள்ளன. கியூபா பெரும் தியாகங்களைச் செய்யவேண்டி இருந்தபோதும், அது நீதியாகக் கருதிய இயக்கங்களுடன் துணைக்கு நின்றது.

கியூபாவின் அணிசேரா நாடுகளின் தலைமை ஒரு பொருளாதார விமர்சனத்தையும் முன்வைத்தது. ஒரு புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்குக்கான கோரிக்கைகள், கடன் நிவாரணம், தொழினுட்பப் பரிமாற்றம் ஆகிய வற்றைக் கோரியது. 1979 ஹவானா உச்சிமாநாட்டு ஆவ ணங்களும் காஸ்ட்ரோவின் உரையும் ஆயுதக் குறைப்பு, நிறவெறி எதிர்ப்புக்கான அழைப்பு, அபிவிருத்திக்கு முன்னு ரிமை, ஏகாதிபத்திய எதிர்ப்பு நெறிமுறைகள் ஆகிய வற்றைக் கோரி நின்றன. அமெரிக்காவுக்கும் சோவியத் துக்கும் வெளியே அணிசேராதா அதேவேளை ஒத்துழைக் கின்ற மூன்றாவது அமைப்பை வினைத்திறனுடன் செயற்ப டுத்துவது பற்றியும் அதன் அவசியம் பற்றியும் காஸ்ட்ரோ தொடர்ந்து பேசினார். அதன் முக்கியத்துவம் இன்றும் உணரப்படுகிறது.

உள்நாட்டு அரசியலைப் போலவே, சர்வதேசியத்திற்கான உட்கட்டமைப்பாக அவரது சொற்பொழிவுகள் இருந்தன. காஸ்ட்ரோவின் உரைகளை ஆராயும் போது, அவர் ஒற்றுமையை எவ்வாறு விவரித்தார் என்பதை நிரூபிக் கின்றன: மருத்துவர், சிப்பாய், ஆசிரியர், தொழினுட்ப வல்லுநர் என அனைத்தையும் நல்க கியூபா தயாராக இருப்பதாக அறிவித்தார். உலகில் கியூபாவின் தார்மீகக் கடமையின் அனைத்து உருவகங்களையும் பகிர்ந்து கொள்ள அவர் திடமாக இருந்தார். கியூபா 'நல்ல வார்த் தைகளால் அல்ல, செயல்களால்' ஒற்றுமையை வெளிப்ப டுத்த வேண்டும் என்று அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார்.

## நிறைவுக் குறிப்புகள்:

ஃபிடல் காஸ்ட்ரோவின் அரசியல் சிந்தனை எளிமையான அடையாளப்படுத்தல்களை எதிர்க்கிறது. ஏனெனில் அது கோட்பாடுகளின் அலுமாரியாக அல்ல, ஒரு வாழ்க்கை அமைப்பாகக் கட்டமைக்கப்பட்டது. அறிவுபூர்வமாக, இது கியூபாவில் ஜோஸ் மார்ட்டியின் தார்மீக தேசபக்தியுடனும் ஏகாதிபத்திய எதிர்ப்புடனும் தொடங்குகிறது. பின்னர் மார்க்சிய லெனினிசத்தில் நிலைகொள்கிறது. வரலாறு என்னை விடுதலை செய்யும் என்ற உரையில், காஸ்ட்ரோ அரசியலமைப்புக் கண்ணியத்தைப் பாதுகாப்பதாக கிளர்ச் சியை வடிவமைத்தார். டிசம்பர் 1961-இல், அவர் அந்தத் திட்டத்தை மார்க்சிய லெனினிசத்தில் பகிரங்கமாக நங்கூர மிட்டார். கியூபாவின் இறையாண்மையை ஒரு சோசலிச அடிவானத்துடன் இணைத்தார். நீதிமன்ற உரையிலிருந்து சித்தாந்த அறிவிப்பு வரையிலான வளர்ச்சி அவரது அரசியல் தத்துவ முறையினை விளக்கும் முதலாவது கோடுகாட்டல்.

மூலோபாய ரீதியாக, காஸ்ட்ரோ 'புரட்சியை' ஒரு நிகழ் வாகக் கருதாமல், நெறிமுறைக் கோட்பாடுகளால் வழிந டத்தப்படும் செயல்முறையாக மறுபரிசீலனை செய்தார். அவரது சுருக்கமான, 2000-ஆம் ஆண்டு உரை ஒரு கொள்கையை வடிகட்டியது. 'மாற்றப்பட வேண்டியதை மாற்றுங்கள்; ஒருபோதும் பொய் சொல்லாதீர்கள்; சமத் துவம், சுதந்திரம் மற்றும் சர்வதேசியத்தை பிணைக்கவும் பணியாற்றுங்கள்'. இது புரட்சியின் உள் இலக்கணத்தைப் பின்னோக்கி தெளிவுபடுத்துகிறது. அதே நெறிமுறைசார் அரசியல் கல்வியின் மீதான அவரது ஆர்வத்தை விளக்கு கிறது. ஆயிரக்கணக்கான உரைகளும் வெகுஜன பேரணி களும் ஒரு தேசிய வகுப்பறையாக இருந்தன. அங்கு கொள்கை, நினைவகம், அணிதிரட்டல் ஆகியவை நோக் கத்தின் பகிரப்பட்ட கதையாகப் பின்னிப் பிணைந்தன. இந்த அர்த்தத்தில், காஸ்ட்ரோ ஓர் அரசியல்வாதியைப் போலவே ஒரு கல்வியாளராகவும் இருந்தார். அவர் பொது வாழ்க்கையை குடியுரிமைக்கான பள்ளியாகக் கருதினார்.

சர்வதேச அளவில், ஏகாதிபத்திய எதிர்ப்பும் சர்வதேசி யமும் ஒரே தார்மீக நாணயத்தின் இரண்டு முகங்களாக இருந்தன. ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையை ஒரு முழக் கமாக அல்ல, ஒரு கடமையாக மாற்றினார். முக்கோண, அணிசேரா மன்றங்கள் முதல் அங்கோலாவில் உள்ள போர்க்களம், பல நாடுகளுக்கு மருத்துவர்களை அனுப்பிய நீண்ட மருத்துவ சர்வதேசவாதம் வரை, கியூபா அதன் அளவிற்கு ஏற்றவாறு உலகளாவிய புரட்சிகரப் பணியைச் செய்தது. கியூப ஆயுதங்களும் கியூப மருத்துவமும் தென் னாபிரிக்காவிலும் உலகளாவிய தெற்கு முழுவதும் யதார்த் தங்களை மாற்றியமைத்தன. காஸ்ட்ரோவுக்கு முக்கிய மானது நெறிமுறையும் செயற்பாட்டின் ஒற்றுமையுமாகும். இதனாலேயே உள்நாட்டில் மருத்துவமனைகள், பாடசா லைகளை ஒழுங்கமைத்த அதே மதிப்புகள் இராணுவத்தி னரையும் ஆசிரியர்களையும் வெளிநாடுகளில் உள்ள மருத்து வர்களையும் ஆட்கொண்டது. இதனாலேயே மிகவும் மதிப்புமிக்கதாக கியூபப் பணி இன்றும் கருதப்படுகிறது. இதனை வடிவமைத்து செயற்படுத்தியது காஸ்ரோவின் அரசியல் சிந்தனையே என்றால் மிகையாகாது.



meenilankco@thaiveedu.com

தேவகாந்தன்

# மாறும் கதை வடிவங்கள்: ‘திருப்புமுனை’, ‘குப்பி’ ஆகிய கதைகளினூடாக ஓர் அலசல்

tg.theeban@gmail.com

நவீன இலக்கிய உருவாக்கத்தின் பின்னரும், இலக்கியத்தின் அரசி கவிதை என்பதாகவே வெகுகாலம் இருந்து வந்தது. புதுக்கவிதை தோற்றமாகிய பின்பும் அந்த நிலைமை மாற்றமடையவில்லை. இருபதாம் நூற்றாண்டு முடிகிறவரையில்கூட இந்தத் தாற்பரியம் தொடர்ந்து கொண்டேதான் இருந்தது.

அகவல், கலி, பரிபாட்டு ஆகியவற்றினூடாக நடந்து, வெண்பா, விருத்தம் ஆகிய பா வடிவங்களில் காவியத்துக்கான உச்சம்பெற்று, இன்று யாப்பற்ற வடிவமாக புதுக் கவிதை தோன்றியுள்ள நிலைமையிலும், அதன் அந்தஸ்து பெரிய வித்தியாசமின்றித் தக்கவைக்கப்பட்டே வந்தது. பல்வேறான மாற்றங்கள் ஏற்பட்டபோதும் சாத்தியமானவற்றை உள்வாங்கி உரம்பெற்றதே தவிர கவிதை தன்னிலை தளரவில்லை. இன்று நிலைமை அவ்வாறில்லை.

இன்று கவிதையைப் பின்தள்ளி உரைநடை வடிவங்களான நாவல், குறுநாவல், சிறுகதை, நினைவுப் பதிவுகள் உருக்கொண்டுள்ளன. வேதநாயகம்பிள்ளையின் ‘பிரதாபமுதலியார் சரித்திரம்’, பி.ஆர். ராஜம் ஐயரின் ‘கமலாம்பாள் சரித்திரம்’ ஆகியன தோன்றிய காலத்து நாவலிலக்கணம்போல இன்றுள்ள நாவலிலக்கியத்தின் இலக்கணங்கள் இல்லை. இலக்கணங்கள்படி இன்றைய இலக்கியங்கள் இருக்கவேண்டியதில்லையென ஒரு கருதுகோள் முன்வைக்கப்பட்டாலும், இலக்கணங்கள் புதிது புதிதாக உருக்கொள்கின்றனவென்பதையும் ஏற்றுக்கொள்ளவே வேண்டியிருக்கிறது.

போலவேதான் சிறுகதையின் நிலைமையும். அது தன் கட்டமைப்பின், உள்ளடக்க விபரங்களின் வளர்ச்சியை அடைந்தே வந்துள்ளது. புதுமைப்பித்தன் கதைகளைப் போலவோ, மணிக்கொடிக் காலத்தில் சிலாகிக்கப்பட்ட மௌனி, மற்றும் கு.ப. ராஜகோபாலன் போன்றவர்களின் தீவிர இலக்கியம் சார்ந்த கதைகளைப் போலவோ இன்றைய கதைகள் இல்லை. அவை வளர்ச்சியின் பல படிநிலைகளை அநாயாசமாகக் கடந்து வந்தனவென்பதே நிஜம். இன்னொரு மொழியில் சொன்னால், இலக்கியம் மாறிக்கொண்டு இருக்கிறது.

மேற்குலகை விடவும் வேகமாய் கீழ்த் திசையில், குறிப்பாக சீனாவில், அது மாறியிருந்தது. சிறுகதைக்கு மாற்றாக Short short story என்ற நவ வடிவம் அங்கே உருவாகியிருக்கிறது. இந்தியாவைப் பொறுத்தவரை, தமிழ் நிலத்தைவிட மலையாளப் பரப்பில் இந்த வடிவ மாற்றங்கள் அதிகமாக ஏற்பட்டுள்ளன. மிகக் குறைந்த பக்கங்களிலான Mini Novel வடிவம் அங்கே ஆண்டுகள் சிலவற்றின் முன்பாகவே உருவாகி விட்டது.

புத்தாயிரத்தின் ஆரம்பத்திலேயே மாற்றங்கள் பரவலாய் உருவாவது கவனமாகிற்று. நடை, பாவிக்கும் மொழி, கட்டுமானம், மரபை உடைக்கும் வேகம், இலக்கணத்தை முடிந்தளவு உதாசீனப்படுத்தும் போக்குகள் படைப்பாளி, வாசகர் ஆகிய இரண்டு பக்கங்களிலுமே விழையப்பட்டன.

இந்த மாற்றங்கள் விழையப்பட்டதற்கான காரணங்களாக சில சொல்லமுடியுமாயினும், அவற்றுள் முக்கியமானதாக இலக்கியத்துக்குப் போட்டியாக வேறு ஊடகங்களின் வளர்ச்சியைக் குறிப்பிட முடியும். அதனால் இலக்கியமானது தன் இருப்புக்கான சகல வழிமுறைகளையும் பிரயோகிக்கத் துவங்கியது. படைப்பு நிலையிலிருந்து தயாரிப்பு நிலைக்கு இங்கே படைப்பாளி தள்ளப்பட்டிருந்தார்.

இதனால் தவிர்க்கமுடியாத விளைவொன்றேற்பட்டது. தீவிர, வெகுஜன வாசகத் தளத்தின் பிரிவினைக் கோடு அழிந்தது. மிகச் சிறிய விஸ்தீரணத்தில் அவை ஊற்றம் கொண்டிருந்தாலும், அவ்வாறான படைப்புலகத்துக்கு வாசகப் பரப்பே இல்லையென்றானது. படைப்பவரே வாசகராயும் திறனாய்வாளராயும் இங்கே அவதரிக்கும் நிர்ப்பந்தம் உருவாகிற்று.

நாவல் வெகு அவதானமாக இங்கே தனது இடத்தை அமைத்துக்கொண்டது. முதலில் சமூகப் பொறுப்புடைமையை அது தூக்கியெறிந்தது. புனைவு / யதார்த்தம் என்பதாகவன்றி, யதார்த்தப் புனைவாகத் தன்னை அது வெளிப்படுத்தியது. அதன் வேறொரு பரிமாணம் மாயா யதார்த்தவாதம் என்பதாக இருந்தது.

சிறுகதையும் அதேபோல் தன் தீர்வுபாயங்களை ஆற்றியது. கதாவாரம்பத்தில், இடையிலும் முடிவிலும்கூட, ஆங்காங்கே, பாத்திரத்தின் பெயர் பிரஸ்தாபிக்கப்படாதிருந்தது. பாலின

அடையாளத்துடன் அது தொடங்கி அவள் அல்லது அவனாக கதையில் தொடர்ந்துகொண்டே இருந்தது. அடையாள மறுப்பல்ல, அது முன்னெடுத்த வழி அடையாளக் குழப்பம் என்பதாய் ஆனது.

இவ்வளவற்றோடு தன்னைப் பூடகமாய் முடிக்கவும், மரபு கலாசாரங்களால் கட்டுப்பட்டுக் கிடந்த தன்தன் இரகசியங்களை வெளிவெளியாகப் பேசவும் அது முன்வந்தது. ஏற்கனவே தி. ஜானகிராமனின் 'அம்மா வந்தா'ளும், த. ஜெயகாந்தனின் 'ரிஷிமூல'மும், ந. சிதம்பர சுப்பிரமணியனின் 'இதயநாத'மும் தொட்டிருந்த பாலியல் விகற்பங்களை மேலும் அழுத்தமாகப் பேச முயலவேண்டி இருந்தது. புத்தாயிரம் தொடங்குவதற்கு முன்னரேயே 'The Vagina Monologues' (Eve Ensler) போன்ற நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துவிட்டன. தமிழ் தன் இயங்குவிசைக்கேற்ப அதைப் பிரயோகிக்கவேண்டியிருந்தது.

இவ்வாறு செய்துதானாகவேண்டியும் இருந்தது. ஏனெனில் கதை வடிவம் புராதனமானது. சொல் தோன்றி எழுத்து தோன்றுவதன் முன் அது தோன்றிற்று. மனித இருப்புவரை கதையினிருப்பும் நிச்சயமென்கிறார்கள் துறை வல்லுநர்கள்.

நவீன வடிவங்களே கேள்விக்குப் பதிலற்று தவித்தன. எழுந்த மானத்தில் முயற்சிகளைப் பரத்தின. அதனால் சிறுகதையும், குறுநாவலும் வடிவ பிரக்ஞையில் குழம்பிப்போயின. பொதுவில் அவை கதையென அடையாளப்பட்டன.

வடிவ புத்தாக்க முயற்சிகளில் படைப்பாளி இறங்கியபோது, முக்கியமான இரண்டு அம்சங்கள் கவனமாகின. ஒன்று, வாழ்க்கையில் இருக்கக்கூடிய எதுவும் எழுத்தில் ஏற வாசக இசைவு இருந்தது. சொல்லும் சம்பவங்களும் எல்லாம் எழுத்தில் புனிதம் பெற்றன. இவற்றுள் முதலாவதை 'தன் உள் பேசுதல்' எனவும், மற்றதை, 'பூடகமாய் / மர்மமாய் முடித்தல்' எனவும் அடையாளப்படுத்தலாம்.

இவை சமீப காலமாய் பல கதைகளில் இடம் பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டாலும், அவற்றை ஓர் ஆய்வுக்கு உட்படுத்துமளவான கவனம் அவற்றின் மேல் குவிக்கப்படவில்லை. இதில் வகைக்கொன்றான இரண்டு கதைகளை என் அண்மைய வாசிப்பில் நான் எதிர்கொள்ள நேர்ந்தது. அவை பற்றியே இந்த உரைக்கட்டு பேசவிருக்கிறது.

தன் உள் பேசும் இந்தக் கதை 'பின்தொடர்தல்' என்ற மனுஷா ப்ரபானி திஸாநாயக்கவின் சிறுகதைத் தொகுப்பில் அதே பெயரிலுள்ள கடைசிக் கதை. சிங்கள மொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்திருப்பவர் ரிஸான் ஷெரீப். நூல் எழுத்து பிரசுரத்தின் வெளியீடாக 2025-இல் வெளிவந்திருக்கிறது.

பெண் மனதிலுள்ள காமத்தை / காதலைப் பேசிய கதைகள் தமிழில் நிறைய உண்டு. அவற்றுள் பெண்களால் எழுதப்பட்ட கதைகளும் அதிகம் இருக்கின்றன. 'பின்தொடர்தல்' அவற்றிலிருந்தும் சற்று வித்தியாசமானதெனத் தோன்றுகிறது.

பாலியல் ரீதியான ஈர்ப்பு இல்லாத காதல் எங்கேயும் இல்லை. இவ்வாறான வெளிப்பாடுகள் ஆண்களிடத்திலேயே அதிகமாகவும் ஏற்படுவதை பெரும்பாலான கதைகளிலும் நம் வாசிப்பு சந்தித்திருக்கிறது. ஆனால் இந்தக் கதை மனுஷா ப்ரபானியென்ற பெண் படைப்பாளியிடத்தில் தோன்றியிருக்கிறது. காமமுமில்லாத, காதலுமில்லாத ஓர் உணர்வின் வெளிப்படுத்துகையாக இது தோற்றம் கொண்டிருக்கிறது.

ரயிலில் வேலைக்குச் சென்றுவரும் ஒரு பெண், அதே கொம்பார்ட்மென்ரில் பயணிக்கும் ஓர் ஆணை தினசரி காலையில் எதிர்ப்படுகிறாள். அவனோ அவளது பிரசன்னத்தையே கவனிப்பதாயில்லை. அந்தக் கவனயீனம் அவளை வதைக்கிறது. சுமார் மூன்று மாதங்கள் கழிய அவனை ஒரு வாரம் காணாதுபோகும் அந்தப் பெண், தன் முழு நம்பிக்கையிழப்புடன் பிறகொருநாள் மாலையில் வீடு திரும்புகையில், ரயிலில் மறுபடியும் அவனை எதிர்ப்படுகிறாள். அவளைக் காணும் அவன் தானாகவே அவளுடன் பேச்சுக் கொடுக்கிறான். இந்தக் கவனிப்பு அவளது மனநிலையை முற்றாக மாற்றுகிறது. வழக்கமாக இறங்கவேண்டிய ரயில் நிலையத்தில் இறங்காமல் அவர்களது பயணம் மேலே தொடர்கிறது, வாழ்க்கையிலும் தொடரும் விருப்புடன். இதுதான் பின்தொடர்தலின் சுருக்கமான கதை.

நடையிலேயோ, கட்டமைப்பிலேயோ சாதாரணமான ஒரு சம்பவத்தை விளக்கும் ஒரு கதையைவிட இது எந்தவிதத்திலும் வித்தியாசப்பட்டுப்போகவில்லை. ஆனால் வெளிப்படையாக ஓர் இளம் யுவதியின் மனத்தை விண்டு விடுத்து இது பேசியிருப்பதும் சாதாரணமான விஷயமில்லை.

தன் வேலைக்குச் செல்வதற்கான ரயில் நிலையத்தில் அவள் இறங்கும்வரை, அவன் அவளைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. இது, 'என்னிடம் ஓர் இளைஞனின் மனதைக் கொள்ளையடிக்கவென எந்தத் திறமையும் இல்லை. அது இப் பொழுது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. மிகவும் கீழ்த்தரமான நிலையிது' என அவளை மிகக் கேவலமாக தன் ஆளுமைபற்றி எண்ணவைக்கிறது.



அவளுக்கு வேறு வழியில்லை. அவள் அதையேதான் தொடர்ந்தும் செய்கிறாள். தோல்விகள் தொடர்ந்து வர வர, 'தயவுசெய்து என்னைப் பா'ரென அவள் தன் மனத்துள் பிரலாபிக்கிறாள்.

அவள் அவனைக் காதலிக்கிறாளா? அவ்வாறும் சொல்ல முடிவதில்லை. தன்னால் அவனது கவனத்தைத் தன் பக்கம் ஈர்க்க முடியாதிருக்கிறதே என்பதுதான் அவளது வியாகூலத்தின் முழுக் காரணமாகவும் இருக்கின்றது.

அவள் தன் முயற்சியை மேலும் விஸ்தரிக்கின்றாள். ஒருநாள் ரயிலிலிருந்து இறங்கிச் செல்கையில், இன்னும் ரயிலில் இருந்துகொண்டிருக்கும் அவனைப் பார்த்து அவள் புன்னகைக்கிறாள். அதற்கும் அவனது பார்வை, முகம் எதுவும் எதுவித பிரதிபலிப்பும் செய்வதில்லை.

அது அவளைச் சிதறவைக்கிறது. அதை அவளது மனம், 'எனது இரண்டு மாத முயற்சி வெறுமனே தண்ணீரில் கரைந்து வீணாகிப்போனதைக் குறித்து நான் மேலும் ஒரு மாதம் ஒரு நாளைக்கு ஒரு தடவையேனும் காலைவேளைகளில் கண்ணீர் உகுத்தேன்' என்பதாகப் பதிவிடுகிறது.

பெண் மட்டுமில்லை, ஆண்கூடத்தான், வசீகரம் செய்யக்கூடியவாறு தன்னைப் புனைந்துகொள்வது எதிர்ப்பாலினத்தாரை ஈர்ப்பதற்காகவே என்கிற மனோதத்துவ உண்மையை நாம் புரிந்திருக்கிறோம். தன் அழகை, வசீகர சக்தியை ஒருவரால் அவ்வாறுதான் நிரூபித்துக்கொள்ளவும் முடியும். அதில் தோல்வியுறும் ஒரு பெண் தன்னளவில் சிதறிப்போகிறாளென்பதை 'பின்தொடர்த'லின் இக்கதாநாயகி வெளிப்படுத்துகிறாள்.

'தன் உள் பேசுதல்' என்ற இந்த அம்சம் இக்கதையில் சிறப்பாக, மனத்தை நெருக்குகிற வகையில் பதிவாகியுள்ளது என்பதைக்கொண்டு, இவ்வாறான வெளிப்பாடுகளின் வகையினமான கதைகளின் வருகை மெல்ல அதிகரித்து வருவதன் காரணத்தையும் விளங்கமுடியும்.

அடுத்ததாக, 'குற்ற ஆலம்' என்கிற அசை சிவதாசனின் சிறுகதைத் தொகுப்பிலுள்ள 'குப்பி' என்ற கதையை எடுத்துக்கொள்ளலாம். காலம் பதிப்பாக ஆகஸ்ட் 2025-இல் வெளிவந்திருக்கிறது இந்தத் தொகுப்பு. தொகுப்பிலுள்ள முதற் கதை இது.

'குப்பி', இலங்கையில் இறுதி யுத்தம் முடிந்து சுமார் 5 / 6 வருட காலவெளியைக்கொண்ட வரலாற்றுப் பரப்பில் புனைவாக விரியும் கதை.

கயல்விழியென்ற போராளிப் பெண் இறுதி யுத்த முடிவில் ராணுவத்திடம் சரணடைகிறாள். பொதுமக்களோடு சரணடையக் காத்திருந்த வேளை, ஏற்கனவே அறிமுகமான அதே இயக்கத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியான சின்ன வழுதியைச் சந்திக்கிறாள். தான் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்தவனென்று அவனும், தான் மன்னாரைச் சேர்ந்தவளென்று அவளும் தமது ஊர்கள்பற்றிய விபரங்களை அப்போது பரிமாறிக்கொள்கிறார்கள். முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வுப் பயிற்சியின் பின் வெளியே வரும் இருவரும் தத்தம் ஊர்போய்ச் சேர்கிறார்கள். ஒருநாள் சின்ன வழுதியைச் சந்திக்க கயல்விழி களுவாஞ்சிக்குடி நோக்கிப் புறப்படுகிறாள். அங்கே வழுதியுடனான சந்திப்பில் இருவரும் சேர்ந்து வாழும் விருப்பம் கொள்கிறார்கள். தங்கள் விருப்பமான வாழ்க்கையை அமைக்க இருவரும் வேலை தேடி வவுனியா வருகிறார்கள். அங்கே விதுஷா - டொமினிக் தம்பதியினரின் நட்பு கிடைக்கிறது. முகுந்தனென்ற நண்பர் மூலம் அவர்கள் தங்குவதற்கான இடத்துக்கும், கயல்விழிக்கு ஒரு வேலைக்கும் ஏற்பாடு செய்கிறாள் விதுஷா. கயல்விழிக்கும் சின்ன வழுதிக்கும் கோயிலிலே திருமணம் நடக்கிறது. கர்ப்பம் தரிக்கும் கயல்விழிக்கு காலத்துக்கு முந்திப் பிறக்கும் குழந்தை நோயாளியாகிவிடுகிறது. அப்போது ஒரு பத்திரிகையிலே ஊடகவியலாளனாக இருக்கும் இவர்களின் புனர்வாழ்வுப் பயிற்சி முகாம் ராணுவ அதிகாரியாகயிருந்த செனவிரத்ன முன்னாள் போராளிகளின் வாழ்நிலை பற்றி எழுதுவதற்காக கயல்விழியைச் சந்திக்கும்பொருட்டு வருகிறான். இவர்களது சந்திப்புக்குப் பின் ஒருநாள் வவுனியா நகர மண்டபத்துக்குப் பின்னாலுள்ள குப்பைத் தொட்டியில் கயல்விழியின் கொலை செய்யப்பட்ட உடல் அழுகிய நிலையில் கண்டெடுக்கப்படுகிறது. நோயாளிக் குழந்தையை பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு தனது எதிர்காலத்தைக் கவனிக்க சின்ன வழுதி தயாராகிறான். 'குப்பி'யின் சுருக்கமான கதை இது.

கதையில் விவரணப்படும் சம்பவமானது படிப்படியாக மேலேறி உணர்வின் உச்சத்தில் முடிவதுதான் ஆரம்பகால சிறுகதைக்குச் சொல்லப்பட்ட மேற்குலகின் வரைவிலக்கணம். புதுமைப்பித்தனின் 'பொன்னகர'த்திலிருந்து 'சாபவிமோசனம்' ஆகிய கதைகள் சிறந்தவைகளாக விமர்சனம் சுட்டிக்காட்டியது இவ்வாறாக உச்சமேறிய கதைகளையே.

ஆனால், சிறுகதை இலக்கியத்தின் படிநிலை மாற்றங்கள், கால மாற்றத்துக்குத் தகுந்தனவாயில்லையென வாசக உலகம் கண்டபோது, சிறுகதை இலக்கியமானது தன் புத்துருவாக்கத்தில் உச்சமேறும் உணர்வுக்குப் பதிலாக பூடகமான



அல்லது மர்மமான முடிவினை அமைத்துப் பார்த்தது. புத்தாயிரத்தின் முதற் காலாண்டில் வெளிவந்த கதைகள் இவ்வாறாக பூடகமான முடிவை ஏற்றுக்கொண்ட கதைகளாக இருந்தன. அது சந்தேகத்துக்கு இடமின்றி, வாசக ஈர்ப்புள்ளதாக நிரூபணமானது. அதிலிருந்து இம்மாதிரி முயற்சிகள் தொடர்ந்தன.

'குப்பி'பற்றி நிறையச் சொல்லமுடியும். மனுஷா ப்ரபானியின் 'பின்தொடர்தல்' கதைபோல் மிகச் சாதாரணமான மொழியும், மிகச் சாதாரணமான நடையும், மிகச் சாதாரணமான வடிவ கட்டமைப்பும், அதாவது இலகு எதார்த்த பாணியும், கொண்டதுதான் 'குப்பி'யும். ஆனாலும் அவ்வளவு சாதாரணமான கதையை எழுதுவது சிரமமானது. ஒரு குறுநாவலளவுக்கு விஸ்தீரணம்கொள்ளும் கதை, தன் புற யதார்த்தத்தை மறந்து எங்கேயும் நடந்துவிடவில்லை. இறுதி யுத்த முடிவின் பின், சமூகம் கொண்டிருந்த மனிதாயச் சிதைவு, அற விழுமியங்களின் சிதைவு, பொருளாதாரச் சிதைவு யாவும் பெரும்பாலும் தவறிவிடாதபடிக்கு கதைப் புலத்தில் ஓடியிருந்தன.

ஒரு சிறந்த சிறுகதைக்கான அம்சங்கள் 'குப்பி'யில் இருந்த போதும், அது இங்கே பிரஸ்தாபிக்கப்படுவதின் காரணம், அதன் முடிவு பற்றி கவனம் கொள்வதற்காகவே.

முன்னாள் ராணுவ அதிகாரியான செனவிரத்னவுக்கும் கயல்விழிக்குமிடையிலான சந்திப்பு நடந்த பின் கயல்விழி கொலை செய்யப்பட்டு விடுகிறாள். அவ்வாறு நடக்கிறதுக்கான காரணம் என்ன? யார் கொலை செய்தார்கள்?

கயல்விழியின் கொலை வாசகரில் ஏற்படுத்தும் அதிர்ச்சி வாசகரால் பிரமாண்டமானது. கதையின் அந்த மர்ம முடிச்சே அத்தனை உச்சத்துக்கு கதையை உயர்த்தியதெனின், அவ்வாறான முடிவு கதையில் இடம்பெறாதிருந்தால் 'குப்பி' கதை எதுவுமில்லையென்றே ஆகியிருக்கும்.

ஆக, 'குப்பி'யை உச்சத்துக்கு எடுத்துச் சென்றது அதன் இறுதியில் வரும் அந்த மர்ம முடிச்சுத்தான்.

வளர்ச்சியின் அம்சங்களாகத் தென்படும் இவை, தொடர்ந்தும் இவ்வண்ணமே நிலைபேறடைந்திருக்குமா, அல்லது இன்னும் மாற்றங்களை ஏற்று வேறு வடிவமும், வேறு நாமமும் பெற்றுக்கொள்ளுமா என்பதையெல்லாம் இப்போது சொல்லிவிட முடியாது. காலவோட்டத்தில்தான் இதற்கான பதிலைக் கண்டடைய முடியும்.

இது ஆரூடமல்ல, இந்த வரன்முறை வளர்ச்சியை ஓர் அமைப்பாக அவதானித்துக் கொள்ளும் கணிப்பு என கொள்வதுதான் மிகப் பொருத்தமானது.



devakanthan@thaiveedu.com



மேரி றெசோதா செந்தூரன்

# தடையற்ற தடம்: போக்குவரத்துத்துறையில் பெண்களின் எழுச்சி

நாட்டின் அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பு சமீப காலங்களில் கணிசமானளவு அதிகரித்து வருகின்றது. அபிவிருத்தி என்பது வெறுமனவே பொருளாதார வளர்ச்சியினைக் கொண்டதல்ல. மாறாக, சமூக, அரசியல் மற்றும் கலாசாரக் கட்டமைப்புகளில் ஏற்படுகின்ற முன்னேற்றகரமான வளர்ச்சி நிலையைக் கொண்டு கணிக்கப்படுகின்றது.

அந்த வகையில், போக்குவரத்துத்துறை ஒரு நாட்டின் சமூக - பொருளாதார அபிவிருத்தி, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் பிராந்திய சமநிலை அபிவிருத்திக்கான அடிப்படை உட்கட்டமைப்புத் துறையாகும். பொதுவாக, இத்துறை பாரம்பரியமாக 'ஆண்கள் ஆதிக்கம்' கொண்ட துறையாகக் கருதப்படுவதால் பெண்களின் பங்களிப்பு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கின்றது.

20-ஆம் நூற்றாண்டில் பெண்களின் பங்களிப்பு உலக அரங்கில் பல்துறைகளிலும் முன்னேற்றம் காணத் தொடங்கியது. இதனால், பெண்கள் விவசாயம் முதற்கொண்டு விண்வெளி வரையான சகல துறைகளிலும் சாதிப்பதற்கான எல்லைகள் விரிவாக்கப்பட்டன. குறிப்பாக, இன்றைய நவீன காலத்துப் பெண்கள் கல்வி, சுகாதாரம், மருத்துவம், விளையாட்டு, அரசியல், விஞ்ஞானம், தொழினுட்பம், அறிவாராய்ச்சியியல் என்று அனைத்துத் துறைகளிலும் முன்னேறி உலகத்தை மாற்றும் வல்லமை கொண்ட சக்தியாக மாறி வருகின்றனர். இத்தகைய சூழலில் போக்குவரத்துத் துறையிலும் பெண்களின் பங்களிப்பு வெளிச்சம் காணத் தொடங்கியுள்ளது.

இதனடிப்படையில், குறைந்தளவிலான பெண்கள் போக்குவரத்துத் துறைகளிலும் ஈடுபடத் தொடங்கினர். ரயில் சேவை, பேருந்து சேவை மற்றும் இதர போக்குவரத்துப் பணிகளில் பெண்கள் உலகளவில் இடம்பிடித்துள்ளமை சாதனைமைல்கல்லாகவே பார்க்கப்படுகின்றது. குறிப்பாக, ஓட்டுநர், பணியாளர், திட்டமிடல் மற்றும் நிர்வாகத்தில் வெவ்வேறு பங்களிப்புகளை வழங்கி வருகின்றனர். போக்குவரத்துத் துறையில் பெண்களின் பங்கானது, குடும்பத்தின் வருமானத்தினைப் பெற்றுக் கொடுப்பதுடன் மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதாரம், சமூக சமத்துவம் மற்றும் சேவைத் தரத்தின் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை உருவாக்குகின்றது.



Mrs. G. Duncan



Berta Albertina Persson

உலக வரலாற்றில் முதன் முறையாக, 1915-களில் இலண்டன் பொதுப் பேருந்தில் நடத்துநராக Mrs. G. Duncan

என்பவர் இணைந்துகொண்டார். இது பெண்கள் அதிகார பூர்வமாகப் போக்குவரத்துத்துறையில் இணைந்து கொண்ட முதலாவது உலக வரலாற்று நிகழ்வாகப் பதிவாகியுள்ளது. அவரைத் தொடர்ந்து, ஒரு தசாப்தத்திற்குப் பிறகு 1927-ல், சுவீடன் நாட்டைச் சேர்ந்த Berta Albertina Persson அந் நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட முதல் பெண் பேருந்து ஓட்டுந ராகப் பொறுப்பேற்று, கனரக வாகனங்களை இயக்குவதில் பெண்களால் முடியும் என்பதை உலகிற்கு நிரூபித்தார். இத்தகைய வரலாற்றுச் சாதனைகள் வளர்ந்த நாடுகளில் பெண்களின் பங்களிப்பைத் துரிதப்படுத்தின. பின்னைய காலங்களில் போக்குவரத்துத்துறையில் பெண்களின் பங் களிப்பினை அதிகரிப்பதில் உலகின் பல நாடுகள் முனைப் புக் காட்டியுள்ளன. பேருந்து சேவைகளில் மட்டுமன்றி ரயில்வே, விமானம் மற்றும் கடல்வழி போக்குவரத்துத் துறை களிலும் பெண்கள் தங்கள் திறமைகளை உலகறியச் செய் கின்றனர்.

தற்காலச் சூழலில், வளர்ந்த நாடுகளின் போக்குவரத்துத்து றையில் பெண்களின் பங்களிப்பு வியக்கத்தக்க முன்னேற் றத்தைக் கண்டுள்ளது. குறிப்பாக, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இத்துறையின் பல்வேறு நிலைகளில் பெண்களின் பங்களிப்பு சுமார் 45% வரை உயர்ந்துள்ளது. அதேபோல், ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் போன்ற கிழக்கு ஆசிய நாடுகள் போக்குவரத்துத்துறையின் தொழினுட்பப் பணிகள் மற்றும் மேலாண்மைப் பிரிவுகளில் 30 முதல் 40 சதவீதப் பெண்களை ஈடுபடுத்தி வருகின்றன. இருப்பினும்,



ஜெ. வசந்தகுமாரி

வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில், வளரும் நாடுகளில் இத்துறையில் பெண்களின் பங்களிப்பு இன்றும் சவால்கள் நிறைந்ததாகவே உள்ளது. போதிய பாதுகாப்பு உள்கட்ட மைப்புகள் மற்றும் சமூகக் கண்ணோட்டம் போன்ற காரணி களால் அங்குப் பெண்களின் ஈடுபாடு குறைவாகவே காணப் படுகிறது. எனினும், நவீனத் தொழினுட்ப வளர்ச்சியும், பாலினச் சமத்துவம் குறித்த விழிப்புணர்வும் இத்துறையில் பெண்களுக்கான புதிய கதவுகளைத் திறந்து வருகின்றன. மேலைநாடுகளில் இத்தகைய மாற்றம் நிகழ்ந்த பல தசாப் தங்களுக்குப் பின்னரே இந்தியாவில் அது எதிரொலித்தது.

அந்த மாற்றத்தின் முன்னோடியாக, ஆசியாவிலேயே அரசுப் பேருந்தை இயக்கிய முதல் பெண் ஓட்டுநர் என்ற வரலாற்றுப் பெருமையைத் தமிழகத்தைச் சேர்ந்த ஜெ. வசந்தகுமாரி பெற்றார். 1993-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், அப்போதைய தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் (பல்லவன் போக்குவரத்து) ஓட்டுநராகப் பணியில் இணைந்த இவர், சமூக மற்றும் நிர்வாக ரீதியிலான பல்வேறு தடைகளைத் தகர்த்து, இத்துறையில் இந்தியப் பெண்களுக்கான புதிய நுழைவுவாயிலைத் திறந்து வைத்தார்.

இலங்கையின் பொதுப்போக்குவரத்து வரலாற்றில் ஒரு மைல்கல்லாக, 2026 பெப்பிரவரி 06-ஆம் திகதி இலங்கை போக்குவரத்துச் சபை (SLTB) முதன்முறையாக 20 பெண் நடத்துநர்களை அதிகாரபூர்வமாகப் பணியில் இணைத்துக் கொண்டது. பல தசாப்தங்களாக ஆண்களின் ஏகபோக உரி மையாகக் கருதப்பட்ட இப்பணியில், பெண்களின் இந்த வரவு சமூக மாற்றத்திற்கான ஒரு முக்கிய சமிக்ஞையாகக் கருதப்படுகிறது. இந்த வரலாற்று நிகழ்வு, இலங்கையின் போக்குவரத்துச் சேவையை இன்னும் பாதுகாப்பானதா கவும், நுகர்வோர் நட்பு ரீதியாகவும் மாற்றுவதற்கான ஒரு முயற்சியாகும். இலங்கையின் விமானத்துறையைப் பொறுத் தவரை, ஏற்கனவே சர்வதேசத் தரத்திலான சாதனைகள் பதி வாகியுள்ளன. 2008-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30-ஆம் திகதி, Sri Lankan Airlines முதல் பெண் கப்டனாக (Captain) Anusha Siriratne நியமிக்கப்பட்டமை வான்வழிப் போக்குவரத்து வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும். இத்தகைய முன்னெடுப்



Anusha Siriratne

புகள் வெறும் வேலைவாய்ப்புக்கானவை மட்டுமல்லாமல், பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தும் நீதிக் கோரிக்கைக ளாகவும், நல்லாட்சி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தூண்களாகவும் அமைகின்றன. இருப்பினும், தற்போதைய தரவுகளின்படி இலங்கைப் போக்குவரத்துத் துறையில் பெண்களின் ஒட்டுமொத்தப் பங்களிப்பு வெறும் 3.4% என்ற மிகக்குறைந்த அளவிலேயே நீடிக்கிறது. இது உலகளாவிய சராசரியுடன் ஒப்பிடுகையில் பின்னடைவான நிலையையே காட்டுகின்றது. எனவே, இத்துறையில் நிலவும்

சவால்களைக் களைந்து, உள்கட்டமைப்பு மற்றும் பாது காப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலமே இத்தகைய வரலாற்றுச் சாதனைகளை ஒரு நிலையான சமூக மாற்றமாக மாற்ற முடியும்.

குறிப்பாக, சில துறைகளில் பெண்கள் உள்ளீர்க்கப்படுவது மிக அரிதாகவே இடம்பெறுகின்றன. சகல துறைகளிலும் பெண்களின் பங்களிப்பினை அதிகரிப்பதுடன், பெண்கள் தாமாகவே விரும்பிப் போக்குவரத்துத்துறைகளிலும் பணி யாற்ற முன்வர வேண்டும். இதற்கான முறையான சாரதி பயிற்சிகளை வழங்குவதிலும், பெண்களின் உள்ளீர்த்தலை அதிகரிப்பதிலும் புதிய மாற்றங்களினைக் கொண்டுவர வேண்டியது அவசியமாகும்.

## பொதுப் போக்குவரத்துத்துறைகளில் பெண்களின் முக்கியத்துவம்:

போக்குவரத்துத்துறை மனித வாழ்வியலோடு நெருக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளது. மக்கள் தங்களது நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பொதுப் போக்குவரத் தினையே நம்பி வாழ்கின்றனர். குறிப்பாக, இச்சேவைகளைப் பயன்படுத்துபவர்களில், ஆண்களுடன் ஒப்பிடுகையில் பெண் களும் பெண் குழந்தைகளும் அதிகளவில் உள்ளனர்.

இதனால், பொதுப் போக்குவரத்தில் பயணிக்கும் பெண்கள் பாலியல் ரீதியிலான அச்சுறுத்தல், சீண்டல்கள் என்பவற் றுக்கு முகம்கொடுப்பவர்களாகவும் உள்ளனர். நீண்ட நேரப் பயணம் மற்றும் இரவு நேரப் பயணங்களில் பெண் பயணிகள் பயம் கலந்த அச்சத்துடன் பயணிக்க வேண்டி உள்ளது.

இத்தகைய சூழலில் பெண் ஊழியர்கள் அதிகளவில் இத் துறைகளில் இணைத்துக் கொள்ளப்படுகின்றபோது பெண் களுக்கும் பெண் குழந்தைகளுக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்குகின்றது. இவற்றினை சமூக மாற்றத்தின் ஒரு முக்கிய புள்ளியாகக் கருத முடியும்.

இத்துறைகளில் அதிகமாக பெண்கள் உள்ளீர்த்துக் கொள் ளப்படுகின்ற பட்சத்தில் பெண்கள் உரிமைகள், பாலின சமத்துவம், நீதி மற்றும் செயல் என்பவற்றின் பிரதிபலிப்பாக விளங்கும். குறிப்பாக, பெண்கள் ஓட்டுநர், நடத்துநர், அலு வலக நிர்வாகி, டிக்கெட் பரிசோதகர் போன்ற பல பொறுப்பு களில் பணியாற்றுவது பெண்களின் திறன், தன்னம்பிக்கை, மற்றும் சமூகத்தில் அவர்களின் சம உரிமையை வெளிப் படுத்துகிறது.

அத்துடன், பெண்கள் தாங்கள் விரும்புகின்ற தொழிலைச் செய்வதற்கான சுதந்திரத்தை வழங்குகின்றது. குறிப்பாக, பெண்கள் இப்பேற்பட்ட துறைகளில் ஈடுபாட்டினை வளர்ப்ப தனால் பால்நிலை ரீதியிலான சமூக மூடநம்பிக்கைகள் உடைத்தெறியப்படுகின்றது.

சமூகத்தில் உள்ள மற்றைய பெண்களும் இத்துறைகளில் வேலை வாய்ப்புக்களைப் பெறுவதற்கான விருப்பத்தினை அதிகரிக்கும். இன்றைய நவீன சமூகங்களில் கூட பல குடும் பங்களில் பெண்கள் ஆண்களைப் போன்று கடினமான வேலைகளைச் செய்வதற்கு அனுமதிப்பதில்லை. அவை ஆண்களுக்கு உரித்தான வேலை என்று காலம் காலமாக நம்பப்படுவதால் தங்களது பிள்ளைகளும் இத்தகைய வேலைகளுக்குச் செல்வதினை குடும்பத்தினர் விரும்புவது இல்லை.

உண்மையில், ஒருவர் விரும்புகின்ற தொழிலைச் செய்கின்ற போதுதான் திருப்தியுணர்வையும் மகிழ்ச்சியையும் அனுபவிக் கிறார். இதனால், ஆண்களுக்கு உரித்தான தொழில் என்ற பிற்போக்கான எண்ணங்கள் களையப்பட்டு, பெண்களும் திறமை அடிப்படையில் இத்துறைகளில் பயணிக்க முடியும் என்ற கருத்தினை சமூகத்திற்கு வழங்குகின்றது.

இத்தகைய மாற்றங்கள் எதிர்காலப் பெண்களுக்கான தொழில் வாய்ப்புகள் விரிவடைவதற்கான சாத்தியக்கூறு களை உருவாக்குகின்றது. எனினும், இங்கு கவனிக்க வேண் டிய முக்கிய விடயம் இத்துறைகளில் இணைந்து கொள்ப வர்களுக்கு ஆண் - பெண் வேறுபாடுகளின்றி சம ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

பெண்களின் பங்கை ஊக்குவிப்பது சமத்துவமான, பாது காப்பான, முன்னேற்றமான சமூகத்தை உருவாக்கும் முக்கிய மான படியாகும். இத்தகைய துறைகளில் பணிபுரியும் பெண் களிற்குப் பணியிடங்களில் நிலவும் பாதுகாப்புக் குறித்த ஏற்பாடுகள் மற்றும் பொருத்தமான வேலை நேரங்களை அரசாங்கமும் போக்குவரத்து நிறுவனங்களும் வழங்க வேண்டும். பெண்கள் பாதுகாப்பாகவும் மரியாதையுடனும் பணிபுரியக்கூடிய சூழல் உருவாகினால்தான் இத்தகைய முன்னேற்றங்கள் நீடித்து நிலைத்த வளர்ச்சிக்கு வித்திடு வதாக அமையும்.

பெண்கள் குடும்பத்தின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு தாரர்களாக விளங்குவது மட்டுமன்றி நாட்டின் அபிவிருத்தி யிலும் கணிசமான பங்கினைக் கொண்டுள்ளனர். ஒரு தனிநபரின் ஒட்டுமொத்த வளர்ச்சியானது தேசிய உற்பத்தி வருமானத்தினை அதிகரிக்கின்றது. இந்நிலையில், பெண்கள் தடைகளைத் தாண்டி வாழ்க்கையில் முன்னேறுவதற்கான பாதைகளினை செம்மைப்படுத்த வேண்டியது அரசினதும் சமூகத்தினதும் கடமையும் பொறுப்பும் கூட.

போக்குவரத்துத்துறையில் பெண்களின் பங்களிப்பு என்பது வெறும் வேலைவாய்ப்பு சார்ந்தது மட்டுமல்ல, அது ஒரு நாட்டின் சமூக நீதி மற்றும் பொருளாதார முன்னேற்றத்தின் அடையாளமாகும். வரலாற்று ரீதியாக பெண்கள் இத்துறை யில் தடம்பதித்து வந்தாலும், பாதுகாப்பு மற்றும் சமூகக் காரணிகளால் அவர்களின் எண்ணிக்கை இன்னும் குறைவா கவே உள்ளது. எனவே, பெண்களுக்குப் பாதுகாப்பான பணிச்சூழல், சம ஊதியம் மற்றும் உரிய பயிற்சிகளை அரசும் சமூகமும் இணைந்து வழங்க வேண்டும். இத்தகைய மாற் றங்கள் பெண்களின் பொருளாதாரச் சுதந்திரத்தை உறுதிப் படுத்துவதோடு, ஒரு வலுவான மற்றும் சமத்துவமான தேசிய அபிவிருத்திக்கு உறுதியான அடித்தளமாகவும் அமையும்.



meryresotha.a@thaiveedu.com

# ஆணும் ஆணும்
# குழந்தை பெறுவதை
# விஞ்ஞானம் சாத்தியமாக்குமா?

ஆண் பெண் என்னும் இரு பால் பிரிவுகள் உயிரினங்களிடையே காணப்படுகின்றன. இவை பால் கவர்ச்சியின் மூலமும் இயற்கை அமைப்பின் மூலமும் ஒன்றோடு ஒன்று கலந்து பரம்பரை அமைப்பு முறையைப் பேணுகின்றன. காதல், காமக் கவர்ச்சி என்பன இருபாலாரிடையே ஏற்படும் உணர்வு எனக் காலம் காலமாக எமது பண்பாடு கற்பித்தது. இதை மீறிய உறவுமுறைகளைத் தற்போது பல உலக நாடுகள் சட்டரீதியாக ஏற்றுக் கொண்டுள்ளமையை அறிகின்றோம். இதன் மூலம் தமது வாரிசுகளை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதனையே இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

தற்போது பால் இனம் என்பது இல்லை. மனிதர் என்னும் இனம் மட்டுமே உள்ளது. உறுப்புக்களைக் கொண்டு பால் கவர்ச்சியுள்ள LGBTQ என்றும் Rainbow Society என்றும் அழைக்கப்படும் இன மக்களும் தம்மை வெளிப்படையாக அடையாளப்படுத்தி உலகமெங்கும் வாழுகின்றனர். இது பற்றி எல்.ஜி.பி.ரி.கியூ என்னும் நூலில் விளக்கமாக எழுதியுள்ளேன்.

பெண்ணும் பெண்ணும் காதல் கொள்வதும் காமம் கொள்வதுமான பண்பையுடையவர்கள் லெஸ்பியன் (Lesbian) என்றும் ஆணும் ஆணும் பாலியல் ரீதியாகத் தொடர்பு வைத்திருப்பவர்கள் கே (Gay) என்றும், ஆண் பெண் இருபாலாரிடமும் பாலுணர்வு கொண்டவர்கள் பைசேக்சுவல் (Bisexual) என்றும், பிறப்பால் ஆணாகவோ பெண்ணாகவோ இருந்தாலும் உள் உணர்வுரீதியாக ஆண்கள் தம்மைப் பெண்ணாகவோ பெண்கள் தம்மை ஆணாகவோ நினைத்து வாழ்பவர்கள் ற்ரான் சென்டர் (Transgender) அதாவது திருநங்கை திருநம்பி என்றும், பாலியல் அடையாளம், அல்லது பாலின அடையாளம் (gender identity) பாரம்பரிய வரையறைகளுக்குள் அடங்காதவர்கள் தங்களை ஒரு குறிப்பிட்ட பாலினப் பிரிவுக்குள் அடைக்க விரும்பாமல் கியுவர் (Queer) என்றும் தம்மை அடையாளப்படுத்தி வாழுகின்றார்கள். இவர்களை விட காதலிலோ, காமத்திலோ நாட்டமில்லாத (aromantic) என்பவர்கள் Questionin, Interse, Asexual, Aromantic, Pansexual, Non - Binary of Envy, Genderqueer, Agender, Stud, Muke, MaHu, Hetaro sexism, Cisgender போன்ற பிரிவுகளும் இருக்கின்றன.



thanavishnu@gmail.com

- சந்திரகௌரி சிவபாலன்

திருமாலுக்கும் சிவனுக்கும் பிறந்த குழந்தையே ஐயப்பர் எனப் புராணக் கதை கூறுகின்றது. திருமால் மோகினி அவ தாரம் எடுத்துத் தாரக வனத்துக்கு முனிவர்களின் தவத்தைச் சோதிப்பதற்காக வந்தபோது சிவன் திருமாலில் மோகம் கொண்டு சிவனுக்கும் திருமாலுக்கும் பிறந்த குழந்தையே ஐயப்பர் என புராண வரலாறு கூறுகின்றது. திருமால் மோகினி யாக மாறியது ர்ரான்சென்டர் என்றே கருத வேண்டும். இவர்க ளுக்கு எப்படி குழந்தை பிறந்தது என்பது கேள்விக்குறி? சமூ கத்திலே இவ்வாறான பால் பிரிவுகள் இருந்திருக்க வேண்டும் என்பதை அறிவிப்பதாக இக்கதை உணர்த்துகின்றது.

பழங்குடி மக்களிடமும் ஆதி மனிதரிடமும் இருந்த முறை தவறிய காதலை ஒரு வரையறைக்குள் கொண்டுவரவே பண் பாடுகளும் கலாசாரங்களும் உருவாகின. அவை மனித உணர்வுகளுக்கு கட்டுப்பாட்டை விதித்து வாழ்க்கையின் சுதந்திரத்தையும் மகிழ்ச்சியையும் இல்லாமல் செய்கின்றன என்று தற்கால தலைமுறையினர் வாதிடுகின்றனர். காலம் காலமாகத் தம்மைக் கொன்று சமூகத்தின் பார்வைக்காக எத்தனையோ ஆண்களும் பெண்களும் இவ்வுலகில் வாழ்ந்து மடிந்திருக்கின்றார்கள். மனிதர்களின் உணர்வுகளுக்கு மரி யாதை கொடுங்கள் என முழக்கமிடுகின்றனர். மேலை நாடு கள் இவற்றுக்குத் தலைசாய்த்து இச்சமூகத்தினரை ஏற்கத் தொடங்கிவிட்டனர்.

## 'கே' எனப்படும் ஆணும் ஆணும் இணைந்து ஒரு சிசுவை உருவாக்க முடியுமா?

கர்ப்பம் உருவாக விந்து (sperm) + முட்டை (egg) + கருப்பை (uterus) தேவை. ஆண்களிடம் விந்து மட்டுமே இருக்கும். முட்டையும் கருப்பையும் இல்லை. வேறு மூன்று வழிகளில் பிள்ளையை இவர்கள் பெற முடியும்.

- **சரோகசி (Surrogacy):**

ஓர் ஆண் தனது விந்துவை ஒரு பெண்ணின் முட்டையுடன் (donor egg) இணைத்து மற்றொரு பெண்ணின் கருப்பையில் (surrogate mother) கர்ப்பமாக வளர்க்கலாம். பிறந்த பிள்ளை சட்டப்படி அவர்களின் பிள்ளையாக இருக்கலாம் (நாட்டின் சட் டத்தைப் பொறுத்து). இந்த முறையில் குழந்தைகளைப் பெற் றெடுக்க வழிமுறை உண்டு.

- **தத்தெடுப்பு (Adoption):**

பல நாடுகளில் ஆண்-ஆண் தம்பதிகள் குழந்தைகளைத் தத் தெடுக்க அனுமதி உள்ளது. குழந்தைக்கு பெற்றோர் அன்பு, பாதுகாப்பு கிடைப்பதே முக்கியம். மனிதருடைய வாழ்க் கையில் அதிகூடிய வாழ்நாட்கள் 100 வருடங்கள் ஆயின். அதன்பின் இந்தப் பூமியிலே அவர்கள் மீண்டு வரப் போவதும் இல்லை. தம்முடைய வாரிசுக்கு எவ்வித புத்திமதிகள் கூறி வழிநடத்தப் போவதும் இல்லை. மரணம் அப்படியே அவர்கள் வாழ்க்கையைக் கரைத்து விட்டுப் போகும். தம்முடைய வாரிசு களும் காலப்போக்கில் அனைத்தையும் மறந்து விடுவார்கள். உலகுக்கு உயிரைச் சிறந்த முறையில் வளர்த்தெடுத்து ஒப்ப டைப்பதே மனிதரின் கடமை அதனைக் 'கே' யினரும் செய்யலாம். இம்முறையிலே குழந்தையைத் தத்தெடுத்து 'கே' இன மக்கள் வளர்ப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

- **எதிர்கால அறிவியல் (இன்னும் ஆராய்ச்சியில்):**

ஆண் செல்களிலிருந்து முட்டை உருவாக்குவது போன்ற ஆய்வுகள் நடக்கின்றன. ஆனால் இது இன்னும் நடைமு றையில் இல்லை. ஆண்களின் உடலுக்குள் கருப்பை வளரச் செய்ய வேண்டும். செல்களை உற்பத்தி செய்ய வேண்டும். சில ர்ரான்ஸ் மென் ஹார்மோனை (testosterone) நிறுத்தித் தங்களுடைய கருப்பையில் இயல்பாகவோ IVF மூலமாகவோ கர்ப்பம் தரித்து பிள்ளை பெற்றிருக்கின்றார்கள்.

இயற்கைக்கு மாறாகப் பல விடயங்களைச் செய்துகாட்ட விஞ்ஞானம் முயற்சி செய்துகொண்டு இருக்கிறது. ஆனால், சமய நிறுவனங்களும் நாட்டு அரசினரும் தடை செய்து கொண்டிருக்கின்றனர். ஏனென்றால், இந்த இயற்கைக்கு மாறான விடயங்களால் பாதிப்புக்களை எதிர்நோக்கலாம் என் கின்றனர். உதாரணமாக ஒரு உயிரின் மரபணு (DNA) அப்ப டியே நகலாக இன்னொரு உயிரை உருவாக்கும் குளோனிங் முறை வெற்றியடைந்தது.

குளோன் செய்ய வேண்டிய உயிரிலிருந்து (உதா: செம்ம றியாடு, மாடு) தோல் செல் போன்ற சாதாரண உடல் செல் எடுக்கப் படுகிறது. அந்த செல்லுக்குள் முழு DNA இருக்கும். அதன்பின் மற்றொரு பெண் உயிரின் முட்டை செல் (egg cell) எடுக்கப்படும். அதில் இருக்கும் நியூக்ளியஸ் (DNA) முழு வதும் அகற்றப்படும். இப்போது அது காலியான முட்டையா கின்றது. இப்போது DNA இடமாற்றம் நடத்தப்படுகிறது. முதல் உயிரின் உடல் செல்லிலிருந்து எடுத்த நியூக்ளியஸ் இந்த காலி முட்டை செல்லுக்குள் வைக்கப்படும். சிறிய மின்சார அதிர்ச்சி கொடுக்கப்படும்போது அந்த செல்லானது 'நான் கருவாக வளர வேண்டும்' என்று நினைத்துப் பிரிவடைந்து வளரத் தொடங்குகிறது. உருவான கரு (embryo) ஒரு சரோ கேட் தாயின் கருப்பையில் வைக்கப்படுகிறது. அது பின் சாதாரண கர்ப்பம் போல வளர்ந்து பிறக்கிறது. இவ்வாறு உருவான முதல் குளோன் பாலூட்டி 1996-இல் ஸ்காட்லாந் தில் பிறந்த செம்மறியாடு 'Dolly'. இதுவே குளோனிங் உல கத்தை மாற்றியது.

எனவே எதுவும் சாத்தியம். மனித உடலும் செல்களினால் உரு வாக்கப்பட்ட ஒரு ரோபோ என்றால் நம்ப மறுக்கும் மனம். ஆனால் அதுவும் உண்மையே. மூளையின் செயற்பாடு நின்று விட்டால், எமது இதயம் தொழிற்பட மறுத்தால் ரோபோக் களைத் திருத்துவது போலத் திருத்திச் செயற்பட முயற்சி செய்வோம். முடிந்தால் எம்முடைய இயந்திர உடல் தாங்கி சிறிது காலம் ஆயுளை நீட்டிப்போம். ஒருநாள் அனைத்தும் நிற்க. வெறும் சாம்பலாவோம்.

செல்களை உருவாக்கிச் செயற்படுத்தி உறுப்புகளை வளர வைக்கும் விஞ்ஞானம் கருப்பையை உருவாக்க முயற்சிக்க மாட்டாது என்று ஏன் நம்ப மறுக்கின்றோம். அமெரிக்காவில் ஓர் ஆண் குழந்தையைக் கருவில் சுமந்தார் என்று பல செய்தி கள் வெளியாகின. அவர் Trans men ஆக இருந்திருக்கின்றார். பிறக்கும்போது பெண்ணாகப் பிறந்து பின் மனத்திலும் அடை யாளத்திலும் ஆணாகத் தன்னை மாற்றி வாழ்ந்தவர் என்பது தெரிய வந்தது.

முடிவாக வேகமாக முன்னேறிவரும் விஞ்ஞானம் எதிர்கா லத்தில் இதனையும் சாத்தியப்படுத்தலாம். நாம் நினைத்துப்

பார்க்காத பல சாதனங்களை விஞ்ஞானம் நடத்திக் காட்டி இருக்கின்றது.

Gay தம்பதிகள் பிள்ளை பெறுவது, வளர்ப்பது என்பதை மூன்று கோணங்களில் - மதம், அறிவியல், சமூகப் பார்வை:

- **மதத்தின் பார்வை:**

மதங்களில் ஒரே மாதிரி கருத்து இல்லை. பெரும்பாலும் பாரம் பரிய விளக்கங்களே ஆதிக்கம் செலுத்துகின்றன.

- **இந்து மதம்:**

  பாரம்பரியமாக திருமணம் என்பதில் ஆண் + பெண் என்ற கருத்தே வலுவாக உள்ளது. ஆனால் புராணங்களில் பாலின வேறுபாடு, மூன்றாம் பாலினம், பாலின மாற்றம் போன்ற குறிப்புகள் இருக்கின்றன (அர்த்தநாரீஸ்வரர், சிகண்டி). Gay பிள்ளை வளர்ப்பு பற்றி நேரடி தடை எதுவும் இல்லை. ஆனால் சமூக நடைமுறை மத விளக்கத்தைவிட கடுமையாக இருக்கிறது.

- **கிறிஸ்தவம்:**

  பெரும்பாலான தேவாலயங்கள் Gay உறவுகளையும் அதில் குழந்தை வளர்ப்பையும் ஏற்க மறுக்கின்றன. சில நவீன / லிபரல் சர்ச்சுகள் (Europe, US) same-sex parenting-ஐ ஏற்றுக்கொள்கின்றன.

- **இஸ்லாம்:**

  Gay உறவுகள் பெரும்பாலும் பாவமாகவே பார்க்கப்படுகின்றன. அதனால் Gay தம்பதிகள் பிள்ளை பெறுவது, வளர்ப்பது மத ரீதியாக ஏற்கப்படுவதில்லை.

மொத்தத்தில் மதங்கள் பெரும்பாலும் பாரம்பரிய குடும்ப அமைப்பையே முன்னிலைப்படுத்துகின்றன.

- **Gay பெற்றோர்கள் வளர்க்கும் குழந்தைகள்:**

Gay பெற்றோர்கள் வளர்க்கும் குழந்தைகள் மனநலம், கல்வி, சமூக இவை எல்லாவற்றிலும் சாதாரண பெற்றோரின் குழந்தைகளுக்கு சமமாகவே இருக்கிறார்கள் என ஆய்வுகள் கூறுகின்றன.

இவர்கள் வளர்ப்பில் குழந்தைக்குத் தீங்கு ஏற்படும் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. குழந்தைக்கு அன்பு, பாதுகாப்பு, நிலையான சூழல் போன்றனவே முக்கியம். பெற்றோரின் பாலினம் முக்கிய காரணம் இல்லை. ஒரு குழந்தைக்கு மிக முக்கியமானது 'யார் பெற்றோர் ?' அல்ல, 'எப்படி பெற்றோர் ?' என்பதே.

முடிவாக காதல் என்பது பிள்ளை பெறும் திறன் அல்ல. காதல் என்பது குடும்பம், பெற்றோர் என்பவை பல வடிவங்களில் இருக்கலாம். 'கே' க்களின் திருமணங்கள் அதிகரிக்கும் பட்சத்தில் மனித உருவாக்கம் குறையும் என்னும் குற்றச்சாட்டுகளும் இருக்கின்றன.

ஆனால், மனிதர்களில் சாதாரணமான மக்களும் இருக்கின்றார்கள்; ரெயின்போ சமூகத்தினரும் இருக்கின்றார்கள். எனவே மனித இனம் அழிந்துபோகச் சாத்தியக் கூறுகள் இல்லை. ஆணும் ஆணும் இணைந்து குழந்தை பெற்றெடுப்பதை எதிர்காலமே பதில் கூறும்.



Chandragowry.Sivapalan@thaiveedu.com



# தாய்வீட்டார் சந்திப்பு 2026

# மட்டக்களப்பு

**14 பெப்பிரவரி 2026**

கடந்த 19 ஆண்டுகளாக, உலகளாவிய சமூக-அரசியல் மாற்றங்கள், வரலாறு, பண்பாடு, இலக்கியம் மற்றும் ஆவணப்படுத்தல் எனத் தமிழர்தம் வாழ்வியலோடு தொடர்புடைய அனைத்துக் களங்களையும் 'தாய்வீடு' காத்திரமான உரையாடலுக்கு உட்படுத்தி வருகிறது. கலை-இலக்கியப் பரப்பிலும் அறிவுசார் விவாதங்களிலும் தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கி வரும் இவ்விதழ், இன்று தமிழ்ச் சமூகத்தின் கருத்தியல் வெளியில் முக்கியமான ஆவணமாக நிலைபெற்றுள்ளது. பன்முகத்தன்மை கொண்ட கருத்துகளுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதன் ஊடாக, சமகாலத் தமிழ்ச் சிந்தனைப் புலத்தில் குறிப்பிடத்தக்க இதழாகப் பரிணமித்துள்ளது.

2007-இல் அச்சு இதழாகத் தனது பயணத்தைத் தொடங்கிய தாய்வீடு, காலமாற்றங்களுக்கு ஏற்ப இணைய வெளியில் விரிவடைந்ததோடு, கடந்த ஐந்து ஆண்டுகளாகச் செவிவழி அறிதலுக்கான 'ஒலி இதழாக' (Audio Magazine) பரிணமித்துள்ளது. காலத்தின் தேவையை முன்கூட்டியே உணர்ந்து தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் இந்தத் தகவமைப்புத் திறனே, 2026 பெப்ரவரி மாதம் தாய்வீடு தனது 227-ஆவது இதழை வெளியிட்டுத் தொடர் வெற்றியைச் சாத்தியப்படுத்தியுள்ளது. பொறுப்புள்ள ஊடகமாகத் தன்னைத் தொடர்ந்து தகவமைத்துக் கொள்வதே தாய்வீட்டின் நெடும்பயணத்தின் வெற்றியாகக் கருதப்படுகிறது.

இப்பயணத்தின் வளர்ச்சிப் பாதையில், வெவ்வேறு தளங்களில் அயராது உழைத்துப் பங்களிப்புச் செய்த படைப்பாளிகளும், பங்களிப்பாளர்களும், நண்பர்களும் ஒரு புள்ளியில் ஒன்றிணைந்து, தமது தோழமையைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கில், இலங்கையில் 'தாய்வீட்டார் சந்திப்பு - 2026' நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உலகம், அன்பின் நாளாகக் கொண்டாடும் பெப்ரவரி 14, 2026 அன்று, மட்டக்களப்பு, ரிவேரா றிசோர்ட் (Riviera Resort)-இல் காலை 10.00 மணிக்குத் தொடங்கிய மண்வாசனையும் இலக்கியச் செழுமையும் நிறைந்த இச்சந்திப்பு, வெறும் சந்திப்பாக அமையாமல், அறிவுசார் குடும்பத்தின் ஆத்மார்த்தமான கூடலாக அமைந்ததுடன், தாய்வீட்டின் அடுத்தகட்டப் பயணத்துக்கான புதிய உரத்தையும், தோழமையின் நம்பிக்கையையும் விதைத்த ஓர் ஆக்கபூர்வமான கலந்துரையாடலாகவும் அமைந்தது.

இந்த ஒன்றுகூடலில் கலந்து கொள்வதற்காகத் தமிழகத்தில் இருந்து எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன தலைவரும் புகழ்பெற்ற ஓவியருமான ட்ராஸ்கி மருது, ஓவியர் ஜீவானந்தன், தாய்வீடு இதழின் கணினி தொழில்நுட்பவியலாளர் சாம் டேனியல், சென்னை 'பிரின்ட் பார்க்' அச்சகத்தார்கள் விவேகானந்தன், சரவணன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்வில் தாய்வீடு இதழின் ஆசிரியர் பி.ஜெ. டிலிப்குமார், தாய்வீடு இதழின் ஆலோசகர் குழு உறுப்பினர் பொன்னையா விவேகானந்தன், தாய்வீடு இதழின் பங்களிப்பாளர்களான பொன். பாலராஜன், அலெக்ஸ் சிவசப்பு, அன்ரன் பீலிக்ஸ் ஆகியோர் கனடாவில் இருந்து வந்து நிகழ்வுகளோடு இணைந்திருந்தனர்.











நிகழ்வின் தொடக்கமாக தாய்வீடு இதழின் ஆலோசகர் குழு உறுப்பினர் ச. சத்தியதேவன் தனது வரவேற்பு மற்றும் தொடக்க உரையை ஆற்றினார். வருகை தந்திருந்த படைப்பாளர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்த அவர், தாய்வீடு இதழ் கடந்த 19 ஆண்டுகளாகத் தமிழ்ச் சூழலில் ஆற்றிவரும் காத்திரமான பணிகளைப் பட்டியலிட்டார். 'தாய்வீடு என்பது வெறும் இதழல்ல; அது உலகளாவிய தமிழ்ச் சமூகத்தை அறிவு ரீதியாக இணைக்கும் ஒரு பாலம்' என்ற கருத்தை முன்வைத்த அவர், அதன் அசுர வளர்ச்சி குறித்தும் பெருமிதத்துடன் உரையாற்றினார். 'தாய்வீட்டாராகிய நாம் அனைவரும், ஒரு புள்ளியில் ஒன்றிணைந்து நமது உறவை மேலும் ஆழப்படுத்திக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும். நம்மிடையேயான புரிந்துணர்வையும் தோழமையையும் பகிர்ந்து கொள்வதன் மூலம், தாய்வீட்டின் எதிர்காலப் பயணத்தை இன்னும் செழுமையாகவும் தொலைநோக்குப் பார்வையுடனும் முன்னெடுத்துச் செல்ல முடியும்' என அவர் தனது உரையில் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, தாய்வீடு இதழின் ஆசிரியர் பி.ஜெ. டிலிப்குமார் சிறப்புரையாற்றினார். அவரது உரை, நீண்ட நெடும்பயணத்தின் அனுபவப் பதிவாகவும் இதழியல் விழுமியங்களின் சாட்சியமாகவும் அமைந்தது. தாய்வீடு இதழின் நிறுவன வரைகலைஞர் ஓவியர் கருணாவுக்கும் (இயூஜின் வின்சென்ட்) தாய்வீடு இதழுக்கும் இடையிலான ஆத்மார்த்தமான உறவை நினைவுகூர்ந்து தனது உரையைத் தொடங்கிய அவர், ஒரு காத்திரமான இதழைத் தடையின்றி வெளிக்கொண்டு வருவதில் எதிர்கொண்ட களச் சவால்கள், நிதி நெருக்கடிகள் மற்றும் தொழில்நுட்ப மாற்றங்கள் குறித்து விரிவாகப் பேசினார். இதழ் கடந்து வந்த ஒவ்வொரு மைல்கற்களையும் நினைவுகூர்ந்த அவர், கால மாற்றத்திற்கு ஏற்ப தாய்வீடு தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொண்டது என்பதை விளக்கினார். இன்றைய டிஜிட்டல் யுகத்தில், மரபார்ந்த வாசிப்புப் பழக்கத்திற்கு அப்பால் செவிவழி அறிதலுக்கான ஒலி இதழ் (Audio Magazine) எத்தகைய வரவேற்பைப் பெற்றுள்ளது என்பதையும், அதன் எதிர்காலத் திட்டங்களையும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார். தமிழில் ஒலி வடிவில் முதன் முதலில் வெளிவந்த இதழ் தாய்வீடு என்பதையும் அக்கூட்டத்தில் பதிவு செய்தார். தாய்வீடு இதழுக்குக் காத்திரமான பங்காற்றி வரும் அனைவரையும் நன்றியோடு நினைவு கூர்ந்த அவர், இன்று தாய் வீடு இதழ் தொடர்ந்து பயணிப்பதற்கு பக்கபலமாக இருந்து வரும் 'Credit Soution Centre' ஸ்ரீ வல்லிபுர நாதர் அவர்களை நெகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்து, பேச்சை நிறைவு செய்தார்.

இந்நிகழ்வின் மிக முக்கியமான அங்கமாக 'பங்கேற்பாளர்களின் அறிமுக நிகழ்வு' அமைந்தது. எழுத்தின் வாயிலாக மட்டுமே ஒருவரை ஒருவர் அறிந்திருந்த பல ஆளுமைகள், நேரில் சந்தித்துத் தங்களை அடையாளப்படுத்திக்கொண்ட தருணமாக இது அமைந்தது. கனடா, இந்தியா மற்றும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்திருந்த படைப்பாளர்கள், வெவ்வேறு நிலப்பரப்புகளைச் சேர்ந்தவர்களாயினும் 'தாய்வீட்டார்' என்ற ஒற்றை அடையாளத்தில் ஒன்றிணைந்திருந்தனர். ஒவ்வொரு படைப்பாளரும் தாங்கள் தாய்வீட்டுடன் கொண்டிருக்கும் ஆழமான

















பிணைப்பையும், தங்கள் எழுத்துப் பயணத்தின் மைல் கற்களையும் சுருக்கமாகவும் சுவாரசியமாகவும் பகிர்ந்து கொண்டனர். இந்த அறிமுக நிகழ்வு வெறும் பெயர்களைப் பரிமாறிக்கொள்ளும் சடங்காக இல்லாமல், வெவ்வேறு தலைமுறைகளைச் சேர்ந்த எழுத்தாளர்களிடையே வலு வான தோழமைப் பாலத்தை உருவாக்கியது.

இந்த உணர்வுபூர்வமான அறிமுகப் படலத்தைத் தொடர்ந்து, கடந்த ஓராண்டு காலப்பகுதியில் ‘தாய்வீடு’ இதழில் வெளிவந்த ஆக்கங்கள் குறித்த அறிவுத்தள உரைகள் இடம்பெற்றன. அதன் முதல் உரையை ந. குகபரன் நிகழ்த்தினார். தாய்வீடு இதழில் வெளிவந்த சிறுகதைகள், மொழிபெயர்ப்புகள் மற்றும் இலக்கியக் கட்டுரைகளின் ‘காத்திரத் தன்மை’ (Substance) குறித்து ஆழமானதொரு பார்வையை அவர் முன்வைத்தார். அவரது உரையில் சில முக்கிய ஆளுமைகளின் படைப்புகள் சிலாகித்துப் பேசப்பட்டன. கிருங்கை சேதுபதி எழுதிய பாரதி குறித்த கட்டுரைகளின் செழுமை குறித்தும், மாவிலி மைந்தனின் கம்பனின் கருவூலம் குறித்தும், சி. ரமேஷ் எழுதிய ஈழத்து நவீன கவிதைகள் மீதான நுட்பமான பார்வை குறித்தும் அவர் விரிவாக விளக்கினார். குறிப்பாக, மா. சித்திவினாயகம் எழுதிய ‘முலையறுக்காதை’ எனும் ஆக்கம் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வைச் சித்திரிப் பதோடு அவர்கள் எதிர்கொள்ளும் வரலாற்று ரீதியான ஒடுக் குமுறைகளையும் சுட்டிக்காட்டுவதாக அவர் குறிப்பிட்டார். தாய் வீட்டின் மொழிபெயர்ப்புத் துறைக்கு வலுசேர்த்த ஆளுமைகளான என்.கே. மகாலிங்கம், கந்தையா சண்முகலிங்கம், மணி வேலுப்பிள்ளை ஆகியோரின் மொழிபெயர்ப்புத் தரம் மற்றும் அதன் அவசியம் குறித்துச் சிலாகித்துப் பேசினார். தாய்வீடு என்பது வெறும் இதழ் மட்டுமல்ல, அது ஒரு சிறந்த ஆவணக் காப்பகம் என்பதைக் குகபரன் தனது உரையின் மூலம் உறுதிப் படுத்தினார்.

குகபரனைத் தொடர்ந்து உரையாற்றிய எம்.எம். ஜெயசீலன், ‘தாய்வீடு’ இதழின் அரசியல் கட்டுரைகள் குறித்து ஆழமான மதிப்பீட்டை முன்வைத்தார். இணையம், ஒலி வடிவம் மற்றும் அச்சு இதழ் எனப் பன்முகத்தன்மையுடன் வெளிவரும் இவ்விதழ், இலங்கை மற்றும் புலம்பெயர் வாசகர்களின் தேவைகளை நிறைவு செய்வதை அவர் சுட்டிக்காட்டினார். அரசியல், வரலாறு, கலை-இலக்கியம், தொழில்நுட்பம், சூழலியல் மற்றும் பொருளாதாரம் என விரிந்த தளங்களில் அமையும் கட்டுரைகளும் மொழி பெயர்ப்புகளும் இவ்விதழின் தனித்துவத்தைப் பறை சாற்றுகின்றன. குறிப்பாக, 2025-ஆம் ஆண்டு வெளிவந்த ஆசிரிய தலையங்கங்கள் மற்றும் அரசியல் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு, அண்மைக்கால உலக நடப்பு களையும் இலங்கையின் சூழலையும் வரலாற்றுப் பின் புலத்துடன் அவர் விரிவாக ஆராய்ந்தார்.

தனது உரையில், பாலஸ்தீன - இஸ்ரேல் மோதல் குறித்து தாய்வீடு கொண்டிருந்த பார்வையைத் தெளிவுபடுத்திய ஜெயசீலன், அதற்குக் காரணமான சக்திகள் மற்றும் அதனால் ஏற்பட்ட அழிவுகள் குறித்தும் விவரித்தார். ரூபன் சிவராஜா, ஞாலசீர்த்தி மீநிலங்கோ, என். சரவணன், ரதன் உள்ளிட்ட பல ஆளுமைகளின் உள்நாட்டு மற்றும்



























சர்வதேச அரசியல் கட்டுரைகளையும், மணி வேலுப்பிள்ளையின் காத்திரமான மொழிபெயர்ப்பு களையும் அவர் சிலாகித்துப் பேசினார். ரஷ்ய - உக்ரேன் மோதல், அமெரிக்க - சீன வணிகப் போட்டி, ஆயுத மற்றும் வள அரசியல் என உலக அதிகாரப் போட்டியின் பின்னணியில் நிகழ்த்தப்படும் போர்களின் மனிதாபிமான மற்றும் பொருளாதார விளைவுகளை உள்ளடக்கியதாக அவரது உரை செறிவாக அமைந்திருந்தது.

இதனைத் தொடர்ந்து, தாய்வீடு இதழில் வெளியான வரலாறு மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் குறித்த வி. துலாஞ்சனின் உரை, காலனியாதிக்க காலத்தின் மறைக்கப் பட்ட பக்கங்களை வெளிச்சமிட்டுக் காட்டியது. டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆரம்பக்கால முயற்சிகள் குறித்து சத்தியதேவன் எழுதிய ‘கடலாதிக்க மூலோபாய மையவாதத் திருகோணமலையின் நிலைமாற்றம்’ என்ற கட்டுரையையும், ஆளுநர் போல்க் மட்டக்களப்பிற்கு மேற்கொண்ட கன்னிப் பயணம் பற்றிய குறிப்புகளையும் அவர் ஆழமாக ஆய்வு செய்தார். குறிப்பாக, ‘குறிஞ்சா முனை’ என்பது ‘குரங்குமுனை’ எனத் தவறாக மொழிபெயர்க்கப் பட்டிருந்த வரலாற்றுப் பிழையைத் திருவேணிசங்கமம் தனது துல்லியமான மொழியாக்கத்தின் மூலம் சீர்செய்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். மட்டக்களப்பு வாவி, தன்னாமுனை, கொத்துக்குளம், புளியந்தீவு என கிழக்கு மண்ணின் வாழ்வியலையும் புவியியல் அடையாளங்களையும் இப்படைப்புகள் எவ்வாறு ஆவணப்படுத்தியுள்ளன என்பதைத் துலாஞ்சன் தனது உரையில் மிகச் சிறப்பாகப் பதிவு செய்தார்.

தொடர்ந்து, அருணாசலம் லட்சுமணனின் மலையக வாழ்வியலோடு இரண்டறக் கலந்த காமன் கூத்துக் குறித்த ஆழமான பார்வைகளைத் துலாஞ்சன் முன்வைத்தார். சமயக் கதைகளை அடித்தளமாகக் கொண்டு நிகழ்த்தப் படும் இக்கூத்து, வெறும் கலை வடிவம் மட்டுமல்லாது சமூக ஒற்றுமை, கூட்டு உணர்வு மற்றும் கலாசாரப் பிணைப்பு ஆகியவற்றின் ஆணிவேராகத் திகழ்வதை லட்சுமணன் நுணுக்கமாகப் பதிவு செய்துள்ளதை அவர் சிலாகித்தார். குறிப்பாக, ஈழத்துக் காமன் கூத்து மரபினை இந்தியக் கலைப் பின்னணியோடு ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தை இக்கட்டுரை வலியுறுத்துவ தாகவும், இது கலைப்பரப்பில் ஒரு முக்கியமான உரையா டலைத் தொடக்கி வைத்துள்ளதாகவும் துலாஞ்சன் தனது உரையில் ஆணித்தரமாகப் பதிவு செய்தார்.

இதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்றது. சமகால இலக்கியங்களின் நிலைமைகள், போக்குகள் மற்றும் அவற்றின் சமூகப் பிரதிபலிப்புகள் குறித்த விரிவான உரையாடலாக அது விரிந்தது. குறிப்பாக, ‘தாய் வீடு’ குறித்து முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள், அனுபவப் பதிவுகள் மற்றும் வாசகப் பார்வைகள் ஆகியவை ஆர்வமூட்டும் சிந்தனைகளைத் தூண்டின.

இவ்வுரையாடலில், படைப்பின் கருத்தியல் அடுக்குகள், கலைநய அமைப்பு, சமூக - உளவியல் பின்னணிகள் ஆகியவை பல்வேறு கோணங்களில் அணுகப்பட்டன. இதனால், இக்கலந்துரையாடல் வெறும் கருத்துப் பரிமாற்ற







மாக அல்லாது, சமகால இலக்கியங்களை மறுவாசிப்புச் செய்யும் நோக்கில் அமைந்த கருத்தியல் விமர்சனமாகவும் அமைந்தது எனலாம்.

'எழுத்தமைவின் உருவாக்கமும் வெளிப்பாடும்' என்ற தலைப்பில் பேராசிரியர் சி. ஜெயசங்கர் அவர்கள் ஆற்றிய உரை, காலனியக் கல்வியின் பிடியில் சிக்கி சீர்குலைந்த நமது சுதேசியக் கல்வி முறையை மீட்டெடுக்கத் தூண்டுவ தாக அமைந்தது. ஐரோப்பியக் கல்வி எவ்வாறு நம் சிந்தனை முறையை மழுங்கடித்து, நம்மைச் சுய அடையாளமற்றவர்களாக மாற்றியது என்பதைச் சுட்டிக் காட்டிய அவர், உண்மையான 'எதிர்ப்பு அரசியல்' என்பது அதிகாரத்தை வெறும் சொற்களால் எதிர்ப்பதல்ல, மாறாக நமது கலைகள் மற்றும் பண்பாட்டு வேர்களில் இருந்து புதிய சிந்தனையாளர்களை உருவாக்குவதே என்றும் கூறினார். அவரது உரை; எழுத்து என்பது வெறும் குறியீட்டு அமைப்பு அல்ல, அது ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளம், சிந்தனையின் வடிவம் என்பதைக் குறிப்பாக வலியுறுத்துவதாக அமைந்தது. அந்த உரை, மரபையும் நவீனத்தையும் இணைக்கும் ஒரு புதிய திறப்பாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து, பாத்திமா புக்ஸ் சென்றர் உரிமையாளர் முகமட் சப்ரி அவர்கள் உரையாற்றினார். தமது உரையில், புத்தகங்களை விரிவான வாசகர்களிடம் கொண்டு சேர்ப்பதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத் தினார். குறிப்பாக, பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தெடுக்க புத்தகங்கள் நேரடியாக அவர்களிடம் சென்றடைய வேண்டிய அவசிய த்தை எடுத்துரைத்தார்.

இரா. சிவலிங்கம் அவர்கள் இதழின் சிறப்பம்சங்கள் குறித்து விரிவாக உரையாற்றினார். குறிப்பாக, தாய் வீடு இதழில் வெளியான கட்டுரைகள், படைப்புகள் மற்றும் பதிவுகள் ஆகியவை காலப்போக்கில் மறையாமல் நிலைத்திருக்க வேண்டுமெனில் அவற்றை ஆவணப்படுத்துதல் அவசியம் என வலியுறுத்தினார். மேலும், இதழில் இதுவரை வெளி வந்த ஆக்கங்களை ஒழுங்குபடுத்திய வகையில் தொகுத்து வழங்கும் ஒரு விரிவான ஆக்கப் பட்டியல் (Catalogue) தயாரிக்கப்பட வேண்டியதன் தேவையையும் எடுத்து ரைத்தார். இத்தகைய தொகுப்பு, ஆய்வாளர்களுக்கும் வாசகர்களுக்கும் வழிகாட்டியாக அமையும் என்றும், இதழின் இலக்கியப் பங்களிப்பை வரலாற்றுப் பார்வையில் மதிப்பிட உதவும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். இதன் மூலம், தாய் வீடு ஒரு இதழாக மட்டுமன்றி, ஆவணப் பெறுமதியுடைய இலக்கியச் சொத்தாக நிலைபெற வேண்டியதன் அவசியம் தெளிவுபடுத்தப்பட்டது.

மிகச்சிறப்பான மதிய உணவு இடைவேளையின் பின்னரான பிற்பகல் அமர்வை, பொன்னையா விவேகானந்தன் நெறிப்படுத்தினார். அவரது உரை, சபையினரை ஆழமாகக் கட்டிப்போட்டது. தாய்வீடு இதழுடனான தமது உறவு, தமிழர் உரிமைச் சிந்தனை, தாம் ஈடுபட்டு வரும் சிறுவர் இலக்கியப் பணிகள் குறித்து அவர் விரிவாகப் பேசினார். மேலும், தாய்வீடு ஒலி வடிவில் வெளிவருவது, புதிய தலைமுறை யினரிடம் இலக்கியத்தை எளிதில் கொண்டு சேர்க்கும்













முயற்சியாக அமைந்துள்ளது என்பதையும் குறிப்பிட்டார். பொன்னையா விவேகானந்தன் தன் உரையில், ‘எமக்கு இடையேயான எல்லைகளைத் தகர்த்து எழுத்தால் இனத்தை ஒன்றுப்படுத்தி வலிமையாய் இயங்குவோம்’ எனக் கூறியமை அங்கிருந்த சபையோர்கள் யாவரையும் கவர்ந்தது.

தொடர்ந்து, உலகக் காண்பியல் தளத்தில் தமிழ் அடையாளத்தை முதன்மையாகப் பதிவு செய்தவர்களில் ஒருவரான ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்கள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். ஓவியர் மருது அவர்களின் உரை, வாசகர்களை ஆழமாக ஈர்த்ததோடு, கலை அனுபவத்தை நேரடியாக உணரச் செய்தது. சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியில் அவர் படித்தபோது அந்நாளில் கும்பகோணம் கவின்கலைக் கல்லூரியின் முதல்வராக இருந்த சிற்பி எஸ். தனபால் அவர்களுடனும் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை நேரடியாகப் பகிர்ந்தார். கல்லூரியின் மூத்த மாணவரான ஓவியர் கே.எம். ஆதிமூலம் அவர்களுடனும் தனக்கு ஏற்பட்ட நட்பு காலப்போக்கில் வெகுமக்கள் இதழ்களில் சமகால ஓவியங்களைப் புகுத்த எவ்வாறு துணைசெய்தது என்பது பற்றியும் விவரித்தார்.

தமது ஓவியப் பணியின் படைப்பியல் அனுபவங்களைத் தத்துரூபமாக விளக்கிய அவர், ஓவியம் என்பது வெறும் காட்சிக் கலை அல்ல; அது சிந்தனையின் வடிவமாகும் எனக் கூறினார். அதேவேளை, தேவதை, சாசனம், முகம், அசுரன், ராஜகாளியம்மன், பாளையத்தம்மன் உள்ளிட்ட முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்குத் திரைப் படங்களில் கலை/ சிறப்புத்தோற்ற இயக்குநராகப் பணி யாற்றிய போது திரைப்படத் துறையில் எதிர்கொண்ட அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார்.

ஓவியர் ஜீவா நந்தன் அவர்கள், தாய்வீடு இதழுடன் தமக்கிடையிலான 14 ஆண்டுக் கூட்டாண்மை அனுபவத்தை நினைவுகூர்ந்தார். சினிமாக் கட்டுரைகள் எழுதல், ஓவியங்கள் தீட்டல், தமிழ்நாட்டில் இருந்து கட்டுரைகளைச் சேகரித்து வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளில் தாம் ஈடுபட்டதை எடுத்துரைத்தார். மேலும், சு. வேணுகோபால் போன்ற ஆளுமைகள் பலர் தாய் வீடு இதழில் எழுதுவதற்குத் தாம் காரணமாக இருந்தமை குறித்தும் தெளிவுபடுத்தினார். குறிப்பாக, தான் எழுதிய சினிமாப் பக்கங்கள் ஆவணப் பெறுமதி உடையவை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

பொன். பாலராஜன் அவர்கள் தமது உரையில் புதிய சொற்கள் உருவாக்கம், கலைச்சொற்களின் இன்றியமை யாமை மற்றும் மொழியின் வளர்ச்சி ஆகியவை தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தார். ஓர் இதழ் மொழிசார் பொறுப்பு ணர்வுடன் செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், தாய் வீடு தோற்றம் பெற்ற பின்னணி, அதன் ஆரம்பகால நோக்கங்கள் மற்றும் இன்று அது அடைந்துள்ள பரிணாம நிலை ஆகியவற்றை வரலாற்றுப் பார்வையில் சுட்டிக்காட்டினார். குறிப்பாக, தாய்வீடு இதழில் ஓவியங்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம், கலை - இலக்கிய ஒருங்கிணைப்பின் வெளிப்பாடாக அமைந்ததை விளக்கினார். மேலும், தாய்வீடு ஒலி வடிவில் வெளிவரும் புத்தாக்க முயற்சி, வாசிப்பு எல்லைகளைத் தாண்டி கேட்புணர்வின்










வழி இலக்கியத்தை மக்களிடம் கொண்டு செல்லும் புதிய பரிமாணமாக அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டார். இதுவரை 23 நூல்களை வெளியிட்டுள்ளமை, இதழின் பதிப்பகச் செயற்பாட்டை உறுதிப்படுத்தும் சாதனையாகவும் அவர் எடுத்துரைத்தார்.

மல்லியப்புச்சந்தி திலகர் அவர்கள், தாய் வீடு இதழை மலையகப் பகுதிகளுக்கு எவ்வாறு கொண்டு சென்று தெளிவத்தை ஜோசப்புடன் விநியோகித்தார் என்பதை தாய்வீடு வாசகருக்குத் தெளிவுபடுத்தனார். குறிப்பாக, மலையகத்தின் பல்வேறு ஆளுமைகள் மற்றும் சமூக அனுபவங்களை வெளிக்கொணர்ந்த இதழாக தாய் வீடு திகழ்கிறது என்பதை வலியுறுத்தினார். இதன் மூலம், தாய்வீடு ஒரு பிராந்தியப் பதிப்பாக மட்டுமன்றி, பரந்த தமிழ் சமூகத்தின் பண்பாட்டு மேடையாக விளங்குகிறது என்பதும் தெளிவுபடுத்தப்பட்டது.




மைக்கல் கொலின் அவர்கள் தாய்வீடு இதழுடனான தனது உறவை ஓர் ஆத்மார்த்தமான பயணமாகவே விவரித்தார். வெறும் வாசகராகத் தொடங்கி, இவ்விதழின் வளர்ச்சிக் காகத் தன்னை அர்ப்பணித்த விதத்தைச் சுவாரசியமாகப் பகிர்ந்துகொண்டார். குறிப்பாக, தாய்வீடு இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியும் அதன்பின்னான நூலுருவாக்கம் பற்றியும் மட்டக்களப்பு மண்ணிற்கு இவ்விதழ் சென்றடை வதை உறுதி செய்ய அவர் மேற்கொண்ட முயற்சிகள் குறித்தும் பேசினார். கலை, இலக்கியப் பரப்பில் தாய்வீடு இதழ் வகிக்கும் தனித்துவமான இடத்தையும், அதன் வரலாற்றுத் தேவையையும் சுட்டிக்காட்டிய அவர், அவ்வியக் கத்தின் ஓர் அங்கமாகத் தான் இருப்பதையும் எடுத்து விளக்கினார்.




ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் 'தாய்வீடு' இதழின் நோக்கமும் போக்கும் குறித்து தெளிவான மதிப்பீட்டை முன்வைத்தார். தாய்வீடு இதழ் ஒரு சாதாரண இலக்கிய வெளியீடாக அல்லாது, சமூக உணர்வையும் பண்பாட்டுப் பொறுப் பையும் சுமக்கும் தளமாகத் திகழவேண்டியது அவசியம் என அவர் வலியுறுத்தினார். மேலும், தாய்வீடு இதழில் வெளிவரும் கட்டுரைகள் மற்றும் படைப்புகளில் தரநிலைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டு மெனவும் சுட்டிக்காட்டினார். கருத்து ஆழம், மொழிநடைத் தெளிவு, சமூகப் பொறுப்பு ஆகியவை இணைந்திருக்க வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார். வெறும் வெளியீட்டிற்காக அல்லாது, வாசகர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் தேர்வு செய்யப்பட்ட படைப்புகளே இடம்பெற வேண்டும் என்றார். இதழில் வெளிவரும் கட்டுரைகள், சிறுகதைகள் போன்றவற்றை அவர் விமர்சனப் பார்வையுடன் மதிப்பீடு செய்து, சில படைப்புகள் ஆழ்ந்த சிந்தனையை வெளிப்படுத்துகின்றன என்றும், சிலவற்றில் மேலும் செம்மை தேவைப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார். இதழ் தொடர்ந்து தன்னிறைவு நோக்கில் முன்னேற வேண்டுமெனவும் அவர் கருத்து தெரிவித்தார்.






கருணாகரன் அவர்கள், 'தாய்வீடு மேற்கொண்ட பணிகளையும் அதன் வளர்ச்சிப் பயணத்தையும் சிலாகித்துப் பேசினார். தாய்வீடு நிறுவனம் தொடங்கிய காலத்திலிருந்து இதுவரை சமூக, கல்வி, பண்பாட்டு தளங்களில் மேற்கொண்ட



முயற்சிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக, இலக்கிய வளர்ச்சி, சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், இளம் தலைமுறையினருக்கான வழிகாட்டல் நிகழ்வுகள் போன்றவை தாய்வீட்டின் அடையாளப் பணிகளாகத் திகழ்கின்றன என்றார். அதன் வளர்ச்சி ஒரு கட்டமைப்புடனும் நோக்குடனும் முன்னேறியுள்ளதாகவும், தன்னார்வத் தொண்டர்களின் பங்களிப்பு அதன் பலமாக அமைந்துள்ளதாகவும் அவர் பாராட்டினார். மேலும், எதிர்காலத்தில் தாய்வீடு மேற்கொள்ள வேண்டிய சில முக்கிய முயற்சிகளையும் அவர் முன்வைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ‘தாய்வீடு’ இதழின் ஆலோசகர் குழு உறுப்பினர் சி. ரமேஷ், இதழின் பன்முகப் பங்களிப்புகள் குறித்து விரிவாகப் பதிவு செய்தார். மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா, நாகேஸ்வரி குமரகுரு, யோகவதி தளையசிங்கம் ஆகியோரின் கட்டுரைகள் வழி பண்டைய இலக்கியச் செழுமையைப் பாதுகாக்கும் இவ்விதழ், சமகால நவீன இலக்கியத்திற்கானதொரு ஊற்றுக்கண்ணாகவும் திகழ்வதாக அவர் குறிப்பிட்டார். சு. வேணுகோபால், ஜிஃப்ரி ஹாசன் ஆகியோரின் நவீனத்துவப் படைப்புகளுக்குக் களம் அமைப்பதோடு, வே. விவேகானந்தன், ஸ்ரீலேக்கா பேரின்பகுமார் உள்ளிட்ட பலரின் எழுத்துகள் ஊடாக ஈழத்து இலக்கியத்திற்கு இவ்விதழ் புதிய உத்வேகத்தை வழங்கி வருகிறது. உலக இலக்கியங்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தும் கந்தையா சண்முகலிங்கம் முதலானோரின் மொழிபெயர்ப்புப் பணிகளையும், சமூகப் போக்குகளைப் பிரதிபலிக்கும் ரதன், த. ஞாலசீர்த்தி போன்றோரின் அரசியல் ஆய்வுகளையும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார். மருத்துவம், காப்புறுதி, நாட்டாரியல் என வாழ்வியலின் பல்வேறு கூறுகளையும் உள்ளடக்கிய ஒரு கலைப்பெட்டகமாகத் திகழும் ‘தாய்வீடு’, இளைய தலைமுறையினரை வருங்கால இலக்கிய ஆளுமைகளாகச் செதுக்கி வருவதை அதன் ஒரு முக்கியமான அடையாளமாக அவர் பதிவு செய்தார்.

எஸ்.கே. விக்னேஸ்வரன் அவர்கள் தனது உரையில் தனக்கும் ‘தாய் வீடு’ இதழுக்கும் இடையிலான உறவுமுறையை நினைவுகூர்ந்தார். தாய் வீடு இதழ் தமக்குப் வெறும் வெளியீட்டு மேடையாக அல்லாது, சிந்தனையைப் பகிர்ந்து கொள்ளும் நெருக்கமான இலக்கியத் தளமாக இருந்து வருவதாகக் குறிப்பிட்டார். நீண்ட காலமாக இதழில் தொடர்ந்து எழுதிவரும் தன்னுடைய அனுபவம், வாசகர்களுடன் நேரடித் தொடர்பையும் உரையாடலையும் உருவாக்கியதாகவும் தெரிவித்தார். குறிப்பாக, இதழில் வெளிவந்த ‘பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே’ என்ற கட்டுரையை எழுதத் தூண்டிய காரணங்களையும் அவர் விளக்கினார். இளம் தலை முறையினருக்கும் சமூக அனுபவம் கொண்ட பெரியவர்களுக்கும் இடையே உருவாகும் எண்ணப் போக்கு வேறுபாடுகள், தொடர்பு இடைவெளிகள் மற்றும் புரிதல் குறைபாடுகள் குறித்து சிந்தனையைத் தூண்டும் உரையாடலை உருவாக்கவே அந்தக் கட்டுரையை எழுதியதாக அவர் கூறினார். தலைமுறைகளுக்கு இடையிலான உரையாடல் பாலம் அவசியம் என்பதே தனது எழுத்தின் நோக்கம் எனவும் அவர் வலியுறுத்தினார். அவரது உரை, எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் இடையே, தாய் வீடு இதழ் தொடர்பை உருவாக்கும் மேடையாக திகழ்கிறது என்பதையும் எடுத்துக்காட்டியது.



இந்நிகழ்வுகளைச் சிறப்புடன் ஒருங்கிணைத்த பிரசாத் சொக்கலிங்கம் தனது உரையில், ‘இந்த ஒன்றுகூடலானது இங்கு முன்வைக்கப்படும் கருத்துகளைக் கேட்பதற்கான தளம் மட்டுமல்ல; மாறாக, எழுத்தாளர்கள் ஒருவரையொருவர் நேரில் அறிமுகம் செய்துகொண்டு, தமக்கிடையேயான உறவை ஓர் ஆழமான பிணைப்பாக மாற்றிக்கொள்வதையே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. நாம் அனைவரும் தொடர்ச்சியாக இணைந்து, நமது எழுத்துகளின் வாயிலாக ஆக்கபூர்வமான சமூகப் பணியாற்றுவோம்’ என நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

வேலாயுதம் இராமர் ‘தாய்வீடு’ இதழின் காத்திரமான பங்களிப்புகளைப் பாராட்டிப் பேசுகையில், மலையகத்தின் கேகாலை மற்றும் இரத்தினபுரி போன்ற புறக்கணிக்கப்பட்ட பகுதிகளில் டித்வா புயலால் ஏற்பட்ட அனர்த்தங்களையும், அங்குள்ள மக்களின் பேசப்படாத அவலங்களையும் இவ்விதழ் துணிச்சலாக வெளிச்சத்திற்குக் கொண்டு வந்ததைச் சுட்டிக்காட்டினார்.

மலையக அரசியலைத் தொடர்ந்து கண்காணித்து வரும் தாய்வீடு, மக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்த ‘காமன் கூத்து’ போன்ற கலை வடிவங்களை ஆவணப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுவதை அருணாசலம் லெட்சுமணன் நினைவு கூர்ந்தார்; குறிப்பாக, தான் இத்தொடரை எழுதத் தொடங்கிய சூழல் மற்றும் அதன் வழி மலையகப் பண்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுக்கும் விதம்











குறித்தும் அவர் விரிவாக விளக்கினார். இனிவரும் தொடர்களில் இந்தியாவில் ஆடப்படும் காமன்கூத்தோடு இணைத்து மலையகத்தில் ஆடப்படும் கூத்தைப் பார்க்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

சரவணன் லக்ஹரன் மலையகப் பெண் கல்வி குறித்தும் இன்றைய வாழ்வாதாரச் சூழலில் மலையக மக்கள் அனுபவித்து வரும் பொருளாதார நெருக்கடிகள் குறித்தும் பேசினார். மலையகப் பெண்கள் பயணிக்க வேண்டிய தூரம் அதிகம் என்று குறிப்பிட்ட அவர், மலையகத்தின் பண்பாட்டு, எதிர்காலம் குறித்தும் பேசினார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கோபிநாத்தின் உரை இளையோர், சமூகத்தின் சீர்குலைவு குறித்ததாகவும் தாய்வீடு இதழில் தான் எழுதிய கட்டுரை தொடர்பான பதிவாகவும் காணப்பட்டது.

சு. குணேஸ்வரனின் உரை புலம்பெயர் தமிழ்ச் சஞ்சிகைகளின் வரலாற்றைக் கூறி அதில் தாய்வீட்டின் இடத்தை மதிப்பிடுவதாக அமைந்தது. 1980 -1990 காலப்பகுதியில் புலம் பெயர் நாட்டில் இருந்து 130-க்கும் மேற்பட்ட சஞ்சிகைகள் வெளிவந்தன. ஆனால் இன்று குறிப்பிட்ட சில சஞ்சிகைகளே வெளிவருகின்றன. அதில் தாய்வீடு அதிகளவான பக்கத்துடன் காத்திரமான சஞ்சிகையாக வெளிவருவதை எடுத்துரைத்தார்.

வேதநாயகம் தபேந்திரன் 'தாய்வீடு' இதழின் காத்திரத்தன்மை குறித்துக் கருத்துரைத்தார். தாய்வீடு சஞ்சிகை வெறும் இலக்கிய வெளியீடாக அல்லாது, சமூகச் சிந்தனையை வடிவமைக்கும் பொறுப்புள்ள மேடையாகத் திகழ்கிறது என அவர் குறிப்பிட்டார். குறிப்பாக அரசியல் பகுப்பாய்வுகளும் இலக்கியப் படைப்புகளும் ஆழமான அணுகுமுறையுடன் வெளிவருகின்றன என்பது இதழின் பலமாகும் எனவும் பாராட்டினார். இதழில் வெளியாகும் கட்டுரைகள் தற்காலச் சமூகச் சூழலுடன் தொடர்புபட்ட சிந்தனைகளை முன்வைப்பதோடு, வாசகர்களை விமர்சனப் பார்வைக்கு இட்டுச் செல்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். அதேவேளை, இலக்கியப் படைப்புகள் மொழிநடைச் செம்மையுடனும் கருத்து ஆழத்துடனும் வெளிப்படுவது தாய்வீட்டின் தனித்துவமாகும் என்றார்.

மேரி றெசோதா செந்தூரன் அவர்கள் தனது உரையில் பல்கலைக்கழக மாணவர்கள் எழுத்துலகில் எதிர்நோக்கும் சிக்கல்களை முன்வைத்தார். பல்கலைக்கழகச் சூழலில் படிக்கும் மாணவர்கள், குறிப்பாகச் சஞ்சிகைகள் மற்றும் இதழ்களில் தங்கள் படைப்புகளை வெளியிட முயலும்போது பல்வேறு மறைமுக மற்றும் வெளிப்படையான நெருக்க டிகளைச் சந்திக்க வேண்டியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். சில நேரங்களில் விரிவுரையாளர்களின் எதிர்பார்ப்புகள், கல்விசார் கட்டுப்பாடுகள் அல்லது மனப்போக்குகளால் மாணவர்களின் சுய சிந்தனையையும் படைப்பாற்றலையும் கட்டுப்படுத்தும் நிலை உருவாகிறது எனவும் அவர் குறிப்பிட்டார். இத்தகைய அழுத்தங்களைக் கடந்து முன்னேற வேண்டிய அவசியம் மாணவர்களுக்கு இருப்பதாகவும், குறிப்பாகப் பெண்கள் எழுத்துலகில் தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்காக அதிகமான மன உறுதியும் போராட்ட உணர்வும் தேவைப்படுகின்றன எனவும் அவர் வலியுறுத்தினார். சமூக மற்றும் கல்விக் கட்டமை ப்புகளில் நிலவும் மறைமுகத் தடைகளை மீறித்தான் பல பெண்கள் இலக்கிய உலகில் சாதனைகள் புரிந்துள்ளனர் என்ற கருத்தையும் முன்வைத்தார். அவரது உரை, கல்வி அமைப்புகளும் இலக்கிய வெளிகளும் மாணவர்களின் சுயவெளிப்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் மாற்றம் காணவேண்டிய அவசியத்தை நினைவூட்டுவதாக அமைந்தது.

செந்தூரன் அவர்கள் தனது உரையில் தமிழ் அடையாளங் களைப் பேண வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார். தமிழ் மொழி, பண்பாடு, மரபு ஆகியவை வெறும் உணர்வுச் சின்னங்களாக அல்லாது, ஒரு சமூகத்தின் இருப்பியல் அடையாளங்களாகும் என அவர் குறிப்பிட்டார்.









உலகமயமாதல் சூழலில் தமிழ் அடையாளங்கள் மங்கிவரும் நிலை குறித்து கவலை வெளியிட்ட அவர், இவ்வகைச் சூழலில் தாய்மொழி கொள்கையை உறுதியாக முன்னெடுக்கும் பொறுப்பு சமூக அமைப்புகளுக்கும் குறிப்பாக 'தாய்வீடு' இதழுக்கும் உண்டு எனத் தெரிவித்தார். 'தாய்வீடு' இதழ் வருங்காலத்தில் தாய்மொழிக் கொள்கையை முன்னிறுத்தி, தமிழின் மரபையும் மொழியின் செழுமையையும் காக்கும் பணிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். இளம் தலைமுறையினருக்குள் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தெடுப்பதே அதற்கான அடித்தளம் எனவும் வலியுறுத்தினார். வாசிப்பு; சிந்தனையை செம்மைப்படுத்தி, நற்பண்புகளை வளர்த்து, சமூகப் பொறுப்புணர்வை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்த கருவி என அவர் விளக்கினார். அவரது உரை, மொழி, வாசிப்பு மற்றும் இளையோர் முன்னேற்றம் ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை என்பதை உணர்த்துவதாக அமைந்தது.

அன்ரன் பீலிக்ஸ், அலெக்ஸ் சிவசம்பு, யுகசேனன் ஆகியோர் 'தாய்வீடு' சஞ்சிகையின் உள்ளடக்கம் மற்றும் அதன் இயங்கு நிலை குறித்து தங்கள் கருத்துகளைப் பகிர்ந்தனர். தாய்வீடு சஞ்சிகையின் தனித்துவம் அதன் பல்துறை உள்ளடக்க அமைப்பிலேயே நிலை கொள்ளுகிறது. இலக்கியப் படைப்புகள், சமூகக் கட்டுரைகள், அரசியல் விமர்சனங்கள், பண்பாட்டு ஆய்வுகள் ஆகியவை ஒரே தளத்தில் இணையும் போது, அது வெறும் கலைவெளியல்ல; சிந்தனை வடிவமைக்கும் அறிவுத் தளமாக மாறுகிறது. இதன் மூலம் இலக்கியம் தனிமைப்படுத்தப்பட்ட கலைநிகழ்வாக அல்லாது, சமூக நிஜங்களோடு உரையாடும் செயல்முறையாக மாற்றப் படுகிறது என்பதைக் குறிப்பிட்டனர். இதழில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், ஆய்வுகள் போன்றவை வெறும் கலைநயப் பதிவுகளாக இல்லாமல், சமூக நிதர்சனங்களை வெளிக்கொணரும் ஆழமான அணுகுமுறையுடன் அமைந்துள்ளன எனப் பாராட்டினர்.

மேலும், தாய்வீடு இதழின் இயங்கு நிலை தொடர்பாக அவர்கள் கூறுகையில், பல்வேறு சிந்தனைப் பாசறைகளை இணைக்கும் திறந்த தளமாக இது விளங்குகிறது எனத் தெரிவித்தனர். கருத்து வேறுபாடுகளையும் விமர்சனப் பார்வைகளையும் அஞ்சாது ஏற்றுக்கொண்டு, சிந்தனையைத் தூண்டும் படைப்புகளுக்கு இடமளிப்பது இதழின் வலிமை எனவும் சுட்டிக்காட்டினர். இதழில் வெளிவரும் ஆக்கங்கள் இலக்கிய வரம்புக்குள் மட்டுப்படாமல், சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன என்பதே அவர்களின் கருத்தின் மையமாக அமைந்தது. வாசகர்களின் சிந்தனையைத் தூண்டி, சமூகப் பொறுப்புணர்வை வளர்க்கும் பணியில் தாய்வீடு சஞ்சிகை தொடர்ந்து செயல்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் அவர்கள் வெளிப்படுத்தினர்.

'தாய் வீடு' சஞ்சிகையை மையமாகக் கொண்டு நடைபெற்ற இக்கலந்துரையாடல், ஒரு இதழின் சாதாரண செயல்பாடுகளை மட்டுமே பரிசீலித்த நிகழ்வாக இல்லாமல், அதன் நோக்கம், போக்கு, பொறுப்பு மற்றும் எதிர்காலப் பாதையை ஆராய்ந்த ஆழமான சிந்தனை மேடையாக அமைந்தது. பங்கேற்ற பேச்சாளர்கள் இதழின் காத்திரத்தன்மை, அரசியல் மற்றும் இலக்கிய ஆழம், தரநிலை, சமூகப் பொறுப்பு ஆகிய அம்சங்களை பல்வேறு கோணங்களில் மதிப்பிட்டனர். சஞ்சிகை சமூக விழிப்புணர்வை உருவாக்கும் கருவியாகவும், படைப்பாற்றலை ஊக்குவிக்கும் தளமாகவும், தலைமுறைகளுக்கிடையிலான உரையாடலை உருவாக்கும் மேடையாகவும் திகழவேண்டும் என்பதே உரைகளின் மையச் சிந்தனையாகத் தென்பட்டது. குறிப்பாக இளம் எழுத்தாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பெண்கள் எழுத்துலகில் எதிர்நோக்கும் சவால்கள் எடுத்துக்கூறப்பட்டதன் மூலம், சஞ்சிகையின் பங்கு ஒரு வெளியீட்டு மேடையைத் தாண்டி சமூக மாற்ற இயக்கமாக அமைய வேண்டும் என்பதை இக்கலந்துரையாடல் உணர்த்தி நின்றது. மேலும், தமிழ்







அடையாளங்களைப் பேணுதல், தாய்மொழிக் கொள்கையை முன்னிறுத்துதல், வாசிப்புப் பண்பாட்டை வளர்த்தெடுத்தல் ஆகியவை 'தாய்வீடு' சஞ்சிகை எதிர்காலத்தில் தீவிரமாக முன்னெடுக்க வேண்டிய பணிகளாகக் குறிப்பிடப்பட்டன. தரநிலையுடன் கூடிய தேர்வு, ஆழமான சிந்தனை, சமூகப் பொறுப்புணர்வு ஆகியவை இதழின் வளர்ச்சிக்குத் தவிர்க்க முடியாத அடித்தளங்களாகக் கருதப்பட்டன.

இவ்வாறான எழுத்தாளர் ஒன்றுகூடல்களை இத்துணை சிறப்பாக இலங்கையிலே தொடர்ச்சியாக வெளிவரும் எந்த இதழ்களும், அமைப்புகளும் நடத்தியதில்லை என்பதையும் சிலர் குறிப்பிட்டிருந்தனர். தாய்வீடு நடத்திய இந்த ஒன்றுகூடலில் பத்துக்கும் மேற்பட்ட இளைய எழுத்தாளர்கள் கலந்துகொண்டிருந்தமை சிறப்பாக நோக்கப்பட்டது. அவர்கள் தமது கருத்துரைப்பின்போது இளம் எழுத்தாளரான தமக்குக் களம் வழங்கிவரும் தாய்வீடு இதழுக்கு நன்றி தெரிவித்ததோடு தொடர்ந்து பங்காற்ற, இன்னும் பல இளம் எழுத்தாளரையும் எதிர்காலத்தில் தம்மோடு இணைப்ப தாகக் குறிப்பிட்டனர்.

கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கருத்துகள் மற்றும் மேலதிக விளக்கங்கள் கோரப்பட்ட வினாக்களுக்கு, 'தாய்வீடு' இதழின் ஆசிரியர் பி.ஜெ. டிலிப்குமார் விரிவான பதிலளித்த துடன், இதழின் கொள்கை ரீதியான நிலைப்பாடுகளையும் தெளிவாக வரையறுத்து விளக்கினார். சகலவிதமான ஒடுக்குமு றைகளுக்கும் பாகுபாடுகளுக்கும் எதிராக நின்று, பாதிக்கப் பட்ட தரப்பினருடன் கைகோர்ப்பதே தாய்வீட்டின் முதன் மையான நிலைப்பாடு என்பதை அவர் ஆணித்தரமாகப் பதிவு செய்தார். அத்துடன் சாதிய, இன, மொழி மற்றும் பிரதேச வாதங்களைச் சமரசமின்றிக் களைந்து, சமூக முன்னேற்றத்தை நோக்கிய ஒரு பொதுவான மாற்றத்திற்கான களமாகத் 'தாய்வீடு' இதழ் இயங்குவதையும் அவர் வலியுறுத்தினார். புதிய எழுத்தாளர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கான ஆக்கபூர் வமான களத்தை அமைத்துக் கொடுப்பதில் 'தாய்வீடு' கொண் டுள்ள தீராத விருப்பம் குறித்துத் தனது உரையில் குறிப்பிட்ட அவர், இதழில் வெளியாகும் காத்திரமான படைப்புகளைத் தொகுத்து நூலாக்கம் செய்யவுள்ள மகிழ்ச்சிகரமான செய்தி யையும் அங்கு கூடியிருந்த தாய்வீட்டாரிடம் பகிர்ந்து கொண்டார்.

இந்நிகழ்விற்கு வருகை தந்திருந்த 'தாய்வீடு' உறவுகளை இன்முகத்தோடு வரவேற்று உபசரித்ததோடு, அவர்க ளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் எவ்விதக் குறையுமின்றி நிறைவாகச் செய்தளித்தார் பிரசாத் சொக்க லிங்கம். தாய்வீட்டின் ஆலோசகர் குழு உறுப்பினரான இவர், இச்சந்திப்பிற்கான ஒட்டுமொத்த ஏற்பாடுகளையும் மிக உயரிய தரத்துடனும், வியக்கத்தக்க நேர்த்தியுடனும் முன்னின்று ஒருங்கிணைத்திருந்தார். அவரது அர்ப்பணிப் புடன் கூடிய திட்டமிடலும், நுணுக்கமான செயல்பாடுகளுமே இவ்விழா இத்தனை பொலிவோடும் தடையின்றியும் நடைபெ றுவதற்கு அச்சாணியாக அமைந்தன. விருந்தோம்பல் பண்பிலும், நிர்வாகத் திறனிலும் அவர் காட்டிய அக்கறை அங்கிருந்த அனைவரின் பாராட்டுகளையும் ஒருசேரப் பெற்றது. பிரசாத்தின் நோக்கத்தை உணர்ந்து, அவருக்குத் தோள் கொடுத்த ஜெயராஜ் ஹேமநாத்தின் சீரிய ஒத்து ழைப்பும் ஒத்தாசைகளும், வெற்றி பெறுவதற்கு வலுவான தூண்களாக அமைந்தன. நிகழ்வைத் தன்னார்வத்துடன் ஒளிப்படங்களாகப் பதிவு செய்த அருள்கார்க்கி மற்றும் 'தாய்வீடு' சந்திப்புகள் முழுவதையும் காணொளியாகப் பதிவு செய்த சாம் டேனியல் ஆகியோரின் அர்ப்பணிப்பு மிக்க பணிகள், இந்நிகழ்வை ஒரு வரலாற்றுச் சாட்சியமாகக் காட்சிப்பதிவு செய்யப் பெரிதும் உதவின.

ச. சத்தியதேவனின் நன்றியுரையுடன் இக்கலந்துரையாடல் இனிதே நிறைவுற்றது. இக்கலந்துரையாடல் மொத்தத்தில் 'தாய்வீடு' சஞ்சிகை கடந்த பாதையை மதிப்பீடு செய்வ தோடு, அதன் வருங்காலப் பயணத்திற்கான தெளிவான திசை நிர்ணயத்தையும் வழங்கியதாகக் கூறலாம். இலக் கியத் தரமும் சமூகப் பொறுப்பும் இணைந்த வெளியீடாகத் தாய்வீடு இதழ் திகழ வேண்டிய அவசியத்தை இந்த ஒன்று கூடல் வலியுறுத்தியதோடு, சஞ்சிகையின் எதிர்கால வளர்ச் சிக்கான நம்பிக்கையையும் உறுதிப்படுத்தியது.

'தாய்வீடு' இதழின் வழியாக ஈழத்துத் தமிழ் எழுத்துலகை உலகளாவிய தளத்தில் இன்னும் நெருக்கமாகப் பிணைக்கும் என்ற நம்பிக்கையுடன் 'தாய்வீட்டார் சந்திப்பு - 2026' இனிதே நிறைவுற்றது.



# புதிய தலைமுறையினரின் பார்வையில் ‘தாய்வீடு’ இதழ்











பெப்பிரவரி 15-ஆம் நாளன்று புதிய தலைமுறையினரின் பார்வையில் ‘தாய்வீடு’ இதழ் குறித்த விசேட உரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளரும், தாய்வீடு இதழைப் பரவலாக்குவதில் தொடர்ச்சியாகப் பங்காற்றி வருபவருமான கலாநிதி சி. ஜெய்சங்கர் அவர்களின் தலைமையில், அவரது இல்லத்தில் இவ்வமர்வின் இரண்டாம் கட்டம் சிறப்பாக நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், ‘தாய்வீடு’ இதழில் வெளிவந்த ஆக்கங்கள் குறித்துத் தங்களின் தனித்துவமான பார்வைகளையும், அவை ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்தும் விரிவாகப் பகிர்ந்து கொண்டனர். இந்த உரையாடலின் வாயிலாக, இன்றைய இளைய தலைமுறையினர் ‘தாய்வீடு’ இதழை எத்தகைய கோணத்தில் அணுகுகிறார்கள் என்பதையும், அவர்களின் சமகாலத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் எவை என்பதையும் தெளிவாக அறிய முடிந்தது. இதன் மூலம், புதிய தலைமுறையினரைத் ‘தாய்வீடு’ இதழுடன் ஆக்கபூர்வமாக இணைக்கும் நோக்கம் மேலும் வலுப்பெற்றது.









# கொட்டகலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சந்திப்பு

பெப்பிரவரி 16-ஆம் நாளன்று மலையகத்தின் கொட்டகலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மற்றுமொரு விசேட சந்திப்பு முன்னெடுக்கப்பட்டது. தாய்வீட்டோடு நீண்டகாலமாகப் பயணிக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மல்லியப்புசந்தி திலகர் அவர்களின் நெறிப்படுத்தலில் நடை பெற்ற இச்சந்திப்பில், ‘தாய்வீடு’ இதழின் எதிர்காலப் பணிகள் மற்றும் அதன் வளர்ச்சிப் போக்குகள் குறித்துப் பயன்மிக்க பல கருத்துகள் ஆக்கபூர்வமாகப் பகிரப்பட்டன. மட்டக்களப்பின் மண்வாசனையில் தொடங்கி, மலையகத்தின் பசுமைப் பள்ளத்தாக்குகள் வரை விரிந்திருந்தது தாய்வீட்டாரின் இலக்கியப் பாலம்

# கிளிநொச்சியில் நடைபெற்ற பொன்னையா விவேகானந்தனின்

## நூல்கள் அறிமுக நிகழ்வு





விரிவுரையாளரும் எழுத்தாளருமான பொன்னையா விவேகானந்தன் அவர்கள் எழுதிய நான்கு நூல்களின் அறிமுக நிகழ்வு, கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் கடந்த பிப்ரவரி 18-ஆம் நாள் தமிழ்த் தேசிய கலை இலக்கியப் பேரவை, 'தாய்வீடு' இதழ், கிளிநொச்சி மாவட்ட விவாதிகள் கழகம் ஆகிய அமைப்புகளின் கூட்டு ஏற்பாட்டில் நடைபெற்றது. கவிஞரும் எழுத்தாளருமான தீபச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த புகழ்பெற்ற ஓவியரும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத் தலைவருமான டிராஸ்கி மருது முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். இவருடன் பிரபல ஓவியர் ஜீவானந்தன், 'தாய்வீடு' இதழின் ஆசிரியர் பி.ஜெ. டிலிப்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றுச் சிறப்பித்தனர். கவிஞரும் எழுத்தாளருமான தீபச்செல்வன் இந்நிகழ்வைத் தலைமைதாங்கிச் சிறப்புற ஒழுங்கமைத்திருந்தார்.

நூல் அறிமுக நிகழ்வு மாலை 3:30 மணியளவில் இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் பெருமளவிலான வருகையுடன் மிகச் சிறப்பாகத் தொடங்கியது. மண்டபம் நிறைந்திருந்த வாசகர் கூட்டத்தின் முன்னிலையில், கவிஞர் தீபச்செல்வன் அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்று நிகழ்வின் ஒவ்வொரு அங்கத்தையும் மிகுந்த தொழில்முறை நேர்த்தியுடனும் கலைத்துவத்துடனும் வழி நடத்தினார். வெளியிடப்பட்ட நான்கு நூல்களையும் கலாநிதி க. குணேஸ்வரன், திருநகர் ஜெகா, திரு. பெருமாள் கணேசன் மற்றும் திரு. பாலா சயந்தன் ஆகிய நான்கு துறைசார் வல்லுநர்கள் அறிமுகம் செய்து வைத்தனர். அவர்கள் இந்நூல்களை ஆழமாக வாசித்து, அவற்றின் சமூகத் தேவையையும் உள்ளடக்கத்தையும் செறிவாகப் பதிவு செய்த தோடு, அவர்களின் திறம்பட அமைந்த அறிமுக உரைகள் அவையோரின் கவன த்தை வெகுவாக ஈர்த்தன.

முதன்மை விருந்தினர் ஓவியர் டிராஸ்கி மருது அவர்கள் தனதுரையில், இதுபோன்ற காத்திரமான நூல்களின் அவசியத்தை வலியுறுத்தியதோடு, படைப்பாளர்களுக்கு மக்கள் தகுந்த ஆதரவை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும், ஈழ மண்ணுக்கும் தனக்குமான நீண்ட காலத் தொடர்புகளை நினைவுகூர்ந்து அவர் உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய ஓவியர் திரு. ஜீவானந்தன், வெளியிடப்படுகின்ற நூல்களில் ஓவியம் உள்ளிட்ட கலைவடிவங்கள் எத்தகைய முக்கியத்துவத்தைப் பெறுகின்றன என்பதை நுணுக்கமாக விளக்கினார். நிறை வாக, பி.ஜெ. டிலிப்குமார் அவர்கள் ஒரு வெளியீட்டாளராக 'தாய்வீடு' இதழ் முன்னெடுத்து வரும் காத்திரமான இலக்கியப் பணிகள் குறித்துத் தனதுரையில் எடுத்துரைத்தார்.



இந்நூல்களின் உருவாக்கத்தில் பங்களிப்பு செய்த பெரும்பாலானோர் இவ்வரங்கில் ஒன்றுகூடியிருந்தமை நிகழ்வின் தனிச்சிறப்பாக அமைந்தது. நூல்களுக்கு ஓவியம் வரைந்த ஓவியர்களான டிராஸ்கி மருது மற்றும் ஜீவானந்தன், நூல்களை வடிவமைப்புச் செய்த திரு. பிரதீபன் மற்றும் ஓவியர் செல்வன், இந்த நூலைககளை சிறந்த முறையில் அச்சிட்ட அச்சகத்தார்கள் திரு விவே கானந்தன், திரு சரவணன் ஆகியோருடன், நூல் களைத் தரம் குறையாமல் வெளியிட்ட 'தாய்வீடு' இதழின் ஆசிரியர் திரு. பி.ஜெ. டிலிப்குமார் அவர்களும் அவை யின் முன் அழைக்கப்பட்டு மதிப்பளிப்பு செய்யப்பட்டனர். படைப்பின் பல்வேறு நிலைகளில் உழைத்த கலைஞர் களும் தொழில்நுட்பக் கலைஞர்களும் ஒரே மேடையில் கௌரவிக்கப்பட்டமையானது அங்கிருந்தோரிடையே நெகிழ்ச்சியூட்டும் ஒரு தருணமாக அமைந்தது.

கிளிநொச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிதன் அவர்கள் நிகழ்வில் வாழ்த்துரை வழங்கினார். அவர் தன துறையில் மண்ணின் மைந்தனான பொன்னையா விவேகா னந்தன் இங்கு பலருக்கு முன்னோடியாக இருந்தார் என்றும் இந்த நிகழ்வுக்கு வேறுபாடுகளை மறந்து பலரும் ஒன்றுகூடியிருப்பது மகிழ்ச்சி தருவதாகவும் குறிப்பிட்டார்.

நிகழ்வின் இறுதியில் ஏற்புரை வழங்கிய பொன்னையா விவேகானந்தன் அவர்கள், இந்நிகழ்வு இவ்வளவு சிறப்பாக அமைவதற்குக் காரணமாக இருந்த அனைவ ருக்கும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். குறிப்பாக, புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தமது இருப்பு சார்ந்து எதிர்கொண்டு வரும் சவால்களைத் தனது உரையில் முன்வைத்த அவர், 'புலம்பெயர் தமி ழர்கள் தங்களின் தனித்துவமான அடையாளத்துடன் நீண் டகாலம் நிலைத்திருக்கும்போது தான், தாயகத் தமிழர்க ளுக்கும் அதன் பயன்கள் முழுமையாகச் சென்றடையும்' என்ற கருத்தாழமிக்க செய்தியைப் பதிவு செய்து தனது உரையை நிறைவு செய்தார்.









18

# ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்

- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

tg.theeban@gmail.com

## இதுவரை...

மகாவம்சம் பொ.ஆ.பி. 6-ஆம் நூற்றாண்டளவில், பாளி மொழியில், மகாநாம தேரர் என்னும் பௌத்த பிக்குவால் தொகுக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. மகாவம்சத்தின் முற்பகுதியில் பெரும்பாலான பகுதி, பௌத்தம் வட இந்தியாவில் தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கூறுவது. பௌத்தத் துறவிகள் ஒருங்கிணைந்து, மகிந்தன் மூலமாக பௌத்தம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட வரலாறு, பல்லாயிரக்கணக்கான மக்கள் இலங்கையில் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டது, பௌத்த மதத்தின் பெருமையைக் காட்டும் வகையிலான, (நம்பகத்தன்மை அற்ற) செவிவழிக் கதைகள் முதலியவற்றைத் திரட்டி 'அட்டகதா' என்னும் பெயரில் 'பாளி' மொழியில் தொகுத்தார்கள். இது, பின் ஒரு காலத்தில், காலவரிசைப்படி ஒழுங்கு செய்யப்பட்டு 'அட்டகதா-மகாவம்சம்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டது.

தேரர், தியானத்தில் இருந்த சுமணனை அழைத்து, 'சுமணா! உன் பாட்டனான அசோகச் சக்கரவர்த்தியிடம் சென்று, 'தேவநம்பியதீசன் புத்த மார்க்கத்தை மேற்கொண்டுவிட்டான். அவன் ஒரு ஸ்தூபம் கட்ட விரும்புகிறான். மாமுனிவரின் அஸ்தியையும் குருநாதர் உபயோகித்த பிட்சா பாத்திரத்தையும் அவனுக்குத் தருவாயாக' என்று கேட்டு, மாமன்னனிடமிருந்து பிட்சா பாத்திரத்தையும் அது நிறைய அஸ்தியையும் பெற்றுக் கொள். அதன் பின் தேவேந்திரனிடம் செல். புத்தருடைய வலது மேல் தாடைப் பல்லும் வலது காரை எலும்பின் அஸ்தியும் அவனிடம் இருக்கின்றன. அவற்றில் பல்லை அவன் வைத்துக்கொண்டு வலது காரை எலும்பின் அஸ்தியைத் தரும்படி கேட்டு வாங்கி வா.' என்று பணித்தார். அதன்படி சுமணன் அசோகச் சக்கரவர்த்தியிடமிருந்து புத்தரின் அஸ்தியையும் அவர் பயன்படுத்திய பிட்சாபாத்திரத்தையும் இந்திரனிடமிருந்து புத்தரின் வலது காரை எலும்பின் அஸ்தியையும் வாங்கி வந்தான்.

தேரர், எல்லா அஸ்திகளையும் மலைமீது வைத்தார். அதனால், மிசாக மலை என்ற பெயருடனிருந்த அம்மலை பின்னர் சேதிய மலை என்று பெயர் பெற்றது. தேரர், காரை எலும்பு அஸ்தியைக் கையில் எடுத்துக் கொண்டு சீடர்களுடன் புறப்பட்டார்.

அரசன், 'இது புத்தரின் அஸ்தியாக இருந்தால் என் வெண்கொற்றக்குடை சாயும், பட்டத்து யானை தானாகவே மண்டியிட்டு வணங்கும். அஸ்தியுடனுள்ள இந்தப் பாத்திரம் என் தலைமேல் வந்து அமரும்' என்று எண்ணினான். அரசன் எண்ணியபடியே அனைத்தும் நடந்தன. அரசன் தன் தலைமீதிருந்த பாத்திரத்தை எடுத்து யானையின் மேல் வைத்தான். யானை பிளிறியது, பூமி அதிர்ந்தது.

அபயவாவியிலிருந்து மணல் எடுத்துவரப்பட்டு மணல்மேடு தயாரிக்கப்பட்டு அஸ்தி உரிய மரியாதையுடன் உரிய இடத்தில் வைக்கப்பட்டது. அரசன் தேவநம்பியதீசன் அரச குடும்பத்தின் ஆதரவில் விகாரம் கட்டினான். விகாரம் முழங்கால் உயரம் கட்டியதும் அதில் அஸ்தி வைப்பதற்கான விழா கொண்டாட்டம் பற்றி நாடெங்கும் அறிவிக்கப்பட்டது. மக்கள் திரள் திரளாகக் கூடினர். சுற்றிலும் மக்கள் சூழ்ந்திருக்க அஸ்தி யானையின் முதுகிலிருந்து ஆகாயத்தில் மேலெழுந்து எல்லோரும் காணும்படி காற்றில் மிதந்தது. எட்டுப்பனை உயரத்தில் நின்ற அதனைப் பார்த்து மக்கள் வியப்பினால் திகைத்தனர். இரண்டும் ஓரிடத்தில் நடக்கும் அதிசயம் அவர்களுக்கு மயிர்க் கூச்செறியச் செய்தது. அதிலிருந்து வந்த ஒளியும் பொழிந்த நீரும் இலங்கை முழுவதும் பரவியது.

புத்தர் நிர்வாணப் படுக்கையில் இருந்தபோது, ஐந்து உயரிய தீர்மானங்களைச் செய்து கொண்டார். அவை ஒவ்வொன்றாக நடந்தேறின. ஏற்கனவே நிர்வாணம் அடைந்த புத்தர், தமது உடலின் அஸ்தி மூலம் இவ்வாறு மனித குலத்திற்கு எல்லையற்ற அருள் பொழிந்து கொண்டிருந்தார். சங்கமித்தை வெள்ளரசுக் கிளையை இலங்கைக்குக் கொண்டுவந்தாள். இவ்வாறாக, இலங்கையில் பௌத்த மதம் புத்தரின் முக்கிய பாகங்களின் இருப்பிடமாகி உலகில் மிக உயரிய இடத்தைப் பெற்றது.

தொடர்கிறது...

### தென் இந்தியாவில் பௌத்தம்:

பொ.ஆ.பி. 6-ஆம் நூற்றாண்டளவில் சைவ, வைணவ மதப் புரட்சியால் பௌத்த மதம் அரச ஆதரவை இழந்தது. பௌத்த மத வளர்ச்சி குன்றியது. பௌத்த கோயில்கள் ஜைனக் கோயில்களாக மாறின. அகளங்கர் என்னும் ஜைனர்,

காஞ்சிபுரத்தில் உள்ள காமக்கோட்டத்தில், பௌத்தருடன் சமயவாதம் செய்து அவரைத் தோற்கடித்துச் சிங்கள நாட்டிற் குத் துரத்திவிட்டார் என்று அறியப்படுகிறது.

சம்பந்தர் பௌத்தருடன் வாதப்போர் செய்து அவர்களைத் தோற்கடித்துச் சைவராக்கிய வரலாறும், மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் பௌத்தருடன் வாதம் செய்து அவரை இலங் கைக்குத் துரத்திய வரலாறும், திருமங்கையாழ்வார் நாகைப் பட்டினத்துப் பௌத்த ஆலயத்திலிருந்து பொன்னால் அமைந்த புத்தர் சிலையைக் கவர்ந்து சென்று அந்தப் பொன் னைக்கொண்டு திருவரங்கத்தில் திருப்பணி செய்த வரலாறும் பௌத்த மதத்தின் வீழ்ச்சியைக் காட்டுகின்றன.

பாண்டி நாட்டு வரலாற்றுக் குகைகளில் ஒன்றான அரிட்டாப் பட்டி என்பதன் பெயர், இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து பௌத்த மதத்தைப் பரப்ப உதவியாயிருந்த அரிட்டர் என்னும் பிக்குவின் நினைவாகச் சூட்டப்பட்டிருக்கலாம். இந்த அரிட்டர் என்னும் பௌத்த முனிவர் இங்குள்ள குகையில் தமது சீடருடன் வாழ்ந்திருக்கலாம் என்று நம்பப்படுவதாக மயிலை சீனி வேங்கடசாமி, அவரது 'பௌத்தமும் தமிழும்' என்னும் நூலில் கூறுகிறார்.

சமகாலத்தில் ஜைனம், வைதீகம், ஆசீவகம், பௌத்தம் ஆகிய மதங்கள் தென்னாட்டிற்கு வந்தன. இம்மதங்களிடையே நடைபெற்ற சமயப் போர்களாலும் பௌத்த மதம் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஹீனயானம், மகாயானம் என்னும் இரண்டு பிரிவுகள் பௌத்தத்தில் தோன்றின. சிராவகயானம், மகா யானம், மந்திரயானம் என்னும் மூன்று பிரிவுகளை நீலகேசி யுரையினால் அறியலாம்.

## அத்தியாயம் 18:

### மகாபோதி விருட்சம் பெறுதல்:

அரசன் தேவநம்பியதீசன், போதி மரத்தையும் தேரியையும் கேட்டு வரும் பொறுப்பைத் தன் மருமகனும் மந்திரியுமான அரிதன் என்பவனிடம் ஒப்படைத்தான். அரிதன், ஜம்புகோ ளத்தில் கப்பல் ஏறி, கடல் கடந்து, தேரரின் சக்தியால் அன்றே புஷ்ப்பரத்தை அடைந்தான்.

### சங்கமித்தையும் ராணி அனுலாவும்:

ராணி அனுலா, அவளது தோழிகள் ஐந்நூறு பேரும் மேலும் ஐந்நூறு அந்தப்புரப் பெண்களும் தசசீலங்களை ஏற்றுப் பக் தியுடன் மஞ்சள் உடை தரித்து, தீட்சை பெறுவதற்காகக் கடும் விரதங்களுடன் சங்கமித்தையின் வரவிற்காகக் காத் திருந்தார்கள்.

தசசீலங்களாவன, கொல்லாமை, திருடாமை, கற்புப் பிற ழாமை, பொய் சொல்லாமை, கள்ளுண்ணாமை, குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் உணவு உண்ணல், உலக இன்பங்களைத் துறத்தல், வாசனைத் திரவியங்கள், ஆபரணங்களை உப யோகியாதிருத்தல், உயரமான அல்லது அலங்காரமான படுக்கையில் தூங்காது இருத்தல், தங்கம், வெள்ளியை ஏற்காமல் இருப்பது. ராணி அனுலாவும் பிற பெண்களும் நகரின் ஒரு புறத்தில் அரசனால் கட்டப்பட்ட மடத்தில் புனித வாழ்வு நடத்தினார்கள். இம்மடம் 'உபாசிகா விகாரம்' என்று வழங்கப்பட்டது.

அரிதன், அசோக மன்னனிடம் சென்று, 'அரசன் தேவநாம்பிரி யதீசனின் தம்பி மனைவி கடும் விரதங்கள் மேற்கொண்டு 'தீட்சை பெறுவதற்காக' காத்திருக்கிறாள். அவளுக்குத் தீட் சையளிப்பதற்காகப் பிக்குணி சங்கமித்தையையும் அவ ளுடன் போதி மரத்தின் தென்புறக் கிளையையும் அனுப்பி வைக்கவேண்டும்' என்றான். அதே தகவலைச் சங்கமித்தையி டமும் கூறினான். சங்கமித்தை தந்தையிடம் சென்று தேரரின் நோக்கத்தைக் கூறினாள். மகனையும் பேரனையும் (மகன், மகிந்தன், பேரன் சுமணன்) பிரிந்த அசோகன் சங்கமித்தை யையும் பிரிவதற்கு மனம் வருந்தினான்.

சங்கமித்தை, அரசனிடம், 'அரசே, சகோதரன் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும். அங்கே தீட்சை பெறப் பலர் காத்திருக்கிறார்கள். எனவே நான் போகவேண்டும்.' என்றாள்.

அரசன், மகா போதி மரத்தைக் கத்தியால் வெட்டிக் காயப் படுத்தக்கூடாது. அதன் கிளையை நான் எப்படிக் கொடுப் பேன்? என்றான். பிக்குகளின் மகாசபை கூட்டப்பட்டது. அவர்கள் புத்தர் செய்து கொண்ட ஐந்து தீர்மானங்களையும்





அறிவார்கள். அவர்களின் அனுமதியுடன் ஏழு யோஜனைத் தூரத்திலிருந்த போதி மரம் இருந்த இடத்தை அடைந் தார்கள். கொல்லன் உருவிலிருந்த விஷ்வகர்மா அழகான தங்கத் தொட்டி ஒன்றைச் செய்தார். அத்தொட்டி ஒன்பது முழச் சுற்றளவும் ஐந்து முழ ஆழமும் மூன்று முழ விட்டமும் கொண்டதாக இருந்தது. அனைத்து அரச மரியாதைகளு டனும் போதி மரத்தை அடைந்தார்கள். போதி மரம் பல விதமான அணிகள் பூட்டப்பட்டு ஒளியுடன் காட்சியளித்தது.

அரசன் போதி மரத்தைக் கைகூப்பி வணங்கினான். போதி மரத்தின் தென்புறத்திலிருந்த கிளைகள் மறைந்தன. நான்கு முழ நீளமான முளை மட்டுமே அங்கிருந்தது. இந்த அதிச யத்தைக் கண்டு அரசன் மகிழ்ச்சி அடைந்தான். ‘இந்தப் போதி மரத்திற்கு அரச பதவி அளித்து அதை வணங்கு கிறேன்.’ என்று கத்தினான். போதி மரத்துக்குத் தன் பரந்த நாட்டின் அரசனாகப் பட்டாபிசேகம் செய்து வைத்தான்.

அரசன், எட்டு முறை போதி மரத்தை வலம் வந்து வணங்கித் தங்கத் தொட்டியை ஒரு ஆசனத்தில் வைக்கச் செய்தான். தங்கப் பிடி போட்ட செந்தூரத் துண்டினால் கிளையைச் சுற்றி ஒரு கோடு கிழித்தான். அரசன், அந்தக் கிளையைப் பெற்றுக் கொள்வதற்காக அவ்வாசனத்தில் ஏறி நின்று கொண்டான். பின் பவித்திரமான ஒரு பிரகடனம் செய்தான். அப்பிரகடனம் வருமாறு:

‘போதி மரம் இங்கிருந்து இலங்கைக்குப் போவது எவ்வளவு உண்மையோ, புத்த மார்க்கத்தில் உறுதி குலையாமல் நான் இருப்பேன் என்பது எந்த அளவுக்கு உண்மையோ, அதே போல இந்தப் போதி மரத்தின் தென்புறக்கிளை தானாகத் துண்டுபட்டு இத்தொட்டியில் இடம்பெறுவதாக’

மகாபோதி மரத்தின் தென்புறக் கிளை தானாகத் துண்டுபட்டு மண் உள்ள தொட்டிக்கு மேலே மிதந்தது. பின்னர், மகாபோதிக் கிளை கோடு கிழித்த இடத்திற்கு மேலே மூன்று விரற்கடைக்கு மேல் சுற்றிலும் பத்துக் கோடுகள் கிழித்தான். ‘முதலாவது கோட்டிலிருந்து பத்து ஆணிவேர்கள் தோன்றின. பின்னால் கீறப்பட்ட கோடுகள் ஒவ்வொன்றிலிருந்தும் பத்துக் கிளை வேர்கள் தோன்றி வலைபோல் பின்னிக் கொண்டன’. இதனைக் கண்ட அரசனும் மக்களும் பிக்குகளும் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். இவ்வாறு நூறு வேர்களுடன் மகா போதி மரம் தொட்டியிலிருந்த மணலில் ஊன்றிக் கொண்டது. தண்டு பத்து முழ நீளத்தில் இருந்தது. அதில் நான்கு முழ நீளமுள்ள ஐந்து கிளைகளும், ஒவ்வொரு கிளையிலும் ஐந்து பழங்களும் இருந்தன. போதி மரக்கிளை தானாகவே வந்து தொட்டியில் ஊன்றிக் கொண்டபோது பூமி அதிர்ந்தது. பலவிதமான அதிசயங்களும் நிகழ்ந்தன.

போதி மரத்தின் இலைகள், பழங்களிலிருந்து வீசிய ஆறு நிறக் கதிர்கள் பிரபஞ்சம் முழுவதும் பிரகாசிக்கச் செய்தது. பூமியிலிருந்து ஆகாயத்தில் எழும்பிச் சென்ற மகாபோதி மரம் பனிப் பிரதேசத்தில் ஏழு தினங்கள் யார் கண்ணிலும் படாமல் இருந்தது.

அரசன் அந்த ஏழு நாட்களும் அங்கேயே தங்கியிருந்து மகா போதி மரத்திற்குப் பலவிதமான காணிக்கைகள் செலுத்தி னான். ஒரு வாரம் செல்ல பனிப்படலமும் ஒளிக்கதிர்களும் போதி மரத்தினுள் புகுந்து மறைந்தன. அற்புதங்கள் பல நிகழ்த்திய வண்ணம் போதி மரம் பூமிக்கு இறங்கி வந்தது. மகிழ்ச்சியடைந்த அரசன், மீண்டும் போதி மரத்திற்குத் தன் இராச்சியத்தைக் கொடுத்தான்.

ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் பதினைந்தாம் நாள் உபோசத தினத்தன்று அவன் மகாபோதி மரத்தைப் பெற்றான். இரண்டு வாரங்களின் பின் ஐப்பசி மாதம் கிருஷ்ணபட்சம், பதினான் காம் நாள் உபோசத தினத்தன்று அரசன் அதைத் தலை நகருக்குக் கொண்டுவந்தான். அதற்காக ஒரு அழகிய மண்ட பமும் கட்டினான். கார்த்திகை மாதம் சுக்கிலபட்சம் முதல் நாள் அழகியதும் பிரமாண்டமானதுமான ஒரு சால விருட் சத் தின் கிழக்குப் புறமாக மகா போதி மரத்தை வைத்தான். தின மும் பலவிதமான பூசைகள் செய்தான். விருட்சம் பெற்ற பதி னேழாம் நாள் திடீரென்று அதில் புதிய கிளைகள் தோன்றின.

மனம் மகிழ்ந்த அரசன் மீண்டும் ஒரு தடவை போதி மரத் திற்கு அரச பதவியை வழங்கி அதை வணங்கினான். புஷ்ப புரத்தில் பெருவிழா நடந்தது. அது, தேவர்களுடையதும் மனிதர்களுடையதும் மனங்களில் மத நம்பிக்கையை ஏற் படுத்தியது. அடுத்த இதழில் போதி விருட்சம் இலங்கைக்கு வந்த வரலாறு கூறப்படும்.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com

## ஜிஃப்ரி ஹாசன்



# சமகால ஈழச்சிறுகதையின் சில புதிய போக்குகள்

ஈழத்துப் படைப்பாளிகள் சிலர் பின்நவீனச் சிறுகதைகளைப் பரிசோதனை முயற்சிகளாக இரண்டாயிரத்துக்குப் பின்னர் எழுதத் தொடங்கினர். ஆயினும், அதற்கு முன்னரே நவீன தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களின் ஓரிரு சிறுகதைகள் பின்நவீனத் தன்மை கொண்ட கதைகளாகத் தோற்றங் கொண்டிருந்தன. ஷோபாசக்தி, கலாமோகன், எஸ். நஸிருதீன், தீரன் ஆர்.எம். நௌஸாத் போன்றோரின் கதைகளில் இந்தப் பண்பு அப்போதே வெளிப்படத் தொடங்கி இருந்தது. வி. கௌரிபாலனும் இத்தகையதொரு மொழியில் புனைவுகளைத் தந்தவர்தான்.







ஆயினும் அவர்கள் நவீனச் சிறுகதைகளின் எல்லைக்குள் நிற்பவர்களாகவே இருந்தனர். இரண்டாயிரம் காலப்பகுதியில் அதிகமாக எழுதப் புறப்பட்ட படைப்பாளிகளே கூடுதல் பின்நவீனத்தன்மை கொண்ட கதைகளை எழுதினர்.

அக்கரைப்பற்றிலிருந்து வெளிவந்த பெருவெளி என்ற சஞ்சிகை இதற்கான களத்தைத் தீவிரமாகப் படைப்பாளிகளுக்கு உருவாக்கிக் கொடுத்தது. பெருவெளியிலும், பெருவெளிக்கு வெளியிலுமாக இரண்டாயிரத்துக்கு பின்னர் ஈழத் தமிழ்ச்சிறுகதைகளின் ஒரு புதிய அலையாக பின்நவீனச் சிறுகதைகள் எழுச்சியுறத் தொடங்கின.

பெருவெளிக்குப் பின்னர் தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் புதிய சொல் அந்த எழுத்தியக்கத்துக்குப் பங்களிப்புச் செய்கிறது. ஈழத்து இலக்கிய சூழலில் ஓரளவு நவீனத்துவ விதிகளை மீறிய கதைகளை ஷோபாசக்தி, இராகவன், யதார்த்தன், சயந்தன், தானா விஷ்ணு, திசேரா, மலர்ச் செல்வன், மஜீத், அம்ரிதா ஏயெம், எம்.எம். நௌஸாத், சாஜித் போன்றோருடன் மிகக் குறைந்தளவில் இந்த வகைக் கதைகளை சக்கரவர்த்தி, கற்சுறா, க. கலாமோகன், றபியுஸ், பர்ஸான் ஏ. ஆர், அப்துல் றஸாக், ஜிஃப்ரி ஹாசன் போன்ற படைப்பாளிகளும் முயற்சித்துள்ளனர்.

ஈழத்துப் பின்நவீனச் சிறுகதைகள் பெரும்பாலும் நவீன சிறுகதைகளின் எடுத்துரைப்பு முறையிலிருந்து வித்தியாசத்தை நிகழ்த்துதல் என்றளவில்தான் பெரும்பாலும் நிற்கின்றன. அந்தவகையில் ஈழத்து பின்நவீனச் சிறுகதைகள் அதன் உருவரீதியாக அதாவது புறவயரீதியாக பின்நவீனத்துவத்தை நெருங்கி வருகிறதேயன்றி, உள்ளடக்கரீதியாக அதாவது அகவயரீதியாக பின்நவீனக் கோட்பாட்டோடு நெருங்கி வருவது மிக மிகக் குறைவாகவே நிகழ்கிறது.

ஈழத்துப் பின்நவீனச் சிறுகதைகளில் பின்நவீனத்தும் கூறும் தொடர்பறு எழுத்துமுறை (Non-linear writing method), மைய சம்பவமோ, மையக் கதாபாத்திரமோ அற்ற சிதறுண்ட கதைகளின் கதையாக இருத்தல், ஒரு கதைக்குள் பல உபகதைகள் காணப்படல், இதன் விளைவாக ஒரு சிறுகதை கதை எனும் ஒருமையிலிருந்து கதைகள் எனும் பன்மையாக உருமாற்றம் பெறல், எழுத்தாளன் கதைசொல்லி எனும் நிலையை அடைதல், அங்கதம், மொழியின் விளையாட்டுத் தன்மை போன்ற பின்நவீனத் தன்மைகளை காணலாம்.

ஷோபாசக்தியின் கதைகளில், நாவல்களில் பின்நவீனத் தன்மை ஓரளவு படிந்தே இருக்கிறது. அதிகமும் அவரது படைப்புகள் விளிம்

புகள் மீது அக்கறை கொள்பவை. கதை எடுத் துரைப்பு முறைகளிலும் நவீனத்துவ விதிகளை மீறிப் பார்த்தவர் ஷோபா. அவரது தேசத் துரோகி தொகுப்பிலுள்ள பல கதைகளை எடுத்துக்காட்டாகச் சொல்லாம்.

அக்கரைப்பற்றிலிருந்து வெளிவந்த பெரு வெளி எனும் பின்நவீன சஞ்சிகையின் வருகைக்கு முன்னரே மட்டக்களப்பில் திசேரா, மலர்ச்செல்வன் எனும் இரு கதை சொல்லிகள் பின்நவீனத் தன்மையுடன் கூடிய கதைகளைப் புனைந்தனர். 2002-இல் வெளியான திசேராவின் கண்ணியத்தின் காவலர்கள் கதை உள்ளடக்கம், உருவம் என இரண்டு வகை யிலும் பின்நவீனத் தமிழ்ச் சிறுகதையாக கொள் ளத்தக்கது. தன்னினச் சேர்க்கையாளர் இருவர் பற்றிய கதை அது. சமூகத்தால், சட்டத்தால் அங் கீகரிக்கப்படாத ஒரு பிரிவினர் இவர்கள். இதனால் இவர்கள் விளிம்புகளாகப் பின்நவீன சிந்தனையாளர்களால் கணிக்கப்படுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை, அதிலும் கிழக் கிலங்கையைப் பொறுத்தவரை இந்தப் பிரிவி னர் பற்றிய பிரச்சினை இல்லாவிட்டாலும் ஒரு புனைவாக கவனங்கொள்ளத்தக்க கதையாக அது உள்ளது. தமிழக எழுத்தாளர்களான ரமேஷ்: பிரேமின் மனவெளி நாடகம் எனும் தமிழின் முக்கியமான பின்நவீன கதைக்கு நிகரான கதையாக திசேராவின் இக்க தையைக் குறிப்பிட முடியும்.

அவரது யோவான் தொகுப்பில் இடம்பெறும் அட்சரம் தின்னும் படிவம் எனும் கதை ஏதேனும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்கள் எப்படி அரச அலுவலர்கள் எனும் மனித அதிகாரங்களால் வஞ்சிக்கப்படுகிறார்கள், மேலும் மேலும் அவர்கள் எவ்வாறு விளிம்பு நோக்கித் தள்ளப்படுகிறார்கள் என்பதைப் பற்றிப் பேசு கிறது. மைய சம்பவம் போன்ற ஒன்று கதைக்குள் தென்படினும் அந்தச் சம்பவமே பின்நவீனத்துவம் கூறும் குறிப்பான்களாலும், உருவகங்களாலும் விளை யாட்டுத்தனமாக கட் டமைக்கப்படுவதுதான். மெஜிக்கல் ரியலிசத் தன்மையும் இந்தக் கதைக்குள் இல்லாம லில்லை.

மலர்ச்செல்வனின் சிலகதைகள் வடிவரீ தியான பின்நவீனத் தன்மை கொண்டவை. காட்டேறிகளின் மாநாடு, மண்டையனின் மர ணக்கதை போன்ற கதைகள் நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று உள்ளடக்கரீதியாக அன்றி வடிவரீதியாக மட்டுமே பின்நவீனத்துவத்தை நெருங்கி வருகின்றன. மலர்ச்செல்வன் கதைகூ றலின் ஒற்றைப் பரிமாணத்தை மறுத்து சிதறுண்ட வடிவத்தையும், தொடர்பறு எழுத்துமுறையையும் தனது சிலகதைகளில் உக்கிரமாகப் பயன்படுத்தி வருபவர்.













காட்டேறிகளின் மாநாடு, மண்டையனின் மர ணக்கதை ஆகிய இரு கதைகளும் எழுத்து, இலக்கியம், இலக்கிய மாநாடு போன்ற இலக் கியச் செயற்பாடுகள் பற்றிய எழுத்தாளன் ஒருவனின் மனக் குமுறல்களைச் சிதறலாக முன்வைக்கின்றன. ஈழத்து எழுத்துச் செயற் பாட்டில் விரவியிருக்கும் ஒரு தரப்பாரின் அதிகா ரத்தையும் இக்கதை கிண்டலடிக்கிறது. இதில் மண்டையனின் மரணக்கதை இலங்கையில் ஒரு காலகட்டத்தில் துப்பாக்கி அரக்கர்களால் தீர்மானிக்கப்பட்ட மனிதனின் துயரவிதியையும் பேசுகிறது.

வி. கௌரிபாலனின் காற்றில் மிதக்கும் தழும்பின் நிழல் தொகுப்பிலுள்ள கதைகள் அவற்றின் மொழியும் எடுத்துரைப்பும் சார்ந்து புது எழுத்தாகத் தோற்றங்கொள் கின்றன.

பெருவெளியின் வருகை கிழக்கிலங்கையில் ஒரு சில பின்நவீனக் கதைசொல்லிகளை அடையாளங் காட்டியது. அதன் ஒவ்வொரு இதழும் பெரும்பாலும் வடிவரீதியான பின்ந வீனக் கதைகளைக் கொண்டு வெளிவந்தது. இந்த பெருவெளி அணியிலிருந்த பின்நவீனக் கதைசொல்லிகளுள் ஒருவர் மஜீத். பின்நவீனத் துவத்தின் அரசியல் பரிமாணத்தை தன் புனை வுகளில் வெளிப்படுத்தியவர் அவர். அவர் இலங்கையின் அதிகார அரசியலில் விளிம் புக்குள்ளாக்கப்பட்ட ஒரு மக்கள் திரளை தன் புனைவுக்குள் கொண்டு வந்தார். இந்தவ கையில் அவரது சோனி யனின் கதையின் தனிமை குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒரு படைப்பு. பின்நவீனத்துவத்தின் அரசியல் பரிமாணம் இந்தக் கதைக்குள் நுட்பமாக வெளிப்படுத்தப்படுகிறது.

அவரது 'நிலம் பெருக்கெடுத்த கதைகள் என்ற நூலிலிருந்து தற்செயலான சில பக் கங்கள்' எனும் கதை ஈழத்திலிருந்து வெளிவந்த பின்நவீனக் கதைகளுள் மிகவும் அதிகமான பின்நவீனத் தன்மையுடன் வெளிவந்த கதையாகும். இக்கதை நோக்கத் துக்குப் பதிலாக விளையாட்டையும், மொழியின் ஆழ்தள வெளிப்பாட்டையும், அதீத கற்பனைச் செயலொழுங்கையும் கொண்ட கதையாகும்.

அம்ரிதா ஏயெம் ஈழத்தின் கதைசொல்லி களுள் முக்கியமான ஒருவர். இவரது சிறுகதைத் தொகுப்பான விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத் தைகள் நவீன சிறுகதைத் தொகுப்பாக இருக்கிற போதிலும் அதிலுள்ள சில கதைகள் பின்நவீனத் தன்மை கொண் டவை. அவரது சில கதைகள் நவீனத்

துவப் பண்பான குறிப்பீட்டுக்குப் பதிலாகக் குறிப்பான்களையும், விளக்கவுரைக்குப் பதிலாக எதிர்-விளக்கவுரையையும் கொண்டு அமைந் துள்ளன.

அவரது செருப்பு சிறுகதை பின்நவீனப் பண் புகளோடு புனையப்பட்ட கதை. செருப்பு எப்போதும் இலக்கியத்தில் ஒரு விளிம்பு நிலைக் குறியீடுதான். இந்தக் கதையிலும் அப்படித்தான் வருகிறது. ஒரு மையக் கதைச் சம்பவமற்ற சிதறலான கதைகளின் கோர்வையாகத் தொடர்பறு எழுத்துமுறையில் இக்கதை நகர்த்தப்படுகிறது. நவீன சிறுகதையின் நோக்கம் என்ற பண்புக்கு முற்றிலும் எதிர்ப் பண்பான விளையாட்டுத் தன்மையைக் கொண் டிருக்கும் கதை இது. இந்தப் புரிதலிலிருந்து வாசிக்கும் போது இதனை ஒரு பின்நவீன கதையாக வாசிப்புச் செய்யலாம்.

அப்துல் றஸாக்கின் சில கதைகள் பின்நவீ னத்தன்மை வாய்ந்தவை. பெருவெளியில் வெளிவந்த அவரது வீட்டுக்குறிப்புகள் 19 வடிவரீதியான பின்நவீனக் கதையாகும். எனினும் அவர் இந்தத் தளத்தில் அதிகம் கதைகள் எழுதாமல் போனார். சாஜித் அஹ மத்தின் பஞ்சபூதம், இது புத்தன் காலம் போன்ற குறுநாவல்கள் இந்த வகை மைக்குள் கொண்டு வர முடியுமான படைப் புகளாகும்.

அதேநேரம் பெருவெளி அணியிலிருந்து வந்த றபியுஸ் ‘காலத்தை நுகரும் விலங்குகளின் மோப்ப சக்தியின் ஊடாகச் சென்று வரலாற்று மாந்தர்களை துப்பறிதல் என்ற நாவலின் குறிப் புகள்’ என்றொரு நீண்ட தலைப்பைக் கொண்ட பின்நவீனக் கதை ஒன்றை எழுதினார். இது ஒரு மைய சம்பவமற்ற சிதறலான கதைச்சம்பவங் களால் கட்டப்பட்ட கதை. அதீத கற்பனைச் செயற்பாட்டையும், மொழியின் ஆழ்புனைவுத் தன்மையையும், விளிம்புகளின் அரசிய லையும் றபியுஸ் இக்கதையில் பதிவுசெய்தார்.

ஈழப்படைப்பாளிகளில் கதைசொல்லும் முறையில் நவீனத்துவ எல்லைகளை மீறி வருபவர் இராகவன். அவரது மொத்தக் கதைகளுமே பின்நவீனத்தன்மைகளை உள் வாங்கி எழுதப்படவைதான். அந்தவ கையில் அவரைத் தனிப்பின்நவீன படைப் பாளி என்று சொல்லிவிடமுடியும். அவரது 11-ஆம் இலக்கக் கோவை 12 உப கதைகளாலான ஒரு தனிக் கதை. பல்வேறு சம்பவங்களின் கோர்ப்பாகவே இது நகர்ந்து செல்கிறது. இது இன்றைய (போர்-போருக்குப் பின்னரான) யாழ்ப் பாண அல்லது வடபுலத் தமிழ் மக்களின் அல்லது தமிழ்ப் பெண்களின் அன்றாட வாழ்க் கையாகவே அமைந்திருக்கிறது.













ஆனால் இந்தக் கதையைப் பொறுத்தவரை கதை சொல்லலின் புனைவின் அதீதத் தன்மை கதைமொழியில் வெளிப்படுவதில்லை. ஆழமான புனைவு மொழியில் ததும்பும் கவித்து வம்தான் கதையினை ஓர் இன்பப் பிரதியாக மாற்றிவிடுகிறது. யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் நகர்ந்து செல்லும் கதை அங்கதங்களற்று ஒரு தட்டையான மொழியிலேயே நகர்ந்து செல்கிறது.

இராகவனின் இன்னொரு கதை தாவர இளவ ரசன் எனும் எடுத்துரைப்பில் புதுமையையும் கதையம்சத்தில் வழக்கமான போக்கையும் கொண்டுள்ள கதை. இரண்டு கதைக ளிலுமே (இது தவிர அவரது பிற கதைக ளிலும்) பாலியல் ரீதியான விபரிப்புகள் கதையில் நிறைந்திருக்கின்றன. முதல் கதையில் அதற்கான தேவை இருப்பது போலவும் இரண்டாவது கதையில் அது வலிந்து அதற்கான தேவை உருவாக்கப் பட்டிருப்பது போலவும் தெரிகிறது.

தானா விஷ்ணுவும் பின்நவீனக் கதைகளை எழுத முயற்சித்த ஈழத்தின் கதைசொல்லி களுள் ஒருவர். ஒரு வாசகனை கதைக்குள் இலகு வாக இழுத்து விடக்கூடிய நுட்பம் தானா விஷ்ணுவிடம் காணப்படுகிறது. அவரது பூனை களைக் கொல்பவனின் இரவு எடுத்துக்காட்டான கதை. இரவுப் பொழுதுகள் மர்மங்கள் நிறைந் தவை. இதுவும் இரவுப் பொழுதில் நிகழும் கதைதான். இது பூனை களைக் கொல்லும் ஒருவனைப் பற்றிய கதை. இங்கு பூனைகள் மக்களைக் குறிக்கும் ஒரு குறியீடாக வருகிறது. பூனைகளைக் கொல்பவன் அவனது வீட்டுக்கு வந்து அவனைத் தொந்தரவு செய்யும் பூனைகளைக் கொல்வதில் தொடங்கி பின்னர் பூனைகளைக் கொல்வ தையே தனது தொழிலாக்கிக் கொள்கிறான். பூனைகள் வருவதை நிறுத்திக் கொண்ட ஒருநாள் இரவு தன்னால் பூனைகளைக் கொல்லாமல் இருக்க முடியாது என்ற உண்மையை உணர்கிறான். பின்னர் பூனைகளைத் தேடிக் கொல்லத் தொடங்குகிறான். பூனைகள் மக்க ளையும், பூனைகளைக் கொல்பவன் அதிகா ரத்தில் இருந்து மக்களைக் கொன்று குவித்த எல்லாத் தரப்பாரையும் குறிக்கிறது.

இவ்வாறு பூனைகளைக் கொல்வதற்குக் கதைசொல்லி எடுக்கும் முயற்சிகள் ஒரு புனைவுத்தன்மையான மொழியின் அழகி யலோடு, ஆங்காங்கே அங்கதத்தையும் தெளித்து தானா விஷ்ணு கதை சொல்லி இருக்கும் பாங்கு கதைக்குள் வாசகனின் பயணத்தை இலகுபடுத்திக் கொடுக்கிறது. அது அவனுக் குள் ஏற்படுத்த முனையும் சித்திரங்களும் பன்முகப்பட்டவை. இக் கதை எடுத்துரைப்பு முறையால் ஒரு

மிகை யதார்த்தவாதக் கதையாகத் தென்படினும் அடிப்படையில் இது ஒரு யதார்த்தவாதப் புனைவாகவே உள்ளது. பூனைகளைக் கொல்பவனின் இரவில் தானா விஷ்ணு பூனைகளைக் கொல்லும் வெறியுடன் அலைகையில், ஆதிபார்த்திபனோ தனது ‘மாயா ஒரு நகரவாசி அல்லது உலகின் ஆபத்தைக் கொண்டாடுபவன்’ எனும் கதையில் பூனைகள் மீதான காதலுடன் அலைந்து திரிகிறார். சமகாலத்தில் ஒரே நிலத்திலிருந்து எழுதும் இரு படைப்பாளிகள் பூனைகளை வெவ்வேறு குறியீடுகளாகப் பயன்படுத்தியதன் விளைவு இது.







பொதுவாக இலங்கைத் தமிழ்ச் சிறுகதைகளில் கதைசொல்லிகள் விலங்குகளைக் குறியீடுகளாகவே பயன்படுத்தி வருகின்றனர். தமிழ்நாட்டுப் படைப்பாளிகள் தங்களது கதைகளில் விலங்குகளை அதன் அதன் உண்மையான அர்த்தத்திலேயே பெரும்பாலும் பயன்படுத்தியுள்ளனர். தமிழகப் படைப்பாளிகள் யானை என்றால் காட்டில் வாழும் யானையைப் பற்றிய கதையாகவே அதை அமைத்திருப்பார்கள். நமது ஈழப் படைப்பாளிகள் யானை, புலி, சிங்கம், பூனை, எலி இதை எல்லாம் ஓர் அரசியல் அர்த்தத்தில் குறீயீடுகளாகவே பயன்படுத்துவர். இலங்கையின் அரசியல் நிறுவனங்களிலும் இயக்கங்களினதும் முக்கிய குறீயீடுகளாகவும் சின்னங்களாகவும் இந்த விலங்குகள் இருப்பதே அதற்கு காரணம் என நினைக்கிறேன்.

எனவே ஈழப் படைப்புகள் அரசியல் பற்றி அதிகம் பேசுவதால் இங்கு அச்சுறுத்தலான அரசியல் சூழலும் காணப்பட்டதால் அவற்றைக் குறியீடுகளில் மட்டுமே இலங்கைப் படைப்பாளிகளால் வெளிப்படுத்த முடியுமாக இருந்தது. ஒரு காலத்தில் லத்தீன் அமெரிக்கப் படைப்பாளிகளும் தனது படைப்புகளை மெஜிக்கல் ரியலிசமாக எழுதுவதற்கு அங்கு நிலவிய அரசியல் சூழலே காரணமாக இருந்தது.

சயந்தனும் இது போன்ற கதைகளை பரீட்சித்துப் பார்த்திருக்கிறார். புதிய சொல் இதழில் வெளிவந்த அவரது கயல்விழி, தமிழரசி, சந்திரிக்கா இதற்கு எடுத்துக்காட்டான கதை. தமிழர் பண்பாடு பற்றிய ஒரு சுயவிசாரணையை சயந்தன் இந்தக் கதைக்குள் செய்ய முயன்றுள்ளார். சயந்தன் ஏற்கனவே நமக்கு ‘ஆதிரை’ எனும் நாவலைத் தந்தவர். இந்தக் கதையில் கயல்விழி பண்பாட்டைப் பெருமைப்படுத்துபவளாகவும், தமிழரசி பண்பாட்டின் பெருமையை அலட்டிக்கொள்ளாதவளாகவும் கதையில் வருகின்றனர்.

ஆனால் இதனை ஒரு தனிக் கதை என்று நான் சொல்லமாட்டேன். ஒரு கதை எழுதுவதற்கான முற்குறிப்பு என்று சொல்லாம்.

ஆதிபார்த்திபனும் பின்நவீனக் கதைகளை ஈழத்தில் எழுத முற்பட்ட புதிய தலைமுறையைச் சேர்ந்தவர். அவரது கதையான மாயா ஒரு நகரவாசி அல்லது உலகின் ஆபத்தைக் கொண்டாடுபவன் எனும் கதையும் புனைவின் அதீதத் தன்மையை வெளிக்காட்டும் சிறுகதை. இந்தக் கதை புனைவின் அதீதத் தன்மை வெளிப்படும் மிகை யதார்த்தவாதக் கதைதான். பொதுவாக ஆதிபார்த்திபனின் கதைகள் ஒரு கவிதையைப் போல் மொழியின் அழகியலோடும் சொற்களின் விசித்திரங்களோடும் பயணிக்கின்றன.

பெரும்பாலும் ஈழத்துப் பின்நவீனச் சிறுகதைகளைப் பொறுத்தவரை அவை முதிரா நிலையிலுள்ள பிள்ளைப்பருவக் கதைகளாகவே தோற்றங்கொள்கின்றன. பின்நவீனக் கோட்பாட்டை வாசித்து முழுமையாக உள்வாங்கி எழுதப்பட்ட கதைகள் போன்று அவை தென்படவில்லை. கதை சொல்வதிலுள்ள நவீனத்துவத்தின் மூடுண்ட விதிமுறைகளை உடைத்து ஒரு சுதந்திரமான திறந்த நிலையை பின்நவீனத்துவம் உருவாக்கிக் கொடுத்தது. அந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்திக்கொண்டு தங்களையும் படைப்பாளிகளாக முன்நிறுத்தும் தீவிரம் மட்டுமே அவர்களை இயக்குவது போல் தெரிகிறது. தவிர, கதைகள் உருவரீதியாக அதாவது புறவயரீதியாக மட்டுமே பின்நவீனத்துவத்தை நெருங்கி வருகின்றன. உள்ளடக்கரீதியாக அதாவது அகவயரீதியாக அவை பின்நவீனத்தன்மையைக் கொண்டிருப்பதில்லை. கதைகளில் அதீத கற்பனைச் செயற்பாட்டை காணமுடிவதில்லை. நவீனத்துவ யதார்த்தவாகமே கதைகளின் அடித்தளமாக தெரிகிறது.



jiffry.hassan@thaiveedu.com

# பாரதியின் தேசியக்கல்வி பற்றிய சிந்தனைகள்

இராஜேந்திரம்பிள்ளை சிவலிங்கம்



ஆங்கில ஏகாதிபத்தியம் எனும் இருண்ட வானைக் கீறிக்கிழித்துக்கொண்டு புறப்பட்ட உதயசூரியன் பாரதி, அவன் பரப்பிய ஒளிக்கதிர்கள் பட்டுத் தெறிக்காத இடமேயில்லை எனும் அளவுக்கு அரசியல், பொருளாதாரம், கலை, கலாசாரம், அறிவியல் என்று இன்னோரன்ன துறைகளிலும் ஊடுருவி நின்றன. அதனாற்தான் இன்று பாரதி பிறந்த பாரதநாட்டிலே மட்டுமன்றி உலகின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு துறைகளிலும் ஆராயப்படுகின்றான், விமர் சிக்கப்படுகின்றான். சமகால சமுதாயத்தை மட்டுமன்றி எதிர்கால சமுதாயத்தையும், தீர்க்கதரிசனத்தோடும் வரலாற்றுக் கண்ணோட்டத் தோடும் கண்டு தெளிந்து துல்லியமான கருத்துகளையும் படைத்த புரட்சிக் கவிஞன்தான் பாரதி. அந்நிய ஏகாதிபத்திய இருளில் மூழ்கிப் பாழ்பட்டுப் பரிதவித்து நின்ற பாரதநாட்டின் எழுச்சிக்காகப் புரட்சிக் கீதம் இசைத்த பாரதி அறிவும், ஆற்றலும், ஆளுமையும், கவித்துவமும் கொண்டவனாக விளங்க பல்வேறு காரணிகள் இருந்தன. எனினும், அவனது இப்புலமைப் பரப்புக்கும் இலக்கிய ஆளுமைக்கும் அவன் கற்ற கல்வியும் கல்வி பற்றி அவன் கொண்டிருந்த நோக்குமே காரணமாயிருந்தன.

பாரதி இந்திய சமுதாயத்திலே நீண்ட காலமாக நிலைத்து நின்ற பரம்பரை பரம்பரையாக வந்த பாரம்பரியக் கல்வி (திண்ணைப்பள்ளி) மரபு, இருபதாம் நூற்றாண்டின் இடைக்கூற்றில் தமிழ்நாட்டில் தோற்றம் பெற்ற ஐரோப்பிய நிறுவனக் கல்வி மரபு என்று இரண்டுக்குமிடையே தனது கல்விப் பயணத்தை மேற்கொண்டவன். சூழ்நிலைகளுக்கு அடிமையாகாது சூழலைத் தனக்கு அடிமையாக்குபவனே உண்மை யான இலட்சியவாதி. பாரதியும் இரண்டு வகையான கல்வி மரபுகளைச் சந்தித்த போதும் எந்தக் கல்வி மரபும் முழுமையாக அவனைப் பாதிக்கவில்லையெனினும் இம்மரபுகளிலிருந்து அவனால் ஒதுங்கிச் சென்றுவிடவும் முடியவில்லை. அவனது கவித்துவவீச்சுக்கு களமமை த்துக் கொடுத்த பாரம்பரியக் கல்வியையும், ஆங்கிலக் கல்வியின் ஆதிக்கத்தின் காரணமாக அவன் எதிர்காலத்திலே வேண்டி நின்ற தேசியக்கல்வியையும், மேலெழுந்தவாரியாகத் தொட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாரம்பரியக் கல்விமுறையிலே தகப்பனிடமோ தாய் மாமனிடமோ ஆரம்பக் கல்வியைத் தொடங்க வேண்டுமென்ற மரபு நிலவிவந்தது. பாரதியும் தனது தகப்பனிடம் கல்வியை ஆரம்பித்தான். மரபுக் கல்வியிலேயே பாரதம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நிகண்டு, தேவார திருவாசகம் போன்றவை பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன. பாரதியும் கம்பனையும், காளிதாசனையும், இளங்கோவையும் கற்றுத்தேர்ந்திருந்தான். மனனஞ் செய்தல் என்பது அக்கால மரபு. பாரதியும் பட்டினத்தடிகள், தாயு மானவர் பாடல்களை மனனஞ்செய்துள்ளான். இதனை பாரதியாரைப் பற்றி எழுதியவர்கள் எல்லோரும் குறிப்பிட்டுள்ளார்கள். பாரதி மரபு வழிக் கல்வியிலே, தான் கற்ற கம்பனையும் வள்ளுவனையும் நிறுவனக்கல்வி மரபில் கற்க முடியவில்லையென்பதை தனது பாடலிலே தெளிவுபடுத்துகின்றான்.

*‘கம்பனென் றொரு மானிடன் வாழ்ந்ததும்*
*காளிதாசன் கவிதை புனைந்ததுவும்*
*நம்பருந் திறலோடொரு பாணினி*
*ஞான மீதில் இலக்கணங்கண்டதும்*
*சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்*
*தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்...*
*அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்*
*தாங்கிலம் பயில் பள்ளியுறு போகுநர்’*

என்ற பாடல் மூலம் இதனை அறிந்து கொள்ளலாம். பாரம்பரியக் கல்வி மரபில் குருவிடம் பாடங்கேட்பதும் பணிவிடை செய்வதும் அக்கால மரபிலொன்று. பாரதியும் குருகுலக் கல்வியை நன்கு அனுபவித்து இருந்தான் என்பதை தனது சின்னச் சங்கரன் கதையூடாக வெளிப் படுத்தியுள்ளான்.

*'சோலையழுக் கடவுண்டனிடத்தில் சங்கரன் தினம்*
*பள்ளிக்கூடம் விட்டவுடனே போய் பழைய*
*புலவர்களின் சாஸ்திரங்களும் பழைய கடினமான*
*விடு கவிகளுக்கும் பொருளும் கதைகளும் கேட்டுக்*
*கொண்டிருப்பான்... கிழக் கடவுண்டனிடம்*
*கம்பராமாயாணமும் கேட்க ஆரம்பித்தான்'*

என்று தாம் பெற்ற மரபுக் கல்வியைப் புலப்படுத்தி யுள்ளான். மேலும், எட்டயபுர சமஸ்தானக் கவிஞர்களிடமும், தமிழ்ப் புலவர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள் போன்ற தமக்கு வயதிலே முதிந்தவர்களோடும் உரையாடுவதிலேயும் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து கொள்வதிலும் காலத்தைச் செலவு செய்தான். இதன் காரணமாகவே பாரதியின் இயல்பான ஆற்றலுக்குத் தமிழ் அறிவும் புலமையும் மெருகூட்டின எனலாம். பாரதியின் தேசியப் பாடல்கள் தவிர்ந்த அநேகமான பாடல்களிலே அவன் பாரம்பரியக் கல்வி மூலம் பெற்ற கம்பராமாயாணம், பாரதம், திருக்குறள், பட்டினத்தடிகள், தாயுமானவர் பாடல்கள் என்பவற்றின் தாக்கம் நேரடியாகவும், மறைமுகமாகவும் இடம்பெறுவதை நாம் மறுக்கமுடியாது. பாரதியின் அற்புதப் படைப்பான பாஞ்சாலி சபதம் புதுமையும், புரட்சியும் எளிமையும், இனிமையும் கொண்டு படைக்கப்பட்ட போதிலும், தண்டியாசிரியர் கூறும் காப்பிய நிலையோடு உறவாட முயல்வதையும் காணலாம். மேலும், பாரதி புதிய ஆத்திசூடி பாடக் காரணம் பாரம்பரியக்கல்வி தந்த பாடமெனலாம். வடிவ அமைப்பிலேகூட வசனக் கவிதையைத் தள்ளி விட்டுப் பார்த்தால் பெருமளவுக் கவிதைகள் பழையமரபுப் பரப்பிலே சேர்ந்து கொள்வதை அவதானிக்கலாம். எனவேதான், பாரதி புதிய உத்திகள், புதிய அணுகு முறைகளைக் கொண்டு புதுமையும், புரட்சியும் கொண்ட இலக்கிங்களைப் படைத்தபோதும் அவற்றிற்குத் துணையாகப் பாரம்பரியக் கல்வி இருந்திருக்கிறது எனலாம். பாரதி பாரம்பரியக் கல்வியைக் கற்றபோதும் வெறுமனே மரபுக் கவிஞனாக இருந்துவிடவில்லை. தொல்காப்பியமும் நிகண்டும் கற்றுவிட்டுச் சொற்சிலம்பமாடும் பண்டிதர்கள் போலவோ திண்ணை வேதாந்திகள் போலவோ மாறிய வனோ; அல்லது இன்றைய சிலரைப் போல வளையாபதி - குண்டிலகேசியில் காணாமற்போன வரிகளுக்குக் கவலைப் பட்டுக்கொண்டு இருந்தவனோ இல்லை. மரபுவழிக் கல்வியை நன்கு புரிந்து கொண்டதன் விளைவாகத்தான் சொல் புதிது, சுவை புதிது என எல்லாவற்றிலும் அவனால் புதுமையைக் காணும் போக்கு வளர்ந்தது. பழைய பண்டிதர்களையும் அவர்களது பிரசங்கித் தனத்தையும்கூட பாரதி தனது சின்னச் சங்கரன் கதையூடாகக் கேலியும் கிண்டலும் செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. கல்வி என்பது படித்த பண்டிதர்களுக்கு மட்டும் உரிய சொத்தல்ல. எல்லோருக்கும் பொதுவானது எல்லோரும் கற்க வேண்டும். கல்வியைப் பரவலாக்க வேண்டும் அதற்கு ஏற்ற வகையிலே இலக்கியத்தின் போக்கிலே மாற்றத்தை விரும்பினான்.

*'எளிய பதங்கள் எளியநடை எளிதிற் புரிந்து கொள்ளும்*
*சந்தம் பொது மக்களின் மனதில் விரும்பும்மெட்டு*
*இவற்றினையுடைய காவியம் செய்து தருவோன்*
*தமிழ் மொழிக்குப் புதிய உயிர் தருபவனாகிறான்'*

என சமூகத்துக்கு அறைகூவல் விடுத்ததோடு அந்த வகையிலே தானும் இலக்கியம் சமைத்தான். கடலையும், மீனையும், வானையும், வாவியையும், பெண்ணையும் சுவைத்துக் கவிதை படைக்க முற்பட்டவனல்ல பாரதி. தன்னை வானத்திலிருந்து பூமியிலே குதித்த தேவனாகப் பறை சாற்றியவனும் இல்லை. பாரதநாட்டின் தெருப்புழுதிகளிலே உருண்டான். ஒவ்வொரு மனிதரின் இன்ப துன்பங்களிலும் பங்குகொண்ட முழுமனிதனாக நின்று சுதந்திரமே இலட்சிய மாகவும், நினைவாகவும் கொண்டு வரப்போகும் இன்னல் களையும், இடையூறுகளையும் வெல்ல வல்ல இறவாத புகழுடைய இலக்கியம் படைத்தான். பாரதநாடு சுதந்திரம் பெறவேண்டுமானால் தேச பாஷையிலான தேசியக்கல்வி அவசியம் என வலியுறுத்தினான். பாரதியின் சிந்தனைகள் காலம் முழுவதுக்கும் ஏற்றவை. பாரதத்திலோ, ஈழத்திலோ தேசியக்கல்வி மூலம் தாய்மொழி இன்னமும் சரியான முறையிலே போதிக்கப்படவில்லை. ஆனால் ஏறக்குறை முக்கால் நூற்றாண்டுக்கு முன்னர் தாய் மொழியிலான தேசியக்கல்வி பற்றி பேசிவிட்டான் பாரதி. அவன் தேசியக்கல்வி பற்றிக் கொண்டிருந்த நோக்கை அவனது பின்வரும் கூற்று தெளிவுபடுத்துகின்றது.

'தேச பாஷையின் மூலமாக இந்தச் சரித்திரப் படிப்பு மட்டுமன்றி மற்றெல்லாப் பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். தேச பாஷையின் மூலம் பயிற்றப்படாத கல்விக்கு தேசியக் கல்வி என்ற பெயர் சொல்லுதல் சிறிதளவும் பொருந்தாது போய்விடுமன்றோ. பௌதீக சாஸ்திரங்கள் கற்றுக்கொடுப்பதில் மிகவும் தெளிவான தமிழ் நடையில் பிள்ளைக்கு மிகவும் சுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும்'

தேசியக் கல்வி என்பது ஒரு நாட்டின் ஆன்மாவோடும் பண் பாட்டோடும் பிணைந்தது என்பதை பாரதி ஆணித்தரமாக வலியுறுத்துகிறார். ஒரு மாணவரின் அறிவு வளர்ச்சிக்கும், அவனது தேசப்பற்றிற்கும் 'தேச பாஷை' எனப்படும் தாய்மொழியே முதன்மையான கருவியாகும். சரித்திரம் போன்ற சமூகப் பாடங்கள் மட்டுமன்றி, சிக்கலான பௌதீக சாஸ்திரங்களையும் (Physics / Science) தெளிவான தமிழ் நடையில் கற்பிக்கும்போதே, அது மாணவர்களுக்குச் சுலப மாகச் சென்றடையும் என்பது பாரதியின் துணிபு. தாய்மொழி புறக்கணிக்கப்பட்டு அந்நிய மொழியில் புகட் டப்படும் கல்வியை 'தேசியக் கல்வி' என்று அழைப்பதே பொருந்தாது எனக் கருதிய அவர், அறிவியலை மக்க ளாக்க எளிய தமிழ் நடையே அவசியம் என்பதை இதன் மூலம் உணர்த்துகிறார்.

பாரதி ஐரோப்பிய காலத்து நிறுவன ரீதியான கல்வி மரபையும் சந்தித்தவன். ஆங்கிலத்தை நன்கு தெரிந்து கொண்டிருந்தான். பாரதி மொழிப்பற்றும் இனப்பற்றும் கொண்டவன். ஆனால், இன வெறியோ, மொழி வெறியோ அவனை ஆட்டிப்படைக்கவில்லை. எதையும் தெளிந்த

சிந்தையுடன் நோக்கித் துல்லியமான கருத்துக ளைப் படைக்கும் அறிவும், ஆற்றலும் கொண்ட படைப்பாளி. அதனாலேதான் ஆங்கிலக் கல்வியின் ஆதிக்கம் தமிழ் மொழியின் தனித்து வத்தைக் குலைத்துவிடும் என்பதையும் சுதந்திர உண்மையை மழுங்கடித்துவிடும் என்பதையும் கண்டுகொண்டதோடு ஆங்கிலக் கல்வியால் எதுவித பயனுமில்லை என்பதை சுயசரிதை என்னும் பகுதியிலே

*'செலவு தந்தைக்கோர் ஆயிரம் சென்றது*
*தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன*
*நலமோ ரெட்டுணையும் கண்டிலேனிதை*
*நாற்பதாயிரம் கோயிலிற் சொல்லுவேன்*

என்று உறுதியாகவும் முடிபாகவும் சொல்லும் பாரதி 'அறிவு எங்கிருந்தாலும் அதனைத் தேடிப் பெற வேண்டும்' என்ற சோக்கிரதீசனின் கொள்கையைச் சிந்தையிலே கொண்ட வன். அதனாலேயே

*'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்*
*இறவாத புகழுடைய புது நூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்*
*மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்*
*சொல்வதிலோர் மகிமையில்லை*
*திறமான புலமையெனில் வெளி நாட்டோர்*
*அதை வணக்கம் செய்தல் வேண்டும்'*

எனக் கூறி பிறநாட்டினரது அறிவு நூல்களையெல்லாம் தமிழிலே மொழிபெயர்க்க வேண்டும் என விளக்குகிறான். இவன் ஆங்கில நெறியை எதிர்க்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். மேலும், பாரதி விரும்பிய கல்வி தமிழ்மொழியிலான தேசியக்கல்வியாகும். இதனைப்பற்றி ஞானரதத்திலே குறிப்பிடும்போது பிள்ளைகள் தமிழ்பாடம் கற்றார்கள் என்பதை

*'தபோ முனி அந்த உபாத்தியாரை நோக்கி*
*சண்வாச் சாரியாரே இவர்கள் என்ன பாடம்*
*படித்துக்கொண்டிருக்கின்றார்கள்? என்று கேட்டான்*
*அதற்கு கண்வர் இவர்கள் கணித சாஸ்திரம்*
*படிக்கின்றார்கள் என்றான் தபோமுனி'*

என்று விளங்க வைக்கின்றார். தமிழ்மொழி எந்த வகையிலும் மற்றைய உலக மொழிகளைவிடக் குறைந்து போய் விட வில்லை. மொழியென்பது ஒவ்வொருவரும் தமது கருத்தைப் புலப்படுத்திக் கொள்ளும் ஒருவகை ஒலி வடிவந்தான். தமிழ் மக்களுக்கு அறிவியலைப் புகுத்தும் போது அவர்கள் விளங்கக்கூடிய மொழியிலே மொழி பெயர்த்து இலகுவாகப் புகுத்த வேண்டும். இதனால், தமிழ்மொழி வளர்ச்சி அடையும் என்ற கருத்தை வெளியிடும் பாரதி இத்தகைய மொழிப் பெயர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் தேசியக் கல்வி முக்கியமாக இருக்க வேண்டும் என எண்ணினான். அதனாலேயே தேசியக்கல்வி தேசப்பாஷை கொண்டதாக மிளிர வேண்டும் எனக் கூறினான். தமிழ்நாட்டிலே தமிழ்மொழியே தேசியக்கல்வி மொழியாக இருக்க வேண்டும் எனவும் அதற்கான உறுதி மொழியளிக்கப்பட வேண்டும் எனவும் கூறினான்.



'தமிழ் நாட்டிலே தேசியக்கல்வி என்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ்ப் பாஷையைப் பிரதா னமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஸ் மூலமாகவும் தமிழ் ஒரு வித உபபா ஷையாகவும் ஏற்படுத்தினால் அது தேசியம் என்ற பதத்தின் பொருளுக்கு முற்றும் விரோதமாக முடியும் என்பதில் ஐயமில்லை. தேச பாஷையே பிரதானமென்பது தேசியக்கல்வியில் ஆதாரக் கொள்கை இதை மறந்துவிடக்கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகின்ற இந்தமுயற்சிக்கு நம் நாட்டிலிருந்து பூரணசகாயத்தை எதிர்பார்க்க வேண்டு மானால் தமிழ் பாஷையே முதற் கருவியாக ஏற்படுத்தப்படுமென்பதை தம்பட்டம் அறிவிக்க வேண்டும்'

என்று தமது கட்டுரையிலே குறிப்பிட்டுள்ளார். மேலும் தேசியக்கல்வியை ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரை எவ்வாறு புகட்ட வேண்டும் என்பதுபற்றிப் பாரதி தமது தேசியகல்வி என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட கட்டுரையில் சிறப்பாக விளக்கியுள்ளார். பிறமொழிச் சொற்களை எவ்வாறு தமிழ்மொழியில் மொழி பெயர்ப்பது என்பது பற்றியும் பாரதி ஆராய்ந்துள்ளார். இதிலிருந்து பாரதி தேசியக்கல்வி பற்றிக் கொண்டிருந்த நோக்கெல்லாம் ஓரளவு புலனாகும்.

எனவே, தொகுத்து நோக்குமிடத்துப் பாரதியார் தமிழ கத்தின் பாரம்பரியக் கல்வி முறையின் மீது மிகுந்த மதிப்பும் ஈடுபாடும் கொண்டிருந்தார். அந்த மரபுசார்ந்த கல்வியே அவரது கவிதை ஆற்றலுக்கு வலுவான அடித்தளமாகவும் அமைந்தது. எனினும், காலப்போக்கில் அக்கல்வி மரபு நலி வடைந்திருந்த சூழலில், சமுதாயத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்ல ஒரு புதிய கல்வி முறையை உருவாக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது என்பதை நாம் அறியலாம். பாரதியின் சிந்தனைகள் தொலைநோக்குள்ளன. பாரதி மறைந்து நூறு ஆண்டுகள் பறந்தோடிவிட்டன. ஆனால், அவரது சிந்தனைகளும் கருத்துக்களும் மறையாது இன்றைய சமுதாயத்துக்கும் பொருந்துவனவாகவுள்ளன. தாய்மொழிக் கல்வியோ, தேசியக் கல்வியோ அறிமுகப்படுத்தப்படாத, அதைப்பற்றிச் சிந்திக்காத, சிந்திக்கத் தெரியாத மூடக்கொள்கைகளும், வரட்டு வாதங்களும் ஏகாதிபத்திய இருளும் மூடிக்கிடந்த சமுதாயத்திலிருந்து மரபுவழிக் கல்வியூடாக வந்த பாரதி தேச பாஷை, தாய்மொழி, தேசியக்கல்வி என்றெல்லாம் தெளிவாகச் சிந்தித்துக் கருத்துக்களை வெளியிட்டான். ஆனால், இன்னும் இந்தியாவிலே தேசியக்கல்வி தாய் மொழியிலான கல்வி அறிமுகப்படுத்தப்படாமல் இருக்கிறது. இலங்கை ஓரளவு இதில் வெற்றி கண்டுள்ளது எனலாம்.



sivalingam.r@thaiveedu.com

கிருங்கை சேதுபதி

# பாடும் திறன் வேண்டிய பாரதி



tg.theeban@gmail.com

***பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்***
***கண்ணோட்டம் இல்லாத கண்***

*கண்ணோட்டம் - 573*

இத்திருக்குறளில் பண்ணும் கண்ணும் எதுகை மோனை கருதி வந்து இலக்கிய இன்பம் தருவதாக அமைந்தாலும் இது எதிர்மறையாய் அமைந்து உடன்பாடுடைய உண்மையை உணர்த்துகிறது.

பண் இல்லாத பாடல் பயனற்றது. அதுபோன்றது, கண்ணோட்டம் இல்லாத கண்ணும். 'சங்கீத லட்சணம் இல்லாத பாட்டுப் பாட்டாமோ?' என்று கேட்கிறார், இக்குறளுக்கு உரை வழங்கிய பரிதியார். பாட்டுக்கு அழகு பண் என்றால், கண்ணுக்கு அழகு கருணையாம் இரக்கம். அதனைக் கண்ணோட்டம் என்கிறது வள்ளுவம். தன்னிரக்கம், கழிவிரக்கம் ஆகியன கடந்து எவ்வுயிர்க்கும் இரங்குதல் மனித மாண்பு. இரக்கப் பண்பிற்கு எதிரானது அரக்கத்தனம். எவ்வுயிர்க்கும் இன்பம் தர அருளல் தேவகுணம். 'யான் தேவனைப்போல் சிந்திக்க வல்லேன்' என்றவர் பாரதி. 'தெய்வம் நீ என்று உணர்'த்திய வரும் கூட.

எனவே, தன் காலத்துச் சங்கீத லட்சணங்களோடு, முற்கால லட்சணங்களையும் அறிந்த பாரதி, பிற்காலத்தில் அவை பெற வேண்டிய தன்மைகளையும் உணர்ந்து பாடியிருக்கிறார். தொடக்கத்தில் தன்னிரக்கம் என்றே தனிக்கவிதை தந்த அவர், பிற்காலத்தில் கழிவிரக்கத்திற்கும் இடம் கொடுக்காமல், எவ்வுயிர்க்கும் இரங்கி அருள்பவராக, அதற்காக வேண்டி எத்தெய்வத்தையும் துதிப்பவராகப் பரிணமிக்கிறார். அவர் பாடல்கள் சாதாரண நிலையில் பிறந்து அசாதாரண குணங்களைப் பெற்று, மந்திரத்தன்மை உடையனவாக மலர்ந்திருப்பதைப் பார்க்கலாம். அதற்கு, பாரதியின் 'யோக சித்தி' பாடல் ஒரு சான்றாகிறது.

வாழ்க்கை தவம். 'வாழ்வனைத்தும் யோகம்' என்றார் மகான் அரவிந்தர். மகாகவி பாரதி, 'ஊருக்கு உழைத்திடல் யோகம்' என்கிறார். தன் யோகம் சித்திக்க வரம் வேண்டும் பாடல்தான் 'யோக சித்தி'.

வையத்துள் வாழ்வாங்கு வாழச் செய்ய வேண்டியவை எவை

எனச் சிந்தித்து நெறிப்படுத்திய அறமாண்பு, பாரதிக்கும் உண்டு. அதற்குப் பராசக்தியைத் துணைக்கொண்ட அவர், பாடுகிறார். அறம் பாடும் திறன் வேண்டி அவர் வைத்த வேண்டுதல்கள் பலபடித்தானவை. அவை பற்றி விரித்துப் பேசுகிறது இக்கட்டுரை.

## அறம் பாடும் திறன் வேண்டி:

வாழ்க்கையில் நெருக்கடியான சூழ்நிலைகள் எல்லோருக்கும் வரும். அவற்றை எவ்வாறு வெல்கிறோம் என்பதில்தான் நமக்கான வாழ்க்கை இருக்கிறது. அதற்கு முன்னர் எது வாழ்க்கை என்பதில் ஒரு புரிதல் இருக்க வேண்டும். பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட எழுந்த கோடிட்ட இடத்தை எது கொண்டு நிரப்பப்போகிறோம் என்பதைப் பொறுத்தது அது. அது இட்டு நிரப்பும் இடம் அன்று; திட்டமிட்டு முன்னேறவும் திடம்படச் செயலாற்றவும் காலம் கொடுத்த கொடை. அதனை வெற்றிடம் ஆக்கிய வீணர்கள் பலர்; விரையம் ஆக்கிய பலவீனர்கள் பலர்; மற்றவர்க்குக் கிட்டிய வாய்ப்புகள் பார்த்தே, அழுக்காற்றில் அழுந்திக் கெட்டவர் பலர். இவர்களுக்கு மத்தியில் பாமரராய், விலங்குகளாய், கஞ்சிக்கும் காமத்துக்கும் காலத்தைத் தொலைத்துத் துஞ்சி மடிந்தவர்கள் பற்பலர். அவர்களில் இருந்து விலகி, தன் பிறப்பின் தனித்தன்மை உணர்ந்து தரணியில் உயரவும் தரணிவாழ் உயிர்களை உயர்த்தவும் வேண்டிய தேவை மனிதர்க்கு உண்டு. அதிலும் குறிப்பாக, வையத்தை வாழவைக்க வேண்டும் என்கிற வைராக்கியத்தோடு புதுவை புகுந்த பாரதிக்கு மிகவுண்டு. அதனால்தான் உண்டு உறங்கி, இடர் செய்தும் வீண் கதைகள் பேசிப் பொழுதுகள் போக்கியும் அழிகிற வகையினரை ஆட்கொள்ள முனைகிறார்.

வயிற்றுக்குச் சோறு வாங்கிவரச் சென்றவர்கள் வருவதற்குள், உடனிருந்தவர்களைப் பயிற்றிப் பக்திமயமாக்கி அதிமானுடர்களாக்க விழைகிறார். பக்தி என்பது கடவுளை முன்னிறுத்திச் செலுத்தும் காதல் என்றாலும், அதில் தன்மயத் தன்மையும் உண்டு. ஆணும் பெண்ணும் இணைந்து பெறும் இன்பத்தின் தலைவாசல் காதல்; பரமாத்மாவும் ஜீவாத்மாவும் கலந்துபெறும் பேரின்பத்தின் நுழைவாயில், பக்தி. அது தாய் பிள்ளை உறவாகவும் தழைக்கும்; ஆண்டான் - அடிமை முறையாகவும் செழிக்கும்; குரு சீட மரபாகவும் சிறக்கும். மொத்தத்தில் இறைவனின் இராஜ்ஜியத்தில் இன்புற்று வாழும் இயல்பை எல்லாவுயிர்களும் பெறுதலே இதன் நோக்கம். (இது கருதியே, கண்ணனைத் தாயாக, தந்தையாக, குருவாக, அரசனாக, ஆண்டாக, தலைவன் - தலைவி, குழந்தை எனப் பன்முகத் தன்மையில் இருத்தித் தன்னை அதற்கேற்பத் தகவமைத்து, கண்ணன் பாட்டு இசைத்தவர் பாரதி. தெய்விக உணர்வாயினும் அது மனிதம் கலந்த புனிதம் என்பதை ஆழ்வாராதிகள் வழி அனுபவித்தவர் அவர். அதற்குப் பெருந்தூண்டுதல் குவளைக்கண்ணன் என்பதை மறந்துவிடக்கூடாது.)

பசியோடு இருத்தல் பக்தி மார்க்கத்திற்குத் துணைசெய்ய வல்லது. சராசரிப் பசி இரைதேட வைக்கும்; இலட்சியப் பசி இறை தேட வைக்கும். இரண்டுக்கும் இயற்கை நிச்சயம் வாய்ப்பளிக்கும் என்பதை அறிந்த பாரதி, பசிக்கு உணவு வரும் வரைக்கும் பக்தி மார்க்கத்தைத் துணைக் கொண்டு, தன் சீடர்களை ஆட்கொள்கிறார்; அதற்கு முன்னதாகத் தன்னையே ஆட்படுத்திக் கொள்கிறார். வீரை சக்தியாக விளங்கும் மூல சக்தியை முன்னிறுத்தி, பாரதி பேசுகிறார்.

***நின்னைச் சிலவரங்கள் கேட்பேன் - அவை***
***நேரே இன்றெனக்குத் தருவாய்***

அதிகம் கேட்க அவகாசம் இல்லை; ஆயிரம் வேலைகள் அன்னைக்கு. ஆனாலும், தேவை தனக்கு. அதனால் கேட்பவை சில. அவை எப்படிக் கிடைத்தாலும் போதும் என்கிற புத்தி தனக்கில்லை. வேறு ஒருவராலோ, வேறு வகைகளிலோ அவற்றைப் பெற விரும்பாத பாரதி, ‘நேரே நீயே - தாமதம் இல்லாமல், தவிர்த்துவிடாமல் - இன்று எனக்குத் தருவாய்’ என்று விண்ணப்பம் விடுக்கிறார். அதற்குத் தான் தகுதியுடையவன் தானா என்று தாயாகிய அவள் ஆராயக் கூடும். அதற்கு இடம் இல்லாமல் செய்துவிடுகிறது, முதலில் கேட்கும் வரம். அது.

***என்றன்முன்னைத் தீயவினைப் பயன்கள் - இன்னும்***
***மூளாது அழிந்திடுதல் வேண்டும்***

## முன்னைத் தீய வினைப் பயன்கள் மூளாது அழித்து விட வேண்டி:

வினை - செயல். முன்பு செய்த செயல்களுக்கான நன்மை தீமைகள் தாமே விளையும். அவற்றுள் தீமையை அழித்து நன்மையைப் பெறுவதில்தான் அறிவின் இயக்கம் முற்பட வேண்டும். எனவே, தீய வினைப்பயன்கள் மீளவும் மூண்டு எழுந்து நம்மை அழித்துவிடாது இருக்க, அதனைத் தாயாகிய நீயே முந்திக் கொண்டு அழித்துவிடவேண்டும். இது முற்காப்பு மட்டுமல்ல, தற்காப்பும் ஆகும். பழைய கட்டுகளைத் தவிர்த்த உயிர் புதிய உயிராகிவிடுகிறது. இதன் மூலம் தான் புதிதாய்ப் பிறக்கும் தருணம் வாய்த்துவிடுகிறது. இது இப்பிறவியிலேயே கிட்டிய இரண்டாவது தனிப் பிறவி; புதுப்பிறவி. இதனை மறுபடியும் முன்னைத் தீவினைகள் மூண்டு பாழ் செய்யாது இருக்க வேண்டும். பழக்க தோஷத்தில் நாம் பெறவேண்டிய சந்தோஷத்தை இழந்துவிடக்கூடாது அல்லவா? அதுதான், இனிக் கேட்க இருக்கும் இரண்டாவது வரமாக அமைகிறது.

## என்றும் சந்தோஷம் கொண்டிருக்கச் செய்தல் வேண்டி:

இந்த வரம் சரி. இதனைப் பயன்படுத்தும் வழியையும் அதன்படி தன்னைச் செலுத்திக் கொள்ளும் தந்திரத்தையும் உள்ளடக்கி, சற்றே விளக்கமாக, இவ்வரத்தினை எடுத்து மொழிகிறது, பாரதியின் கவிவாக்கு.

***இனி என்னைப் புதிய உயிர் ஆக்கி - எனக்கு***
***ஏதும் கவலைஅறச் செய்து - மதி***
***தன்னை மிகத்தெளிவு செய்து - என்றும்***
***சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்***

எல்லாவுயிர்களும் அனுபவிக்க வேண்டி, இந்த உலகத்தில், எத்தனையோ கோடி இன்பங்கள் வைத்தவன் இறைவன் மற்றவுயிர்கள் அனுபவிக்கும் இன்பத்தைக் கூட, இந்த மனிதவுயிர் அனுபவிக்க விடாமல் செய்துவிடுகிறது, அதன் மனம். தன் போக்கில் காரண காரியங்களை ஆராய்வதாய்க் கருதிக் கவல்வதே அதன் வேலையாகிவிடுகிறது. அதனால், மனதைக் கவலை சூழ்கிறது. அதில் உடல் ஆழ்கிறது. உயிர் அதன் வாதனையை அனுபவிக்கிறது. இதற்கு எதிரானது இன்பம். அது உயிரால் அனுபவித்து உணரப்பெறுவது. அதனை ஆனந்தம் என்றும் சொல்வர். விவேகத்தால் (மெய்யறிவால்) ஆனந்தம் பெற்றவர் விவேகானந்தர்.

***முகத்தின் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்***
***அகத்தின் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்***

என்கிறது திருமூலர் திருமந்திரம். அக இன்பம் ஆனந்தம். எனில், அகமும் புறமும் (உடலும் உள்ளமும் ஒன்றி உணர்கிற) ஒருசேர அனுபவிக்கிற இன்பம் மகிழ்ச்சி. அதனை சந்தோஷம் என்று சொல்வதும் உண்டு. அதனை அடையவிடாமல் தடுப்பதுதான் கவலை. தேவையில்லாத காரண காரியங்களை ஆராய்ந்து கவலையைத் தேடிக் கொ(ள்/ல்)கிற சகவாச தோஷம் மனதுக்கு உண்டு. அதனை அவ்வழியில் செல்லவிடாமல் தெளிவுபடுத்த உதவுவது மதி (அறிவு). அதுவே நிம்மதி. அதனை முன்னிறுத்தி, தெளிந்த மதியுடன் தெளிவாகக் கேட்கப்பெறுவது இரண்டாவது வரம்.

பெற்ற வரங்களைப் பேணிக்காத்துக்கொள்ள மற்ற வரங்களும் வேண்டுமே. தனித்தவம் புரிந்து அவற்றை நிலைப்படுத்திக் கொண்டாக வேண்டும். அதற்கு முற்றிலும் துணையாவன உடலும் உள்ளமும். அவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளத் தேவையானவற்றை ஒரு பட்டியலாக்கிப் பாடுகிறார் பாரதி.

தவ மேன்மை கொடுத்தருள வேண்டி,

***தோளை வலி உடைய தாக்கி - உடல்***
***சோர்வும் பிணிபலவும் போக்கி - அரி***
***வாளைக் கொண்டுபிளந் தாலும் - கட்டு***
***மாறா வுடல் உறுதி தந்து - சுடர்***
***நாளைக் கண்டதோர் மலர்போல் - ஒளி***
***நண்ணித் திகழு(ம்) முகம் தந்து - மத***
***வேளை வெல்லுமுறைகூறித் - தவ***
***மேன்மை கொடுத்தருளல் வேண்டும்***

தவம் மேன்மைப்படத் தகுந்த உள வலிமை வேண்டும். அதற்கு முதலில் உடல் வலிமை வேண்டும். உடலோ, உள்ளமோ எவ்வளவு வலியைத் தாங்கிச் செயற்படுகிறதோ, அதுதான் வலிமை. எதையும் தாங்கும் இதயம் வேண்டும் எனில், அதற்கு முதற்கண் எதையும் தாங்கும் தோள் வலிமை வேண்டும். உடலுக்குச் சோர்வோ, பிணியோ வந்து விடக்கூடாது. அவை வலிமைக்கு ஊறு செய்யும் உள் காரணிகள். அடுத்து, அரிவாளைக் கொண்டு பிளந்தாலும் கட்டு மாறாத உடல் வலிமை வேண்டும். அரிவாள் ஒரு குறியீடு. உடலைச் சிதைக்கும் எந்தப் புறக்கருவிகளாலும் சிதையாத திடம்படு உடம்பு இன்றியமையாத் தேவை. அதற்கான உணவு முதலான ஊட்டம் பெற்ற உடம்பு, பின்னர் தினவெடுத்து அலையும். தசை நசை கொண்டு, தடுமாறும்; உள்ளம் தடம் மாறும்; மதவேள் ஆகிய காமனின் கையாளாக நம்மை ஆக்கிவிடும். அவனை வெல்லும் முறை சொல்லி, என் உயிரை மேம்படுத்தும் தவ ஆற்றலைத் தருதல் வேண்டும் என்பது மூன்றாவது வரம்.

அந்தத் தவம் எப்படி இருக்கவேண்டும் என்பதை நுட்பமாய் உணர்த்த, பாரதி சுடர்நாளைக் கண்டதோர் மலர்போல், ஒளி நண்ணித் திகழு(ம்) முகம்வேண்டும் என்கிறார்.
அகத்தின் அழகை முகத்தில் காணலாம். அது அன்றலர்ந்த மலர் போல் ஒளிதர வேண்டும். அதற்கு அன்றாடம் எழுகிற சூரியனின் உதவி வேண்டும்.

மேலோட்டமாகத் தெரியும் இக்காட்சிக்குள் நீரோட்டம்போல், ஒரு தரிசனம் வாய்க்கிறது. இந்த உலகில் இயங்கும் எல்லாவற்றோடும் பிரபஞ்சப் பேராற்றல் தொடர்பு கொண்டிருக்கிறது. இடையறாத இயக்கம் அதன் கொடை.

எப்படி மின்னாற்றல் பெற்ற எந்திரம் அதன்வழி பெற்ற தன்னாற்றல் உள்ளவரை இயங்குகிறதோ, அதுபோல், இயற்கை ஆற்றலைத் தன்னுள் நிரப்பி இயங்கும் எல்லாவுயிரும் அது இருக்கும் வரைக்கும் இயங்கும்; குறையக் குறையக் குறையும்; நிறைவில், மறையும்; அது இறப்பாய் முடியும். ஆக, பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் அமையும் இருப்பையும், இயக்கத்தையும் தக்கவைத்துக்கொள்ள, (செல்போனுக்கு, சார்ஜ் போட்டுக்கொள்வது போல.) மூலப் பேராற்றல் கொண்டு தன்னை அவ்வப்போது உயிர்ப்பித்துக் கொள்ள வேண்டும். புதிய உயிராக்கிக் கொள்ளல் என்பது அதன் சுருக்கக் குறிப்பு.

இந்த இடத்தில் திருவள்ளுவரின் திருப்பேரனாகத் தன்னை வளர்த்துக்கொள்கிறார் பாரதி. அது தாத்தாவைத் தாண்டிய உயரத்தில் அவரை நிறுத்திக் காட்டுகிறது. பொன்னை நெருப்பிடை இட்டுப் பொசுக்கிப் புடம் போட்டுச் சுடர் ஏற்றுவதுபோல், தன்னை வருத்தித் தவம் செய்து மேன்மையுறுதலைத் திருக்குறள் சுட்டுகிறது. (சுடச் சுடரும் பொன்போல் - தவம் - 267)

எந்தச் சிரமமும் எய்தாமல், கதிரவன் முகம் கண்ட தாமரை போல, தன் தவ வலிவு பொலிவு பெற வேண்டும். அது முடியும் என்று முன்வைக்கிறது பாரதியின் கவியுள்ளம்.

இந்தத் தவ ஆற்றலை எதற்குப் பயன்படுத்த வேண்டும் என்கிற தொலைநோக்குப் பார்வையும் பாரதிக்கு இருந்தது. அது தன் காலத் தேவையை முன்னிறுத்திச் சொல்லத் தூண்டுகிறது. வேண்டியதுகளின் பட்டியலாக அடுத்த பாடல் அமைகிறது.

***எண்ணும் காரியங்கள் எல்லாம் - வெற்றி***
***ஏறப் புரிந்தருளல் வேண்டும் - தொழில்***
***பண்ணப் பெருநிதியம் வேண்டும் - அதில்***
***பல்லோர் துணைபுரிதல் வேண்டும்***

இவை பொதுவானவை. அவரவர்க்கும் உரிய வகையில் ஆக்கிப் பயன்கொள்ள வேண்டும் வரங்கள். இந்தியத் திருநாட்டில் எத்தகு தொழில்கள் மேம்பட வேண்டும் என்று கவிதைகளும் கட்டுரைகளும் அவை குறித்த செய்திகளும் தந்தவர் பாரதி. எனினும் இந்த இடத்தில் தனக்கான பணியை - தொழிலைத் தனித்து விரித்து உரைக்க முற்படுகிறார் பாரதி.

## பாடும் திறன் வேண்டிய பாரதி:

புதுவைக்கு வந்த பிறகு, மணக்குளவிநாயகர் சந்நிதியில், அவர் திருமுன்பு, 'நமக்குத் தொழில் கவிதை' என்றும் 'நாட்டுக்கு உழைத்தல்' என்றும் தன் வாழ்வின் நோக்கத்தை வகுத்துக்கொண்டு செயல்பட்டவர் அல்லவா, அவர். பராசக்தியிடம் காணி நிலம் முதலான கோரிக்கைகள் வைத்து அவர் பாடிய பாடலின் நோக்கம், 'பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடச் செய்வது'தானே. அதனை முன்னிறுத்தி, இப்பாடல் முடிகிறது.

***...பல்லோர் துணைபுரிதல் வேண்டும் - சுவை***
***நண்ணும் பாட்டினொடு தாளம் - மிக***
***நன்றாவுளத் தழுந்தல் வேண்டும் - பல***
***பண்ணிற் கோடிவகை இன்பம் - நான்***
***பாடத் திறனடைதல் வேண்டும்***

இலக்கியச் சுவையும், தாளமும் பாட்டும் இணைய எழும்

புகிற இசையின் அழகும் மிகுந்து கேட்போர் மனம் கொள்ளுமாறு விளங்கும் பண்ணில் கோடி வகை இன்பம் கொண்டுவரும் வண்ணம், தான் பாடும் பாடல் அமைதல் வேண்டும். அப்படிப் பாடும் திறன் அடைதல் வேண்டும் என்பது இப்பாடலின் வைக்கும் பாரதியின் வேண்டுதல்.

இங்கு அவர் முன்வைக்கும் பாடும் திறன் எதுகை, மோனை, இசை, தாளம் இணைய எழும் பல்வகைப் பண்கள் கொண்டு அமைந்த பாடல்களை இயற்றுவது என்று புரிந்துகொள்ளு வது பொருந்தாது; அது கேட்கும் இன்பத்தை மட்டுமே கிளர்த்துவது. பாரதியின் நோக்கம் அதுவன்று. அவர் பண் ணோடு இசைந்து பாடும் பாடல்கள் எல்லாம் கோடிக்கணக் கான இன்ப வகைகளைக் கொடுக்கும் ஆற்றல் வாய்ந்த அரியவை என்று அடுத்து வரும் பாடல் அடிகள் புரிய வைக்கும். அதனை விரித்துணர, பாரதியின் சித்த மனோ பாவம் மொத்தமாய்ப் புலப்படத் தொடங்கும்.



sethupathi@thaiveedu.com



# எம்.வி. வெங்கட்ராமின் ‘பைத்தியக்காரப் பிள்ளை’ சிறுகதையில் வன்முறையும் மனவடுவும்

## மைதிலி தயாநிதி



tg.theeban@gmail.com

கும்பகோணத்தில் சௌராஷ்டிர குடும்பத்தில் உதித்த எம்.வி. வெங்கட்ராம் (1920-2000) தமிழ் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர். நித்தியகன்னி, காதுகள் போன்ற நாவல்களையும் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். அவரின் ‘பைத்தியக்காரப் பிள்ளை’ என்ற சிறுகதை தமிழில் எழுதப்பட்ட மிகச் சிறந்த சிறுகதைகளுள் ஒன்று என்பது என் கருத்து. கும்பகோணத்தில் வறுமையில் வாடும் சௌராஷ்டிர பட்டு நெசவுத் தொழிலாளர் குடும்பத்தைப் பின்னணியாகக் கொண்ட இந்தச் சிறுகதை, ஆணாதிக்கக் குடும்ப அமைப்பில் நிகழும் வன்முறையின் பாதிப்புகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இக்கதை குடும்ப வன்முறையினால் பாதிக்கப்படுவோர் பெண்கள் மாத்திரமன்று, பிள்ளைகளுமே என்பதைத் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது. வன்முறையினாற் பாதிக்கப்பட்ட தாய் அதே வன்முறையைத் தன் பொருளாதார அதிகாரத்தை எதிர்க்கும் மூத்த மகன் ராஜத்திடம் காட்டுவதும், அவனைத் தன் கணவனின் பிரதிநிதியாக உணர்வதும் குடும்ப வன்முறையின் தாக்கத்தை உணர்த்துகிறது. தந்தை போன்று, தானும் ஒரு வன்முறையாளனாக மாறிவிடுவோமா என்று இடையறா அச்சத்தில் ராஜம் இருப்பதும், தாய் மீது வன்முறை புரிந்த தகப்பன் தற்பொழுது இல்லாத காரணத்தால், தன் ஆத்திரம் முழுவதையும் குடும்பத்தின் பிரதிநிதியாக விளங்கும் தன் தாயிடம் காட்டுவதும், குடும்ப வன்முறையைப் பார்த்து வளர்ந்த குழந்தையின் மன உளைச்சலைப் பிரதிபலிக்கிறது.

வன்முறையால் பாதிக்கப்பட்ட தாயும், ராஜமும் அப்பாதிப்பினை வெவ்வேறு விதத்தில் வெளிப்படுத்துகிறார்கள். உடல் ரீதியான ஆக்ரோஷமான செயற்பாடுகள் மூலம் கணவனிடமிருந்து தன்னைப் பாதுகாக்க முயன்ற தாய், கணவன் இறந்த பின்னர் நிலவும் சமூக ஆதரவற்ற சூழலில், தன் ஆத்திரங்களையெல்லாம் வெளியே வன்சொற்களாய்க் கொட்டுகிறாள். அவளின் சொல் வன்முறை, ஏலவே தந்தையின் வன்முறையைப் பார்த்திருந்த ராஜத்தின் மனக்காயத்தை ஆழப்படுத்துகிறது. ஆனால், அவன் பாதிப்பு அவன் மனதுள்ளே புதைந்திருப்பதனால், அது மீண்டும் மீண்டும் வரும் பயங்கரமான கனவாகவும், பின்னர் தற்கொலை எண்ணமாகவும் மாறுகிறது. தந்தையிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் கொள்ள முயலும் ராஜத்துக்குத் தாய் தொடர்பான வன்முறை எண்ணங்கள், அவளைப் பார்க்கும்போது, வன்மொழி பேசும்போதெல்லாம் எழுகின்றன. தாய்க்கு எதிரான தன் வன்முறைச் செயற்பாடுகள் சமூகத்தில் ஒருபோதும் நியாயப்படுத்தப்பட முடியாதவை என்ற காரணத்தால் அவற்றையும் தன் மனதிலேயே புதைத்துக் கொள்கிறான். இவ்வாறு தந்தையின் வன்முறையாற் பாதிக்கப்பட்ட தாயும் மகனும் தத்தம் மனவடுவினை வெவ்வேறு விதமாக வெளிப்படுத்துகின்றனர். தாய்க்கும் ராஜத்துக்குமான மோதல் தந்தை அறிமுகப்படுத்திய வன்முறையின் எச்சம் என்று கூறலாம்.

கதையின் பெரும்பகுதி ‘மூன்றாம் நபர் வரையறுக்கப்பட்ட பார்வையில்’ (third-person limited narration) சொல்லப்படுகிறது. அதாவது, வாசகர்கள் ராஜத்தின் உலகத்தை மட்டும் அவன் எண்ணங்கள், நினைவுகள், உணர்வுகள் மூலமாகப் பார்க்கிறார்கள். இதன் காரணமாக, தாய் பெரும்பாலும் கொடியவளாகவும், நியாயமற்றவளாகவும் தோன்றுகிறாள். ராஜத்தின் கோபம், வெறுப்பு முதலான உணர்ச்சிகள் வழியாகவே நாமும் அவளை உணர்கிறோம். ஆனால், கதையின் இறுதியில், ராஜத்தின் மரணத்திற்குப் பிறகு, கதை சொல்லும் முறை ‘யாவும் அறிந்த கதைசொல்லி’ (omniscient perspective) முறைக்கு மாறுகிறது. அப்போதுதான் முதல்முறையாக தாயின் ஆழ்ந்த துயரத்தை நாம் உணர்கிறோம். இந்த மாற்றம் நமது புரிதலை மாற்றியமைக்கிறது. கதை சொல்லும் முறையில் ஏற்படும் இம்மாற்றமானது, வாசகர்கள் அவளை ராஜத்தின் வெறுப்பின் வழியாக மட்டும் மதிப்பிடுவதைத் தடுத்து, இரு தரப்பிலும் உள்ள அவலங்களைப் புரிந்து கொள்ளத் தூண்டுகிறது.

தாயின் கொடுமையான நடத்தையை இயல்பான குணமாகக் கருதாது, மதுபோதைக்கு அடிமையான கணவன் அவள் உடலிலும் உள்ளத்திலும் நிகழ்த்திய தொடர்ச்சியான உடல் மற்றும் சொல்ரீதியான வன்முறைகளின் விளைவால் உருவான மனநிலையாகவே கொள்ள வேண்டும். ராஜம் தாயை இயல்பாகவே கொடுமையானவளாக நினைக்கவில்லை. ‘அப்பாவால்தான் அம்மா கெட்டுப் போயிருக்க வேண்டும்...’ என்கிற அவனது எண்ணமே இதற்குச் சாட்சி.

‘அப்பாவால்தான் அம்மா கெட்டுப் போயிருக்க வேண்டும். ஆரம்பத்தில் அவள் அப்பாவை எதிர்த்துப் பேசுவதில்லை. அடிதாங்க முடியாமல் எதிர்த்து வாயாடத் தொடங்கினாள்.

உடம்பிலே தெம்பு குறைந்ததும் பதிலுக்கு அடிக்கவும், கடிக்கவும் ஆரம்பித்தாள். அம்மாவுக்கு சோழிப்பல். உதடுகளைக் காவல் காப்பது போல் வெளியே நிற்கும். அப்படி குடி போதையில் அவளை அடிக்கும்போது, கையோ, காலோ, வாயோ, வயிறோ, பல்லில் சிக்கிய இடத்தைக் கடித்துக் குதறி விடுவாள்.'

இங்கு அவளின் சோழிப்பல் கணவனின் வன்முறையிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தற்காப்பு ஆயுதமாக இருக்கிறது. மேற்படி வர்ணனை மூலம், தந்தையின் வன்முறையே தாயின் குணமாற்றத்திற்கு (transformation) நேரடிக் காரணம் என்பது தெரியவருகிறது.

அவள் கணவனிடம் எதிர்கொண்ட வன்முறை உடல்ரீதியானது மட்டுமல்ல. 'அதிர்ஷ்டம்' நிறைந்த ஒரு குழந்தை பிறந்தால் செல்வம் பெருகும் என்ற மூடநம்பிக்கையினால் அவளது கணவன் அவளைப் பத்து முறை தாயாக்கியிருக்கிறான். இது 'கட்டாயத் தாய்மை' (reproductive coercion) ஆகும். ஒவ்வொரு குழந்தைப் பேறும் அவளின் உடம்பிலே வலுவையும் தெம்பையும் குறைத்தன. அந்த நேரத்திற்றான் அவள் கணவனின் அடியைத் தாங்க முடியாமல் அடிக்கவும் கடிக்கவும் ஆரம்பிக்கிறாள். மேலும், ஒரு குழந்தை ஆணாகவோ பெண்ணாகவோ பிறப்பதற்குத் தாய் பொறுப்பல்ல என்றாலும், 'போயும் போயும் பெண்ணா பெத்தே?' என்று கணவனால் இறுதியாகப் பெண் குழந்தை பெற்ற சமயத்தில் இழிவுபடுத்தப்படுகிறாள். இவையனைத்தும் பெண்களைத் தரம் தாழ்ந்தவர்களாகவும், ஆண் குழந்தைகளைப் பெறுவதற்கான கருவியாகவும் மட்டுமே பார்க்கும் ஆணாதிக்கச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய சமூகக் கட்டமைப்பிலே, தாய் இயல்பிலே கொடுமையானவள் அல்லள் எனினும், வன்முறையால் பாதிக்கப்பட்டுத் தப்பிப்பிழைத்த (survivor), மனவடு சுமந்த பெண்ணாகவே காட்சி அளிக்கிறாள்.

கணவனை இழந்த பின்னர், பிள்ளைகள் தன்னைப் பராமரிக்க வேண்டும் என்கிற அந்தத் தாயின் பிடிவாதம், குடும்ப வன்முறையினால் ஏற்பட்ட பொருளாதாரம் மற்றும் உளவியல் ரீதியான பாதிப்புகளின் பின்னணியில் வைத்துப் பார்க்கப்பட வேண்டும். உடல் மற்றும் சொல் ரீதியான வன்முறைக்குத் தொடர்ச்சியாக ஆளாக்கப்பட்ட தாய், கணவன் இருக்கும் காலத்திலே பிள்ளை பெறும் எந்திரமாக இருந்தவள். குழந்தை வளர்ப்பும் சமையலுமே அவள் தொழில்களாகிப் போனவை. குடும்பத் தொழிலில் ஈடுபடவோ குடும்ப வருமானத்தைப் பெருக்கவோ அவளுக்கு வாய்ப்புகளோ நேரமோ இருந்திருக்க முடியாது. இத்தகைய சூழலில், கணவனை இழந்தபோது, கைம்பெண் நிலை அவளுக்கு விடுதலையைத் தரவில்லை. மாறாகக் கடுமையான பாதுகாப்பற்ற உணர்வையே அவளுக்குக் கொடுத்திருக்கிறது. நீண்டகாலமாக அனுபவித்த வன்முறயானது, பாதிக்கப்பட்டவர்களிடம், 'மீண்டும் பலவீனமாகிவிடுவோமோ' எனும் அச்சத்தை உருவாக்குகிறது. எனவே, தாய் நிதிக் கட்டுப்பாட்டைத் தன்வசம் வைத்திருப்பதும், தன் பிள்ளைகள் தன்னை ஆதரிக்க வேண்டும் என எதிர்பார்ப்பதும், பல ஆண்டுகால உடல் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மைக்குப் பிறகு, தன்னை உறுதிப்படுத்தும் முயற்சியாகப் புரிந்துகொள்ளலாம். ஆனால், ராஜம் இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளும் மனநிலையில் இல்லை.

தந்தையின் நேரடி வன்முறைக்கு ராஜம் ஆளானதாகக் குறிப்புகள் இல்லாவிட்டாலும், அவன் அந்த வன்முறைகளின் தொடர்ச்சியான சாட்சியாக வளர்ந்தவன். Witness Trauma என அழைக்கப்படும் இந்நிலை, வன்முறையைத் தடுக்கவோ அதிலிருந்து விலகவோ இயலாத நிலையில் அதனை மீண்டும் மீண்டும் கண்டு அனுபவித்ததனால் உருவாகும் மனச்சிதைவைக் குறிக்கிறது. இவ்வாறு காயமடைந்த மனப்பார்வையே தாயைக் 'குரூரமானவள்' எனக் கட்டமைக்கிறது என்பது கவனத்திற்குரியது. மேலும், மதுப்பழக்கமும், பொறுப்பற்ற தன்மையும் கொண்ட தந்தையிடமிருந்து, குடிப்பழக்கமற்றவனாயும், குடும்பச் சுமையைப் பொறுப்புடன் தாங்குபவனாகவும் தன்னை வேறுபடுத்திக் கொண்ட ராஜத்திற்கு வன்முறை தந்த தீர்க்கப்படாத மனக்காயம் வெறிநாய்க் கனவாக' வெளிப்படுகிறது. கனவில் அந்த வெறிநாய் மூச்சுத்திணற ஓடும் அவனைத் துரத்தி, அவன் மேல் பாய்ந்து வலக்கால் கெண்டைச் சதையைக் கடித்துப் பிடித்துக்கொள்கிறது. 'வெறிநாய் கடித்தால் மனிதனுக்குப் பைத்தியம் பிடிக்கும் என்கிறார்கள். கனவில் நாய் கடித்தாலும் பைத்தியம் பிடிக்குமா?' என்று ராஜம் குழம்புகிறான். மீண்டும் மீண்டும் வரும் அந்த 'வெறிநாய்க் கனவிற்குத் தந்தையைப் போன்றே வன்முறையாளனாக மாறிவிடுவோமோ என்ற அவனது உள்ளார்ந்த பேரச்சமே அடித்தளமாகிறது.

தன் தாயின் மீது ராஜம் கொள்ளும் கோபம், உண்மையில் அவனது தந்தை நிகழ்த்திய வன்முறைக்கு எதிராக வெளிப்படுத்தப்பட வேண்டியது. ஆனால் இதை இடம் மாறிய ஒரு எதிர்வினை (displaced response) என்று கூறலாம். தந்தையே தாயினதும், ராஜத்தினதும் மனவடுக்களுக்கு (trauma) முதன்மைக் காரணமாக இருந்தவர். இருப்பினும், அவரது மரணம் அவரை நேருக்கு நேர் எதிர்கொள்ளும் வாய்ப்பை ராஜத்திடமிருந்து பறித்துவிட்டது. தன் ஆத்திரத்திற்குரிய தந்தை இல்லாத நிலையில், ராஜம் தன் கோபத்தைத் தாயின் பக்கம் திருப்புகிறான். ஏனெனில், அந்தத் தாய் இப்போது குடும்பத்தின் அதிகாரம் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டைக் கையில் வைத்திருப்பவராக இருக்கிறாள்.

ராஜத்தின் இடம் மாறிய எதிர்வினை (displaced response) என்பதைச் சூசகமாகக் காட்டுவது போன்று சேவல் பற்றிய குறியீடு கதையின் தொடக்கத்தில் வருகிறது. தன்னைக் காலை 4.30 மணிக்கெல்லாம் கூவித் துயில் எழுப்பும் அடுத்த வீட்டுச் சேவல் பற்றி வேடிக்கையாக நினைத்துச் சிரிக்கிறான் ராஜம். ஆனால், சேவல் கூவி இரண்டு நிமிடங்களும் ஆகவில்லை. தாயினால் தினமும் ஏற்படும் சண்டை சச்சரவு நினைவுக்கு வந்தவுடன், 'சுவரேறி குதிச்சு சேவல் கழுத்தைத் திருகி, குழம்பு வச்சி தின்னுடப் போறேன். அதெப்படி கரெக்டா நாலரை மணிக்குக் கூப்பாடு போடுது! காலை நேரத்திலே ஐயோய்யோ என்று கத்தறாப் போலே சகிக்க முடியல்லே!' என்று சொல்கிறான். தாயிடம் வெளிப்படையாகக் காண்பிக்க முடியாத ஆத்திரத்தை அவன் சேவலிடம் காட்டுகிறான். இந்த வேகமான மனநிலை மாற்றம், ஏற்கனவே கசப்பான உணர்வுகளால் நிரம்பிய அவனின் தளும்பிக் கொண்டிருக்கும் உணர்ச்சித் தளத்தையே சுட்டுகிறது.

மேலும், தாயுடன் வாதம் புரியும்போது ராஜத்தின் மனம் இரண்டு இடங்களில் தாயைத் தாக்குவது போலக் கற்பனை செய்கிறது. இந்தச் சிறு கற்பனைகள் அவனுக்கு ஒரு திருப்தியையும் அதிகார உணர்வையும் கொடுக்கின்றன. ஆனால்,

இவை தந்தையின் அதே வன்முறைச் செயற்பாட்டின் பிரதிபலிப்பாகவே அமைகின்றன.

‘அம்மாவை பிடித்து இழுத்து, தலைமுடியை உலுக்கி கன்னங்களில் மாறி மாறி அறைந்து, முகத்திலும் முதுகிலும் குத்தி, ‘விட்டுட்றா, விட்டுட்றா, இனிமே நான் உன் வழிக்கு வரல்லே; நீ பங்கஜத்தைக் கட்டிண்டு சுகமாயிரு. என்னை விட்டுடு’ என்று கதறக் கதற உதைத்துச் சக்கையாக மூலையில் எறிந்து விடலாமா என்ற ஒரு கேள்வி காட்சியாகக் கண்களுக்கு முன்னால் வந்தபோது அவன் மனசுக்கு சௌகரியமாயிருந்தது. ‘அப்பா அடிப்பாரே, அந்த மாதிரி, அப்பாவைக் கடிக்கப் பாய்வாளே, அப்படிக் கடிக்க வருவாளோ ? வரட்டுமே; என்னிடம் பலிக்காது; பல்லைத் தட்டிக் கையில் தருவேன்’ என்று மனத்துக்குள் கறுவிக் கொண்டான்.



இது ‘தலைமுறை கடந்த வன்முறைப் பரிமாற்றத்தைக்’ (intergenerational transmission of violence) காட்டுகிறது. ராஜம் தன் தந்தையின் வன்முறையை வெறுத்தாலும், அவனை அறியாமலேயே தன் கற்பனையில் அதே வன்முறையைப் பின்பற்றுகிறான்.

அத்துடன், ராஜம் அதிகாலையில் தெருவில் போகும்போது தன்னை அமைதியாகப் பின்தொடரும் தெருநாயைத் திரும்பிப் பார்த்துக் குரைத்து அதைத் துரத்தும்போது, அந்நாய் அவனது தாய்க்குப் பதிலீடாக (substitution) மாறுகிறது. ஒருவேளை தாயையும் இதேபோன்று எதிர்கொண்டால் அவளும், அந்த நாயைப் போன்றே இப்படித்தான் பின்வாங்கி ஓடுவாள் என்று அவன் கற்பனை செய்கிறான். ராஜத்தின் இச்செயல் அவனது அடக்கப்பட்ட கோபத்தையும் (repressed anger), தற்போதைய குடும்ப அதிகாரப் படிநிலையை (hierarchy) மாற்றத் துடிக்கும் அவனது விருப்பையும் காட்டுகிறது. அதிகாரம் என்பது வலுக்கட்டாயமாகச் செயற்படுத்தப்பட வேண்டிய ஒன்று என்ற நம்பிக்கையை ராஜம் தனது வன்முறைசார் குடும்ப அனுபவங்கள் மூலமாகத் தன்னுள் ஆழமாகப் பதித்துக் கொண்டிருக்கிறான். எனவே, அவனது ‘அதிகார வேட்கை’ என்பது அவனது மனவடுக்களிலிருந்து (trauma) பிரிக்க முடியாத ஒன்று.

ஒருவரின் உள்வாங்கப்பட்ட வன்முறையானது, வெளிப்படுத்தப்பட முடியாதபோது, அது பெரும்பாலும் அவருக்கு எதிராகவே திரும்பும். இந்த வகையில், கதையின் இறுதியில் வரும் ராஜத்தின் தற்கொலை என்பது திசைமாற்றப்பட்ட வன்முறையின் ஒரு வடிவம். இது தாய்க்கு எதிராக அவன் நிகழ்த்திய இறுதிப் பதிலடி நடவடிக்கை (retaliation). அத்துடன், இது தலைமுறை தலைமுறையாகத் தொடரும் மனவடுக்களின் (intergenerational trauma) உச்சநிலையாகும்.

இக்கதையின் ‘பைத்தியக்காரப் பிள்ளை’ என்ற தலைப்பு ஆழமான முரண்பாடு (ironic) நிறைந்தது. ராஜம் ‘பைத்தியக்காரப் பிள்ளை’ என்று அவன் மணக்கவிருக்கும் பெண்ணாலேயே முத்திரை குத்தப்படுகிறான். பொதுவாக, ஒருவரது மனச் சிதைவுக்குக் காரணமான சமூக, குடும்ப, பண்பாட்டுச் சூழல்களை உணர்ந்து கொள்ளாமல், வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களை சமூகம் எவ்வாறு ‘பைத்தியக்காரன்’ என வகைப்படுத்துகிறது என்பதை இத்தலைப்பு நினைவுபடுத்துகிறது.

நிறைவாக, ஆணாதிக்க வன்முறை என்பது அந்த வன்முறையைச் செய்த ஆண் இறந்தவுடன் முடிந்துவிடுவதில்லை என்பதை எம்.வி. வெங்கட்ராமின் கதை உணர்த்துகிறது. அதன் பாதிப்பு குடும்ப உறுப்பினர்களில் தொடர்ந்து நீடிக்கிறது. அனுபவிக்கப்பட்ட வன்முறை மீண்டும் குடும்பத்திற்குள் புதிய வடிவங்களில் தன்னை உயிர்ப்பித்துக் கொள்கிறது. ஒரு காலத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட தாய், கணவனை இழந்த பெண்ணாகச் சமூகத்தில் பிழைத்திருப்பதற்கான போராட்டத்தில் கடின சித்தமும், மனதைப் புண்படுத்தும் பேச்சுமுள்ளவளாக மாறுகிறாள். பொறுப்பான மகனாக இருக்கும் ராஜம், வன்முறையைத் தன்னுள் உள்வாங்கியவனாக, தீர்க்கப்படாத மனவடுக்களால் (unresolved trauma) தாய் மீது வெறுப்பு நிறைந்தவனாக மாறி, தன்னை அழித்து அவளைத் தண்டிக்கிறான். தாயும் மகனும் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் என்றாலும், ஒருவரை ஒருவர் எதிரிகளாகப் பார்ப்பதே இதிலுள்ள மிகப்பெரிய அவலம். மனவடுக்களை அடையாளம் கண்டு புரிந்து கொள்ளாத வரை, அவை உறவுகளைச் சிதைத்து, நாம் எதிலிருந்து தப்பித்துக் கொள்ள எண்ணுகிறோமோ, அதே வன்முறைப் பாதையில் நம்மைத் தள்ளும் என்று இக்கதை எச்சரிக்கிறது.

இக்கதையை அழியாச்சுடர்கள் தளத்தில் வாசிக்கலாம்:
https://azhiyasudargal.blogspot.com/2010/10/blog-post_3000.html



maithilithayanithy@thaiveedu.com



# கம்பனின் கருவூலம் திறந்து...

- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

**‘இராவணன் வலிமையெல்லாம் ஒடுங்கிப்போனான் என்னும் கவிக் கூற்று எத்துணை வலிமையையும் அழிக்கத்தக்க ஆற்றல் காமத்துக்கு இருக்கின்றது என்னும் கருத்தைப் புலப்படுத்துகின்றது’**

சென்ற மாதத் தாய்வீடு இதழில் கம்பராமாயணம், ஆரணிய காண்டத்தின் 7-ஆவது படலமாகிய மாரீசன் வதைப் படலத்தில் தண்டகாரணியத்திலிருந்து புறப்பட்ட சூர்ப்பணகை இராவணனின் அரண்மனையின் வாசலை வந்தடைந்ததைத் தொடர்ந்து அங்கே நிகழ்வனவற்றைக் கம்பரின் கவிநயம் சொட்டும் செய்யுள்களோடு சுவைத்து மகிழ்ந்தோம். அங்கே வந்த சூர்ப்பணகை தனக்கு நடந்தனவற்றை இராவணனிடம் கூறக் கொதித்தெழுந்த இராவணன், ‘உனக்கு அவர்கள் இவ்வாறு தீங்கிழைக்க அவர்களுக்கு நீ செய்த குற்றம் என்ன?’ என்று கேட்டதற்குச் சூர்ப்பணகையின் விடை இவ்வாறு வருகிறது.

***என்வயின் உற்றகுற்றம் யாவர்க்கும் எழுதொணாத***
***தன்மையன் இராமனோடும் தாமரைதவிரப் போந்தாள்***
***மின்வயின் மருங்குல் கொண்டாள் வேய்வயின் மென்தோள் கொண்டாள்***
***பொன்வயின் மேனிகொண்டாள் பொருட்டினாற் புகுந் ததென்றாள்***

*கம்ப. ஆரணிய. 626*

என்வயின் உற்றகுற்றம் - என்மீது உள்ள குற்றம் என்னவென்றால், தாமரை தவிர - தனக்கு இருப்பிடமான செந்தாமரை மலரைவிட்டு, யாவர்க்கும் எழுத ஒண்ணாத தன்மையன் இராமனோடும் போந்தாள் - எத்துணை வல்லவராலும் ஓவியமாக்கூட வரைய முடியாத வடிவழகுகொண்டவனான இராமனுடனே வந்தவளும், மின்வயின் மருங்குல் கொண்டாள் - மின்னல் போன்ற இடையைப் பெற்றவளும், வேய்வயின் மென்தோள் கொண்டாள் - மூங்கிலைப் போன்ற மெல்லிய தோள்களை உடையவளும் - பொன்வயின் மேனிகொண்டாள் பொருட்டினாற் புகுந்தது என்றாள் - பொன்னைப் போன்ற நிறத்தையுடைய உடலழகைப் பெற்றவளுமான ஒரு பெண்ணினால் நிகழ்ந்தது என்றாள்.

‘அந்த இராமனுடன் ஒரு கட்டழகி வந்துள்ளாள். அவளை உனக்காக்கி உனக்கு நன்மை செய்யவேண்டும் என்று நான் கருதியது தான் நான் செய்த குற்றம்’ என்கிறாள் சூர்ப்பணகை. அந்தப்பெண் அவளது இருப்பிடமான தாமரையை விட்டு வந்தவள் என்பதால் அது அவளைத் திருமகள் என்று குறிப்பால் உணர்த்துவதாக இருக்கிறது. சீதையின் இடையையும், தோளையும், உடலையும் உவமை நயத்துடன் கம்பர் வருணித்திருப்பது சிறப்பு. சீதை மின்னலிடம் இடையையும், மூங்கிலிடம் தோள்களையும், பொன்னிடம் உடலையும் பெற்றுக்கொண்டாள் என்று வருணிப்பதாகவும் சில உரையாசிரியர்கள் பொருள் கொள்வர்.

இராவணன், ‘அவள் யார்?’ என விசாரிக்க, சூர்ப்பணகை இராவணனிடம் சீதையின் மீது காம இச்சையை ஏற்படுத்துவதற்காக அவளின் உடல் உறுப்புகளை வருணித்து விவரிப்பதாக மேலும் 14 செய்யுள்களிலே கம்பரின் வருணனை வருகிறது. அத்தனை செய்யுள்களிலும் வருவதுபோல் சீதையின் அழகைச் சூர்ப்பணகை சொல்லியிருப்பாளோ தெரியாது. ஆனால் சூர்ப்பணகை வாயிலாகக் கம்பரே தனது கற்பனையில் சீதையின் அழகில் மூழ்குவது மட்டும் தெரிகிறது.

***மஞ்சொக்குமளகவோதிமழையொக்கும் வடித்த கூந்தல்***
***பஞ்சொக்குமடிகள் செய்யபவளத்தின் விரல்க ளைய***
***அஞ்சொற்களமுதினள்ளிக் கொண்டவள் வதனமைதீர்***
***கஞ்சத்தினளவிற் றேனும் கடலினும் பெரியகண்கள்***

*கம்ப. ஆரணிய. 629*

மஞ்சொக்கும் அளகவோதி - அள்ளி முடிக்கப்பட்ட கூந்தல் மேகத்தை ஒத்ததாகும், மழையொக்கும் வடித்த கூந்தல் - வார்ந்து தாழவிடப்பட்ட கூந்தல் கீழிறங்கிய மழை மேகத்தை ஒக்கும், பஞ்சொக்கும் அடிகள் - அவளது காலடிகள் செம்பஞ்சுக் குழம்பை ஒத்திருக்கும், செய்ய பவளத்தின் விரல்கள் - அவளது விரல்கள் சிவந்த பவளத்தின் நிறத்தை ஒத்திருக்கும், ஐய அஞ்சொற்கள் அமுதின் அள்ளிக் கொண்டவள் - அழகிய சொற்களை அமுதத்திலிருந்து அள்ளிக்கொண்டவள், வதனம்மைதீர்கஞ்சத்தின் அளவிற்று ஏனும் - அவளுடைய முகம் குற்றமற்ற தாமரை மலரின் அளவை உடையதாயிருந்தாலும், கடலினும் பெரிய கண்கள் - அவளுடைய கண்




களோ கடலைவிடப் பெரியதாகும் என்று சீதையின் அழகைச் சூர்ப்பணகை வருணிக்கின்றாள்.

இச்செய்யுளில் உவமை அணிநயம் மிகுந்து காணப்படுகின்றது. சீதையின் கூந்தலுக்கும், காலடிகளுக்கும், விரல்களுக்கும், முகத்துக்கும் ஒவ்வொன்றாக உவமை கூறிய கம்பர், அவளுடைய கண்கள் கடலிலும் பெரிது என்று உயர்வுநவிற்சி அணியில் வைத்துப் பாடியுள்ளார். கண்கள் சிறிதாயினும் அவளுடைய பார்வையின் வியாபகத்தைச் சொல்வதற்காகக் கடலினும் பெரியகண்கள் என்றார். சீதையின் அழகைப் பலவாறு வருணித்துச் சொல்லிவருகின்ற சூர்ப்பணகை, சீதை இராவணனுக்குக் கிடைத்தேவிட்டாள் என்பதுபோல அவனுக்குப் பொய்யான நம்பிக்கையை ஊட்டுகிறாள்.

***இந்திரன் சசியைப் பெற்றானிருமூன்றுவதனத்
தோன்றன்
தந்தையுமுமையைப் பெற்றான் றாமரைச் செங்க
ணானும்
செந்திருமகளைப் பெற்றான் சீதையைப் பெற்றாய்
நீயும்
அந்தரம் பார்க்கினன்மைஅவர்க்கில்லையுனக்
கேயையா***

*கம்ப. ஆரணிய. 634*

ஐயா - ஐயனே, இந்திரன் சசியைப் பெற்றான் - தேவர்களின் அரசனாகிய இந்திரன் இந்திராணியாகிய சசி என்பவளைத் தனக்குரியவளாகக் கொண்டான், இருமூன்றுவதனத்தோன் தன் தந்தையும் உமையைப் பெற்றான் - ஆறு முகங்களையுடைய முருகனின் தந்தையாகிய சிவனும் உமாதேவியைத் தனக்குரியவளாக அடைந்தான், தாமரைச் செங்கண்ணானும் செந்திருமகளைப் பெற்றான் - செந்தாமரைமலர்போலும் சிவந்த கண்களையுடைய திருமாலும் அழகுள்ள திருமகளைத் தனக்கு உரியவளாக அடைந்தான், சீதையைப் பெற்றாய் நீயும் - அவ்வாறே நீயும் சீதையை உனக்குரியவளாகப் பெற்றுக்கொண்டாய், அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கில்லை உனக்கே - அழகான உயர்வு யாருக்கென்று ஆராய்ந்து பார்த்தால் சீதையை விடவும் அழகிற் குறைந்த பெண்களைத் தமக்குரியவர்களாக்கிக் கொண்ட அவர்களுக்கெல்லம் இல்லாத சிறப்பும், நன்மையும் உனக்குத்தான் இருக்கிறதென்று இராவணனுக்குப் பெருநம்பிக்கையை ஊட்டுகிறாள்.

மூவுலகங்களிலும் பெறுதற்கு அரியவளான சீதையை அவன் பெற்றதால் உயர்வும், நன்மையும் அவனுக்குரியதே என்று கூறுவதால் அவன் சீதையை அடைவது திண்ணம் என்பதாகச் சூர்ப்பணகையின் கூற்று அமைந்திருக்கிறது. சீதையை அடைவதால் நன்மை அவனுக்கே என்னும் கூற்றால் அவனுக்குப் பின்னாளில் விளையப்போகும் தீமையை இங்கே குறியீடாகக் கம்பர் காட்டியிருக்கின்றார் என்றும் கொள்ளலாம். சூர்ப்பணகையின் உள்ளக் கிடக்கையைக் கம்பர் மேலும் சில செய்யுள்களில் வெளிப்படுத்துகின்றார். ‘உனக்காக நான் சீதையைக் கவர்ந்துகொள்ளப் போனபோது இராமனின் தம்பி இடையிலே புகுந்து எனது உறுப்புகளை வாளால் அரிந்து அவமானப்படுத்திவிட்டான். உனது வலிமையால் நீ சீதையையும் இராமனையும் கைவசப்படுத்திச் சீதையை உனக்கு உரியவளாக்கிக்கொண்டு இராமனை எனக்கு உரியவனாக்கு.’ என இராவணனிடம் அவள் வேண்டுகின்றாள். சூர்ப்பணகையின் உறுப்புகள் அறுபட்ட செய்தியைக் கேட்டவுடன் இராவணனுக்கு ஏற்பட்ட சீற்றம் மனக்கொதிப்பு எல்லாமே, சீதையைப் பற்றிச் சூர்ப்பணகை சொல்லியனவற்றை எல்லாம் கேட்டமாத்திரத்திலேயே ஒழிந்துபோய்க் காமநோய் அவனை மொத்தமாகப் பற்றிக்கொண்டது. அதனைக் கம்பர் சில செய்யுள்களில் கூறுகின்றார்.

***கரனையுமறந்தான் றங்கை மூக்கினைக் கடிந்து
நின்றான்
உரனையுமறந்தானுற்றபழியையுமறந்தான் வெற்றி
அரனையுங் கொண்டகாமனம்பினான் முன்புபெற்ற
வரனையுமறந்தான் கேட்டமங்கையைமறந்திலாதான்***

*கம்ப. ஆரணிய. 642*

கேட்ட மங்கையை மறந்திலாதான் - சூர்ப்பணகை சொல்லக் கேட்டுணர்ந்த சீதை என்கின்ற பெண்ணை மறக்கமுடியாத வனான இராவணன், கரனையும் மறந்தான் - சிறந்த வீரனாகிய தன் தம்பி கரன் இராமனால் இறந்துவிட்டதையும் மறந்து போனான், தங்கை மூக்கினைக் கடிந்துநின்றான் உரனையும் மறந்தான் - தன் தங்கையின் மூக்கை அறுத்துவிட்ட வீரனி னது வலிமையையும் மறந்துவிட்டான், உற்றபழியையும் மறந் தான் - அதனால் தனக்கு உற்ற பெரும்பழியையும் மறந்து போனான், அரனையும் வெற்றிகொண்ட காமன் அம்பினால் - சிவபெருமானையும் வெற்றிகொண்ட மன்மதனது அம்பு தாக் கியதால், முன்புபெற்ற வரனையும் மறந்தான் - தான் முன் னாளில் பெற்ற வரத்தையும் மறந்து போனான். காமம் மேலிட் டதால் சீதை என்கின்ற ஒன்றைத் தவிர மற்றவை அனைத் தையும் அவன் மறந்தொழிந்தான். அவன் கண்களால்கூடச் சீதையைப் பார்த்தவனில்லை. சூர்ப்பணகை சொல்லக் கேட்டே சீதையின் மீது ஏற்பட்ட காதலால் தனது மானம், வீரம், புகழ் அனைத்தையும் மறந்தவன், அவளை மறக்க முடியாது தவித் தான் என்பதை, 'கேட்ட மங்கையை மறந்திலாதான்' என்னும் அழகிய சொற்றொடரால் கம்பர் கூறுவது சிறப்பு.

***பொன்வயமானநங்கைமனம்புகப் புன்மைபூண்ட***
***தன்மையோவரக்கன் றன்னையயத்ததோர்***
***தகைமையாலோ***
***மன்மதன் வாளி தூவிநலிவதோர் வலத்தனானான்***
***வன்மையைமாற்றுமாற்றல் காமத்தேவதிந்ததன்றே***

*கம்ப. ஆரணிய. 646*

பொன்வயமானநங்கைமனம்புக - பொன்மயமானவள் போலுள்ள சீதை தனது மனத்திலே புகுந்ததனால், புன்மைபூண்டதன் மையோ - அவ்விராவணன் தான் சிறுமை அடைந்துவிட்ட தனாலோ, அரக்கன் தன்னை அயத்ததோர் தகைமையாலோ - அல்லது அவன் தன்னைத்தான் மறந்ததொருதன்மையி னாலோ, மன்மதன் வாளி தூவிநலிவதோர் வலத்தன் ஆனான் - மன்மதன் அவன்மீது அம்புகளை எய்து அவன் வருந்தி நலி வடையும் தன்மையன் ஆனான். வன்மையை மாற்றும் ஆற் றல் காமத்தேவதிந்ததன்றே - ஒருவனிடத்தில் உள்ள எல்லா வல்லமையையும் அழித்துவிடக்கூடிய ஆற்றல் காமத்துக்கு உரியதல்லவா?

பல்வகை வலிமைகளையும், ஆற்றல்களையும் மிகுதியாகப் பெற்ற இராவணனிடத்தே தேவர்களும் அஞ்சி ஒடுங்கிக் கிடக் கையில் அவன் நலிந்துபோவதற்கும், மன்மதன் அவன்மீது மலரம்புகளைச் செலுத்தி வருத்துவதற்கும் அவன் ஒரு பெண் ணைவிரும்பிய காரணத்தால் அவன் சிறுமைப்பட்டதனாலோ, அப்பெண்ணையே நினைத்திருந்ததனால் தன்னையே அவன் மறந்துவிட்டகாரணத்தினாலோ அவன் வலிமையெல்லாம் ஒடுங்கிப்போனான் என்னும் கவிக் கூற்று எத்துணை வலிமை யையும் அழிக்கத்தக்க ஆற்றல் காமத்துக்கு இருக்கின்றது என்னும் கருத்தைப் புலப்படுத்துகின்றது. சீதையின் நினைவு அவனை வருத்தஅவன் அரச சபையைவிட்டுத் தனது மாளி கைக்குச் செல்கிறான். தன்னைப் பின் தொடர்ந்தவர்களை யும் விலக்கிவிட்டுத் தனியே படுக்கையில் புரண்டவனுக்குச் சீதையின் உருவெளித்தோற்றம் வந்து வந்து அவனின் காம நோயை முற்றிப்போகவைத்தது. அதனைப் பல செய்யுள் களிலே கம்பர் வடித்திருக்கின்றார்.

***பரங்கிடந்தமாதிரஞ்சுமந்தபாழியானையின்***
***கரங்கிடந்தகொம்பொடிந்திரங்கவென்றகாவலன்***
***மரங்குடைந்ததும்பிபோலநங்கன் வாளிவந்துவந்***
***துரங்குடைந்துநொந்துநொந்துளைதுளைந்தொதுங்***
***கினான்***

*கம்ப. ஆரணிய. 652*



பரம் கிடந்த - பிரபஞ்சத்தின் பாரம் தாங்கியவாறு, மாதிரம் சுமந்தபாழியானையின் - எட்டுத் திக்குகளையும் சுமந்த வலி மையுடைய யானைகளின், கரம் கிடந்தகொம்பொடித்து - துதிக்கைகளிலே பொருந்தியிருந்த கொம்புகளை முறித்து, இரங்கவென்றகாவலன் - அதனால் அந்த யானைகள் வருந் தும்படி வெற்றிகொண்ட அரசனாகிய இராவணன், மரம் குடைந்த தும்பிபோல - மரத்தைக் குடைகின்ற வண்டுகளைப் போல, அநங்கன் வாளிவந்துவந்து உரம் குடைந்து- மன்மத பாணங்கள் வந்து வந்து அவனது வலிய மார்பைத் துளைக்க, நொந்துநொந்து உளைந்து உளைந்து ஒதுங்கினான் - அதனால் மிகவும் வருந்தி ஒடுங்கினான்.

மிகப்பெரிய வலிமையுடைய திக்கு யானைகளின் வலிமை யான தந்தங்களை எளிதாக முறித்த வல்லமை பொருந்திய இராவணன், மன்மதனின் மென்மையான மலரம்புகளுக்கு ஆற்றமுடியாமல் வண்டுகள் துளைத்து உக்கிப்போன மரம் போல மிகவும் வருந்தினான் என்கிறார் கம்பர். இங்கே மரத் தைத் துளைக்கும் வண்டுகளை மன்மத பாணத்துக்கும், மரத்தை இராவணனது மார்புக்கும் உவமையாகக் கம்பர் வைத்துள்ளார்.

அவன் தனது மாளிகையில் இருப்புக் கொள்ளாமல், ஒரு சோலைக்குச் சென்று அங்கே ஒரு மண்டபத்தில் உள்ள படுக் கையில் சேர்கின்றான். அவனைக் கண்டதும் சோலையில் உள்ள பறவைகள் யாவும் அஞ்சி ஒலியெழுப்பாமல் இருந் தனவாம். பனிக் காலமும் அவனுக்கு அஞ்சிவிலக வேனிற் காலம் வருகிறது. அதனாலும் அவனது வேட்கை தணியா ததால் எல்லாப் பருவ காலங்களையும் மாறிமாறிக் கொண்டு வருக என்று பணியாளர்களுக்குக் கட்டளையிட அவர்கள் கொண்டுவந்த எந்தப் பருவங்களாலும் அவனது தாபத்தை ஒழிக்க இயலவில்லை. திங்களையும் கதிரவனையும் அழைத் துவருகிறார்கள். பகலையும், இருளையும் அழைத்துவருகி றார்கள். எதுவுமே அவனது தாபத்தைத் தீர்ப்பதாக இல்லை. அவற்றின் வருகையையும். அவனதுவேட்கை மேன்மேலும் கொழுந்துவிட்டு எரிவதையும் அழகிய பல செய்யுள்களிலே கம்பர் வருணிக்கின்றார். காம வேட்கைமேலிட இராவணன் சீதையை உருவெளித் தோற்றத்தில் காண்கிறான்.

**புடைகொண்டெழுகொங்கையுமல்குலும் புல்கி**
**நிற்கும்**
**இடைகண்டிலமல்லதெல்லாவுருவுந் தெரிந்தாம்**
**விடநுங்கியகண்ணுடையாரிவர் மெல்லமெல்ல**
**மடமங்கையராயென் மனத்தவராயினாரே**

*கம்ப. ஆரணிய. 703*

புடைகொண்டு எழுகொங்கையும் அல்குலும் - பூரித்து வளர்ந்தெழுகின்ற மார்பையும், அல்குலையும், புல்கிநிற்கும் இடைகண்டிலம் அல்லது - தாங்கி நிற்கின்ற இடையென்னும் உறுப்பை நாம் காணவில்லையே அல்லாது, எல்லாஉருவுந் தெரிந்தாம் -மற்ற எல்லா உறுப்புகளையும் பார்த்தறிந்தோம், விடம் நுங்கிய கண்ணுடையார் இவர் - நஞ்சை உண்ட கண்க ளையுடையவரான இவர், மெல்லமெல்ல மடமங்கையராய் என் மனத்தவர் ஆயினாரே - மெல்ல மெல்ல என் மனத்திலுள் ளவரானார் என இராவணன் சீதையின் உருவெளித் தோற் றத்தை மனதில் காண்கின்றான்.

பருத்த மார்பையும், அல்குலையும் தாங்கி நிற்கின்ற இடை அதன் நுண்மையால் கண்ணுக்குப் புலனாகாமல் இருப்ப தாகக் கூறுகின்றார். சூர்ப்பணகை சொன்ன அடையாளங்கள் ஒரு பெண்ணின் முழு வடிவமாகி அவள் தனது மனத்தில் ஊறிப்பதிந்துவிட்டாள் என்று இராவணன் கூறுவதாக ‘மெல்ல மெல்ல மடமங்கையராய் என் மனத்தவராயினரே’ என்று உயர் வுப் பன்மையாகக் கம்பர் இச்சொற்றொடரை வைத்துள்ளார்.

‘இப்போது எனக்குத் தெரிகின்ற இந்தப் பெண்ணின் உரு வத்தை ஏழு உலகங்களிலும் நான் காணவில்லையே. இந்த உருவம் என் தங்கை தெரிவித்த சீதையின் வடிவமே,’ எனக் கருதி ஏவலாளரை நோக்கிச் சூர்ப்பணகையை அழைத்து வரக் கட்டளை யிடுகிறான். அவளும் இராவணன் இருக்கு மிடம் வர. ‘நான் காணும் உருவம் நீ சொன்ன சீதை என்பவள் தானா ?’ எனக் கேட்கிறான்.

**செந்தாமரைக் கண்ணொடும் செங்கனிவாயினோடுஞ்**
**சந்தார் தடந்தோளொடுந் தாழ்தடக் கைகளோடும்**
**அந்தாரகலத்தொடுமஞ்சனக் குன்றமென்ன**
**வந்தானிவனாகுமவ் வல்விலிராமனென்றாள்**

*கம்ப. ஆரணிய. 708*

செந்தாமரைக் கண்ணொடும் - செந்தாமரை மலர்போலும் கண்களோடும், செங்கனிவாயினோடும் - சிவந்த கொவ்வைப் பழம் போன்ற வாயினோடும், சந்து ஆர் தடந்தோளொடும் - அழகு பொருந்திய பெரிய தோள்களுடனும், தாழ்தடக்கைக ளோடும் -தாழ்ந்து தொங்குகின்ற பெரிய கைகளோடும் அம் தார் அகலத்தொடும் - அழகிய மாலை அணிந்த மார்பினொ டும், அஞ்சனக் குன்றமென்ன வந்தான் - நீலநிற மலையைப் போல வந்தவன், இவனாகும் அவ்வல்வில் இராமன் என்றாள் - இவன் வலிமையானவில்லையுடைய அந்த இராமன் என் றாள் சூர்ப்பணகை.

இராவணன் கண்ணுக்கு அவ்வுருவம் சீதையாகத் தெரிய, சூர்ப்பணகையின் கண்ணிலே இராமனாகத் தெரிய ஏற்பட்ட குழப்பத்தில், ‘நமது காட்சி மாறுபடுவது ஏன்? அந்த மானுடர் களின் மாயையாக இருக்குமோ?’ என இராவணன் கேட் கிறான். அதற்கு அவள், தான் இராமனிடம் கொண்ட காதலை மறைத்து, ‘இது வெறும் உருவெளித் தோற்றமே. மூவுலகத் துக்கும் தலைவனாகிய நீ இவ்வாறு வருந்தவேண்டிய தில்லை. நீ அங்கு சென்று சீதையைக் கவர்ந்துவா,’ என்று சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டு நீங்கிச் சென்றுவிட்டாள்.

பின்னர், இராவணன் என்ன செய்யப் போகின்றான், என்ன திருப்பங்கள் ஏற்படப் போகின்றன என்பவற்றை கம்பரின் கவிச்சுவையோடு அறிந்து அனுபவிக்க மாரீசன் வதைப்பட லத்தின் மிகுதிப் பகுதியோடு அடுத்த இதழ்வரை காத்திருப் போம்.

(வளரும்... )



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 125

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-125 வினா

**இடமிருந்து வலம்**

1 இந்தியாவில் கல்வித்தரம் உயர்ந்த மாநிலம்

2 ஓர் இலக்கணச் சொல்

3 வேட்கை

5 கண்டவர் விண்டிலர் எனத் துவங்கும் வாக்கின் இறுதிக் கூறு (5-5)

8 போதை

9 மனை

11 ரொபேட் னொக்ஸ் (Robert Knox) பிடிபட்ட இடம்

13 வேகம்

14 நறுமணம் வீசு

16 தர்க்கம்

**மேலிருந்து கீழ்**

1 வினா

2 ஒரு மூலிகைக் கொடி

3 கவனம்

4 பன்றிக் கொழுப்பு

6 தடி

7 குழந்தை உறங்கப் பாடும் பாட்டு

9 இலங்கையில் வாழ்ந்து மறைந்த குலம்

10 அதிகப்பிரசங்கி

13 கொன்றுண்ணும் பறவை

15 சாகடி

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை-124-க்கான விடைகள்



## தமிழ்வலை-124 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

உமா கதிர், ஏஜக்ஸ்.
குமாரசாமி ரூபிகா, கிளிநொச்சி.
ஏ.எஸ். மகாலிங்கம், ரொறன்ரோ.
மேரி கெலன் தேவதாஸ், நோத்யோர்க்
த.செ. நடராசா, ரொறன்ரோ
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்

### பரிசுபெறும் போட்டியாளர்

**சுதர்சன் ஜெயலக்சுமி,**
**மருதனார்மடம்.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.






tg.theeban@gmail.com

# அண்ணையோடு ஓர் அலவலாவல்

**– பஞ்சகல்யாணி**

பத்தொன்பது வயசில நான் ஊரவிட்டுப் போகேக்க ஊரில உள்ள எல்லாரும் எங்கட படலைக்க பயணம் அனுப்ப வந்திருந்திச்சினம். அது எண்பதுகளை அண்மித்த காலப்பகுதி.

'கவனமடா தம்பி, பாசை தெரியாத ஊரில, என்ன பிரச்சனை எண்டாலும், பாதை தெரியாட்டாலும் பொலிசுட்ட கேள்' எண்டு வெள்ளாந்தியாய்க் கதைத்தார் ஓர் அப்பு. 'பொரியரிசி மா, உழுத்தம்மா கொம்மா செய்து தந்த வதானே?' என்று துளைத்தார் ஓர் ஆச்சி.

எல்லாரும் வெளிநாட்டுக்கு ஒளிச்சுப் போறது. ஆனால் நான் அப்படிப் போகேல்ல. எனக்கு அது முடியாது. ஊரில எல்லாரையும் மதிச்சன், பாசம் வைச்சன்.

என்ர அப்பு அம்மாக்கு என்னோட சேர்த்துப் பத்துப் பிள்ளையள். அதில மூண்டு பெடியள். ஏழு பெட்டையள். எனக்கு முன்னால ஐஞ்சு பேர், அக்காமார். அந்தக் காலத்தில உந்தக் குடும்பக் கட்டுப்பாடு ஒண்டும் இல்லைப் போல. அப்பு ஒரு தோட்டக்காரன். குமருகளைக் கரை சேர்க்கோணும் என்று அவர் ஓயாத உழைப்பு. தோட்டத்தறை கொத்துறது, கத்தரி, மிளகாய், புகையிலை எனக் கண்டு வைக்கிறது, தண்ணி மாற்றிக் கட்டுறது, புல்லுப் புடுங்கிறது என்று எல்லாத்தையும் கூடுதலாகத் தானே செய்வார். அம்மா மத்தியானம் மூடுபெட்டியில சோறு கொண்டு போவா. நான் அப்பப்ப தேத்தண்ணி கொண்டு போவன்.

எனக்குச் சின்னனில படிச்சு வாத்தியாராய் வரோணுமெண்டு ஆசை. ஆனால், பள்ளிக்கூடத்தை விட்டிட்டுத் தோட்டத்தில கண்டு வச்சன்; தண்ணி பாய்ச்சினன்; துலா மிதிச்சன்; மரக்கறியளைச் சந்தைக்குச் சுமந்தன். சில நாட்களில இராக் காவலுக்கும் தோட்டத்தில படுத்தன். அப்ப பசளையாக மாட்டெரு, ஆட்டுப் பிழுக்கை, பனை ஓலை, பன்னை, காவிளாய் தான் பாவிக்கிறது. பின்னேரத்தில, மாடு கட்டிற இடங்களில தெருவழிய கிடக்கிற சாணங்களைக் கடகத்தில பொறுக்கிக் கொண்டந்து வீட்டில குவிப்பன். பனங்காணியழுக்கை கிடக்கிற பனங்கொட்டைகளைப் பொறுக்கிப் பாத்தி போடிற இடத்தில குவிப்பன்.

ஒருகாலத்தில சோறு குடுப்பித்தலோட முடிஞ்ச கலியாணம், பிறகு ஓலைப் பொருத்தம் பாத்து, ஸ்ரூடியோவில படமெடுத்துக் காட்டி, பொம்பிளையை வீட்டில நேர பார்த்து, சீதனம், டொனேசன் எல்லாம் கேட்டுத்தான் முற்றாகுது. நகைநட்டு, காணி, வீடு, காசு எண்டு ஒரு லிஸ்ற் இருக்கு.

'ஏழு பெட்டைகளைக் கரை சேர்க்க இஞ்சை உழைச்சுக் காணுமோ? பெடியனை வெளியால அனுப்பு 'எண்ட துணி விக்கிற ஆண்டியர் மாமான்ர ஆலோசனைப்படி அப்பு 'ஏஜென்சி' ஒராளைப் பிடிச்சு என்னை வெளிநாட்டுக்கு அனுப்பிட்டார். அம்மாக்குச் சொட்டும் விருப்பமில்லை.

பிரான்சில போய் ஊண் உறக்கமில்லாமல் உழைப்பு. ஒரு கட்டத்தில எனக்கு என்ன விருப்பம், என்ன விருப்பமில்லை எண்டே மறந்து போச்சு. மாசத்துக்கொருக்கால் வீட்டையிருந்து வரும் கடிதங்களைச் சேர்த்து வைச்சு வாசிக்கிறதுதான் மன ஆறுதல். அப்பு எங்களைக் கண்டிப்பாக வளர்த்தபடியால் குடி வெறி எண்டு நான் பழகேல்ல. நண்பர்களும் குறைவு. ஒரு மாதிரி ஒண்டொண்டா அக்காமாரைக் கரை சேர்த்தாச்சு. அத்தான்மார் இரண்டு பேரையும் தம்பியையும் வெளி நாட்டுக்கு எடுத்துவிட்டாச்சு.

இருபது வருசத்துக்குப் பிறகு, 'ஒருக்கால் ஊருக்குப் போகலாம், அப்பு அம்மாவைப் பார்க்கலாம்' என்ற நினைப்பு வந்தது. ஊர்ல ரெலிபோனும் வந்திட்டுது. வீட்டுக்குத் தகவல் சொல்லியாச்சு. எனக்கு இது வேணும் அது வேணும் எண்ட பெரிய list ஓட கடிதம் வந்தது. ' வந்திட்டுத் திரும்பிப் போவாய்தானே?' என்றும் தங்கச்சி கேட்டிருந்தாள். home science diploma படிச்சுக் கொண்டிருந்தாள்.

சொக்லேட், சாராயப் போத்தல், உடுப்பு எண்டு வேண்டி அடுக்கிக் கொண்டு வந்திறங்கினால் அனுப்ப வந்ததிலும் பார்க்கக் கூடச் சனம் என்னைப் பார்க்க வந்தது. குட்டி ராசா போல குந்தியிருந்து இராப்பகலாய் எல்லாரோடையும் கதை. என்ர வயசுக்காறங்களெல்லாம் கட்டி இரண்டு மூண்டு வளர்ந்த பிள்ளையளோட இருந்தாங்கள். எனக்கு கலியாண வயசு போட்டுது என்று அப்புவின் காதில விழுத் தினாங்கள்.

'அதென்னண்டு? ரண்டு குமருகளிருக்கு' எண்டு அம்மா சொன்னா.

'அப்ப என்ன மொட்டை விழுந்து மலடுபத்தினாப் போலயோ கட்டிக்குடுக்கப் போறாய்' எண்டு மாமா வந்தார். தன்ர மகளைச் செய்யேலுமோ எண்டு அப்புவிட்டைக் கேட்டார். அப்பு 'அது அவன் விருப்பம்' எண்டு என்பக்கம் சாட்டிவிட்டார். நானோ 'ஐயோ மாமா! நாங்கள் மச்சாள வையோட சின்னனில இருந்து சகோதரமாப் பழகினாங்கள்' எண்டு என்ர நியாயமான எதிர்ப்பைத் தெரிவிச்சன். அதோட போன மாமாதான்.

எப்படியோ நண்பர்களின் முயற்சியால ஒரு வேற்றூர்ப் பிள்ளையைச் சீதனம் வாங்காமல் வெறும் பெம்பிளையாய்க் கட்டி ஊரில விட்டிட்டுப் பிரான்சுக்குத் திரும்பிட்டன். 'எங்களைக் கைவிட்டிடாதை' எண்டு அம்மா சொன்னது காதில கேட்டுக் கொண்டிருந்தது. மீண்டும் உழைப்பு. 'எப்ப மகளை எடுக்கப் போறிங்கள்?' எண்டு மாமியார் கடிதம் போட்டிருந்தார். நான் பதில் எழுதவில்லை. தங்கச்சிக்குக் கனடா மாப்பிளை பார்த்து, அவள் கனடா போட்டாள். மற்றவள் ஊரில விரும்பி, எழுத்து முடிஞ்சுது. ஒரு மாதிரி மூண்டு வருசத்தில மனுசியைப் பிரான்சுக்கு எடுத்திட்டன்.

நாங்கள் இப்ப வெளிநாட்டுக்காரர். கனடாவில சொந்தக் காரர் ஒரு get together வைச்சினம். நானும் மனுசியோட கனடாக்குப் போனன். 'என்னடா மொட்டையெல்லாம் விழுந்து ஆளே மாறிட்டாய், எத்தினை பிள்ளையள்?' எண்டெல்லாம் சொந்தக்காரர் மாறி மாறி விசாரிச்சினம். தங்கச்சி நிண்டாள். நான் பார்த்துப் பார்த்து வாங்கின சீலையில அழகாக இருந்தாள். அந்தக் காலங்களில எனக்கெண்டு எது வாங்கவும் காசு மிஞ்சிறேல்ல. நானும் பெரிசாய் அதைப்பற்றி யோசிக்கிறேல்ல. தம்பி நிண்டான். பலபேருக்கு மத்தியில சிரிச்சுக் கதைச்சபடி நிண்டான். என்னையும் கண்டான். கனநேரத்துக்குப் பிறகு வந்தான். 'பிரான்சோ கனடாவோ நல்லது?' எண்டு கேட்டான், அதோடை 'அண்ணை நீங்கள் எடுத்துவிட்டுத்தான் நான் கனடா வந்தனான் எண்டில்லை, நீங்கள் எடுக்காட்டிலும் வந்திருப்பன்' எண்டு சிரிச்சான். பாவம் அவன் பள்ளிக்கூடம் போகேல்ல. தோட்டத்துக்கும் போகேல்ல.

'அண்ணை, என்ர மனுசனோட சும்மா அலம்பாதைங்கோ' எண்டு சொல்லிவைத்தாள் தங்கை.

நல்லவேளை அந்தநேரம் என்ர மனுசி ஆரோ தெரிஞ்சாக் களோட கதைக்கப் போட்டுது.



Panchakalyany@thaiveedu.com

# சிதைவுகளில் ஓர் எழுச்சி



tg.theeban@gmail.com

## – ஸ்ரீரஞ்சனி –

பனி ஓயாமல் பொழிந்துதள்ளிக்கொண்டிருந்தது. Park Lane என்ற அந்தப் பாடசாலை வாசலிலிருந்த அழைப்பு மணியைக்கை யுறைக்குள் இருந்த வலது சுட்டுவிரலால் பலமாக அழுத்திவிட்டுக் காத்திருந்தேன். கதவு திறப்பதற்காகக் காத்திருந்த அந்த ஓரிரு நிமி டங்களுக்குள் காற்று சுழன்றடித்து உடலைச் சில்லிடச் செய்தது. அது சிதறிவிட்ட பனித்துகள்களில் நெற்றி விறைத்துப்போனது.

பாடசாலை முடிந்தபின் நிகழும் தமிழ் வகுப்புகளுக்கு வரும் மாணவர் களை பாடசாலையின் முன்பகுதியில் இருந்த ஜிம்மில்தான் நாங்கள் சந்திப்போம். பின்னர் அங்கிருந்து எங்கள் எங்கள் வகுப்புகளுக்கு அவர்களைக் கூட்டிச்செல்வோம். அந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆறு தமிழ் ஆசிரியர்களில் என்னையும் சேர்ந்து மூவர் மட்டுமே அந்த நேரத்தில் சமுகமளித்திருந்தோம். பனிப்பொழி வினால் ஏற்பட்டிருந்த போக்குவரத்து நெருக்கடி மற்றவர்களின் தாமதத்துக்குக் காரணமாக இருந் திருக்கலாம். மூன்றாம் மாடியின் கோடியிலி ருக்கும் வகுப்புகளிலிருந்து என்னுடைய ஏழாம், எட்டாம் வகுப்பு மாணவர்கள் ஜிம்முக்கு வந்து சேரத் தாமதமாகும் என்பதால், வழமை போல அங்கிருந்த வாங்கொன்றில் நான் அமர்ந்து கொண்டேன்.

அப்போது, பாலர் வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியையான விமலா, ‘இவன் இதி லையிருக்கட்டும். சும்மா, மற்றப்பிள்ளையளுக்கு அடிச்சுக்கொண்டிருக்கிறான். அடியெண்டால் அந்த மாரி, குடிகார ஆக்கள் அடிக்கிறமாரி விடாமல் அடிக்கிறான்!’ எனக்கூறியபடி, ஒரு சிறுவனைக் கொண்டுவந்து என்னருகே இருத்திவிட்டார். பின் னர், ‘ஒருத்தரையும் தொடுறேல்லை! பேசாமல் இதிலை இருக்கோணும், சரியோ!’ என அவனுக் குக் கொஞ்சம் காரசாரமாய்ச் சொல்லிப்போட்டு அகன்றார்.

அவனைப் பார்க்க எனக்கு ஏனோ பாவமாக இருந் தது. கோபத்தினதோ, வெறுப்பினதோ உச்சமான கடுகடுப்பு அவனின் முகத்தில் தெரியவில்லை, மாறாகக் கபடமற்ற குழந்தைத்தனமான முகம் தான் எனக்குத் தெரிந்தது. ஆங்கிலம்தான் அவ னுக்குச் சௌகரியமான மொழியாக இருக்குமென்ற நினைப்புடன் ஆங்கிலத்தில்நான் அவனுடன் பேச் சுக்கொடுத்தேன்.

‘மற்றவை உங்களுக்கு அடிசால், உங்களுக்கு எப் பிடியிருக்கும் ? அது பிடிக்குமோ ?’

அவன் தலையை வலமும் இடமுமாகப் பலமாக ஆட்டினான்.

‘அப்ப, உங்களுக்குப் பிடிக்காததை ஏன் நீங்க மற்றவைக்குச் செய்யிறீங்க ? அடிச்சா நோகு மெல்லோ ?’

‘அவை என்னைக் கெட்ட வார்த்தைகளிலை பேசினவை.’

‘ஓ, அது கூடாது. கேட்கக் கோபமாகத்தானிருந் திருக்கும். ஆனா, அதை நீங்க ரீச்சரிட்டைச் சொல்லியிருக்கலாம். அடிக் கிறது கூடாத விஷயம். எங்கையிருந்து இதைப் பழகினீங்க,’

அவன் ஏதோ சொன்னான். எனக்கது சரியாக விளங்க வில்லை. ‘திரும்பச் சொல்லுங்கோ’ என்றபடி அவன் மோவாயை என் வலக் கையால் மெதுவாகத் திருப்பி என் இடக் காதை அவன் வாய்க்கருகில் கொண்டுசென்றேன்.

‘அப்பா எனக்கடிக்கிறவர்... அம்மாவும்தான். அப்பா அம்மாக் கும் அடிக்கிறவர்.’

‘ஓ, அப்பான்ர பழக்கம் கூடாத பழக்கம். அவர் அப்பிடி உங்களை அடிக்கக்கூடாது. நீங்களும் ஒருத்தரையும் இனி அடிக்கக்கூடாது. மற்றவை ஏதாவது பிழையாய்ச் செய்தா அதை உங்கட ரீச்சருக்குச் சொல்லுங்கோ. அவையை நீங்க அடிக்கக்கூடாது. சரியோ ? நீங்க எத்தினை பிள்ளையள் ?

‘அஞ்சு.’

‘அஞ்சு ? அஞ்சு பிள்ளையளா ? நீங்களா கடைசி ?’

‘இல்லை, தங்கைச்சி வீட்டிலையிருக்கிறா.’

‘ஓ, அப்ப நீங்களா மூத்தது ?’

‘இல்லை, அது என்ரை அண்ணா.’

அண்ணா என அவன் சுட்டிக்காட்டியவனைக் கூப்பிட்டேன். அவன் மூன்றாம் வகுப்பு மாணவன்.

‘உங்கட தம்பி வீட்டிலும் ஆக்களுக்கு அடிக்கிறவரோ ?’

‘சில நேரத்தில’

‘நீங்களும் அடிக்கிறனீங்களோ ?’

அவன் எதுவும் சொல்லாமல் நின்றான்.

‘உங்களுக்கும் அப்பா அடிக்கிறவரோ ?’

‘ஓம்... குழப்படி செய்தால் அம்மாவும் அடிப்பா.’

பேசிக்கொண்டிருந்தபோது என் மாணவர்களும் வந்துசேர்ந்து விட்டனர். மூன்று மணியாகிவிட்டது என எல்லோரையும் வகுப்பு களுக்குப் போகும்படி மேற்பார்வையாளர் லீசா வந்து சொன்னார். ‘உங்களோடை கதைக்கோணும், பிறகு என்ர வகுப்புக்கு ஒருக்கா வாறீங்களா ?’ என அவரை ஆங்கி லத்தில் கேட்டபடி என் மாணவர்களை வரிசையில் வரும்படி கேட்டுவிட்டு, அவர்களுக்கு முன்பாக நான் நடக்கத் தொடங் கினேன். அந்தச் சிறுவர்களுக்கு என்னுடன் பழக்கமில்லை. அப்படியிருந்தும், அவர்கள் எப்படி என்னுடன் மனம்திறந்து கதைத்தனர் ? அத்தனை தூரத்துக்கு அவர்களின் மனம் பாதிக்கப்பட்டிருக்கிறதா ? என் மனம் அவர்களுக்காகக் கலங்கியது. அதேவேளையில் எப்படியான இளைஞர்களாக அவர்கள் வளரப்போகிறார்களோ என்ற கவலையும் எனக் கேற்பட்டது.

மாடிப்படிகள் ஈரமாக இருந்தன. கவனமாக ஒவ்வொன்றாகக் கால்வைத்து ஏறினேன், இடையிலிருந்த landing இல் தேங்கி யிருந்த தண்ணீரை caretaker mop பண்ணிக்கொண்டிருந் தார். எங்களைக் கண்டதும் ஒரு கரையில் ஒதுங்கி அவர் எங் களுக்கு வழிவிட்டார். என் பிள்ளைகள் படித்த Flemington ஆரம்பப் பாடசாலையில், இப்படியாகப் பனி தொடர்ந்து கொட்டிக்கொண்டிருந்த ஒரு நாள் பாடசாலை அதிபரின் அறைக்கு முன்பாகவிருந்த ஈரத்தை caretaker ஒருவர் mop பண்ணிக்கொண்டிருந்தபோது, நான் அங்கும் இங்குமாக நடந்திருந்த காட்சி என் கண் முன்விரிந்து என்னைச் சஞ்சலப் படுத்தியது.

அந்த நேரத்தில் பாலர் வகுப்பிலும், முதலாம் வகுப்பிலும் இருந்த என் பிள்ளைகள் இருவரும் அவர்களின் அப்பாவுக் கும் எனக்கும் இடையிலான முரண்கள் உருவாக்கும் வாக்கு வாதங்களினால், அவரின் கோபம் என் உடலில் ஏற்படுத்தும் காயங்களினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அன்று கூட வீங்கிய உதடுகளுடன்தான் பிள்ளைகளைப் பாடசா லைக்குக் கூட்டிச் சென்றிருந்தேன். முதல் நாள், பிள்ளைகள் பசியுடன் இருக்கிறார்கள், கடைக்குப் போட்டுவந்தால்தானே எதையாவது நேரத்துக்கு நான் சமைத்துக் கொடுக்கலா மென்ற கரிசனையுடன் அவரை நான் ஓரிரு தடவைகள் மீள மீள அழைத்திருந்தேன். வீட்டுக்கு வந்தவர், நண்பர்களுடன் தான் இருந்தபோது, அப்படி நான் அவரை அழைத்தது, தன்னை அவமானப்படுத்துமொரு செயலெனக்கத்தியபடி, என்னை அறைவதற்குக் கையை ஓங்கினார். பயத்தில் நான் மறுபக்கத்துக்குத் திரும்பிக்கொள்ள, அவரின் ஆத்திரத் துக்கு என் உதடுகளும் பலியாகியிருந்தன. என் முரசிலிருந் தும் உதட்டிலிருந்தும் வழிந்த இரத்தத்தைப் பார்த்த பிள் ளைகள் கதறியழுதனர்.

அப்போதும் கோபமடங்காதவர் கதிரை ஒன்றையெடுத்து சுவரில் மூர்க்கமாக மோதியதில் சுவரில் விழுந்த ஓட்டையும் அவரின் ஆக்ரோஷத்துக்குச் சாட்சியானது. எங்களின் அவ லங்களை ஒரு முடிவுக்குக்கொண்டுவருவதற்கு அந்தச் சான் றுகளையெல்லாம் பயன்படுத்தினாலென்ன என நான் யோசித்தேன். அதனால், வீட்டுப்பிரச்சினைகளைக் கூறி, அந்தப் பாடசாலை அதிபருக்குக்கூடாக சிறுவர் உதவிச் சபையின் இடையீட்டுக்கு வழிவகுக்க வேண்டுமென நினைத் தேன். எனினும், அதற்கான துணிவு எனக்கு அன்று வர வில்லை. அதனால், தொடர்ந்தும் என் பிள்ளைகளின் மனங் கள் காயப்படுவதற்கு நானும் காரணமாக இருந்திருக்கிறேன் என்பது என் கண்களை நனைத்தது.

முடிவில், லீசாவிடம் அந்தச் சிறுவன் எனக்குக் கூறியதைக் கூறி, அது பற்றிச் சிறுவர் உதவிச் சபைக்கு அறிவித்த பின்

னரே என்னால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது. 'பிள்ளை வளக்கத் தெரியாட்டில் ஏன் ஐஞ்சைப் பெத்தவை?' என்ற லீசாவிடம், 'பிள்ளை வளக்கிறது எப்பிடியெண்டு தெரிஞ்சு கொண்டே பிள்ளயளைப் பெறுறம்? ஐஞ்சு சின்னப்பிள்ள யள் எண்டால் எவ்வளவு பொறுமை வேணும்... அபிவிருத்திய டைந்த ஒரு நாட்டிலை இருந்துகொண்டு, எத்தனை வழி முறை இருக்கத்தக்கதா, ஏன்தான் இத்தினை பிள்ளை யளைப் பெறுகினமோ? என நான் சலித்துக்கொண்டேன்.

வகுப்பு முடிந்துபோகும்போது, விமலா ரீச்சர் என்னிடம் வந்து சிறுவர் உதவிச் சபைக்கு அறிவித்தனீங்களோ என் றார். நான் பதில்சொல்வதற்கு வாயைத் திறக்க முன்பாக, 'நான் முந்தி daycare இலை வேலை செய்யேக்கை, இப்பிடி எத்தினை பிள்ளையள் எனக்குச் சொல்லியிருப்பினம். மேற் பார்வையாளர்மாருக்கு நான் ஒண்டுமே சொல்றேல்லை. பிறகு, அந்தப் பிள்ளையளைக் கூட்டிக்கொண்டு போற துக்கு அவையின்ர அம்மாவோ, அப்பாவோ வரேக்கே, பிள்ளை இப்பிடிச் சொல்லுது. இந்த நாட்டிலை இதெல்லாம் பிழை. அடிக்காம பிள்ளையை வளக்கப்பாருங்கோ. நீங் களும் சண்டை பிடியாதேயுங்கோ எண்டுதான்புத்தி சொல்லி அனுப்புறனான். அதிலை தமிழ் பிள்ளையளும்தான் இருந் தவை. குடும்பங்களுக்கை பிரச்சினையள் வாறதுக்கு, குடும் பங்கள் பிரியிறதுக்கு நாங்க காரணமாயிருக்கக்கூடாது. தெரியாதே? வேலைக்களைப்பில வரேக்கை அப்பிடி இப் பிடி நடக்கும்தானே,' என்றா.

'ரீச்சர்... சிறுவர் உதவிச் சபை பிள்ளையளை அவையிட்டை யிருந்து பிரிச்சுக்கொண்டு போகப்போறதில்லை. பிரச்சினை யளைஎப்பிடிக் கையாள்றதெண்டு தெரியாததாலைதானே இப்பிடியெல்லாம் அவை நடக்கினம். சரியான வழியிலை எப்பிடிப் பிரச்சினையளைத் தீர்க்கலாமெண்டு அவை அறிஞ்சுகொள்ளுறதுக்கும், பிள்ளையள் பாதுகாப்பாய் இருக்கிறதுக்கும் அதுகளின்ரமனங்கள் பாதிக்கப்படாமல் இருக்கிறதுக்கும் ஒரு வழி வேணும்... அதுதான் நான் அறி விச்சிருக்கிறன், அதோடை அது எங்கடகடமையெல்லே,' என்ற நான் அங்கிருந்து விலகினேன்.

'அப்பா அடிக்கிறாரெண்டு என்ர பிள்ளையள் சொல்லியிருக் கினமெண்டு சுரேனுக்கு தெரிய வந்திருந்தால் பிள்ளயளை அவர் அச்சுறுத்தியிருப்பார். என்னிலையும் குற்றம் பிடிச் சிருப்பார். வேறென்னத்தைச் செய்திருப்பார்? அப்பிடித்தான் மற்றவையும் செய்திருப்பினம், அல்லது செய்வினம். வன் முறை கூடாததெண்டு தெரியாமலே அவை அதைக் கையாளு கினம்,' எனக்கு நானே சொல்லிக்கொண்டேன்.

வாகனம் நிறுத்துமிடத்தில் சேறும் சகதியும் நிறைந்திருந்தது. என்னுடைய கார் முழுவதும் படர்ந்திருந்த பனியை வழித் தெடுப்பதற்கிடையில் எனக்குப் போதும்போதுமென்றாகி விட்டது. கைகள் கையுறைகளுக்குள் இருந்தபோதும், குளிரில் சுள்ளிட்டன.

ஒருவாறாகக் காரை ஸ்ராட் செய்தேன். கொட்டும் பனியுடன் போட்டிபோட்டபடி wipers இரண்டும் முன் காரின் கண்ணாடி யில் விழும் பனியைத் துடைத்துக்கொண்டிருந்தன. இடை யிடையே windshield fluid இனையும் விசிறி விசிறி, அதில் படியும் புகாரைஅகற்றியபடி மிகக் கவனமாக காரை ஓட்டிக் கொண்டிருந்தேன். அடிக்கடி கண்ணீரால் நிறைந்து கொண் டிருந்த கண்களைத் தொடர்ந்து துடைக்க வேண்டியிருந்தது.

செல்லும் வழியைக்காட்டிக் கொண்டிருந்த தொலைபேசி மீளவும் சுரேனிடமிருந்து செய்தி வந்திருப்பதைச் சொன்னது. மூத்த மகள் யாழினியின் திருமணம் மிகவும் எளிமையான பதிவுத் திருமணமாக நாளைக்கு நடக்கவிருக்கிறது. அதைத் தங்கை கேசினியுடனும் தன் இரண்டு சினேகிதிகளுடனும் மட்டுமே கொண்டாடுவதற்கு அவள் தீர்மானித்திருக்கிறாள். மணமகன் பக்கத்திலிருந்தும் ஒரு சிலர் மட்டும்தான் வருகின் றனர். அதற்குத் தன்னையும் அழைக்கும்படி யாழினியிடம் கூறும்படி அவர் மீளமீள என்னை வற்புறுத்திக்கொண்டிருக் கிறார்.

அவரின் கோபத்துக்குப் பிள்ளைகளும் பல தடவைகள் இரையாகியிருக்கிறார்கள்.

எங்களுக்கிடையே சண்டைகள் ஏற்படும்போது கேசினி பயத்தில் ஒளிந்துவிடுவாள். ஆனால், என்னைக் காப்பாற்றும் நோக்கில் எங்களுக்கு இடையில் நின்று யாழினி அவதிப்பட் டிருக்கிறாள். தான் வாங்கிய அடிகளுக்காக அழுததைவிட, எனக்கு விழுந்த அடிகளுக்காகவே அவள் மிக அதிகமாக அழுதிருக்கிறாள். அப்படியான நாள்களில் தண்டனையாக, router ஐக்கூட அவர் off பண்ணிவிட்டிருக்கிறார். பின்னர், அவர் நித்திரை கொள்ளும்வரை காத்திருந்து, இணையத் தின் உதவியுடன் செய்யவேண்டிய வீட்டு வேலைகளைச் செய்துபோட்டு மீளவும் router ஐ off பண்ணிப்போட்டு அவர்கள் நேரம் கழித்துப் படுத்திருக்கிறார்கள். இன்னொரு நாள் அவரின் தாக்குதலிலிருந்து தப்புவதற்காக வெளியில் நான் ஓட, வீட்டைப் பூட்டிவிட்டு அவர் எங்கோ சென்று விட்டார். பள்ளிக்கூடம் முடிந்துவந்த கேசினிதான் யன்னலுக் கூடாகப் புகுந்து வீட்டைத் திறந்திருக்கிறாள். நல்ல வேளை யாக வரவேற்பறையின் வெளியேயிருந்த சிறியதொரு யன் னல் அன்று திறந்திருந்தது.

நினைவுகள் தொடர்ந்து என் மனதில் கொட்டப்பட்டுக்கொண் டிருந்தன.

சில வேளைகளில் எனக்கு ஏதாவது அவர் செய்துவிடுவாரோ எனப் பயமேற்படும்போது, யாழினியின் அறையில்தான் நான் படுத்திருக்கிறேன். அவளின் வயதுக்கு மேற்பட்ட, தேவை யற்ற பொறுப்பை அவள் மேல் சுமத்துகிறேன், அவளையும் பதற்றத்துக்கு உள்ளாக்குகிறேன் என்பது எனக்கு அந்த நேரம் விளங்கவில்லை. இப்படியான விடயங்கள்தான் பல் கலைக்கழகத்துக்குச் சென்ற நாள் முதல் தகப்பன் என்ற உறவு வேண்டாமென்றே அவர்கள் இருவரையும் வாழ வைத் திருக்கிறது என்பதும் எனக்கு விளங்கியிருந்தது.

பிள்ளைப்பராயம் அவர்களில் ஏற்படுத்திய மனச்சிதைவை மேவுவதற்கு அவர்கள் செலவழித்த நேரமும் பணமும் மிக அதிகமானது. அப்போதெல்லாம் அவர்களின் மனங்களுக்கு ஒத்தடம் கொடுப்பதற்கு அவர்களிடம் மன்னிப்புக் கேளுங்

கள், அவர்களுடனான உறவைச் சீராக்குவதற்கு ஏதாவது செய்யுங்கள் என அவரை நான் கேட்டுக்கொண்டே இருந்தேன். ஆனால், அவர் எதையும் பொருட்படுத்தவேயில்லை. தன் பிழைகளை ஒத்துக்கொள்வதற்கு அவர் இப்போதுகூடத் தயாராக இல்லை.

யாழினியின் திருமணத்தில் கலந்துகொள்ளாமல் இருப்பது தனக்குக் கௌரவக் குறைச்சல், மற்றவை என்ன நினைப்பினம் என்பதுதான் அவரின் பிரச்சினை. அதற்காகப் பிள்ளைகளுடன் நான்தான் தன்னை ஒட்டவைக்க வேண்டுமென்று என்னைத் தொந்தரவு செய்கிறார். ஆனால், அவரின் கதையை எடுத்தவுடனேயே யாழினி அழுகிறாள். அவளின் வாழ்க்கையின் மிக முக்கியமான ஒருநாளைப் பாழாக்க வேண்டாமென கேசினி எனக்கு ஆலோசனை சொல்கிறாள். அதனால், இன்றிரவு நான் வீட்டுக்குப் போகாமல் இருப்பதே உசிதமென நாளைக்குப் போட வேண்டிய உடைகளை ஏற்கனவே எடுத்துக் கொண்டுபோய் கேசினியின் வீட்டில் வைத்திருக்கிறேன்.

வழியெங்கும் ஒரே இருட்டாக இருந்தது. தொலைபேசி ஒலித்தது. சுரேன்தான். என்ன செய்யவென ஒரு கணம் யோசித்ததில் காரின் கட்டுப்பாடு என்னிடமிருந்து விடுபட்டுப் போனது. கடைசியில் ரோட்டின் கரையிலிருந்த மரத்தில் மோதி கார் நின்றது. அப்படியாவது நின்றதே என்ற ஆறுதலுடன் இறங்கிப் பார்த்தேன். காரின் முன்பக்கம் முற்றாக உடைந்து தொங்கிக்கொண்டு நின்றது. காரைப் பார்க்க எனக்கு அழுகை வந்தது. எனக்கு உறுதுணையாக இருக்கிற அதை இப்படிச் சிதைத்திருக்கிறனே எனக் கவலையாக இருந்தது.

மீளவும் காருக்குள் ஏறிய நான், towing company ஒன்றை அழைத்துக் காரை வந்து எடுத்துச் செல்லமுடியுமா எனக் கேட்டுவிட்டு, கேசினியை அழைத்து ஸ்காபோரோ collision reporting centre இல் வந்து என்னை கூட்டிப்போக முடியுமா எனக் கேட்டபோது, நான் எப்படியிருக்கிறேன் என்பதே அவளின் பெரும் கரிசனையாக இருந்தது. எனக்கொன்றும் இல்லையென அவளுக்குத் தேறுதல் சொல்லிவிட்டு, சுரேனை அழைத்தேன்.

'காரை மரத்தோடை மோதிப் போட்டன். இப்ப ஓட்டக்கூடிய நிலையில அது இல்லை.'

'ஏனப்பா, காரைக் கவனமாய் ஓடுறேல்லையே? கார் ஓடேக்கே ஓடுறதிலைதான் கவனமாயிருக்கோணும்.'

'மனசை எங்கெங்கேயோ பாயவிட்டு, மோட்டுத்தனமாய் காரை உடைச்சுப்போட்டன். அதிருக்க, கேளுங்கோ. பிள்ளையளோடை உறவைப் பேணுறதுக்கு ஏதாவது செய்யுங்கோ எண்டு பத்து வருஷமா சொல்லிக்கொண்டிருந்தன். ஆனா, நீங்க எந்த முயற்சியும் எடுக்கேல்லை. இப்ப அவளவையோடை உங்களை ஒட்ட வைக்கிறது என்ரை வேலையில்லை. உங்களுக்காண்டிக் கதைச்சுக் கதைச்சு பிள்ளையளின்ரை மனவேதனையைக் கூட்டுறதுக்கோ, அவளவையோட எனக்கிருக்கிற உறவைப் பாழாக்கிறதுக்கோ இனியும் நான் ரெடியில்லை. இவ்வளவு நாளும் அப்பிடி நான் கதைச்சதே பிழை.

கேசினி வந்து என்னைக் கூட்டிக்கொண்டு போவாள். கலியாணம் எங்கை நடக்குது, என்னைக் கூப்பிடச்சொல்லிச் சொல்லு எண்ட கதையெல்லாத்தையும் இனி நிப்பாட்டிப் போடுங்கோ. நான் உங்களைப் பொறுத்துக்கொண்டு வாழுறதுக்காண்டி, அவளவையும் பொறுக்க வேணுமெண்டு அவளவைக்குத் தலைவிதி இல்லை. ஏதாவது செய்து குழப்பம் விளைவிக்க நினைச்சீங்களெண்டால், நான்தான் முதலில பொலிசைக் கூப்பிடுவன். ஏறுமாறாய் என்னோடை நடக்க வெளிக்கிட்டியள் எண்டால் நானும் வீட்டை விட்டிட்டு போடுவன்.'

அவரின் பதிலுக்குக் காத்திராமலேயே தொலைபேசியை வைத்தேன். நான் கூப்பிட்டிருந்தTowing company truck என்னுடைய காரின் பின் வந்து நின்றது. காரைவிட்டு இறங்கினேன் நான்.



Sriranjani@thaiveedu.com



# ‘நந்தசேன’

– செங்கதிரோன் –




அன்று மதியம் சாப்பாட்டை முடித்துக் கொண்ட கையோடு மட்டக்களப்பு, செங்கலடியிலிருந்து வீட்டை விட்டுப் பயணம் வெளிக்கிட்ட முத்துசாமி செட்டியார் கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து மாறி நீர்கொழும்புக்கு பஸ் எடுத்து ‘ஜாஎல’ பஸ் நிலையத்தை அடையும்போது இரவு பத்துமணியாகி விட்டிருந்தது.

செங்கலடியிலிருந்தே தனியார் வாகனமொன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு நீர்க்கொழும்புப் பயணத்தை மேற்கொள்ளுமளவுக்குச் செட்டியாரிடம் பணவ சதியிருந்தபோதிலும் அன்று இலங்கையில் நாடு முழுவதிலும் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் அதனால் விளைந்த பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாகவும்தான் தனியார் வாகனத்தைத் தவிர்த்துக்கொண்டு இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான அரசாங்கப் பொதுப்போக்குவரத்தில் பயணிப்பதுதான் பாதுகாப்பானது என்பதால் செங்கலடியிலிருந்து புறப்பட்டு ‘ஜாஎல’ வரைக்கும் பஸ்சில் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

அவருடைய துரதிஸ்டமோ என்னவோ புறக்கோட்டையிலிருந்து நீர்கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்த பஸ் வழியில் இயந்திரக்கோளாறு காரணமாக ‘பிறக்டவுண்’ஆகி ‘ஜாஎல’வுடன் பயணத்தை இடையில் நிறுத்திக்கொண்டது.

செட்டியார் ‘ஜாஎல’ பஸ் நிலையத்தை வந்தடைந்த நேரம் மழையும் சற்றுத்தூறி விட்டிருந்தது. என்றாலும் கருமேகங்கள் இன்னும் கலையாது வானம் இருட்டியிருந்தது. பஸ் நிலை யத்தின் அருகில் இருந்த கடைகள் யாவும் பூட்டியிருந்தன. பஸ் நிலையம் சனநடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தது. பஸ் நிலையத்தில் வழமையாகப் படுத்துறங்கும் கட் டாக்காலி மாடுகளும் தெருநாய்களும்கூட வேறெங்கோ ஒதுங்கிக் கொண்டன. பஸ் நிலையத்தில் செட்டியாரையும் ஏனைய பயணிகள் சிலரையும் ‘அம்போ’வென்று இறக்கி விட்ட பஸ் ‘ஜாஎல’ பஸ் ‘டிப்போ’-வுக்குப் போய்விட்டது. செட்டியாரோடு வந்திறங்கிய ஏனைய பயணிகள் எல்லோரும் ஆளுக்கொருதிசையில் சென்று மறைந்து விட்டிருந்தனர். செட்டியார் பஸ் நிலையத்தில் தனித்து விடப்பட்டிருந்தார். பஸ் நிலையத்தில் மயான அமைதி. ‘ஜாஎல’ சிங்கள ஊர். தமிழரான செட்டியாருக்குப் பயம் மெல்ல மெல்லத் தொற்றத் தொடங்கிற்று. மடியில் கனம்வேறு. அதனால் வழிப்பயம் அவரை ஆட்கொண்டும் விட்டது.

செங்கலடியில் நகை அடகு வியாபாரம் செய்பவர் அவர். செட்டியார் பரம்பரையைச் சேர்ந்தவரல்லர், ஆனால்

அவரது பூர்வீகம் இந்தியா என்பதால் அவரை அங்கு செட்டியார் என்றே எல்லோரும் அழைத்தனர். நகை அடகு வைத்தவர்கள் மீளமுடியாமல் அறுதியாகிப்போன நகைகளை நீர்கொழும்பிலுள்ள தனது வழமையான வாடிக் கையாளரான நகைக்கடை உரிமையாளரொருவரிடம் அவற்றை விற்றுப் பணம் பண்ணும் நோக்குடன்தான் அன்றைய பயணத்தை அவர் மேற்கொண்டிருந்தார்.

தனியார் வாகனமொன்றை அங்கிருந்து வாடகைக்கு அமர்த்திக்கொண்டு நீர்கொழும்புக்குப் போவாமா? என்று எண்ணமெழுந்த போதிலும் அதனைத் தவிர்த்துக் கொண்டார். முன்பின் தெரியாத தனியார் வாகனத்தில் அதுவும் அன்றிருந்த அசாதாரண சூழ்நிலையில் தமிழரான தான் தனியே இரவு நேரத்தில் மடியில் கனத்துடன் பயணிப்பது பாதுகாப்பானதல்ல என அவர் உள்மனம் உரைத்ததே அதற்குக் காரணம். ஏதோ தாமதமானாலும் நீர்கொழும்புக்குச் செல்லும் இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ் ஏதாவது வரும் என்ற அதீத நம்பிக்கையில் பஸ் நிலையத்தில் நிர்மாணிக்கப்பெற்றிருந்த ‘கொங்கிரீட்’ இருக்கையில் அமர்ந்தார்.

நேரம் கழிந்துகொண்டிருந்தது. நேரமும் இப்போது பத்தரையைத் தாண்டியிருந்தது. தனியனாக அமர்ந்திருந்த செட்டியார் நிலைகொள்ளாது தவித்துக்கொண்டிருந்தார். பயத்தில் பசியும் எடுக்கவில்லை. எங்கோ ஒரு மூலையிலிருந்து தெருநா யொன்று விட்ட ஊளைச்சத்தம் அவரை மேலும் பீதிக்குள் தள்ளியது. இப்போது கை கால்கள் உதறல் எடுக்காதகுறை. பயம் அவரை முற்றாக மூழ்கடித்திருந்தது. மழைபெய்துவிட்டிருந்த குளிர்நேரத்திலும் கூட பயத்தில் முகம் வியர்க்கவும் தொடங்கிவிட்டது. வேட்டியும் மேற்சட்டையும் அணிந்திருந்த அவர் வேட்டித் தொங்கலால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

என்னசெய்வதென்று தெரியாமல் தலையைத் தாழ்த்திக் கொண்டு கண்களை மூடியபடி கடவுளை வேண்டத் தொடங்கினார். வாய் அவரையறியாமலே கடவுளே! கடவுளே! என முணுமுணுத்தது. ஆபத்துவரும்போது ஆண்டவனை நாடுவதுதானே மனித இயல்பு.

சில நிமிடங்கள் கழிந்திருக்கும். திடீரென்று யாரோ ஒருவர் தனது தோளில் மெதுவாகத்தட்டி ஏதோ கதைத்தது போலிருக்கச் செட்டியார் பீதியில் உறைந்துபோன நிலையில் தலையை நிமிர்த்தினார். அவருக்கு முன்னால் ஒரு ஆளைக் கண்டதும் பயத்தில் செட்டியார் எழுந்து நின்றார்.

முன்னால் நின்றிருந்தவர் ‘வாடிவென்ன! வாடிவென்ன! உட்காருங்க ‘என்று சிங்களத்திலும் தமிழிலும் கூறியபடி செட்டியாரின் இரு தோள்களிலும் தனது கைகளை வைத்து அவரை இருத்தினார்.

இதயத்துடிப்பு நின்றுவிடுமோ எனும்படியாகச் செட்டியாரின் இதயம் வேகமாக அடிக்கத் தொடங்கியது. முகத்தில் வியர்வைத் துளிகளும் மீண்டும் அரும்பத் தொடங்கின. உடம்பும் வெலவெலத்து வியர்த்துக் கொட்டியது.

நிலைமையைப் புரிந்துகொண்ட முன்னால் நின்றிருந்த ஆள் ‘பயவென்டெப்பா! பயப்படவாணாம்!’ என்று மறுபடியும் சிங்களத்திலும் தமிழிலும் சொல்லியபடி செட்டியாரைத் தோளில் தடவிவிட்டார்.

செட்டியார் தன்னைச் சுதாரித்துக்கொண்டு தன் முன்னால் நிற்பவரை நன்றாக நிமிர்ந்து பார்த்தார்.

நல்ல உயரமான மனிதன். அறுபது வயதைத் தாண்டியிருப்பார். ஆனாலும் வாளிப்பான உடற்கட்டு. கறுப்புநிற நீளக்காற் சட்டையும் வெளிர்நீல முழுக்கை சேர்ட்டும் செப்பமாக அணிந்திருந்தார். முகத்தில் இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மனெக்ஷா வினதைப் போன்ற முறுக்கிய மீசை ஒரு கம்பீரத்தை அளித்தது.

செட்டியாரைப் பார்த்து ‘நீங்க தமிள் ஆளா?’ என்று கேட்டார்.

செட்டியாரும் பயம் இன்னும் நீங்காத நிலையில் அடித் தொண்டைக்குள் ‘ஆம்’ என்று தலையாட்டினார்.

‘எங்கபோக வந்தது?’ என்றார் அந்த ஆள்.

‘நீர்கொழும்புக்கு’ என்று பதில் தந்தார் செட்டியார்.

‘ஆ! மீகமுவவுக்குத்தானே! உங்களுக்கு நாட்டுநிலம தெரியிற இல்லயா? இந்த நேரத்தில இப்படி தனிய நிக்கிறது ஆபத்து இல்லயா? சிங்கள ஊரில தமிள் ஆள் வந்து இப்படி நிண்டா ஆமி பொலிஸ் வந்து பிடிச்சிப் போறது. சந்தேகம்தானே. இல்லாட்டி கள்ளன் வந்து ஏதாவது பண்ணி இரிக்கிறதப் பறிச்சிப் போறது. கொஞ்சம் யோசிச்சி நடக்கவேணும்தானே’ என்று அறிவுரை கூறத் தொடங்கிய அந்தாள்,

‘இப்பமிச்சம் கதைக்க நேரமில்லே. மழையும் வரு வாங்போல இரிக்கிறது. இங்க நீ தனியநிக்கிறது ஆபத்து. என்னோட எங்கடஊட்டுக்கு நீங்க வாறது. நம்மட ஊட்டில தங்கி நாளைக்கு காலம்பற மீகமுவவுக்கு பஸ்சில போறது. நாமவந்து பஸ்சில உங்கள அனுப்பி வைக்கிறது. பயப்பட வாணாம். சரிதானே!’ என்று செட்டியாரின் பதிலுக்குக் காத்திராமல் பேச்சை முடித்தார்.

செட்டியாருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. முன்பின் தெரியாத ஒருவர் வீட்டுக்குவரச் சொல்கிறார். ஆபத்தான வேளையில் ஆண்டவனே அனுப்பியதுபோல வந்து நிற்கிறார். மறுக்கவும் மனம் வரவில்லை. மறுத்து விட்டு விடியும்வரை பஸ் நிலையத்தில் தனியே நிற்பதும் ஆபத்து. செட்டியார் பதிலேதும் கூறாமல் ஒரு கேள்விக் குறியோடு அந்த ஆளை நிமிர்ந்துநோக்கினார்.

செட்டியாரின் மனநிலையைப் புரிந்துகொண்டவராய், ‘பயப்படவாணாம். சிங்கள தமிள் எல்லா ஆக்களும் மனிசன்தானே. நாமஉங்களுக்கு உதவிசெய்யத்தான் ஊட்டுக்குக் கூப்பிடுறது. இப்படி நாம முன்னால மிச்சம் தமிள் ஆக்களுக்கு உதவி செஞ்சிரிக்கி. பஸ் இல்லாம இப்படி வந்துதட்டுக்கெட்டு நிக்கிற தமிள் ஆக்கள் மிச்சம் பேருக்கு ஊட்டுக்குக் கூட்டிப்போய் நாம உதவி செஞ்சி ரிக்கி. அது புண்ணியம்தானே. நீங்க யோசிக்காம நம்மளோட இப்ப ஊட்டுக்குவாங்க’ என்று அன்பான குரலில் அவர் மீண்டும் கேட்டதும் செட்டியாருக்கும் பயம் சற்று நீங்கி நம்பிக்கை துளிர்விட்டது.

சரியென்று தலையாட்டிவிட்டு பயணப் பையைக் காவிக் கொண்டு அந்த ஆள் முன்னே செல்ல அவர் அவ்வப்போது கேட்டகேள்விகளுக்கு மட்டும் மறுமொழி சொல்லியபடி, காலையிலே நடைப்பயிற்சி செய்யும் எஜமானின் பின்னே செல்லும் வளர்ப்பு நாயைப் போல அவரைப் பின்தொடர்ந்தார் செட்டியார். பத்துநிமிட நேர நடையில் ஒரு வீட்டை அடைந் தார்கள்.

வீட்டின் கதவைத் திறந்துவிட்ட அந்த ஆள் செட்டியாரை உள்ளே போகும்படி கையைக் காட்டினார்.

உள்ளே நுழைந்த செட்டியார் தனது பார்வையைப் பரவலாகப் பதியவிட்டார். விசாலமான மண்டபம். பல அறைகள் கொண்ட வசதியான கல்வீடு. வீட்டுக்காரர் 'மெனிக்கே!' என்று குரல் கொடுத்ததும் குசினிப் பக்கமிருந்து வந்த ஐம்பது வயதைத் தாண்டிய பெண்ணொருத்தி செட்டியாரைப் பார்த்து மலர்ந்த முகத்துடன் கைகூப்பி வணக்கம் செலுத்தி வர வேற்றார். செட்டியாரும் பதிலுக்குக் கைகூப்பினார். வீட்டுக் காரர் செட்டியாரிடம் 'இதுதான் நம்ம நோனா' என்றார். அவ சிரித்துக்கொண்டு மீண்டும் குசினிப் பக்கம் சென்றுவிட்டா.

செட்டியாருக்கு ஒரு பக்கம் சந்தோஷமாகவுமிருந்தது. இன்னொரு பக்கம் முன் பின் தெரியாத முகங்கள் என்பதில் சற்றுச் சங்கடமாகவுமிருந்தது.

மண்டபத்தின் சுவரில் பல படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அதிலொன்றில் பதக்கங்கள் பதிக்கப்பெற்ற இராணுவச் சீருடையுடனும் தொப்பியுடனும் வீட்டுக்காரர் கம்பீரமாக நின்றிருந்தார். இன்னொரு படத்தில் வீட்டுக்காரரும் மனைவியும் கல்யாணக் கோலத்தில் காட்சியளித்தனர். வேறொரு படத்தில் இராணுவச் சீருடையில் இடுப்புக்கு மேலே அரைவாசிப் படமாக இளைஞனொருவன். முகச் சாயல் வீட்டுக்காரரைப்போல. அவரது மகனாக இருக்க வேண்டுமென்று செட்டியார் நினைத்துக் கொண்டார். சுவரில் இன்னொரு இடத்தில் வாக்குச்சீட்டில் புள்ளடி போட்டது போல இரு வாள்கள் ஒன்றின் மேலொன்று குறுக்காக மாட்டப்பட்டிருந்தன.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்குமிடையே நடைபெறும் யுத்தத்தில் மரணமடையும் இராணுவ வீரர்களின் உயிரற்ற உடலங்கள் தென்னிலங்கைச் சிங்களக் கிராமங்களுக்கு நாளாந்தம் வந்துகொண்டிருக்கும் ஓர் அசாதாரண சூழலில் ஒரு சிங்கள இராணுவக் குடும்பத்தின் வீட்டில் சரணடைந்துள்ளதை நினைக்கச் செட்டியாருக்கு மனம் பதற்றமடையவே செய்தது.

செட்டியாரின் பதற்றத்தை முகக்குறிப்பால் புரிந்துகொண்ட வீட்டுக்காரர் 'இது நம்ம ஊடு. பயப்பட ஒண்டுமில்லே. நாம ஆமியில வேலை செய்து 'கப்டன்' ஆகிப் பென்சனுக்குப் போனது. எங்களுக்கு ஒண்ணே யொண்ணு 'புத்தா'தான்' என்றவர், படமொன்றைக் காட்டி இவர்தான் எங்கட மவன் நந்தசேன. 'யாப்பன'யில ஆனஇறவு காம்ப்' பில வேல செய்யிறது. அங்க சண்ட நடந்ததுதானே. அந்தக் கத நாம புறகுசொல்லிறது என்றவர், செட்டியாரிடம் முன் அறையைத் திறந்துகாட்டி 'இந்த காம்பறயில நீங்க இரவைக்குத் தங்கிறது' என்றுவிட்டு செட்டியாரைக் குசினிக்கு அருகில் கூட்டிப்போய் ஓரிடத்தைக் காட்டி' இதுதான் 'பாத்றூம்' மட்டக்களப்பில இரிந்தி பிரயாணம் பண்ணின களைப்பு இரிக்கும். நல்லா குளிச்சி உடுப்பு மாத்தி வாருங்க. நாமளும் குளிச்சி வாறது' என்று கூறிவிட்டு வேறொரு அறைக்குள் நுழைந்தார்.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான வீட்டுக்காரரின் கட்டளைகளை நிறைவேற்றுவதைத் தவிர அச்சமயம் செட்டியாருக்கு வேறொன்றிற்கும் கைகால்கள் ஓடவுமில்லை. கவனமும் செல்லவில்லை. வீட்டுக்காரர் ஆனையிறவுச் சண்டையைப் பற்றிக் குறிப்பிட்டதுதான் செட்டியாருக்கு அச்சத்தைக் கூட்டிவிட்டது.

செட்டியார் குளித்துவிட்டுவந்து உடைமாற்றி அறைக் குள்ளே யிருந்த கட்டிலில் அமர்ந்தார். உடலில் அசதி நீங்கினாலும் உள்ளத்தில் அச்சம் நீங்கவில்லை.

சில நிமிடங்கள் கழிந்திருக்கும். வீட்டுக்காரர் வந்து சாத்தியிருந்த அறைக்கதவில் 'டொக்டொக்' என்று தட்டினார். செட்டியார் எழுந்து கதவைத் திறந்ததும் வீட்டுக் காரர் புன்னகைத்துக் கொண்டே மண்டபத்துள் வந்து அமரும்படி அங்கு போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலி யொன்றைக் காட்டினார். நாற்காலியின் முன்னே வைக்கப் பட்டிருந்த 'ஸ்ரூல்'-இல் வெளிநாட்டு உயர்வகை மதுப் போத்தலொன்றும் இரண்டு வெற்றுக் 'கிளாஸ்'களும் 'பிளேன் சோடா'ப் போத்தலொன்றும் இரண்டு 'டிஸ்'களில் அவித்த முட்டைகளும் பொரித்த கோழியிறைச்சியும் வைக்கப்பட்டிருந்தன. எதிரே மறுபக்கத்தில் இன்னொரு பிரம்பு நாற்காலி போடப்பட்டிருந்தது. இக்காட்சியைக் கண்டதும் செட்டியாரிடம் அடுத்து என்ன நடக்கப்போகிறதோ என்ற அச்சமும் அங்கலாய்ப்பும் தலைதூக்கின. ஆயினும் தனக்கு இடப்பட்ட கட்டளைப்படி கதிரையில் போய் அமர்ந்தார். எதிரே போடப்பட்டிருந்த நாற்காலியில் வந்த மர்ந்த வீட்டுக்காரர் செட்டியாரிடம் 'ஸ்ரூல்'இல் வைக்கப் பட்டிருந்த மதுப்புட்டியைக் காட்டி 'இது நீங்க பாவிக்கிற தானே!' என்றார்.

செட்டியாரும் தன்னைச் சுதாரித்துக் கொண்டு 'இருந்து போட்டு எப்பவாவது கொஞ்சம் எடுக்கிறநான்' என்றார்.

'நாமளும் அப்படித்தான். ஒவ்வொரு நாளும் இல்லே. உங்கள மாதிரி கூட்டாளி ஆரும் வந்தா கொஞ்சம் எடுக்கிறது' என்று கூறி மதுப்போத்தலையும் சோடாப்போத்தலையும் அவற்றின் மூடிகளைத் திறந்து தன்னுடைய 'கிளாஸ்'சில் அரைவாசிக்கு மதுவையும் மீதிக்குச் சோடாவையும் விட்டு நிரப்பிய பின் மதுப்போத்தலையும் சோடாப்போத்தலையும் செட்டியாரிடம் 'இந்தாங்க' என்று நீட்டினார்.

செட்டியாருக்கும் அந்த நேரத்தில் அது வேண்டும் போல்தான் இருந்தது. மனதைச் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு மறுக்க முடியாமல் வாங்கித் தனது 'கிளாஸ்'சையும் வீட்டுக்காரர் போல் நிரப்பினார்.

வீட்டுக்காரர் தனது 'கிளாஸ்'சை உயர்த்தி 'சியர்ஸ்' சொல்ல இருவரது 'கிளாஸ்'களும் ஒன்றையொன்று இலேசாக மோதி 'டிரிங்' என்று ஒலியெழுப்பின.

இருவரும் கண்களை மூடிக்கொண்டு முதலாவது ‘ட்ரிங்’-ஐ ஒரே மிடற்றில் உள்ளே செலுத்தினார்கள். வீட்டுக்காரர் ‘டிஸ்’களைஒன்றுமாறி ஒன்றாய் நீட்ட அவித்த முட்டையையும் பொரித்த கோழியிறைச்சியையும் செட்டியார் சுவைத்தார். இப்போது இருவரும் நெடுநாளைய நண்பர்களைப்போல அன்னியோன்யமாகிப் போனதுபோல இருந்தது.

இரண்டாவது ‘ட்ரிங்’ஐயும் ஊற்றி மெல்ல மெல்ல இருவரும் உமிஞ்ச ஆரம்பித்தபோது வீட்டுக்காரர் செட்டியாரைப் பார்த்து ‘நாம இப்ப நம்மட‘புத்தா’ட கதை சொல்லிறது’ என்று கதையை ஆரம்பித்தார். செட்டியாரை மீண்டும் ஆரம்பத்தில் இருந்ததுபோன்ற அச்ச உணர்வு ஆட் கொண்டாலும் சமாளித்துக் கொண்டார். உள்ளேபோன மதுத்துளிகளும் சற்று உற்சாகத்தை வரவழைத்திருந்தது.

வீட்டுக்காரர் இரண்டாவது ‘ட்ரிங்’ஐ உமிஞ்சியபடியே கதையை ஆரம்பித்தார்.

‘ஆனையிறவில ரெண்டுகால் புலிக்கும் - ‘கொட்டியா’வுக்கும் ஆமிக்கும் சண்ட நடந்ததானே. அதில நம்மட ‘புத்தா’-மவன் நந்தசேனவும் சண்டபோட்டது’ என்று கதையைத் தொடங்கச் செட்டியாருக்கு உற்சாகமெல்லாம் ஓடி ஒளிந்து உதறல் எடுக்க ஆரம்பித்தது. காட்டிக்கொள்ளாமல் கதைக்குக் கவனமாகக் காதுகொடுப்பதுபோல் பாவனை பண்ணினார்.

‘நாம சொல்லிற கத கேட்டுப் பயப்படவாணாம்’ என்ற பீடிகையுடன் வீட்டுக்காரர் கதையைத் தொடர்ந்தார். செட்டியாரும் ‘ஏறநனைந்தால் கூதலென்ன குளிரென்ன’ என்ற மனோநிலையில் நடப்பது நடக்கட்டும் என்று அசட்டுத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு இரண்டாவது ‘ட்ரிங்’ஐக் காலிசெய்து விட்டு மூன்றாவது ‘ட்ரிங்’ஐ ‘கிளாஸ்’சில் நிரப்பிக் கொண்டார்.

செட்டியாரைத் தொடர்ந்து வீட்டுக்காரரும் தனது இரண்டாவது ‘டிரிங்’-ஐ முடித்துவிட்டு மூன்றாவது ‘ட்ரிங்’க்குத் தாவினார்.

‘சண்டையில நம்மட ‘புத்தா’ நந்தசேன செத்துப்போனது’ என்று வீட்டுக்காரர் கதையைத் தொடரச் செட்டியாருக்கு மண்டையிலே யாரோ ஓங்கி அடித்தது போலிருந்தது. இவரோடு வராமல் பஸ் நிலையத்திலேயே நின்றிருக்கலாம் போல என்றெண்ணினார். இந்த வீட்டிலேயே என் கதை முடிந்தாலும் முடியட்டும். கடவுள் விட்ட வழி அதுதான் என்றால் என்ன செய்வதுஎனத் தைரியத்தைச் செயற்கையாக வரவழைத்துக் கொண்டு ‘படக்’கென்று மூன்றாவது ‘டிரிங்’ ஐக் காலிசெய்தார். இனி எந்தக் கதையையும் கேட்க அவர் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டார். மதுவும் தனது வேலையை முடுக்கிவிட உடம்பும் மனமும் முறுக்கேறியது.

வீட்டுக்காரர் கதையைத் தொடர்ந்தார்.

‘செத்துப்போன நம்மட ‘புத்தா’ நந்தசேனட உடம்ப ஒரு பொட்டியில போட்டு மூடிச் ‘சீல்’ பண்ணி திறக்க வாணாம் எண்டுசொல்லிப் பொட்டிய எங்கட ஊட்டுக்கு ஆமி வாகனத்தில அனுப்பிவைச்சது. நாங்க எல்லாம் கத்திக் குளரி சொந்தக்காரங்களெல்லாம் வந்து செத்தவீடு செஞ்சி முடிஞ்சது’ என்று கூறி நிறுத்திய வீட்டுக்காரர் செட்டியாரிடம் ‘கத இன்னும் முடியல்லே. பயப்படவாணாம். இனித்தான் ‘கிளைமக்ஸ்’ இரிக்கிறது’ என்று கூறியபடியே செட்டியாருக்குச் சமதையாக மூன்றாவது ‘ட்ரிங்’கைக் காலிசெய்தார்.

‘நம்மட ‘புத்தா’ட செத்தவீடு செஞ்சி முடிஞ்சி இரண்டு நாளையால இப்படித்தான் ஒரு இரவு நேரம் செத்துப்போன நம்மட ‘புத்தா’ நந்தசேன ஊட்டுக்கு வாறது’ என்று சொல்லிச் சிரித்தார் வீட்டுக்காரர்.

செட்டியாருக்கு என்ன சொல்கிறார் இவர் என்றே விளங்க வில்லை. நெற்றியை உயர்த்தி வீட்டுக்காரரை வியப்போடு நோக்கினார்.

‘அதிங் என்ன நடந்தது எண்டா, சண்டையில குண்டு வெடிச்சி மிச்சம் ஆமி செத்துப்போறதானே. அப்படிச் செத்த ஆக்களிலஆர்செத்த, ஆர் செத்துப்போக இல்லே எண்ட கணக்குத் தெரியாது. நம்மட புத்தாவும் செத்துப் போனது எண்டு நினைச்சி செத்த ஆக்களில ஒருத்தரிர வெடிச்சிப்போன தலை, இன்னொரு ஆளிர கால், வேறு ஆளிர கை இப்படிப் பொறுக்கி எல்லாத்தையும் சேத்து எடுத்து ‘பொலித்தீன்’ பையில போட்டு அடையாளம் தெரியாதுதானே பொட்டியில வைச்சி மூடி ‘சீல்’ பண்ணி திறக்க வாணாம் எண்டு சொல்லி நந்தசேன எண்டு ஊட்டுக்கு அனுப்பிவைச்சது. சண்டையில நந்தசேன செத் துப்போக இல்லே. அவன் சண்டையில தப்பிஓடி எப்பிடியோ ரெண்டு மூண்டு நாளையில களைச்சு உழுந்து எங்கட ஊட்ட வந்து சேந்தது’ என்று கதையை முடித்துச் சிரித்தார் வீட்டுக்காரர்.

செட்டியாருக்கும் தன்னையறியாமல் சிரிப்பு வந்தது...

‘சிரிக்கவாணாம். பொய் சொல்ல இல்லே. உண்மை. நாம சொன்னது நடந்தது தான்’ என்ற வீட்டுக்காரர் செட்டியாரைப் பார்த்து’ இன்னும் ஒண்டு ‘ட்ரிங்’ எடுங்க. எடுத்துச் சாப்பிடுவம். சாப்பிட்டு நல்லா நித்திர கொள்ளுங்க. காலம நேரத்துக்கு மீகமுவ பஸ் எடுக்கவேணும் தானே’ என்றார்.

செட்டியார் போதும் என்று சைகை காட்டினார்.

வீட்டுக்காரர் தன்னுடைய ‘கிளாஸ்’சில் மதுவையும் சோடாவையும் அரைவாசிக்கு நிரப்பி கால்வாசியை அவர் அருந்திவிட்டு மீதியைச் செட்டியாரிடம் ‘இது லவ் சிப் எடுங்க’ என்று நீட்டினார்.

செட்டியாருக்கு இப்போது பயமும் தெளிந்து மனமும் தெளிந்தது. நீட்டிய ‘கிளாஸ்’ சில் மீதியிருந்ததை உற்சாகம் மேலிட ஒரேமுடக்கில் உள்ளே ஊற்றினார்.

‘லவ் சிப்’ பரிமாற்றம் முடிந்த கையோடு இருவரும் சாப்பிட வென்று எழுந்தனர்.



Senkathiron@thaiveedu.com




# ஆளுயர ஜன்னல்



– சகி

**தமிழில்: அரவிந்த் வடசேரி**

(சகி எனும் புனைபெயரில் அறியப்படுபவர் ஆங்கில எழுத்தாளர் H.H. முன்ரோ. 1870-1916 கால அளவில் வாழ்ந்த இவர் ஓ. ஹென்றி போன்ற சிறந்த சிறுகதை எழுத்தாளர்களுக்கு நிகரானவர். இவரது கதைகள் நையாண்டியும் நகைச்சுவையும் ததும்ப சமூகத்தை விமர்சனம் செய்பவை. அந்தக் கால வழக்கப்படி பத்திரிகைகளில் முதலில் வெளியான இவரது சிறுகதைகள் பல தொகுதிகளாக தொகுக்கப்பட்டுள்ளன. சொந்தப் பெயரில் வெளியிட்ட The rise of the Russian empire எனும் வரலாற்று ஆராய்ச்சி நூலும் நாவல்களும் நாடகங்களும் இயற்றியுள்ளார். பிரபல Alice in wonderland நூலினை பகடி செய்து The Westminster Alice மற்றும் ஜேர்மனியின் ஆக்கிரமிப்பில் இங்கிலாந்து இருப்பதான கற்பனை When William Came போன்றவை குறிப்பிடத்தக்க படைப்புகள். சகியின் தந்தை பர்மாவில் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக பணியாற்றிய காலத்தில் பிறந்தவர் முன்ரோ. முன்ரோ தானாக முன்வந்து இங்கிலாந்தின் குதிரைப்படையில் சேர்ந்து முதலாம் உலகப் போரில் பங்குகொண்டார். பலமுறை போரில் காயமடைந்த இவர் பிரான்ஸில் போர்க்களத்தில் எதிரியின் தொலைவிலிருந்து குறிபார்த்து சுடும் போராளியின் (sniper) குண்டினால் வீரமரணம் அடைந்தார். 'அந்த நாசமாய்ப் போன சிகரெட்டை அணைத்துவிடு' என்பது இவரது இறுதி வார்த்தைகளாக இருந்தன எனச் சொல்லப்படுகிறது.)

‘அத்தை இப்ப வந்துடுவாங்க,’ மிகவும் அமைதியான அந்தப் பதினைந்து வயது இளம்பெண் நட்டேலிடம் சொன்னாள்; ‘அது வரையிலும் நீங்கள் என்னைப் பொறுத்துக் கொண்டு என்னிடம் பேசிக்கொண்டிருக்க வேண்டியிருக் கிறது.’

நட்டேல் வரவிருக்கும் அத்தையை விட்டுக்கொடுக்காமல் தற்போதுள்ள மருமகளைப் புகழ்ச்சியால் வீழ்த்தத் தோதான வார்த்தைகளைக் கண்டடைய பெருமுயற்சி மேற்கொண்டார். அதே நேரம், முற்றிலும் அறிமுகமற்றவர்களுடனான இது போன்ற மரியாதை நிமித்த தொடர் சந்திப்புகள் தற்போதுள்ள தான் அனுபவிப்பதாகச் சொல்லப்படும் பதட்டத்தைத் தணிக்க எவ்வளவு உதவியாக இருக்குமோ என உள்ளுக்குள் ஐயம் கொண்டார் அவர்.

‘அது எப்படியிருக்கும் என்பது எனக்குத் தெரியும்,’ கிராமப்பகுதிக்கு அமைதியைத் தேடிச் செல்லும் அவரிடம் சகோதரி சொன்னார், ‘அங்கே நீ யாருடனும் பேசாமல் உனக்குள்ளேயே புதைந்து கிடப்பாய், உன் பதட்டம் தணிக்கப்படுவதற்கு மாறாக மோசாமாகத்தான் போகும். அங்கே எனக்குத் தெரிந்த அனைவருக்கும் அறிமுகக் கடிதம் தருகிறேன். அவர்களில் சிலர் மிகவும் நேர்த்தியானவர்கள் என்பது என் ஞாபகம்.’

திருமதி சாப்பிள்டன், அறிமுகக் கடிதங்களில் ஒன்றைக் கொடுக்க தற்போது வந்திருக்கும் மாது, நேர்த்தியானவர்களில் வருவாரா என நட்டேல் வியந்தார்.

அவர்களது சந்திப்பில் மௌனம் போதுமான அளவை எட்டிவிட்டது என்பதைக் கணித்து, ‘இங்கே நிறையப் பேரை உங்களுக்குத் தெரியுமா?’ என மருமகள் கேட்டாள்.

‘யாரையும் தெரியாது,’ நட்டேல் சொன்னார். ‘என் சகோதரி நாலு வருடங்களுக்கு முன்னர் இங்கே தங்கியிருந்தார், சாமியார் வீட்டில், தெரியும் இல்லையா. அவர்தான் இங்கே இருக்கும் சிலருக்கு அறிமுகக் கடிதம் தந்து அனுப்பியுள்ளார்.’

அவர் கடைசி வரியை, வருத்தம் வெளிப்படையாகத் தெரியும் தொனியில் சொன்னார்.

‘அப்போ, சொல்லப்போனா உங்களுக்கு எங்க அத்தையைப் பற்றி எதுவுமே தெரியாது, இல்லையா?’ அந்த அமைதியான பெண் தொடர்ந்தாள்.

‘அவருடைய பெயரும் முகவரியும் மட்டும்தான்’, வந்திருந்தவர் ஒப்புக்கொண்டார்.

திருமதி சாப்பிள்டன் கணவனுடன் இருக்கிறாரா இல்லை விதவையா என யோசித்துக் கொண்டிருந்தார் அவர். அந்த அறையின் இனம் காண முடியாத ஏதோ ஒன்று ஆண்களின் வசிப்பிடம் என்பதை உணர்த்தியது.

‘மூன்று ஆண்டுகளுக்கு முன்தான் அவர் வாழ்க்கையில் ஒரு பெரும் துயரம் நிகழ்ந்தது’ அந்தச் சிறுமி சொன்னாள்; ‘உங்களின் சகோதரி ஊரைவிட்டுப் போன பிறகாக இருக்கும்.’

‘துயரமா?’ நட்டேல் கேட்டார்; அந்த அமைதியான கிராமப் பகுதியில் துயரங்கள் பொருத்தமற்றவையாகத் தோன்றின.

‘ஒரு அக்டோபர் மாத மத்தியானத்தில் அந்த ஜன்னலை ஏன் விரியத் திறந்து வைத்திருக்கிறோம் என நீங்கள் வியக்கக் கூடும்,’ முற்றத்தின் புல்தரையினைப் பார்த்திருக்கும் பெரிய ஆளுயர பிரெஞ்ச் ஜன்னலைக் காட்டி மருமகள் சொன்னாள்.

‘இந்த ஆண்டு சூடு அதிகம்தான்’ நட்டேல் சொன்னார்; ‘ஆனால், அந்தத் துயரத்திற்கும் ஜன்னல் திறந்திருப்பதற்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?’

‘அந்த ஜன்னலின் வழியாகத்தான் மூன்று ஆண்டுகளுக்கு முன்னரான இதே நாளில் அத்தையின் கணவரும் அவரது இரண்டு இளம் வயது சகோதரர்களும் அந்த நாளுக்கான வேட்டைக்கு புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் திரும்பி வரவே இல்லை. முட்புதர்களைத் தாண்டி அவர்களுக்கு விருப்பமான வேட்டை நிலத்திற்குச் செல்கையில் மூவரையும் ஒரு சதிகாரச் சதுப்பு விழுங்கிவிட்டது. அது எவ்வளவு கொடுமையான மழை நிரம்பிய கோடையாக இருந்தது தெரியுமா. மற்ற வருடங்களில் ஆபத்து ஏதுமற்றிருந்த அந்தப் பகுதி எந்த அறிகுறிகளுமின்றி திடீரென நொறுங்கியது. அவர்களது உடல்கள்கூட கிடைக்கவில்லை. அதுதான் மிகவும் கொடுமை.’ இந்த இடத்தில் அவளது குரலிலிருந்த அமைதி குலைந்து சாதாரண மனித நிலைக்கு தடுமாறிச் சரிந்தது. ‘பாவம் அத்தை, என்றாவது ஒருநாள், அவர்களுடன் காணாமல் போன அந்தச் செவலை நாயோடு, அவர்கள் திரும்பி வந்து, வழக்கம்போல அந்த ஆளுயர ஜன்னலின் வழியாக உள்ளே வருவார்கள் என இப்போதும் நம்பிக்கொண்டிருக்கிறார். அதனால்தான் ஒவ்வொரு நாளும் மாலையிலிருந்து நன்கு இருட்டும் வரையிலும் அந்த ஜன்னல் திறந்து வைக்கப்படுகிறது. பாவம் என் பிரியமான அத்தை, பலமுறை என்னிடம் சொல்லியிருக்கிறார் அவர்கள் எப்படி கிளம்பிச் சென்றார்கள் என்பதை, அவரது கணவர் வெள்ளை நிற மழைக் கோட்டினைக் கையில் போட்டுக்கொண்டும், ரோனி, அவரது கடைசி சகோதரர், அத்தைக்கு எரிச்சலூட்டும் என்பதற்காக, ‘பர்ட்டீ, நீ ஏன் குதிக்கிறாய்?’ எனப் பாடிக் கொண்டு, வழக்கம் போல கிண்டல் செய்து கொண்டும். உங்களுக்குத் தெரியுமா, சில நேரங்களில் இப்போதும்கூட, இது போன்ற அமைதியான மாலை வேளைகளில், அவர்கள் அனைவரும் இந்தத் திறந்திருக்கும் ஜன்னலின் வழியாக உள்ளே வருவார்கள் என்பதான ஒரு அச்சமூட்டும் எண்ணம் எனக்குள் எழும்.’

ஒரு சிறு நடுக்கத்துடன் அவள் நிறுத்தினாள். அதே நேரம், தாமதமாக வந்ததற்காக சரமாரியாக மன்னிப்பைக் கோரியபடி அத்தை புயலாக நுழைந்தது நட்டேலுக்கு ஆறுதலாக அமைந்தது.

‘வர்ணா உங்களைச் சலிப்படையாமல் வைத்திருந்தாள் என நம்புகிறேன்.’ அவர் சொன்னார்.

‘இவர் மிகவும் சுவாரசியமானவர் ‘நட்டேல் சொன்னார்.

‘ஜன்னல் திறந்திருப்பது பரவாயில்லை அல்லவா?’ திருமதி சாப்பிள்டன் உற்சாகமாகக் கேட்டார்; ‘என் கணவரும் சகோதரர்களும் வேட்டை முடிந்து நேராக இங்கே வருவார்கள், அவர்கள் எப்பொழுதும் இந்த வழியாகத்தான் வருவது வழக்கம். அவர்கள் இன்று துப்பாக்கி சுட சதுப்புகளுக்குச் சென்றுள்ளனர், அதனால் அவர்கள் உள்ளே வரும்போது என் கார்பெட்கள் அனைத்தும் சகதியாகி விடும். நீங்கள் ஆண்கள் அப்படித்தான் இல்லையா? அதனால் இப்படி ஜன்னல் வழியாக வருவார்கள்.’

துப்பாக்கி சுடுவது, பறவைகளுக்கு ஏற்பட்டுள்ள பஞ்சம், குளிர்காலத்தில் வாத்துகள் இருக்க வாய்ப்பு என எதை எதையோ குறித்தெல்லாம் அவர் ஏதேதோ லொடலொடத்துக் கொண்டிருந்தார். நட்டேலுக்கு இவை அனைத்தும் பெரிய கொடுமையாக இருந்தது. கொடூரம் குறைந்த விஷயங்களுக்குப் பேச்சைத் திசைதிருப்ப அவர் மேற்கொண்ட கடுமையான முயற்சிகள் அரைகுறை வெற்றிகளை மட்டுமே ஈட்டின, அவரது உபசரிப்பாளரின் கவனத்தின் சிறு பங்கு மட்டுமே அவரின் மீது உள்ளது என்பதை அவர் கண்டார், அவளுடைய கண்கள் நிரந்தரமாக அவரைத் தாண்டி, திறந்திருந்த ஜன்னலுக்கும் அதற்கப்பாலுள்ள புல்வெளிக்கும் வழிதவறிக்கொண்டிருந்தது. சரியாக அந்தத் துயரத்தின் ஆண்டு நிறைவு அன்று அவர் இவர்களைச் சந்திக்க வந்தது நிச்சயமாக ஒரு துரதிர்ஷ்டவசமான தற்செயல் நிகழ்வு என அவர் எண்ணினார்.

‘முழு ஓய்வு எடுக்கவும், உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்க்கவும், கடுமையான உடல் உழைப்பினை விலக்கவும் ஆணையிடுவதில் மாற்றுக் கருத்து அற்றவர்களாக இருக்கிறார்கள், என் டாக்டர்கள் அனைவரும்,’ முற்றிலும் பழக்கமில்லாதவர்களும் தற்செயலாக சந்திக்க நேர்ந்தவர்களும்கூட ஒருவரது நோய்கள் மற்றும் உடல் உபாதைகளுக்கான காரணங்களையும் அதற்கான தீர்வுகளையும் அறிந்துக்கொள்ள பெரும்பசி கொண்டிருக்கிறார்கள் எனும் பரவலான மாயத் தோற்றதில் உழன்றுகொண்டிருந்த நட்டேல் தெரிவித்தார். ‘ஆனால், உணவுக் கட்டுப்பாடு குறித்து அவர்களால் அப்படியான ஒருமித்த கருத்தை எட்ட முடியவில்லை,’ அவர் தொடர்ந்தார்.

‘இல்லையா?’ கடைசி நொடியில் ஒரு கொட்டாவியின் இடத்தைப் பிடித்த ஒரு குரலில் கேட்டார் திருமதி சாப்பிள்டன். பிறகு திடீரென விழிப்படைந்து கூர்ந்து கவனித்து உற்சாகமடைந்தார் - ஆனால் அது நட்டேல் சொல்லிக்கொண்டிருந்த தன்பால் அல்ல.

‘ஒருவழியாக அவர்கள் வந்துவிட்டனர்!’ அவர் கத்தினார். ‘சரியாக தேநீர் வேளைக்கு, மூக்குவரை சேற்றில் மூழ்கியவர்களைப் போலத்தானே தெரிகிறார்கள் அல்லவா!’

நட்டேல் மெலிதாக நடுங்கினார், புரிதலின் அனுதாபம் தெரிவிக்கும் பார்வையுடன் அவர் மருமகளைப் பார்த்தார். அந்தப் பெண் திகில் நிரம்பிய கண்கள் கொண்டு திறந்த ஜன்னலின் வழியாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். பெயர் தெரியாத ஒரு அச்சத்தின் சில்லிட்ட அதிர்ச்சியில் நட்டேல் தனது இருக்கையில் சுழன்று அந்தத் திசையை நோக்கினார்.

மங்கலான மாலை மயங்கும் ஒளியில் மூன்று உருவங்கள் புல்வெளியைத் தாண்டி ஜன்னலை நோக்கி வந்துக் கொண்டிருந்தனர், அவர்கள் அனைவரின் கையிலும் துப்பாக்கி இருந்தது, ஒருவரின் தோளில் கூடுதல் சுமையாக ஒரு வெள்ளை நிறக் கோட் தொங்கிக் கொண்டு இருந்தது. ஒரு களைத்துப்போன செவலை வேட்டைநாய் அவர்களை நெருக்கமாகத் தொடர்ந்து வந்துக்கொண்டிருந்தது. சத்தமின்றி அவர்கள் வீட்டை நெருங்கினர், அப்பொழுது கருக்கலிலிருந்து ஒரு கட்டையான இளமைக் குரல் பாடத் தொடங்கியது: ‘நான் கேட்கிறேன், பர்ட்டீ, நீ ஏன் குதிக்கிறாய்?’

நட்டேல் வெறித்தனமாக தனது தொப்பியையும் கைத்தடியையும் பறித்து எடுத்தார்; வாயில்படி, சரளைக்கல் நடைபாதை, வெளிப்புற கேட் அனைத்தும் அவரது தலைதெறித்த பின்வாங்கலின் மங்கலாகத் தெரிந்த படிநிலைகளாக இருந்தன. வீதியில் வந்துக் கொண்டிருந்த ஒரு சைக்கிளோட்டி அவருடன் மோதுவதைத் தவிர்க்க வேலிக்குள் பாய வேண்டியிருந்தது.

‘வந்ததுட்டோம்மா, ஜன்னலின் வழியாக உள்ளே நுழைந்தபடி வெள்ளை நிற மழைக்கோட் வைத்திருந்த நபர் சொன்னார்,’ சேறு நல்லாவே இருக்கு, ஆனால் ஏறக்குறைய காய்ந்துவிட்டது. யார் அது, நாங்கள் உள்ளே வரும்போது தெறித்து ஓடிய நபர்?’

‘நட்டேல், மிகவும் விந்தையான ஒரு மனிதர்,’ திருமதி சாப்பிள்டன் சொன்னார்; ‘அவரது நோயமையைப் பற்றி மட்டுமே பேசினார், நீங்கள் வந்ததும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டார். பேயைக் கண்டிருப்பாரோ எனத்தான் யாரும் எண்ணக்கூடும். ‘

‘இந்த நாயைப் பார்த்துதான் என நினைக்கிறேன்,’ மருமகள் அமைதியாகச் சொன்னாள், ‘நாய்கள் என்றாலே நடுக்கம். கங்கைக் கரையில் ஏதோ ஒரு இடுகாட்டுக்கு ஒரு தெருநாய்க் கூட்டம் அவரை விரட்டிச் சென்றதாம், அவருக்கு மேலாக பிராணிகள் உறுமிக்கொண்டும் இளித்துக்கொண்டும் நுரைதள்ளிக்கொண்டும் இருக்க இரவு முழுவதும் புதிதாக தோண்டப்பட்ட கல்லறை ஒன்றில் படுத்துக் கிடந்தாராம். யாராக இருந்தாலும் நிலைகுலைய போதுமானது அல்லவா.’

அவளுடைய தனித்துவமே உடனடியாக கதை கட்டுதல் தான்.



aravind.vadaseri@thaiveedu.com

# முளையறுகாதை!

## பெண் துயரப் பெருங்கதை - 13

- மா. சித்திவினாயகம்

tg.theeban@gmail.com



நிலவொளி சிந்தும் கப்பலின் மேல்தட்டில் அமர்ந்திருந்த செம்பகத்தின் கண்கள் கலங்கியிருந்தன. மனதினுள் பெரும் பாரம். கணேசனைக் கூர்ந்து நோக்கியவளின் கண்ணுள் கடலின் எல்லையற்ற ஆழம்போல் பெருஞ்சோகம் திரையிட்டது.

'கணேசா, இந்தக் கப்பலில் ஏறியிருப்பது வெறும் மனிதர்கள் மட்டுமல்ல; தங்களின், மொழியை, உறவுகளை, மண்ணை, கலாசார விழுமியங்களைத் தொலைத்துவிட்டு, கண்ணீரை மட்டும் துணையாகக் கொண்டு புலம் பெயரும் பாவப்பட்ட ஆன்மாக்கள். இதுவெறும் மரக்கப்பல் அல்ல, தத்தமது கனவுகளையும் ஏக்கங்களையும் சுமந்து செல்லும் ஒரு மிதக்கும் சிறை.

அவர்கள் கண்கள் விட்டு வந்த கரையைத் தேடுகின்றன. அங்கே மறைந்து கொண்டிருப்பது வெறும் தேசம் மட்டுமல்ல; ஒரு இனத்தின் அடையாளமும், மூதாதையர்கள் புதைக்கப்பட்ட புனித மண்ணும்தான். 'இனி எந்த நாட்டுச் சுடலையில் எம் உடல் வேகுமோ ?' என்று பெருமூச்சோடு நிறுத்தினாள் அவள்.

ஊரில் விட்டு வந்த அந்தச் சின்னஞ்சிறு சிரிப்புகள், கேரளத்து மண்ணின் அந்தச் சுகந்த மணம், வழியனுப்பி வைத்த முதியோரின் தளர்ந்த கைகள், அவள் வளர்த்த ஆட்டுக்குட்டி, நாய், முல்லைச்செடி, அவள் ஊஞ்சல் கட்டி ஆடிய ஆலமரம்... இவற்றை மீண்டும் நாம் காண்போமா ? தன் சுயத்தை இழந்து, அகதியாகிக் கப்பலேறும் ஒவ்வொரு மனிதரும் ஒரு பெரும் மௌனச்சோகத்தின் சாட்சி. கரையே தெரியாத இந்தப் பெருங்கடலில், தங்களின் அடையாளத்தைத் தொலைத்துவிட்டுப் புதிய தொரு திசை நோக்கி நகர்கிறார்கள்'.

அந்தப் பெருங்கடலின் அலைகள், ஓர் இனத்தின் வரலாற்றையே அடித்துச் செல்லத் துடிப்பதுபோலக் கப்பலில் மோதிக் கொண்டிருந்தன.

கப்பல் நகர நகர, அடிவானத்தில் நிலம் மெல்லக் கரைந்து கொண்டிருந்தது... செம்பகம் கடலைப் பார்த்தவாறே பேசினாள். அவளது சொற்கள் ஒவ்வொன்றும் அலைகளின் ஓசையோடு கலந்து ஒரு காவியத் துயராக உருவெடுத்தன.

பார் கணேசா, நிலம் மறையும் போதே எங்களது அடையாளங்களும், மொழிகளும், கலாசாரங்களும் கூடவே மங்கத் தொடங்குகின்றன. சுற்றிலும் எல்லையற்ற நீல நிறக் கடல்... ஆனால் இந்தக் கப்பலில் இருப்பவர்களோ, சொந்த நாடிழக்கும் சோகப் பெருமூச்சுப் பெருங்கடலில் மூழ்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தக் கடலின் ஆழத்தை வேண்டுமானால் மனிதர் அளந்துவிடலாம்; ஆனால், தன் சொந்த மண்ணைப் பிரியும் ஓர் ஏழையின் ஏக்கத்தை அளக்க எந்தக் கருவியால் முடியும் ? இந்த அலையடிக்கும் ஒவ்வொரு நீர்த்துளியிலும் ஏழை சிந்திய கண்ணீரின் உப்பு உறைந்திருக்கிறது.

திசை தெரியாத இந்தப் பெருவெளியில், கப்பலில் ஏறியுள்ளவர்க்குத் தெரிந்த ஒரே நம்பிக்கைத் திசை - 'பசி' என்னும் கொடுமையிலிருந்து தம் குடும்பத்தை மீட்கப்போகும் மலையகத்தினை சென்றடைகிற பெருங் கனவு மட்டும்தான்.

அந்தக் கனவே இப்போது எம்மை உயிர்க்கச் செய்கிறதென் றாள் செம்பகம்.

உண்மைதான்... எல்லோர் உள்ளத்துள்ளும் கவலையெனும் பெரு நெருப்பு எரிகிறதுதான். ஆனாலும் அது இலங்கையில் கால் வைத்தவுடன் அனைத்தும் மறந்து கவலைகள் தீரும் என்றான் இலங்காபுரி சொர்க்கத் தீவு என்றெண்ணிய கணேசன்.

செம்பகத்தின் கவலையை மறக்க பேச்சைத் திசை திருப் பினான்.

நாமிருக்கும் இந்தப் பெருங்கடல் சாதாரணமானது அல்ல. இது பிரளயத்திற்கு முன்பிருந்த பெருநிலம். ஊழி அழிப்ப தற்கு முன்பு உலகமெங்கும் கோலோச்சிய குமரிப் பெரு மண்ணும், பஃறுளி ஆறும் அமிழ்ந்து கிடக்கிற கொடுங்கடல் இது. நம் மூதாதையர் வாழ்ந்த நிலத்தின் மீதேநாம் கடலாகி இன்று அலைக்கழிக்கப்படுகிறோம் என்றான் கணேசன்...

நீண்டு கிடந்த அந்த நீலக் கடலின் நடுவே, அவர்களின் அந் தப் பெரிய கப்பல் ஒரு சிறு சருகைப் போல அலைகளால் அலைக்கழிக்கப்பட்டது.

செம்பகம்... கல்கத்தா துறைமுகமே அமைதியில் உறைந்தி ருந்த 1796-இல், 'கல்கத்தா வர்த்தமானி'யில் ஒரு செய்தி வெளியானது: சுதேசிகள் கப்பல் கட்டுவது தடை... அதே போல் இந்தியத் தச்சர்களும், கொல்லர்களும் இனி கப்பல் களில் பணியாற்றத் தடை!' என்பதுதான் அந்தச் செய்தி. முன் பெல்லாம் இந்தக் கடல்கள் எம் மரக் கலங்களால் மட்டுமே நிறைந்த கடல். எம்மவர்கள் கப்பல் கட்டும் பேராற்றலுடைய வர்கள். அதையுணர்ந்துதான் வெள்ளையர்கள் சுதேசிக் கப் பல்களுக்கும், அதைக் கட்டுகிற ஊழியர்கட்கும் தடை விதித் தார்கள். அதுவரை சரக்குகளை சுமந்துநின்ற சுதேசிக் கப் பல்கள் தொலைய, வெள்ளையர் கப்பல்கள் மனிதர்களை அடிமைகளாகச் சுமந்து செல்லும் இருண்ட கூடாரங்களாக மாறிக்கொண்டிருந்தன.

செம்பகம் தன் குரலைச் சற்றே உயர்த்தி அடடா அதனால் தானா எம்மவர்கள் எவரும் இந்தப் படகுகளின் ஓட்டிகளாக இல்லை என்றாள்.

ஆனால், இந்தப் பெருங்கடல் அருண்மொழிச் சோழனின் நாவாய்கள் ஆதிக்கம் செலுத்திய ஆடற்களம். ஈழம் முதல் கடாரம் வரை நம் முன்னோர் வெற்றிக் கொடி நாட்டிய வர்கள். சங்ககாலத் தமிழர்களின் மரக்கலங்கள் அத்தனை கடல்களிலும் பயணித்து, தென்னாசிய நாடுகளையே அதிரச் செய்தன.'

கணேசன் பெருமிதத்தோடு சொல்ல, 'பின்பு ஏன் நம்மவர் களை கப்பல் பணியிலிருந்து தடுத்திருக்கிறார்கள்? என்றாள் செம்பகம் வெகுளியாக...

'அச்சம்தான் காரணம்! இந்தியத் தச்சர்கள் தங்களுக்கு நிக ராகக் கப்பல்களைக் கட்டிவிட்டால், தங்கள் கடல் கொள் ளையை, வணிகத்தை நாம் முறியடித்துவிடுவோம் என்று வெள்ளையர்கள் பயப்படுகிறார்கள். கடல் ஆண்ட பரம்பரை இன்று அடிமைகளாக மாற்றப்பட்டிருக்கிறது. வந்தாரையெல் லாம் பின்விளைவு யோசிக்காமல் அரவணைத்ததே நமக்குப் பெரு வினையாக முடிந்துவிட்டது.'

கணேசன் சோகத்தோடு சொல்லி முடிக்கையில் அவர்கள் பயணித்துக்கொண்டிருந்த அந்தக் கப்பல், ஒரு காலத்தின் தமிழர் சரித்திரப் பெருநிலமான குமரிக் கண்டத்தின்மேல் தம் மைச் சுமந்து செல்வது போலச் செம்பகத்திற்குத் தோன்றியது.

செம்பகம் கடலைப் பார்த்தவாறே, தமிழர் வரலாற்றின் அறி யாப் பெருவாழ்வு ஆழப் புதைந்து இந்தக் கடலுள் இருக் கின்றதா என்றாள்.

'ஆமாம் செம்பகம்... பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக் கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல்கொள்ள' எனச் சிலப்ப திகாரம் சொல்கிற கடல் கொண்ட தென்னாடு இதன் கீழே தான் உள்ளது. இன்றைக்கு லெமூரியா எனப்படும் இந்தப் பகுதியில் 49 பெரு நாடுகள் இருந்ததாகவும், அவை ஏழ் மதுரை நாடு, ஏழ்முன்பாலை நாடு என ஏழு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்ததாகவும் சொல்கின்றார்கள்... இந்தக் கடல் வெறும் தண்ணீரால் மட்டும் ஆனதல்ல. இது நம் முன்னோர் கள் நடந்த பாதை' .இறையனார் அகப்பொருளுரை சொல்லு கிற கபாட புரத் தமிழ் சங்கம் அழிந்து கிடப்பதும் இந்த ஆழக் கடலுள் தான்... இந்தக் கடலிற்குமுன்னதான எம் பொற் கால வரலாறு அது...

கடலையே ஆண்ட இனம் தன் சொந்த மண்ணிலேயே இன்று அந்நியப்பட்டு நிற்கின்றோம். அந்தச் சோகத்தைத்தான் இந் தக் கடற்காற்று இன்றும் சுமந்து கொண்டிருக்கிறது.

செம்பகம் தன் பார்வையைத் தூரத்து அலைகளுக்குத் திருப்பினாள். நிலவொளியில் துள்ளும் மீன்கள் வெள்ளித் துண்டுகளாக ஜொலித்தன.

'ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால், தமிழரின் சேர சோழ பாண்டியப் பேரரசுகளின் அனைத்து எல்லை களும் நீண்டு விரிந்தவை... அன்று பாண்டிய நாட்டின் கீழ் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட துறைமுகங்கள் மிகப் பரப ரப்பாக இயங்கிய காலம்...

அங்கே 'கம்மியர்கள்' என்று அழைக்கப்பட்ட தமிழ்க் கப்பல் கட்டும் கலைஞர்கள் இருந்தார்கள். அவர்கள் உறுதியான தேக்கு மரங்களில், தம் தொழில் நுட்ப அறிவைக் கொண்டு பிரம்மாண்டமான கப்பல்களை உருவாக்கினார்கள். சொல்லப் போனால், உலகின் முதல் கப்பலை வடிவமைத்த பெருமை அந்தத் தமிழ்க் கலைஞர்களுக்கே உரியது.

இவ்வளவு பெரிய கடலில் அவர்கள் வழிதவற மாட்டார்களா? எப்படி திசையறிந்தார்கள்?

கணேசன் கதையை ஒரு வினாடியில் நிறுத்தி செம்பகத்தைப் பார்த்தான். நிலவொளியில் அவள்முகம் ஒரு மர்மப் புன்ன கையோடு மின்னியது.

'திசையறியும் கருவியே இல்லாத அந்தக் காலத்தில், நம் முன்னோர் எதை வைத்து வழிகண்டார்கள் தெரியுமா?' என்று கணேசன் சொல்ல, செம்பகம் ஆர்வத்துடன் அவனை நெருங்கி அமர்ந்தாள்.

காற்று வீசும் திசையை வைத்துப் பாய்மரங்களை அசைப் பது மாலுமிகளுக்கு கைவந்த கலை, அதைவிட ஆச்சரியம், அவர்கள் கடல் ஆமைகளை மிக அவதானித்து தமக்கான

பாதைகளைக் கண்டறிந்தமை என்பதுவாகும். அந்த ஆமைகள் துடுப்புப் போடாமலே நீரோட்டத்தின் உதவியால் பல்லாயிரம் மைல்கள் பயணிப்பதைக் கண்ட எம் தமிழ் முன்னோர், அந்த நீரோட்டங்களையே தமது கப்பல்களுக்குப் பாதையாக்கினார்கள். உலகத்தின் 53-க்கும் மேற்பட்ட கடற்கரைகளுக்கு அந்த ஆமைகளே நமக்கு வழிகாட்டிகளாய் அமைந்தன' என்றான் கணேசன் ஒரு தேர்ந்த ஆய்வாளன் போல...

காலம் மெல்ல நகர்ந்தது. வணிகக் கப்பல்கள், இராசராச சோழன் மற்றும் இராசேந்திரசோழன் காலத்தில் வலிமை மிக்கப் போர்க் கப்பல்களாக மாறின. தென்கிழக்காசிய நாடுகள் எங்கும் சோழர்களின் புலிக்கொடி கம்பீரமாகப் பறந்த காலமது... அதனால்தான்' இன்று உலகத்தின் பல நாடுகளில் தமிழின் தாக்கம் இருப்பதையும், தமிழே மூத்த மொழி என்பவர்களையும் நாம் காணமுடிகிறது.' என்று தொடர்ந்தான் கணேசன்.

பல வெளிநாட்டுச் சீமைகளில் இன்றும் தமிழ்ப் பெயர்களும், பண்பாடும் வேரூன்றி இருக்கின்றன. கடலின் அடியில் பாயும் ஒவ்வொரு நீரோட்டத்திற்கும் தமிழ்ப் பெயர் சூட்டி, உலகையே தன் அறிவால் ஆண்டவன் தமிழன்.'

செம்பகம் இப்போது வியப்புடன் கணேசனையும் கடலையும் பார்த்தான். அவளுக்கு அது வெறும் நீர்ப்பரப்பாகத் தெரியவில்லை; தமிழர்களின் வீரமும், அறிவும் கலந்த ஒரு மாபெரும் வரலாற்றின் சுவடாகத் தெரிந்தது.'

கணேசன் சொல்லச் சொல்ல, கப்பலைச் சுற்றியிருந்த அந்த நீலக்கடல் ஒரு பழைய வரலாற்றுப் புத்தகத்தைப் போலப் புரண்டு கொண்டிருந்தது.

செம்பகம் மெல்லக் கேட்டாள், ‘இவ்வளவு அறிவும் வீரமும் கொண்ட ஓர் இனம், இன்று எதனால் அகதிகளாகவும் கூலிகளாகவும் மாறி இந்தக் கப்பலில் கிடக்கிறோம் ?'

அவளது கேள்விக்கு எந்த விடையை கணேசனால் சொல்ல முடியும் ?

‘கணேசா, உற்றார் உறவுகளை எல்லாம் இழந்துவிட்டு, நாம் எங்கு போகின்றோமென்று கூடத்தெரியாத ஒரு பாழ் உலகத்திற்கல்லவா போய்க்கொண்டிருக்கிறோம் ?' என்று செம்பகம் விம்மினாள்.

‘மெல்லப் பேசு செம்பகம்!' உயிர் பிழைக்க இது ஒன்றே எமக்கு வழி பாழ் உலகல்ல இலங்கை எம் வாழ்வளிக்கும் பேருலகு என்று சுற்றும் முற்றும் பார்த்தான் கணேசன்.

கேரளாவில் பெண்களுக்கு நடந்த கொடூரம் எல்லாம் கண்டு வந்தவள் செம்பகம்.

அதை விடவும் ஈனமான கொடூரம் அவர்கள் கப்பல் ஏறுவதற்காக நடந்து வந்து கொண்டிருந்தபோது பூதப்பாண்டியில் நடந்தது. ஒரு காலத்தில் பூதப்பாண்டியும், அழகிய பாண்டியபுரமும் பாண்டியர்களின் வீரம் செறிந்த மண். இன்று அடிமைத் தனத்தின் ரணங்களோடு ஆக்கினைப்பட்ட பூமியாய்க் கிடந்தது.

நள்ளிரவின் நிசப்தத்தில், காடுகளின் ஊடாகக் கணேசனும் செம்பகமும் தங்களின் அடிமை வாழ்வை அறுத்து நம்பூதிரிகளுக்கும், உள்ளூர் நாட்டாண்மைகட்கும் பயந்து இலங்கைக் கப்பலுக்கு ஓடிக்கொண்டிருந்த வேளையது. கால்களில் தைக் கும் முட்களை விடவும், தப்பித்து விடுதலையை நோக்கி ஓடும் வேகம் அவர்களை முன்னோக்கித் தள்ளி ஓட வைத்தது.

அதிகாலை விடியலில் நனைந்து கிடந்த பூதப்பாண்டி வயல் வெளிகளினூடாக அவர்கள் ஓடிக்கொண்டிருந்த போதுதான் அவர்கள் அந்த கொடூரக் காட்சியைக் கண்டு நிலை குலைந்து நின்றார்கள்.

ஒரு கொடிய பண்ணைக்காரன், மாட்டிற்குப் பதில் ஒரு கர்ப்பிணிப் பெண்ணை ஏரில் பூட்டினான். ஏர் முனையை விட அவளது பிரசவ வலி அவளைக் குத்தியது. ஊர் மக்கள் தடுத்தும் அவன் கேட்கவில்லை. இறுதியில், பனிக்குடம் உடைந்து அந்த மண்ணெல்லாம் அவள் இரத்தத்தால் சிவந்தது. அங்கேயே அவள் உயிர் பிரிந்தது,'

பெண் குலத்திற்கெதிரான பெரு அநீதி அது.

அவர்களால் என்ன செய்ய முடியும். தேம்பியழுத செம்பகத்தை அணைத்தவாறே கப்பலேறியவர்கள் அவர்கள்.

‘அன்னியர்களுக்கு எடுபிடி வேலை பார்க்கும் இந்த கொடூர வாட்சியில், ஏழைகளுக்கு இதுதான் கதி. அந்த அநீதிப் பூமியை விட்டு நாம் ஏறிய கப்பல் எவ்வளவோ மேல் என்றான் கணேசன்.

செம்பகம் நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவள் கண்களில் இப்போது கண்ணீருக்குப் பதில் கனல் தகித்தது. ‘இல்லை கணேசா! இந்தப் பெண்களின் சாபம் இவர்களைச் சும்மா விடாது. அன்று மதுரையை எரித்த கண்ணகியின் அதே சினம்தான் இதுவும். இந்தப் பெண்ணின் இரத்தத்திற்குச் சாட்சியாக, இனி வரும் உலகம் பெண்களின் போராட்டத்தை அங்கீகரிக்கும். பெண் அடிமை விலங்குகள் தெறிக்கும் ஒரு காலம் வரும். அன்று அகில உலகமே பெண்களுக்கென்று ஒரு தினத்தைப் போற்றும்!' என்று தீர்க்கதரிசனமாகச் சொன்னாள்.

அவளது வார்த்தைகள் அந்த விடியல் பொழுதில் ஒரு சிறு ஒளிக்கீற்றாகத் தெரிந்தது.

‘உன் நம்பிக்கை வீண் போகாது செம்பகம். போராடுவோம், அடிமைத்தனம் இல்லாத புதிய உலகத்தைத் தேடி!' என அவளது கையைப் பற்றிக்கொண்டான் கணேசன்.

கப்பல் ஆடியபடியே ஊர்ந்து கொண்டிருந்தது.

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com

# பொறு... பொறு...!

**உஷாதீபன்**

‘நீயும் உங்கம்மாவும் சரின்னு சம்மதம் சொல்லித்தானே கல்யாணம் பண்ணி வச்சது?’ எடுத்த எடுப்பிலேயே கேள்வியை ஆழமாகப் போட்டார் கமலேசன். அதாவது நீங்க ரெண்டு பேரும் ஒப்புக்கலேன்னா இது எங்க நடந்திருக்கப் போகுது என்ற கேள்வி அதில் தொக்கியிருந்தது.

‘சரிப்பா... அதுக்காக...?’ சட்டென்று கோபப்பட்டதுபோல் கேள்வியை வீசினான் சசிதரன்.

அதுக்காக வாழ்க்கை பூராவும் கஷ்டப்படணும்னு சொல்றியா? என்று கேட்கிறானோ? அதையும் அவனே சொல்லட்டும் என்று காத்திருந்தார். ‘சேர்த்து வைப்பதற்குத்தான் பெரியவர்கள். பிரிந்து செல்வதற்கு அல்ல.’

‘எப்பப் பார்த்தாலும் சண்டையைப் போட்டுக்கிட்டிருந்தா அப்டித்தானேப்பா தோணும்?’ சொல்லிவிட்டு இவர் முகத்தைப் பார்த்தான் சசி.

‘எந்த வீட்ல சண்டை இல்ல... சொல்லு பார்ப்போம்...?’ என்றார் இவர்.

எப்போது உள்ளே நுழைய வேண்டும் என்று தனக்குத் தெரியும் என்பதுபோல் வாளாவிருந்தாள் கமலினி.

‘டீ கேட்டேல்ல... வந்து எடுத்துக்கோ சசி...’ என்று குரல் கொடுத்தாள். மேற்கொண்டு காலங்காத்தாலயே பேச்சை வளர்க்க வேண்டாம் என்று நினைத்தாளோ என்னவோ? அட்டென்ஷன் டைவர்ட் பண்ணுகிறாள்.

‘ஆம்மா... இந்த டீ ஒண்ணுதான் குறைச்சல்... இதக் குடிக்கலேன்னா உசிர் போயிடும் பாரு...’

கமலினி அவனைத் திரும்பிப் பார்த்தாள். ‘அப்புறம் எதுக்குக் கேட்டே? வேலை மெனக்கெட்டுப் போட்டு நீட்டுறேன்... இப்டிச் சொல்றியே?’

‘என்னவோ கேட்டேன். அதக் குடிச்சாவது மனச ஆத்துவோமேன்னு...!’

‘ஆத்தித் தரவா? ரொம்பச் சூடா இருக்கு போல்ருக்கே...’ என்றவாறே எழுந்தார் கமலேசன்.



‘அவனுக்கென்ன ஆத்திக்கத் தெரியாதா? சின்னப் பிள்ளையா? போய் உட்காருங்க தேமேன்னு...’ எரிந்து விழுந்தாள் கமலினி.

தனக்கு இது வேண்டாத வேலை என்று அப்போதுதான் உறைத்தது இவருக்கு. ‘சூடா டீ குடிச்சா மனசு ஆறும்னு அவன் கேட்க, அதை ஆத்தித்தரேன்னு இவர் சொன்னா? பொருத்தமா யிருக்கா?’

‘அதுக்கில்லப்பா... பொழுது விடிஞ்சு பொழுது போனா சண்டையாவே இருந்தா? எரிச்சலா இருக்குல்ல...? எதையெ டுத்தாலும் குதர்க்கமாவே பேசறாப்பா? தேவையில்லாமக் கோபப்படுறா?’

‘விடுறா... விடுறா... எல்லாம் போகப் போக சரியாப் போகும்... பொறுமையா இரு...!’

‘என்னத்தப் பொறுமையா இருக்கிறது? அதுக்குள்ளே எனக்கு ஹார்ட் அட்டேக்கே வந்துடும் போல்ருக்கு...’

‘என்னடா சொல்ற நீ? ஆபீஸ் டென்ஷன்னால சொல்றியா? அல்லது இதுக்காகச் சொல்றியா?’ புரியாமல் கேட்டார். அவன் சொன்னது இவருக்கு வேடிக்கையாக இருந்தது. சற்றுப் பயமா கவும் இருந்தது.

‘புரியாத மாதிரியே கேளுங்கப்பா... ஆபீஸ் வேலை எவ்வளவா னாலும் சமாளிச்சிடுவேன்... இவ கரச்சல்தான் தாங்க முடில என்னால...! ஏண்டா கல்யாணம் பண்ணினோம்னு...!’

மருமகள் பிரதீபா ஆபீஸ் போனது நல்லது என்றே தோன்றியது. வாரத்தில் மூன்று நாள் வீட்டில் இருந்து வேலை செய்ய லாம்தான். வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. ஆளவிடுங்க என்று அவனும் போய்விடுகிறான். இரண்டு கிழங்களின் முகத்தைப் பார்க்க வேண்டுமே... அது அந்தப் பெண்ணுக்குப் பிடிக்கவில்லை. அத்தோடு கமலினி செய்து வைக்கும் டிபனும் ஆகவில்லை.

‘எப்பப் பாரு... இட்லி... தோசை... இல்லன்னா பொங்கல்... இதத் தவிர வேற எதுவுமே உங்கம்மாவுக்கு மனசுல தோணாதா...?’ ஒரு நாள் அந்தப் பெண் இப்படிக் கேட்டு வைக்க பிலு பிலுவென்று பிடித்துக் கொண்டான் சசிதரன்.

‘ஏன்... அம்மாவுக்கு தொண்டைக்குள்ள இறங்காதோ? சுத்தமா, ஆரோக்கியமா வீட்டுல செய்து நீட்டுற உணவு கசக்குதாக்கும்? அம்புட்டு அக்கறை இருந்தா நீயே சீக்கிரமா எழுந்திரிச்சு செய் துக்கிறது? உன் ஒருத்திக்கு மட்டுமாவது செய்து எடுத்துக் கிட்டுப் போக வேண்டிதானே? யாரு தடுத்தா? எங்க அடுப்ப டிக்குள்ள நுழைஞ்சா ஒட்டிக்குமோன்னு பயம். வீட்டுக்கா உன்னைச் சமைக்கச் சொன்னாங்க? அதுக்கும் துப்பில்ல... ஒன்பது மணி வரைக்கும் குறட்டை விட்டுத் தூங்கவேண்டிது... ஒருக்களிச்சுப் படுத்து அந்தக் குறட்டையை ஒதுக்கணும்ங்கிற சின்ன அறிவு கூட இல்ல. பப்பரப்பா...ன்னு கால விரிச்சுக் கிடக்க... இப்டித்தான் ஒரு வீட்டுப்பொம்பள தூங்குவாளா? உங்க வீட்டுல இதக் கூட உனக்குச் சொல்லித் தரலியா? திரேகம் தெரியாமயா ஒருத்தி கிடப்பா? வெட்கமாயில்ல? ஒரு துரும்ப நகர்த்துறதில்ல நீ... இதுல பேச்சு வேறே...? கம்முனு கொடுக்கிறதப் பொத்திட்டு எடுத்திட்டுப் போகணும்...’ பொழிந்து தள்ளிவிட்டான்.

வாயடைத்துப் போனது அவளுக்கு. கொஞ்ச நேரம் கழித்து அறைப் பக்கம் பார்த்த போது அழுது கொண்டிருந்தாள்.

‘பாவம்டா... விடுறா... சத்தம் போடாதே... எல்லாம் காலப் போக்குல சரியாப் போகும்... விட்டுத் தள்ளு... பெரிசு பண்ணாதே...’

‘எப்போ சரியாகும்? இல்லே எப்போங்கறேன்? நீங்க மண்டையைப் போட்டப்புறமா? இல்ல நான் கிழவனானப் பிறகா? இவ திருந்த மாட்டாப்பா...!’

மனசில் அதையே போட்டு உழட்டிக் கொண்டிருப்பானோ என்னவோ? சதா டென்ஷனிலேயே நெளிகிறான். ராத்திரி படுக் கையிலாவது சந்தோஷமாக இருக்கிறார்களா? என்று யோசித்தார் கமலேசன். எந்தப் பிணக்கும் படுக்கையில் மறைந்து போகுமே...!

இந்தப் பயலுக்கு அந்த ஆசையும் அதிகமாய் இருப்பதாய்த் தோன்றவில்லை. பெண் எப்படித் தானே வலிய வரும்? ஆம்பளை சீண்டினால்தானே? அது சிணுங்கும்... நெளியும், சுணங்கும்... முறுக்கிக்கும்... அப்புறம் படியும். அதில்தானே இன்பமே? அப்படியாவது சரி பண்ண மாட்டானா இந்த இளைஞன்? வயசுக்கான ஆசை இவனிடம் இருக்கிறதா இல்லையா? அதில் மடங்குமே எந்தப் பெண்மையும்? பல கேள்விகள் பிறந்தது கமலேசனுக்கு.

தானும் கமலினியும் போடாத சண்டையா? உறவுக்காரர்கள் எல்லோரும் சொல்வார்கள்... ‘எப்பப் பாத்தாலும் ரெண்டு பேரும் சண்டை போட்டுட்டே இருப்பாங்க...’ இதுதான் அவர்கள் பற்றிய அபிப்பிராயம். ஒரு கல்யாணம் காட்சி என்று கூட அவர்கள் இருவரும் சேர்ந்து சென்றதில்லை. எல்லாவற்றிற்கும் அவர் ஒருவர் மட்டுமே சென்று ஆஜராவார்.

‘ஏம்பா... உன் பெண்டாட்டிய நாங்களெல்லாம் கண்கொண்டு பார்க்கக் கூடாதா? ஒரு விசேடத்திற்காவது கூட்டிட்டு வந்து அவ முகத்தை எங்களுக்குக் காட்ட மாட்டியா?’ என்று கேட்டி ருக்கிறார்கள். அதிரூப சுந்தரியோ அவள்? என்ற மறைமுகக் கேள்வி அதில் தொக்கி நிற்பதாக உணர்வார் இவர்.

‘நான் வந்திருக்கேன்ல... அவளும் வந்த மாதிரிதான்... என்னில் பாதிதானே அவள்...’ என்பார் இவர் சாமர்த்தியமாய்.

‘யப்பாடீ... இரண்டறக் கலந்துட்டாங்க போல்ருக்கு... அர்த்தநா ரீஸ்வரர்டோய்...! ’என்று கிண்டல் செய்வார்கள். பொருட்படுத்த மாட்டார் கமலேசன். அவர்களோடு சேர்ந்து இவரும் சிரித்துக் கொள்வார்.

ஆனால் உறவுக்காரர்கள் விசேடங்கள் அனைத்திற்கும் ஒத்தை யாய்ப் போய் நிற்கும்போது இவர் மனம் வேதனைப்படத்தான் செய்யும். அழுத்தி தொண்டைக்குள் முழுங்கிக் கொள்வார்.

‘நான் வரலை... நீங்க போயிட்டு வாங்க...’ இதுதான் அவள் எப்போதும் சொல்லும் ஒரே பதில். தன் வீட்டுக்காரர்களோடு அவள் ஒட்டினதேயில்லை. கல்யாணம் முடித்தவுடனேயே நேரடியாய் தனிக்குடித்தனம் கூட்டி வந்தாயிற்று. தன் வீட்டில் கொஞ்சக் காலமாவது சேர்ந்து இருந்து ஒன்றுவதற்கான வாய்ப்பே இல்லாமற் போனது. தனிக்குடித்தனம் என்று நேரடியாய் வீடு பார்த்து வந்து குடியேறியதில் அவர்கள் வீட்டில் ஏக சந்தோஷம். தங்களுக்கான முதுகு வேலைக்கு இடமில் லாமல் போனதே என்று. அதற்காக அவர்களும் வந்து உட் கார்ந்து கொண்டு கும்மியடித்தார்களா என்ன? அதுவும் இல்லைதான். ஏழெட்டுப் பேர் இருக்கும் குடும்பத்தில் தன் பெண் வாக்கப்படுகிறாளே... என்ன பாடு படப் போகிறாளோ, எம்புட்டு வேலை செய்து மாயப் போகிறாளோ என்று பயந்து கொண்டிருந்தவர்களுக்கு இது பெரிய ரிலீஃப்தானே?

அது முழுக்க முழுக்கக் கமலேசனின் மனம் சார்ந்த செயல்பாடு என்பதை அவர்கள் அறிந்திருக்க நியாயமில்லைத்தான். குடும்பம் இருந்தது சென்னையில். இவர் வேலை பார்த்தது

மதுரையில். அதனால் நேரடியாய் மதுரையிலேயே வீடு பார்த்துக் குடி புகுந்து விட்டார். இதிலென்ன தப்பு இருக்கிறது? அப்பா, அம்மா, தங்கைகள், அண்ணா, மன்னி என்று சென்னையிலிருந்தார்கள். இவர் மனது சுதந்திரம் வேண்டியது போல் அவள் மனதும் வேண்டியிருக்கலாமில்லையா? ஆனால் அதற்குப் பின் ஒட்டாமல் போனதுதான் துரதிருஷ்டம். ஒட்டியென்ன ஒட்டாமலென்ன... எல்லாமும் இன்று அவரவர் காரியம், அவரவர் நலம், அவரவர் கஷ்ட நஷ்டம் என்றுதானே தனித்துப் போய்க் கிடக்கிறது? உலகமே அப்படியாகிப் போனதே? கூட்டுக் குடும்பம் என்கிற பழக்கமே அருகிப் போனதே? அவரவர் தனியாய் இருப்பதைத்தானே விரும்புகிறார்கள்? சுயநலம் என்பதே விஞ்சி நிற்கிறது இன்றைய நாளில்...!

‘இது இப்படியே போயிட்டிருந்திச்சின்னா ஒரு நாளைக்கு நான் டைவர்சுக்கு அப்ளை பண்ணிடுவேம்ப்பா... எனக்கு நிம்மதிதான் முக்கியம்...’

கடைசியில் அந்தப் புள்ளிக்கு வந்து விட்டான் சசிதரன். எதை எதிர்பார்த்திருந்தாரோ அதைச் சொல்லியே விட்டான். இந்தக் காலத்துப் பசங்களே இப்படித்தான். மனம் சலித்தது.

‘என்னடா... நீபாட்டுக்குப் பேசிட்டே போறே? கொஞ்சம் யோசிச்சுப் பேசப் பழகிக்கோ...’ குரல் சற்று உயர்ந்தது கமலேசனிடம்.

‘யோசிக்கல்லாம் ஒண்ணுமில்ல... எல்லாம் வேணுங்கிற அளவு யோசிச்சாச்சு... சும்மா சும்மா தினசரி பொழுது விடிஞ்சு பொழுது போனா சண்டை போட்டுக்கிட்டே இருக்க முடியாது. சலுப்பக் குடி மாதிரி... வேறே பொழப்பில்லயா மனுஷனுக்கு? அது எனக்கு அவசியமில்லே... இதான் என்னோட முடிவு...! வெட்டி விட்ற வேண்டிதான்...’

‘ஓஉறா... முடிவே பண்ணிட்டீங்களா...?’ கமலேசனின் இந்தக் கேள்வியால் அவரைச் சட்டென்று திரும்பிப் பார்த்தான் சசிதரன்.

‘என்னடா பார்க்கிறே? நிதானமாக் கேளு... கல்யாணம் பண்ணனும்ங்கிறபோது மட்டும் பெரியவங்கவெல்லாம் சேர்ந்து கூடிப் போய்ப் பார்த்து, நல்ல குடும்பமா, நல்ல மனுஷாளா, நல்ல குணமா, பக்குவமா பேசறாங்களா... ஃபேமிலி பேக்ரௌன்ட் என்னன்னு ஒண்ணொண்ணையும் நுணுகிப் பார்த்து உங்களுக்குப் பாந்தமாப் பேசி முடிச்சு வைக்கணும். ஆனா டைவர்ஸ் பண்ணனும்ங்கிறதபோது மட்டும் சட்டுன்னு நீங்களே ஒத்தையா முடிவு எடுத்திடுவீங்க...? யாரையும் கேட்க மாட்டீங்க... கன்சல்ட் பண்ண மாட்டீங்க... பெரிய அறிவுஜீவி மாதிரி உங்களை நீங்களே நினைச்சிட்டு தடால்னு போட்டுக் கவிழ்த்திடுவீங்க... அதுக்கு நாங்களும் வாய மூடிட்டு, கண்ணக் கசக்கிட்டு, பொச்சப் பொத்திட்டு சரின்னு சம்மதிக்கணும்... இல்ல? அதானே? அப்டியெல்லாம் எடுத்தேன் கவிழ்த்தேன்னு எதையும் செஞ்சிட முடியாதாக்கும்...!’

ஒரு கணம் நிறுத்தி அவன் முகத்தைப் பார்த்தார் கமலேசன். என்னவோ வாய்க்குள் முனகிக் கொள்கிறான். சொல்வதைச் சொல்லி விடுவோம்... என்று துணிந்தார்.

‘வச்சு வாழத்தான் வேணும்... முன்னப் பின்ன இருக்கத்தான் இருக்கும்... எல்லார் வாழ்க்கையும் அப்படித்தான்... யாரும் ஒண்ணும் இங்க நிம்மதியா இருந்திடல... புரிஞ்சிதா? உலகத்துல உள்ளவங்க வாழ்க்கையெல்லாமுமே ஏத்த இறக்கம்தான்... அதுக்காக எவனும் விட்டுட்டு ஓடிடுறதில்ல... ஆத்துல இறங்கிக் குளிக்கிறபோ எப்படி கசடுகள ரெண்டு கையாலயும் விலக்கிட்டு, ஒதுக்கிட்டு, நீக்கிட்டுக் குளிக்கிறமோ அது போலதான் நம்ம அன்றாட வாழ்க்கையும்...! புரிஞ்சிதா... நீபாட்டுக்குத் தடாலடியா எதையாவது பேசிட்டிருக்காதே... போய் கண்ணை மூடிட்டு சாமி முன்னாடி உட்கார்ந்து கொஞ்ச நேரம் தியானம் பண்ணு... எல்லாம் சரியாப் போகும்...!’

‘ஆம்மா... இத ஒண்ணு சொல்லிடுவீங்க... எதுக்கெடுத்தாலும் தியானம் பண்ணு, சாமியக் கும்பிடுன்னு... எந்தச் சாமியக் கும்பிட்டு என்ன பண்ண? நடக்கிறது நடந்திட்டேதான் இருக்கு. அதுக்கு ஒண்ணும் மாத்துக் கிடச்ச மாதிரித் தெரில...!’

‘மாத்துக் கிடைக்கிறதும், மாய்ஞ்சு போறதும் நம்ம கைலதாண்டா இருக்கு... அதுக்கு சாமியக் குறை சொல்லி என்ன பண்ண? நல்ல பழக்கங்கள முறைப்படுத்திக்கிட்டேன்னா உனக்குத்தான் நல்லது. எதுலயும் ஒழுங்குன்னு ஒண்ணு உண்டுதானே? அதுதான் நம்மள நல்வழிப்படுத்தும். பொறுமையும் சகிப்புத் தன்மையும் அதுக்கு அவசியம்...! நம்ம அன்றாட நியமங்கள்தான் நம்மை நெறிப்படுத்தும். அத விடாமக் கண்டிந்யூ பண்ணு... உன்னை, உன் இருப்பைப் பார்த்துப் பார்த்து அவ மாறுவா... கொஞ்சம் கொஞ்சமா பதத்துக்கு வருவா... அதுவரை பொறுத்திருக்கத்தான் வேணும். எதிர்பார்க்கிறது கிட்டினவுடனே கிடைக்கிற நிம்மதியும் சந்தோஷமும் இருக்கே... அதுக்கு ஈடே இல்லை... காலம் எல்லாத்தையும், எல்லாரையும் மாற்றிப் போடும். யாரும் பிறந்ததுலேர்ந்து இறப்பு வரை ஒரே மாதிரி இருந்து மறைஞ்சவங்க இல்லை... எல்லார் வாழ்க்கையும் மாறியிருக்கு... நேர் பட்டிருக்கு... ஒரு குறிப்பிட்ட புள்ளில சங்கமமாகியிருக்கு... மறக்கப் பழகிக்கோ... மன்னிக்கப் பழகிக்கோ... அவளுக்கும் அதுதான் உனக்குமே அதுதான்...! வாழ்க்கையை நமக்கு ஏத்தாப்ல மாத்திக்கிறது நம்ம கைலதான் இருக்கு. அது பணத்துனாலயோ வசதி வாய்ப்பினாலயோ வராது. நம்ம குணத்துனாலதான் கைகூடும்... குணத்துனால மட்டும்தான் கைகூடும்... நல்லா ஞாபகம் வச்சிக்கோ...!’

நீளமாய்ச் சொல்லி முடித்தார் கமலேசன். கொஞ்சம் ஓவர் டோசாகிவிட்டதோ என்று தோன்றியது அந்தக் கணத்தில். ஆனாலும் இருக்கட்டும்... நல்லதைத்தானே சொல்லியிருக்கிறோம் என்று சமாதானப்படுத்திக் கொண்டார்.

ஃபோன் மணி அடித்தது. சசிதரன் அதை எடுத்து இணுக்கியவாறே காதுக்கருகில் வைத்தான்.

எதிரே பேசுவது பிரதீபா என்று தெரிந்தது. சசியின் முகம் மாறியது சட்டென்று. என்னவாயிருக்கும்?

‘அப்பா... அவளுக்கு என்னவோ வாமிட் சென்சேஷனாம்... உட்கார்ந்து வேலை பார்க்க முடிலயாம். லீவு போட்டுட்டாளாம். ஆட்டோல வந்திட்டிருக்காளாம்...!’

துண்டு துண்டாய் அவன் சொன்ன அவசரச் சேதியைக் கேட்டு என்னவோ மனதில் ஓடியது கமலேசனுக்கு.

‘ஒரு ஃபோன் பண்ணி டாக்டர் செக்அப்புக்கு இப்ப வரலாமான்னு ஹாஸ்பிடல்ல கேளு... அப்பாய்ன்மென்ட் ஃபிக்ஸ் பண்ணு என்றார் துரிதமாக.

காரியக்காரப் பயலுங்க...! மனதுக்குள் முனகிக் கொண்டார். கமலினி ஆதுரத்தோடு மகன் அருகில் வந்து தோளில் ஆதரவாய்க் கை வைத்தாள்.



ushadeepan@thaiveedu.com

# மனம் வருந்திய பாவி

லியோ ரோல்ஸ்ராய்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

(லியோ ரோல்ஸ்ரோய் (1828-1910) ரஷ்ய எழுத்தாளர், ஆன்மீக சிந்தனையாளர். உலக இலக்கியத்தின் மாபெரும் எழுத்தாளர்களில் ஒருவராகவும் செல்வாக்குள்ளவராகவும் கணிக்கப்படுகின்றார். அவருக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஆறு முறையும் சமாதானத்துக்கான நோபல் பரிசு இரண்டு முறையும் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் கிடைக் கவில்லை. ரஷ்ய நிலப்பிரபுத்துவக் குடும்பத்தில் பிறந் தவர். War and Peace, Anna Karenina, Crime and Punishment, Idiot, Brothers Karamazov போன்ற மாபெரும் நாவல்களை யும், The Death of Ivan Ilyich, Family Happiness, Hadji Murad போன்ற குறுநாவல்களையும் நூற்றுக்க ணக்கான சிறுகதைகளையும் எழுதியுள்ளார். The Kingdom of God is within You என்ற நூல் காந்தியையும் மாட்டின் லூதர் கிங் யூனியர் போன்றவர்களையும் வெகுவாகப் பாதித்தது. அதில் வன் முறையற்ற எதிர்ப்புப் போன்ற கருத் துகளை எடுத்துக் கூறுகின்றார். பல கட்டுரை நூல்க ளையும் எழுதியிருக்கின்றார். ஆழ்ந்த ஆன்மீக விழிப்பு ணர்ச்சியை அடைந்த பின் எழுதி யது Confesssion என்ற அபுனைவு நூல். யேசுநாதரின் மலைப்பிரசங்கம் அவரை ஒரு தணியாப்பற்றுள்ள கிறிஸ்தவ அராஜகவாதியாகவும் அமைதிவாதியாகவும் ஆக்கியது. ஜேர்மன் மொழியில் அவர் வாசித்த திருக்குறள் அவரை அகிம்சா வாதியாக ஆக்கியதாகச் சொல்லப்படுகிறது. காந்தி அவரிடம் கேட்ட அறிவுரைகளுக்கு அவர் காந்திக்கு எழுதிய A Letter to a Hindu கடிதங்கள் தொகுப்பாக்கப் பெற்றுள் ளன. அதில் அகிம்சை கருத்துகளை காந்திக்கு எடுத்துக் கூறியுள்ளார். இறுதிக் காலத்தில் அவர் புலால் உணவை தவிர்த்து சைவ உணவையே உண்டிருக்கிறார். அவரின் இறுதி நாட்கள் பற்றிய அருமையான திரைப்படம் 'The Last Station.'

பலர் அவரின் படைப்புகள் பற்றி புகழ்ந்து எழுதியுள் ளார்கள். வேர்ஜினியா வுல்ஃப் இவரை, 'நாவலாசிரியர்கள் அனைவரிலுமே மிக உயர்ந்தவர்,' என்று சொல்லியிருக் கிறார். டோஸ்ரோயெவிஸ்கி அவருடைய நாவல்களை விரும்பி வாசித்து புகழ்ந்துள்ளார். அன்ரன் செக்கோவ் அவருடன் நேரடித் தொடர்பு வைத்திருந்தவர். குஸ்;ராவ் ஃப்ளோபியர் இவரின் 'போரும் சமாதானமும்' நாவலை வாசித்த பின், 'எத்தகைய உயர்தரமான கலைஞர், எத்த கைய உளவியலாளர் இவர்,' என்று புகழ்ந்துள்ளார். பிரித் தானியாவைச் சேர்ந்த விமர்சகரும் கவிஞருமான மத்தியு ஆர்னால்ட், 'ரோல்ஸ்ரோயின் நாவல் ஒரு கலைப் படைப் பல்ல, வாழ்க்கையின் ஒரு பகுதி' என்கிறார். 'எல்லோரும் உலகத்தை மாற்றுவோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் எவரும் தன்னை மாற்ற நினைப்பதில்லை,' என்பது அவரு டைய சிறந்ததொரு மேற்கோள்.)



'அந்தப் பாவி, யேசுநாதரிடம் சொன்னான். 'ஆண்டவரே, உம்முடைய இராச்சியத்துக்கு நான் வரும் போது என்னை ஞாபகம் வைத்திருங்கள்.' யேசுநாதர் சொன்னார், 'நிச்சயமாக, அப்பொழுது நீ வந்து என்னுடன் சொர்க்கத்தில் இருப்பாய்.' (லூக் xxiii. 42, 43)

ஒரு காலத்தில் ஒரு மனிதன் எழுபது வயதுவரை இவ்வு லகில் வாழ்ந்தான். ஆனால் அவன் வாழ்நாள் முழுவதும் பாவங்களே செய்து வாழ்ந்து வந்தான். அவன் ஒருமுறை நோயுற்றான். அப்போதும் அவன் தான் செய்த பாவங்க ளுக்காக மனம் வருந்தவில்லை. கடைசியாக சாகும் இறுதி கணத்தில் மட்டும் அவன் அழுதுகொண்டு சொன்னான்.

'ஆண்டவரே, என்னை மன்னித்து விடு. நீ சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தபோது உன்னுடன் இன்னொரு சிலுவையில் அறையப்பட்டிருந்த அந்தக் கள்வனை மன் னித்ததைப் போல என்னையும் மன்னித்து விடு.'

அந்த வார்த்தைகளை அவன் சொன்னபோது அவன் ஆன்மா உடலை விட்டுப் பிரிந்து போனது. அப்போது பாவியின் ஆன்மா கடவுளை நேசித்துக்கொண்டும், இறை வனுடைய கருணையிலும் நம்பிக்கை வைத்துக் கொண்டும் இருந்தது. அதனால் அது சொர்க்கத்தின் வாசல்களை அடைந்தது. வாசல் கதவுகளைத் தட்டி, தன்னை சொர்க் கத்தின் இராச்சியத்துக்குள் நுழைய அனுமதி தர வேண்டும் என்று பிரார்த்தித்துக் கேட்டது.

அப்போது அந்த வாசலுக்குள்ளிருந்து ஒரு குரல் பேசியது.

'சொர்க்கத்தின் வாசலைத் தட்டும் அந்த மனிதர் யார்? அவர் தன் வாழ்க்கையில் என்னென்ன நற்செயல்களைச் செய்திருக்கிறார்?'

குற்றம் சாட்டியவரின் குரல் அதற்குப் பதில் அளித்தது. அந்த மனிதர் செய்த தீய செயல்களை எல்லாம் சொல்லியது. அவர் செய்த செயல்கள் எதிலும் ஒரு நல்ல செயல் கூட இருக்கவில்லை.

வாசலுக்குள்ளிருந்து வந்த குரல் அதற்குப் பதில் சொன்னது.

'பாவிகள் எவரும் சொர்க்கத்தின் இராச்சியத்திற்குள் நுழைய முடியாது. இங்கிருந்து போய் விடு!'

அப்போது அந்தப் பாவி சொன்னான்.

'ஆண்டவனே, உங்கள் குரல் எனக்குக் கேட்கிறது. ஆனால் உங்கள் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை. உங்கள் பெயரும் எனக்குத் தெரியவில்லை.'

அந்தக் குரல் அதற்குப் பதில் அளித்தது.

'எனது பெயர் பீற்றர். நான் தான் பீற்றர் என்கிற இறைத்தூதர்.'

பாவி பதிலளித்தான்.

'என்மேல் இரக்கம் காட்டுங்கள், இறைத்தூதர் பீற்றரே! மனிதரின் பலவீனங்களையும் இறைவனின் கருணையையும் நினைத்துப் பாருங்கள்! நீங்கள் கிறிஸ்து நாதரின் சீடர் அல்லவா? அவருடைய போதனைகளை அவரின் வாயில் இருந்தே கேட்டறிந்தவர் அல்லவா? நீங்கள் அவரு டைய உதாரணங்களைப் பின்பற்றும் மனிதர் அல்லவா? நினைத் துப் பாருங்கள். கிறிஸ்து நாதர் உங்களைப் பற்றிக் கவலைப்பட்டார் அல்லவா? மனம் வருந்தினார் அல்லவா? அவர் உங்களை விழித்திருந்து பிரார்த்தனை செய்யும்படி மூன்று முறை கேட்டார் அல் லவா? ஆனால் நீங்களோ அப்படிச் செய்யா மல் நித்திரை கொண்டீர்கள். ஏனென்றால் உங்கள் கண்கள் தூக்கத்தில் கனத்திருந் தது. நீங்கள் துயில்வதை அவர் மூன்று முறை அவதானித்தார். அப்படித்தான் நானும். நினைத்துப் பாருங்கள் சாகும்வரை அவ ருக்கு நீங்கள் விசுவாசமாக இருப்பீர்கள் என்று சொன்னீர்கள். அவரைத் தலைமைப் பூசாரி, கைப்ஃபாசிடம் அழைத்துச் சென்ற போது நீங்கள் மூன்று முறை அவரைத் தெரி யாதென்று சொன்னீர்கள். அப்படித்தான் நானும். நினைத்துப் பாருங்கள். காலை யில் சேவல் கூவியபோது நீங்கள் வெளியே போனீர்கள். கடுந்துயருடன் அழுதீர்கள். அப் படித்தான் நானும். நீங்கள் என்னை உள்ளே நுழைய அனுமதிக்காமல் இருக்க முடியாது.'



வாசலுக்குப் பின்னாலிருந்த குரல் இப்போது அமைதியாகிவிட்டது.

அதன் பின் பாவி சிறிது நேரம் நின்றான். பின் திரும்பவும் சொர்க்கத்தின் இராச்சியத்திற் குள் தன்னை விடும்படி கேட்பதற்காகக் கத வைத் தட்டினான்.

அப்பொழுது வாசலுக்குப் பின்னால் இருந்து இன்னொரு குரல் ஒலித்தது. அது சொன்னது.

‘யார் இந்த மனிதர். எப்படி அவன் பூமியில் வாழ்ந்தார் ?’

குற்றம் சாட்டியவர் திரும்பவும் சொன்னார். இந்தப் பாவி அந்த உலகத்தில் பலவகையான தீமைகள் செய்திருக் கிறார். ஒரு நல்ல காரியம் கூடச் செய்யவில்லை.’

வாசலின் பின்னால் வந்த குரல் சொன்னது.

‘அப்படியானால் நீ வெளியே போய் விடு! அப்படியான பாவிகள் இந்தப் பரலோகத்தில் எங்களுடன் வாழ முடியாது.’

அப்பொழுது பாவி சொன்னான்.

ஆண்டவரே! உங்கள் குரல் எனக்குக் கேட்கிறது. ஆனால் உங்களை என்னால் பார்க்க முடியவில்லை. உங்கள் பெயரும் எனக்குத் தெரியாது.’

குரல் சொன்னது.

‘என் பெயர் டேவிட். நான் தான் அந்த அரசர், அந்த இறைத் தூதர்.’

பாவி நம்பிக்கையை இழக்கவும் இல்லை. பரலோகத்தின் வாசலை விட்டு அகலவும் இல்லை. அவன் சொன்னான்.

‘என்னில் இரக்கம் காட்டுங்கள், டேவிட் அரசரே! மனிதர் களின் பலவீனங்களையும் ஆண்டவரின் கருணையையும் நினைத்துப் பாருங்கள். இறைவன் உங்களை நேசித்தான், உங்களை மனிதருள் உயர்ந்தவனாகவும் ஆக்கினார். எல் லாம் உங்களுக்குக் கிடைத்தன. ஓர் இராச்சியமும், மேன்மை யும், ஐசுவரியங்களும், மனைவிமாரும், குழந்தைகளும் கிடைத்தன. ஆனால் நீங்களோ ஓர் ஏழையின் மனைவியை உங்கள் வீட்டின் மேல்மாடியிலிருந்து பார்த்தீர்கள். உங்கள் மனதில் ஒரு பாவ எண்ணம் புகுந்தது. நீங்கள் அந்த ஏழை யூரியாவின் மனைவியை எடுத்துக் கொண்டீர்கள். ஒரு வாளால் அந்த ஏழையை வெட்டிக் கொன்றீர்கள். செல்வந் தனாகிய நீங்கள் அந்த ஏழையின் பெண் ஆட்டுக் குட்டியை யும் எடுத்துக் கொண்டீர்கள். அதைப் போலத்தான் நானும் பாவங்கள் செய்தேன். நினைத்துப் பாருங்கள், நீங்கள் அதற்காக மனம் வருந்தி இப்படிச் சொன்னீர்கள். ‘நான் செய்த அறமீறல்களை ஏற்றுக் கொள்கிறேன். என் பாவங்கள் ஒவ்வொன்றும் எனக்குத் தெரியும்.’ அதேபோலத்தான் நானும் செய்தேன். உங்களால் என்னை உள்ளே அனுமதிக்காமல் இருக்க முடியாது.’

வாசலுக்குள்ளிருந்து வந்த குரல் இப்போது அமைதியாகி விட்டது.

பாவி சற்று நேரம் அமைதியாக இருந்த பின், திரும்பவும் கதவைத் தட்டி தன்னை சொர்க்கத்தின் இராச்சியத்திற் குள்ளே விடும்படி கெஞ்சினான். அப்பொழுது வாசலுக்குள் இருந்து மூன்றாவது குரல் ஒன்று கேட்டது.

‘இந்த மனிதர் யார்? உலகத்தில் இவன் எப்படியான வாழ்க்கை வாழ்ந்தான்?

குற்றம் சாட்டுபவரின் குரல் மூன்றாவது முறை பதிலளித்தது. அது அவன் செய்த பாவங்களை பட்டியிலிட்டுச் சொன்னது. அதில் அவன் செய்த நல்ல செயல் ஒன்று கூட இருக்க வில்லை.

வாசலுக்குள்ளிருந்து வந்த அந்தக் குரல் சொன்னது.

‘நீ உடனே வெளியேறு! பாவிகள் சொர்க்கத்தின் இராச்சியத் திற்குள் நுழைய முடியாது.’

அதற்கு அந்தப் பாவி சொன்னான்.

‘நான் கேட்கும் உங்கள் குரல் தெளிவாக இருக்கிறது. ஆனால் உங்கள் முகத்தை என்னால் பார்க்க முடிய வில்லை.

அதேபோல உங்கள் பெயரும் எனக்குத் தெரியாது.’

அதன் பிறகு அந்தக் குரல் சொன்னது.

‘நான் தான் தெய்வீகனாகிய ஜோன், யேசு கிறிஸ்துவின் பிரியமான சீடன்.’

பாவி மகிழ்ந்து போய்ச் சொன்னான்.

‘இப்போது நிச்சயமாக என்னை உள்ளே நுழைய விடு வார்கள். பீற்றரும் டேவிட்டும் உள்ளே நுழைய விடுவார்கள். ஏனென்றால் அவர்களுக்கு மனிதரின் பலவீனங்களும் இறை வனின் கருணையும் தெரியும். நீங்கள் என்னை உள்ளே நுழைய விடுவீர்கள். ஏனென்றால் நீங்கள் மனிதர்களை அதிகம் நேசிப்பவர். நீங்கள் அல்லவா அன்பே கடவுள் என்றும் அன்பில்லாதவர்கள் கடவுளைத் தெரியாதவர்கள் என்றும் எழுதியவர். உங்கள் முதிய வயதில் மனிதர்களைப் பார்த்து, ‘சகோதரர்களே, ஒருவரை ஒருவர் நேசியுங்கள்,’ என்று சொன்னவர். அப்படி என்றால் என்னை வெறுப்புடன் பார்த்து இங்கிருந்து என்னைக் கலைத்து விட முடியாது. நீங்கள் முன்பு சொன்னதை மறுதலிக்க வேண்டும் அல்லது என்னை நேசித்து சொர்க்கத்தின் இராச்சியத்திற்குள் என்னை அனுமதிக்க வேண்டும்.’

சொர்க்கத்தின் வாசல் திறந்தது. ஜோன், மனம் வருந்திய பாவியை கட்டி அணைத்து சொர்க்கத்தின் இராச்சியத் துக்குள் அழைத்துச் சென்றார்.



mahalingam.k@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?



பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

| Corporate Bankruptcy | Bankruptcy | Consumer Proposal |
|---|---|---|
| $ 5000 to $7000 + HST | $1800 - $3000 + HST | Zero fee |

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
"Empowering Financial Freedom"
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
creditsolutioncentre@gmail.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
➤ 1st & 2nd Mortgages
➤ Refinance, Renewal & Switches
➤ Equity Line of Credits
Commercial Mortgages
➤ 1st & 2nd Mortgages
➤ Refinance, Renewal & Switches
➤ Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721 | F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.


வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
தரமான வீடு தவறிப்போகாது
பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER
604 398 7272
TORONTO
647 219 3110
CALGARY
403 879 7272




- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8




உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra ) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
Life100
Are you getting Million Dollar advice


Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
647-290-3416 / 416-543-1111


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


FirstHome at Markham & Sheppard
Starting From $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
SALES REPRESENTATIVE


"Serving With Dignity,
Compassion and Excellence"
LOTUS
Patricia Peter BBM
416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6

RAMAN HOME COMFORT INC
HEATING
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989

15 years of Success
300+ Agents
Selva Vettyvel
VettyvelLaw
Rishani Vettyvel
416.568.4301
416.261.1544

AEREN Thiyagarajah
DILEEP Thangavel
647-888 3500
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage

$8475.00
416-888-9492

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749

HomeLife Today Realty Ltd.
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH
RAJ SIVARAJAH
SIVAKUMAR SIVARAJAH
PYRAMID GROUP

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE

Mega Financial Group
Raj Nadarajah
416-666-1120

Sri Vallipuranathar
Credit Solution Centre
416.439.0224
416.450.5011

Suba Aynkharan
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC.

Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
RE/MAX ACE

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
HomeLife Today Realty Ltd.,

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
INFORCE LIFE Financial Services Inc.
416-909-0400
CHANDRAN RASALINGAM
President & CEO
QUALITY ADVICE YOU CAN TRUST

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
416 505 8532

DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524

RE/MAX